த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—305

இந்தியாவில் பாங்கியல் சட்டமும் நடைமுறையும்

(முதல் பகுதி)

ஆசிரியர்
எம். எல். டேனன், O.B.E., I.E.S. (Retd.)

தமிழாக்கம்
ம. பாலசுப்பிரமணியன், M.A., (Ec), M.Com., LL.B.
(Diploma in Statistics, French, Russian)
பேராசிரியர், வணிகவியல் துறை,
A. M. ஜெயின் கல்லூரி, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—April, 1972

T.N.T.B.S. (C.P.) No. 305

Banking Law and Practice in India—Part I

M. L. TANNAN

Translation

M. BALASUBRAMANIAN

Net Price Rs. 5 - 50

(No discount)

This translation of 'Banking Law and Practice in India' by M. L. Tannan, is published by arrangement with Shri M. L. Tannan, The Cliff, Carmichael Road, Bombay.

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of Government of India in the Ministry of Education and Social Welfare.'

Printed by
ELANGOVAN PRINTERS,
23, Muthu Mudali Street,
Royapettah, Madras-14.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினோராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துளளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல் கணிதம், பௌதிகம், வேதியியல் உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல் தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன '**இந்தியாவில் பாங்கியல் சட்டமும் நடைமுறையும்—I**' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **305** ஆவது வெளியீடாகும் இதுவரை **340** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூகநல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

முன்னுரை

1962ஆம் ஆண்டில் வெளியிட்ட இப் புத்தகத்திற்குப் பிறகு பாங்குகளையும், நிதிநிறுவனங்களையும் நிருவகிப்பதற்கான சட்ட முறைகளில் அநேக தவிர்க்க இயலா மாற்றங்கள் ஏற்பட்ட காரணத்தால், இவ்வாண்டு இப் புதிய பதிப்பினை வெளியிட வேண்டி ஏற்பட்டது. இப் பதிப்பில் பல்வேறு புதிய மாற்றங்களை விவரித்ததோடுகூட பாங்கு நிதித்துறைகளில் ஏற்பட்ட நிறுவனமாகிய தொழில் வளர்ச்சி பாங்கு, அரசினர் பாங்கு நிறுவனமாகிய யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா இவற்றைப் பற்றியும் விளக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஓர் ஆண்டிற்கு முன்னரே முன்பதிப்புகளனைத்தும் 8,000 பிரதிகள் விற்பனை ஆகியுள்ளன. அண்மையில் பாங்கு ஊழியர்கள் அதிகரித்து வருவது தெரிந்ததே. குறிப்பாக பாங்குத் தேர்வாகிய ஸிஏஐஐபி (CAIIB)-யில் கலந்துகொண்ட நபர்கள் 1955-ல் 7,192 ஆக இருந்து 1965-ல் 26,175 ஆக அதிகரித்துள்ளனர். இப் புத்தகத்திற்கான பெரும் தேவையை ஈடுகட்ட இம்முறை 10,000 பிரதிகள் அச்சடித்துள்ளோம். ஸிஏஐஐபி (CAIIB) அன்றி பி.காம். தேர்விற்குச் செல்லும் மாணவர்கள் மட்டுமேயன்றி பாங்கு, சட்டத் தொழிலிலுள்ளவர்களும் இதைப் பெரிதும் பயன்படுத்துகிறார்கள் என்று கேட்க நான் நன்றி அறிதலுள்ளவனானேன்.

இப் புத்தகத்தை இன்றைய நிலைக்கொப்பச் சீர்திருத்தியிருக்கின்றேன். ஆயினும், அதிகம் பயனுள்ளதாக்க வேண்டும் என்ற காரணத்தால் கருத்துரைகள் வரவேற்கப்படுகின்றன.

திரு. எம். எம். மேத்தா, பீ.ஏ. (ஆனர்ஸ்) எல்எல்.பி. (வழக்கறிஞர்) இப் புத்தகத்தைப் பார்வையிட்டுச் செவ்வனே திருத்தம் செய்து பிழை நீக்கி அச்சுப்பிரதிகளை ஆய்ந்து அச்சுக் கூடத்திலிருந்து ஒழுங்குபெற வெளியேறும்வரை உதவியளித்திருக்கிறார். அன்னாருக்கு ஆசிரியர் நன்றிகலந்த வணக்கம்.

'திக்ளிஃப்'
கார்மிக்கல் சாலை,
பம்பாய்-26.
மே 14, 1965

(ஒப்பம்) எம். எல். டேனன்

நான்காம் பதிப்பிற்குக் கொடுத்த முகவுரை

திரு. டேனன் அவர்களுடைய சுவைத்து ரசிக்கக்கூடிய பாங்குத்தொழில் புத்தகத்தின் நான்காவது பதிப்பிற்குச் இச் சிறிய முகவுரையை எழுதுவதில் எனக்கு அதிக ஆர்வம் உண்டு. நெடுநாள்களாகவே இவரது 'இந்தியாவின் பாங்குத் தொழில் சட்டமும் நடத்து முறையும்' என்ற புத்தகம் மிகவும் தரமுள்ளது என்று கூறவும் வேண்டுமோ? இப் புத்தகத்தின் தேவை நாளுக்குநாள் அதிகப்பட்டு வருவதையொட்டி இன்றைய நிலைக்கேற்ப மாற்றி விவரித்து எழுதிவருவதைக் குறித்து நான் அவருக்கு நல்லாசிகள் கூறுகிறேன். நடப்பிலுள்ள மாற்றங்களை யொட்டி பாங்குத் தொழிலின் சீரமைப்பும், சட்டப்பிரிவின் நுணுக்கங்களும் பொதுமக்களுக்குப் புதிராக இருக்கும் காரணத் தாலும், இந்தப் படிப்பியல் சற்று ஆழ்ந்ததா யிருப்பதாலும் எளி தில் விளங்கக் கூடியதாக இல்லை. சட்டத்துறையில் எப்போதும் போல எளிமையாகத் தொடங்கப்பட்டவை பிற்காலங்களில் ஆழ்ந்த இலக்கியச் சுவையென்று ஆலோசனை கூறும் புத்தகமாக மாறுவதுபோல், திரு. டேனன் அவர்களும் இத் துறையில் எல்லாப் பகுதிகளையும் கவர்ந்துகொண்டு வரக்கூடிய ஒரு புத்தகத்தை மிகவும் சுலபமான வழியில் தயார்செய்ய ஆரம்பித்தார். இதற்கான புகழ் வெகுவிரைவில் பரவ ஆரம்பித்து அதனுடைய பலாபலன்களை அனைவரும் நுகரவாரம்பித்தனர். இத் துறையில் இவரை மக்கள், அறிவர். எனவே, நான்காவது வெளியீடும் முன்போன்றே மங்காப் புகழுடன் வெளி வந்திருக்கிறது.

திரு. டேனன் அவர்கள் கூடியவரை முன்னாலோசனையுடன் இப் புத்தகத்தின் பக்கங்களில் அளவுகடந்த சுவைதரும் விவரங் களைக் கோத்து மாணவர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், வாணிப மக்களுக்கும் தேவைப்படும் வகையில் அமைத்துக் கொடுத்திருக்கிறார். பயனுள்ள முடிவுகளையும் வழக்குகளின் சாராம்சத்தையும் நன்கு சலித்துச் சுருக்கமாக எழுதியுள்ளதாலும் வழக்கறிஞர்களுக்கு வழக்குகளின் ஆதார அட்டவணைகளுடன் கூறியுள்ளதாலும் தொழிலில் ஈடுபட்டு நேரம்போதாது உழைக் கும் வழக்கறிஞர்கூட எளிதில் குறிப்பாகத் தெரிந்துகொள்ளக் கூடும். இவரது புத்தகத்திலுள்ள அதிகாரங்களுக்கு, நமது அன்றாட வாழ்க்கையில் காணும் பழக்கமான வார்த்தைகளைத்

தலைப்புகளாக அழகுபெறப் புகுத்தி யமைக்கும் 'பாங்குத்தொழில் செய்பவரும் வாடிக்கைக்காரரும்' 'வாடிக்கைக்காரரின் செக்குகளுக்குப் பணம் கொடுத்தல்' என்ற எடுத்துக்காட்டுகளே போதுமானவை. வாடிக்கைக்காரரின் செக்குகளுக்குப் பணம் அளித்தலுக்கான விதிகள் இன்றைய நிலையில் எவ்வளவு சட்ட நுணுக்கங்களைக் கலக்குவது என்று கூறவும் வேண்டுமோ. ஆயினும், இன்றும் நாம் பாங்குகளுக்குச் சென்று செக்குகளைக் கொடுத்துப் பணம் பெற்றுவருகிறோம். ஒருகாலத்தில் பாங்கு நடத்துபவரைப் பணம்காக்கும் ஒரு பேழை என்று நினைத்தது கவனமிருக்கலாம். ஆயினும், இன்றோ அனைவரும் சம்மதித்த அளவில் பாங்கு நடத்துபவரும், வாடிக்கைக்காரரும், கடன் பெற்றவரும்—கொடுத்தவரும் போன்ற உறவு உடையவர்கள் எனக் கண்டுவந்துள்ளோம். இப் பிரச்சினையைக் குறித்த இந்த அதிகாரம் வெகு கவர்ச்சியுடன் எழுதப்பட்டுள்ளது. பாங்கு நடத்துபவரும் வாடிக்கையாளரும் நன்கு உன்னிப்பாக நடந்து கொள்வதற்காகச் சில எச்சரிக்கைகளைக் கூறியுள்ளார். யெங் எதிராக க்ரோட் (Young v. Grote) என்ற வழக்கின்படி வாடிக்கைக்காரர் தமது செக்கைக் கள்ளக் கையெழுத்து இடாது கூடியவரையில் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினும் செக்குத்தொகையைக் கள்ள வழியில் அதிகப்படுத்தினும் அதனால் ஏற்படும் பலாபலன்களை பாங்கு நடத்துபவருடன் பகிர்ந்துகொள்ள வேண்டியதுதான் என்ற நியமத்துடன் கூடிய முடிவை இன்று நாம் பெறுவது பாங்கிற்குச் செல்லும்போது சற்று நிதானித்து ஆலோசிக்கிறோமா? பாங்கு நடத்துவோரும் இந்தக் கொள்கையைப் பற்றிச் சிறிதளவு ஐயப்பாடுகள் தெரிவிக்கப்பட்ட போதிலும் தங்கள் உரிமை திரும்பக்கிடைத்தும் நேர்மையான குறையுடன் அதாவது வாடிக்கைக்காரர் செக்கினை எழுதும்போது அதிக அளவு முன்னறிவிப்புடன் அவ்வளவாக நடக்கவேண்டியதில்லை என்பதாம்.

இப் புத்தகத்தின் பல்வேறு பகுதிகளில் பாங்கு தங்கள் நிதியை எவ்வாறு பயனுள்ளதாக்குகிறது என்பதனையும், ரிசர்வு பாங்கியினுடைய பணிகளை பாங்குகளின் கணக்குத்தீர்ப்புப் போன்ற அதிகாரியிடம் எவ்வளவு இனியமுறையில் எளிய நடையில் தெள்ளென விளக்குகிற என்பதனையும் விரித்துக்கூற இந்தக் குறுகிய முன்னுரையில் விவரப்படுத்த இயலவில்லை. இப் புத்தகத்தின் அனுபந்தம் 'ஆ'-வில் காணப்படும் அட்டவணைகள்

எவ்வளவு கவனத்தில் இருத்தவேண்டிய நடைமுறைப் படிவங்கள்! இவ்வளவு சீரும் சிறப்பும் அமைந்துள்ள புத்தகத்தின் உயர்வை வாசித்து வருவோரே கண்டறிவர். எனவே, மாணவர்களுக்கு மட்டுமேயன்றி வர்த்தகர்களுக்கும் இன்னும் பாங்குகளுடன் தொடர்புகொண்டுள்ள அனைவருக்குமே பெரிதும் பயன்படும் என்றுகூறினல் மிகையாகாது. நான் எதிர் நோக்கியுள்ள விருப்பம் இப் புத்தகம் மேன்மேலும் வெற்றி காண்பதாகுக.

ஆஸ்ரமம்,
மலபார் ஹில்;
பம்பாய்.
ஜூன் 15, 1942.

(ஒம்.) எம். ஆர். ஜயகர்

பொருளடக்கம்

பக்கம்

சொற்சுருக்கப் பட்டியல்

ஏ. ஸி.	—	லா ரிபோர்ட்ஸ், அப்பீல் கேஸ்கள், லார்டுகள் சபை
ஆ. இ. ரி.	—	ஆல் இண்டியா ரிபோர்ட்டர்
அல். இ. லா. ரி.	—	அலகாபாத்து சீரீஸ் (இந்தியன் லா ரிபோர்ட்ஸ்)
பி. எல். ஆர்.	—	பெங்கால் லா ரிபோர்ட்ஸ்
பி. அண்ட் ஏ.டி.	—	பார்னல் அண்டு அடால்ஃப்ப்ஸ் ரிபோர்ட் (கிங்ஸ் பெஞ்சு)
பி. அண்ட் ஸி.	—	பார்னல் அண்டு க்ரூல்வெல் ரிபோர்ட் (கிங்ஸ் பெஞ்சு)
பிங்.	—	பிங்கம் ரிபோர்ட்கள்
பிங். நியூ.	—	பிங்கம் நியூவழக்கு
பாம்.	—	பாம்பே சீரீஸ் (லா ரிபோர்ட்)
பாம். லா. ரி.	—	பாம்பே லா ரிபோர்ட்டர்
ஸி. ஏ.	—	கோர்ட் ஆஃப் அப்பீல் ரிபோர்ட்
ஸி. பி.	—	காமன் பெஞ்சு ரிபோர்ட்
ஸி. ஸி.	—	கம்பெனி வழக்குகள்
ஸி. பி. என். எஸ்.	—	காமன் பெஞ்ச் ரிபோர்ட் (நியூ ஸீரிஸ்)
ஸி. பி.	—	லாரிபோர்ட்(காமன் ப்ளிஸ் டிவிஷன்)
கல்.	—	கல்கத்தா ஸீரீஸ் (இந்தியன் லா ரிபோர்ட்)
காம்ப்.	—	காம்பெல்ஸ் ரிபோர்ட் நிஸி பிரியஸ்
சா. சா. டி.	—	லா ரிபோர்ட்ஸ், சான்சரி டிவிஷன்
டி. ஜி. & ஜே.	—	டி ஜெக்ஸ் & ஜோன்ஸ் ரிபோர்ட் சான்சரி அப்பீல்
டக்.	—	டக்ளஸ் ரிபோர்ட்ஸ் கிங்ஸ் பெஞ்ச்
இ. அண்ட் பி.	—	எல்லிஸ் அண்டு ப்ளாக்பார்ன்ஸ் ரிபோர்ட் க்வீன் பெஞ்சு
எக்ஸ்.	—	எக்ஸ்செக்கர் ரிபோர்ட்
எக்ஸ். டி.	—	எக்ஸ்செக்கர் டிவிஷன்
எ. எல். ஸி.	—	ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸ்—க்ளார்க்ஸ் ரிபோர்ட்

ஹேர்.	—	ஹேர்ஸ் ரிபோர்ட்
கே. பி. (தி. பெ.)	—	கிங்ஸ் பெஞ்சு
லா. ஜ. கே.	—	லா ஜர்னல் சான்ஸரி
லா. ஜ. க்யு. பி.	—	லா ஜர்னல் க்வீன்ஸ் பெஞ்சு
லா. ரி.	—	லா ரிபோர்ட்
லா. டை.	—	லா டைம்ஸ்
லாகூ.	—	லாகூர் சீரிஸ் (இந்தியன் லா ரிபோர்ட்)
மூ. இ. அ.	—	மூர்ஸ் இண்டியன் அப்பீல் கேஸஸ் பிரிவி கவுன்சில்
மா. & க்ரா.	—	மானிங் அண்டு க்ராங்கர்ஸ் ரிபோர்ட் காமன் பிளீஸ்
மீ. & வெ.	—	மீஸன் அண்டு வெல்ஸ்பீ
மத.	—	மதராஸ் சீரீஸ் (இந்தியன் லா ரிபோர்ட்)
பி. க.	—	பிரிவி கவுன்ஸில்
க்வீ. பெ.	—	க்வீன்ஸ் பெஞ்சு
க்வீ. பெ. டி.	—	க்வீன்ஸ் பெஞ்ச் டிவிஷன் லா ரிபோர்ட்
ரி. ரி.	—	ரிவைஸ்ட் ரிபோர்ட்ஸ்
டை. லா. ரி. / டி. எல். ஆர்.	—	டைம்ஸ் லா ரிபோர்ட்ஸ்

வழக்குகளின் அட்டவணை

பக்கம்

அ

இ

ஈ

உ

எ

பக்கம்

ஓ

ஃ

க

ச

பக்கம்

ட

த

ந

ப

புள்ளிவிவர அட்டவணைப் பட்டியல்

BIBLIOGRAPHY

Aiyar, A. N.—Banking Companies Act, 1949.

Bagehot—English Constitution.

Banerjee, Dr. Pramath Nath—Public Administration in Ancient India.

Bhashyam, K. and Adiga, K. Y.—The Negotiable Instruments Act, 1881.

Brunton, John—Bankers and Borrowers.

„ „ —Letters on Practical Banking.

Buhler—The Laws of Manu. The Sacred Books of the East, Vol. XXV.

Byles, Sir, John Barnard—A Treaties on the Law of Bills of Exchange, Promissory Notes and Cheques.

Chalmers, Sir M. D.—A Digest of the Law of Bills of Exchange.

„ „ —The Bills of Exchange Act, 1882.

Davis, J. F.—Bank Organization, Management and Accounts.

Dongerkerry—The Indian Partnership Act, 1932.

Donough's Indian Stamp Act.

Dunbar, Charless, F.—The Theory and History of Banking.

Dutt, R. C.—Civilization in Ancient India.

Easton, H. T.—History and Principles of Banks and Banking.

Evitt, H. E.—Practical Banking, Currency and Exchange.

Ewbank—Manual for Co-operative Societies in the Bombay Presidency.

Findlay Shirras—Indian Finance and Banking.

Ghosh, K. M.—The Indian Company Law.

Ghose, Sir Rashbehary—The Law of Mortgage in India, 2 Vols.

Gilbert, J. W.—The History, Principles and Practice of Banking, 2 Vols, Logic of Banking.

Halsbury, Lord—The Law of England, Vol. II.

Holden, J. M.—Securities for Bankers' Advances.

Ho pkins, Alfred—The Fundamentals of Good Bank-Building.

Hutchison, John—The Practice of Banking, 4 Vols.

Institute of Bankers, London—Questions on Banking Practice.

Jain, L. C.—Indigenous Banking in India.

Jones, R. W.—Studies in Practical Banking.

Jordan, David F.—Investments.

Kautilya—Arthshastra.

Kniffin, William H.—Commercial Paper.

Laughlin, J. C.—The Principles of Money.

League of Nations, Economic Intelligence Service—Commercial Banks.

Macdonnel, A.A. and Keith, A. B.—Vedic Index, Numbers and Subjects (1912), Vol. I.

McGregor, T. D.—Bank Advertising Plans.

MacLeod, Henry Dunning—The Elements of Banking.

" " —Theory and Practice of Banking, 2 Vols.

Megrah, Maurice—The Banker and Customer.

Mitra, A. C.—Banking Companies Act, 1949.

Moxon, T. B.—English Practical Banking.

Mulla, D. F. and Shavaksha, K. S.—Indian Contract Act, Sale of Goods Act, and Partnership Act, Students' Ed.

Paget, Sir John—The Law of Banking.

" " —Legal Decisions Affecting Bankers (Edited and Annotated), 3 Vols.

Palmer—Company Precedents.

Pollock and Mulla—The Indian Contract Act.

Prudden, Russel F.—The Bank Credit Investigator.

Rae, George—The Country Banker.

Ramachandra Rao, B.—Present Day Banking in India.

Richard, R. D.—The Origin of the Cheque.

Sen, Sushil Chandra—The Indian Companies Act, 1913 (As Amended by Act XXII of 1936).

Sheldon, H, P.—Practice and Law of Banking.

Sitaram, R. S.—Banking Decisions Affecting Bankers in India.

Smith, James Walter—A Handy Book on the Law of Banker and Customer.

Splading, W. F.—Banker's Credit.

Stead, Francis R.—Bankers' Advances.

" " — Bankers' Tests.

Steele, F. E.—The Banker as Lender.

Suneja, L. R.—Bankers' Objections on Unpaid Cheques.

" " —Bankers' Securities Against Advances.

Sykes, Ernest—Banking and Currency.

Tannan, M. L.—Banking Needs of India.

,, ,, —Regulation of Banks in India.

Thakur, B. T.—Organisation of Indian Banking.

Thomas, S. Evelyn—Banker and Customer.

Thomson, Williams—Dictionary of Banking.

Tillyard, Frank—Banking and Negotiable Instruments.

Trant, James B.—Bank Administration.

Walker, J. Douglas—A Treatise on Banking Law.

Watkins, Leonard L.—Bankers' Balances.

Whitney, N. R.—Banking Practice.

Withers, Hartley—Bankers and Credit.

Annual Report on the Indian Post and Telegraph Department.

Census Report (1931).

Report of the Hilton Young Commission (1926).

Report of the Indian Central Banking Enquiry Committee (1931), Vol. I.

Report of the Indian Law Commission (1866).

Report of the Stock Exchange Enquiry (Morison) Committee (Bombay, 1937)

Statistical Tables Relating to Bank in India.

The Indian Finance Year Book.

The Investor's Year-Book—Place, Siddons and Gough.

Reserve Bank of India Publications. (The author is grateful for the use of the material although it has not been possible to acknowledge the source at each place separately.)

Handout issued by Ministry of Commerce and Industry, Government of India on Credit Guarantee Scheme (Substantially reproduced.)

இந்தியாவில்
பாங்கியல் சட்டமும் நடைமுறையும்

(முதல் பகுதி)

1. முன்னுரை

வளமும் நிலமும் ஆண்டவனின் தீர்ப்பின்
போது ஒன்றிணையும் அதுவரை மேற்கு
மேற்கென்றும் கிழக்கு கிழக்கென்றும்
தனித்தே இயங்கும்

—ரட்யார்ட்டு கிப்லிங்.

மேனாடுகளுடன் ஏற்பட்ட தொடர்பின் எதிரொலி

புதிய சகாப்தம் :—ரட்யார்ட்டு கிப்லிங் (Rudyard Kipling) அவர்கள் மேலே கூறிய வாக்கியங்கள் பொய்த்து வருவதை இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். மாபெரும் உலகப் போர்கள் இரண்டு நடந்த பின்னர் பல மாறுதல்கள் ஏற்பட்டு அதன் விளைவாக மேற்கும் கிழக்கும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு இணைந்திருக்கின்றன. போக்குவரத்து வசதிகள் அதிகரித்தும், விஞ்ஞான முறைகள் பெருகியும், அரசியல். பொருளாதார நிறுவனங்கள் முன்னேற்றமடைந்தும் வருகின்றன, இவற்றின் மூலம் மனிதவளர்ச்சிக்கான நலன்கள் விழுமியுள்ளன. நாளாவட்டத்தில் நாம் ஆலோசனை செய்து ஏதாவது ஒரு செயல் புரிய எண்ணினால் அது உலகனைத்தும் பயனளிக்கும் முறையில்தான் செய்ய விருப்பப்படுகிறோம். ஆயினும் சற்றுத் தயக்கத்துடன்தான் பணியாற்றவேண்டி வருகிறது. மேல் நாட்டிற்கும் கீழ்நாட்டிற்கு மிடையே உள்ள தங்குதடைகள் தாமாகவே ஒன்றன்பின் ஒன்றாக விலகிக்கொண்டு வருகின்றன. எனவே, மேற்கும் கிழக்கும் இணைக்கப்படவேண்டிய பொதுக் கொள்கைகள் உருவாகிவருகின்றன. இந்தியா தனியாட்சி பெற்றவுடன் இதர கீழ்நாடுகளைப் போல் முன்னேற்றப் பாதையில் செல்லுகிறது. உள்ளதே போதும் என்று கனவலகில்

உழன்றுவரும் வேதாந்திகள் போய் இன்று புதிய யுகம் தோன்றியுள்ளது. அதன் விளைவாக நாடு முழுமையும் விறுவிறுப்பும், உழைப்பும் சலிப்புமின்றி வேலை செய்து வருவதைக் காண்கிறோம். தொழில் வளர்ச்சி பெறும் இந்தியாவில் அசைக்க வியலாப் பொருளாதாரக் கோட்பாடுகள் புகுந்து தாக்க ஆரம்பித்துள்ளன. செல்வம், அரசியல் இவை இணைப்புப்பெற்று நாட்டில் ஒற்றுமையும், ஏகமனதாக நடத்த வேண்டுமென்ற எண்ணமும் தோன்றியுள்ளது. இந்த நிலையில் பிரிவினைசக்திகள் நாட்டை இரு கூறுகளாகப் பிரித்து அதன் விளைவாக பொருளாதார அரசியல் சிக்கல்கள் பல தோன்றின. இரண்டாம் உலகப் போரின் பின்தோன்றலாகச் சமாதான நிலை உடனே வராது, சற்று மந்தமாகவே தோன்றியது எனலாம். 1952ஆம் ஆண்டின் நடுப்பகுதியில்தான் நிரந்தர நிலை வந்தது. அப்போதுமுதல் பொருளாதார நிலை செம்மையாகியது. 1951ஆம் ஆண்டில் இந்நாட்டின் செல்வ நிலையை மாற்றி அமைத்தோம். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்நாட்டில் விவசாயம், தொழில் முதலிய துறைகளில் பெரிய வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. திட்டக்கமிஷன் அவ்வப்போது இலக்குகளை அமைத்து உற்பத்திப் பெருக்கத்திற்கான செயல் முறைகளை வலியுறுத்தியுள்ளது. மாற்றமுள்ள தன்மையிலிருந்து நிரந்தர நிலையை அடைவதற்குள்ளாக ஏற்படக்கூடிய பல்வகைப் பிரச்சினைகளையும், அவ்வப்போது தோன்றும் புதுப் பிரச்சினைகளையும் சமாளிக்க நேரிடுகிறது. இதனால் காலவரம்பு நீண்டு, பொருளாதாரச் சிக்கல்கள் அதிகரிக்கின்றன. நம் நாட்டின் வடக்கெல்லையில் தோன்றிய பலதரப்பட்ட குழப்பங்களும் நாட்டின் அமைதியின்மையை அதிகரித்து அவசரநிலையை 1962ஆம் ஆண்டில் அக்டோபர் மாதத்தில் அரசினர் பிரகடனம் செய்தனர். எதிர்பாராத இடுக்கண் தோன்றிய காரணத்தால் நாட்டின் செல்வநிலையும் பாங்கு வர்த்தகநிலையும் சற்றுத் தாக்கப்பட்டு, தற்காப்பைக் கண்காணிக்க வேண்டிச் செலவினங்களை அதிகரிக்க நேரிட்டது. இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் பாங்குகள் சீரிய முறையில் விலையேற்றத்தைத் தடுத்தும், பொருளாதாரச் சிக்கல்களை நீக்கியும் உற்பத்தியை ஊக்கப்படுத்தியும் பணியாற்றி வருகின்றன.

"பழையன கழிதல்":—காலமாற்றத்திற்கேற்ப நாமும் மாறி வருகிறோம். 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற முதுமொழிக்கேற்ப நாம் என்றும் புதிய காலத்தை நோக்கி நிற்கின்றோம். பற்பல நூற்றாண்டுகளாக விஞ்ஞானத்திலும் தொழில் வளர்ச்சியிலும் ஈடுபட்டு ஊறித் திளைக்கும் மேல்நாடு

களுடன் பின்தங்கிய நாடுகள் போட்டியிட முடியாமல் மலேக்கின்றன. பொருள் வசதியின்மையால் அவைகள் முதலில் தங்களுடைய மக்களுக்குப் போதிய வசதிகள் அளிக்க வேண்டும். பின்னர் மேல்நாட்டார் பெற்றுள்ள சுகங்களை மக்களுக்குத் தேடிக் கொடுக்க எவ்வளவு பொருள் வளர்ச்சி வேண்டும் என்று கூறவும் வேண்டுமா? எதிரெதிர்ப் போட்டியின் இறுதியாக இன்றைய உலகில் மக்கள்பால் தோன்றியுள்ள மனச்கசப்பு எவ்வளவு ஆதிக்கம் பெற்றுள்ளது என்று நாம் அறிவோம். அதைப் போக்கவே பேருதவித் திட்டங்கள் வகுத்து மார்ஷல் (Marshall), கொழும்பு (Colombo) திட்டங்களின் உருவில் உலக நாடுகளை ஒருமிக்க சேர்க்க முயலுவதைக் காண்கின்றோம். எனவே திட்டங்களும் சங்கேதங்களும் "ஒரே உலகம்" என்ற கொள்கையை உருவாக்கி வருகிறது. வலிமையாளர்எளியாரை வாட்டி முன்னேறி வருவது மரபு. அதே போல நாட்டில் பிறருடைய தயவின்றித் தனித்தியங்குபவன் மக்கள் நடமாட்டமில்லாப் பாலையில் திரிவான் என்ற கொள்கையும் உள்ளது. சமாதானத்தின் விலை பகுக்க இயலாதது. சமாதானம் என்ற நீள்பெரும் சங்கிலியில் ஒரு மெல்லிய இணைப்பு ஒன்றே போதும், சங்கிலி தானகவே அறுபடும். இந்த நிலையில் இந்தியா புதிய நிலைமைக்கேற்ப உலக ஒற்றுமையில் பங்கெடுத்து இதர நாடுகளுடன் ஒன்றி வாழவேண்டும். நமது பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழி இதுவே.

பாங்குத் தொழில் இன்றைய காலத்திற்கு உயிரங்கம் போன்றது:—ரயில்வேக்கள் நீராவிக் கப்பல்கள், தந்தி, தபால், தொலைபேசி, வான ஊர்தி, தொலைக்காட்சி மற்றும் இதர கண்டுபிடிப்புகள் இவையனைத்தும் இந்திய நாட்டிலும், உலகின் வேறு பகுதிகளிலும் பொருளாதார முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ளன. ஞாயிற்றின் புதிய ஒளிக்கதிர் போன்று இந்நிலையில் ஊடுருவியுள்ள ஒரு பகுதி பாங்குத் தொழில்.

இந்திய நாட்டில் பாங்கு நிறுவனங்களின் தோற்றுவாயை ஆராயப் புகுமுன்னர் சுருக்கமாக ஆங்கில நாட்டில் உள்ள பாங்கு நிறுவனங்களின் தோற்றுவாயையும் வரலாற்றையும் விளக்கி அவ்வடிப்படையில் தோன்றியுள்ள இந்திய நாட்டு பாங்கு நிறுவனங்களைப் பற்றி வரைவோம்.

பாங்குத் தொழில் நிறுவனங்களின் பரிணமம்

'பாங்கு' என்ற சொல்லின் பிறப்பு:—'பாங்கு' என்ற ஆங்கிலப் பதம் எந்த மொழியின் அடிப்படையில் தோன்றியது என்பதைப்

பற்றி முன்பின் முரணான ஆதாரங்களோடு வாதிக்கப்படுகிறது. ஒரு சில வல்லுநர்களால் இது 'பாங்கஸ்' (Bancus) அல்லது 'பான்கோ'(Banco) என்றபொருளைக் குறிக்கும் பெஞ்சு எனலாம். தொடக்கக்காலத்தில் லம்பார்டியில் உள்ள யூதர்கள் பாங்கு வர்த்தகர்களாக இருந்தனர். சந்தையில் பெரிய பெஞ்சுகளில் வர்த்தகம் செய்தனர். ஏதாவது ஒரு பாங்கு நடத்துபவர் நெருக்கடியடைந்தவுடன் பொதுமக்கள் வெகுண்டு அவரதுபெஞ்சை சின்னபின்னமாக உடைத்தெறிவர். எனவே ஆங்கில 'பாங்க்ரப்ட்' (Bankrupt) திவால் என்ற பதமும் இந்த அடிப்படையில் தோன்றியது எனலாம், இந்தச் சொல்லின் ஆதாரத்தை நையாண்டி செய்து மேக்ளியாட் (Macliod) என்பவர் இத்தாலிய நாட்டுப் பணம் பரிவர்த்தனை செய்பவர்கள் இடைக்காலத்தில் அம்மாதிரி "பாஞ்சியாரி" (Banchieri) என்று கூப்பிடப்பட வில்லை என்கிறார். மற்றும் பலர் செர்மனி நாட்டு மொழியில் வரும் 'பேக்' (Back) என்ற சொல்லிலிருந்து உருவானது 'பாங்கோ' என்றனர். பேக் என்ற செர்மனி மொழிக்குக் கூட்டு பாங்கு நிதி (Joint Stock Fund) என்று பொருள். செர்மானியர் இத்தாலி நாட்டில் பெரும் முதலாளிகளாக இருந்தனர். ஆதலால் 'பாங்கு' என மாறியது. இந்த ஆராய்ச்சி ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் உள்ளது. பேராசிரியர் திரு. இராமச்சந்திர ராவ் [பிரஸண்ட் டே பாங்கிங் இன் இந்தியா (Present Day Banking in India) முதல் பதிப்பு, பக். 88,] கூறியதாவது : 'பாங்கு' என்ற வார்த்தையின் ஆதாரம் எவ்வாறு இருப்பினும் ஐரோப்பா கண்டத்தில் நடுக்கால முதல் பாங்கு வரலாறு இன்னதென்று தெளிவுபடுத்துகிறது.

பாங்குத் தொழிலின் ஆதி வரலாறு:— கி.மு. 2000 முதல் பாபிலோன் நாட்டினர் பாங்குத் தொழிலை வளர்த்தனர். அந் நாட்டிலுள்ள பெரிய ஆலயங்களை பாங்கு நிறுவனங்களாகக் கொண்டனர். எஃபேஸஸ் (Ephesus) கோவிலும் டெல்ஃபி (Delphi) ஆலயமும் கிரேக்க நாட்டு ப்ாங்கு நிறுவனங்களுடைய இலக்காயிருந்தன. சமயத்தைப் புறக்கணித்த மக்கள் கோவில் களில் தங்கள் நிதியைப் போடாது வாளா இருந்தனர். கோவில் குருக்கள் பணத்தைக் காப்பாற்றும் பொறுப்பை இழந்தனர். ரோமானியர்கள் தங்கள் நாட்டில் இராச்சிய பாங்குகளைத் திறக்க வில்லை. அவர்களுடைய நுட்பமான அரசியல் சட்டத்தில் தனியார் பாங்குகள் நடத்தப் பொது மக்களின் நன்மதிப்பும் நம்பிக்கையும் பெறல் வேண்டும் எனக் காணப்பட்டது. பண்டைக் காலச் சமுதாயம் கவிழ்ந்து அரசினரின் ஆளுகைமுறை மையத்தி லிருந்து பிரிவுபட்டு அதன் விளைவாக அரசினர் நேர்மையின்றி

நடந்து வாணிபத்திலும் சொல்லொணு இடையூறுகள் நேர்ந்தும் முடிவில் பாங்குமுறை மறைந்து போயிற்று. இந்தக் காலத்தில் நிதி சம்பந்தமான அலுவல்களைக் காலத்தை யொட்டி நிறுவனங்கள் தோன்றி நடத்தி மறைந்தன. இம்மாதிரி இடுக்கண் உண்டாக இன்னும் சில காரணங்கள் பின் வருமாறு. அசைக்க முடியாத கட்டுப் பெட்டிக் கொள்கைகள் பல நிலவி வந்தன. அரிஸ்டாடல் (Aristotle) என்ற மேதை "வட்டி பெறுவது ஈனம். அதனுல் அது குணநலனைக் கெடுக்கும்" என மொழிந்தார். இதை வேத வாக்காகக் கொண்டு வட்டி வாங்குபவர்களை இம்சை செய்தனர். இன்றும்கூட முகம்மதிய மதத்தில் உள்ள சிலர் தங்கள் சமய நூலில் கூறியுள்ளபடி பணம் கடனுக்குக் கொடுத்தால் வட்டி வாங்கிக் கொள்ளுவதில்லை. அரிஸ்டாடலின் வழியைப் பின் பற்றியவர்களில் ஹீப்ரூ (Hebrev)க்களும் உண்டு. ஹீப்ரு நாட்டில் பாங்குகள் இல்லை. ஆயினும் வட்டி வாங்குவதைப் பாபமாகக் கருதவில்லை. அதிக வட்டியைத்தான் அவர்கள் தடுத்தனர். பின்னர் 12ஆம் நூற்ருண்டில் சமுதாய வளர்ச்சி யேற்பட்டு, அதனையடுத்து வெனிஸ், ஜினேவா நகரங்களில் பாங்குகள் தோன்றின.

ஆயினும் அவை பிற்காலத்தில் பாங்குகளாக மாறவில்லை. இன்றைய பாங்கு எவ்வாறு தோன்றியது என்ருல் ஃப்ளாரன்ஸ் (Florence) நகரில் பல பண வர்த்தகர்கள் ஆரம்பம் செய்ததே யாகும். இவர்கள் 14ஆம் நூற்ருண்டில் அஸ்ஸிய சூலி, பெருஸ்ஸி, பிட்டிமெடிஸி என்ற பெயரில் வைப்புகள் பெற்றுப் பின்னர் அவற்றைக் கடனுக்கு வெளிவிட்டு லாபம் சம்பாதித்தனர். ஒரு சமயத்தில் ஃப்ளாரன்ஸ் நகரில் 80 பாங்கு வர்த்தகர்கள் இருந்தனர். ஆயினும் ஒரு பொது பாங்குகூட நடைபெறவில்லை.

ஆங்கில நாட்டில் பாங்குத் தொழில் வளர்ச்சி

ராயல் எக்ஸ்சேஞ்சர் (Royal Exchanger) - மூன்ரும் எட்வர்ட் காலத்தில் பணம் மாற்றம் செய்து வந்தனர். அந்த நாளில் இது பாங்கு அலுவல்களில் ஒன்ருகும். முடிமன்னரின் நலனுக்காக வேண்டி ஒரு ராயல் எக்ஸ்சேஞ்சர் (Royal Exchanger) என்ற நபர் இப் பணியைச் செய்தார். ஆங்கில நாட்டிற்குள் நுழையும் வர்த்தகர்கள் யாத்திரிகை செய்பவர்கள் மற்றும் இதரர் தங்கள் வசமுள்ள அன்னிய நாணயங்களைக் கொடுத்து பதிலுக்கு ஆங்கில நாணயங்களைப் பெற்றனர். அதே போல் நாட்டைவிட்டு வெளியேறும் மக்கள் இதர நாணயங்களைப் பெற்றனர்.

பொன் வர்த்தகர்கள் :—எலிசபெத் அரசியின் காலம் முதற் கொண்டு அமெரிக்கா நாட்டிலிருந்து பொன் கட்டிகள் பெருமளவில் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அவ்வமயம் அயல்நாட்டு வாணிபமும் உயர்ந்தமுறையில் நடந்தது. நிலம்மட்டும் செல்வமாகத் திகழாது மூலதன உருவில் நிதியும் செல்வமும் நகர வர்த்தகர்கள் பெற்றிருந்தனர். ராயல் தங்கசாலையில் (Royal Mint) 1640ஆம் ஆண்டு £ 130,000 பொன் வெள்ளியாக இருந்த பொதுமக்கள் பணத்தை முதலாம் சார்லஸ், அரசன் என்ற முறையில் பறித்துக்கொண்டார். அன்று முதல் பொது பாங்க் திறக்க வேண்டியதின் அவசியத்தை மக்கள் உணர்ந்தனர். அரசன் பறித்துக்கொண்ட தொகையை திருப்ப மறுத்ததால் தங்களுடைய பணப் பொருப்பாளரிடம் (Cashier) பணத்தை ஒப்படைத்தனர். அவர்கள் தங்கள் சொந்த நலத்திற்குப் பயன்படுத்தி ஏமாற்றினர். முடிவில் இந்த வர்த்தகர்கள் பொன் வர்த்தகர்களிடம் பாதுகாப்பாக வைக்க முற்பட்டனர். பொன்வர்த்தகர்கள் பாதுகாப்பான அறைகளைக் கட்டி, கட்டுக் காவலில் இவைகளைக் காப்பாற்றிக் கொடுத்தனர்.

"வழங்குதல்" "வைப்பு" தொடக்கம் :—பொன்வர்த்தகர் எழுதிக் கொடுத்த ரொக்க ரசீதின் அடிப்படையில் இவர்கள் தங்கள் நிதியை விட்டுவைத்தனர். மேற்படி ரசீதின் மற்றொரு பெயர் பொன்வர்த்தகர் நோட்டு. கோரியபோது அவர் இந்தநோட்டைக் காண்பித்தவருக்கோ அல்லது வைப்புதாரருக்கோ திருப்பிக் கொடுக்க உறுதி செய்கிறார். இதையடுத்து உடனே வைப்பு முறையும், வெளியீட்டு முறையும் பழக்கத்தில் வந்தன. முதன்முதலாக பொன்வர்த்தகர்களின் நோட்டுக் கொணர்பவர்க்குக் கொடுக்கும் சீட்டாக அமைந்திருந்தது. பின்னர் இந்த ரசீது பாங்கு நோட்டாக பரிணமித்தது. கோரிய உடனே கொடுக்கவேண்டிய சீட்டானதால் இதற்கு அதிகப்படியான செல்வாக்கு ஏற்பட்டுப் பெருமளவில் புழக்கத்தில் இருந்தது. இரண்டாவதாகப் பொன்வர்த்தகர்கள் நீண்ட கால வைப்புப் பெற்றனர். இதன்மூலம் அதிக அளவில் பெரும் செல்வம் திரண்டு வந்தது. டச்சு நாட்டுப் பாங்கு நடத்துவோர் செய்வதுபோல தங்கள் வாடிக்கைகாரர்களின் வைப்பின் ஒரு பகுதியைக் கடனுகவட்டிக்கு விட்டனர். இதுகாறும் வாடிக்கைச் காரர்களின் நிதியைக் காக்கச்சிறிய தொகையைச் கட்டணமாகக் கோரினர். பெருஞ்செல்வம்கிடைத்ததும் அதைக்கொண்டு கடனுக்குவிட்டு லாபம் சம்பாதித்தனர். எனவே, வட்டி கொடுத்து வைப்புகளைப் பெற்றனர். நாளடைவில் வர்த்தகம் அதிகமாகி வந்தது. கடன்களுக்காக வேண்டுமென்ற அளவு

தங்கள் கைவசம் ரொக்கம் வைத்துக்கொள்ள ஆரம்பித்தனர். காலவரையறை இன்றி எப்போது நோட்டை நீட்டினாலும் பணம் திருப்பித்தரக் கூடிய நிலையைப் பெற்றிருந்தனர். சராசரிக் கணக்கை யனுசரித்து அதன்படி வைப்புதாரர்களுக்கும், கணக்குள்ள வாடிக்கைகரர்களின் தேவைகளைக் கோரியபோது கொடுக்க முன்வந்தனர்.

நடப்பு, வைப்பு கணக்குகளின் பிறப்பு :—*1672ஆம் ஆண்டில் இரண்டாம் சார்லஸ் பொன்வர்த்தகர்களிடமிருந்து பெருவாரியாகக் கடன் வாங்கி அவனது தகப்பன் செய்ததுபோலத் திருப்பித்தர மறுத்துவிட்டான். அதன் காரணமாக நாட்டின் பாங்குநிலை சற்று ஆட்டம் கண்டது. இத்தருணத்தில் கொடுக்கல் வாங்கல் தடைபட்டன. பொன்வர்த்தகர்களின் முன்யோசனை யற்றதும் அதிகலாபம் பெறப்பட்ட ஆசையினால் முதலிழந்து போயினர். ஆயினும் அவர்கள் நடப்பு வைப்புக் கணக்கில் பணம் பெற்று முன் அறிவிப்பு இல்லாது கோரியபோது திருப்பிக் கொடுக்க முன்வந்தனர்.*

பாங்க் ஆஃப் இங்கிலாந்து

டன்னேஜ் சட்டம் :—*மூன்றும் வில்லியம் பிரான்சு நாட்டுடன் போரில் ஈடுபட்ட காரணத்தால் பணமுடை ஏற்பட்டது. அப்போது 1694-ல் பாங்க் ஆஃப் இங்கிலாந்து துவக்கம் பெற்றது. அவ்வமயம் பொதுமக்களும நாட்டிலுள்ள பொன் வர்த்தகர்களின் மீது நம்பிக்கையை இழக்க ஆரம்பித்தனர். இந்த சூழலிலிருந்து விடுபட திரு. பாட்டர்சன்* (Patterson) *என்பவர் ஒரு ஆலோசனை கூறினர். அதன்படி £1,200,000 நிதி எழுப்பி அதைக் கடனாக அரசினருக்குக் கொடுப்பது என்றும் அதற்காக அரசினர் அவர் தொடங்கும் நிறுவனத்திற்குப் பணத்தாள் அடித்து வழங்கும் முற்றுரிமை கொடுக்க வேண்டும் என்றும் இன்னும் இதர சில சலுகைகள் காட்டவேண்டும் என்றும் முடிவாக்கப்பட்டது. இவற்றையெல்லாம் அனுமதித்த சட்டத்துக்கு* **டன்னேஜ் சட்டம்** (Tonnage Act) *என்று பெயர். அதன் முக்கியப் பிரிவுகள் வருமாறு:—*

(1) *சந்தா மூலமாக £1,200,000 தொகையைத் திரட்டி அம்மாதிரி தொகை அளித்தவர்கள் அனைவரும் ஒரு கூட்டு நிறுவனத்தைத் தொடங்கி அதைக் "கவர்னரும் கம்பெனியான பாங்கு ஆஃப் இங்கிலாந்து" என்று பெயர் இட வேண்டும்.*

(2) அடுத்து, முதல் ஜூலை முன்பு ஒரு நபரும் £10,000க்கு மேல் செலுத்த வேண்டியதில்லை. அதன் பிறகு ஒரு நபரும் £20,000க்கு மேல் மொத்தமாக அளிக்க வேண்டியதில்லை.

(3) அந்தக் கூட்டு நிறுவனம் மேற்படி தொகை முழுவதையும் மூலதனமாக அரசினரிடம் விட்டுவிட வேண்டியது. அதற்கு ஈடாக அரசினர் 8 சதவிகிதம் வட்டியும் கூட்டு நிறுவனம் நடத்தச் செலவிற்கு £4,000-ம் கொடுக்க வேண்டியது.

(4) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு இந்தக் கூட்டு நிறுவனத்திற்குத் தனிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்பட்டு பாங்குத் தொழிலை நடத்திவர வேண்டியது. எச்சமயமும் இந்தப் பட்டயத்தை ஒரு வருட அறிவிப்பின் பேரில் திரும்பப் பெற்றுக் கொள்ளும்.

(5) இந்தக் கூட்டு நிறுவனம் இதர வர்த்தகத்தில் ஈடுபடக் கூடாது. மாற்று உண்டியல் கொடுக்கல், வாங்கல், பொன் இவைகளில் வர்த்தகம் செய்வது மற்றும் முன்பணமாகக் கொடுக்கப்பட்ட சரக்குகளில் வாணிபம் செய்வது.

நாடு முழுமையும் பரவியுள்ள சிறிய பாங்குகளுக்கு இது பலத்த போட்டி பாங்காக அமைந்தது. பொன் வர்த்தகர்களால் திறக்கப்பட்ட நாட்டு பாங்குகளுக்கும் இது பெரும் இடையூறாக இருந்தது. குறிப்பாக நாட்டிங்காமில் ஸ்மித்துஸ் (Smiths) என்ற நாட்டு பாங்கு மிகவும் பிரபலமாகத் திகழ்ந்து வந்தது.

பணத்தாள் வெளியிடும் முற்றுரிமை :—1708ஆம் ஆண்டில் இன்னும் ஒரு சட்டம் உருவாகியது. அதன்படி ஆறு கூட்டுதாரர் மேற்பட்டுள்ள எந்த பாங்கும் புரோநோட்டு அதாவது பாங்கு நோட்டுகள் வெளியிடக் கூடாது. முக்கியமான பாங்கு சட்டத்தின் பிரிவு வருமாறு : " கவர்னரும் கூட்டு நிறுவனமெனப்படும் பாங்க் ஆஃப் இங்கிலாந்து தவிர இதர எந்தநிறுவனமும் அல்லது இனி உருவாகப் போகிற அல்லது உருவான கூட்டு வர்த்தகம் ஆறு கூட்டு வர்த்தகர்களுக்கு மேல் போகாது இருப்பின் இங்கிலாந்துக்குள் கடன் பெற்றுத் தங்கள் முறி அல்லது நோட்டுகள் மூலம் கோரியபோதோ அல்லது ஆறு மாதங்களுக்குள்ளாகவோ திருப்பவேண்டும்."

பாங்க் ஆஃப் இங்கிலாந்தின் பணத்தாளின் குறைந்த சுற்றோட்டம் :—இந்தச் சட்டத்தில் குறிப்பிட்டது போல நோட்டு வெளியிடும் முற்றுரிமை பாங்க் ஆஃப் இங்கிலாந்திற்கு விடப்பட்டது. இதர கூட்டுப் பங்கு பாங்குகளுக்கு அவ்வாறான

சலுகைகள் கொடுக்கப்படவில்லை. நாட்டு பாங்குகள் ஆறு கூட்டு தாரர்களுக்கு மேல் இல்லாத பாங்கு நிறுவனங்களும் லண்டன் நகரிலும் மற்றும் அதையடுத்துள்ள பகுதிகளிலும் பாங்கு நோட்டுகள் செலாவணியில் இல்லை. எனவே, நாட்டு பாங்குகள் வைப்பு முறையை அதிகரித்தனர். நாளடைவில் நோட்டு வெளியிடும் முறையைக் கைவிட்டனர். இவர்கள் ஏற்றுக்கொண்ட வைப்புகளைக் கடிதம் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். 1749-லும் 1759-லும் அச்சடித்த செக்குத் தாள்களை பாங்க் ஆஃப் இங்கிலாந்து வெளியிட்டது. நகர எல்லைக்கு அப்பால் அவைகளுக்கு அவ்வளவு கிராக்கி ஏற்படவில்லை. மேலும் இதற்கு இதர பகுதிகளில் கிளைகளும் திறக்கப்படவில்லை. மாகாண நகரங்களில் இருந்த ஒரு சில தனியார் பாங்குகள் 18ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் பெரும் வளர்ச்சி பெற்றன. அந்த ஆண்டின் இறுதியில் 300 எண்களாயின.

முற்றுரிமையில் கட்டுப்பாடு :—1825-ல் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக நோட்டு வெளியிடும் தன்மைக்கும், நாட்டு பாங்குகளுக்கும் சாவுமணி அடிக்கப்பட்டது. இந்த நெருக்கடியை அடுத்து பாங்கு சம்பந்தமான சட்டமியற்றல் தொடர்ந்தது. லண்டன் நகரத்திற்கு 65-மைல் வட்டாரத்திற்கு வெளியே கூட்டுப் பங்கு பாங்குகளைத் திறந்து எல்லையற்ற பொறுப்பினைக் கொடுத்து ஆறு கூட்டுதாரர்களுக்குமேல் அதிக எண்ணிக்கையில் தொடங்க எண்ணினர். 1826ஆம் ஆண்டு மேற்படி சட்டம் உண்டாயிற்று. புதிய சட்டம் தோன்றிய போதும்கூட பணத்தாள் வெளியிடும் முற்றுரிமை பாங்க் ஆஃப் இங்கிலாந்தின் கையில் விடப்பட்டது. 1708ஆம் ஆண்டில் முற்றுரிமைச் சட்டம் உருவாகியது. கூட்டுப் பங்கு பாங்கு வர்த்தகத்தையே முற்றுரிமையாக விளக்கம் தரப்பட்டது. அக்காலங்களில் பணத்தாள் வெளியிடும் வர்த்தகம் மிகவும் லாபம் கொடுக்கக் கூடியதென்று கருதப்பட்டது.

கூட்டுப் பங்கு பாங்குத் தொழில் லண்டன் நகரில் பலவந்தமாக நுழைதல் :—லண்டன் நகரின் 65 மைல் சுற்றி எவ்வித பாங்கும் திறப்பது கூடாது என்ற கொள்கை தவறு. திரு. ஜோப்லின் (**Joplin**) என்பவர் பாங்க் ஆஃப் இங்கிலாந்தின் பட்டயத்தை நன்கு வாசித்து மேற்படி பாங்கிற்கு முற்றுரிமை ஒன்றும் வழங்கப்படவில்லை. 1833ஆம் ஆண்டில் பாங்க் ஆஃப் இங்கிலாந்தின் பட்டயத்தைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்ட காலத்தில் கூட்டுப் பங்கு பாங்குகளை லண்டனில் திறக்கச் சட்டசபை அனுமதியை விளக்கி ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது. 1834-ல் இதன் விளைவாக "பெரும்

ஜவரில்" ஒரு பாங்கு "வெஸ்ட் மினிஸ்டர்" லண்டன் நகரில் கிளையைத் திறந்தது. பாங்க் ஆஃப் இங்கிலாந்து அழையாது வருபவரை ஏற்கத் தயாராக இல்லை. எனினும், வந்த பின்னர் எதிர்ப்புக் கூருது ஏற்றுக் கொண்டது.

பீல் அவர்கள் இயற்றிய சட்டம், 1844:—அக்காலத்தில் நாட்டு பாங்கு, கூட்டுப்பங்கு பாங்கு, தனியார் பாங்கு இவையனைத்தும் இன்ன அளவில்தான் பணத்தாள் வெளியிடலாம் என்ற வரையறையில்லாது இருந்தது. இதன் காரணமாக அநேக பாங்குகள் நெருக்கடி நிலையை யெய்தின. சில பாங்குகள் மூடப்பட்டன. 1844-ல் ஆங்கில பாங்குமுறையில் பெரியதிருப்பம் ஏற்பட்டது. புதியதாகத் தோன்றும் பாங்குகளுக்கு நோட்டு வெளியிடும் அதிகாரம் நீக்கப்பட்டு அவ்வமயம் நோட்டு வெளியிட்டுக் கொண்டிருந்த பாங்குகள் மட்டுமே நோட்டுத் தொடர்ந்து வெளியிடலாம் என உறுதியாக்கப்பட்டது. இதன் விளைவாக பாங்க் ஆஃப் இங்கிலாந்து மட்டிலும் நோட்டு வெளியிடும் அதிகாரத்தைப் பெற்றது. நாளடைவில் இதர பாங்குகள் நோட்டு.வெளியிடும் அதிகாரத்தைக் கைவிட்டு விட்டு வைப்புத் தொழிலில் ஈடுபடவாரம்பித்தன.

செக்குத்தாள் செலாவணியும் பாங்கு வைப்பின் வளர்ச்சியும் :— 1844ஆம் ஆண்டு பீல் சட்டத்தை யனுசரித்துப் புதியதாய்த் தோன்றிய பாங்குகளுக்கு நோட்டு வெளியிட உரிமை இல்லாது போயிற்று. முன்கால முதல் நோட்டு வெளியிட்டு வந்த பாங்குகளுக்கு அதைப் பெருக்க அனுமதி பெருது போயிற்று. இந்த இடையூற்றைத் தவிர்க்க எண்ணிச் செக்குத் தாள் செலாவணியைப் பரப்ப, வைப்புபாங்குத் தொழிலும் ஊக்கம் காட்ட ஆரம்பித்தன. பாங்கு நோட்டு வெளியீட்டில் கிடைக்கும் ஊதியத்தைக்காட்டிலும் செக்குத்தாள் செலாவணியில் அதிகம் கிடைத்த காரணத்தால் எல்லா பாங்குகளும் அதில் அதிக அக்கறை காட்ட ஆரம்பித்தன. 1890ஆம் ஆண்டிற்குப் பிறகு பாங்குகள் பிணைக்கப்பட்டன, அல்லது ஒன்ருகக் கலக்கப் பட்டன. இங்கிலாந்திலும் வேல்ஸ் நாட்டிலும் 1830ஆம் ஆண்டில் 104 பாங்குகள் இருந்தன. 1956ஆம் ஆண்டில் அவைகள் பிணைக்கப்பட்டு 12 பாங்குகளாயின. பாங்கு அலுவலகங்கள் 2203-லிருந்து 1961ஆம் ஆண்டின் இறுதியில் 10,700 ஆயின. 1920ஆம் ஆண்டைய ரொக்கச் செலவாணி பாங்கு நோட்டுச்சட்டப்படி ரொக்கச் செலாவணி வெளியிடல் பாங்க் ஆஃப் இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது. அதுமுதல் முற்றுரிமையாக பாங்க் ஆஃப் இங்கிலாந்து £ 1, பணத்தாள்,

10ஷில். தாள் இவ்விரண்டினையும் முன்னரே வெளியிட்டு வந்த £5 நோட்டுடன் வெளியிட்டது. 1929ஆம் ஆண்டு நவம்பர் மீ பாங்க் ஆஃப் இங்கிலாந்து செக்யூரிடிஸ் மானேஜ்மெண்ட் ட்ரஸ்ட் லிமிடெட் (Securities Management Trust Ltd.,) என்ற துணை நிறுவனத்தை ஏற்படுத்தி அதன்மூலம் தொழில் துறைக்கான நிதி வசதியை யேற்படுத்தமுற்பட்டது. 1930ஆம் ஆண்டில் இன்னொரு புதிய கம்பெனி "பாங்கு நடத்துவோர் தொழில் வளர்ச்சிக் கம்பெனி லிமிடெட்," (Banker Industrial Development Company Ltd.) தொடக்கம் செய்து தொழிலையும், செல்வத்தையும் நெருங்கிப் பழகவிட ஏற்பாடு செய்தனர். 1947ஆம் ஆண்டு தொழில் கட்சி அரசினர் பாங்க் ஆஃப் இங்கிலாந்தை தேசியமயமாக்கி, அதன் பங்குத் தொடர்ச்சியைக் கருவூலர்த் தலைவர் பெயருக்கு மாற்றி, கவர்னர், உதவி கவர்னர்; நெறியாளர் இவர்களை நியமனம் செய்யும் பொறுப்பை அரசினரிடம் விட்டது. பாங்கின் உரிமையாளர்களுக்கு நீண்ட கால கவர்மெண்ட் கூட்டுப்பங்கு உரிமையைக் கொடுத்தது. இதிலிருந்து கிடைக்கும் வருமானம் முன்பெல்லாம் கிடைத்த வருமானத்தைப்போல் இருந்தது. பாங்க் ஆஃப் இங்கிலாந்து தேசிய மயமாக்கப்பட்டபோது அதன் மூலதனம் £ 14,553,000 இதற்குப்பதிலாக அரசினர் பங்கு £58,212,000முகமதிப்புள்ளதைக் கொடுத்தனர். தொழில்சர்க்கார் செய்த பொது உடைமை மாற்றத்திற்கான இந்த முதல் சட்டத்திற்குப் பெரும் எதிர்ப்பு இருந்து வந்தது.

பாங்குகளின் பணிகள்

தற்கால வாணிபமும் பாங்குத்தொழிலும் :— அன்று பொன் வர்த்தகர்கள் நடத்தி வந்த பாங்குத்தொழில் முக்கியமாக, வைப்புகள் பெறுதலும், அதில் ஒரு பகுதியைக் கடனுக்கு விடுதலுமாக இருந்தது. நாளடைவில் இந்தத் தொழில் மேலும் மேலும் சீர்செய்யப்பட்டுப் பரவிவந்தது. எனவே, வாணிபம் அதிக அளவில் பாங்குத்தொழிலை நாட ஆரம்பித்தது, நடப்பிலுள்ள பணமாற்ற முறையின்கீழ் பாங்குகளை அண்டி வாணிபம் நடந்துவருகிறது. ஒன்றல்லது இரண்டு நாள்கள் பாங்குத் தொழிலாளர்கள் தங்கள் வேலை முடக்கம் செய்யின் வாணிபத்தின் நிலை இரங்கத்தக்கதாகிச் சோர்ந்து போகும் என்று கூறவும் வேண்டுமா ?

பாங்குப் பணிகளின் முன்னேற்றம் என்றும் பரவுகிறது :— இன்றைய நிலைமையில் பாங்குவர்த்தகர் பலதரப்பட்ட

விவகாரங்களில் ஈடுபடவேண்டி யேற்படுகிறது. விலை மதிப்புள்ள பொருள்கள், பங்கு, பத்திரங்கள் இவைகளின் பொறுப்பாளராக இருக்கவேண்டி நேரிடுகிறது. நாட்டினுள் வரும் இறக்குமதிகளையும் நாட்டினின்று வெளியேறும் ஏற்றுமதிகளையும் கண்காணித்து அவ்வப்போது போதிய பணவசதி செய்து பராமரிக்க வேண்டிய பொறுப்பு பாங்குகள்தான் செய்யவேண்டும். மேலே கூறிய ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தமான பத்திரங்கள் பாங்குமூலம் அனுப்பப்படுகின்றன. மாற்றுண்டியல் செலாவணித் தாள்கள் மட்டுமேயன்றி கப்பல் சரக்குப் பட்டியல் (B/c) ரெயில்வே ரசீது, கிடங்கு ஆணை (Warehouse Warrant), கடல் நட்ட ஈட்டுறுதிப் பத்திரம், இதரவகை ரசீதுகள் இவைகளையும் மாற்றிக் கொடுக்கிறார். பாங்கு வர்த்தகராக இருந்துகொண்டு பாங்குப் பத்திரங்களின்மீது முன்பணம்கொடுக்கிறார். பற்றுஓலை (Letter of Credit) பயணர் செக்குத்தாள்கள் அயல்நாடு செல்லவிரும்பும் பயணருக்கான சுற்றோலை தயார் செய்து அனுப்புதல், சரக்குகளை வாங்கி கப்பலில் அனுப்ப ஏற்பாடு செய்தல், தங்கள் வாடிக்கைக் காரர்கள் ஏற்றெடுத்த இழப்பீடு, உத்திரவாதங்களில் கையொப்பம் இடவேண்டும். பிறருடைய ஆதீனத்தை எடுத்துப் பொறுப்பாளராக இருந்து நடத்த முன்வருகிறார்கள். பெரும் தொழில் நிறுவனங்களுடைய பங்குகள் டிபெஞ்சர் என்ற கடன் பத்திரங்களை முன்னின்று வாங்கி உதவிவருகிறார்கள். இவற்றின்மூலம் தொழில் நிறுவனங்களின் பணிக்கான மூலதனம் கிடைக்கிறது. தங்கள் வாடிக்கைக்காரருக்குக் கடவுச்சீட்டு வாங்கிக் கொடுத்தும் அவர்களுக்கான தபால்களைப் பார்த்துப் பதில் எழுதியும், வருமானவரி அதிகாரிகளுடன் தபால் போக்குவரத்துச் செய்து கொண்டும் அவ்வப்போது தவணையில் கொடுக்க வேண்டியவைகளைக் காலாகாலத்தில் கட்டியும், தங்கள் கிராக்கிக்கு ஏற்றவாறு குடிக்கூலி, வரி, சந்தா முதலியவற்றைக் கட்டி, கணக்கில் பற்றெழுதுவார்கள். தங்கள் வாடிக்கைக்காரர்களின் தகவல்படி உயிலில் கண்ட சொத்தை நிருவாகம் செய்வார்கள். தங்கள் வாடிக்கைக்காரர்களுக்கு எந்தெந்த வகையில் உதவியளிக்க இயலுமோ அவ்வகையில் உதவிபுரிவார்கள். நாட்டின் முன்னேற்றத்தைப் பொறுத்து பாங்கு தன் உதவியை நிறைந்த அளவில் வாணிபத் தொழிலில் ஈடுபடுத்துவர். ஆரம்பத்தில் மிகவும் குறுகிய கோட்பாடும் எல்லையும் இருந்த பாங்கு வர்த்தகம் நாளுக்கு நாள் படிப்படியாக அதிகரித்து இன்று இங்கிலாந்து, ஐக்கிய நாடுகள் இவைகளில் பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது எனலாம். பாங்குத் தொழிலையண்டாத ஒரு வாணிபம் கூட இல்லை எனலாம்.

பல்வேறு வகையான பாங்குகளின் தொழில்கள்

பிரிட்டிஷ் பாங்குத் தொழிலின் மரபுகள் :— *பொதுவாக ஆங்கில பாங்குகள் நடப்பு, வைப்பு, தவணை வைப்பு போன்ற கணக்குகளில் ஈடுபட்டும், வாணிபம், தொழில் இவைகளுக்குக் கடன் வசதியளித்தும் அவற்றைச் செம்மையாக நடத்த மாற்றுரிமைப் பத்திரங்களைக் கழிவு அல்லது தள்ளுபடியில் வாங்கியும் புதிய கடன் கணக்குகளைத் தொடங்கியும், உதவிபுரிகின்றன. ஆயினும், ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பாங்குகள் மேலே கூறப்பட்ட செயல்களில் ஏதாவது ஒன்றில் அல்லது சிலவற்றில் குறிப்பாகப் பணிபுரிகின்றன. சேமிப்பு, வைப்பு பாங்குகள் அதிகம் இல்லை. விவசாய நாடுகளில் நில அடைமான பாங்குகள் உள்ளன. இவை நீண்டகாலக் கடன் வசதியளித்து நிலையான சொத்துகளை வாங்க உதவி வருகின்றன, நிலத்தைத் தரப்படுத்தவும் உதவி புரிகின்றன. தொழில் வளம் மிகுந்த சில நாடுகளில் உள்ள பாங்குகள் தொழிலுக்கான வசதி செய்வதோடல்லாது அவர்களுடைய பங்குகள், டிபெஞ்சர் கடன் பத்திரங்களையும் விற்றுக் கொடுக்கின்றன.*

வெளியிடும் உண்டியலை வட்டம் கழித்து வர்த்தகம் செய்யும் நிறுவனங்கள் :— *பழங்கொள்கைகளில் ஊறிய ஆங்கில பாங்குகள் பாங்குத் தொழில் முன்னேற்றத்தை அவ்வளவாக ஏற்கவில்லை. எனவே, தனிப்பட்ட முறையில் இதர சில வர்த்தகங்கள் தனித் தனியே அதில் முன்னேற்றங்கண்ட சில நிறுவனங்கள் செய்து வருகின்றன. அத்தொழில்களை உண்மையாக பாங்குகள் தான் எடுத்து நடத்த வேண்டும். தொழில் நுட்பத்துடன் காண்கில் பங்கு வெளியீட்டுத் தொழில், மாற்றுரிமை செலாவணித் தள்ளுபடி இவையனைத்தும் பாங்கு வர்த்தகமாகக் கொள்ள வேண்டும். தொழில் நிறுவனம். அரசினர் இவைகளுக்கு வேண்டிய மூலதனப் பெருக்கத்திற்கு இவை உதவி செய்வதால் இவைகளும் பாங்குகளே! ஆயினும் புதியதாக ஒரு நபர் லண்டன் மாநகரில்] ஒரு பெரிய தள்ளுபடி வர்த்தக நிறுவனத்தைக் கண்டால் அங்கு நடக்கும் முறை பாங்கு முறைக்கு முற்றிலும் மாறியுள்ளதாகத் தென்படும்.*

வாணிப பாங்கினுடைய அலுவல்கள்

வெறும் வைப்புகளை வைத்துக் கொள்பவரல்லர் :— *பொதுவாக பாங்கு எனப்படுவது பணத்தினைச் சேர்த்து வைக்கப் படவேண்டிய இடம் என்று கருதுவர். இந்த எண்ணம் திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லைஎனலாம். உண்மையில் விலையுயர்ந்த பொருள்களை பாங்கு ஏற்றுக்கொண்டு, பின்னர்த்*

திருப்பித் தருகிறது. ஆயினும், இந்தப்பணி மிகவும் துணைப் பணியாகவே கருதப்படவேண்டும். சாதாரணமாக, விலை மதிப்பிட முடியா நகைகள், பத்திரங்கள், செக்யூரிடிகள் இவைகளைப் பாதுகாப்புடன் வைத்துக் கொள்ளுகிறது. இம்மாதிரி வைப்புக்களைக் காப்பாற்றும் நிறுவனமாகவோ அல்லது பொறுப்பினராகவோ இருப்பது பல்வகைப்பட்ட அலுவல்களில் ஒன்றும். இவற்றைவிட மிகவும் வன்மையான பணிகளை நாம் குறிப்பிட வேண்டுவது இன்றியமையாதது. பொதுப்படையாக வாணிப பாங்கின் அலுவல்களைக் கீழ்க்கண்ட தலைப்புகளில் விவரிப்போம்:

(1) வைப்புப்பணம் பெறுதல்:—நடப்பிலுள்ள எல்லா பாங்குகளும் இந்தத் தொழிலை மிகவும் ஏற்றதாகக் கருதி இதன் அடிப்படையில் தங்கள் இதர அலுவல்களை ஏற்படுத்திக் கொள்கின்றன. ஒரு பாங்கினுடைய ரொக்க நடமாட்டத்தன்மை அதனுடைய சேமிப்பு, நடப்பு, தவணை வைப்புகளைப் பொறுத்து இருக்கும். இந்த வைப்புகளால்தான் பாங்கின் செல்வநிலை உறுதிப்படும். தவணை வைப்பின் பேரில் பெற்ற தொகை குறிப்பிட்ட தேதிவரை எவ்விதப் பயமுமின்றிப் பலனளிக்கும் வகையில் பயன்படுத்தலாம். சேமிப்பு வைப்பின்மீது கட்டுப்பாடுகள் விதித்தபடியால் பெருந் தொகையைப் பயன்படுத்தலாம். சேமிப்பு வைப்பின்மீதுள்ள கட்டுப்பாடாவது (1) திருப்பித்தரக் கோரும் தொகையின்மீது கட்டுப்பாடு, (2) வாரத்தில் திருப்பிப்பெற வேண்டியதடவைகள் மீது கட்டுப்பாடு. நடப்புவைப்புக்கணக்குகளைத் தொடங்குவதால் வாடிக்கைக்காரர்கள் சிக்கனமாகப் பணத்தைப் பயன் படுத்துகிறார்கள். அதே சமயத்தில் பாங்குகளுக்கும் புழக்கத்திற்கான பணம் கிடைக்கிறது. வைப்புக் கணக்கின் மீது பணம் வாங்குவதால் பாங்குகள் பணத்தைக் காப்பாற்றித் திருப்புகின்றன. மேற்படி தொகையைக் காப்பறையில் இட்டு விடவில்லை. அத் தொகைக்குப் பதில் பாங்கு கடன் பெற்றவராகிறார். அதற்காக அவர் வட்டியும் தர இசைகிறார். வைப்புத் தொகையையும் வட்டியையும் சேர்த்து கோரியபோது ஒப்பந்தப்படி திருப்பி விடுகிறார்.

(2) நோட்டுகள் வெளியிடுதல்:—ஒரு காலத்தில் நோட்டு அச்சடித்துப் புழக்கத்தில் விடுவது பெரிய பாங்குத் தொழிலாகக் கருதி அதில் லாபம் கண்டனர். நடப்பில் இத்தொழிலை உலகில் பல நாட்டின் மைய பாங்குகள் அல்லது மத்திய பாங்குகள்தான் பொறுப்புடன் நடத்தி வருகின்றன. வாணிபப் பாங்குகள் இத் துறையில் ஈடுபடுவதில்லை. மேலும் செக்குத்தாள்கள் நடமாட்டம்

அதிகரித்து வருகின்றன. எனவே, இதில் நாட்டமில்லை எனலாம் எடுத்துக்காட்டாக இங்கிலாந்து, ஐக்கிய நாடுகள் இவைகளில் இருந்துவரும் பாங்கு நோட்டுகள் மிகவும் குறைந்த அளவில்தான் புழக்கத்தில் இருந்து வருகின்றன. ஆயினும் ஐரோப்பாக் கண்டத்தில் செர்மனியிலும் ஃப்ரான்சிலும் இவைகளை மக்கள் பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர். செக்குத்தாள்களைப் பரப்ப முயன்று வருகின்றனர்.

(3) **பணம் கடனாகக் கொடுத்தல்:**—இந்த அலுவல் அவ்வளவு மெச்சத்தக்கது அன்று. ஆயினும் வர்த்தகத்தில் லாபம் காண வேண்டுமானால் இதைத்தான் நம்பிப் பிழைக்க வேண்டும். ஒரு மாற்றுண்டியலைத் தள்ளுபடி செய்து எடுத்துக் கொள்ளுவதானாலும், அல்லது புரோநோட்டைப் பெற்றுக் கொண்டு பணம் கொடுப்பதானாலும் இவ்விரண்டின் முடிவில் பாங்கு தமது பணத்தைக் கடனாகக் கொடுக்க முன் வருகிறது. கடன் வாங்குபவர் வருங்காலத்தில் குறிப்பிட்ட தேதியில் திருப்பிக் கொடுக்க முன்வருகிறார். எனவே, தனி நபர்களும் கார்ப்ரேஷன்களும் தங்கள் மூலதனம் போதாத நிலையைக்கண்டு பாங்கு நடத்துபவரிடமிருந்து கடன் வாங்கிக்கொள்ளுகின்றனர். இதனால் அவர்களுடைய மூலதனம் லாபம் தரத்தகு முறையில் செலவழிக்கப்படுகிறது எனலாம். ஒரு பாங்கு, வர்த்தகர்களுக்கும் வியாபாரிகளுக்கும் ஒரு அளவு கடன் அளிப்பதால் அவர்கள் அந்தத் தொகையைக் கொண்டு தாங்களும் லாபம் பெற்றுச் சமுதாயத்திற்கும் நலத்தை தேடித் தருகிறார்கள். ஆதலால் பாங்கு சமுதாயத்திற்கு உதவி புரிகிறது எனலாம்.

(4) **பணத்தை இடம் மாற்றுகை:**—ஓர் ஊரிலிருந்தோ நாட்டிலிருந்தோ மற்றோர் ஊர் அல்லது நாட்டிற்குத் தற்காலத்திலுள்ள பாங்குகள் பணம் அனுப்ப வசதிசெய்து கொடுக்கின்றன. டிராஃப்ட் மூலம் தங்கள் கிளைகளுக்கோ, பதிலாள்களுக்கோ அனுப்பிக் கொடுத்து மாற்றஏற்பாடு செய்கிறது. வியாபாரிகளின் மாற்றுண்டியல்களை வாங்கி அதன் மூலம் பிற நாட்டிலும் இதர ஊர்களிலும் உள்ள கடன் பட்டாரிடமிருந்து பணம்பெற செய்கிறது. இவற்றால் உள்நாட்டு வியாபாரம் மட்டுமின்றி அயல் நாட்டு வியாபாரங்களும் நடக்க உறுதுணை புரிகின்றன. இன்றைய நிலையில் தொழில் வளர்ச்சி மிகுந்து பற்பல நாடுகளின் செல்வ நிலையின் ஏற்றத்தைக் காணும்போது பல்வேறு பாகங்களில் செலாவணியின்றித் தொழில் வளர்ச்சி இருக்க நியாயமில்லை. எனவே, இவையனைத்தும் பாங்குகளின் மூலம் பெற்ற வசதிகள் எனக்கூறலாம்.

பல்திறப்பட்ட அலுவல்கள்

மேலே கூறிய பெரும் அலுவல்களை அடுத்து இன்னும் சில அலுவல்களைத் தற்கால பாங்குகள் செய்துவருகின்றன. அவையாவன (1) கடன் வசதிக்கான பற்றுேலை விடுத்தல், பயணருக்கான செக்குத்தாள்கள் கொடுத்தல், சுற்றுப் பற்றுேலை அனுப்பல், (2) கம்பெனிகளின் மூலதன வெளியீட்டில் பங்குகளை வாங்கி நட்டபயத்தினின்று காப்பளித்தல், (3) மாற்றுண்டியலில் கழிவு (கசிர்) நீக்கி அதன்மூலம் தன்பெயரை உதவி வருதல், (4) விலைமதிப்புள்ள பொருள்களையும் நகைகளையும் போற்றிக் காத்தல், (5) வாடிக்கைகாரர்களின் சொத்துகளை அவர் உத்தரவுபடி இறந்தபின் பொறுப்பாக நிருவகித்தல், (6) வாடிக்கைக்காரர்களுக்காக வேண்டி வருமான வரி அறிக்கை தயார் செய்தல், (7) அவர்களுக்காக வேண்டி உத்தரவாதம் செய்தல்.

இந்திய பாங்குத் தொழிலின் வரலாறு

பண அடிப்படையில் தோன்றிய பொருள்நிலை :—இந்திய சமுதாயத்தில் பாங்கு நடத்துபவர் பண்டைக்கால முதலே ஒரு பெருந்தூண் போன்று கருதப்பட்டு வந்திருக்கிருர். பழைய நாள்களில் சுய தேவையை அடிப்படையாகக் கொண்ட காரணத்தால் அவர் எங்கோ விபரமற்று மறைந்திருப்பார் எனலாம். தொழில்முறைப் பகுப்புத் தோன்றிய காரணத்தால் பணத்தின் இன்றியமையாத தன்மையை மக்கள் நன்கறிந்தனர். நாணயமாற்றும், செலாவணி முறையும் தோன்றியவுடன் பொருளாதார நிலையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அன்று முதல் பாங்குநிறுவனம் இன்றிச் செயலாற்ற முடியாது போயிற்று.

பண்டைக்காலப் பொருளாதாரத்தில் கடனைப் பற்றிய விவரம் :—மேலை நாட்டினரின் கொள்கைகள் இந்நாட்டில் பரவுவதற்கு முன்னரே பாங்கு வர்த்தகத்தைப்பற்றிய கொள்கைகளை இந்தியாவில் தெரிந்திருந்தனர். கடன்களைப் பற்றியும் அதிக வட்டியைப் பற்றியும் தெரிந்திருந்தனர். மேலும் முனிவர்கள் (இவர்கள் மெத்தப் படித்தவர்கள், உலக ஞானிகள், இவர்கள் தபஸிகள் அல்லர்)அவ்வப்போது பழங்காலநிலையை அனுசரித்துக் கடன்பட்ட நிலையைக்கண்டு ஏங்கினர், (சிவிலிசேஷன் இன் ஏன்ஷியன்ட் இந்தியா; எழுதியது ஆர்.ஸி.டட், திருத்திய பதிப்பு வால்யூம் 1, ப. 39) அடிக்கடி சொக்கட்டான் ஆட்டத்தின் காரணமாகக் கடன் ஏறியதை நினைந்து வருந்துவர். கடன் திருப்பித் தருவதை அக்காலங்களில் " **ருணம்ஸமம** " என்று கூறிவந்தனர்.

வாங்கிய கடனைத் திருப்பித்தர வேண்டாமென்ற எண்ணத்துடன் பெற்ற கடன்களைப் பற்றிய சான்றுகள் உள்ளன. வேதகால முதல் ஏதோ ஒரு வகையில் கடன் வசதி இருந்து வருகிறது. மனுவின் காலத்திற்கு முன்னரே கடன் பெறுதலிலிருந்து பாங்குத் தொழில் தோன்றியது எனலாம். மனு அக்காலத்தில் கூறிய தாவது :

"புத்தியுள்ள ஒருவன் தன் ரொக்கத்தை நல்ல குடும்பத்தில் தோன்றியவனிடம் நல்ல குணம், சட்ட விபரம், நல்ல பேச்சு வன்மை, பணக்காரச் சூழ்நிலையில் உள்ளவன் என்று ஆராய்ந்து கொடுத்து வைத்தல் வேண்டும். (ஆர்யா)" (தி லாஸ் ஆஃப் மனு புஹ்லர் எழுதியது. தி சேக்ரட் புக்ஸ் ஆஃப் தி ஈஸ்ட், வால். XXV ப. 286, 1866) கடன் கொடுக்கும் கொள்கை வட்டிவிகிதம் இவைகளைப் பற்றிய நியதிகளையும் கூறியுள்ளார். ஸர் ரிச்சர்ட் டெம்பிள் என்பவர் புராதன இந்தியாவில் பாங்கு வர்த்தகம் நடந்து வந்துள்ளது என்று சான்றுடன் பகர்கிறார். (ஸ்ர் ரிச்சர்ட் டெம்பிள்ஸ் லக்சர்ஸ் : ஜர்னல் ஆஃப் தி இன்ஸ்டியூட் ஆஃப் பாங்கர்ஸ், வால். 2. 1581). டாக்டர் பிரமத்நாத் பானர்ஜீ பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன் இன் ஏன்ஷியன்ட் இந்தியா என்ற புத்தகத்தில் கௌதமர், பிரஹஸ்பதி, போதாயனர் இவர்கள் கூறிய பாக்களை விவரித்து வட்டி விகித முறை எவ்வாறு கட்டுப் படுத்தப்பட்டு வந்துள்ளது எனக் கூறியுள்ளார். கௌடில்லி யரின் அர்த்த சாஸ்திரத்திலிருந்தும் மேற்கோள்கள் காட்டப் பட்டுள்ளன.

பாங்குத் தொழிலென்பது கடன் கொடுத்தலையே சாரும் : தற்காலத்தில் பாங்குத் தொழிலின் வரலாற்றை ஆராய்ச்சி யாளர்கள் துருவித்துருவிப் பார்க்கத் தலைப்பட்டனர். இதனால் பாங்குத் தொழிலின் சிறப்பினை விளக்க வேண்டியதில்லை. நவீன பொருளாதார நிலையை அடையும் முன்னர் அதாவது பண்டை காலங்களில் பாங்குத் தொழிலின் வழியைத் தெரிந்து இருந்துங் கூட முக்கியமாகக் கடன் உதவி அளிப்பதையே பாங்குத் தொழில் என்று கருதினர். அக்காலங்களில் அரசனுக்குக் கடனுதவி செய்தும் போர்களுக்கு வேண்டிய நிதி உதவி செய்தும் வந்தனர்.

பாங்கு நடத்துபவரின் மதிப்பு நிலையும் அவருடைய பணிகளும்:—சமூகத்திலும் அரசினரிடத்திலும் பாங்கு வர்த்தகர்கள் தவிர்க்க இயலா உறுப்பினராகக் கருதப்பட்டு வந்தனர். நிலவரியைப் பொருளாகப் பெற்றனர். பணியாளர் களுக்குப் பணம் கொடுத்தனர். இந்தத்துறையில் பாங்கு நடத்து

பவரின் உதவி மிகவும் தேவைப்பட்டது. நாட்டைப்பற்றிய பொருள் நிலையைக் கருதும்போது அவர்களுடைய ஆலோசனை கோரப்பட்டது. போர் நடந்த காலத்தில் பாங்கு நடத்து பவரைத்தான் மக்கள் நம்பி, அவர்களிடம் விலையுயர்ந்த நகை களையும் பொருளையும் விட்டுவைத்தனர். 17ஆம் நூற்றுண்டில் இங்கிலாந்து நாட்டின் பொன்வர்த்தகர் இந்த நிலையில் பெயர் பெற்றிருந்தனர். அரசினரின் அலுவலர்களுக்குக்கூட இவ்வளவு உயர்ந்த பெயர் கிடையாது எனலாம். வாணிபத்துறையின் ஒழுக்கத்தின் சின்னமாகவும் தக்க எடுத்துக்காட்டாகவும் பாங்கு நடத்துபவர் விளங்கி வருகிருர் என்ருல் மிகையாகாது. காலா காலமாகக் கருதப்பட்ட முதுமொழி பின்வருமாறு: "அறிவு புகட்டும் ஆசிரியன் இல்லாது முன்னேற்றம் இல்லை; கடன் கொடுப்பவர் இன்றி நாட்டில் கடன் இல்லை."

உண்டியல்

இதன் பொருள்: கடன் வசூல் செய்தல்:—உண்டியல் என்ற சொல் "ஹூண்ட்" என்ற வடமொழிச்சொல்லின் அடிப்படையில் தோன்றியது. "ஹூண்ட்" என்பதற்குப் பொருள் வசூலி, இந்த முறிகளால் பண வசூல் செய்ய முடிந்தது.

மகாபாரத நாள் முதலே:

இந்திய பாங்குத் தொழில் செய்பவர்கள் தொன்று தொட்டுப் பொதுமக்களுடைய நன்மதிப்பைப் பெற்றுள்ளதற்கு ஒரேசான்று என்னவெனில் அவர்களுடைய உண்டியல்கள் (உள் நாட்டு மாற்றுச் செலாவணி) மகாபாரத நாள் முதலே வழக்கில் உள்ளன. மத்திய காலங்களில்கூட உண்டியல்கள் வழக்கில் இருந்தன. பழம் புராண இதிகாச வரலாற்றுச் சான்று ஒன்றின் மூலம் வாஸ்துபால் தேஜ்பால் என்பவர் பத்துக்கோடி ரூபாய்க்கு உண்டியை அகமதாபாத்தின் நாகர் சேத் (நகர பாங்கு வணிகர்) மீது எழுதி அந்தத் தொகையைக் கொண்டு தில்வாரா கோயில் களைக் கட்டியதாகத் தெரிகிறது. (இந்தியன் இண்டிஜனஸ் பாங்கிங், எழுதியவர் டாக்டர் எல். ஸி ஜெயின்) (Indian Indigenous Banking by Dr. L. C. Jain P. 71)

தற்காலத்தில் கூடக் கடன்களை வசூலிக்க மாற்றுண்டியல் பத்திரங்களையே பயன்படுத்தி வருகிருர்கள். எடுத்துக்காட்டாக பம்பாயில் உள்ள வியாபாரி டில்லியில் உள்ள வர்த்தகருக்குச் சரக்குகள் விற்பனை செய்வதாக எடுத்துக் கொள்ளுவோம். முதலில் கூறப்பட்ட நபர் பின்னர் சொல்லப்பட்டவருடைய பெயருக்கு அச்சரக்கின் விலையை வசூலிக்க ஒரு மாற்றுண்டியை

செலாவணித்தாளை அவர் மீது எழுதுகிறார். அதே போல கல்கத்தாவிலுள்ள வர்த்தகர் சென்னையிலுள்ள வியாபாரியிடமிருந்து கடனை வசூல் செய்ய முதலாமவர் பின்னவர் பெயரில் உண்டியலை அந்தத் தொகைக்கு எழுதியனுப்புகிறார்.

இந்துக்கள் உண்டியலை பயன்படுத்துகை :—பணத்தாளைப் பற்றிய வழக்கம் இந்துக்களிடையே தெரியாது இருப்பினும் அவர்கள் பண்டைக் காலம்முதலாக உண்டியல்களைப் பற்றி நன்கு அறிந்திருந்தனர். அவர்களிடையே குறிப்பாக உண்டியல்களில் பணமாற்றத்தில் வட்டம் எடுத்தல் (Discounting), உண்டியல்கள் வெளியிடுதல், கடன் கொடுத்தல், பணம் மாற்றுதல் முதலியன நடந்து வந்தன. அடிக்கடி, தானிய, ஜவுளி பதிலாள் வர்த்தகம் இவையனைத்தும் பாங்குத்தொழிலில் விழுமியிருந்தன. வர்த்தகசந்தைகளிலும்,விவசாயவட்டாரத்திலும்பாங்குத்தொழில் செய்பவரின் பணி தவிர்க்க இயலாததாக இருந்ததெனலாம். உண்டியல்கள் மூலமாக ஓர் இடத்திலிருந்து இன்னொரு தூரமான இடத்திற்குப் பணமாற்றம் செய்ய இந்தமுறை எளிதாக அமைந்திருந்தது. இன்றைய நிலையிலும் கூட விவசாயிகள் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் நிறுவனங்களும் தோன்றிய பிறகும் கூட கிராமத்து பாங்கு வணிகரை நாடுவது தெரிந்ததே.

கடன்கள்

தனிநபர் தன்மை:—பாங்குத்தொழில் செய்வோர், ஆபரணங்கள், விற்பனைக்குரிய பொருள்கள், தனிநபர் மீது கடன், நிலையான சொத்துகள் இவற்றின் ஈட்டின்மீது கடன் கொடுக்கிறார்கள். தினசரிக்கடன்கள் கொடுக்கும் பாங்குத்தொழில் செய்பவர், குறுகிய எல்லையுள் பணியாற்றுவதால் அவர் தமது வாடிக்கைக்காரர்களின் பொருள் நிலைமையை நன்கறிந்து அதன்படி நடந்து வருகிறபடியால், தற்காலம் பணிபுரியும் பெரிய பாங்கு நிறுவனங்கள் நபர்களின் நெருங்கியதொடர்பு இன்றி, அவர்களுடைய நிலையை உணராது கடன் தேவைப்படும் காலத்தில் உதவி புரியாது, அநேக சிக்கல்கள் நிரம்பிய விதிக்கிசைந்த முறைகளை ஈடுபடுத்தியுள்ளனர். தனிநபர் பாங்குவர்த்தகர்கள் தங்களுடைய வாடிக்கைக்கரர்களுடன் நல்ல மேன்மையான தொடர்புகள் கொண்டுள்ளனர்.

கடுவட்டி:—கடுவட்டி முறை இந்தியாவில் பெரும்பகுதிகளில் அதிகம் பரவியிருந்தது. வங்காளத்தில் விவசாயிகளிடம் கடன் 40 சதவிகித அளவில் வட்டி கோரினர்கள். சிற்சில காலத்தில் 60 சதவிகித அளவில்கூட ஆண்டிற்கு வட்டி கோரினர்கள்.

அறுவடைக்குத்தாயாராக இருந்த பயிரை ஈடுகூட்டிக் கடன் திருப்பித் தரசம்மதித்தனர். நாட்டில் நிலையற்ற தன்மையின் காரணத்தாலும், பணம் கடன் கேட்போர்களுடைய செல்வநிலை மிகவும் மோசமாக இருந்தகாரணத்தாலும் அதிகவட்டி கேட்டனர் என்று பல ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இக்காரணங்கள் பெருமளவில் ஏற்றுக்கொள்ளக் கூடியவைகள்தான். ஆயினும், இவைகள் முக்கிய காரணங்கள் ஆகா. பழக்கவழக்கங்களாலும் போக்குவரவு சாதனங்கள் இன்மையாலும் தேவைகளும் நுகர்வுகளும், வழங்குதலும் தாமாகவே அமைய இயலாது போய் விடும். அம்மாதிரி நிலையில் அன்று சமூகத்தில் மக்களின் தர வேற்றுமை ஏற்பட்டு இன்றைய நிலைபோல் செம்மையாக அமையவில்லை யெனலாம்.

பணம் கடன் கொடுப்போர்கள் : "பாங்குத் தொழில் என்பது பிறர் பணம்" என்ற முதுமொழியை பம்பாய் மாகாண பாங்கு விசாரணைக்குழு (Provincial Banking Enquiry Committee) கூறியுள்ளது. முழுமையும் பணம் கடன் கொடுக்கும் முறையின்கீழ் ஏற்றுக்கொள்ளக் கூடாது. ஏனெனில் பாங்குத் தொழில் என்பது பணம் கொடுத்தல் என்பதன்று. தற்கால உலகில் இப்பேதத்தை நன்கு கண்டு கொண்டுள்ளனர். முன்னாளில் இந்திய பாங்குத் தொழிலதிபர் என்று சொல்லப்பட்டவர் வைப்புகள் எதுவும் இன்றி, வட்டத் தொழிலும் இன்றி இதரருடைய பணத்தைச் செலாவணியும் இன்றி இருந்தார். அவரைப் பணம் கடன் அளிப்போர் எனக் கூப்பிடலாமே ஒழிய பாங்கு நலத் தலைவர் எனக் கூறுவது தவறு.

அவரது வெளிப்படையான இறக்கம்:.-காலம் மாறிவருகிறது. அதே போல செம்மையாக வாழ்ந்த இந்நாட்டு பாங்குத் தொழில் செய்பவர்கள் இன்று பல்வேறு மாற்றமடைந்துள்ளனர். தற்காலம் நடைபெறும் பாங்குத் தொழிலின் பல்வேறு முறைகளும், அமைப்பும், பணிகளும் மிகவும் சிக்கலுள்ளவைகளாக இருப்பதால் அவர்களுடைய இறக்கம் வெளிப்படையாகப் புலனாகிறது. இன்று பல்வேறு முறைகள் புலப்படினும் பழைய முறையின் கொள்கைகளைத் தவிர்க்க இயலாத நிலை இருந்து வருகிறது. பண்டைக்காலத்தைப்போல் அவ்வளவு ஈடுபாடில்லாவிடினும் பழைய முறைகள் பயனுள்ளவைதான். இன்றைய நிலையில் வரி செலுத்துமுறை பணவகையாகவும், சௌகரியமான போக்குவரத்து முறைகள் தோன்றிய காரணங்களாலும் நாடு முழுமையும் இணைத்து மத்தியஅரசினர் ஏற்படுத்தியும், கூட்டுறவு முறைகளைப் புகுத்தியும் உள்ள இந்நிலையில் கூட்டுப்பங்கு

பாங்குகள் வேறு போட்டிக்குத் தோன்றியதால் இந்தியக் கடன் கொடுப்போரின் நிலை மிகவும் தாழ்ந்து போயிற்று என்று சொல்லவும் வேண்டுமா? இன்றையக் கடன் வசதியளிக்கும் வர்த்தகத்தில் இவர்கள் மிகவும் தவிர்க்க இயலாத நிலையில் இருந்து தொழில்புரிவதை மறுக்கமுடியாது.

இந்தியாவில் நாட்டு (சுதேச) பாங்கரும் அவருடைய வருங்காலமும் :--நாட்டு பாங்கு நடத்துபவர்களின் எண்ணிக்கையும் அவர் நடத்தும் தொழிலின் விபரங்களும் இன்று தக்க புள்ளி விவரங்களுடன் கிடைக்கவில்லை. நடப்பிலுள்ள பாங்கு நிலையை ஒட்டி அவர்கள் தங்கள் தொழிலை மாற்றி அமைத்துக் கொள்ள முடியாது. சிறுகச் சிறுக எண்ணிக்கையில் குறைந்து கொண்டு வருகின்றனர். உறுதியான உழைப்பு, பெரும் செல்வ நிலை, விஞ்ஞான முறையில் செய்யும் நிர்வாகம் போட்டித்தன்மை வாடிக்கைக்காரர்களுக்கு நிறைந்த உழைப்பு, இவைகளைப் பெற்றுள்ள கூட்டுப்பங்கு பாங்கு கம்பெனிகள் தோன்றிய இந்த நிலையில் நாட்டு பாங்கு நடத்துபவர் எதிர்த்துப் போட்டியிட வலிமையற்றுப் பின்னடைய வேண்டும். இல்லையேல் பயனற்றுத் தொழில் முடக்கம் செய்தல் வேண்டும். கூட்டுறவு பாங்கு நிறுவனங்களும் தங்கள் சலியா உழைப்பின் மூலம் நாட்டுப் பாங்கு வர்த்தகர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தொழிலில் இன்று நீக்கி வருகிறது. ஆயினும், அந்த நாட்டு பாங்கு வர்த்தகருக்கும் செய்ய வேண்டிய நாட்டுப்பணியில் ஒரு பகுதி உண்டு. நாட்டின் மத்திய பாங்குத் தொழிலின் பகுதிக்கும், கிராம பணவசதியமைப்பிற்கும் இடையே உள்ள பிணைக்க இயலா சங்கிலி போன்று விளங்குகிறார். 1951 ஆம் ஆண்டு ஆகஸ்டு மீ ரிசர்வு பாங்கு ஆஃப் இந்தியாவினால் தொடங்கப்பட்ட அகில இந்தியக் கிராமக்கடன் சர்வே (All India Rural Credit Survey) யின் பலதரப்பட்ட கொள்கைகளில் ஒன்று இந்நாட்டிலுள்ள நாட்டு பாங்கு வர்த்தகர்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் எவ்வகையான பொறுப்புடன் உள்ளனர் என்று அனுமானிப்பதாம். இந்தச் சர்வேயின் முடிவாக நாட்டு பாங்குகளை அந்தந்த வட்டாரப் பணச்சந்தையுடனும் ரிசர்வு பாங்குடனும் இணைத்து விடவேண்டும் எனக் கொண்டது. இதற்கிடையில் கிராம பாங்கு விசாரணைக் குழுவின் (Rural Banking Enquiry Committee) பரிந்துரைகளை (1950 ஆம்ஆண்டு செப்டம்பர் மீயில் விவரப் படுத்தப்பட்டது போல) கிராமப் பகுதிகளில் பாங்கு வசதிகள் அளிக்க வேண்டும் என்றும், கூட்டுறவு வணிக பாங்குகளில் சுலபவகையில் பணம் அனுப்பு முறையுள்ளதைப் போலவும் ஏற்படுத்தவேண்டும் என்றது. மேலும் ஜூலை 1955 முதல்

டிசம்பர் 1960 வரை ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா என்கிற இராச்சிய பாங்கு 429கிளை அலுவலகங்களைத் திறந்தது. கடந்த சில ஆண்டுகளாக இராச்சிய பாங்குக் கிளைகளைத் திறந்து வருகின்றது. இதர கூட்டுப்பங்கு பாங்குகளும் அவ்வாறே செய்து வருகின்றன' கூட்டுறவுக் கடன் இயக்கத்தை ரிசர்வு பாங்கு தொடங்கியுள்ளது. பணம் அனுப்பு வசதிகள் இன்னும் எளிதாக்கப்பட்டன.

இந்தியாவில் கூட்டுப்பங்கு பாங்குகளின் எழுச்சி.

முகமை இல்லங்கள்:—மேலை நாட்டு பாங்கு முறையின் ஆரம்பத்தை அறிந்துகொள்ள வேண்டுமாயின் நாம் முன்னுளில் இருந்த கல்கத்தா முகமை இல்லங்களைப் பற்றிச் சற்றுத் தெரிந்துகொள்ள வேண்டும். இவை வர்த்தக நிறுவனங்கள். மேற்படி நிறுவனங்கள் தங்கள் வாடிக்கைகாரர்களுடைய நலனைக்கோரி பாங்குத் தொழிலை நடத்தி வந்தன. அம்மாதிரி புகழ்பெற்ற நிறுவனங்கள் அலெக்சாந்தர் அண்ட் கம்பெனியும் ஃபெர்குஸன் அண்ட் கம்பெனியும் ஆகும். இவ்விரண்டு நிறுவனங்கள் பாங்குத் தொழிலை இதர வர்த்தகத்துடன் இணைத்து முதன் முதலாக இந்தியாவில் பாங்குத் தொழில் செய்பவர்களாகத் திகழ்ந்தன. ஐரோப்பியக் கட்டளையின் கீழ் பாங்க் ஆஃப் ஹிண்டோஸ்டான், முன்னர் அறிவித்த நிறுவனங்களின் ஒரு பகுதியாக முதன்முதலில் இந்தியாவில் ஆரம்பிக்கப் பட்டது.

பாங்குத் தொழிலை இதர வாணிபத்துடன் இணைத்தலால் ஏற்படும் அபாயம்:—1829-32-ல் ஏற்பட்ட வாணிக விபத்தின் காரணமாக பாங்குத் தொழில் இதர வர்த்தகத்துடன் இணைக்க ஒருபோதும் பயனுள்ளதல்ல எனத் தெரிகிறது. பாங்குத் தொழில் மிகவும் எச்சரிக்கையுடன் செய்யப்பட வேண்டியது. ஆயினும் வர்த்தகத்திலும், தொழிலிலும் இலாப நட்டத்தைக் கண்டு கதிகலங்காது செய்ய வேண்டியது. பொறுப்பற்ற ஊக வர்த்தகமும், காப்பு அளிக்கும் முன்னரே இலாபப்பங்கு பிரித்தல் இவை போன்ற செயல்களால் முகமை இல்லங்களில் உள்ள பாங்குப்பகுதிகள் சீரழிந்தன. மும்முறைகளில் ஏற்பட்ட பெரும் நட்ட விபத்துகளைக் கூட ஒருவாறு சமாளித்த பாங்க் ஆஃப் ஹிண்டோஸ்டான் (Bank of Hirdostan) தனது தாய் நிறுவனம் அழிந்த காரணத்தால் கலைந்து ஒடுங்கிப் போயிற்று.

1918 ஆம் ஆண்டில் ஒடுக்கப்பட்ட சோலாப்பூர் பாங்கு (Sholapoor Bank) அபாயகரமான இணைப்பினால்தான் ஒடுங்கியது. இந்த பாங்கு தனது பாங்குத் தொழிலுடன் "வர்த்தகர்கள் அல்லது முதலாளிகள் செய்யும் வர்த்தகத் தொழிலை முதல்வராகவோ அல்லது பதிலாளாகவோ" செய்யும் என்பதாம். அப்போது இருந்த பம்பாய் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி (கோவிந்த் எதிராக இன்பநாத் என்ற வழக்கில் 32 பாம் லா. ரி. 232) பாங்குத் தொழிலை இதர வர்த்தகத்துடன் இணைக்கக்கூடாதென்று சட்ட முறையில் தடுப்பு செய்துள்ளார். இதனால் சிரமமேற்படுவ தோடல்லாமல் செய்ய இயலாதும் போகிறது. இந்த வழக்கின் அடிப்படையில் உயர்சட்ட மன்றமும் மாற்றி, பாங்குத் தொழிலை இதர வர்த்தகத் தொழிலினின்று விடுவித்துள்ளது. 1913ஆம் ஆண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் 277 ஜி (1)ம் பிரிவை 1936ல் சீர்திருத்தி யமைத்துள்ளனர். இச்சட்டம் தோன்றிய பின்னர் பாங்கு கம்பெனியாகத் தோன்றியது தமது பெயருடன் 'பாங்கு' பாங்கு நடத்துபவர் அல்லது 'பாங்குத் தொழில்' என்ற பெயர்களை இணைக்க வேண்டும். இவை பதிவு செய்யப்பட வேண்டுமாயின் தங்கள் கம்பெனி பட்டயத்தில் (Memorandum of Association) அதன் நோக்கங்களை பாங்குத் தொழிலுக்கென எல்லைக்குட் படுத்தி நடப்புக் கணக்கின் பேரில் வைப்புகள் ஏற்றும், பணம் திரும்பக் கொடுக்கும்போது செக்குகள் மூலம் அனுமதிக்க வேண்டும். இத்துடன் இதர தொடர்புள்ள தொழில்களை பிரிவு 277 எஃபில் உட்பிரிவு (2)ல் கொடுக்கப்பட்ட தொழில்களைச் செய்யலாம். பிரிவு 277 எஃபின் உட்பிரிவு (2)ன் விபரம் வருமாறு:—

> "எந்த பாங்குக் கம்பெனி இந்தியாவில் இணைத்தோ அல்லது அயல் நாட்டில் இணைக்கப்பட்டோ இருப்பின் இங்கு இயம்பப்பட்ட சட்டம் தொடங்கி இரண்டாண்டு கள் முடிவதற்குள் பிரிவு 277 எஃபில் கூறியவைகள் அல்லாத தொழிலை யேற்றெடுத்தச் செய்யக் கூடாது.

> மத்திய அரசினர் தங்கள் அரசிதழ்மூலம் பாங்கு கம்பெனி நுழையக்கூடிய தொழில் இன்னின்னதென்று, 277 எஃபில் உட்பிரிவுகள் 1 முதல் 17 வரை உள்ளது டன் சேர்த்து செய்ய சட்டமுறையின் கீழ் சரியான தெனக் கூறுவர்.

இம்மாதிரியான பிரிவினைகளை பாங்குகம்பெனிகள் சட்டத்தில் 1949 (பிரிவுகள் 6-ம் 8-யும் பாங்கு கம்பெனிகள் சட்டம், 1949 ஐப் பார்க்கவும்) இணைக்கப்பட்டுள்ளன.

மாகாண பாங்குகள்:— 1809ஆம் ஆண்டுவரை இந்திய அரசினர் பாங்குகளின் தேவையை அறியவில்லை. அவ்வாண்டில் பட்டயத்துடன் ரூ 3.50 லட்ச மூலதனத்தில் தி பாங்க் ஆஃப் பெங்கால் தொடங்கப்பட்டது. அதன் ஐந்தில் ஒரு பகுதியை அரசினர் மூலதனமாக இட்டனர். வாக்குரிமை, இயங்குதல் முதலியவற்றில் அவர்களுக்கு இடமளிக்கப்பட்டது. 12 சதவிகித வட்டிக்குமேல் அதிகரிக்கக் கூடாதென்று பட்டயம் கட்டுப் பாட்டை விதித்தது. பணத்தாள் வெளியீட்டிற்கான உரிமை 1823 வரை அதற்கு அளிக்கப்படவில்லை. இரண்டு இதர மாகாண பாங்குகளான பாங்க் ஆஃப் பாம்பே, தி பாங்க் ஆஃப் மதராஸ், இவை இரண்டும் முறையே 1840-லும் 1843-லும் தொடங்கப் பட்டன. முன் கூறப்பட்டதன் மூலதனம் ரூ 52,25,000. பின் கூறப்பட்டதின் மூலதனம் ரூ 30 லட்சம். இவற்றில் அரசினர் முறையே ரூ 3 லட்சம் மூலதனம் இட்டனர். மாகாண பாங்கு களின் பணத்தாள் வெளியீடு அவ்வளவு அதிக அளவில் பொது மக்களிடையே பரவாததால் அரசினர் பணத்தாள் வெளியீட்டின் மூலம் 1862ஆம் ஆண்டு மாகாண பாங்குகளின் பணத்தாள் வெளியீட்டை நிறுத்தி சர்க்காரின் காகிதப்பண வெளியீட்டை ஏற்படுத்தினர்.

வரையறுத்த பொறுப்புகள் என்ற கொள்கை :— இந்தியா வின் பொதுபாங்குகளின் சரித்திரத்தில் 1860ஆம் ஆண்டு ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கியுள்ளது எனலாம். முதன் முதலாக கூட்டுப்பங்கு பாங்குகளில் குறுகிய பொறுப்புகள் என்ற கொள்கையைக் கடைபிடிக்க ஆரம்பித்தது இந்த ஆண் டில்தான். இதுவரை பாங்கு சம்பந்தமான எந்தவிதச் சட்டமும் உருவாகவில்லை எனலாம். அநேகபாங்குகள் காளான்கள் திடீரெனத் தோன்றுவது போன்று வந்தன. அவைகளை உரு வாக்கியவர்களும் நடத்துபவர்களும், நிருவாகிகளும் ஊகவர்த் தகத்தில் ஈடுபட்டும், தவறான வழியில் நடத்தியும் ஏமாற்று வழிகளைக் கடைபிடித்தும் வந்ததால், தோன்றிய எண்ணிறந்த பாங்குகள் நெருக்கடி நிலையை அடைந்தன.

1862-65 ஆம் ஆண்டு முடக்கம், மந்தம், நெருக்கடி : நாட் டிற்கு அதிகம் தேவைப்பட்ட பாங்குச் சட்டம் பிறந்தவுடன் 1862-65ல் இந்தியாவில் இப்பெரும் நெருக்கடி தோன்றியது

துரதிர்ஷ்டமாகும். இந்தியாவிலிருந்து பெருவாரியாகப் பருத்தி ஏற்றுமதி நடந்துகொண்டிருந்தது. அவ்வமயம் ஐக்கிய நாடுகளில் உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருந்தபடியால் லங்காசயருக்கு வேண்டிய பருத்தி அமெரிக்கஐக்கிய நாடுகளிலிருந்து யுத்தத்தின் காரணமாக துண்டிக்கப்பட்டது. எனவே, ஆங்கிலப் பருத்தி இறக்குமதியாளர்கள் இந்தியாவிலிருந்து தங்களுடைய தேவையை ஈடுபடுத்திக்கொள்ளலாம் என்று எதிர்நோக்கியிருந்தனர். இதனல் பெருஞ் செல்வமும், விழுநிதிக்குப்பையும் எண்ணற்ற அளவில் இந்தியாவிற்கு கிடைத்தது எனலாம். செல்வம் கொழிக்கத் தொடங்கிய அந்த நாள்களில் ஊகவர்க்கத்தில் மக்கள் ஈடுபட ஆரம்பித்தனர். பாங்குகளும் அவ்வமயத்தில்தான் தோன்றின எனலாம். தோன்றிய பாங்குகள் அனைத்தும் நெருக்கடி நிலையைச் சமாளிக்க இயலாது மறைந்தன. மறைந்த பலவற்றுள் 1840ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பாங்க் ஆஃப் பாம்பே 1868ல் இழுத்துமூடப்பட்டது. அவ்வாண்டிலேயே மறுமுறை அதே பெயருடன் திறக்கப்பட்டது. இம்மாதிரி காளான்கள்போல் தோன்றிய பல்வேறு பாங்குக் கம்பெனிகளால் பழங்காலக் கொள்கைகளில் ஊறிய இந்தியப் பொதுமக்களுக்கு இவற்றின் மீது வெறுப்பே அதிகரித்தது. இன்றுகூட பாங்கு நெருக்கடியின் போது அதே எண்ணத்துடன் நடந்து வருகின்றனர். 1865 முதல் 1870 வரையில் தி அலகாபாத் பாங்கு லிமிடெட் என்ற பாங்கு நிறுவனத்தை மாத்திரம் உருவாக்கினர்.

வெள்ளி ஈட்டில் தங்கத்தின் விலை வீழ்ச்சியுற்றதன் விளைவு:– இதுமட்டும் காரணம் எனக் கருதிவிட முடியாது. முன்னர்க் கூறிய கண்டத்துடன் பொன்னின் விலை இறக்கமும் கூடியது. நெருக்கடியில் மாட்டிக்கொண்ட ஒவ்வொரு நாட்டு பாங்கு வர்த்தகரும் நிலைமையை ஒருவாறு சமாளித்து முன்னேற முயன்று கொண்டிருக்கும்போது திடீரென வெள்ளியின் விலை குறைய ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில் இந்நாட்டின் செல்வ கணக்கு வெள்ளி (நாணய) திட்டத் (Silver Standard) தில் இருந்து வந்தது. வெள்ளியின் விலைச் சரிவின் காரணத்தால் வெள்ளி நாணயத் திட்டத்தில் விலை தழைந்து அதன் விளைவாக ரூபாய் நாணயத்தின் பொன் மதிப்பையும் குறைத்தது.

இந்திய அரசினர் கடன் தொகையைக் கூட்டி, அதன் விளைவாக லண்டனில் உள்ள உள்நாட்டுச் செலவை ஈடுகட்ட அதிக ரூபாய்கள் தேவைப்பட்டன. ரூபாய் ஸ்டர்லிங்கு மாற்று விகிதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால் இந்திய அயல்நாட்டு

வர்த்தகம் தடுமாற்றத்தை அடைந்து அதன் விளைவாக உள்நாட்டுத் தொழில்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. 1893ஆம் ஆண்டு வரையிலும்கூட மாற்றம் நீங்கிப் பொதுத்தன்மை தோன்றவில்லை. அவ்வமயம் இந்தியத் தங்க விலைகளில் வெள்ளியை நாணயமாக்கக் கூலி கேட்டனர். அக்காலங்களில் இந்திய பாங்கு வர்த்தகத்தில் ஏதேனும் மந்தமான ஏற்றமிருப்பின் அது அவ்வமயத்தில் இருந்த நாணயத்தாளின் அடிப்படையில்தான் எனலாம். தங்கசாலைகளை மூடிய அவ்வமயம் 1895ல் லாகூரில் தலைமை அலுவலகத்தை அமைத்து பஞ்சாப் நேஷனல் பாங்குமட்டும் தோன்றியது.

சுதேசி இயக்கம் - புது பாங்குகள் திறக்க ஊக்குவித்தல் :— சுதேசி இயக்கத்தின் காரணத்தால் அநேக இந்தியர்களைப் பல புதிய நிறுவனங்களைத் தோற்றுவிக்கும்படி தூண்டியதுடன் 1906–13ல் ஏற்பட்ட பொருளாதார வீக்கத்தின் அடிப்படையில் அநேக கூட்டுப்பங்கு பாங்குகள் தோன்றின. தி பீப்பிள்ஸ் பாங்க் ஆஃப் இந்தியா லிமிடெட், தி பாங்க் ஆஃப் இந்தியா லிமிடெட், தி சென்ட்ரல் பாங்கு ஆஃப் இந்தியா லிமிடெட், தி பாங்க் ஆஃப் பரோடா லிமிடெட் என்பவை திறக்கப்பட்டன. பொருளாதார வீக்கம் தொடர்ந்து 1913-17ல் அது பெரும் முறிவு (Crash) ஆக இதுவரையிலும் கண்டிராத கேட்டிராத பெரும் பேரிடியாக இந்தியக் கூட்டுப் பங்கு பாங்குகள் சிக்கி அவதியுற்றன.

மகாண பாங்குகள் இணைக்கப்பெற்று இம்பீரியல் பாங்கு ஆஃப் இந்தியா என மாற்றம் (தற்போது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது அரசு பாங்கு):—இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், 1920 (XLVII 1920 ஆம் ஆண்டில்) ன் கீழ் மூன்று மாகாண பாங்குகளையும் பிணைத்து 1925ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் தேதி அன்று இம்பீரியல் பாங்கு உருவாகியது, இந்த பாங்கிற்கு நாட்டின் பணத்தாள் வெளியிடும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுக்கப்படவில்லை. ஆயினும் அரசின் தொகைகளை வைத்துக்கொண்டும், நாட்டின் பொதுக் கடன்களை நிருவகித்தும், 1935ஆம் ஆண்டில் ரிசர்வு பாங்கு தோன்றும் காலம் வரை பாங்குகளின் கணக்குத் தீர்வகமாக இருந்தது. பின்னர்த் தோன்றிய ரிசர்வு பாங்கு, இம்பீரியல் பாங்கு அலுவலகங்களைத் தன்னுடைமையாக்கிக் கொண்டு, பணி தொடங்கியது. தனிச் சலுகையாக ரிசர்வு பாங்கிற்குக் கிளை இல்லாத இடங்களில் இது முகவராக இருந்து வருகிறது. தனிப்பட்ட சட்டத்தின்கீழ் அதாவது இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா (1920) என்றதன் கீழ் பதிவு ஆனபோதிலும்,

மற்றெந்தக் கூட்டுப் பங்குதாரர்கள் பாங்கு போன்றும் இதன் பொறுப்புகளும் அவர்களுடைய பங்குத் தொகையை ஒத்தது. கம்பெனிகள் சட்டத்தின்கீழ் உருவான கம்பெனிகளில் அல்லது பாங்குகளின் பெயரின் முடிவில் 'லிமிடெட்' (குறுகிய, வரையறுக்கப்பட்ட) என்ற பதம் இந்த பாங்கின் பெயர் முடிவில் போடப்படவில்லை. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தின் (1955) (1955ன் 2_ரவது) இம்பீரியல் பாங்கு ஆஃப் இந்தியாவின் பொறுப்புகளையும் சொத்துகளையும் புதியதாக உருவான ஸ்டேட் பாங்கு (இராச்சிய பாங்கு) 'ஆஃப் இந்தியா மேற்கொண்டது. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் கிளைகள் உள்ள இந்த பாங்கு எல்லா வகையான வர்த்தக பாங்குத்தொழிலை வேறு வாணிக பாங்குகள் செய்வது போன்று பெருமளவில் நடத்தி வருகிறது. இதே காரணத்தினுல்தான் இதை நாட்டின் மத்திய பாங்காக மாற்றியமைக்கவில்லை. பாங்குக் கம்பெனிகள் சட்டம், 1949ன் பிரிவு 51ஐத் தொடர்ந்தும் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம், 1955ன் பிரிவுகள் 10, 13 முதல் 15, 19 முதல் 21, 23 முதல் 28, 29 (உட்பிரிவு (3)31, 34, 35, 35A 36, நீங்கலாக) (உட்பிரிவு d–1) 46 முதல் 48, 50, 52, 53 இவை ஸ்டேட் பாங்கு ஆஃப் இந்தியாவைக் கட்டுப்படுத்தும் இவை இதர பாங்குக் கம்பெனிகளை அனுமதித்ததே.

ஸ்டேட் பாங்கு (கிளை நிறுவனப் பாங்குகள்) சட்டம் 1959ன் கீழ் பாங்க் ஆஃப் பிகானேர், பாங்க் ஆஃப் இண்டோர், பாங்க் ஆஃப் ஜய்பூர், பாங்க் ஆஃப் மைசூர், பாங்க் ஆஃப் பாடியாலா, திருவாங்கூர் பாங்க், ஸ்டேட் பாங்க் ஆஃப் ஹைதராபாத், ஸ்டேட் பாங்க் ஆஃப் சௌராஷ்டிரா, இவைகள் கிளை பாங்கு நிறுவனங்களாக அமைந்தன. இதனுல் இதன் தொழில் இன்னும் அதிகரித்துள்ளது.

பழைய இம்பீரியல் பாங்கிற்கும் ரிசர்வு பாங்கிற்கும் இடையே உள்ள பதிலாள் ஒப்பந்தத்தை நீக்கி அதற்குப் பதிலாக ஸ்டேட் பாங்குடன் பதிலாள் ஒப்பந்தத்தை 1960ஆம் ஆண்டு மார்ச்சு மீ 16–ஆம் தேதியில் செய்து கொண்டது.

எந்த பாங்கு நிறுவனத்தை ஏற்றெடுத்துக் கொண்டாலும் அதற்கு உள்ள எளிய முறைகள் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா (சீர்திருத்தச்)சட்டம் 1959–ல் விளக்கப்பட்டிருக்கிறது. 35ஆவது பிரிவின்படி ஸ்டேட் பாங்கு எந்த பாங்குக் கம்பெனியுடனும் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தி அந்த பாங்குக் கம்பெனியை இணைத்துக் கொள்ளலாம். இவ்வாறு சேர்மம் ஆகிய பாங்கின்

கணக்கினை ஒழுங்குபெற ஒடுக்கம் செய்வதற்கான வழியைக் கூறியுள்ளது

முன் கூறியது போல ஜூலை 1955ல் ஸ்டேட் பாங்கு தோற்றம்பெற்று, பழைய இம்பீரியல் பாங்கின் தொழிலை மேற்கொண்டு எடுத்துக்கொண்டது. அன்று முதல் இன்று வரை ஸ்டேட் பாங்கு பெரும் சாதனைகள் செய்து முன்னேறியுள்ளது. நாட்டிலுள்ள பாங்குகளுக்கு முன்னோடியாக நின்று இந் நாட்டிலுள்ள சேமிப்புகளை ஒன்று திரட்ட முயன்றும், தொழிலுக்கான நிதி வசதியளித்தும் வருகிறது. சிறுபான்மைத் தொழிலுக்கு அது கடன் வசதி அளிக்கும் முறை இங்குக் கவனிக்கத்தக்கதே.

கடன்–பொருளாதார முடக்கமும் "பெருமந்தமும்'' விலையிறக்கமும்:–1929–ல் தோன்றிய பெருமந்தத்தின் காரணத்தாலும் 1936ல் நடந்த ஒத்துழையாமை இயக்கத்தின் காரணத்தாலும் இந்தியாவில் ரிசர்வு பாங்கு தோன்றும் நாள் வரை பாங்கு வளர்ச்சி பின் தங்கியது எனலாம்.

ரிசர்வுபாங்கு அமைக்கப்படல்:—இந்தியாவிற்கு மத்திய பாங்கு தேவை என்று அவ்வப்போது பலர் தங்களது அபிப்பிராயம் கூறிவந்துங்கூட 1926ஆம் ஆண்டுவரை மத்திய பாங்கு ஏற்படத்தக்க சூழ்நிலையும் தருணமும் வாய்க்கவில்லை. 1926ஆம் ஆண்டில் வந்த அரசாங்கக் குழுவினர் இந்திய நாணயச் செலவாணியையும் நிதியையும் பற்றி ஆராய்ந்தபோது இந்தியாவிற்குத் தனியே ஒரு மத்திய பாங்கு வேண்டுமென்றும் அதன்மூலம் நாட்டின் கடன் நாணயச் செலவாணி முறைகளை ஒழுங்குப்படுத்திச் செவ்வையாக நிருவகிக்கக்கூடும் என்றும் கூறினர். மேற்படி குழுவினர் இம்பிரீயல் பாங்க் ஆஃப் இந்தியாவை நாட்டின் மத்திய பாங்காக மாற்றுவதை விரும்பவில்லை. அவர்களுடைய பரிந்துரையை அனுசரித்து சட்டமன்றத்தில் 1921ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் தேதியன்று மசோதவாகக் கொண்டு வரப்பட்டது. அரசியலமைப்புப் பிரச்சினைகளை யனுசரித்து இந்த மசோதா கைவிடப்பட்டது. அரசியலமைப்பிற்கான மாறுதல்களை கொணர்ந்தபோது இதற்கான புதிய மசோதாவை ஸர் ஜான்ஷுஸ்டர் 1933ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கொண்டு வந்தார். நாளாவட்டத்தில் இந்த மசோதா ஏற்றுக்கொள்ளப்பட்டு 1934 மார்ச்சு மாதம் 6ஆம் தேதியன்று சட்டமாக மாறியது. ஏப்பரல் 1-ம் தேதி 1935ஆம் ஆண்டில் ரிசர்வு பாங்கு பணியாற்ற ஆரம்பித்தது. உருவான முப்பது ஆண்டுகளுக்குள்ளாக இந்த ரிசர்வுபாங்குபெரும் சாதனைகளைச்செய்துள்ளது. குறிப்பாக

அண்மையில் அது அநேகம் நன்மைபயக்கவல்ல பணிகளை ஈடேற்றியுள்ளது. முதல் ஐந்தாண்டுகள் வரையில் இந்த பாங்கு யாதொரு செயலுமின்றித் தன்னை வன்மையாக்கிக் கொள்வதில் ஈடுபட்டிருந்தது.

அடுத்த பத்தாண்டுகளில் இதர நாடுகளிலுள்ள மத்திய பாங்குகளைப்போன்று இதுவும், யுத்தகால நிலையில் ஈடுபட்டு அதனால் நிதிவரையில் பலவகைப்பட்ட சிரமங்களுக்கும் இடையூறுகளுக்கும் தயாராக நின்றது. நாட்டின் மத்திய பாங்கு எவ்வகையில் நாட்டின் நிதிக்கொள்கையையும் நாணயசெலாவணியையும் கண்காணித்து வருகிறது என்று முழு அளவில் மதிப்பிடுதல் எளிதன்று. ஏனெனில் மத்திய பாங்கு நாட்டின் அரசினரின் கருவூலத்துடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. ஆயினும் கருவூலத்தின் திட்டங்களும் முறைகளும் பொதுமக்களுக்கு வெளிப்படையாகத் தெரிய நியாயமில்லையாதலால் இவ்வாறு கருதவேண்டியிருக்கிறது. சில காலங்களில் தான் திரை விலகி அதன் பின்னர்தான் நாட்டின் செல்வநிலையின் உண்மையான நிலை தெரிய வருகிறது (கோக்கலே இன்ஸ்டியூட் ஆஃப் பாலிடிக்ஸ் அண்டு எகனமிக்ஸ் பூனவில் 20ம் மார்ச் 1948-ல் ஸர்சிந்தாமன் தேஷ்முக்கின் உரை) யுத்தகாலத்திலும் யுத்தம் நின்ற பிறகும் கூட ரிசர்வு பாங்கு நிதி சம்பந்தமாக மெச்சத்தக்க முறையில் பணியாற்றியுள்ளது. எனவே, நாட்டின் பொருளாதாரநிலை ஒரேசீராகப் போகும் கப்பல்போன்று நன்குகவனிக்கப்பட்டு வருகிறது. மேலே கூறியதையொட்டியே ரிசர்வு பாங்கு பற்பல செயல்களைப் புரிந்துள்ளது. ஸ்டெர்லிங் கடன்களைத்திருப்பியும், யுத்தக்கால, யுத்தம் முடிந்தபிற்காலப் பணவீக்கத்தின்போது அரசினருடன் கூடி, அதைத்தடுக்க முயலுவதில் பெரும், அக்கறை காட்டியது. அரசினர் கூப்பிட்டுக் கேட்டபொழுதெல்லாம் அவ்வப்போது எவ்விதப் பயமுமின்றித் தெள்ளெனத் தங்கள் கொள்கைகளைக் கூறிவந்தது. கட்டுப்பாட்டை நீக்கம்செய்வதில் 1947ஆம் ஆண்டில் ரிசர்வு பாங்கு சொந்த தனிபட்ட கொள்கையைக் கொண்டிருந்தது, அதே போல சிற்சில காலங்களில் பொதுச்சந்தை வர்த்தகத்தைப்பற்றிச் சொந்த அபிப்பிராயம் கொண்டிருந்தது. நாட்டின் செல்வநிலையையும், பாங்குகளின் நிலையையும் செம்மையான முறையில் இருத்திவைக்க வேண்டி தேவைபட்டபோது பாங்குகளுக்குக் தக்க புத்திமதிகள் கூறியும் வற்புறுத்தல் முறைகளைக் கையாண்டும், முடிவில் ஆய்வுநடத்தியும் காப்பாற்ற முன்வருகிறது. ஒருசில பாங்குகள் அண்மையில் நொடித்துப் போனதால், இவ்வகையில் ரிசர்வு பாங்கு

செய்துவரும் உதவி மிகவும் போற்றத்தக்கதே. 1952ஆம் ஆண்டில் ஜனவரி மீ இந்நாட்டில் உண்டியல் சந்தை முறையை வகுத்து நடைமுறையில் கொண்டு வந்தது ஒரு பெரும் சாதனை இந்நாட்டின் பாங்கு வரலாற்றில் இதுஒரு பெரிய இடம்பெறு கிறது எனலாம். மாற்றுண்டியல்களை மறுமுறை வட்டம் கழிக்க அல்லது தள்ளுபடிகொடுக்க பாங்கு நிதியை பருவ நிலையை யொட்டி வர்த்தகத்திற்குப் பயன்படச் செய்துள்ளது. இம் முறையினால் பாங்குகள் தங்கள் வசமுள்ள அரசினர் தங்க விளிம்பு ஆவணங்களை சுறுசுறுப்பான பருவங்களில் விற்று அதன் மூலம் தங்களுக்கு வேண்டிய பணம் பெற்றுக் கொள்ளுவதில்லை. மாற்றுண்டியல் சந்தைகளால் பயிர்விளைச்சல் இவைகளை அனுப் புவதற்கு பேருதவியாக இருக்கிறது.

பாங்குகளின் பண, செலாவணி, கடன் நிலைமைகளின் மூலம் நாட்டிலுள்ள பெரும் பணவீக்கமும் விலையேற்றமும் குறைப்பதற் கான வழிகளை இது செய்வதால் மாற்றுண்டியல் சந்தைகளின் மூலம் ரிசர்வு பாங்கு பேருதவி புரிந்து வருகிறது எனக் கூறவும் வேண்டுமோ? சரியோ, தவறோ பாங்க் ஆஃப் இங்கிலாந்து தேசிய மயமாக்கப்பட்டதைப் போன்ற ரிசர்வு பாங்கும் தேசிய மயமாகி அதன் விளைவாக அது பங்குதாரர் பாங்கு அன்று என்று 1948ஆம் ஆண்டு ரிசர்வு பாங்கு சீர்திருத்தச் சட்டத்தின்மூலம் விளக்க மாகியது. பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949–ன் கீழ் பாங்கு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தவும் சீரான முறையில் நடக்கவும், ஒழுங்குபெற மேற்பார்வை செய்யவும் ரிசர்வு பாங்கிற்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. (அடுத்த அதிகாரத்தில் இது வெகு விரிவான முறையில் கருதப்பட்டுள்ளது). ரிசர்வு பாங்கிற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மேன்மேலும் உறுதிப்படுத்தப்பட்டும், விரித்தும், கூட்டியும் அதிகரித்தும் ஆங்காங்கே பாங்குக் கம்பெனிகள் சட்டத்தில் சீர்திருத்தப்பட்ட பிரிவுகளாகச் சேர்த்திருப்பதாலும், மாற்றியிருப்பதாலும் ரிசர்வு பாங்கிற்குப் பல்வேறு பாங்கு நிறுவனங்களையும் அவற்றின் பல தொழில்களையும், நிருவாக முறைகளையும் செம்மையான முறையில் கட்டுப்படுத்த முடிகிறது. பாங்கு விதிகள் (பல்வேறு பிரிவுகள்) சட்டம், 1963–ன்படி அண்மையில் தனியார் பாங்குகளையும் கட்டுப்படுத்த அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

பழங்காலத்தில் மத்திய பாங்கினுடைய தொழில் நாட்டிலுள்ள செலாவணித்தாள், கடன் முதலியவற்றைச் சீராகக் கட்டுப்படுத்தவும் சேமிப்புகளை ஒன்று திரட்டவும் அமைந்திருந்தது. அரசியல் அமைப்பை ஒட்டியும் நடப்பிலுள்ள

பொருளாதார நிலைமையை அனுசரித்தும், பண மூலதனச் சந்தையின் நிலைமையை ஒட்டியும் மத்திய பாங்குகள் நிலைமைக் கேற்ப அதிகாரங்கள் பெற்றிருந்தன. பொருளாதார நிலையில் ஏற்பட்ட தாழ்வினால் இந்தியாவில் மத்திய பாங்கினுடைய பணி வர வர அதிகரித்து வருவது காணத்தக்கதே. உலகின் கண் உள்ள பற்பல நாடுகளிலும் இதே நிலையைக் காண்கிறோம். மாக்மில்லன் குழுவினரின் வார்த்தைகள்: "மத்திய பாங்கு செல்வ நிலையை சீரான முறையில் வைத்திருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது" மேற்படி வார்த்தைகள் இன்றும் உள்ள நிலையை எடுத்துக்காட்டுகிறது. விரித்துக்கூறின் மத்தியபாங்கின் மூலம்தான் நாட்டின் பாங்கு வர்த்தகம் சீரிய முறையில் ஊக்குவிக்கப்படவேண்டும். இந்திய பாங்கு வர்த்தகத்தில் இன்று காணப்படும் பிரச்சினைகள் இரண்டு. ஒன்று, நாட்டிலுள்ள சேமிப்புகளை ஒன்று திரட்டல். இரண்டு, யாதொரு பயனுமற்று உறங்கிக் கிடக்கும் பெரும் பணத்தை பயனுக்க முற்படுதல். ரிசர்வு பாங்கியினுடைய தலையாய கடமை யாதெனில் சீரிய கொள்கைகளில் நாட்டு மக்களுக்குத் தகுந்த பாங்குத் தொழில் உதவியளித்தல். நாடு முழுமையிலும் உள்ள மக்கட்குப் பாங்கு வசதிகள் எளிய முறையில் கிடைக்கும்படி செய்தல். வெறும் சட்டமியற்றுவதால் நாட்டின் பாங்குமுறை வன்மையுறும் என்று நினைப்பது தவறு என்பதை பாலாய் சென்ட்ரல் பாங்கு நெருக்கடியின் காரணத்தால் ஒடுக்கப்பட்டதெனத் தெற்றென விளங்குகின்றது. அதே போன்று செயற்கை முறையினாலும் நுண்ணிய பாங்கு அலுவல்களாலும் சிறந்த முறையில் பாங்கு வசதி அளிக்க முடியாது. பாங்குச் சட்டமியற்றுவதிலும் கட்டுப்பாடு விதித்தலிலும் விவசாய, தொழில் கடன் வசதிகள் அளித்தலிலும் இந்திய அரசினர்க்கு பாங்குத் துறையில் முன்னோடியாக இருந்து பணியாற்றுவதிலும், ரிசர்வு பாங்கிற்கு நிகர் வேறு எந்த பாங்கையும் ஒப்பிட முடியாது. பழங்கால மத்திய பாங்கு பணிகளைச் செய்வதுடன் வளர்ச்சிக்கான செயல்களைப் புரிந்தும் நாட்டின் தேசியப் பொருளாதார நிலைமையைச் செம்மைப்படுத்தியும் அதன் மூலம் நாட்டின் திட்ட மிட்ட வளர்ச்சிக்கு அடிகோலியாக இருக்கிறது.

கூட்டுப் பங்கு பாங்குகளின் செல்வாக்கிற்கான காரணங்கள்:—அரசினர் பட்டயம் பெற்றும் அல்லது தனிப்பட்ட சட்டத்தின் வாயிலாகத் தோன்றியும் தனியார் பாங்கு, நாட்டு பாங்கு இவைகள் விழுமியுள்ள இந்தியப் பணச்சந்தையில் கூட்டுப் பங்கு பாங்குகள் பெருமளவில் பாங்குத்தொழிலை சீரிய முறையில் செய்து வருவது தெரிந்தது. 1920-ல் தோன்றிய

இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா 1955–ல் ஸ்டேட் பாங்க்காக மாற்றியமைக்கப்பட்டதை முன்னரே விளக்கியிருக்கிறோம். பாங்கு வர்த்தகம் தொடங்கிய காலத்திலும் கூட அரசினரின் சலுகை எவ்விதத்திலும் காட்டப்படவில்லை. பின்னர் ஏற்பட்ட நெருக்கடி நிலையிலும் எவ்வித வசதிகளும் இன்றி நடந்தபோதிலும் கூட்டுப்பங்கு பாங்குகள் நிலைபெற்றுவிட்டன. வாணிபம்' தொழில் இவைகள் முன்னேறி வரும் இக்காலத்தில் தனியார் பாங்குகள் பின்னடைந்து வருகின்றன. இதற்கான விவரப் பட்டியல்களைப் பின்னர்க் காணலாம்.

இந்தியாவில் கூட்டுப்பங்கு பாங்குகளின் வளர்ச்சி

	ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா (மூன்று மாகாண பாங்குகள்) (ரூ. ஆயிரத்தில்)								இந்திய கூட்டுப்பங்கு பாங்குகள் (மூலதனமும் ரிசர்வும் ரூ. 5 லட்சத்திற்குமேல்) (ரூ. ஆயிரத்தில்)							
இறுதியில்	செலுத்திய மூலதனம்	ரிசர்வுகளும் இதரவைகளும்	வைப்புகள் பொது	வைப்புகள் தனியார்	ரொக்க இருப்பு	வைப்புகளில் ரொக்க இருப்பு சதவிகிதம்	கடன்களும் முன்பணமும்	வைப்புகளில் சதவிகிதம்	பாங்குகளின் எண்ணிக்கை	செலுத்திய மூலதனம்	ரிசர்வுகளும் இதரவைகளும்	வைப்புகள்	ரொக்க இருப்புகள்	வைப்புகளில் ரொக்க இருப்பு சதவிகிதம்	கடன்களும் முன்பணமும்	வைப்புகளில் சதவிகிதம்
1870	3,36,25	25,57	5,43,05	6,39,61	9,96,87	...			2	9,83	1,82	3,95	5 07			
1880	3,50.00	55,27	2,91,15	8,49,28	7,41,45	...			3	18,00	3,11	63,37	16,63			
1900	3,60,00	1,99,61	2,80,53	12,88,27	5,04,49				9	82,12	45,60	8,07,52	1,19,04			
1910	3,60,00	3,31,03	4,23,63	32,34,38	11,35,12	31			16	2.75,66	1,00,55	25,65,85	2,80,25	11		
1915	3,75,00	3,72,50	4,88,67	38,61,19	14,65.24	34			20	2,81,39	1,56 65	17,87,27	3.99 41	22		
1917	3,75,00	3,67,52	7,71,28	67,71,74	33,79,31	45			18	3,03,70	1,62,99	31,17,01	7,64,84	25		
1918	3,75,00	3,44,58	8,64,28	50,97,75	17,07,62	29			19	4,36,45	1,65,39	40,59,48	9,48,58	23		
1919	3,75,00	3,75,81	7,72,24	68,21,37	23,62,,93	31			18	5,39,07	2,24,27	58,99.47	12 16,63	21		
1920	3,75,00	3,77,79	9,02,63	78,01,90	26,03,34	30			25	8,37,02	2,55,46	71,14,64	16,30,70	23		
1925	5,62,50	4,92,73	5,46,44	77,83,33	17,46,82	21	56,45,00	68	28	6,73,00	3,86,64	54,49,36	10,09,55	19		
1930	5,62,50	5,52,56	7,36,91	76,60,06	13,04 24	16	49,58,00	59	31	7,47,31	4,42,84	63,25,51	7,67,91	12		
1935	5,62,50	5,76,10		74,09,17	19,58,64	25	21,58,00	29	38	8,17,49	5,02,36	84,44,61	19,12,15	23		
1936	5,62,50	5,78,03		78,79,50	8,56,41	11	26.76,00	34	42	8,48 82	5,46,51	98,14,26	15,28,37	16	49,57,00	55
1940	5,6?,50	5,62,50		96,03,17	24,82,81	...	32,31,00	34	58	9,08,95	5,56,67	113,93.45	26 26,19	23	54,44.00	48
1941	5,62,50	5,62,50		108,91,90	15,26,87	14	38,88,00	36	63	10,12,89	6,06,11	137,64,08	26,69,27	19	68,95,00	50
1942	5,62,50	5,75,00		163,46,28	23,52,90	14	33,79,00	21	69	12,60,52	6,41,04	202,74.88	47,29,76	23	68,15,00	34
1943	5,62,50	5,85:00		214,52,80	53,76,01	25	40,60,00	19	92	18,67 11	7,80,59	338,99,01	82,92,77	24	118.85,00	35
1944	5,62,50	6,00.00		237,78,30	28,31,03	12	70,23 00	30	118	25,66,32	11,07.69	476,53,33	106,17,60	22	174,98,00	37
1945	5,62,50	6,07,00		259,37,00	41,60,00	16	72 97,00	28	142	31,89,58	13 52,71	605 48,03	126,47 ,65	21	250,47,00	41
1946	5,62,50	6,17,00		271,67,00	42,46,00	16	94,27,00	35	135	34,06,00	15,98,00	673,93,00	134 71,00	20	306,07,00	45
1947	5,62,50	6,25,00		286,59,00	42,89,00	15	89,15,00	31	148	35,98,00	17,60,00	668,94,00	131,98,00	20	288,41,00	43
1948	5,62,50	6,27,50		280,29,00	43,68,00	16	98,00,00	35	150	36 48,00	21,80,00	640,99,00	123,30,00	19	277,50,00	43
1949	5,62,50	6,30,00		250,46,00	66,89.00	27	91,81,00	37	155	36,79,00	22,67,00	555,25.00	100,13,00	18	251,06,00	45
1950	5,62,50	6,32,50		231,37,00	28,18,00	12	101,96,00	44	147	36,55,00	22,91,00	569,29,00	97,66,00	17	267,75,00	47
1951	5,62,50	6,35,00		230,91,00	29,57,00	13	142,47,00	62	145	34,48,00	23,68,00	561,60,00	91,74 00	16	301.92,00	54
1952	5,62,50	6,35,00		205,85,00	25.45,00	12	113,17,00	55	147	34,01,00	23,22,00	550,01,00	89,32,00	16	271,29,00	49
1953	5,63,00	6,35,00		206,97,00	19,64,00	9.49	92,03,00	51	140	32,68,00	23,66,00	574,20,00	86,53,00	15	269,32,00	47
~~1954~~	~~5,63,00~~	~~6,35,00~~		~~231,13,00~~	~~36,37,00~~	~~15.74~~	~~96,15,00~~	~~44~~	~~137~~	~~33,49,00~~	~~23,71,00~~	~~631,23,00~~	~~93,68,00~~	~~15~~	~~303,79,00~~	~~48~~
1955	5,63,00	6,35,00		219,80,00	29,38,00	13.37	89,01,00	48	134	32,41,00	23,71,00	705,91,00	95,22,00	13	332,22,00	47
1956	5,63,00	6,35,00		235,47,00	27,78,00	11.80	107,42,00	59	130	32,27,00	23,82,00	775,85,00	96,87,00	12	397,38,00	51
1957	5,63,00	6,63,00		366,68,00	39,52,00	10.78	154,61,00	47	145	32,73,00	25,22,00	1090,54,00	133,64,00	12	595,01,00	45
1958	5,63,00	7,00,00		478,68,00	38,47,00	11.59	158,56,00	35	133	32,89,00	23,86,00	1189,44,00	129 59,00	11	616,81,00	52
1959	5,63,00	7,20,00		582,11,00	64,83,00	11.14	152,25,00	28	132	33,15,00	25,10,00	1375,66,00	147,36,00	14	705,05,00	51

* இராச்சியப் பாங்கு நீங்கலாக

குறிப்பு :—1945 வரையில் காட்டப்படும் தொகை இந்தியப் பிரிவினைக்கு முன்னர் : பர்மிய பாங்குகளின் தொகை 1936க்குப் பின் நீக்கம் : **1946க்குப் பின்** இந்திய யூனியனிலுள்ள பாங்குகள் பட்டி.

இந்தியாவிலுள்ள அயல்நாட்டுச் செலாவணி பாங்குகளில் பிரதான பொறுப்புகளும் சொத்துகளும்

(லட்சம் ரூபாய்களில்)

ஆண்டு	பாங்குகளின் எண்	மொத்த வைப்புகள்	ரொக்க இருப்புகள்	கடன்களும் தள்ளுபடி களும்	முதலீடு கள்	ரொக்க விகிதம் %	முதலீடு ரொக்க விகிதம் %	முன்பணம் வைப்புகளின் விகிதம் %	இந்திய யூனியனிலுள்ள அலுவலகங் களின் எண்
				இந்தியாவிலும் பர்மாவிலும்					
1935	18	69,04	5,18	31.30		7,5		45.3	95
1936	19	69,75	4,93	34,41		7.1		49.3	99
1937	19	72,86	7,29	36,94		10.0		50.7	97
1938	19	70,07	5,27	33,84		7.5		48.3	93
1939	19	74,18	6,87	50,15		9.3		67.6	99
1940	20	85,33	17,20	27 82		20.2		32.6	101
1941	17	106,21	13,79	31,43		13.0		29.6	99
				இந்தியா பிரிவினையாகு முன்னர்					
1942	16	116,85	12,01	17,77		10.3		15.2	82
1943	16	140,19	17,24	30,12		12.3		21.5	84
1944	15	167,41	19,19	36,64		11.5		21.9	79
1945	15	179,00	18,32	45,82		10.2		25.9	77
				இந்திய யூனியனில்					
1946	15	169,49	21,56	68,99	...	12.7	...	40.7	58
1947	15	163,67	27,17	91,43	...	16.6	...	55.9	60
1948	15	160,19	16,73	114,01	...	10.4	...	71.2	62
1949	15	161,38	18,87	121,11	47,38	11.7	29.4	74.0	64
1950	15	172,00	18,76	134,65	47,45	10.9	27.6	78.3	62
1951	15	169,12	24,33	173,81	45,51	14.4	26.9	102.8	62
1952	14	175,23	16,52	149,68	43,79	9.4	25.0	85.4	62
1953	14	164,70	14,41	130,41	46 45	8.8	28.2	79.2	64
1954	14	177,63	15,91	150,05	47,91	9.0	27.0	84.5	64
1955	15	193,57	17,66	172,83	49,35	9.1	25.5	89.3	65
1956	15	186 34	17,69	205,40	41,82	9.5	22.4	110.2	65
1957	17	204,14	20,17	194,29	43,30	9.9	21.2	95.2	67
1958	16	195,76	14,62	160,09	47,29	7.5	24.2	81.8	66
1959	16	226,21	18,05	171,09	45,28	8.3	20.0	75.6	66
1961	15	263 61	21,96	229,68	43,69	8.3	16.6	87.0	71
1962	14	267,25	18,40	262,29	45,86	6.9	17.2	98.1	81

குறிப்பு :—1945 வரையில் ஆண்டிறுதி வெள்ளிக்கிழமை வரை தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வைப்புகள் என்பவை தவணை, நடப்பு வைப்புகளைக் கொண்ட கூட்டுத்தொகை. 1946-க்குப் பின் கொடுக்கப்பட்ட புள்ளி விபரம் ஆண்டிறுதி ஐந்தொகைக் குறிப்பிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளன.

வர்த்தக, தொழில் முதலிய பிரிவுகளில் இராட்சத அளவில் நிறுவனங்கள் தோன்றிப் பொதுமக்களின் நன்மதிப்பையும் பெற்று, விளம்பரத்தின் வாயிலாகத் தங்கள் கணக்குகளை வெளியிட்டு அவற்றின் மூலம் வைப்பாளர்களை தம்வசம் இழுக்க பாங்குகள் முயலுவதை நாம் காண்கிறோம். தனிநபரின் விருப்பு வெறுப்புகளை அனுசரித்து வைப்பாளரின் பணத்தை எந்த வகையில் ஈடுபடுத்துவது என்பது அரிது. (ஏதோ ஒன்றிரு நபர்கள் தான்தோற்றித்தனமாக இடக்கூடும்.) பொதுவாக ஒவ்வொரு பாங்கு நிறுவனத்திலும் தக்க பயிற்சிபெற்ற இயக்குநர் குழாம் ஒன்றுண்டு. அவர்களுடைய செயல்களும் அவ்வப்போது பொதுக்கூட்டங்களில் 'திறனாய்வு செய்யப்படும். பழங்கால முறைகள் கைவிடப்பட்டும், பாங்குத் தொழில் எல்லையை அதிகப்படுத்தியும், அதன்விளைவாக உள்நாட்டு செலாவணியில் அதிகச்செலவினைத் சுருக்கியும் வந்துள்ளது. பணத்தாள்களை மிதமிஞ்சிப்புழக்கத்தில் விட்டு, கிளைபாங்கு நிறுவனங்களைத் தொடங்கியதால் இம்மாதிரி உள்நாட்டுச் செலாவணியின் அடக்கவிலை ஏறியது எனலாம். பொது பாங்குகள் தோன்றித் தற்போதுள்ள பாங்கு வட்டி விகிதத்தைக் குறைத்துள்ளது. அவைபெருமளவில் வைப்புகளைத்தம்வசம் இழுத்தும், செக்குத்தாள்களை புகுத்தியும், அவற்றின்மூலம் கொடுப்புமுறைகளைத் துரிதப்படுத்தியும் எளியவழிகளையும் உண்டாக்கியுள்ளன.

"தாமேவளரல் கொள்கை" :— பாங்கு, வர்த்தக விவகாரங்களில் தலையிடாமுறைக் கொள்கையைக் கையாண்டிருந்த ஆங்கில அரசு, பாங்குத்தொழிலினால் ஏற்படக்கூடிய பற்பல நன்மைகள் இருப்பினும், பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய தொண்டுகளை மறந்து அவைகளுக்கு எவ்விதமான உதவியும் அளிக்காது வாளாயிருந்தது வருந்தத்தக்கதே. 1914-18ஆம் ஆண்டில் நடந்த யுத்தங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பாங்கு நெருக்கடியில் 54 பாங்குகள் நவம்பர் 1913 முதல் டிசப்பர் 1914 வரையிலும், அடுத்து 154 பாங்குகள் 1914 முதல் 1927 வரை ஒடுங்கிவிட்டன (பின்னர் கூறப்பட்ட ஆண்டில் 16 பாங்குகள் ஒடுங்கின) இவ்வாறான நெருக்கடியிலும் கூட அரசினர் கொள்கையில் ஏதுமாற்றமும் ஏற்படவில்லை.

வஞ்ச நோக்குடைய இயக்குநர்களாலும், நிருவாகிகளாலும் இப்பாங்கு நிறுவனங்களில் ஏமாற்று வழிகளைக் கையாண்டும், தவறான வழிகளில் நிருவாகம் செய்தும் வந்த காரணத்தால் அதிகப்படியான பாங்கு நிறுவனங்கள் ஒடுங்கிப்போயின. பாங்கு

கம்பெனிகள் சட்டம், 1949, அதன் சீர்திருத்தச் சட்டம்; பின்னர் ஏற்பட்ட பாங்கு வசதிகள் (பல்வகைப்பட்டபிரிவு) சட்டம், 1963, கம்பெனிகள் சட்டம், 1956, அவற்றின் சீர்திருத்தச் சட்டம் 1960ம் 1963 இவையனைத்தும் பாங்கு நிருவனங்களில் நடக்கக்கூடிய ஏமாற்று முறைகள் தவறான நிருவாகம் இவைகளைக் கட்டுப் படுத்தி நடக்காதபடி பார்த்துக்கொள்ளவும், பாங்குக்கம்பெனிகள் நல்ல வளர்ச்சியுடன் நடக்க ரிசர்வு பாங்கினுடைய நேர்முகக் கண்காணிப்பில் இருக்க வழி செய்கின்றன.

தவணைக்கடன் நிறுவனங்களின் தோற்றுவாய்

இந்தியத் தொழில் நிதிக்கார்ப்பரேஷன் (இண்டஸ்டிரியல் ஃபினான்ஸ்கார்பரேஷன் ஆஃப் இந்தியா) (Industrial finance Corporation of India):— இந்தியத் தொழில்களுக்கு நிதி யுதவி அளிக்கவேண்டி இந்நாட்டிற்குச் சுதந்திரம் கிட்டியவுடன் மத்திய அரசினர் அதற்கான முதல் முயற்சியில் ஈடுபட்டனர். இவ்வகையில் முதல் படியாக இந்தியத் தொழில் நிதிக் கார்ப் பரேஷன் சட்டம் 1948, பிப்ரவரி மீ 1948-ல் சட்டமாகக் கொண்டு வந்தனர். இவற்றின்மூலம் நடுத்தர நீண்டகால நிதி உதவியை பொது வரையறுக்கப்பட்ட கம்பெனிகளுக்கும்கூட்டுறவு சொசைடிகளுக்கும் செய்ய முன்வந்தது. மேற்படி கம்பெனிகள், கூட்டுறவுநிறுவனங்கள் இந்தியாவிலேயே இணைப்புப்பெற்றிருக்க வேண்டும். அவைகள் விற்பனைக்குரிய பொருள் உற்பத்தியில் ஈடுபட்டும் கப்பல் தொழிலிலும், கனிகளிலும், மின்சார உற்பத்தி வழங்குதல் முதலியவற்றிலும், இதர எரிபொருள் உற்பத்தியிலும் ஈடுபட்டிருக்க வேண்டும். சேர்மன் அல்லது தலைவர் உட்பட 13 இயக்குநர்கள் உள்ளனர். அவர்களில் நான்குபேர்கள் மத்திய அரசினர்களால் நியமிக்கப்பட்டவர். இருவர் ரிசர்வு பாங்க் ஆஃப் இந்தியாவின் நியமனத்திலும், ஆறு உறுப்பினர்கள், (I) அட்ட வணைப்படுத்தப்பட்ட பாங்குகளின் நியமனத்தினுலும், (II) நட்ட ஈட்டுறுதிக் கம்பெனிகளின் நியமனத்தினுலும், ஆவணட்ரஸ்ட் அல்லது இதரநிதி நிறுவனங்களின் நியமனத்தினுலும் (III) கூட்டு றவு பாங்குகளின் நியமனத்தினுல் இருவர் வீதம் மொத்தம் அறுவர். இந்தக் கார்ப்பரேஷனுக்கு அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 10 கோடி (ரூபாய் பத்து கோடி) பங்கொன்றுக்கு ரூ. 5,000/- வீதம் 20,000 பங்குகள். இவற்றில் முதலாவதாக ரூ. 5 கோடி மொத்தமதிப்புள்ள 10,000 பங்குகள் வெளியிடப்பட்டன. மத்திய அரசினரும், ரிசர்வு பாங்குமாக ஒவ்வொன்றும் ஒரு கோடி ரூ செலுத்தியுள்ளது. நிகரம் உள்ள மூன்று கோடி ரூபாயில்

அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்குகள் 1¼கோடி. நிதிநிறுவனங்கள் எடுத்துக்காட்டாக ஈட்டுறுதி நிறுவனங்கள் (ரூ. 1¼ கோடி) ஆவண ட்ரஸ்ட்டுகள் கூட்டுறவு பாங்குகள் (ரூ. ½ கோடி) கூட்டுறவுபாங்குகள் எடுத்துக்கெள்ளாது விட்ட 79 பாங்குகளையும் மத்திய அரசும் ரிசர்வு பாங்கும் எடுத்துக்கொண்டுள்ளன.

இந்தக் கார்ப்பரேஷன் தனது செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வு நிதியும் கூடிய தொகையில் பத்து மடங்குத் தொகையை பாண்டுகளாக (பத்திரங்களாக) வெளியிட அனுமதிக்கப் பட்டுள்ளது. எனவே; செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. பத்துக் கோடியும் அதே தொகையளவில் ரிசர்வு நிதியும் இருக்குமாயின் அந்த நிலையில் அதற்குக் கடன் பெறக்கூடிய திறன் ரூ. 200 கோடி யாக இருக்கும். 3¼% கடன் பத்திரங்கள் 1964ல் திருப்பிப்பெறக் கூடியவை ரூ. 7,80,50,000ஐயும் 1967ல் திருப்பிப் பெறச்கூடிய 4½% கடன் பத்திரங்கள் ரூ. 4,00,00,000ஐயும் இந்தக் கார்ப்பரேஷன் வெளியிட்டது.

நிலையான சொத்துகளை உரிமை பெறுவதற்கான செயல் களில் ஈடுபடுவதற்கான நிதி உதவி அளிக்கிறது. இதனால் இது வாணிப பாங்குகளுடன் போட்டியிடுவதாகக் கருதக்கூடாது அவைகளுக்குத் துணையாக நின்று உதவியளிக்கிறது எனக் கூறலாம். இந்தக் கார்ப்பரேஷன் (i) தொழில் நிறுவனங்கள் வாங்கும் கடன்களை 25 ஆண்டுகளுக்கு மேல்படாமல் திருப்பக் கூடிய நிலையிலிருப்பின் அக்கடன்களை வாங்கியது பொதுச் சந்தையில் மிதக்கவிடப்பட்ட கம்பெனி பங்குகளாக இருப்பின் அவ்வாறான கடன்களுக்கு உத்திரவாதம் தருகிறது. (ii) தொழில் கம்பெனிகளின் கூட்டுப் பங்குகள், பங்குகள், கடன் பத்திரங்கள், டிபெஞ்சர்க் கடன் பத்திரங்கள் இவைகளை நட்டமின்றி ஈட்டுறுதி செய்ய முன்வருகிறது. (iii) தொழில் நிறுவனங்கள் கோரும் கடன், முன்பண வசதி அளித்தல். இக் கடன், அல்லது முன்பணம் 25 ஆண்டுகளுக்குள்ளாக திருப்பித் தர வேண்டியது. (iv) அயல் நாட்டுக் கம்பெனிகளுடன் நீண்ட கால பணக்கொடுப்பனைகளைச் செய்வதற்கென இறக்குமதியாளர் களுக்கு உத்தரவாதம் செய்தல். ஈட்டுறுதிப்பணி ஏழு ஆண்டு காலத்தினுள் முடிக்கப்பட வேண்டியது என வரையறை செய்யப்பட்டுள்ளது. இக்கார்ப்பரேஷன் நேரடியாக எந்தப் பொதுக் கம்பெனியின் பங்குகளை வாங்கிக் கொள்ளக் கூடா தென்று தடை விதிக்கப்பட்டுள்ளது. எந்தத் தனிப்பட்ட தொழில் நிறுவனத்திற்கும் கொடுக்கப்படும் உதவித்தொகை முன்னர் ரூ. 50 லட்சமாக அளவிடப்பட்டிருந்தது. அண்மையில்

அதை ரூ. 1 கோடியாக உயர்த்தியுள்ளனர்.

கார்ப்பரேஷன் புலனாகும் சொத்துகளின் ஈட்டில் கடன் அனுமதிக்கலாம் அல்லது உத்தரவாதம் செய்யலாம். கடன் கொடுப்பதற்கான ஏற்பாட்டில் சொத்தின் மதிப்பை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் சரியன்று. மேற்படி கடன் உதவிகோரும் நிறுவனத்தின் வருங்கால லாபம் பெறக்கூடிய நிலை, நிதிவழி, நிருவாகச் செலவு, இதன் உற்பத்திச் சரக்கிற்கான சந்தை, தொழில் இட அமைப்பு, அதனால் தேசிய நன்மை தீமைகள் இவைகளைக் கண்ணுற்றே முடிவு செய்வர்.

எந்தக் கம்பெனி நிறுவனத்திற்காவது கடன் வசதி செய்யும் முன்னர் கார்ப்பரேஷன் தங்களுடைய ஆய்வாளர்களை அனுப்பி, கம்பெனி வேலை செய்யும் காலத்தில் பார்வையிட்டு, அந்தக் கம்பெனியின் திட்டங்கள் எவ்வகையில் செம்மையாக உள்ளன என்று ஆய்வுசெய்து கார்ப்பரேஷனுக்குத் தகவல்அளிப்பார்கள். கொடுக்கப்பட்ட கடன் அல்லது முன்பண உதவியைத் தாறு மாறாகச் செலவிடாது, சீரிய முறையில் செலவு செய்ய வேண்டு மென்ற குறிக்கோளுடன் இயக்குநர்களையும் பதிலாள் நிருவாகத்தின் கூட்டுதாரர்களைச் சொந்த முறையில் கடன்களுக்கு ஈடு காட்டியும் உத்தரவாதம் அளிக்கவும் வேண்டும். கடன் அல்லது முன்பண உதவிபெற்ற கம்பெனி சீராகவும் செம்மையாகவும் நடந்து வருகிறதா என்று கண்காணிக்க கார்ப்பரேஷன் இரண்டு இயக்குநர்களை நியமிக்கும். கடன்வாங்கிய கம்பெனிகள் லாப ஈவுப்பங்கு கொடுப்பதை 6% அதிகம் கொடுக்கக் கூடாதென்று கட்டுப்படுத்த அதிகாரம் உண்டு. ஆயினும் இருபாலரும் சம்மதித்து லாப ஈவுப் பங்கை மாற்றியமைத்துக் கொள்ளலாம். இதுகாறும் கடன் திருப்பித் தரவேண்டிய காலத்தை 15 ஆண்டுகளுக்கு அதிகமாக நீட்டப்படவில்லை.

தொழில் நிதிக் கார்ப்பரேஷனுடைய செயல்களை விரித்து அதிகரிக்க வேண்டி தொழில்நிதிக் கார்ப்பரேஷன் சட்டம், 1948 சீர்திருத்தப்பெற்று 1952 டிசம்பரில் வெளியாயிற்று. அதன் முக்கியபிரிவுகள் வருமாறு: (i) அயல் நாட்டு நாணயச் செலாவணியில் மத்திய அரசின் முன் அனுமதியின் பேரில் பன்னாட்டுப் புனரமைப்பு முன்னேற்ற பாங்கிலிருந்து பெற்றகடனுக்கு இந்திய அரசின் உத்தரவாதத்தைக் கோரல். இக்கடன் தொகையைக் கொண்டு (1948ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் இந்நாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு முன்பண வசதி அளிக்கவும், அயல் நாட்டு நாணயச் செலாவணியில் நிதிக் கார்ப்பரேஷன் கடன்

பெறலாம். ஆயினும் சட்டத்தின் கீழ் அயல்நாட்டுச் செலாவணியில் பெற்ற கடனுக்கு இந்திய அரசு உத்தரவாதம் அளிக்காது). (ii) சர்க்கார் ஆவணங்களை ஈடாகக் கொடுத்து ரிசர்வு பாங்கியிலிருந்து 90 நாள்களுக்கு மேற்படாது திரும்பித் தரும் கடன் பெறவும் கடன்பத்திரங்கள் இவைகளின் ஈட்டின்பேரில் 18மாத காலத்திற்குள்ளாக ரூ. 3 கோடிக்கு மேற்படாமல் கடன் ரிசர்வு பாங்கியிலிருந்து பெறவும், (iii) ரிசர்வு பாங்கு, மத்திய அரசினர் வாங்கிய கார்ப்பரேஷன் பங்குகளுக்குக் கிடைத்த லாப ஈவுப் பங்குகளைத் தனியே ஒரு கணக்கில் வரவு வைத்து அது ரூ. 50 லட்சம் ஆகும் வரை அவ்வாறு வைத்திருக்க வேண்டியது. (iv) கடன் தொகையின் அதிகப்படி எல்லையை 50 லட்சத்திலிருந்து 1 கோடிக்கு உயர்த்துதல் (v) சட்டத்தின் கீழ் கடன், முன் பண வசதிபெறும் கடனாளிகள் பட்டியலில் கப்பல் கம்பெனிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

தொழில் நிதிக் கார்ப்பரேஷன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயலாக்க முடிவு செய்த சர்க்கார் கொள்கையை ஒட்டி 1948ஆம் ஆண்டு தொழில் நிதிக் கார்ப்பரேஷன் சட்டம் பல்வேறு வகைகளில் சீர்திருத்தம் பெற்று செப்டம்பர் மீ 1955-ல் வெளியாயிற்று. "தொழில் நிறுவனம்" (Industrial Concern) என்ற பாகத்தின் இலக்கணம் பிரித்து கூறப்பட்டது. இதனால், பல்வேறு தொழில் நிறுவனங்கள் கூட இம்முறையின் கீழ் பலனடைய ஆரம்பித்தன. உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், பதம் செய்யும் நிறுவனங்கள் இவைகள் கூட அந்த இலக்கணத்தின் அடிப்படையில் வந்தடைந்தன. இதரப்பிரிவுகள் (i) கௌரவத் தலைவரும் சம்பளம் பெறும் நிருவாக இயக்குநர் இருவருக்குப் பதிலாக ஊதியம் பெரும் தலைவரும், பொது நிர்வாகியும் நியமிக்கப்பட்டனர். (ii) நிர்வாகக் குழுவிற்குப் பதிலாக மத்தியக் குழுவினரை நியமித்தல் (iii) மத்திய அரசினரிடமிருந்து கடன் வாங்க அதிகாரம் (iv) ஈட்டுறுதிப் பொறுப்பின் நிமித்தம் பெற்ற கூட்டுப்பங்கு, பங்குகள், கடன் பத்திரங்கள், டிபெஞ்சர் கடன் பத்திரங்கள் இவைகளைக் காலவரம்பின்றி வைத்திருந்த மத்திய அரசின் அனுமதிகோரிக் கட்டுப்பாடுகளை அகற்றல் (v) தம் வசம் அடகிற்கோ அல்லது அடமானமாகவோ வந்த சொத்துகளைக் குத்தகைக்கு விடுதலுக்கான உரிமை.

பெருவாரியாக நிதியின் தேவை மேன்மேலும் அதிகரித்த காரணத்தாலும், தொழில் நிறுவனங்கள் நிதிக் கார்ப்பரேஷ

னுடைய தேவையை நாடியதாலும், இ. தொ. கா. வின் செயல்களை பிரிவுப்படுத்தியும், சீர்திருத்தியும் நவம்பர் 1957-ல் வெளிவந்தது. 21 ஆம் பிரிவில் ஏற்பட்ட சீர்திருத்தத்தின்படி செலுத்தப்பட்ட மூலதனமும், ரிசர்வுமாகக் கூட்டி அதில் 5 தடவை என்பது இப்போது 10 தடவைகள் என்று மாற்றிக் கடன் வசதியின் உச்ச வரம்பை அதிகரித்தும், பொது மக்களிடமிருந்து வைப்புகள் பெறலாம் என்றுள்ள பிரிவு 22ஐ மாற்றி இராச்சிய அரசினரிடமிருந்தும், தல அதிகாரிகளிடமிருந்தும் பெறலாம் என மாற்றியமைக்கவும் பட்டுள்ளது. 23ஆவது பிரிவின் கீழ் நிதிக்கார்ப்பரேஷன் இறக்குமதியாளர் செய்ய வேண்டிய காலம் தாழ்த்தியும், கொடுப்புகளை அயல் நாட்டினருக்கு உத்தரவாதம் அளித்தும் 27வது பிரிவின் 4வது உட்பிரிவின் கீழ் சீர்திருத்தும் முன்னர் அயல்நாட்டுச் செலாவணி பிரித்தும் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளினுல் ஏற்படக்கூடிய நட்ட அபாயங்களை மத்திய அரசினரே பொறுப்பேற்க வேண்டும். மேலும் அவற்ருல் ஏற்படக் கூடிய கொடுப்பிகளையும் மத்திய அரசினரே ஏற்றுக் கொள்ளவேண்டும். இனி வரும் சில ஆண்டுகளில் இந்த நட்டங்களை அந்தந்தத் தொழில் நிறுவனங்களே மேற்கொள்ள வேண்டும். இந்தக் கொள்கையின் அடிப்படையில் இந்த உட்பிரிவு மாற்றியமைக்கப்பட்டது. "பதனப் படுத்தப்பட்ட பொருள்கள்" என்ற சொற்களுக்கு விளக்கம் சேர்ப்பின் நலமென்று கருதப்படுகிறது. இது 23ஆம் பிரிவின் (i) பகுதியில் கூறப்பட்டுள்ளது. இவ்விளக்கத்தைப் பெரிதும் பயன்படுத்தி அநேக தொழில் நிறுவனங்கள் கார்ப்பரேஷனிடமிருந்து உதவி பெறக்கூடும். இராச்சிய நிதிக் கார்ப்பரேஷன் சட்டம் 1951-ன் திருத்தம் 1955-ல் செய்யப்பட்டபோது இவ்விளக்கத்தை யொட்டி மாற்றியமைக்கப்பட்டது. அதே சமயத்தில் 23வது பிரிவின் உட்பிரிவு 2ஐயும் திருத்திப் போதிய ஈடு அல்லது ஜாமீன்கொடுக்கப் போதிய வசதியற்ற புதுத்தொழில் நிறுவனங்களுக்குக் கூட ஊக்கம் காட்டும் வகையில் தேசியப் பொருளாதார நிலையில் கார்ப்பரேஷனின்று கடன் வசதிகள் பெறலாம். இக்கடன் வசதி பெற வேண்டுமானுல், மத்திய அரசினர், இராச்சிய அரசினர், அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்கு அல்லது கூட்டுறவு பாங்கு இவைகளில் ஏதேனும் ஒன்று அசலுக்கும் வட்டிக்கும் உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

தொழில் நிதிக் கார்ப்பரேஷன் (திருத்த) சட்டம் 1960 இதர விவரங்களுக்கிடையே (i) தொழில் நிறுவனங்கள் அட்டவணைப் படுத்தப்பட்ட பாங்குகளிலிருந்தோ கோரும் கடன்களுக்கு இக்

கார்ப்பரேஷன் உத்தரவாதம் தருகிறது. (ii) முதற் கருவிப் பொருள்கள் இந்தியாவில் உற்பத்தியாயிருப்பின் அவைகளை வாங்கி, காலந்தாழ்த்திக் கொடுக்கப்படும் பணத் தொகைக்கு உத்தரவாதம் கொடுத்தல் (iii) மத்திய அரசினரின் முன் அனுமதிகோரி, அயல் நாடுகளிலிருந்து கடன் பெறுதல், தொழில் நிறுவனங்களின் பங்குகளிலும் கூட்டுப் பங்குகளிலும் தொழில் நிதிக் கார்ப்பரேஷன் பணம் போடுவதைத் தடைப் படுத்தியிருந்த அந்தப் பிரிவு மாற்றியமைக்கப்பட்டு அதன் காரணமாக இப்போது எந்தத் தொழில் நிறுவனத்தில் கூட்டுப் பங்கு, பங்குகளில் முதலிடலாம். தொழில் நிதிக் கார்ப்பரேஷனுடைய விருப்பத்திற்கு ஏற்றபடி கடன் அல்லது முன்பண உதவியை அந்தத் தொழில் நிறுவனத்தின் பங்குகளிலோ டிபெஞ்சர் கடன் பத்திரங்களிலோ மாற்றிக் கொள்ளலாம்.

தொழில் நிதிக் கார்ப்பரேஷன் தொடங்கிய நாள் முதல் மாறுது $5\frac{1}{2}$% வட்டி விகிதம் (இதில் $\frac{1}{2}$% தள்ளுபடி காலா காலத்தில் அசல் தவணைகள் கட்டப்படின்) 6% வட்டியாக பிப்ரவரி 1962ல் அதிகரிக்கப்பட்டு பின்னர் $6\frac{1}{2}$% ஆக மாற்றி (தள்ளுபடி மாற்றப்படவில்லை) பின்னர் ஏப்ரல் 23ஆம் தேதி 1957ல் இந்த வட்டி விகிதத்தை 7% ஆக உயர்த்திக் குறித்த காலத்தில் தவறின்றிக் கொடுக்கப்படும் தொகைகளுக்கு $\frac{1}{2}$% தள்ளுபடி கொடுக்க முடிவு செய்துள்ளனர்.

இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பரேஷனுடைய

ஆதாரங்களின் மாற்றங்கள்

	லட்ச ரூபாய் மதிப்பில்									
	1950-51	1955-56	1956-57	1957-58	1958-59	1959-60	1960-61	1961-62	1962-63	1963-64
கடன் பத்திரங்களும் டிபெஞ்சர்களும்	530	780	780	1,237	1,675	2,234	2,234	2,234	2,824	2,824
ரி பாங்கியிலிருந்து பெற்ற கடன்கள்	...	61	106	...	94	88	51	...	...	124
அரசினரிடமிருந்து பெற்ற கடன்கள்	...	...	600	1,500	1,000	825	1,525	1,775	2,375	2,975
இதர பொறுப்புகள்	31	80	102	102	151	853	1,137	1,887	2,104	2,666
அயல்நாட்டுச் செலாவணியில் கடன்கள்	...	...	...	...	...	...	...	...	110	302

இராச்சியத் தொழில்நிதிக் கார்ப்பேரேஷன் :— இராச்சியங்களில் உள்ள அநேக சிறுபான்மைத் தொழில்களையும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களையும் ஊக்குவிக்கும்பொருட்டு நிதியுதவியளிக்கும் நாடாளுமன்றத்தில் செப்டம்பர் மீ 1951-ல் இராச்சிய நிதிக்கார்ப்பரேஷன் சட்டத்தை அமுலாக்கினர். இச்சட்டத்தின் பிரிவுகள் பெரும்பாலும் இந்தியத்தொழில் நிதிக் கார்ப்பொரேஷன் சட்டத்தின் பிரிவுகளைப்போலுள்ளன. இச்சட்டத்தின்படி இராச்சிய நிதிக் கார்ப்பரேஷனின் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 50 லட்சத்திற்குக் குறையாமலும் ரூ. 2 கோடிக்கு அதிகப்படாமலும் இருக்கவேண்டும். இச்சட்டத்தைத் தொடர்ந்து ஆந்திரப்பிரதேசம், அஸ்ஸாம், பீகார், குஜராத் ஜம்முகாஷ்மீர், கேரளா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம் மைசூர், ஒரிஸா, பஞ்சாப், ராஜஸ்த்தான், மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம் இவைகளில் இம்மாதிரி கார்ப்பரேஷன்கள் நிறுவப்பட்டுள்ளன, சென்னையில், தி மெட்ராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற ஒரு நிறுவனம் இராச்சிய நிதிக் கார்ப்பரேஷனின் தொழில்களைப் புரிந்து வருகிறது.

பின்னல் கூறப்படும் சில நிபந்தனைகளை அனுசரித்து எல்லா இராச்சிய நிதிக்கார்ப்பரேஷன்களும் இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பரேஷனைப் போன்று கீழ்க்கண்ட அதிகாரங்களைப் பெற்றுள்ளன. (I) தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்யும் கடன்களை அனுமதிக்கவும் அல்லது அவற்றின் டிபெஞ்சர் கடன் பத்திரங்களை வாங்கிக்கொள்ளவும். (II) அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்குகளில் இருந்தும் இராச்சியக் கூட்டுறவு பாங்குகளிலிருந்தும் இத்தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்காக உத்தரவாதம் அளித்தல், இந்தியாவில் உற்பத்தியான முதற் கருவிப் பொருள்களைக் கடனில் கொள்முதல் செய்த அந்தத் தொழில் நிறுவனங்கள் காலதாமதத்துடன் திருப்பும் தொகைக்கு உத்திரவாதமாக நிற்கவும், (III) கூட்டுப்பங்குகள், பங்குகள் கடன்பத்திரங்கள், டிபெஞ்சர் பத்திரங்கள் இவைகளை ஈட்டுறுதிப் படுத்துதற்குச் சிற்சில நிபந்தனைகளின் கீழ் ஏற்றுக் கொள்ளுதல். இக்கார்ப்பரேஷன் இராச்சிய அரசினரின் பதிலாளாகவும், மத்திய அரசினரின் அறிக்கையின்படி வேறெந்த நிதி நிறுவனத்தில் பதிலாளாகப் பணிசெய்தல்.

இந்தியத் தொழில் நிதிக்கார்ப்பரேஷனின் மூலதனத்தைச் செலுத்துவதற்கு மத்திய அரசினர் ரிசர்வு பாங்கு மற்றும் இதர நிதி நிறுவனங்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். ஆனல்

இராச்சிய நிதிக் கார்ப்பரேஷன்களிலோ 25%க்கு மேற்படாமல் பொதுமக்கள் மூலதனம் செலுத்தலாம்.

அந்தந்த இராச்சிய நிதிக்கார்ப்பரேஷன்களின் மூலதனமும் அந்த அசலும் ஆண்டுதோறும் கொடுக்கப்படும் லாபஈவு பங்கும் திருப்பிக்கொடுப்பதற்கு அந்தந்த இராச்சிய அரசினர் உத்தரவாதம் கொடுக்க வேண்டும். குறைந்த அளவு லாபஈவுப் பங்கு இவ்வளவென்பதை மத்திய அரசுடன் கலந்து தீர்மானம் செய்தல் வேண்டும்.

இராச்சிய நிதிக்கார்ப்பரேஷன்கள் அதிகப்படியான மூலதனம் பெறக் கடன் பத்திரங்கள், டிபெஞ்சர்கள் இவைகளை வெளியீடு செய்தும் பொதுமக்களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக் கொள்ளலாம். அவர்கள் லேவாதேவி வர வரக் கூடுதலாகிக் கொண்டுவருகிற காரணத்தாலும் செல்வ ஆதாரங்களும் அதிகரித்து வருவதனாலும் அண்மையில் தங்கள் செல்வநிலையைச் செம்மைப்படுத்தும் வகையில் கடன் பத்திரங்களை வெளியிட்டு வருகின்றன.

கடன் பத்திர வெளியீட்டிலும், டிபெஞ்சர் வெளியீட்டிலும் இராச்சிய நிதிக்கார்ப்பரேஷன்கள் ரிசர்வு பாங்கிடம் அனுமதி பெறவேண்டும். அரசினரும், கார்ப்பரேஷன் நிறுவனங்களும் தமக்குள்ளாகக் கடன் பெறவேண்டிய திட்டங்கள் இவைகளை ரிசர்வு பாங்கியின் வழியாகவே முடிவு செய்ய வேண்டியேற்படுகிறது. அந்தந்த கார்ப்பரேஷனுடைய மூலதனத்தை அந்தந்த இராச்சிய அரசினர் உத்தரவாதம் கொடுப்பது போல் அந்தந்த நிதிக்கார்ப்பரேஷன் வெளியிடும் கடன் பத்திரங்கள், டிபெஞ்சர்களுக்கான அசலையும் வட்டியையும் அந்தந்த இராச்சிய அரசினர் உத்தரவாதம் கொடுக்கவேண்டும். இராச்சிய நிதி நிறுவனங்கள் (கார்ப்பரேஷன்) வெளியிடக்கூடிய கடன்பத்திரங்கள் டிபெஞ்சர் தொகை இவ்வளவு என்று சட்டம் வரம்பிட்டுள்ளது. இராச்சிய நிதிக்கார்ப்பரேஷன் வெளியிட்டுள்ள கடன்பத்திரங்களும், டிபெஞ்சர்களும், ரிசர்வு பாங்கிடமிருந்தோ அல்லது அரசினர் அறிக்கையில் கூறப்பட்டுள்ள அட்டவணைப்படுத்தப் பட்ட பாங்குகளிடமிருந்தோ பெற்ற கடன் (90 நாள் தவணையில் பெற்ற கடன் நீங்கலாக) உத்தரவாதமாக நின்ற தொகைமதிப்பு ஈட்டுறுதிக்கென உள்ள ஒப்பந்தம், இனி கொடுபட வேண்டிய பொறுப்புகளும் சில்லரைக்கடன் ஒதுக்கல்களும் அனைத்தும் கொடுக்கப்பட்ட மூலதனத்தையும் ரிசர்வு நிதியையும் கூட்டிய தொகையில் பத்துமடங்கிற்கு மேல் அதிகரிக்கக் கூடாது.

இராச்சிய நிதிக் கார்ப்பரேஷன்கள் இராச்சிய அரசிடமிருந்தோ, அல்லது ரிசர்வு பாங்கினிடமிருந்தோ அனுமதிபெற்று தல அதிகாரிகளிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் வைப்புகளை யேற்றுக்கொள்ளலாம். அம்மாதிரியான வைப்புகள் 12 மாதங்களுக்குள்ளாகத் திருப்பித் தர முடியாதவை. நிதிக் கார்ப்பரேஷனுடைய செலுத்தப்பட்ட மூலதனத்திற்கு அதிகமாக வைப்புகள் பெறுதல் கூடாது.

கார்ப்பரேஷன்கள், 90 நாள்களுக்கு மேற்படாமல் கோரிய போது திருப்பித் தரக்கூடிய கடன்களைத் தங்கள் வசம் உள்ள ட்ரஸ்ட்டி ஆவணங்கள் ஈட்டின் பேரில் ரிசர்வு பாங்கியினிடமிருந்து பெறலாம். அல்லது தங்கள் வசமுள்ள மாற்றுண்டிக் கடன்தாள்களின் ஈட்டில் கூடப் பெறக்கூடும். இக்கடனுக்கு இராச்சிய அரசினர் உத்தரவாதம் அளிக்கின்றனர். மத்திய அரசினரின் செக்யூரிடிகள் அல்லது இராச்சிய அரசினரின் ஆவணங்களின் ஈட்டின் பேரில் குறித்த பருவத்திற்குள்ளாகத் திருப்பித்தர, 18 மாதங்களுக்கு அதிகப்படாமல் ரிசர்வு பாங்கியிலிருந்து கடன் பெறக்கூடும். இம்மாதிரியான கடன்கள் இராச்சிய அரசினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு உத்தரவாதம் அளிக்கப்படும். அம்மாதிரி கடன்பெறும் கார்ப்பரேஷனின் கொடுக்கப்பட்ட மூலதனத்தில் 60 சதவீத அளவிற்குத்தான் கடன் கொடுக்கப்படும். நிதிக் கார்ப்பரேஷன் மத்திய அரசினரின் அறிக்கையில் கண்ட எந்த நிறுவனத்திலும் இது கடன்பெறும், அல்லது இராச்சிய அரசினரிடமிருந்து கடன் பெறலாம்.

இராச்சியத் தொழில் நிதிக் கார்ப்பரேஷனின் நிருவாகப் பொறுப்புகளைப் பதின்மர் கொண்ட இயக்குநர் குழு ஒன்று செயலாக்கி வருகிறது. இராச்சிய அரசினர் ரிசர்வு பாங்கினைக் கலந்து ஆலோசித்துப் பின்னர் நிருவாக இயக்குநர்களை நியமிக்கிறது. இன்னும் 3 இதர இயக்குநர்களை நியமனம் செய்கிறது. ரிசர்வு பாங்கும், இந்தியத் தொழில் நிதிக் கார்ப்பரேஷனும் ஒவ்வொரு இயக்குநரை நியமனம் செய்கின்றன. அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்குகளும் ஈட்டுறுதி கம்பெனிகளும் முதலீட்டு ட்ரஸ்ட்டுகளும், கூட்டுறவு பாங்குகளும் இதர நிறுவனங்களுமாக மூன்று இயக்குநர்களை தேர்ந்தெடுத்தும், அவர்களில் ஒருவர் அட்டவணைப்படுத்தப்பட்ட பாஙகுகளுக்கு என்றும், இன்னொருவர் கூட்டுறவு பாங்குகளுக்கென்றும், மூன்றுமவர் இதர நிதி நிறுவனங்களைச் சார்ந்தவராகவும் இருப்பர். இதர பங்குதாரர்கள் அனைவருமாக இன்னொரு இயக்குநரை தங்களி

விருந்து பொறுக்கி எடுத்து அனுப்புவார்கள். இயக்குனர்களில் பெரும்பான்மையோர் அரசினராலும் அரசிற்கு நிகரான நிறுவனங்களாலும் நியமிக்கப்படுகின்றனர். இராச்சிய அரசு ரிசர்வு பாங்கினைக் கலந்து ஆலோசித்து இராச்சிய நிதிக்கார்ப்பரேஷனுக்கு எவ்வகையான திட்டம் வேண்டுமென்று முடிவெடுத்து அதன்படி இயக்குநர்குழுவிற்கு வழிகாட்டிவரும்.

கடன்களுக்கும் முன்பண வசதிகளுக்கும் விதிக்கப்பட்ட வட்டிவிகிதம் $6\frac{1}{2}$ முதல் 7 சதவிகிதம் வரை பொதுவாக மாறிவரும். ஒழுங்காக காலக் கெடுவினுள் திருப்பப்படும் தொகைகளுக்கும் $\frac{1}{2}$ சதவிகிதத் தள்ளுபடி கொடுக்கப்படும்.

இன்னும்சில இராச்சியங்களில் இந்த நிதிநிறுவனங்கள் சிறுபான்மை தொழில்களுக்கு அளிக்கப்படும் சலுகை நிதி உதவியை ஒழுங்குபெற செய்கின்றனவா என்று இராச்சிய அரசினரின் பதிலாள்போன்று பணியாற்றி வருகின்றன.

இராச்சிய நிதிக்கார்ப்பரேஷன்கள் சட்டம், 1951-ல் பிரிவு 37. ஏ (37A) யில் கண்டுள்ளபடி பாங்குகளை ஆய்வு செய்ய ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதுபோல இவைகளையும் முறைப்படி ஆய்வு செய்யக்கூடும். இவ்வாறு ஆய்வு செய்வதால் கார்ப்பரேஷனுடைய கடன் கொள்கை செம்மையாக அமையும். அவற்றின் பணிகளையும் சீர்படுத்தும்.

இந்தியத் தொழிலினக் கடன்அளிப்பு, முதலீட்டுக் கார்ப்பரேஷன் (Industrial Credit and Investment Corporation of India Ltd) இந்தியாவிலுள்ள தனியாரின் முதலீட்டு முறைகளை ஊக்குவிக்கும் பொருட்டு உள்நாட்டுக் கூட்டுறவின் கீழ் 1955ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தொழிற்கடன் முதலீட்டுக் கார்ப்பரேஷன் உருவாகியது. இது தனியார் உரிமையிலுள்ள நிதி நிறுவனம். தொழில்வளர்ச்சிக்கென தனியாரிடமிருந்து முதலீடு கிடைக்கவே இது உருவாகியுள்ளது எனலாம். இந்தியத்தொழில் நிறுவனங்களுக்கென்று தேவைப்படும் நிருவாக வசதிகள் கருத்துரைகள் இவைகளைச் செய்யவும், தொழிலை மேன்மேலும் விரித்தும் ஊக்குவித்தும் நவீனமுறையில் செலுத்தவும் தேவைப்படும் மூலதனத்தைக் கடனாக அளிக்கவும், தொழிலில் உள்ள சிக்கல்களால் ஏற்படும் அபாயத்தை விலக்கவும் 'பிறரை இத்தொழிலில் நிதியை ஈடுபடுத்தக்கூறவும் எனவே இ. தொ. க. மு. கா (I. C. I. C. I.)வினுடைய தொழிலாவது தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால இடைக்காலக் கடன் வசதிகள் செய்வதும்

அதற்கான ரூபாய் அல்லது அயல் நாட்டு நாணயங்களில் கடன் வசதி ஏற்பாடு செய்வதும், சாதாரணசலுகை பாங்குகளின் டிபெஞ்சர் கடன் பத்திரங்களின் பொது வெளியீட்டைத்தையும் ஈட்டுறுதி கொடுப்பதும், பாங்குகளிலும் டிபெஞ்சர்களிலும் பணமுதலீடு செய்வதும் இதரர்களால் கொடுக்கப்படும் பண வசதிக்கு உத்தரவாதம் கொடுப்பதும் ஆகும். இக்கார்ப்ப ரேஷனின் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 25 கோடி. இதில் ரூ. 5 கோடி ரூ. 100 மதிப்புள்ள சாதாரண பங்குகளாக வெளியிடப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலே கூறியதில் ரூ 3.5 கோடி இந்தியாவிலேயே கொடுக்கப்பட்டது. ஆங்கில நாட்டில் (காமன் வெல்த் வளர்ச்சி நிதிக் கம்பெனி உள்பட) உள்ள பங்குதாரர்கள் ஒரு கோடி ரூபாய் கொடுத்துள்ளனர். மிகுதியுள்ள ரூ 50 லட்சத்தை அமெரிக்க பங்குதாரர்கள் கொடுத்துள்ளனர். இ. தொ. க. மு. கா வின் ஆதாரங்களை வலுப் படுத்த இந்திய அரசிடமிருந்தும் உலக பாங்கியிலிருந்தும் வளர்ச்சிக்கடன் நிதியிலிருந்தும் அவ்வப்போது கடன்கள் வாங்கப்படுகின்றன. பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட எந்த கம்பெனியாயினும் தனியார் துறையிலும் தோற்றுவிப் பவர் எவராயினும் இ. தொ. க. மு. கா. (I. C. I. C. I.) வை அணுகி தம்மிடமுள்ள செம்மையான திட்டத்தை எடுத்துக் கூறி நிதி உதவி கோரினால் அதை ஏற்று, பெரிதாக்கவும் புதுப் பிக்கவும் முன்வரும். எந்தத் தொழில் நிறுவனத்திற்கும் அரசி னரின் உதவி கிடைத்ததென்று கார்ப்பரேஷனின் உதவி கிடைக்காது போவதில்லை. உதவி கோரும் நிறுவனம் தனியார் துறையில் இருக்க வேண்டும் என்பது கண்டிப்பான நிபந்தனை. 15 ஆண்டுகளுக்குள் திருப்பித்தர வேண்டிய கடன்கள் அனும திக்கப்படுகின்றன. திருப்பித்தர வேண்டிய காலத்தை நீடிப் பதோ குறைப்பதோ, சந்தர்ப்பம், தொகையின் அளவு நிறுவ னத்தின் அமைப்பு, கடனின் காரணம் இவற்றைப் பொறுத் திருக்கும். கார்ப்பரேஷன் அளிக்கும் கடனோ அல்லது முன் பணத்திற்கான உத்தரவாதமோ தக்க ஈட்டுடன்தான் செய்யும். மேலும் கூடுதல் கடன் உற்பத்திக்கான நிபந்தனைகளை இக் கார்ப்பரேஷன் இடக்கூடும். மூலதன வெளியீடுகளை காப்புறுதி அளிக்கும் வகையில் இக்கார்ப்பரேஷனைப் பற்றித் தனிப்பட்ட முறையில் விளக்கம் தரவேண்டியது இன்றியமையாததாகிறது. சீரான முறையில் ஈட்டுறுதி செய்யும் முறையை இந்தியாவில் புகுத்தியிருப்பதோடு அல்லாது செவ்வையாகவும் செய்து வருகிறது. சாதாரண மூலதனத்தைப் பொறுத்தமட்டில் ஈட் டுறுதி முறையைப் பெருமளவில் செய்து வருகிறது. இ. தொ. க. மு. கா (I. C. I. C. I.) இந்தியாவில் முதலீட்டு நிலையத்தைத்

தோற்றுவிப்பதில் பெரும் பணியாற்றியிருக்கிறது. அயல்நாட்டுத் தனியார் இந்திய முதலீட்டை ஊக்குவிக்கும் நிறுவனம் ஆகும். இதன் கிளைகள் நியூயார்க்கிலும், டஸ்ஸல்டார்ஃப்பிலும் உள்ளன. கார்ப்பரேஷனின் 5 இயக்குநர்கள் நிருவாகக் குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர். கார்ப்பரேஷனின் தலைவர் இதன் முதல் தலைவராவர்.

தேசீயத் தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டவை (National Industrial Development Corpartion Ltd.,) :— தே. தொ. வ. கா (N.I.D.C.) 1954 ல் மத்திய அரசினரால் தொடங்கப்பெற்றது. பொதுத்துறைகளிலும் தனியார் துறைகளிலும் நன்கு இணைக்கப்பெற்றதும் சமனுக்கப் பட்டதுமான தொழில் வளர்ச்சிக்கான முறைகளை இந்த நிறுவனம் தயாரிக்கிறது. அரசினரின் முன் அனுமதிபெற்று புதிய தொழில் திட்டங்களைச் செவ்வனே வகுத்து நடத்துவதும், தொழில் துறையில் நிறைவுபெறு வெற்றிடங்களைப் புதிய தொழில் அமைப் புகளால் நிரப்பியும் வருவதே இதன் தொழில்களாகும். பருத்தி யாடைத்தொழிலுக்கும், சணல் நெசவுத் தொழில்களுக்கும் கடன் உதவியளிக்கவும் அவற்றைப்புதுப்பித்தும், நடைபெறுது நின்ற வைகளை உருவாக்கியும் உதவ அரசினரின் பதிலாளாகப் பணியாற்றுகிறது. அரசின் விருப்பத்திற்கேற்ப இதரத் தொழில் களுக்கும் உதவியளிக்கிறது.

இக்கார்ப்பரேஷனின் அதிகாரம் பெற்ற மூலதனம் ஒரு கோடி ரூபாய். இதில் ரூ. பத்து லட்சம் கூப்பிடப்பட வேண்டிய மூலதனமாகும். அரசினர் கூப்பிடப்பட்ட மூலதனம் அனைத்தும் முதலீடு செய்துள்ளனர், அரசினரிடமிருந்து பெற்ற கடன் தொகைகள் இதற்கான அன்றாடத் தேவைக்கான நிதி ஆதாரமெனலாம்.

இக்கார்ப்பரேஷன் அனுமதி செய்யும் கடன் தொகையின் பருவம் குறுகிய கால எல்லையை உடையது. தொகையை ஐந்தாண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டும். தொழில் கம்பெனிகளுக்கு அளிக்கப்படும் கடன் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் ரூ. 10 லட்சத்திற்கு மேல் போகக் கூடாது கடன் பெறும் நிறுவனங்கள் துணையீடாக அவர்களுடைய சொத் துகளையும் அல்லது பாங்கினுடைய உத்தரவாதமும் கொடுக்க வேண்டும். மேலும் தேசிய முக்கியத்துவம் பெற்ற தொழில்களுக் கான செயல் முறைகளையும் ஒழுங்குபடுத்துகின்றது.

வரையறுக்கப்பட்ட தனியார் துறை தொழில்களுக்கு நிதி நிரப்பு நிறுவனம் (Refinance Corporation Private Limited)— பொ. ச. 480 (P.L. 480)ன் அடிப்படையில் விவசாயப்பொருள்கள் ஒப்பந்தத்தின்போது உருவாகியது. இந்த நிறுவனம், இந்திய அரசு அமெரிக்க ஐக்கிய நாடுகள் இரண்டும் சேர்ந்து முடித்துக் கொண்ட ஒப்பந்தப்படி 55 மிலியன் டாலர் (ரூ. 26 கோடி) தொகையை ஒதுக்கி வைத்து அதனின்று பாங்கு வழிகளைப் பெற்ற தொழில்களுக்கு என்று இத்தொகையை உபயோகித்தல் வேண்டும் என்றும், அதற்கான தனிநிறுவனம் ஒன்று தோற்று விக்கவேண்டும். மேற்படி ஒப்பந்தத்தை அனுமதித்து 1958ல் ஜூன் மீ 5-ம் தேதியில் இந்த நிதி நிரப்பு நிறுவனம் தொடங்கப் பட்டது. இதன் பெயரில் உள்ளபடி தொழில்களுக்கு நிதி உதவியளிப்பதோடல்லாது பாங்குகளுக்கும் நிதி நிறுவனங்க ளுக்கும் பணஉதவியளிக்கிறது. தனியார் துறையில் உள்ள தொழில் நிறுவனங்களுக்குப் பணஉதவியளிக்கும் பாங்குகளுக் கும் இதர நிதி நிறுவனங்களுக்கும் அவ்வப்போது இதன் பெய ருக்கு ஒப்ப, நிதியை நிரப்பி உதவியளிக்கிறது.

இந்தியக் கம்பெனிகள் சட்டம், 1956-ன் கீழ் இது தனியார் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டது. கம்பெனிகள் திருத்தச் சட்டம் 1960ன் கீழ் இதுபொதுக் கம்பெனியாக மாற்றியமைக் கப்பட்டது. இதற்கான அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 25 கோடி. ரூ 12.50 கோடி மதிப்புள்ள அதன் பங்குகள் வெளி யிடப்பட்டு ரிசர்வு பாங்கினுலும் உயிர் ஈட்டுறுதிக் கார்ப்ப ரேஷன் (Life Insurance Corporation), இராச்சிய பாங்கு (State Bank) மற்றும் பதினன்கு பெரும் அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்குகள் இதில் முதலீடு செலுத்தியுள்ளன. இதன் கொடுக் கப்பட்ட மூலதனம் ரூ 2-50 கோடி. பொதுச்சட்டம் 480-ன் கீழ் வரும் உதவியினின்று ரூ. 26 கோடியை இந்த நிறுவனத்திற்கு அவ்வப்போது அளிப்பது என்று இந்திய அரசினர் இத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இக்கடனுக்கு வட்டியும் உண்டு. 1960 ஆண்டிறுதியில் இக்கார்ப்பரேஷன் அரசினரிட மிருந்து பெற்ற கடன் ரூ. 5 கோடி.

ரிசர்வு பாங்கின் கவர்னர் இதற்குத் தலைவர். எழுவர் கொண்ட இயக்குநர் குழாம் ஒன்று இதை நிருவகிக்கிறது. இராச்சிய பாங்கு நீங்கலாக இதர பாங்குகளின் அக்கறையை மேற்கொள்ள 3 இயக்குநர்கள் இக்குழுவில்உளர். ரிசர்வுபாங்கின் துணைக் கவர்னர் ஒருவர், இராச்சிய பாங்கினுடைய தலைவர் உயிர் ஈட்டுறுதிக் கார்ப்பரேஷனுடைய தலைவர், இவர்கள் இதர

இயக்குநர்கள். ரிசர்வு பாங்கியிலுள்ள தொழில் நிதிப்பிரிவு இந்தக்கார்ப்பரேஷனை நிறுவகித்து வருகிறது.

தொடக்கத்தில் இதில் ஈடுபட்ட 15 அட்டவணைப்படுத்தப் பட்ட பாங்குகளுக்கும் கையிலுள்ள நிதி ரூ. 38.5 கோடியில் வீதப் பங்களவில் சில கடன் வழிகளைக் கணக்காகக் காண்பிக் கலாம். பாங்குகளினுடைய உருவம் அதன் வைப்புகளின் எண்ணிக்கையைப் பொறுத்து வீதப் பங்கு ரூ. 1.25 முதல் 3 கோடி வரையும் (இராச்சிய பாங்குகளுக்கு மட்டும் ரூ. 5 கோடி அனு மதிக்கப்பட்டுள்ளது.) நிரப்பு நிதியின் கீழ் விடப்படும். கடன் பருவம் 3 முதல் 7 ஆண்டுகள் வரை இருக்கலாம். எந்த ஒரு கடன் தொகையும் ரூ 50 லட்சத்திற்கு அதிகமாகக் கூடாது. செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வு நிதியும் 5 லட்சத்திற்கு குறையாமலும் 2½ கோடிக்கு அதிகப்படாமலும் உள்ள தொழில் கம்பெனிகளுக்குக் (ஒதுக்கு நிதி வரிகளுக்கென்றும் தேய்மானத் திற்கென்றும் நிறுத்தி வைக்கப்பட்டது போக எஞ்சியது) கொடுக்கப்படும், கடன்வழி உற்பத்தியைப் பெருக்கவே (அசை யாச் சொத்துகள், புதுப்பித்தல், மாற்றியமைத்தல் போன்ற பலவகைப்பட்ட செயல்களை எடுத்துக்காட்டாகக்கொள்ளலாம்) பயன் படுத்த வேண்டும். இடைக்கால மூலதன உதவியாகவும் கொள்ளலாம். கடன் கோரும் கம்பெனிகளுக்குப் போதிய வன்மையுள்ள, வாங்கிய கடனைத் திருப்பக்கூடிய செல்வநிலை உண்டா அல்லது துணை ஈடு போதுமானதா என்று நிதி உதவி யளிக்கும் நிறுவனங்கள் தான் கவனிக்குமே ஒழிய நிரப்பு நிதிநிறுவனம் அதைப்பற்றி அக்கறைக் காட்டுவதில்லை. நிதி உதவியளிக்கும் நிறுவனங்கள்தான் கடன் திருப்பாததினால் ஏற்படும் அபாயத்தை மேற்கொள்ள வேண்டும். ஆயினும் நிரப்பு நிதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் கொள்ளுவதால் கார்ப் பரேஷனிடமிருந்து பெற்ற கடனுக்கு ட்ரஸ்ட்டாக இருக்க வேண்டும்.

இதன் பணிகளையும் செயல் முறைகளையும் எளிதாக்கியும் இதன் ஆதாரங்களைச் செவ்வையாகப் பயனுக்கிக் கொள்ளவும் செயல் முறைகளை மாற்றியமைத்துள்ளது. நிரப்பு நிதி நிறுவனத்தின் உதவி இப்போது 43 பாங்குகளுக்குக் கிடைத்துள் ளது. 14 இராச்சிய நிதிக் கார்ப்பரேஷன்கள், சென்னை தொழில் முதலீட்டுக் கார்ப்பரேஷன், மூன்று இராச்சியக் கூட்டுறவு பாங்குகள் இதன் உறுப்பினர்கள் ஆகாமலேயே உதவி பெற் றுள்ளன.

இதனுல் பங்குதாரர்களுக்கு அமைந்துள்ள கோட்டா (வீதப் பங்கு) முறை ரத்து செய்யப்பட்டுள்ளது. தாங்கள் பெறும் நிரப்பு நிதி வழிக்கான வட்டி விகிதத்திற்கும் (5%) தொழில் நிறுவனங்களுக்குக் கடனுக்கு விடும் வட்டி விகிதத்திற்குமாக $1\frac{1}{2}$% இடைவெளி இருக்கவேண்டும் என்ற முன்னர் இருந்த நிபந்தனை நீக்கப்பட்டுத் தற்போது பாங்குகள் தங்கள் சந்தர்ப்பத்திற் கேற்ப வட்டி விகிதம் வசூல் செய்யலாம். ஆயினும் அது கார்ப்பரேஷனுடைய சம்மதத்தைப் பெற்றதாக அமைதல் வேண்டும். திட்டத்தில் இல்லாத தொழில்களுக்கும் கடன்வசதி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அம்மாதிரியான தொழில்கள் திட்டத்தை ஒட்டி அமைதல் வேண்டும். சிறுபான்மைத் தொழில் களுக்கும்கூட இடைக்கால கடன் வசதியளிக்க நிரப்பு நிதிக் கார்ப்பரேஷன் முன்வந்துள்ளது. ஆயினும் ஒரு நிபந்தனையென்னவெனில் அந்தக் கடன்களுக்குக் கடன் உத்தரவாதத்திட்டம் (Credit Guarantee Scheme) உத்தரவாதம் செய்தல் வேண்டும்.

பாங்கு நிறுவனங்களைப் பெரிதாக்கி, அவற்றின் வர்த்தகத்தைத் தரப்படுத்தி, கடன்தரும் முறைகளை லாபம்காணும் அளவில் சிறக்கச் செய்து அதனுல் தொழிலைச் செம்மையாக்கி எளிதாகவும் மாற்றிய நன்மதிப்பு கார்ப்பரேஷனையே சாரும். மத்தியகால ஏற்றுமதிக் கடன் வசதிக்களுக்கு நிரப்பு நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது அதனுடைய மெச்சத்தக்க புதிய திட்டம். இதனடிப்படையில் ஆறு மாதங்களுக்கு உட்படாமல் 5 வருடங்களுக்கு மேற்படாமல் உள்ள ஏற்றுமதிக் கடன்களுக்கு இவை ஏற்பட்டுள்ளன. ஏற்றுமதி நிதி (கப்பூர் குழுவினர்) ஆய்வுக் குழுவினரின் பரிந்துரையின் பேரில் இத்திட்டம் 1963ஆம் ஆண்டு ஜனவரிமீ நடப்பில் வந்தது.

இத்திட்டத்தின் கீழ் அயல்நாட்டுச் செலாவணித் தொழிலில் உரிமை பெற்ற பாங்குகளுக்கு நிரப்புநிதி வசதியளிக்கிறது. ஏற்றுமதியாளர்கள் தனியார் துறையில் இருக்கவேண்டும். அவர்கள் உற்பத்தியாளர்களாகவும் இருக்கலாம். மேலும் அவர்களுடைய அமைப்பின் அளவு அவ்வளவாகக் கவனிக்கப் படுவதில்லை; ஆயினும் மதிப்புள்ளதும் புகழ் பெற்றதுமான ஏற்றுமதியாளராக இருத்தல் வேண்டும். சாதாரணமாக ஏற்றுமதிகள் மூலதனக் கருவிப் பொருள்களாகவும் பொறியியல் பொருள்களாகவும் இருத்தல் வேண்டும். ஏற்றுமதிகள் பெரிய நிறுவனங்களின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும். சாதாரணமாக கொடுக்குந் தொகையில் 20% முன் பணமாகவோ, அல்லது பற்றுத்திருமுகம்

கொடுத்தோ அல்லது பணம் கொடுக்க உத்தரவாதமோ அளித்தால்தான் நிரப்புநிதி நிறுவனம் சம்மதிக்கும். எது எவ்வாறிருப்பினும் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை ஆஜர்படுத்திவிட உத்தரவிடும். எல்லா ஏற்றுமதிகளையும் ஏற்றுமதிக் கடன் உத்தரவாத நிறுவனத்தால் (Export Credit & Guarantee Corporation) ஈட்டுறுதியளித்தல் வேண்டும். நிரப்பு நிதிக் கடன் 31 லட்சத்திற்கும் குறைந்த அளவில் இருக்கக்கூடாது. தனிப்பட்ட கப்பல் ஏற்றுமதிகள் குறைந்தளவில் இருக்கலாம். அவற்றிற்கு நிரப்பு நிதிநிறுவனம் உதவியளித்திருக்கக்கூடும். கப்பலேற்று முன்னர் உள்ள கடனையும், கப்பலிலிருந்து இறக்கிய பின்னர் அடைந்த கடனையும் நிரப்புநிதி நிறுவனம் அளிக்க வழியுண்டு. கப்பலேற்று முன்னர் கடன் பருவம் (நீங்கலாக) 6 மாதங்களுக்குக் குறையாமலும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அயல் நாட்டுச் செலாவணியிலிருந்து விலக்குப்பெறல் இன்றியமையாதது. $4\frac{1}{2}$% சலுகை வட்டி விகிதத்தில் நிரப்பு நிதி வழியளிக்க இக்கார்ப்பரேஷன் முன் வந்துள்ளது. இது இயல்பாக வசூலிக்கும் வட்டிவிகிதம் $5\frac{1}{2}$%. மேலும் இவ்வசதியின் அடிப்படையில் உதவிபெறும் பாங்குகள் 6% வட்டிக்கு மேல் கடன் கொடுத்தல் கூடாது.

அண்மையில், தனியார்துறை நிலக்கரிக் கனிகளுக்கு ரூபாய் முன்பண வசதிகளை (Rupee Advances) மேற்கொள்ளும் பாங்குகளுக்கு இக்கார்ப்பரேஷன் அரசினரின் பதிலாள் போன்று உத்தரவாதம் அளிக்கிறது. இவ்வாறு செய்யப்படும் முறையில் உலக பாங்கு நிறுவனத்தின் கடன் தொகையாகிய 35 மில்லியன் டாலர்களைப் பயன்படுத்த முடிகிறது. நிறுவனக் கடன் வசதிகளைப் (Institutional Credit) பெரிது செய்யவும், உதவி கோரும் நிலக்கரிக் கனிகளுக்கும் கடன் வசதியளிக்கும் நிறுவனங்களுக்குமிடையே நட்டத்தை 35 விகிதம் முதல் 65 விகிதம்வரை பங்கீடு செய்துகொள்ள வேண்டும். உத்தரவாதம் நிற்பதற்கான கூலி ஆண்டிற்கு $\frac{3}{4}$%.

இந்தியத் தொழில் வளர்ச்சி பாங்கு

(Industrial Development Bank of India)

(இ. தொ. வ. பா.) மேலே கூறியுள்ள பாங்கு நிறுவனத்தை தொடக்கம் செய்ய வேண்டுமென்ற குறிக்கோளுடன் இந்திய யூனியன் நிதி மந்திரி லோகசபையில் பட்ஜெட் 1964 விவாதத்தில் இதற்கென ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். தொழில் நிதிக் கார்ப்பரேஷனும் தொழில் கடன் முதலீடு கார்ப்ப

ரேஷன் முதலியன இருப்பினும், நாட்டிலுள்ள வர்த்தக பாங்குகள் தொழில்களுக்கு முன்பண வழி அளிப்பினும், கூட நீண்ட காலக் கடன் வசதியை அளிக்க அவைகளுக்குப் போதிய சௌகரியமில்லை யாதலாலும் இந்நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கு இது ஒரு பெரும் இடையூறாக இருக்கிற தென்று கருதி இந்த பாங்கு நிறுவனத்தைத் திறக்கும்படியான முறையை வகுத்தனர்.

கனடா நாட்டிலுள்ள தொழில் வளர்ச்சி பாங்கு எவ்வாறு அந்நாட்டின் மத்திய பாங்கினுடைய துணையாகவுள்ளதோ அதே போல் இதுவும் ரிசர்வு பாங்கினுடைய துணையாகும். ரிசர்வு பாங்கியின் மத்தியக் குழுவிலுள்ள உறுப்பினர் அல்லாதவர்கள் இதன் உறுப்பினர்ஆவர். ரிசர்வு பாங்கியினுடைய கவர்னர்தான் இதன் தலைவர். அதன் துணைத்தலைவர் இதன் இயக்குநர்களில் ஒருவர். தொடக்கத்தின் போது இதன் பணிக்கான மூலதனம் ரூ. 20 கோடி.

இதில் பாதித் தொகையை ரிசர்வு பாங்கு செலுத்தும். இதன் மறுபகுதியை 30 ஆண்டுகளுக்குள், முதல் 15 ஆண்டுகளுக்குப்பின்னர் 15 சம தவணைகளில் 15 ஆண்டுகளுக்குள் கொடுத்துவிடும். இதன் ஆதாரமனைத்தும் ரிசர்வு பாங்கு எந்த வித லாபப் பங்கீடு பொறுப்பேயின்றி அரசினர் இதற்கெனக் கடன் விதிகள் கொடுக்கக் கூடும். அரசினர் தங்களுடைய சொந்த ரிசர்வு நிதியிலிருந்தும் அல்லது பாண்டு, கடன் பத்திரங்களையும் வெளியிடுசெய்து கடன் பெறக்கூடும். பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டு ரிசர்வு பாங்கு 90 நாள்களில் வெளிக்கடனாகவும் பெறலாம். 5 ஆண்டுகளில் காலாவதியாகும் வர்த்தக மாற்றுண்டியல்களின் ஈட்டின் பேரில் இந்த பாங்கு ரிசர்வு பாங்கியிடமிருந்து கடன்பெறும். இவற்றிற்கும் மேலாகத் தேசியத் தொழில் கடன் (நீண்டகால செயல் முறைகள்) என்ற இ. ரி. பா. (RBI) கடன் நிதியையும் அண்டி அதற்கான பங்கீடுகளைப் பெறலாம். இக் கடன் நிதியை இ. ரி. பா. (RBI) தமது லாபத் தொகைகளிருந்து அரசினருக்கு மாற்றும் முன்னரே ஒதுக்கி வைக்கக்கூடும். இதர நிதி நிறுவனங்களிலிருந்து பங்குகளை முதலீடுசெய்யவும் அவற்றின் மூலம் அதிகப்படி நிதி ஒதுக்கங்களைப் பெற்று அதன் வழியே தொழில்களை ஊக்குவிக்கப் பயன்படுத்த வழிசெய்கிறது.

மத்திய அரசினர் இடும் பருவத்தையும் நிபந்தனைகளையும் அனுசரித்து இந்த பாங்கு அந்நியச் செலாவணியில் கடன்கள் பெறலாம், தொழில்களின் தேவையையொட்டி இதன் ஆதாரங்களை அவ்வப்போது பலப்படுத்தப்படுகிறது. பொதுக் கடன்களை

வர்த்தக அமைப்பின் கீழ் பாங்குகள் கொடுக்க இயலாதபோது இந்த நிதியிலிருந்து எளிதாகத் தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழியளிக்கலாம். மேலும் இந்த நிதியை இ. தொ. வ. பா. (IDBI) நிருவகிக்கிறது.

பாங்கினுடைய அலுவல்கள்:— இ. தொ. வ. பா. (IDBI) தொழில் துறையில் பெருமளவில் நிதி உதவியளிக்க வேண்டிய காரணத்தால் இது எல்லா நிதி வழியளிக்கும் நிறுவனங்களுடைய செயல்களை ஒன்ருகக் கண்காணித்து அதன் முடிவாகக் கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றிருந்தாலும் இல்லாவிட்டாலும் தனியார் துறையிலிருப்பினும் இல்லாவிடினும் மற்றும் வேறு சட்டத்தின் கீழ்ப் பதிவு பெற்றிருப்பினும்கூட இதனுடைய உதவியைப்பெறும் எனலாம். இந்தியத் தொழில் நிறுவனக் கார்ப்பரேஷன், இராச்சிய நிதிக்கார்ப்பரேஷன்கள், அட்டவணைப் படுத்தப்பட்ட பாங்குகள் இராச்சியக் கூட்டுறவு பாங்குகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களுக்கு இப்பாங்கு உதவியளிக்கக் கூடும். 3 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகளுக்குள்ளாக கெடு வைக்கப்பட்ட கடன் உதவிகளுக்கு நிரப்பு நிதி கொடுக்க முன் வருகிறது. ஏற்றுமதிக் கடன் முறையிலும் ஆறு மாதங்களுக்குக் குறையாதும் பத்து ஆண்டுகளுக்கு மேற்படாமலும் இருக்கக் கூடியவற்றிற்கு நிரப்பு நிதிவசதி அளிக்கப்படும். இராச்சியக் கூட்டுறவு பாங்கு, அட்டவணைப் படுத்தப்பட்ட பாங்குகள் கொண்டுவரும் கழிவு நீக்கிய உண்டியல்களின் மீது நிரப்பு நிதி வசதி செய்கிறது. நேரிடையே வரும் உண்டியல்களைத் தள்ளுபடி கொடுத்து நிதி உதவிசெய்து வருகிறது. கூட்டுப் பங்குகள் வெளியீட்டின் தருணத்தில் ஈட்டுறுதி செய்ய எந்த நிறுவனமும் முன்வராத போது நிரப்புநிதி நிறுவனம் அவ் வசதியை அளிக்க முன் வரலாம். புதிய தொழில்கள் ஆரம் பிக்கத் தேவையான தொழில் நுட்பத்தை செர்மானிய நாட்டு பாங்குகள் அளித்து வருவதைப் போன்று இந்த பாங்குகூட, முன் வரலாம்.

சிறு தொழில் நிறுவனங்களுக்காகக் கொடுக்கப்படும் கடன்களை உத்திரவாதம் செய்யத் திட்டம்:—இந்தியாவில் சிறு தொழில்களுக்கு முன்பணக் கடன் வசதியை அளிக்கக் கூடிய நிறுவனம் தோன்ருதது பெருங்குறையே. அத்தொழில்கள் நசித்து, பணம் திருப்பப்படுவதில்லை என்ற காரணத்தால் பெரும் நட்ட பயம்கொண்டு பாங்குகள் சிறுதொழில்களுக்குப் பணவசதி செய்ய முன் வருவதில்லை. 1959 ஜூலை மாதத்தில்ரிசர்வு பாங்கு நடத்திய "சிறு தொழில்களுக்கான நிதியமைப்பு" என்ற கருத்தரங்கில்

சிறு தொழில்களுக்கு பாங்குகள் கடன் வசதியளிப்பின் அவற்றின் நிமித்தம் ஏற்படும் நட்ட பயத்தைப் பகிர்ந்துகொள்ள வேறு நிதி நிறுவனங்கள் இருக்கவேண்டும் என்ற முடிவு தெரிவிக்கப் பட்டது. இந்த முடிவை அனுசரித்து, நிதி நிறுவனங்கள் சிறு தொழில்களுக்குக் கட்டுப்பாடின்றித் தாராளமாக நிதிவழங்குதல் வேண்டும் என்ற நோக்குடன் இந்திய அரசு ரிசர்வு பாங்கியைக் கலந்து, சிறு தொழில்களுக்குக் கடன் வழங்க ஓர் உத்தரவாதத் திட்டத்தை ஏற்படுத்தி அதை 1960ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதி அமுலாக்கியது. கடன் உத்தரவாதத் திட்டத்தின் நோக்கம் வருமாறு: சிறுதொழில்களுக்குக் கடன் வசதியளித்து அதன் விளைவாக திரும்பப்பெற இயலா நட்ட பயத்தை நீக்கிக் கடன் கொடுக்கும் நிறுவனங்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்து அதன்மூலம் நிறுவனக்கடன் முறையை பெருக்க எண்ணியது. இம்மாதிரியான நட்டத்தை இந்திய அரசினரும் கடன் வசதி யளிக்க முன்வரும் நிறுவனங்களும் பகிர்ந்துகொள்ள வேண்டியது. இவ்வுத்தரவாதத் திட்டத்தின் கீழ் எந்த ஒரு முன் பண வசதி 1 லட்சத்திற்கு மேற்படக்கூடாது. "உத்தரவாத நிறுவனம்" என்ற பெயரின் கீழ் ரிசர்வு பாங்கில் இந்த அலுவலகம் அரசினரின் பதிலாளாகப் பணியாற்றி வருகிறது. இதற்கான எல்லா அலுவல்களையும் ரிசர்வு பாங்கினுடைய தொழில் நிதிக் கிளை பம்பாய் நகரில் இருந்து கண்காணித்து வருகிறது. காலத்தையும் பருவத்தையும் ஒட்டி இத்திட்டம் படிப்படியாக இந்திய நாடு முழுவதும் பரப்பப்பட்டது.

தற்போதுள்ள நிலைமையில் சிறுதொழில்களுக்கு குறிப்பிட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்குகள், இராச்சியக் கூட்டுறவு பாங்குகள், இராச்சிய நிதிக் கார்ப்பரேஷன்கள், சென்னை நிதி முதலீடு கார்ப்பரேஷன் லிமிடெட், மற்றும் இதர இராச்சிய பாங்குகள் மட்டும் சிறுதொழில்களுக்கு முன்பண வசதியளிக் கின்றன. இவ்வுத்தரவாதத் திட்டத்தின்கீழ் இவை உத்தர வாதம் பெறுகின்றன. ஏதேனும் ஒரு நிதி நிறுவனம் இத்திட்டத் தின்கீழ் உதவியளிக்கும் நிறுவனமாக ஏற்றுக் கொண்டிருப் பினும், மேலும் எந்த ஒரு முன்பண வசதியிலும், அது 25% தொகை கொடுத்திருந்தாலும், அதுவும் மேலும் ஒரேபாங்குகளும் நிதி நிறுவனங்களும்கூட மேற்படி உதவியைப் பெறலாம். இரண்டு அல்லது அதிகமான நிதி நிறுவனங்கள் கூட்டாக ஒரு முன்பண வசதியளிப்பதை மேற்கொள்ளலாம்.

இத்திட்டத்தின் உதவிபெறும் பொருட்டுச் சிறுதொழிலுக் கான இலக்கணம் கூறப்பட்டுள்ளது. சிறுதொழில் எனப்படு

வது மூலதன முதலீடாகவும், குடிக் கூலிக்கென கொண்ட தொழிற்சாலையுடன் தொழிலாளர்களுக்கென இருப்பு வசதி அவர்களுக்கு அளிக்கப்படும். சௌகரியங்களைக் கணக்கெடுக்காது ரூ. 5 லட்சத்திற்குள் இருந்தும், உற்பத்தி, பதனம் செய்தல் இவைகளில் ஏதேனும் ஒன்றுவது பொறுக்கி எடுக்கப்பட்ட மாவட்டம் ஏதேனும் ஒன்றில் இருக்க வேண்டும்.

1960ஆம் ஆண்டு ஜூலை மீ 1-ம் தேதி முதல் அனுமதிசெய்யப்பட்ட முன்பணங்களுக்கெல்லாம் இவ்வுத்தரவாத முறையின் கீழ் கணக்கெடுத்துக் கொள்ளப்படும். இத்தேதிக்குமுன்னர் கொடுக்கப்பட்ட முன்பண வரலாறு செம்மையாக இருப்பின் புதுப்பிக்கப்பட்ட முன்பணவசதி இயல்பாகக் கொடுக்கப்படும். முன்பண வசதி இவைகளை ஏற்றுக்கொண்டு உத்தரவாதம் அளிக்கப்படும். பணிக்கான மூலதனம் அசையாப் பொருள்களும் தளவாடங்களும் வாங்குவதற்காகக் கொடுக்கப்படும் முன்பணங்களுக்கு உத்தரவாதம் உண்டு. அவ்வுத்தரவாதம் பெற்ற முன்பணம் கோரியபோது திருப்பப்பெற வேண்டும். அல்லது குறிப்பிட்ட காலம் வரை கெடுவு கொடுக்கப்படும். முன்பணம் கொடுக்கப்பட்டும் அல்லது அனுமதி செய்யப்பட்ட பின்னரும்கூட உத்தரவாதம் அளிக்கப்படும். முன்பணம் கோரிப்போடப்படும் மனு முதன் முதலில் ஓராண்டுக் காலத்தை யுடையதாகவும், அதற்கும் நீண்ட காலத்ததாய் இருப்பின் முன்பண உதவி அளிக்கும் நிறுவனத்தின் விருப்பத்திற்கேற்ப காலம் அல்லது பருவம் தீர்மானிக்கப்படும். உத்தரவாத காலம் எக்காரணத்தை முன்னிட்டும் முன்பணம் கொடுத்த நாள் முதல் ஏழாண்டுகளுக்குமேல் அதிகரிக்கக்கூடாது. உத்தரவாத காலத்தை முதலாவதாக ஆறு மாதகாலத்திற்கு மேற்படாமல் அவ்வப்போது அதன் அடுக்காகவே நீட்டிக்கொண்டு போய் முன்கூறிய ஏழாண்டுக் காலத்தை மீறக்கூடாது.

உத்தரவாத ஈட்டுறுதிக்கான கட்டணம் பெருமளவில் கொடுக்கப்பட்ட முன்பணத் தொகையில் ½ சதவிகிதம் வசூலிக்கப்பட்டு, உத்தரவாதம் தொடங்கும் முன்னரே உத்தரவாத நிறுவனத்திடம் இக்கட்டணத்தைச் செலுத்தி விடவேண்டும். இத்திட்டத்தை செவ்வனே நடத்துவதற்காகப் பரிசோதனைக் காலத்தில் கட்டணத்தை மிகவும் குறைத்தும், தொழில்களுக்கும் சிறுதொழில்களுக்கும் மேன்மேலும் நிதியை அதிகரிக்க என்னென்ன ஏற்பாடுகள் உள்ளன என்று ஆய்ந்து முடிவு செய்யப்படுகிறது. ஓராண்டைவிட அதிகமுள்ள பருவக்காலக் கடனுக்குக் கொடுக்கும் உத்தரவாதத்திற்கான கட்டணத்தைத்

தவணைகளில் செலுத்தலாம்; கடன்கொடுத்த எந்த நிறுவனமும், உத்தரவாதம் பெற்ற முன் பணமாக இருப்பின் உத்தரவாதத்தை நிறைவேற்றும்படி கோரலாம். உத்தரவாதம் காலவதியாகும் 15 நாள்களுக்குள்ளாகக் கெடுத்தவறிய கடன்களின் விவரத்தைத் தகவலாக வெளியிடலாம். கடனை வசூலிக்க வேண்டி ஈட்டின் மீதும், சட்டமுறையிலும் நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கடன் கொடுத்த நிறுவனம் சான்றிதழ் கொடுக்கவேண்டும். கடனைத் திருப்ப வசூல் செய்யும் பொறுப்பு, உத்தரவாதத்தைப் பெற்ற பின்னர் கடன் தரும் நிறுவனத்தையோ அல்லது உத்தரவாதநிறுவனம் பணிக்கும் முறையில் வசூலிக்கவேண்டும். இத்திட்டம் எம்முறைகளில் முன்பணம் தருதல் வேண்டும், எவ்வாறு ஈடுகளைக் கோரவேண்டும், என்ன பருவக்காலத்தில் திருப்பப்படவேண்டும் என்று கூறவில்லை, கடன் வசதியளிக்கும் நிறுவனங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப ஈடு, கிடைக்கும் லாபநிலுவை வட்டி வீதம் இவற்றை ஒப்பந்தப்படி அமைத்துக் கொள்ளலாம்.

பாங்கு சட்டத்தின் பரிணமம்

பாங்கு சட்டத்தின் பொருள் :— பாங்கு வர்த்தகத்தைத் தனிப்பட்ட முறையில் இதர வகையான வர்த்தகங்களிலிருந்து பிரிக்குமளவில் தனிப்பட்ட சட்டமுறை இந்தியாவிலும் இல்லை, இங்கிலாந்திலும் இல்லையெனலாம். இதர வணிகத்துறைகளில் ஈடுபட்டவர்கள் என்னென்ன பொதுச்சட்டவரம்பினுள் நடக்க வேண்டுமோ அச் சட்டமனைத்தும் பாங்கு நடத்துபவரைக் கட்டுப்படுத்தும். அதே போன்று தனிநபர்பால் தீங்கிழைக்கும் சட்டம், குற்றம் புரிவதான சட்டம் இவைகளுக்கு அனைவரும் கட்டுப்பட்டிருப்பதுபோல பாங்கு வர்த்தகரும் கட்டுப்பட வேண்டியது. பாங்குத்தொழிலுக்கான சட்டத்தைத் தெரிந்து கொள்ளும் முன்னர் இந்தியாவிலும் இங்கிலாந்து நாட்டிலும் பாங்கு சட்டம் எவ்வாறு உருவாகியது எனச் சுருக்கி வரைவோமாக. இந்திய பாங்குச்சட்டம் எனப்படுவது பொதுவாக ஆங்கில நாட்டுப் பாங்குச்சட்டத்தை அனைத்தும் தழுவாது ஓர் அளவில் ஒட்டியிருப்பதால் ஆங்கில நாட்டுச் சட்டத்தின் தோற்றுவாய், அதன் வரலாறு அனைத்தும் நாம் இங்கு அறிந்து கொள்ள முற்படுவோம்.

வியாபார (வர்த்தக)ச் சட்டம் :— பாங்குச் சட்டமெனப் படுவது வர்த்தக அல்லது வியாபார சட்டத்தின் ஒரு பகுதி இதை லெக்ஸ் மெர்ச்சடோரியா (Lex Mercatoria) எனப்

பண்டைக்காலங்களில் கூறிவந்தனர். பதின்மூன்றும் நூற்றுண்டில் வர்த்தகர்கள் அன்றுடம் நடைமுறையில் கொண்டிருந்த பழக்க வழக்கங்களே வர்த்தகச்சட்டமாக உருபெற்றது. இப்பழக்க வழக்கங்களை நீதிமன்றங்கள் பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொண்டன. நாளடைவில் இவை பொதுச்சட்டப் பகுதி களாக அடைந்தன. நாளாவட்டத்தில் புதிய புதிய கொள் கைகளும் இவற்றுடன் சேர்க்கப்பட்டன. மாற்றுண்டியல்களில் உத்தரவு பெற்றவர்களுக்குப் பணம் கொடுப்பதும் அந்தச் சுவடியின் பின்புறத்தில் கையொப்பமிட்டு மாற்றிக்கொடுப்பது 17ஆம் நூற்றுண்டு காலம் தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. 1694ஆம் ஆண்டு பாங்கு ஆஃப் இங்கிலாந்தை தோற்றுவிப்பதற்கான முதல் பாங்குச்சட்டம் அமுலாக்கப் பட்டது. ஆயினும் அநேகர் இதை முதலாவதாகத் தோன்றிய பாங்குச்சட்டமாக இருக்குமா என ஐயுறுகின்றனர். பாங்கு ஆஃப் இங்கிலாந்தைத் தோற்றுவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு தனி சட்டம். மேலும், அவ்வமயம் பொதுவாக நிலவிவரும் பாங்குச்செயல் முறைகளைப் பற்றியோ அல்லது கண்காணித்தோ இதில் விவரப்படுத்தப்படவில்லை. பத்தாண்டுகளுக்குப் பின்னர் மாற்றுண்டியல்களுக்கு மட்டும் வழங்கப்பட்டிருந்த மாற்றுரிமை முறை 1704-ல் ஆன் காலத்து சட்டப்பிரிவுகள் 3 & 4-ன் கீழ் பிராமிசரி நோட்டுகளும் வழங்கப்பட்டன. 1708-ல் எல்லா பாங்குகளும் பெற்றிருந்த பணத்தாள் வெளியீட்டுரிமை பிடுங்கப்பட்டு பாங்கு ஆஃப் இங்கிலாந்திற்குமட்டும் ஏகபோக உரிமையாக மாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து 1826-லும் 1833–லும் சட்டங்கள் இயற்றப்பட்டன. இச்சட்டங்கள் பாங்கு வர்த்தகத்தின் ஒருசில பகுதிகளைமட்டும் கண்காணிக்கின்றனவே ஒழிய பொதுவாக பாங்குத் தொழில் முழுமையும் கவனிக்கப் படவில்லை. 1836–ல் "பெருமளவில் தொழில்புரியும் கூட்டுப் பாங்கு வர்த்தகம் கட்டுப்பாடின்றி நாட்டின் நிதி நிலைமையை ஆக்கிரமித்து வருவதை உடனே கவனித்துக் கட்டுப்படுத்த வேண்டும்" என்று சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. 1841ஆம் ஆண்டு உருவான சட்டம் (1) புதிய பாங்குகளுக் கான செலுத்தப்பட்ட மூலதனம் இன்னதெனவும், (2) அவை திறக்கப்படுவதற்காக அனுமதியைக் குறித்தும், (3) இயக்குநர்கள் நான்காண்டுகளுக்கு ஒருமுறை ஓய்வு பெறுதல் வேண்டும், ஓய்வு பெற்றவர் மறுமுறை ஓராண்டுகூட தேர்ந்தெடுக்கப்படக் கூடாது, (4) பாங்குகள் தங்கள் பங்கின் ஈட்டின் கடன் கொடுத்தல் கூடாது, (5) பாங்குகளின் ஐந்தொகைக் குறிப்பு களை மாதமொரு முறை வெளியீடு செய்தல் வேண்டும் என்றும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

மான்ஸ் ஃபீல்ட் பிரபுவின் முடிவான தீர்ப்பு

தொழில்புரட்சியின் காரணமாகத் தொழிலும் வர்த்தகமும் வெகுவாக முன்னேற்றமடைந்தன. பெருவாரித் தொழில்கள் தொடங்கப்பெற்றவுடன் கடன்வர்த்தகமும் அதிகரித்தது. கடன் வர்த்தகத்தால் நாட்டின் பொருளாதாரநிலை செம்மையாகியது. அவ்வமயம் பாங்குத்தொழில் சட்டம் **நீதிபதி - உருவாக்கிய - சட்டம்** எனக் கூறினல் மிகையாகாது. பாங்கு நடத்துமுறைகளிலும் வர்த்தக முறைகளில் தொன்றுதொட்டு இருந்துவந்த பழக்கவழக்கங்களை ஏற்றுக்கொண்டு நீதிபதிகள் தங்கள் முடிவுகளைக் கூறிவந்தனர் எனலாம். ஆங்கில வர்த்தகச் சட்டத்தின் வரலாற்றில் பெரும்பெயருடன் திகழ்பவர் திரு. மான்ஸ்ஃபீல்டு பிரபு (அன்னருடைய வாழ்க்கை விவரச்சுருக்கம் இன்ஸ்டிடியூட் ஆஃப் பாங்கர்ஸ் ஜர்னல் (Institute of Bankers' Journal) பக் 443-444) ஐப் பார்க்க. வெகுவாக முன்னேற்றமடைந்த ஐரோப்பிய நாடுகளில் நிலவிவரும் பாங்கு, வர்த்தகப் பழக்கவழக்கங்களை ஆய்ந்து அதன் அடிப்படையில் இங்கிலாந்து பாங்கு நடத்தும் சட்டமும் வர்த்தகசட்டமும் தோற்றுவித்தார். அவர் காலமான பிறகும்கூட இவருடைய தீர்ப்புகளையும் சட்டமுடிவுகளையும் விவாதத்திற்கும் சர்ச்சைக்கும் இடமின்றி வல்லுநர் கூற்ருக ஏற்றுக்கொள்ளப்பட்டு இதுகாறும் சட்டமாக திகழ்ந்து வருவது தெரிந்ததே பின்னர் உருவான அநேக வர்த்தக சட்டங்களை மான்ஸ் ஃபீல்டு பிரபு மற்றும் இதர நீதிபதிகளும் கொடுத்த தீர்ப்புகளையொட்டி அமைத்தனர். எடுத்துக்காட்டாக மாற்றுண்டியல்கள் சட்டம் திரு. மான்ஸ்ஃபீல்டு பிரபுவின் தீர்ப்புகளை யொட்டியே உருவாக்கப்பட்டது. நீதிபதி மான்ஸ் ஃபீல்டு பிரபு அவர்களோ வழிவழியாக வந்த வர்த்தக பாங்குப் பழக்கவழக்கங்களை அனுமதித்தே தீர்ப்புகளைக் கூறியுள்ளார். எனவே, இங்கிலாந்து பாங்குச்சட்டம் எனப்படுவது பாங்கு நடத்துவோர் இதுகாறும் கடைப்பிடித்தொழுகிய செயல் முறையே.

இந்திய நாட்டில் :— சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகர்களில் வாணிபம் செய்துவந்த ஆங்கிலேய வர்த்தகர்களின் நலனைக்கோரியும், அவர்கள் நாட்டுச்சட்டங்களை கையாளும் நீதிமன்றங்களுக்குச் செல்லமறுத்ததால் இந்நாட்டிற்கென்று முதன்முதலாக வர்த்தகச்சட்ட மசோதாவைக் கொண்டு வந்தனர். அக்காலங்களில் இந்தியாவில் தனிநபர் சட்டங்களை அமுலாக்குவதே ஒருதனிப்பட்ட முறையாக நடந்து வந்தது எனலாம். தனிநபர் சடடங்கள் அவரவர்களுடைய மதக்கோட்பாட்டை யொட்டியே அமுலாக்கப்பட்டது. இந்திய நாட்டில்

நடைபெறும் வர்த்தகத்தை ஆங்கில நாட்டு வர்த்தகச்சட்ட அடிப்படையில் தான் இருக்க வேண்டுமென்று ஆங்கில நாட்டுப் பாராளுமன்றம் முடிவுசெய்தது. இராசதானித் தலைநகரங்களில் இச்சட்டம் அமுலாக்கப்பட்டது. அதனால்தான் பிரதான நகர்களிலும் கிராமப்பகுதிகளிலும் சட்டத்தில் பேதம் உள்ளதைக் காண்கிறோம். 1753ஆம் ஆண்டு பட்டயத்தின்படி இம்மூன்று பெருநகர்களிலும் ஆங்கிலவர்த்தகச் சட்டமும் இதர சட்டங்களும் அமுலாக்கப்பட்டன. மேலும் இச்சட்டம் இந்நாட்டவரான சுதேச இந்தியரைக் கட்டுப்படுத்தாது. ஆயினும் இருசாராரும் இதற்கு இசைந்து கொண்டால் இச்சட்டத்தின் கீழ் தீர்ப்புக்கொடுக்கலாம்.

பொதுப்படையாக விவாதிப்பின், மாற்றுரிமை உண்டியல்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் நீதிமன்றங்களில் வழக்கில் வராது. ஆயினும் வழக்கிடுபவர்கள் ஐரோப்பியர்கள் ஆவர். இந்நாட்டவராயின் இந்துக்களாயிருப்பின் இந்து சட்டமும் முகம்மதியர்களாயிருப்பின் அவர்களுடைய மதக்கோட்பாட்டையும் அனுசரித்து வழக்கு தீர்க்கப்பட்டது. வழக்கில் ஈடுபட்டவர் பல்வேறு மதத்தினர்களாக இருப்பின் பிரதிவாதியின் மத சம்பிரதாயப்படி வழக்கு விசாரித்து தீர்ப்பு அளிக்கப்படும். உண்டியல்களைப்பற்றிக் கூறியுள்ள இந்து சட்டத்திலும் அல்லது முகமதிய சட்டத்திலும் வர்த்தகமுறைகளைப் பற்றியாதும் கூறவில்லையாதலால் அக்காலத்தில் பழக்கவழக்கத்தில் இருந்து வந்த முறைகளையே நீதிமன்றங்கள் அனுசரித்து முடிவுகூறின. உண்டியல்கள் மாற்றுண்டியல்களை (Bill of Exchange)ப் போல எழுதியிருப்பின் அதில் சம்பந்தப்பட்ட நபர் இந்நாட்டவராயினும் கூட ஆங்கிலச்சட்டம் அமுலாக்கப்படும் சட்டங்கள் 9, 10 உவல்லியம் 111 17சி(C) இவை மாற்றுண்டியல்களுக்கு எதிர்ப்புக்கூறல்முறை 3, 4 ஆன் 8cயின்படி பிராமிசரி நோட்டுகளும் இந்தியாவில் நடப்பில் உண்டு. அவை மாற்றுரிமையாகக் கருதலாம் எனக் கூறியுள்ளது.

இந்தியாவில் சட்டமியற்ற முயற்சிகள் :— மாற்றுண்டியல்களையும் பிராமிசரி நோட்டுகளையும் கட்டுப்படுத்தும் வகையில் சட்ட எண் 6, 1840ஆம் சட்டஎண் 5, 1866 மூலம் இந்தியாவில் தக்க முயற்சிகள் முதன் முதலில் தொடங்கப்பட்டன. 1866-ல் வந்த இந்தியச் சட்ட ஆணைக்குழு மாற்றுண்டியல்களுக்கான சட்டத்தைத் தயார் செய்து ஓர் ஆண்டு கழித்து கவுன்சிலின் சபையில் மசோதா கொண்டுவரப்பட்டுச் சட்டமாக மாற்றப்பட்டது. இந்நாட்டு வியாபாரிகள் தெரிவித்த எதிர்ப்பின் காரணத்தால் இச்சட்டம் ஆங்கிலச்சட்டத்தின் அடிப்படையில்

இருந்த போதிலும் அநேக மாற்றங்களுடன் வெளிவந்தது. எனவே, இதை உருவாக்கின குழு இந்நாட்டு முறைக்கேற்ப மாற்றியமைத்தது. திருத்தப்பட்ட மசோதா உயர் நீதிமன்றங்கள், உள்நாட்டுச் சர்க்கார், இதர நீதிமன்றங்கள் முதலியவிடங்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களுடைய முடிவுகளைத் தெரிந்து பின்னர் ஒரு பொறுக்கி யெடுக்கப்பட்ட குழுவினரிடம் அனுப்பப்பட்டது. 1880-ல் இருந்த இந்தியநாட்டு விவகாரச் செயலர் இதை இன்னொரு புதிய இந்தியச்சட்டக் குழுவினரிடம் கொடுத்து மாற்றம் செய்ய உத்தரவிட்டார். புதிய கமிஷன் இதில் மாற்றம் ஒன்றும் செய்யாது புதிய சேர்ப்பாக உண்டியல்களைப் பொறுத்த மட்டில் உள்ளூர்ப் பழக்கத்தைக் கடைப்பிடித்தல் இன்றியமையாதது என்று பரிந்துரைத்தனர். இங்கிலாந்திய மாற்றுண்டியல் சட்டம் நிறைவேற்ற ஓர் ஆண்டு முன்னதாக 1881-ல் இது சட்டமாக அங்கீகாரம் பெற்றது.

இந்தியச் செலாவணி முறிச்சட்டம் 1881 :— உள்நாட்டுப் பழக்கவழக்கங்களையும் நடைமுறைகளையும் இந்தியச் செலாவணி முறிச்சட்டம் ஏற்றுக்கொள்ளுகிறது. (பிரிவு 1 இந்தியச் செலாவணி முறிச்சட்டம் 1881) இது இந்தியா முழுவதுக்கும் ஏற்படுத்தப்பட்ட சட்டம். ஆயினும் இந்திய மொழிகளில் எழுதப்பட்ட மாற்றுண்டியல்களில் பழக்கமாக இருந்து வரும் முறைகளை மாற்ருது ஏற்றுக்கொள்ளுகின்றன.

சட்டத்தைப் பற்றிய குறைபாடுகள் :— உள்ளூர் பழக்க முறைகளையேற்றுக்கொள்ளுவதாகக் கூறும் சட்டம் முறிஎழுதப்படும் ஊரிலுள்ள முறையைக்கொள்ளுவதா, முறிக்கென்று பணம் கொடுக்கப்படும் ஊரிலுள்ள பழக்க முறையைக் கொள்ளுவதா என்று விளக்கமாகச் சட்டத்தில் எங்கும் விவரப்படுத்தப்படவில்லை. இந்த முறியில் ஈடுபட்டுள்ள நபர்களின் உள்ளக் கிடக்கையை அறிந்து அதற்கேற்ப முடிவு செய்யலாம். சர். ஹென்றி சால்மர் மாற்றுண்டியல் முறிச்சட்டத்திற்கென்று எழுதிய உரையின் (நான்காவது பதிப்பில்) 53ஆம் பக்கத்தில் அயல்நாட்டு முறிகளில் கைக்கொள்ளும் முறைகளை விவரித்துக் கூறியுள்ளார். இவற்ருல் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணயியலும். எல்லா மாற்றுண்டியல்களைப் பற்றி இச்சட்டம் கூருததால் இதற்கு மாற்றுண்டியல்கள் சட்டம் என்று கொடுத்த தலைப்புத்தவருனது. இதனுல்தான் இங்கிலாந்தில் இதை வரையறுத்து மாற்றுண்டியல் சட்டம் (Bill of Exchange Act) மாற்றுண்டியல் முறிச்சட்டத்திற்கான பீடிகையில் "பிராமிசரிநோட்டு செக்கு, மாற்றுண்டியல்கள், இவற்றுக்கான இலக்கணத்தைக்

கொடுத்தும் அவை மாற்றுரிமை பெற்றனவா இல்லையா என்றும் திருத்தம் செய்ய இச்சட்டம் கொண்டுவரப்பட்டது'' என்றுள்ளது. இன்றைய நிலையிலும் பல்வேறு திருத்தங்கள் ஏற்பட்டுள்ள இச்சட்டம் அனைத்தும் ஒருங்கேயமைந்த சட்டம் எனக்கூற இயலாது. இச்சட்டம் அமலாக்கியது முதல் உள்ள நிலைமை வருமாறு: சட்டப் பிரிவுகளில் தனிப்பட்ட முறையில் வரும் கூறுகளை இந்திய நீதி மன்றங்கள் கவனிக்கா. சட்டத்தின் வன்மையான அமைப்பினின்று இடறி வர்த்தகச் சட்டத்தின் ஐயப்பாடுள்ள பகுதிகளில் ஆழ்ந்து உழலக்கூடாதென்று கட்டுப்படுத்தப்படுகின்றன. சட்டப்பிரிவுகளை அமைக்கும்போது இம்மாதிரியான கண்டிப்புத்தன்மை இருக்க வேண்டியது முறையே எனினும் சிற்சில சமயங்களில் ஐயம்தோன்றும் பொருளைக் கொடுக்கிறது. (தி நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமென்டல்ஆக்ட், எழுதியவர் பாஷ்யம் அண்ட் அடிகா)

பாங்கியல் சட்டமுறையிலுள்ள பேதம் :— ஆங்கில நாட்டு பாங்குத் தொழில் முறைச்சட்டம் இந்தியாவில் நிதானமாக ஐக்கியமானபோது ஒரு சமயம் சில மாறுதல்கள் தோன்றின எனலாம். சிறிதுகாலம் முன்னர்வரை ஆங்கில நாட்டு மக்கள் பாங்குகளை நடத்திவந்ததால் இந்தமாறுதல்கள் விபரீதமாக வெளியாயின. ஆங்கில பாங்கு நடத்துமுறையில் தேர்ச்சிபெற்றவராதலின் அவர்கள் அக்கொள்கைகளைப் புகுத்தி இந்தியக்கொள்கைகளைத் தெரிந்து கொள்ளாமலும் இருந்தனர். பம்பாய் உயர் நீதிமன்றத்தில் நடந்த டோஸாபாய்க்கு எதிர் விரசந்த என்ற வழக்கில் கொடுத்த தீர்ப்பு மாறுதல்களை அறுத்தெறிந்தது இவ்வழக்கின் தகவல் நுணுக்கமாவது—செக்குத்தாளில் அச்சடித்துள்ள வைத்திருப்போர் (Bearers) என்ற வாசகத்தை அடித்து அதற்குப்பதிலாகப் "உத்தரவுபடி (Order) என்ற வாசகம் அதன்மீது எழுதிவிடப்பட்டால் அம்மாதிரி பெற்றவரின் மாற்றுரிமை என்ற கேள்வி எழுப்பப்பட்டது. பம்பாய்நகரில் இங்கிலாந்தில் நடைமுறையிலுள்ளது போன்று அம்மாதிரி மாற்றி எழுதப்படாவிடினும் உத்தரவிற்குக் கொடுக்கப்பட்டது என்று அனுமதித்துவிடுவார்கள். இதற்கான சாட்சியங்களைக் கூறியும் கூட, அந்நிலையில் சட்டமுறையில் அவ்வாறுன கொள்கை கூறப்படாத காரணத்தால் செக்கிற்கு மாற்றுரிமை கிடையாது என அனுமதியிட்டுத் தீர்ப்பளித்தார். மாற்றுண்டியல் சட்டத்திற்கும், பாங்குத் தொழில் நடை முறையிலுமிருக்கும் இந்த விபரீதமானதும், இடரானதுமான வாசகங்கள் திரு. வி. ஜே. பட்டேலின் விடாமுயற்சியால் எடுத்து விளக்கப்பட்டு 1919-ல் வந்த மாற்றுண்டியல் முறிச்சட்டத்தின் திருத்தம் வெளியாகிறது.

அதேபோன்று கோடுகள் வரையப்பட்டு செக்குத்தாள்கள் பிற பாங்குகளிலிருந்து வசூலிக்கப்பட்டன. கணக்கிலேயே வரவு வைக்கப்படுபவைகளுக்கு இங்கிலாந்து நாட்டில் பாங்குநடத்துவோர்க்குப் போதிய காப்பளிப்பதுபோன்று இந்நாட்டில் கவனிக்கப்படவே இல்லை, கேட்பாரும் இல்லை, ஆயினும், ஆசிரியர் இந்திய அரசினரின் பார்வைக்கு இந்தகவலை எட்டவைத்து அதன் பலனாகச் சட்டம் திருத்தப்பெற்றது.

பாங்கு நடத்துவோர் புத்தகச் சான்றுசட்டம்:—பாங்கு நடத்துவோர்களை யனுசரித்து உண்டான மிகவும் தேவையான சட்டம் பாங்கு நடத்துவோர் புத்தகச்சான்று சட்டம் 1891. இதன்படி பாங்கு நடத்துபவர் சான்று கூறத்தமது கணக்குப்புத்தகங்களை நீதிமன்றத்தில் கொண்டுவர வேண்டியதில்லை; அதற்குப்பதிலாக அந்தத்கணக்கின் நகல் தயார்செய்து அதன் படிவத்தைச் சான்றிதழுடன் காட்டினால் போதும் (பிரிவு 5 பாங்கு நடத்துவோர் புத்தகச்சான்று சட்டம் 1891) பாங்கு அலுவலகத்தில் எழுதப்பெற்றுவரும் கணக்குப்புத்தகங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்ற முறையை நீதிமன்றம் மேற்கொள்ளுவதில்லை. கணக்குப் படிவங்கள் சீரானமுறையில் பாங்கு வைத்துக்கொள்ளுவதில்லை என்ற நோக்கமேற்படின் பாங்கு உத்தரவிடலாம். ஏஃப். ஜி. ப்ரைஸ் எதிராகச் சக்கிரவர்த்தி (அ. இ. ரி. 1937 லாகூர் 160) என்ற வழக்கில் லாகூர் உயர்நீதி மன்றத்தில் ஏற்பட்டமுடிவின் படி நீதிமன்றத்தின் ஆணையின்றிப் போலீஸ் வழக்குகளில் போலீசார் ஆய்விற்கு பாங்கு நடத்துவோர் தங்கள் கணக்குப் புத்தகங்களை அவர்கள் வசம் ஒப்புவித்தல் வேண்டும். இதன் சட்ட நுணுக்குமாவது பாங்கு நடத்துவோர் புத்தகச்சான்றுச சட்டத்தின் 5-வது பிரிவின் கீழ் பாங்கு நடத்துவோர்க்கு சட்டப்படி எடுத்துள்ள நடவடிக்கையினின்று காப்பு அளிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான காப்பு போலீஸ் விசாரணையின் போது உண்டா என்பதுதான் உயர்நீதிபதி ஸ்கெம்ப் (Skemp) போலீஸ் விசாரணையின் கீழ் இந்தச்சட்டப் பிரிவு 5 செல்லாது, பாங்கு நடத்துவோருக்குக் காப்பு இல்லை என்று விளக்கினர். போலீஸ் விசாரணை எனப்படுவது சட்டநடவடிக்கையாகாது. இந்தியக் கிரிமினல் நடைமுறை விதித்தொகுப்புகளின் 94-வது பிரிவின் கீழ் பாங்குகளை விலக்காக்க இந்தியச் சட்டமன்றம் சொல்லவில்லை. இவ்விதித்தொகுப்பின்கீழ் பம்பாய், கல்கத்தா நகர் எல்லைக்கப்பாலுள்ள எந்தப் போலீஸ் அதிகாரியும் எழுத்து மூலம் போலீஸ் நடவடிக்கைக்கு வேண்டிய எந்த நபரையும் அவர் நடத்தும் தொழில்சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜிகளை உடனே கொண்டுவந்து காட்டி அவர்களுடைய ஆய்விற்குவிட

வேண்டும் எனக் கட்டளையிடலாம். சுருங்கக்கூறின், போலீஸ் நடவடிக்கை எனப்படுவது சட்ட நடவடிக்கையில் பாங்கு நடத்துவோர் புத்தகச்சான்றுச் சட்டத்தில் உள்ள "சான்று" என்ற பதம் சட்ட விளக்கத்தில் பொருள் தரும் சான்றே ஒழிய போலீஸ் நடவடிக்கையைக் குறித்ததன்று ; பெருமளவில் இந்தத் தீர்ப்பின் விளக்கத்தைக் கொடுத்துள்ளோம். காரணம் யாதெனில் பாங்கு நடத்துவோருக்குச் சட்டமுறையில் அளிக்கப்பட்ட காப்பு குறுக்கப்பட்டது. மேலும், அங்கிலேயில் இப்பொருள் கொண்டுவரலாகூறிலிருந்து இம்பீரியல் பாங்கு ஏஜெண்டு போலீஸ் அதிகாரிகோரிய புத்தகங்களைக் கொடுக்க மறுத்தார். போலீஸ் அதிகாரி பாங்கின் மீதுதக்க நடவடிக்கை எடுத்து உயர்நீதி மன்றத்தில் அவருக்குச் சாதகமாக முடிவு செய்தது.

யேதையாகிய உயர்நீதிபதி அவர்களுக்கு நன்மதிப்பளித்தும் அவருடைய தீர்ப்பின் விளைவாக பாங்கு நடத்துவோர் புத்தக சட்டத்தின் வேர்ப் பகுதியை இது ஆட்டி வைத்துவிட்டது எனலாம். பாங்கு நடத்துவோரை அவதிக்குட்படுத்தாது எளிதில் செயல் புரியவே இச்சட்டம் இயற்றப்பட்டது. ஆயினும் போலீஸ் அதிகாரிகள் கட்டளைக்கு அடிபணிந்து புத்தகங்களை காட்ட வேண்டும் என்பதால் இந்தச் சட்டத்தின் நோக்கமே தவிடுபொடியாகி விடுகிறது. நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்வது போல சட்டத்தின் 7வது பிரிவின் கீழ் போலீஸ் அதிகாரிகளும் சான்றிதழ் பெற்ற கணக்குப் படிவங்களைக் கோரித் தங்களுடைய ஆய்வுகளை ஏன் நடத்தக்கூடாது? இங்கிலாந்து நாட்டில் ஒரு வாடிக்கைகாரரைப் பற்றிய தகவல் தேவையென்று போலீஸார் கோரினால் அத்தகவல் கொடுப்பது பாங்கு நடத்துவோரின் விருப்பத்தைப் பொறுத்ததே அன்றிக் கட்டளையிட முடியாது (பாங்கர்ஸ், இன்சூரன்ஸ் மானேஜர்கள் அண்ட் ஏஜண்ட்கள் மாகஸீன் ஜூன் 1939 பக். 9877 பம்பாய் கல்கத்தா நீங்கலாக இதர இடங்களிலுள்ள பாங்கு நடத்துவோர்களும் இச் சட்டத்தினின்று விலக்குப் பெறச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். பாங்கு நடத்துவோரைத் தனிப்பட்ட முறையில் நடத்த வேண்டியதின் காரணம் என்னவெனில் அவ்வப்பொழுது போலீஸ் நடவடிக்கை என்று பாங்கு அலுவலகத்தில் புகுந்து கணக்குப் புத்தகங்களைத்தரும்படி போலீஸ் அதிகாரிகள் கட்டளையிட்டால், பாங்கு நடத்துவோர் தம் தொழிலைச் செய்ய முடியாது தவிக்க நேரிடும். எனவே, பாங்கு சட்டம் எனப்படுவது பொதுவாக பாங்குகளை நடத்த வேண்டிய விதி எனக் கூறலாம். அது பாங்குத்தொழில் அனைத்தையும் கட்டுப்படுத்த வல்லது எனக்கூறின் மிகையாகாது.

சட்டமியற்றுவதற்கான இன்றியமையாத நிலை :— முன் விவரித்தபடி இந்தியாவில் பாங்குத் தொழிலைக் கட்டுப்படுத்தியும் குறிப்பாக பாங்குக் கம்பெனிகளைக் கட்டுப்படுத்திக் கண்காணிப்பதற்கான தனிப்பட்ட சட்டம் இதுவரை உருவாகவில்லையென்று கண்டு கொண்டோம். அண்மைவரையிலும் இந்திய பாங்குக் கம்பெனிகளின் நிலை இரங்கத் தக்கதாகவே இருந்தது. எனவே பாங்குக் கம்பெனிகள் அனைத்தையும் ஒரே நோக்குடன் கண்காணித்தும் மேற்பார்வையிட்டும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் ஒருங்கே அமையப்பெற்ற சட்டம் ஒன்று கொண்டு வரவேண்டும் என்று பலர் வற்புறுத்தியதின் காரணமாகத் தோன்றியது எனலாம். குறை கூறுபவர்களில் சிலர் பாங்குக் கப்பெனிகள் சட்டம் வரின் அது பாங்குகளுக்குத் தீங்கு இழைக்குமேயன்றி நன்மை பயக்கவல்ல முறையில் அமையாதென்று குற்றம் சாற்றினர். மேலும், கூட்டுப்பங்கு பாங்குகள் முன்னேற்றமின்றி பின்தங்கக் கூடுமென்றும் வருந்தினர். ஆயினும் இந்தியப் பொது மக்களின் ஏகோபித்த முடிவு என்னவெனில் தற்போது உள்ள கம்பெனிச் சட்டம் மேன்மேலும் வளர்ச்சி பெற்று முன்னேறும் பாங்குக் கம்பெனிகளைச் செம்மையான முறையில் கண்காணிக்கப் போதுமான வன்மை இல்லையென்றும் அதை விரைவில் திருத்தியமைக்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர். இந்திய அரசினருக்கு இரண்டு வழிகளே இருந்தன எனலாம். அவை (1) தனிப்பட்ட பாங்குச் சட்டத்தை உடனே பிரகடனம் செய்வது, (2) நடைமுறையில் உள்ள கம்பெனிச் சட்டத்திற்குத் திருத்தப் பிரிவுகளைச் சேர்த்து அவற்றின் மூலம் பாங்குத் தொழிலைக் கட்டுப்படுத்துவது. இந்திய மத்திய பாங்கு விசாரணைக் குழு (Indian Banking Enquiry Committee) சரியான வழியில் நன்கு ஆலோசனை செய்து தனிப்பட்ட பாங்குச் சட்டத்தை உருவாக்கி அதன் மூலம் பாங்குத் தொழிலில் உள்ள பல துறைகளையும் நன்கு ஆய்ந்து சீரான முறையில் கட்டுப்படுத்தலாம் என்று கண்டுகொண்டனர்.

இந்தியக் கம்பெனிகள் சட்டம்: அவ்வமயம் இருந்த இந்திய அரசினர் பின்னால் கூறிய இரண்டாவது முறையைக் கடைப்பிடித்தனர். அதன் விளைவாக 1931–ஆம் ஆண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் XA பகுதியின்கீழ் பாங்குகள் சம்பந்தப்பட்ட தொழில்கள் அனைத்தையும் விளக்கிக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கூறியுள்ளனர். அப்பொழுதிருந்த சட்ட உறுப்பினர் அடுத்த சட்ட சபையின் மூலம் பாங்குகளுக்கான சட்டத்தைச் சமைப்பது அவ்வளவு எளிதான செயல் இல்லை. எனவே, இம்முறையைக் கடைபிடிக்க நேரிட்டது என்று கூறினர்.

அப்பொழுதிருந்த அரசினர்பாங்குகளில் தலையிடா முறைமையைக் கையாண்டது தெரிந்ததே. இங்கிலாந்தில் உள்ள பழக்கத்தையே கொண்டிருப்பினும் கூட அம்முறை இந்தியாவிற்கு உகந்தது அன்று எனலாம். இங்கிலாந்தில் தோன்றிய கூட்டுப் பங்கு பாங்குகள் ஒரு நூற்றாண்டு காலமாகப் பணியாற்றி வந்துள்ளது. ஆயினும் இந்தியாவிலோ கூட்டுப்பங்கு பாங்கு முறை குழவிப் பருவத்தைக்கூடத் தாண்டவில்லை. எந்த இரு பருவங்களிலோ நாடுகளிலோ ஒரேசீராக பாங்குத்தொழில் வளர்ச்சி மாற்ற மேதும் இன்றி முன்னேறவில்லை. எடுத்துக்காட்டாக இங்கிலாந்து நாட்டில் பாங்குகள் பெற்ற வளர்ச்சி அதை அடுத்துள்ள ஸ்காட்லாந்திலும் கூடஅதேபோன்று முன்னேறவில்லையென்று கூறினால் மிகையாகாது.

1939ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாங்கு மசோதா உருவில் பல கொள்கைகளைத் திரட்டி மத்திய அரசினருக்கு ஒரு பரிந்துரைபோன்று அனுப்பியது. பொது நோக்கை அறிய வேண்டி மத்திய அரசினர் இந்தமசோதாவைச் சுற்றறிக்கையாகப் பலவிடங்களுக்கு அனுப்பினார்கள். இக்கொள்கைகளின் குறுகிய கோட்பாடு என்னவெனில் ரிசர்வு பாங்கு சட்டத்தின் அடிப் படையில் நாடு முழுமைக்கும் கடன் வசதியைச் சீராகப் பரப்பியும் பாங்கு நிறுவனங்கள் அனைத்தையும் ஒரே முறையில் கட்டுப்படுத்தியும் நாட்டின் நிதிநிலையைச் செம்மைப்படுத்தியும் பாங்குத்தொழிலை வன்மைப்படுத்தியும் ஊக்குவிக்கவே எனலாம். இக்கொள்கைகளின் தனிப்பட்ட சிறப்பு முறைகள் வருமாறு:— முதலாவதாக இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1913-ன் 277-எஃப் பிரிவில் கொடுக்கப்பட்ட பாங்குத் தொழிலின் இலக்கணத்தை எளிய முறையில் சுருக்கிக்கூறுதல் வேண்டுமென்றும் மேற்படி சட்டத்தின் 277 ஜி (1) பிரிவின் கீழ் ஏற்பட்ட பொருத்தமின் மையை நீக்க வேண்டுமென்றும் அதாவது 1937ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் தேதிக்கு முன்னால்தோன்றிய நிறுவனங்கள் தங்கள் பாங்குகள் என்று கூறிக்கொண்டாலும் சட்டப்பிரிவுகளின் படி நடந்து கொள்ளாமல் இருப்பதைக் கண்டிக்க வேண்டும் என்பதும், இரண்டாவதாக இந்த மசோதா ஒவ்வொரு பாங்கும் தனது சொத்துக்களில் ஒருகுறிப்பிட்ட சதவிகிதத்தை அனுமதிக் கப்பட்ட முதலீடுகளில் இடவேண்டும், என்பதும், பாங்கு முதலீடுகள் சம்பந்தமான கட்டுப்பாடுகளை எதிர்நோக்குவது இந்திய வைப்பாளர்களின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டி அயல் நாட்டில் இணைப்புப் பெற்ற பாங்குகளின் மீது கட்டுப்பாட்டைக் கொணர்வதும், பாங்கு கம்பெனிகளை எளிதில் கலைப்பதற்கான முறையும் இந்த மசோதாவில் காணப்பட்டுள்ளன.

அப்பொழுதிருந்த இந்திய அரசினர் தமது கால நேரம் முழுவதையும் யுத்தத்தில் ஈடுபடுத்திய காரணத்தாலும் ஒற்றுமையற்ற முடிவுகளைப் பலர் கூறிய காரணத்தினுலும் இந்த மசோதா கைவிடப்பட்டது. தற்காலிகமாக நடப்பிலுள்ள சட்டத்திற்கு அவ்வப்பொழுது திருத்தங்களைக் கொண்டுவந்து குறைந்த அளவில் சட்டசபையின் நேரத்தைச் செலவு செய்து, இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1913-ன் தனிப் பகுதியாக பாங்கு நடத்துவதற்கான பிரிவுகளாக இணைக்கப்பட்டன. முதன் முதலாவதாக ரிசர்வு பாங்கு கூறியபடி 277 எஃப் பிரிவைத் திருத்திப் புதிய பிரிவைப் புகுத்தி அதன்படி பாங்கு நடத்துவோர், பாங்குத்தொழில் என்ற வார்த்தைகளைச் சேர்த்தும், பாங்குக் கம்பெனியாக இருக்க வேண்டுமென்றும், அது நடப்பு வைப்புகளைப் பெற்றும், இதரமுறைகளைப் பழக்கத்திலிருத்தியும், செக்குத்தாளின் அடிப்படையில் பணம் கோரப்படின் கொடுக்க வேண்டியது என்றும் கூட்டி எழுதப்பட்டது. திருத்தப்பட்ட மசோதா 1943ஆம் ஆண்டு நவம்பர் மீ 1ம் தேதிக்கு அமலுக்கு வந்தது. 1944ஆம் ஆண்டு மார்ச்சு மீ பல்வேறு திருத்தங்களுடன் கூட்டி அமைக்கப்பட்டு மற்றும் பிரிவுகள் 277 எச் 277 ஐ இவை இரண்டும் 1913ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தில் ரிசர்வு பாங்கியின் பரிந்துரையை ஒட்டி ஏற்பட்டவை. மூலதன அமைப்பில் பல்வேறு வேண்டாத முறைகளைக் கண்டதாலும், பாங்கு நடத்து முறைகளில் தவருன வழிகளைக் கையாளுவதைத் தடுக்கவும், குறிப்பாக யுத்தத்திற்குப்பின் தோன்றிய பாங்குகளைக் கட்டுப்படுத்தவே இவை எழுதப்பட்டன. 1944ஆம் ஆண்டு ஜுலை மீ 1ம் தேதி முதல் பாங்கு நடத்துவதற்கு முகமை இல்லங்களை ஏற்படுத்தக் கூடாது. அல்லது எந்த நபரின் ஊதியம் பகுதியாகவோ முழுவதாகவோ லாபப் பங்காகவோ கமிஷனுகவோ இருக்கக்கூடாது. பாங்கு நிறுவனத்தை நடத்த எந்த நபருடனும் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்குமேல் ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடாது. இயக்குநர் குழுவின் விருப்பத்திற்கேற்ப ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் மறுமுறை தொடர்ந்து இருக்கலாம். அவர்கள் தொடர்ந்து ஒப்பந்தம் செய்து கொள்ளுவதென்பது இயக்குநர் குழுவின் விருப்பத்தைப்பொறுத்தது. 1937ஆம்ஆண்டு ஜனவரி மீ 15ம் தேதிக்கு முன்னர் இணைப்புப் பெற்ற கம்பெனிகளாக இருப்பின், கீழ்க்கண்ட விவரங்களைக் கவனித்தல் வேண்டும்:—

(1) அதிகாரம் பெற்ற மூலதனத்தில் பகுதிக்குக் குறைவாகச் செலுத்தப்பட்ட மூலதனம் இருக்கக்கூடாது.

(2) மூலதனம் சாதாரணப் பாங்குகளாகத்தான் இருக்கலாம். 1944ஆம் ஆண்டு ஜூலை 1ம் தேதிக்கு முன்னராயின் சலுகைப்பங்காக இருக்கலாம்.

(3) செலுத்தப்பட்ட மூலதனத்தில் பங்குதார செலுத்திய மூலதனப்பங்கு என்ன விகிதத்தில் அமைந்துள்ளதோ. அந்த அளவில்தான் அவருக்கு வாக்குரிமை உண்டு.

1949ஆம் ஆண்டு பாங்குக் கம்பெனிகள் சட்டம் இவையனைத்தையும் ஒருங்கேதிரட்டி, சட்டத்தைத் திருத்தி அமைந்துள்ளது. இரண்டாம் அதிகாரத்தில் பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949-ல் அவ்வப்போது திருத்தங்களுடன் வெளியிட்டதைவிளக்கியுள்ளது. இதில் சட்டமன்றததின் முறைகளும் வரலாற்று விவரங்களும் மட்டும் கூறப்பட்டுள்ளன.

2. பாங்கு கம்பெனிகள் சட்டம்

அதன்பெரும் ஷரத்து தொகுப்புகள்

வரலாறுகள்:— பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949ன் முக்கியப் பிரிவுகளை விளக்கப் புகுமுன்னர் இந்தச் சட்டம் எவ்வகையில் உருவாகி எத்தகைய மாற்றங்களுடன் இணைக்கப் பெற்று பாங்குக் கம்பெனிகளை எவ்வகையில் சீர்திருத்த முற்படலாம் என்றே அமைக்கப்பட்டது. சில பாங்குகளை நடத்தி வந்த ஒரு சிலர் தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தையும் சலுகைகளையும் தவருன முறையில் கையாண்டதன் விளைவாக வைப்புதாரர்களின் நலன்களைப் பாதிக்கத் தொடங்கியது. குறிப்பாக நாட்டின் பொருளாதார நிலை மோசமாகத் தொடங்கியது.

இந்தச் சட்டம் இந்தியக் கம்பெனிகள் சட்டத்திற்குச் சேர்ப் பிணையாக அமைந்துள்ளது. இதிற்காணும் பிரிவுகள் எவ்விதத்திலும் இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1956ஐனக் குறைக்கும் தன்மையானதன்று. வேறு சட்டங்களையும் இது பாதிக்காது. (பிரிவு 2) எடுத்துக்காட்டாக, இந்தியக் கம்பெனிகள் சட்டம் பிரிவு II (1)ஐக் கவனிப்போம் எந்தக் கம்பெனியோ, சங்கமோ, பதின்மருக்கு மேலமையாத கூட்டு வர்த்தகமோ கம்பெனியாகப் பதிவு செய்யாவிடின் பாங்குத் தொழிலைச் செய்ய முடியாது. மேற்கூறிய விவரம் பாங்கு கம்பெனிகள் சட்டத்தில் கிடையாது. எனவே பாங்கு கம்பெனிகள் நடத்த விரும்புபவர் இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1956 பிரிவு II (1)ன் படி நடக்கவேண்டும். அதேபோல் பாங்கு வர்த்தகத்தைப் பாதிக்கும் இதர சட்டங்கள்; எடுத்துக் காட்டாக, செலாவணி முறிச் சட்டம் போன்றவை 1881, விளக்கமாகக் காக்கப்படுகிறது. ஆதலால் பாங்கு

கம்பெனிகள் சட்டம் பாங்கு தொழிலைக் குறித்துக் கவனித்து வருகிறது. எல்லா பாங்கு நியமனங்களையும் ஒரே சட்ட புத்தகமாக கோத்து எழுதப்படவில்லை எனலாம்.

முக்கியப் பிரிவுகள்:— கீழே கொடுக்கப்பட்ட தகவல்களை மட்டும் இந்தச் சட்டம் கண்காணித்து வருகிறது. பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்றுக் கோரியபோது திருப்பித் தரவும், கடனுக்குக் கொடுக்கவும், முதலீட்டிலிடவும் வர்த்தகம் புரியும் கம்பெனிகள் மட்டும் இந்தச் சட்டத்திற்குட்படுகின்றன. (பிரிவு 5 (பி)யும் (ஸி)யும்) பாங்கு கம்பெனிகள் நடத்தும் வர்த்தகத்தின் அமைப்பைக் குறித்து இலக்கணம் கூறுகிறது: பிரிவு 6 பாங்கு வர்த்தகம் புரியும் நிறுவனத்தைத் தவிர இதர நிறுவனமோ, நபரோ, "பாங்கு" "பாங்கு நடத்துபவர்" அல்லது "பாங்கு கம்பெனி" என்ற பதத்தை தத்தம் பெயருடன் இணைத்துக்கொண்டு வர்த்தகம் செய்தல்கூடாது — பிரிவு 7. பாங்கு கம்பெனிகள் பாங்குத் தொழிலல்லாத இதர வகையான வர்த்தகத்தில் ஈடுபடக்கூடாது. குறிப்பாக, நிருவாகப் பதிலாளாகவோ (Managing Agent) செயலாளராகவோ, பொருளாளராகவோ பணியாற்றக்கூடாது. இத்தடுப்பின் மூலம் பாங்கு வர்த்தகமல்லாத இதர வர்த்தகத்தால் ஏற்படும் நட்டப் பயத்தைக் (risk) குறைத்து விடுகிறது—. பிரிவுகள் (6) பி யும் (8) ம் பாங்கு வர்த்தகத்தில் நிருவாகப் பதிலாளையும் (Managing Agent) மற்றும் சிலவகையான நியமனங்களையும் செய்யக்கூடாதென்று தடையுத்திரவு இடுகின்றன—பிரிவு 10: செலுத்தப்பட்ட மூலதனமும், ஒருங்கே கூடிய ஒதுக்கி வைக்கும் (ரிசர்வு) நிதியும் இன்ன அளவில் குறைந்தபட்சம் இவ்வளவென்று வரையறை யிடுகிறது.— பிரிவு 11: ஒரு சிலரின் பிடிப்பில் பாங்கு கம்பெனிகள் நடத்தப்பெற்று அதன் காரணமாகப் பங்குதாரர்கள் அவதியுறக்கூடாது.—பிரிவு 12: ரிசர்வு பாங்கு உத்திரவு இட்ட இரண்டு மாதங்களுக்குள்ளாக பங்குதாரர்களைக் கொண்டு பொது மீட்டிங் (கூட்டம்) நடத்தி அதில் வாக்குரிமை யனுசரித்து இயக்குநர்களைப் பொறுக்கச் சொல்லுமாறு செய்ய அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது — பிரிவு 13: முதலாக்கம் பெற்ற பெருஞ் செலவினங்கள் நட்டங்கள், புலனுள்ள சொத்துக்களால் காப்பீடு அளிக்காச் செலவினங்கள் இவைகள் அனைத்தையும் கொடுத்துக் கழிந்த பின்னர்தான் லாப ஈவு (Dividend) கொடுக்கலாம் என்கிறது.— பிரிவு 15: செலுத்தப்படா மூலதனத்தின் மீது புதிய கடன் சுமையையேற்றி வைப்பதைத் தடுக்கிறது.—பிரிவு 14ஐ பிரிவு 14 ஏ: ஒதுக்கிவைக்கும் (ரிசர்வு) நிதியை உருவாக்கி பாங்கு வர்த்தகத்தைச் செம்மையாக்கவும் ரொக்கச் சேமிப்பை

(ரிசர்வை) உண்டாக்கவும் ஏற்பாடு செய்கிறது—பிரிவுகள் 17ம் 18ம்: பொது இயக்குநர்களையும் நெறியாளரையும் தேர்ந்தெடுக்கக் கூடாதென்று கட்டுப்படுத்துகிறது.— பிரிவு 19: தங்களுடைய பங்குகளின் ஈட்டில் கடன் கொடுக்கக்கூடாதென்கிறது. தாங்கள் அக்கரை காட்டும் கம்பெனி, தனியார் கம்பெனி, கூட்டு வர்த்தக நிறுவனம் இவைகளுக்கும், நெறியாளர்களுக்கும் ஈடில்லாக் கடன் கொடுக்கக்கூடாது என்கிறது. பிரிவு 20: பாங்கிற்குக் கடன்பட்ட நெறியாளர் அந்தக் கடனைத் திருப்பித்தர உள்ள அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகிறது— பிரிவு 20 ஏ: முன்பணம் கொடுப்பதைத் தடுப்பதற்கு ரிசர்வு பாங்கிற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம் ஆகும்.— பிரிவு 21: பாங்குகளுக்கு உரிமம் வழங்கும் முறையை முழுமையும் அமையும் வகையில் விளக்கப்பட்டுள்ளது.— பிரிவு 22: புதிய இடங்களில் தொழில் நடத்தக் கிளைகள் திறக்க வேண்டுவதற்கான கட்டுப்பாடுகள், அதே நகரில் அல்லது ஊரில் கிளைகள் திறக்கப்படலாம் என்பதாம்.— பிரிவு 23: நீர்த்த இருப்புக்கள் இன்ன அளவில் இருக்கவேண்டும் என்று வரம்பிடு கிறது. அயல் நாடுகளில் இணைக்கப்பெற்று இந்தியாவில் தொழில்செய்யும் நிறுவனங்கள் இங்குள்ள தங்கள் பொறுப்புகளை ஈடுகட்ட எவ்வளவு சொத்துகள் வைத்திருக்க வேண்டும் என்றும் வரையறுக்கிறது. பிரிவுகள் 24ம் 25ம் தனிப்பட்ட முறையில் ஐந்தொகை தயார் செய்து வெளியிடல் வேண்டும் என்பது குறித்தும் இதற்கான தணிக்கையைக் குறித்தும் கூறுகின்றன.— பிரிவுகள் 29 முதல் 32 வரை: பாங்குகளின் கணக்குப் புத்தகங்களைப் பரிசீலனை செய்யவும், அவ்வப்போது கோரிய காலத்தில் தத்தம் பாங்கின் அறிக்கைகளைப் பரிசீலனைக்கு அனுப்புமாறு உத்தரவு இடவும் ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. வைப்புதாரர்களுடைய நலனுக்கு விரோதமான முறையில் பணியாற்றிவரும் பாங்குகளைத் தேவைப்பட்டபோது சோதனை நடத்தி, மத்திய அரசினருக்கு அவற்றின் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கத் தனிப்பட்ட உரிமை கொடுக்கப்பட்டுள்ளது—அல்லது மேற்படி பாங்குகளை செம்மை யான முறையில் நடத்துவதற்கான வழிகளை ஏற்பாடு செய்து நிருவாக மாற்றத்திற்கான அமைப்பை உருவாக்குகிறது— பிரிவு 35–ஏ: உணவுப்பொருள்கள் மற்றும் இதரப் பொருள்களின் மீது ஊக வாணிகம் செய்வதைத் தடைப்படுத்த வேண்டி ரிசர்வு பாங்கிற்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. உணவு தானியங்களை பதுக்கி வைப்பதைத் தடை செய்ய வேண்டி, அந்த வணிகர்களுக்கு உணவு தானிய இருப்பின் ஈட்டின்மீது முன் பணமோ கடனோ கொடுக்கக் கூடாதென்று பாங்குகளுக்கு உத்தரவிடுகிறது. முழுநேர நிருவாக நெறியாளரை நியமனம்

செய்வதற்கான சீர்திருத்தச் சட்டம் குறித்தும் கூறுகிறது.—பிரிவு 35 டீ: நிருவாகியையும் இதரர்களையும் நீக்குவதற்கும் புதிய நெறியாளர்களை சேர்ப்பதற்கும் அனுமதி வழங்குதலைக் குறிப்பிடுகிறது. பிரிவுகள் 36 ஏ. ஏயும் 36 ஏ. பியும்:— சடுதியில் பாங்குக் கம்பெனிகளின் தொழிலை நிறுத்தி அவற்றினை மூடுவதற்கான ஏற்பாடுகள் பற்றியவை.—பிரிவுகள் 37 முதல் 44வரை: இராச்சிய பாங்கினைச் சட்டவரம்பினுட்படுத்துகிறது.—பிரிவு 51: தனியார் பாங்குகள் இதுகாறும் அடைந்துவந்த சலுகைகளைக்குறைக்கிறது பிரிவு 49: குற்றம்சாட்டி வழக்குத் தொடரும் முறை, தண்டிக்க வேண்டிய விதி—பாங்குக் கம்பெனிகளைப் பிணைப்பதற்கான நியமங்கள் ஆகியவை — பிரிவு 44 ஏ: சட்டப்படி கடன் வசூலை நிறுத்தி வைப்பது கட்டாயப் பிணைப்பினை வலியுறுத்தலைக் குறிக்கிறது. பிரிவு—45

மூலதனம், தரகு முதலியன:— மூலதனத்தைப் பற்றிய பிரிவுகளை இருபெரும் பிரிவுகளாகக் கூறலாம். அவையாவன: (1) இந்திய நாட்டினுள் இணைக்கப் பெற்றவை, (2) இந்தியா அல்லாத இதர வெளிநாடுகளில் இணைக்கப் பெற்றவை; முதற் பகுதி 4 உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன, (அ) பம்பாய் கல்கத்தா நகர்களில் அலுவலகம் இன்றி ஏதாவது ஒரே இடத்தில் இருப்பது, (ஆ) ஏதாவது ஒரு இராச்சிய முழுவதிலும் அலுவலகங்கள் இருத்தல், ஆயினும் பம்பாய் கல்கத்தா நகர்களில் இல்லாதிருத்தல், (இ) ஏதாவது ஒரு இராச்சிய முழுவதிலும் அலுவலகங்கள் இருத்தல், ஆயினும் பம்பாய் கல்கத்தா நகர்களில் ஒன்றல்லது அதற்கு அதிகமாக கிளைகள் பெற்றிருத்தல், ஆயினும் பம்பாய் கல்கத்தா நகர்களில் இல்லாதிருத்தல். பாங்குத் தொழில் துவக்கம் செய்ய முன்னறிவிப்பாக இடப்பட்ட மூலதனமும் ரிசர்வு நிதியும் இவ்வளவு இருத்தல் வேண்டும் என்று பிரிவு II பாங்கு கம்பெனிகள் சட்டம் கூறுகிறது. எங்கு இணைக்கப்பட்ட பாங்கு கம்பெனியாயினும் IIஆம் பிரிவில் கூறியவாறு நடக்க வேண்டும். சட்டம் வருமுன்னர் துவக்கம் பெற்ற கம்பெனிகளுக்கு மூன்று ஆண்டுக்காலம் கொடுக்கப் பட்டது. ரிசர்வு பாங்கின் உத்தரவின் பேரில் அது இன்னும் ஓராண்டு நீட்டப்பட்டது. இதற்கடுத்த பக்கம் 73ல் பிரிவு IIன் கீழ் உள்ள வகுப்புகளை அட்டவணைப் படுத்தி எளிதில் புரியும் வகையில் காட்டப்பட்டுள்ளது.

பிரிவு 12 அதன் உட்பிரிவுகள் (i) (ii)ன் படி ஒப்பிய மூலதனம் அதிகாரம்பெற்ற மூலதனத்தில் பாதிக்குக் குறையாமல் இருக்க வேண்டும். கொடுக்கப்பட்ட மூலதனம் ஒப்பிய மூலதனத்தில் பாதிக்குக் குறையாமல் இருக்க வேண்டும். மூலதனம் அதிகரித்தால் இவ்விகிதத்தை அடையச் செய்ய ரிசர்வு பாங்கு காலத்தை வரையறுத்து அதிகரிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்கு அதிகமாக இருக்கக்கூடாது. (ஆ) அதன் பங்கு மூலதனம் சாதாரணப் பங்குகளாக இருக்கவேண்டும். 1944ஆம் ஆண்டு ஜுலை 1–ம் தேதிக்கு முன்னரே சலுகைப் பங்குகள் வெளிவிட்டு இருப்பின் தகுதியற்றது எனக் கருதக்கூடாது. பாங்கு கம்பெனியின் அதிகார மூலதனம், ஒப்பிய மூலதனம், செலுத்தப்பட்ட மூலதனம் இவற்றிற்கான விகிதத்தை விளக்குகிறது இந்தப் பிரிவுகள். பொது மக்களைக் கவர்ச்சி செய்து இழுக்கவேண்டி அதிகாரம் பெற்ற மூலதனத்தை பெரிய எண்ணிக்கையில் அச்சடித்துக் காட்டி மிகவும் சிறிய அளவில் கொடுக்கப்பட்ட மூலதனத்தை விளம்பரப்படுத்தாது செய்து வரும் பாங்கு நிறுவனங்களின் செய்கையைக் கண்டித்தனர். இதன்மூலம் பாங்கு நிறுவனத்தை ஊக்குவித்தவர் சிறியபங்குகளை நடுத்தர வகுப்பினரிடம் விற்பனை செய்து அதன் மூலம் மூலதனத்தை அதிகரித்தனர்.

அட்டவணை

மொத்த அளவில் கொடுக்கப்பட்ட மூலதனமும் ரிசர்வுநிதியும் எவ்வளவு தேவை என்பது

			செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வு நிதியும் மொத்த அளவில்
	1.	இந்தியாவில் இணைக்கப்பட்டது	ரூ.
அ.	(i)	இந்தியாவில் இணைக்கப்பட்டு ஒன்றிற்கு மேற்பட்ட இராச்சியங்களில் அலுவலகம் இருத்தல்	5,00,000
	(ii)	மேற்படி இடங்கள் கல்கத்தா பம்பாய் நகரங்களில் ஏதாவது ஒன்றிலிருப்பின்	10,00,000
ஆ.		பம்பாய் கல்கத்தா நகரங்கள் அல்லது ஏதாவது ஒரு இராச்சியத்தில் எல்லா இடங்களிலும் வர்த்தகம் செய்தல்	
	(i)	பிரதான இடத்தில் (பம்பாய் கல்கத்தா நீங்கலாக) ஒரு இராச்சியத்தில் + கூட்டுக	1,00,000
	(ii)	அதே மாவட்டத்தில் ஒவ்வொரு இடத்திற்கும் + கூட்டுக	10,000
	(iii)	மாவட்டத்திற்கு வெளியே ஒவ்வொரு இடத்திற்கும்	25,000
		மொத்தக் கூட்டுத் தொகை	5,00,000
	(iv)	ஏதாவது ஒரே ஒரு இடத்தில்	50,000
இ.		எல்லா வர்த்தகமும் ஒரே இராச்சியத்தில்	
	(i)	ஒன்றும் அதற்கு மேற்பட்டதும் பம்பாய் கல்கத்தா நகர்களில் + கூட்டுக	5,00,000
	(ii)	பம்பாய் கல்கத்தா நகர்களுக்கு வெளியே ஒவ்வொரு இடத்திற்கும்	25,000
		மொத்தக் கூட்டுத் தொகை	10,00,000
	(II)	அயல் நாட்டில் இணைப்புப் பெற்றவை	
	(i)	பம்பாய் கல்கத்தா நகர்களில் கிளையில்லை எனில்	15,00,000
	(ii)	பம்பாய் கல்கத்தா நகர்களில் கிளையிருப்பின்	20,00,000

குறிப்பு :—அயல் நாட்டிலிணைப்புப் பெற்ற பாங்கு நிறுவனங்கள் மேலே கூறிய தொகையை பணமாகவோ அல்லது ஈடு அற்ற அல்லது அடமானமற்ற ஆவணங்களின் உருவில் அல்லது கொஞ்சம் பணமாகவும் கொஞ்சம் ஆபரணங்களாகவும் ரிசர்வு பாங்கில் வைக்கப்படல் வேண்டும்.

பாங்குத் தொழிலிடம் எனப்படுவது பிரதானத் தொழிலிடமல்லாது 25 மைல் தூரத்திற்குள் அமையும் இடம்.

பாங்குத் தொழிலிடம் எனப்படுவது அலுவலகம், துணை அலுவலகம். துணைக் கொடுப்பிடம் அல்லது எவ்விடம் வைப்புகள் பெற்று, செக்குகள் மாற்றித் தரப்படுமோ அல்லது பணம் கடனுகக் கொடுக்கப் படுமோ அவ்விடமாகும்.

பங்கு விற்பனையில் கமிஷன் (தரகு):— பாங்கு கம்பெனிகள் தங்கள் பங்குகளை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ விற்பனை செய்ய கமிஷனே, தரகோ, தள்ளுபடியோ கொடுப்பதைப் பிரிவு 13 தடுக்கிறது. அப்படி இருப்பின் கொடுக்கப்பட்ட மூலதனத்தில் 2½%க்கு மேல் பங்கு மதிப்பில் அதிகரிக்காது கொடுக்கலாம். கம்பெனிச் சட்டம் பிரிவு 76ன்படி கமிஷன் தொகையைக் கட்டுப் படுத்துவதில்லை. ஆயினும் பங்கு வெளியீட்டிற்கு முன்னர் எந்தெந்த வரையரையை சிரமேற்கொண்டு நடத்தவேண்டும் எனக் கூறுகிறது. கம்பெனியின் பங்குகளை 'அதன் மதிப்பில் 10 சதவீதத்திற்கு மேற்படாது குறைத்து விற்கலாம். ஆயினும் பாங்கு கம்பெனியின் சட்டம் 1949 இந்தவிதியை மாற்றி எவ்வளவு கமிஷன் கொடுக்கலாம் என்று கூறுகிறது.

கொடுக்கப்படாத மூலதனத்தின் மீது பொறுப்பேற்றுவதைத் தடை செய்யப்படுகிறது:—எந்த பாங்கு கம்பெனியும் தங்களுடைய செலுத்தப்படாத மூலதனத்தின்மீது கடன் பெற்று அதைப் பொறுப்பிலாழ்த்தக் கூடாது. அவ்வாறாக ஏதாவது செய்யின் அந்தப் பொறுப்பு நிராகரிக்கப்படும்(பிரிவு 14) தங்கள் வருங்கால ஆஸ்தி அல்லது சொத்துக்களின் மீது பொறுப்பேற்றுவதை இந்திய பாங்குகள் நடைமுறையில் செய்வதில்லை. செலுத்தப் படாத மூலதனம் எனப்படுவது வருங்கால ஆஸ்தியைக் குறிக்கும். ஆனபோதிலும், கம்பெனியின் கடன் கொடுத்தவர் அனைவரும் வருங்கால ஆஸ்திகளைப் பெற உரிமையுண்டு. தனிப்பட்ட ஒரு நபருக்கு மட்டும் அதைப் பெற்றுக் கொள்ள உரிமையில்லை.

கம்பெனிகள் சட்டம் 1956ன்படி தன் செலுத்தப்படா மூல தனத்தின் மீது பொறுப்புகளைச் சுமத்தலாம். அவ்வாறுனது கம்பெனி பதிவாளரிடம் தொடக்க நாளிலிருந்து 21 நாட்களுக் குள்ளாகப் பதிவு செய்யப்படவேண்டும். (பிரிவு 125.கம்பெனிகள் சட்டம் 1956)

பிரிவு 14ஏ ரிசர்வு பாங்கு எழுத்தின் மூலம் சம்மதம் தெரிவித்துச் சான்று பகர்ந்தாலன்றி எந்த பாங்கும் தன் வைப்பு தாரர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பாங்கு மேற் கொள்ளும் பொறுப்புகளுக்காக வேண்டி தன் சொத்தனைத்தும் அல்லது ஒரு பகுதியின் மீதோ பொது ஒத்தியாக வைக்கக் கூடாது. ரிசர்வு பாங்கு அனுமதி பெறுது வைப்பின் அது செல்லுபடி ஆகாது.

இதர கம்பெனிகள் பங்குபெற்று வைத்து கொள்ளுதல்:—
பிரிவு 19 கூறுவதாவது

(1) ஒரு பாங்கு கம்பெனி துணை நிறுவனத்தை கீழ்க் கண்ட வகைகளில் அன்றி வேறெந்தக் காரணத்திற் காகவும் தொடங்கக்கூடாது. குறிப்பாக ட்ரஸ்ட்டின் அலுவல்களையும், இறந்தவர் சொத்துகளைப் பரா மரிக்கவும், உயிலில் நியமனம் செய்யப்பட்டவாறு பொறுப்பு எடுத்துக் கொள்ளுதலும் காப்பு அறை களில் பொருளையும் நகைகளையும் பாதுகாக்கவும் ரிசர்வு பாங்கினுடைய முன் சம்மதம்பெற்று நாட்டின் வெளியிலோ, அல்லது பாங்குத் தொழிலுக்கு ஒரு உறுப்பாகவோ அமைய வேண்டும்.

(2) முன் பிரிவில் கூறியபடி எந்த பாங்கு கம்பெனியும் இன்னொரு கம்பெனியில் அடகு பிடிப்போராகவோ அடமான உருவில் பெறுவதாகவோ அல்லது தனி யுரிமை பெற்றவராக அந்த கம்பெனியின் செலுத்தப் பட்ட மூலதனத்தின் 30 சதவீதத்திற்கு மேற்படாமல் அல்லது பாங்கு கம்பெனியின் மூலதனத்தில் 30 சதவீதத்திற்கு மேம்படாமல் இருக்கலாம். இச்சட்டம் தோன்றிய காலத்திலேயே பாங்கு கம்பெனி ரிசர்வு பாங்கிற்குப் பங்கு வைத்துக் கொண்டுள்ள விபரத்தைக் குறிப்பிட்டால் தண்டனை கிடையாது. அவ்வாறுன பாங்குகள் ரிசர்வுபாங்கின் சம்மதம்பெற்று இரண்டாண்டுகளுக்குள்ளாக சட்ட

வரம்பில் இட்டபடி தங்கள் பங்கு விகிதத்தை அமைத்துக்கொள்ள வேண்டியது.

(3) உட்பிரிவு 1ல் சொல்லியது நீங்கலாக, 2வது உட்பிரிவில் கூறியதில் ஏதாவது மறுப்பு உள்ள நிலையில் எந்த பாங்கு கம்பெனியும் இச்சட்டம் தோன்றிய ஒரு ஆண்டு கழிந்த பின்னர் மேற்படி பாங்கு நிருவாகியோ, நிருவாக நெறியாளரோ அல்லது இதர நெறியாளரோ அக்கறை காட்டும் காரணத்தால் பிரிதொரு கம்பெனியின் பங்குகளை அடகு பிடிப்போராகவோ, அடமான ஈட்டில் கடன் கொடுப்போராகவோ பங்குகளை நேரே வாங்கி வைத்துக் கொள்ளவோ அனுமதிக்கப்படுவதில்லை.

இந்தப் பிரிவு பாங்கி கம்பெனிகள், துணைக் கம்பெனி திறப்பதையும், இதர கம்பெனிகளில் பங்கு வாங்குவதையும் தடைப்படுத்துகிறது. பாங்கு கம்பெனிகள் தங்களுடைய தொழிலில் சார்ந்துவரும் ஒரு தொழிலின் நிமித்தம் துணைக் கம்பெனிகளை நடத்தலாம்; ஆயினும் இதைத் தொடங்க ரிசர்வு பாங்கினுடைய உத்தரவும் சம்மதமும் தேவை. கம்பெனிகள் சட்டம் 1956ல் துணைக் கம்பெனிக்கான இலக்கத்தில் பங்குகளை செக்யூரிடி (ஈடு) யாகப் பெற்றுள்ள கம்பெனிகளை மேற்கோளாகக் காட்டப்படவில்லை. அம்மாதிரியான கம்பெனி கடன் கொடுத்தலைத் தொழிலாக மேற்கொண்டிருத்தல் வேண்டும். கம்பெனிச் சட்டத்தின் கீழ் இணைக்கப்படாது பாங்கு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இணைப்புப் பெற்றிருப்பின் கூட அந்த கம்பெனி நெறியாளர் குழுவை அமைத்துக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் இருப்பின் அது கம்பெனிச் சட்டப்படி துணைக் கம்பெனியாகக் கருதப்பட வேண்டும்.

கம்பெனிச் சட்டம் 1956ன் 4வது பிரிவின்படி ஒரு கம்பெனி துணைக் கம்பெனியாகக் கருதப்பட வேண்டுமானல்

(அ) இந்தக் கம்பெனியின் நிறுவப்பட்ட நெறியாளர் குழுவினை கட்டுப்படுத்தப்பட்டால் அல்லது

(ஆ) இந்தக் கம்பெனியின் சாதாரணப் பங்கு மூலதனத்தில் பாதிக்குமேல் அந்த (கட்டுப்படுத்தும்) கம்பெனி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது

(இ) முதலில் பெயரிடப்பட்ட கம்பெனி வேறொரு கம்பெனியின் துணைக் கம்பெனியாக இருத்தல் வேண்டும்.

பாங்கு கம்பெனிகள் சட்டத்தின் 19ஆம் பிரிவில் கூறப்பட்ட இரண்டாவது கட்டுப்பாட்டைக் கவனிக்கவும். ஒரு பாங்கு கம்பெனி எந்த கம்பெனியிலும் பங்குகள் வைத்திருக்கலாம் (அந்தக் கம்பெனி கம்பெனிச் சட்டத்தின்கீழ் முடிக்கக்கூடியதாக அமைதல் நியதி) அவ்வாறு முன்னே சொல்லப்பட்டதில் ரிசர்வு நிதியிலும் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 30 சதவிகித அளவு இருக்கவேண்டும். எனவே ஒரு பாங்கு கம்பெனி அயல்நாட்டு கம்பெனியில் 30 சதவிகிதம் பங்குகள் பெற்றிருப்பதில் தடை கிடையாது. ஆயினும் கணக்காண்டின் இறுதியில் அது 50 சதவிகிதத்திற்கு அதிகம் ஏறக்கூடாது. இப்பிரிவின் உட்கருத்தை நோக்கின் பாங்கு கம்பெனிகள் துணைக் கம்பெனிகள் மூலம் பாங்கல்லாத இதரவகைத் தொழில்களைச் செய்யக் கூடாதென்ற கருத்தைப் பகருகிறது. அல்லது தன் அதிகவிருப்பத்தை ஒரு கம்பெனியில் செலுத்தி வரக்கூடாதெனக் கூறுகிறது. ஒரு கம்பெனியில் அடகு பிடிப்பவராகவோ, அடமானத்தில் ஈடாகப் பெறுபவராகவோ இருப்பவர் பங்குகளைப் பெறக் கூடாதென்று கட்டுப்பாடு உள்ளதே ஒழிய ட்ரஸ்டி என்ற பொறுப்பினராகவோ பதிலாளாகவோ, பொறுப்பு நிருவாகியாகவோ இருப்பவர், இருப்பதைத் தடை செய்யவில்லை,

இந்தச் சட்டம் தொடங்கிய நாளன்று, பிற கம்பெனிகளின் பங்குகளைப் பெருமளவில் சட்டத்திற்குப் புறம்பாக வைத்திருந்தாலும் கூட உடனே ரிசர்வு பாங்கிற்குத் தகவல் தெரிவித்து விட்டு அதிகமாயுள்ள பங்குகளை இரண்டாண்டுக் காலத்தினுள் தள்ளிவிட ரிசர்வு பாங்கு அமனுதிக்கக்கூடும். இது பாங்கு கம்பெனிகள் சட்டம் பிரிவு 19 (1)ல் விளக்கப்பட்டுள்ளது. அப்பிரிவின் மூன்றும் உட்பிரிவில் இந்தச் சட்டம் தொடங்கிய ஒரு ஆண்டிற்குள்ளதாக வேறு ஒரு கம்பெனியின் மீது உள்ள அக்கரை காரணமாக அல்லது நிறுவாக நெறியாளரோ நிருவாகியோ ஈடுபட்ட காரணத்தால் அந்தக் கம்பெனியின் பங்குகளைப் பெற்றோ, அடகுபிடித்து வாங்கியோ அடமானமாகக் கடன்மூலம் பெற்றோ வைத்துக் கொள்ளக்கூடாது. இந்தப் பிரிவின் உட்பிரிவு (1)ல் கூறப்பட்ட துணைக் கம்பெனியின் பங்குகளுக்கு இந்தத் தடையில்லை. ஆயினும் இவ்வோராண்டுக் காலம் தாமாகவே இயல்பாகக் கருதப்படுமா என்றால், அது ரிசர்வு பாங்கு எடுக்கும் முடிவைப் பொறுத்தது எனலாம் "ஈடுபாடு" (Concerned) என்றும் "அக்கரை" (Interested) என்றும் உள்ள வார்த்தைகளுக்குச் சற்று விரிவான பொருள்கள் (Meanings) உள்ளன என்பதைக் காணவேண்டும். பிரிவு 295, மற்றும் கம்பெனிகள் சட்டம் 1956ன் இதர பிரிவுகளானவை

முறையே 297, 299, 300, 301, 302 இவைகளுக்காகத் தக்க முறையில் உரை விளக்கம் செய்யவே அவ்வாறுள்ளன போலும்.

இயக்குநர்கள், நிருவாக முகவர்கள் — இவர்களுடைய அதிகாரங்கள்:—இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1913ன் 277H. பிரிவின்படி இந்தியக் கம்பெனிகள் சீர்திருத்தச் சட்டம் 1936 தொடங்கிய இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக பாங்குக் கம்பெனிகளில் நிருவாக முகவர் நியமனத்தைத் தடை செய்தல் வேண்டும் வேறொரு பாங்குக் கம்பெனியை நியமனம் செய்யலாம். ஆனால் இந்தியக் கம்பெனிகள் சீர்திருத்தச் சட்டம் 1944ல் தன் ஊதியத்திற்காக இலாபத்தில் பங்குகோரியும், பங்குகளைப் பெற விழைந்தும் அல்லது ஐந்தாண்டுகளுக்கு மேல் பணியாற்ற ஒப்பந்தம் செய்து கொள்ளும் நிருவாக முகவர் நியமனத்தைத் தடை செய்கிறது. பாங்கு கம்பெனிகள் சட்டத்தின் பத்தாவது பிரிவில் மேல் கூறிய தகவல்களைக் காணலாம். அதன் விபரம் வருமாறு

10 (1) எந்த பாங்குக் கம்பெனியும்—

(அ) நிருவாகப் முகவரை நியமிக்கக்கூடாது அல்லது நிருவாகம் நிருவாக முகவரால் செய்யப்படக்கூடாது அல்லது

(ஆ) கீழ்க்கண்ட நபரை நியமனம் செய்யவோ தொடர்ந்து உத்தியோகத்தில் வைத்திருத்தல் கூடாது.

(i) மேற்படி நபர் திவாலாக, சட்ட ரீதியாக எவ்வமயமாக இருந்தாலும் அல்லது கடன் பெற்றுக் கடனைத் தீர்க்காது இருந்திருந்தாலும் அல்லது குற்ற வழக்கின் காரணத்தால் குற்ற வழக்கு நீதிமன்றத் தீய நெறிக்காகக் குற்றம் காட்டியிருக்கப்பட்டோ அல்லது

(ii) அவரது ஊதியம் அல்லது ஊதியத்தின் பகுதி இலாபப் பங்காகவோ அல்லது ஒரு பகுதியாக இருப்பின் உட்பிரிவில் வருபவை பாங்கு கம்பெனிகளால் கொடுக்கப்பட்டால் அவை இதன்கீழ் கருதப்படவில்லை.

(அ) தொழில் தகராறு சட்டத்தின் அடிப்படையிலோ அல்லது பாங்குகம்பெனி தன்விருப்பத்திணங்கி விடுத்திட்ட அடிப்படையிலோ

அல்லது நடைமுறையில் பாங்குத் தொழிலை யனுசரித்து ஏதாவது முடிவாகக் கொடுக்கப் படும் போனஸ் என்கிற அதிகப்படி ஊதியம்.

(ஆ) பாங்கு கம்பெனியில் ஊழியராகப் பணி யாற்றுது தனிப்பட்ட முறையில் ரொக்க ஒப்பந்ததாரராகவோ, தரகராகவோ (குறிப் பாக உத்தரவாதத் தரகராகவோ) ஏலமிடுபவ ராகவோ, சரக்கினைக் காலிசெய்து அனுப்பு பவராகவோ இருந்து ஒப்பந்தப்படி பெறும் தரகு அல்லது கமிஷன்

(iii) எவர்க்கேனும் கொடுக்கப்படும் ஊதியம் மிகவும் அதிகப்படியானதென்று ரிசர்வு பாங்கு கருதினல் அல்லது

மேற்படி நபர் ஒருவரால் நியமிக்கப்பட்டால்

(I) அன்னர் இன்னொரு கம்பெனியின் இயக்கு நராக இருந்து

(அ) அப்படி இயக்கப்பட்ட கம்பெனி இதன் துணைக் கம்பெனியாக இல்லாது அல்லது

(ஆ) இந்திய கம்பெனிகள் சட்டம் 1956ன் 25ஆவது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டும்

இந்தத் தடையுத்தரவை விளக்கும் உட்பிரிவு தாற்காலிகமாக உள்ள எந்த இயக்குநரையும் மூன்று மாதம்வரை இருக்கவும் அதற்குமேல் அதிகக் காலத்திற்காக ரிசர்வு பாங்கின் உத்தரவுபெற்றுத் தொடர்ந்து மேலும் 9 மாதங் களுக்கு அதிகப்படாமல் இருக்கவும் அனுமதிக் கிறது அல்லது

(ii) வேருெரு தொழிலில் அல்லது உத்தியோகத் தில் ஈடுபட்டிருந்தும் அல்லது

(iii) கம்பெனியை நிருவகிக்கும் நபராக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு மேலாக இருப்பினும்

மேலே கூறிய நபரின் அலுவலக பதவி மறுமுறை புதுப்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் இருக்கலாம். அவ்வாறு அங்கீகாரம் செய்யப் புதுப்பித்த பதவித் தொடக்கத்திற்கு இரு ஆண்டுகளுக்கு முன்னர்த் தான் செய்யப்படும்.

ஒரு நபரின் அலுவல் பதவி எல்லையற்றும். வரையறையின்றியும் குறிப்பிட்டிருப்பின், வேறு காரணங்களால் முன்னரே முடிவு பெறுதிருப்பின் நியமனங்களிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவடையும்போது பதவி முடிவுபெறும். அல்லது பாங்குகள் சட்டம் (பல்வகைப் பிரிவுகள்) 1963ன் 8வது பிரிவின் கீழ் இச்சட்டம் தோன்றிய மூன்று மாதங்களுக்குள் முடிவடையும் இவ்விரண்டினுள் எந்தக் காலம் பின் வருவதோ அதையே கொள்ளுதல் வேண்டும்.

இப்பிரிவில் கூறப்பட்ட எதுவும் இயக்குநரைப் பாதிக்காது, நிருவாக இயக்குநர் அவர்களைத்தான் கருதி எழுதப்பட்டது.

விளக்கம்: — உட்பிரிவு (iii)ன் (ஆ) என்ற பகுதியில் கூறப்பட்ட "ஊதியம்" பெறும் நபர் அமர்த்தப் பட்டோ அல்லது தொடர்ந்து அமர்த்தப்பட்டோ இருப்பின் அவர்களுக்குக் கிடைக்கும், சம்பளம், கட்டணம் முதலியவற்றைக் குறிக்கும். அவர் பாங்குக்காக கடமையுடன் செலவு செய்த தொகையைத் திருப்பித் தருவதை இந்த இலக்கணத்தில் கொண்டு வரப்படவில்லை.

(2) ரிசர்வு பாங்கு 'ஊதியம் அதிகம்' என்று கருத உட்பிரிவு III (ஆ)வில் கூறியபடி கீழ்கண்ட விபரங்களை ஆராயலாம்.

(i) அந்த பாங்கு கம்பெனியின் தோற்றம், வரலாறு செல்வநிலை, உருவம், அதன் வருமான நிலை

(ii) அதற்கான கிளைகளும், அலுவலகங்களும்

(iii) ஊதியம்கோரும் நபரின் தகுதி வயது அனுபவம்

(iv) இதே அமைப்பைப் போன்ற வேறொரு பாங்கியில் இவ்வளவு தகுதி வாய்ந்த நபருக்குக் கொடுக்கப்படும் ஊதியம்

(v) வைப்புதாரர்கள் காட்டும் அக்கரை

(3) இது சம்பந்தமான உத்தரவோ முடிவோ ரிசர்வு பாங்கு செய்யும். அதே முடிவான உத்தரவு என்று எல்லாத் தகவல்களுக்கும் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

இரண்டல்லது மூன்று பாங்குகளில் உள்ள இயக்குநர் பதவிப் பிணைப்பை நீக்கவும், குயுக்தியான முறையில் பாங்கினுடைய முன்னேற்றத்தைத் தடை செய்யவும் இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பிரிவுகள் கொண்டு வரப்பட்டன. இந்தியாவில் இம்மாதிரியான பிரிவுகள் வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. ஏனென்றால் நடப்பில் எந்தப்பாங்கு கம்பெனியிலும் இவ்வகையான குயுக்தி முறை கையாளப்படவில்லை. பெரிய நாடாகிய ஐக்கிய அமெரிக்க நாடுகளில் கூட—சங்கிலி இணைப்பைப் பெற்ற பாங்கு முறையை எதிர்க்கும் நாட்டில்கூட— இவ்வளவு கட்டுப்பாடுகள் இல்லை. நம் நாட்டில் ஏன் இன்னும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவில்லை என்பது விளங்கவில்லை.

பாங்குக் கம்பெனியின் நிருவாகி அல்லது நிருவாக முகவருக்கு இலாபத்தை அனுசரித்துச் சம்பளம் கொடுத்தலைப் பற்றி எல்லாம் அடங்கிய சட்டப்பிரிவுகள் இயற்றப்பட்டிருப்பதை காணலாம். பாங்கு கம்பெனி தனி நபர்களை நியமனம் செய்யும் போது சில தகுதியற்ற தன்மையைக் கவனிக்க வேண்டும் என்று இயம்புகிறது. சம்பளம் பெறும் ஊழியராக இல்லாத ஒரு இயக்குநரைப் பொறுத்தவரையில் இவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அப்போது கம்பெனிகள் சட்டம் 1956ன் படி கவனிக்க வேண்டும்.

ஒரு வட்டாரத்தில் பாங்குத் தொழிலைப் பெருக்க தனி நபர் ஒருவரை அல்லது ஓய்வுச் சமயங்களில் ஊக்குவிக்கும் பொருட்டு இலாபத்தை அனுசரித்து ஊதியம் கொடுக்கலாமா வேண்டாமா என்று ஐயத்துடன் நோக்க வேண்டியுள்ளது.

பங்குதாரர்களின் உரிமைகள் முதலியன:—பிரிவு 12 உட்பிரிவு 2ன்படி பங்குதாரர் ஒருவரின் வாக்குரிமை, வாக்கெடுப்பின் போது அவர் எவ்வளவு பங்குகளை உடைமையாக்கியிருந்தாலும் கூட அந்த வாக்கெடுப்பில் மொத்த வாக்குரிமையில் ஒரு சதவிகிதம்தான் என்று கட்டுப்படுத்தப்பட்டது. சட்டத்தில் எதிரான விளக்கம் இல்லாவிடினும், ஒப்பந்தமோ அல்லது முறியோ இதற்கெதிராக ஏற்படாவிடினும் ஒரு கம்பெனியின் பதிவான பங்குதாரர்மீது அவரது பங்கு உடைமை தவறென்றும் வேறொருவருடைய பங்கு என்றும் வழக்குத் தொடுக்கக்கூடாது. இந்த உட்பிரிவில் கூறப்பட்ட நபர்கள் தொடுக்கும் வழக்கைத் தடை செய்ய இதில் குறிப்பிடவில்லை. அம்மாதிரியான நபர்கள் (அ) சட்டப்படி நியாயமான மாற்றம் பெற்ற உரிமையாளர் (ஆ) வயது வராதவருக்காகவோ அல்லது பைத்தியம் பிடித்த

வருக்காகவோ பெற்று அவ்விதமாக மாற்றம் பெற்றவர் பாங்கு கம்பெனியின் நிருவாக முறையில் சலுகைகளையும் உரிமைகளையும் பெற வேண்டியும் அதன்மீது சிறிது சிறிதாகக் கட்டுப்பாடுகளைப் பெற இவ்விதம் வழக்கு தொடுப்பதைத் தடுக்கவே இந்தச் சட்டம் உருவாகியது. மேற்படி பிரிவு 87 கம்பெனிகள் சட்டம் 1956ல் உள்ளது.

தனியார் பாங்கு கம்பெனிகள்:—பாங்கு கம்பெனிகள் சட்டம் பிரிவு 49 தனியார் கம்பெனிக்கு ஊகமாகவோ விளக்கமாகவோ அளிக்கப்பட விலக்குகளை எடுத்து விடுகின்றன. கம்பெனிச் சட்டம் 1955ல் உள்ள பிரிவுகள் 90, 165 182, 204, 255, 293, (1) (அ) (பி 300, 348ஏ. 416. பாங்கு கம்பெனிகள் சட்டம் தனியார் கம்பெனிகள் இத்தொழில் நடத்துவதைத் தடை செய்யவில்லை. ஆயினும் கம்பெனிகள் சட்டத்தில் காணப்பட்ட விலக்குகளையும், சலுகைகள் சிலவற்றையும் பிரிவு 49 பாங்கு கம்பெனிகள் சட்டம் நீக்கம் செய்து விட்டது. 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டப்படி தனியார் கம்பெனியின் இலக்கணம்:—

> "தனியார் கம்பெனி" என்பதன் பொருள் கம்பெனி அதன் நிருவாகமுறை பற்றிய விதிகளின்படி, ஏதாவது இருப்பின்

(அ) பங்குஉரிமை மாற்றத்தைக் கட்டுப்படுத்துகிறது

(ஆ) அதன் உறுப்பினர்களை ஐம்பதுக்குள்ளாகக் கட்டுப்படுத்தி

(I) அதில் பணியாற்றுபவரை இவ்வெண்ணிக்கையினின்று நீக்கியும்

(II) அதில் முன்னர் பணியாளராகவும் பங்குதாரராகவும் இருந்து, பணியினின்று நீக்கம் பெற்றவுடன் பங்குதாரராக இல்லாது போனவர். மேலும்

(இ) பொதுமக்களை இக்கம்பெனியில் வந்து பங்கு வாங்கிக் கொள்ளவும், டிபெஞ்சர் என்ற கடன்பத்திரம் வாங்கிக் கொள்ளவும் வருமாறு அழைப்பதைத் தடை செய்யப் படுகிறது.

மேலும் இரண்டல்லது மூன்று நபர்கள் கூட்டாக ஒன்றல்லது அதிக எண்ணிக்கையில் ஒரு கம்பெனியின் பங்குகளைப் பெற்றிருப்பின் மேலே கூறப்பட்ட இலக்கணத்தின்படி அவர் ஒரு தனி உறுப்பினராகக்

கணக்கிடப்படுவார் (பிரிவு 3 (I) (III) கம்பெனிகள் சட்டம் 1956.

பாங்கு அளிக்கும் கடன் வசதிகள்·— பாங்கு கம்பெனிகள் சட்டத்தின் 20ம் பிரிவு வருமாறு:— கம்பெனிகள் சட்டம் 1956ன் 77வது பிரிவில் இதற்கெதிராகக் கூறப்படாது இருப்பின் எந்த பாங்கு கம்பெனியும்

(அ) தன்னுடைய பங்குகளின் ஈட்டின் பேரில் கடனே முன்பணமோ கொடுக்கக்கூடாது.

(ஆ) ஈட்டில்லாக் கடன்களோ முன்பணமோ உதவியாக

(i) தனது இயக்குநர்கள் எவருக்கும் அல்லது

(ii) தனிப்பட்ட கூட்டு நிறுவனங்கள் அல்லது தனியார் கம்பெனிகள் இவற்றில் இதன் இயக்குநர்கள் கூட்டுதாரராகவோ பதிலாள ராகவோ உத்திரவாதம் கொடுப்பவராகவோ அக்கரை காட்டியோ அல்லது தனிநபர்க்கு ஏதாவது இயக்குநர் உத்திரவாதம் அளிப்பின் அல்லது

(iii) வேறெந்தக் கம்பெனிக்கும், மேற்படி கம்பெனி யில் பாங்கு கம்பெனியின் இயக்குநர் குழுவின் தலைவர் (தலைவர் குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் இருப்பின்) அந்தக் கம்பெனியின் தலைவராகவோ, அல்லது இயக்குநர் நிருவாகி யாகவோ, அல்லது நிருவாக முகவராகவோ இயக்குநராகவோ அல்லது கூட்டுதாரராகவோ நிருவாக முகவர் நிருவனத்தில் இருந்து அக்கரை காட்டினல்

மேலே 'ஆ' பிரிவில் இல்லாதவை கீழ்க்கண்ட வகையில் பாங்கு கம்பெனி ஈட்டில்லாக் கடன் கொடுப்பதைத் தடுக்கவியலாது—

(i) சரக்கு வழங்கினதற்கான பட்டியலின் பேரிலும், அரசினர்க்கு ஊழியமும் பணியும் புரிந்ததற்காகவும், வர்த்தகக் கொடுக்கல் வாங்கலின் நிமித்தம் ஏற்பட்ட மாற்றுச் செலாவணி முறியின் காரணமாகவும்

(ii) பாங்கு கம்பெனிக்கு (அறக்கட்டளைப் பற்றுச் சீட்டைக்) ட்ரஷ்ட் ரசீதைகாட்டி அதன் காரணமாகக் கடன் வாங்குதல்

(2) அறிக்கையனுப்பப்பட வேண்டிய மாதத்திற்கு அடுத்துள்ள மாதத் தொடக்கத்தில் ரிசர்வு பாங்கிற்கு விபரம் கொடுத்துள்ள வகையில் ஈடில்லாக் கடன்களும் முன் பணங்களும் கம்பெனிகளுக்கு அளிக்கப்பட்டதைத் (பாங்கு கம்பெனியல்லாது இதர கம்பெனிகள்). தடுக்கப்பட்டு உட்பிரிவு I) ஈடில்லாக் கடன்களும் முன் பணங்களும் இயக்குநர்களின் விருப்பத்திற்கிணங்கத் தங்களுடைய அக்கரையைக் காட்டி தாங்கள் இயக்குநராகவாவது நிருவாகியாகவாவது அல்லது உத்திரவாதகாரராகவாவது இருக்கவேண்டும்.

(3) உட்பிரிவு (2)ஐ பரிசீலனை செய்து அதன் முடிவில் ரிசர்வு பாங்கு அதன்படி ஏதாவது கடனோ, அல்லது முன்பணமோ கொடுத்து அது வைப்புதாரர்களுக்கு பெருத்த கேட்டை விளைவிக்கும் என்று தெரிந்தவுடன் எழுத்துமூலம் அந்த பாங்கு கம்பெனியைக் கடனோ, முன்பணமோ கொடுக்கக்கூடாதென்று தடை செய்து அம்மாதிரி கொடுத்த முன்பணத்தைத் திரும்பப் பெறக் கால வரைறையைக் கூறும்.

தங்கள் இயக்குநர்களுக்கும், அவர்கள் அக்கரை காட்டும் நிறுவனங்களுக்கும் கடன் கொடுப்பதைத் தடை செய்ய வேண்டியது இன்றியமையாதது என்று கண்டு கொள்ளலாம். வெகு காலமாகவே பாங்கு முறிவுகளுக்கு அடிப்படைக் காரணம் இதுதான் என்று கூருமலே விளங்கும். எனவே 1936 ஆம் ஆண்டில் எல்லாவற்றையும் முழுவதையிலும் சீர்திருத்தம் செய்து 1913 ஆம் ஆண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டம் மாற்றம் செய்யப்பட்டது. ஆயினும 1931 ஆம் ஆண்டு பாங்கு கம்பெனிகளின் இயக்குநர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடாது என்று பாங்கு விசாரணைக் குழு கூறியது கூட ஏற்கப்படவில்லை. இதை ஏற்காத காரணமாவது ஒரே அடியாக தடங்கல்களும் கட்டுப்பாடுகளும் விதிக்குதில் அனுபவம் பெற்ற தொழிலதிபர்களின் சேவை கிடைக்கப்பெருது இலாபம் போய் நட்டத்தில் நடக்க ஆரம்பிக்கும்.

இப்போது விதிக்கப்பட்ட தடைகள் வருமாறு ;

(1) பாங்கு கம்பெனிகளின் பங்குகளின் ஈட்டில் கடனே

முன்பணமோ கொடுக்கக்கூடாது முதற் காரண மென்ன வெனில் அவசியம் ஏற்பட்ட காலத்தில் அம் மாதிரியான பங்குகளை விற்றுப் பணமாக்குவது எளிதன்று. இரண்டாவதாகப் பாங்கு கம்பெனியை இழுத்து மூடும் தருவாயில் இம்மாதிரியான செக்யூரிடிகளால் பயன் ஏதும் இல்லை.

(2) தங்களுடைய இயக்குநர்களுக்கோ, கூட்டு நிறுவனங்களுக்கோ, தனியார் கம்பெனிகளுக்கு (இவற்றில் அக்கறை காட்டும் பாங்கு இயக்குநர் களின் விருப்பத்திற்கு வேண்டி) அவர்கள் கூட்டு தாரராகவோ, இயக்குநர்களாகவோ நிருவாக முகவர்களாகவோ இருக்கக்கூடும்) ஈடுகாட்டிய கடனைகவோ அல்லது முன்பணமாகவோ கொடுக்கலாம்.

ஈட்டின்பேரில் கடன் அல்லது முன்பணம் எனப்படுவது அன்றைய மார்க்கெட் விலையில் சொத்துகளின் மதிப்பு, அது ஈடாக அமையும் கடன் அல்லது முன்பணத்தை விடக் குறைவாக இருக்கக்கூடாது. ஈடில்லாக் கடன் அல்லது முன்பணம் எனப் படுவது ஈடுகாட்டாது நபர் ஜாமீனைக் கடன் கொடுக்கப்படுவது.

கம்பெனிகள் சட்டம் 1956ன் 295வது பிரிவின்படி இயக்குநர் களுக்கு மத்திய அரசாங்க முன் சம்மதமின்றிக் கடன் கொடுக்கக் கூடாது என்று தடை செய்துள்ளது. ஆயினும் இப்பிரிவின் 1ம் உட்பிரிவு பாங்கு கம்பெனிகளை அனுசரித்துக் கொடுக்கப்பட வில்லை. பாங்கின் இயக்குநராக இருப்பவர் வேறு ஒரு நிறுவனத் தின் இயக்குநராக இருந்து அந்த நிறுவனத்திற்குக் கடன் கொடுப்பதைத் தடை செய்பவில்லை. ஆயினும் அந்த இயக்குநர் வாக்களிக்க (ஓட்டுபோட) முடியாது. எனவே கம்பெனிகள் சட்டம் 1956ன் 295ஆம் பிரிவை பாங்கு கம்பெனிகள் சட்டம் 1949ன் 20ஆம் பிரிவு கட்டுப்படுத்துகிறது.

பாங்கு கம்பெனிகள் சட்டம்—1949ன் புதிய பிரிவு 20ஏயின் படி, ரிசர்வு பாங்கினுடைய முழு ஆமோதிப்பு அல்லது சம்மதம் பெற்றாலன்றி இதர நிலையில் எந்த பாங்கு கம்பெனியும் தம் இயக்குநர் அக்கரைகாட்டி கூட்டுதாரராகவோ, நிருவாகப் பதிலவராகவோ, தனிநபராகவோ உத்தரவாதம் அளிபப வராகவோ இருந்து அந்த நிறுவனத்தின் பெயரால் கடன் வாங்கி அந்த கடனைப் பகுதியாகவோ முழுதாகவோ தள்ளிக் கொடுக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீர்த்த இருப்பு (ஆஸ்தி)கள் எவ்வளவு சதவிகிதம் வேண்டும்:— *24ஆம் பிரிவு கூறுவதாவது.*

(1) "இச்சட்டம் தோன்றிய இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக ஒவ்வொரு பாங்குக் கம்பெனியும் இந்தியாவினுள் உண்டான நடப்புப் பொறுப்புகள் வர்த்தக ஆய்வு முடிவில் வைப்புப் பொறுப்புகள் இவற்றில் 20 சத விகிதம் ரொக்கமாகவோ, பொன்னுகவோ, அங்கீகாரம் பெற்ற ஆவணங்களின் மீதோ இடப்பட்டு இவை இன்றைய நிலையில் என்ன நடப்பு விலை என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

விளக்கம்:— *இந்தப் பிரிவிற்காக வில்லங்கமற்ற, ஏற்றுச் சம்மதித்த செக்யூரிடிகள் எனப்படுபவை இன்னொரு நிறுவனத்தில் அடமானமாக அல்லது ஈடாக வாங்கிய மூன்பணத்திற்கு வேண்டி அல்லது கடனுக்காக வேண்டி வைக்கப்படாதவை. அவைகளை முன்பணம் பெறுவதற்கோ கடன்களுக்காகவோ பயன்படுத்தப்படவில்லை எனலாம்.*

(2) உட்பிரிவு (1)ன் படி இன்ன தொகை என்று கணக்கிட்டு இரண்டாம் உட்பிரிவு 11வது பிரிவின்படி அயல் நாடுகளில் இணைக்கப்பட்ட பாங்கு கம்பெனிகள் ரிசர்வு பாங்கியில் எவ்வளவு நடப்பு வைப்பு இடவேண்டுமென்றும், அல்லது இராச்சிய பாங்கு அல்லது இதர பாங்கு ஏதாவது ஒன்றில் வைக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசினர் வெளியீடு அறிக்கை விடுவார்கள். ரிசர்வு பாங்கு 1934 ஆம் சட்டத்தின் 42ஆம் பிரிவின்படி அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்குகள் எவ்வளவு ரொக்கம் வைப்பாகப் போக வேண்டும் என்று கூறுகிறது இதையே இந்தியாவினுள் போட்டு வைக்கப்பட்ட ரொக்கம் எனக் கருதப்படலாம்

(2அ) "(அ) பாங்கு கம்பெனிகள் சீர்சிருத்தச் சட்டம் 1962 தொடங்கிய இரண்டாண்டுகளுக்குப் பின்னரே உட்பிரிவு ஒன்றிலும் உட்பிரிவு இரண்டிலும் கூறப்பட்டதுடன்

(i) அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்கு ரிசர்வு பாங்குச் சட்டத்தின் 1934 (2வது 1934) 42 வது பிரிவின்படி தினப்படி சராசரி இருப்பு வைக்கப்பட வேண்டியது

(ii) ஒவ்வொரு இதர பாங்கு கம்பெனியும் 18வது பிரிவின் கீழ் வைக்க வேண்டிய ரொக்க ரிசர்வுடன் இந்தியாவில் ரொக்கமாகவோ, பொன்னாகவோ வில்லங்கமில்லா ஏற்றெடுத்த செக்யூரிடிகள் முதலியவற்றை இன்றைய மார்க்கெட் விலைக்கேற்ப மதிப்பீடு செய்தும் அந்த பாங்குபெற்ற வைப்புகளுக்கான பொறுப்புகளில் 25% அளவில் இருக்க வேண்டும்.

(ஆ) 'அ' பிரிவில் கூறப்பட்டவாறு தொகை கணக்கீடு செய்வதற்கான முறை.

(i) அயல் நாட்டில் இணைப்புப் பெற்று இந்தியாவில் தொழில் செய்யும் பாங்கு 11வது பிரிவின் 2வது உட்பிரிவிற்கிணங்க ரிசர்வு பாங்கில் வைப்பு செய்தல் வேண்டும்.

(ii) அட்டவணைப்படுத்தா வேறெந்த பாங்கு கம்பெனியாகிலும் வைத்திருக்க வேண்டிய ரொக்கம் அல்லது இருப்பு ரிசர்வு பாங்கிலோ, இராச்சிய பாங்கிலோ அல்லது அரசினரின் அறிக்கையில் கூறப்பட்ட ஏதாவது ஒரு பாங்கிலோ 18வது பிரிவின் கீழ் நடப்பு வைப்புக் கணக்கில் வைத்து இருக்க வேண்டும்.

(iii) அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்கு எவ்வளவு இருப்புக்கொள்ள வேண்டும் என்றும் ரிசர்வு பாங்கு சட்டத்தின் 42ஆவது பிரிவில் கூறப்பட்ட அளவினைக் காட்டிலும் அதிகமாக இருப்பின் அதை வேறு அட்டவணைப படுத்தப்பட்ட பாங்கிலோ அல்லது இராச்சிய பாங்கிலோ போட்டு வைப்பின் அரசினர் அந்தவிவரத்தை அறிக்கையில் தெரிவித்து அதை இந்தியாவில் விட்டு வைக்கப்பட்ட ரொக்கம் என்று கூறுவர்.

24வது பிரிவின் உட்பிரிவு 3ல் கூறியுள்ள மாதாந்தர அறிக்கைகளை பாங்கு கம்பெனிகள் அவ்வப்போது கொடுப்பது பற்றிய விபரம் பின்னர் மாதாந்தர அறிக்கைகள் என்ற பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரிவில் காணப்படும் கருத்துகள் அனைத்தும் 1964-ம் ஆண்டு மசோதாவிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டன.

சொத்தின் சதவிகித அளவை 25 சதவிகிதத்திற்கு குறைக்கப்பட்டது. சொத்துக்களைப் பற்றிய விளக்கத்தில், மேற்படி இருப்புகள் அனைத்தும் இந்தியாவிலுள் தான் வைக்கப்பட்டு இருத்தல் வேண்டும். இந்தப் பிரிவின் விளக்கத்திற்கு ஏற்ப, ஒரு பாங்கு இன்னொரு பாங்கில் தங்கள் செக்யூரிட்டிகளின் ஈட்டின்பேரில் கடன் பெற்றிருந்தாலும் கூட, இதையேற்றெடுத்துக் கொண்ட வில்லங்கமற்ற செக்யூரிட்டியாகவே கருதப்படுகிறது. ஏனெனில் இவற்றை நடப்பு வைப்புகளின் பேரில் தான் ஈடாகக் கருதப்படுகிறது. அந்த வகையான நடப்பு வைப்புகள் இராச்சிய பாங்குகளிலும் அல்லது ரிசர்வு பாங்கிலும் அல்லது அரசியலாரின் அறிக்கையில் குறிப்பிட்ட வேறு ஏதாவது ஒரு பாங்கியிலும் இட்டதாக பேர்சொல்லப்படுகிறது பாங்கு கம்பெனிகள் தங்கள் ரொக்கத் தன்மையுள்ள ஆஸ்திகளின் ஒரு குறைந்த சதவிகிதத்தை கையிருப்பில் வைத்தல் வேண்டும் என்று இந்தப்பிரிவு கூறுகிறது. தனது வைப்பாளர்கள் அவ்வப்போது கோரும் தொகைகளைக் கொடுக்க பாங்கு கம்பெனிகளுக்குப் போதிய ரொக்க இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும் எந்த ஒரு பாங்கு தன் ஆஸ்திகள் அதன் பொறுப்புகளைவிட உபரியாக வைத்திருப்பினும்கூட தன் வைப்புதாரர்கள் கோரிய தொகையை அவ்வப்போது கொடுக்க ரொக்கம் வைத்திருக்கவில்லையானல் அதன் நிலை மிகவும் மோசமடையும் ஒரு வர்த்தக பாங்கு லாபம் பெற முயன்றால் அது தன் சேம வைப்புகளின் மூலம் பெற்ற நிதியைப் பெருமளவு கடனில் விட்டு வட்டிபெற்றுச் சம்பாதிக்கக் கூடும். அதே நிலையில் தன் வைப்புதாரர்கள் கோரும் தொகையைக் கொடுக்கவும் தயாராக இருக்கவேண்டும். கையில் ரொக்க இருப்பு வைத்திருப்பின் இலாபம்பெறுவது கடினம். இலாபம் பெறவேண்டி ரொக்க நிதியை வட்டிக்கு விட்டால் வைப்பதாரர்களின் கோரிக்கை ஈடேற்ற முடியாது தவிக்கும். எனவே செம்மையான முறையில் பாங்குத் தொழில் நடத்தத் தலைப்படும் பாங்கு இவ்விரண்டு எதிரான கொள்கைகளையும் ஆராய்ந்து எந்த அளவு கடனுக்கானத் தொகையை விட்டு வைக்க வேண்டும் என்று கண்டு கொள்ள வேண்டும்.

இந்தியாவில் பாங்கு நெருக்கடிகள் அடிக்கடி ஏற்பட்டுள்ளது நினைவிலிருக்கிறது. இம்மாதிரியான நெருக்கடியின் காரணங்களில் ஒன்று கையிருப்பு போதிய ரொக்கம் வைத்திராமையே. முன் நாட்களில் பாங்குகள் கையில் சிறிதளவு ரொக்கம் வைத்துக் கொண்டிருந்து அதன் விளைவாக நெருக்கடியில் சமாளிக்க இயலாது கதவடைப்புச் செய்தனர். எனவே கையிருப்பு ரொக்கம் எவ்வளவு இருக்கவேண்டும் என்பதைக்

குறித்துச் சட்டப்பிரிவு இயற்றப்பட்டது.

அயல் நாட்டில் இணைக்கப்பட்டு இந்தியாவில் தொழில் புரியும் பாங்கு மேலே கூறப்பட்ட தவணை, நடப்புப் பொறுப்புகளில் இன்ன சதவிகிதம் வைப்பாக ரொக்கமாகவோ, பொன்னாகவோ, வில்லங்கமற்ற செக்யூரிட்டிகளாகவோ வைத்திருத்தல் அன்றியும் காலாண்டு முடிகிற வெள்ளிக்கிழமையன்று அவர்களுடைய ஆஸ்திகள் பொறுப்பின் கூட்டுத் தொகையில் 75 சதவிகிதத்திற்கு குறையாது இருக்க வேண்டும் (பிரிவு 25)

திருவாங்கூர் நேஷனல் கொல்லம் பாங்கு (The Travancore National & Quilcn Bεrk) திடீரென்று முறிவு பெற்றதன் விளைவாக இந்தப் பிரிவைக் கொண்டுவர நேர்ந்தது எனலாம். அக்காலத்தில் இந்த பாங்கியின் ஆஸ்திகள் அனைத்தும் இந்திய இராசதானியின் நீதி மன்றங்களுக்குள்ள எல்லைக்கப்பால் இருந்தன. ஆயினும் மேற்படி பாங்கியின் வைப்புதாரர்கள் அனைவரும் இந்திய இராசதானிப் பகுதியில் இருந்தனர். இம்மாதிரியான சங்கடங்கள் பிற அயல்நாட்டு பாங்குகளில் ஏன் ஏற்படக்கூடாது? பொதுவாக இங்கு சம்பாதித்த நிதியை தத்தம் நாடுகளில் ஆவணங்களில் போடுவதால் இம்மாதிரி நிலை ஏற்படலாம். 1944ஆம் ஆண்டுச் சட்டத்தில் ஆஸ்திகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் இந்தியாவில் ஆண்டின் இறுதியில் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. 1946ஆம் ஆண்டின் மசோதாவால் இப்பிரிவை மாற்றி இந்தியாவில் ஒவ்வொரு காலாண்டினிறுதியிலும் எவ்வளவு சதவிகிதம் வைத்திருக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்தக் காரணத்தினால் "இந்தியாவிலுள்ள ஆஸ்தி"யின் நிலை மாற்றம் பெற்று வருகிறது.

பிரிவு 25ன்படி பாங்கு கம்பெனிகள் அனைத்தும் நடந்து வருகின்றனவா என்று கண்காணிக்க ஒவ்வொரு பாங்கு கம்பெனியும் (பின் அனுபந்தத்தில் 'அ'பிரிவில்) மாதிரியாகக் காட்டப்பட்ட அட்டவணையின் ஒவ்வொரு காலாண்டு முடிந்த ஒரு மாதத்திற்குள்ளாக அது பெற்றுள்ள ஆஸ்திகளின் விபரம், தவணை, நடப்பு வைப்புகளின் பொறுப்புகள் இவ்வளவு என்று எழுதி ரிசர்வு பாங்கிற்கு அனுப்ப வேண்டும். இந்தப் பிரிவின் விளக்கமாக இந்தியாவில் இல்லாது அயல்நாட்டில் சொத்தாக இருப்பினும் கூட இந்தியாவில் உள்ள ஆஸ்தி என்று கருதலாம். இந்தப் பிரிவின் கீழ் ஐய ஆஸ்திகள் அல்லது சந்தேகமான சொத்துகள் காட்ட வேண்டுமா என்று விளங்கவில்லை.

ரிசர்வு நிதியும், ரொக்க ரிசர்வும்:— இந்திய கம்பெனிகள் சீர்திருத்தச் சட்டம் 1936ன் பிரிவுகள் 277கே, 277எல் (3)ஐயும் சேர்த்துப்பார்க்கின் ஒவ்வொரு அட்டவணைப்படுத்தப் படாத பாங்கும் ரிசர்வு நிதி வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் அந்த பாங்கு ஆண்டுதோறும் பெறும் இலாபத்தில் ஈவீத்துக் கொடுக்கும் முன்னரே 20 சதவிகிதத்திற்குக் குறையாமல் ரிசர்வு நிதியில் சேர்த்து, மேற்படி நிதி செலுத்தப்பட்ட மூலதனத் திற்குச் சமமாக ஆக்க வேண்டும். இவ்வாருகிய நிதியை அரசின ரின் செக்யூரிடிகளிலோ அல்லது வேறு ஒரு அட்டவணைப்படுத்தப் பட்ட பாங்கிலோ போட்டிருக்க வேண்டும் என்பதற்கு இந்திய ட்ரஸ்ட் சட்டம் 1882ன் 20வது பிரிவைக்காணவும். 17ஆம் பிரிவை யும் பார்க்கவும்

(1) 29ஆம் பிரிவின்படி பாங்குக் கம்பெனி இலாப நட்டப் பட்டியல் தயார் செய்து, காணப்படும் இலாபம் ஈவித்துக் கொடுக்கும் முன்னரே அதினின்று 20 சதவிகிதம் ரிசர்வு நிதிக்கு மாற்றிவிட வேண்டும். எனவே இந்தியாவில் இணைக்கப் பெற்ற ஒவ்வொரு பாங்கும் ரிசர்வுநிதி அமைத் திருக்க வேண்டும்.

(1அ) ரிசர்வு பாங்கின் பரிந்துரையின் பேரில் முன்கூறிய உட்பிரிவு (1) இன்படி பாங்கு கம்பெனி ரிசர்வுநிதி வைக்க வேண்டும் என்று மத்திய அரசினர் வலியுறுத்த மாட்டார்கள். ரிசர்வு பாங்கு மேற்படி பாங்கின் செலுத்தப்பட்ட மூலதனம் ரிசர்வுநிதி இவை அதன் பொறுப்புகளுடன் ஒப்பிட்டு நன்கு பரிசீலனை செய்த பின்னர்த்தான் பரிந்துரை செய்யும்.

உட்பிரிவு (1)ன் கூறப்பட்ட ரிசர்வுநிதியும், பங்கு வட்டக் கணக்கின் கூட்டுத்தொகையும் ஒன்று சேர்ந்து அந்த பாங்கினுடைய செலுத்தப்பட்ட மூலதனத்திற்குச் சமமாக இருக்க வேண்டும் அவ்வாறு இருப்பின் மேலே கூறியவாறு ரிசர்வு பாங்கு பரிந்துரை செய்யக்கூடும்.

(2) ரிசர்வு நிதியிலிருந்தோ அல்லது பாங்கு வட்டக் கணக்கிலிருந்தோ ஒதுக்கீடு செய்தால் செய்த 21 நாள்களுக்குள்ளாக ரிசர்வுபாங்கிற்கு ஏன் ஒதுக்கீடு செய்யப்பட்டது? எந்தச் சூழ்நிலையில் செய்யப் பட்டது? என்று தகவலளிக்க வேண்டும்.

> மேற்படி தகவல் தெரிவிப்பதற்குக் கால தாமத மானல், 21 நாள்களுக்கும் அதிகமாக ரிசர்வு பாங்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட வழக்கில் காலத்தை நிர்ணயம் செய்யலாம்.

சில நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி இலாபத்தில் 20 சதவிகிதத்தை ரிசர்வுநிதிக்கு மாற்ற பாங்கு கம்பெனிக்கு அதிகாரம் இப்பிரிவில் கூறப்பட்டுள்ளது. சிலகாலம் முன்பு ஆசிரியர் இது சம்பந்தமாகக் கொடுத்த யோசனைகளை மேற்கொண்டு இந்தச் சட்டத்தில் அதை இணைத்து, ரிசர்வு நிதியைப் பராமரித்து அதை உபயோகிப்பதில் எளிதில் மாற்றும் நியமங்களைக் கொள்ள இடமுண்டு. அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவீடன், சுவிசர்லாந்து இவைகளில் உள்ளதுபோல இந்நாட்டிலும் ரிசர்வு நிதியை அமைத்து அதை மேன்மேலும் வளரவிட நியமங்கள் செய்திருப்பது வரவேற்கத் தக்கதே.

ரொக்க ரிசர்வு:— இந்திய கம்பெனிகள் சட்டம் 1913ன் 277(L)எல் பிரிவின்படி 277(K) கேயில் சொல்லப்பட்ட ஒவ்வொரு பாங்கு கம்பெனியும் தனது $1\frac{1}{2}$ சதவீதத்திற்கு குறையாத நடப்பு வைப்புகளின் மீதும் உள்ள தொகையை ரொக்க ரிசர்வாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்த விவரத்தை கூட்டுப்பங்கு கம்பெனிகள் பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டும். இதை ஒவ்வொரு மாதமும் பத்தாம் தேதிக்குள்ளாக நடந்த மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையன்று கையிருப்பு இருந்த ரொக்க ரிசர்வு தவணை, நடப்புப் பொறுப்புகள் எவ்வளவு தொகை என்று எழுதியனுப்ப வேண்டும். 18வது பிரிவின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

> அட்டவணைப்படுத்தாத பாங்குக் கம்பெனிகள் ஒவ்வொன்றும் ரொக்க ரிசர்வாக இந்தியாவில் தன் வசமாகவோ அல்லது ரிசர்வ் பாங்கியிலோ அல்லது இராச்சிய பாங்கியிலோ அல்லது வேறு எந்த பாங்கியிலோ மத்திய அரசின் உத்திரவுக்கிணங்க நடப்பு வைப்புக் கணக்கைத் திறந்து பகுதி ரொக்கமாகவும், பகுதி கணக்கிலுமாக தனது தவணை, நடப்பு, பொறுப்புகளின் கூட்டுத் தொகையில் குறைந்த அளவு மூன்று சதவிகிதத்திற்கு வைத்திருக்க வேண்டும். இத்தகவலை ஒவ்வொரு மாதத்தின் 15-வது தினத்தின் முன்னரே ஒவ்வொரு வார இறுதி வெள்ளிக்கிழமை முடிவடையும் கணக்கின்படி தவணை, நடப்பு, வைப்புப்பொறுப்புகளின் தொகை எவ்வளவு என்றும், இந்திய செலாவணி முறிச்,

சட்டத்தின் (Negotiable Instruments Act 1881) கீழ் வெள்ளிக்கிழமை விடுமுறை தினமாக இருப்பின் தொழில் முடிவு தினத்திற்கு முன் தினப்படி விவரம் கொடுக்க வேண்டும்.

விளக்கம்

இப்பிரிவிலும் 24-வது பிரிவிலும் ஆக இந்திய நாட்டில் உள்ள பொறுப்புகள் என்பவைவற்றின் கீழ்ச் சேர்க்கப் படாதவைகள் வருமாறு:—

(அ) செலுத்தப்பட்ட மூலதனம் அல்லது ரிசர்வு நிதி அல்லது இலாப நட்டக் கணக்கில் காணப்படும் வரவு இருப்பு ஆ) ரிசர்வ் பாங்கு சட்டம் 1934 (இரண்டாவது 1934) இதில் பிரிவு 42-ன் உட்பிரிவு 1-ன் சி பிரிவில் கண்டுள்ளபடி ரிசர்வு பாங்கியிலிருந்தோ இராச்சிய பாங்கியிலிருந்தோ அல்லது தொழிற்கென நிதிவசதி அளிக்கும் நிறுவனங்களுக்கு நிதிவழங்கும் கார்ப்பரேஷன் (Refinance corporation for indus ry limited) அல்லது மத்திய அரசினரின் அவ்வப்பொழுது கூறப்பட்டுள்ள பாங்கு நிறுவனத்திலிருந்தோ பெற்ற முன்பணம்

ரிசர்வ் பாங்குச் சட்டத்தின் 42-வது பிரிவின் ஒன்றுவது உட்பிரிவின்படி ஒவ்வொரு அட்டவணைப் படுத்தப்பட்ட பாங்கும் இந்தியாவில் ரிசர்வ் பாங்கியிலோ இராச்சியப் பாங்கியிலோ அல்லது மத்திய அரசினரால் அறிவிக்கப்பட்ட பாங்கியிலோ வரவு நிகரத்தில் மேலே கூறப்பட்டவாறு அதன் பொறுப்புகளின் சதவிகிதத்தில் போட்டிருக்க வேண்டும். மேற்படி பாங்கு தன் வசம் வைத்துள்ள ரொக்க இருப்பு, இந்தப் பிரிவின் கீழ் கணக்கிடப்படுவதில்லை. ரிசர்வ் பாங்கு இந்தியக் கெஜட்டின் மூலம் ரிசர்வ் விகிதத்தை அதிகப்படுத்திக் ககவலை வெளியிடுவது உண்டு. அவ்வாறு அதிகப்படுத்தப்பட்ட ரிசர்வ் விகிதம் நடப்பு வைப்புப் பொறுப்பில் 20 சதவிகிதத்திற்கு மேற்படாமலும் தவணை வைப்பில் 8 சதவிகிதத்திற்கு மேற்படாமலும் இருக்கும். அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்கு வாரந்தர அறிக்கையை வெளியிட வேண்டும். மாதாந்தர அறிக்கை தேவையில்லை. இவ்வாராந்தர அறிக்கைகள் கீழ்க்கண்ட விபரங்களைக் கொடுக்க வேண்டும். கடன்கள், முன்பணங்கள் கழிவு தள்ளப்பட்ட மாற்றுண்டியல்கள் ரிசர்வ் பாங்கியிலிருந்தும் இராச்சிய பாங்கியிலிருந்தும் பெற்ற கடன்கள், இதர பாங்குகளுடன் இந்தியாவில் வைக்கப்பட்டுள்ள நடப்புக் கணக்கு நிகரங்கள், அழைப்புப்பணம்

(நாள் நிலுவைப் பணம்), அரசினர் செக்யூரிட்டியில் இடப்பட்ட ஆவணங்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்குகள் இதரப் பாங்குகளைவிட உயர்ந்த நிலையில் இருப்பதால் அதன் முழு விவரங்களையும் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ரொக்கம் வைத்திருத்தலைப் பற்றி உள்ள பிரிவு எல்லா நாள்களிலும் வைத்திருப்பதைப் பற்றிக் கூறுகிறது. வெள்ளிக் கிழமை அன்று மாத்திரம் என்று குறிப்பிடவில்லை. இது சம்பந்தமாக வெளியிடப்படும் அறிக்கை வெள்ளிக்கிழமையன்று உள்ள கை இருப்பு ரொக்கத்தையே குறிக்கும்.

ரிசர்வு பாங்கியின் அதிகாரங்கள்—பிரிவு 21 கூறுவதாவது:—

(1) பொதுமக்களின் நலனைக்கோரியும் வைப்பாளர்களின் மீதுள்ள அக்கரை காரணமாக, சந்தர்ப்பம் சூழ்நிலைக் கேற்ப பாங்கு கம்பெனிகள் எவ்விதத்தில் முன்பண வசதியளிக்கலாம் என்றும் தனிப்பட்ட ஒரு பாங்கு கம்பெனி எவ்வாறு செய்யலாம் என்றும் பரிசீலனை செய்து அதனை ஒரு கொள்கையாக அமைத்து நடத்த ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் உண்டு. ரிசர்வு பாங்கு விதிக்கும் முறையை எல்லா பாங்குகம்பெனிகளும் ஏற்று அதன்படி நடக்க வேண்டும். ஏதாவது குறிப்பிட்ட ஒரு பாங்கு கம்பெனிக்கு மாத்திரம் விதித்திருப்பின் அதன் படி மேற்படி கம்பெனி நடந்துகொள்ள வேண்டும்.

(2) தனக்கென (1)ம் உட்பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைத் தவறான முறையில் செலுத்தாத வரையிலும் ரிசர்வு பாங்கு பொதுவாக எல்லா பாங்கு கம்பெனிகளுக்கும் நடைமுறை விதிகளை எடுத்துரைத்து நடக்கும்படி செய்யச் சொல்லலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட பாங்குக் குழாத்திற்கு விதிகளைச் சொல்லி நடக்கச் செய்யலாம்—அவை

(அ) எந்த வகைகளுக்காக முன்பணம் கொடுக்கப் படலாம் அல்லது கொடுக்கப்படக் கூடாது.

(ஆ) ஈடுகாட்டிய முன் பணங்கள் பெறத்தக்க வரையறை.

(இ) அதிகப்படியான முன்பணமோ அல்லது பண வழியோ அளிக்கும் முன்னர், அந்த கடன் வழி பெறும் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம்

ரிசர்வுகள் இவைகளைக் கண்ணுற்று அதன் அடிப் படையில் பாங்கு கம்பெனி தர முன்வரலாம்

(ஈ) அதிகப்படியான அளவு பணவசதி அளிப்பதைப் பற்றி (இ)பிரிவில் கூறியவாறு அதற்கு உத்திர வாதம் தரும், பாங்கு கம்பெனி, கூட்டு நிறுவனம், மக்கள் சங்கம், அல்லது தனிநபரின் பெயரும் விபரமும்

(உ) வட்டி விகிதமும், இதரவிவரங்களும் நியமங்களும்– இவ்வகையில் உள்ள கடன் வசதிக்கு ஏற்பட்டவை களைப் பற்றிய விளக்கம்.

(2) இப்பிரிவின் கீழ் ரிசர்வு பாங்கு இடும் உத்திரவுகளை எந்த பாங்கு கம்பெனியும் மேற்கொண்டு அவ்வாறே நடக்க வேண்டும்.

ஊகவர்த்த முறையைக் கட்டுப்படுத்த வேண்டியும் பாங்குகள் தான்தோன்றித்தனமாகக் கடன்தரும் முறையைக் கண்டிக்க வேண்டியும் ரிசர்வு பாங்கிற்கு இவ்வதிகாரம் கொடுக்க இப்பிரிவு ஏற்பட்டது.

21வது பிரிவின் கீழ் ரிசர்வுபாங்கு, முன்பணம் கொடுக்கும் முறையைப் பொது நலனைக் குறித்துக் கட்டுப்படுத்த முன் வருகிறது. ரிசர்வுபாங்கு பாங்கு கம்பெனிகள் குழாத்திற்கோ, அல்லது ஒரே ஒரு பாங்கு கம்பெனிக்கோ பொதுவாகவோ, தனிப்பட்ட முறையிலோ எந்த அளவில் முன்பணம் கொடுக்கலாம் அல்லது கொடுக்கக் கூடாதென்றும், அவ்வாறு கோரப்படும் முன்பணத்திற்கான ஈடு வகைகள் எவ்வளவில் இருக்க வேண்டும் என்றும் ஒழுங்குபடுத்துகிறது.

பிரிவு 21ன் உட்பிரிவு 2ஐச் சீர்திருத்திய சட்டப்படி பாங்கு கம்பெனிகளுக்கு விதிகளை வெளியுறுத்தும் அதிகப்படியான அதிகாரம் ரிசர்வு பாங்கு பெற்றுள்ளது அதன் கீழ்:—

(அ) எக்காரணங்களுக்கென முன்பணம் கொடுக்கலாம் அல்லது கொடுக்கக்கூடாது என்றும்

(ஆ) ஈடுகாட்டிப் பெறப்பட்ட முன்பணங்களுக்குக் காட்டி யுள்ள வரையறை

(இ) முன்பணவசதி அல்லது இதர முறைகளில் பண உதவி யளித்தலுக்கான வட்டி விகிதம் இவ்வளவென்று

நியமனம் செய்தும், உத்திரவாதம் அளித்தலுக்கான தரகு அல்லது கமிஷன் இவ்வளவென்றும் வரையறை செய்கிறது.

ரிசர்வு பாங்கு இதர பாங்குகளுக்கு உத்திரவு இட கொடுக்கப்பட்ட அதிகாரங்கள்:

(ஈ) முன்பணமாக அதிகப்படியான தொகை அல்லது இதர வகையில் பணவசதி கொடுக்க ஒரு பாங்கு முன் வந்தாலும் அல்லது உத்திரவாதம் ஏற்கத் தயாராக இருப்பினும் அது சம்பந்தமான செலுத்தப்பட்ட மூலதனம் ரிசர்வுகள், வைப்புகள் இவ்வளவு அளவென் பதைப் பற்றி தாக்கீது விடலாம்.

இந்தப் புதிய பிரிவு "இ" உட்பிரிவில் கூறியதுபோல, சட்டப் படி கட்டுப்பாடு முறையை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் காணலாம். அங்கு உள்ள பாங்குகள் தனிநபருக்கு முன்பண வசதியளிக்கும்போது அதனுடைய மூலதனத்திற்கும் ரிசர்வு களுக்கும் உள்ள குறிப்பிட்ட விகிதத்தை மீறக் கூடாதென்பதாம்.

பாங்கு கம்பெனிகளுக்கு உரிமம் வழங்கு முறை—பிரிவு 22ன் படி;—

(1) இனி எதிராகக் கூறப்போவதைத் தவிர எந்தக் கம்பெனியும் இந்திய நாட்டில் பாங்குத் தொழிலை நடத்த வேண்டுமானால் ரிசர்வு பாங்கியினால் வழங்கப் பட்ட உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டும். உரிமத்தை வழங்க ரிசர்வு பாங்கு எவ்விதக் கட்டுப்பாடுகளை வேண்டுமானாலும் நியமனம் செய்யலாம்.

(2) இந்தச்சட்டம் தொடக்கம் பெற்றபொழுதுதொழிலாற்றி வரும் எந்தப் பாங்கு கம்பெனியும் இனி அத்தகைய தொடக்கத்திலிருந்து ஆறு மாதங்கள் முடியும் முன்பும் பாங்குத் தொழில் நடத்த விழையும் பாங்கு கம்பெனி களும் எழுத்து மூலம் ரிசர்வு பாங்கிற்கு இந்தப் பிரிவின் கீழ் உரிமம் வழங்க வேண்டும் என்று மனுச் செய்து கொள்ள வேண்டும்.

உட்பிரிவு (1)ல் கூறப்பட்டது போல இச்சட்டம் தோன்றும் முன்னரே நடந்துவரும் பாங்கு கம்பெனிக்கு உரிமம் வழங்காவடிலும் தொடர்ந்து தொழில் செய்ய

லாம். குறிப்பாக ரிசர்வு பாங்கு எழுத்து மூலம் தொழில் நடத்தக்கூடாது என்று கூறினால்தான் பாங்குத் தொழில் நடத்தக்கூடாது.

மேலும், அம்மாதிரி நடந்துவரும் ஒரு பாங்குகம்பெனியை முன் கூறியது போல இச்சட்டம் வருமுன்னர் இருந்த நிலையில் அவ்வாறு எழுத்து மூலம் தடைப்படுத்தாது. பிரிவு 11ன் உட்பிரிவு 1ன்படி மூன்றாண்டுகளோ அல்லது அதற்கும் அதிகமான கால வரையறையை தன் விருப்பத்திற்கு ஏற்ப ரிசர்வு பாங்கு வற்புறுத்தும்.

(3) இப்பிரிவின் கீழ் உரிமம் வழங்குமுன் கம்பெனிகணக்குப் புத்தகங்களை ரிசர்வு பாங்கு பார்வையிடும் அல்லது கீழ்கண்ட நிபந்தனைகள் அனைத்தும் அல்லது ஒரு சிலவற்றையாவது ஆமோதித்து அதன்படி நடக்க வேண்டும்.

(அ) தனது வைப்பாளர்களின் முழு உரிமைக் கோரிக்கைகளைத் தற்போதாவது அல்லது வரும் காலத்திலாவது கொடுக்க வேண்டிய நிதிவசதி

(ஆ) நடப்பிலுள்ள அல்லது வருங்கால வைப்பாளர்களின் நலனைப் பேணாது தீய வழியில் பாங்குத் தொழில் நடத்தாதிருத்தல்.

(இ) அயல் நாடுகளில் இணைப்புப்பெற்று இந்தியாவில் தொழில் நடத்தும் பாங்கு கம்பெனிகள் இந்நாட்டின் பாங்கு கம்பெனி சட்டத்திற்குட்பட்டும் பொது மக்களுக்குப் பாதகம் விளைக்காது நடந்தும், இந்த நாட்டில் இணைப்புப்பெற்று அந்நிய நாட்டில் வர்த்தகம்புரியும் இந்தியப் பாங்குகளை அந்நாட்டில் விரோதமாகவோ பிரித்தாளும் முறையைக் கையாளாதிருப்பின் அந்த கம்பெனிகளுக்கு உரிமம் வழங்கப்படும்.

(4) கீழ்க்கண்ட காரணங்களால் உரிமம் கொடுப்பது ரிசர்வு பாங்கியினால் தடை செய்யப்படும்:—

(1) இந்தியாவில் அந்த பாங்கு கம்பெனி பாங்கு வர்த்தகத்தை நிறுத்தியிருப்பின் அல்லது

(2) உட்பிரிவு (1)ன்படி அந்த பாங்கு கம்பெனி ரிசர்வு பாங்கு இட்ட நிபந்தனையை நிறைவேற்றாது இருப்பின் அல்லது

(3) உட்பிரிவு (3)ன்படி இடப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்ருது இருப்பின்

(4) உட்பிரிவு (2) அல்லது (3)ன்படி உரிமத்தை ரத்து செய்யும் முன்னரே குறிப்பிட்ட பாங்கு கம்பெனியின் வைப்பாளர்ரின் நலனைக்கோரி, அந்த பாங்குக் கம்பெனியின் நிலைமையை சரிசெய்ய அவகாசம் கொடுத்தல்.

(5) ரிசர்வு பாங்கியினுல் உரிமம் ரத்து செய்யப்படும் என்ற முடிவை அறிந்துகொண்ட பாங்கு முடிவு செய்யப்பட்டு தகவலளிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள்ளாகவே மத்திய அரசினர்க்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

(6) உட்பிரிவு (5)ன் கீழ் மத்திய அரசினர்க்கு முறையீடு செய்யப்பட்டு அதன் விளைவாக அவர்களுடைய முடிவும், அல்லது முறையீடு செய்யப்படாத பாங்கு கம்பெனிக்கு ரிசர்வு பாங்கியிலிருந்து வெளியிடப்பட்ட முடிவே இறுதியாகும்.

இந்தியாவில் தொழிலாற்றும் இதர நாட்டு பாங்குகளுக்கு உரிமம் வழங்கும் தேவையை விளக்குகிறது இந்தப் பிரிவு. இந்திய மத்திய பாங்கு விசாரணைக் குழுவின் பரிந்துரைக்கிணங்க இந்தியநாட்டு பாங்குகளை இதர நாட்டில் வேற்றுமையுடன் நடத்தி வருகிறார்கள் எனில் அந்நாட்டிலிருந்து இந்தியாவில் தொழில் நடத்தும் பாங்குகளுக்குத் தடைவிதிக்கப்பட வேண்டும். இந்தியாவில் இணைப்புப் பெற்ற பாங்குகளுக்கு நிதிநிலைமை செம்மையாக இருக்க வேண்டும். அந்நிய மக்களுக்கு இதனோடு கூட தங்கள் நாடுகளிலுள்ள இந்திய பாங்குகளுக்கு வேற்றுமை காட்டக் கூடாதென்பதாம். ரிசர்வு பாங்கு நிபந்தனையுடன் உரிமம் வழங்க அதிகாரம் உண்டு. இம்மாதிரியான சட்டம் சுவீடன், சுவிசர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாட்டு பாங்கு சட்டங்களில் உள்ளன. இப்பிரிவின் கீழ் மூன்று பெரும் பிரிவுகள் கூறப்பட்டுள்ளன.

(அ) உரிமம் வழங்கலுக்கான தேவையும் அதற்கு மனு செய்து கொள்ளும் முறையும்

(ஆ) உரிமம் வழங்க நிபந்தனைகளும் அந்நிபந்தனைகளை ஏற்று நடத்தலும்

(இ) உரிமம் ரத்து முறைகளும் அதற்கென மேல் முறையீடு களும்

எந்த பாங்கு கம்பெனியும் ரிசர்வு பாங்கினுடைய உரிமம் பெறாது பாங்குத் தொழிலை இந்தியாவில் நடத்தக்கூடாது. புதியதாகத் தொடங்கப்படும் பாங்கு கம்பெனிகளுக்கு உரிமம் வழங்குமுன்னர் பிரிவு 22ன் உட்பிரிவு 3ன்படி எல்லா நிபந்தனைகளையாவது அல்லது சில நிபந்தனைகளையாவது சிரமேற் கொண்டு நடந்து வருகிறதா என்று கண்காணிக்கிறது. தொழில் நடத்திவரும் பாங்கு ஒன்றின் உரிமத்தை ரிசர்வு பாங்கு ரத்து செய்தால் அந்த பாங்கு மேல் முறையீடு செய்யலாம். புதியதாகத் திறக்கப் பட வேண்டிய பாங்கு கோரியுள்ள உரிமத்தை நிராகரித்தால் அது மேல் முறையீடு செய்ய அனுமதியில்லை. மேல் முறையீட்டின் படி மத்திய அரசினர் கூறும் முடிவே இறுதியானது.

ரிசர்வு பாங்கிற்கு எதிராக சஜ்ஜன் பாங்கு (பி) லிமிடெட் தொடர்ந்த வழக்கில் (சி.சி. வால் 50 ப.146) பாங்கு கம்பெனிகள் சட்டம் 1949ன் 22வது பிரிவின் கீழ் உரிமம் வழங்கு முறையை மட்டும் கூறப்பட்டுள்ளது. பாங்குத் தொழிலை நடத்த வழிமுறை களை வகுத்துள்ளது. அடிப்படையில் எந்த நபரும் பாங்குத் தொழில் நடத்துவதைத் தடை செய்யவில்லை எனலாம். பிரிவு 22ன் கீழ் ரிசர்வு பாங்குக்குக் கொடுத்துள்ள அதிகாரம் அதன் சாதாரண அதிகாரி (அலுவலர்க்கு)க்குக் கொடுக்கப்படவில்லை.

பிரிவு 23ன் கீழ் ரிசர்வு பாங்கு புதிய அலுவலகங்களைத் திறக்கவோ, நடப்பிலுள்ள பாங்கு கம்பெனிகளை மாற்றம் செய்யவோ கூறப்பட்டுள்ளது.

(1) ரிசர்வு பாங்கியினுடைய சம்மதத்தை முதலில் ஏற்காது.

(அ) எந்த பாங்கு கம்பெனியும் இந்தியாவில் புதிய இடத்தில் திறப்பதோ, அதே நகரில் மாற்றம் செய்வதோ, அல்லது கிராமத்திலோ அவ்வாறு நிலையான இடத்தை விட்டு மாற்றம் செய்யக் கூடாது.

(ஆ) எந்த பாங்கு கம்பெனியும் இந்தியாவிற்கு வெளியே புதியதாக ஆரம்பிக்கவோ, அல்லது அவ்வாறான நகரில் இடம் மாற்றம் செய்யவோ கூடாது.

இந்த உட்பிரிவில் கூறப்பட்டது போல் அல்லாமல் ஒரு நகரின், ஊர்ப்புரத்தில் அல்லது கிராமத்தில் ஒரு மாத காலத் திற்கு மேற்படாமல் மேற்படி ஊர், கிராமம் நகரம் இவற்றில்

முன்னரே ஒரு அலுவலகம் இருப்பின், தாற்காலிகமாகப் பொது நலனைக்கோரி, கண்காட்சிகள், திருவிழா, மாநாடு அல்லது மேளா (Mela) இவற்றில் கிளைகள் திறக்கலாம்.

(2) இப்பிரிவின் கீழ் அனுமதி கொடுக்கும் முன்னர் பிரிவு 36ன்கீழ் மேற்படி கம்பெனியின் கணக்குகளைப் பரிசீலனை செய்து அதன் பொருள்வசதி, கம்பெனியின் வரலாறு, நிருவாக நிலை, போதும் தன்மையுள்ள மூலதனம், வருமானம் பெறக்கூடிய வழிகள் மேற்படி மனுதாரர் கம்பெனி இடமாற்றம் செய்வதனால் எந்த நிலையில் தொழில் அமைப்பு ஏற்படும் என்று ரிசர்வ் பாங்கு ஆராயலாம்.

(3) முதலாம் உட்பிரிவில் காணப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையின் கீழ்ப் புதியதாக அலுவலகம் திறக்க அனுமதி கொடுக்கலாம் அல்லது தனிப்பட்ட காரணத்தின் கீழ்த் திறக்க அனுமதியளிக்கலாம்.

(4) ரிசர்வ் பாங்கினுடைய தீர்மானப்படி எந்த ஒரு பாங்கு கம்பெனியாவது இடப்பட்ட நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றையாவது ஏற்று நடக்கத் தவறினால் எழுத்து மூலம் ஏன் நிபந்தனையை மீறி நடந்தது என்றும், மேற்படி பாங்கு கம்பெனிக்கு அவகாசம் அளித்து அதன் பிறகும் தவறு செய்யின் அனுமதியை ரத்து செய்துவிடக் கூடும்.

(5) இப்பிரிவின் கண்வரும் தொழிலிடம் எனப்படுவது கீழ் நிலை அலுவலகம், பணம் கொடுப்பு அலுவலகம், கீழ்நிலை பணம் கொடுப்பு-அலுவலகம் அல்லது எவ்விடத்தில் வைப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டும், செக்குகள் மாற்றப்பட்டும், கடனுக்கு வசதிகள் அளிக்கப்பட்டும் வருமோ அவ்விடத்தையும் தொழிலிடம் எனக் கூறலாம்.

புதிய கிளைகளைத் திறப்பதற்கான அனுமதி பெறவேண்டும் என்று முதன் முதலாக 1946ஆம் ஆண்டு பாங்கு கம்பெனிகள் (கிளைகள் கட்டுப்பாடு) சட்டம் இயற்றப்பட்டது. இப்பிரிவின் விளக்கத்தில் 'தொழிலிடம்' என்பதற்கான இலக்கணம் கூறப் படவில்லை. குறிப்பிட்ட தொழில்களைச் செய்யுமிடம் எனக் கூறுவதால் அவைகளைத் தொழில் இல்லை என ஒதுக்கி விட முடியாதாகையால் இவற்றை இலக்கணமாகக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, ஒரு இடத்தில் வெறும் பணம் மட்டும் பட்டுவாடா செய்வதாக எடுத்துக் கொள்வோம். பணம்

பட்டுவாடாச் செய்யுமிடம் பாங்கு என கருதுமாறு நியதி இல்லை. ஆயினும் பணம் கடனாகக் கொடுத்தால் அது பாங்குத் தொழிலாகிறது. "செக்குகள் ரொக்கமாக மாற்றப்படுகின்றன" என்பது ஒரு குறிப்பிட்ட இடத்திலிலுள்ள பாங்கின் மீது எழுதப்படுவது என்று பொருள். தொழிலுள்ள ஒரே ஊரிலோ நகரிலோ உள்ள இடமாற்றத்தைக் குறித்து இப்பிரிவு ஏதும் கூறுவதில்லை. ஒரு பாங்கு கம்பெனியின் தொழிலிடம் ஒரு ஊரிலோ, நகரத்திலோ இருப்பின் அந்த இடத்தில் நடக்கும், மாநாடு, திருவிழா, சந்தை அல்லது மேளாவைக் குறித்துப் பொது நலனைக்கோரி தாற்காலிகமாக ஒரு மாத காலத்திற்குக் கிளை அலுவலகம் திறக்கலாம். இதற்கு ரிசர்வு பாங்கினுடைய முன் அனுமதி தேவையில்லை.

தொடங்கியபோது இந்தப்பிரிவு இந்தியாவிற்கு வெளியில் கிளைகளைத் திறக்க யாதொரு விதமான தடங்கலேயும் இடவில்லை. பின்னர் சரியான செல்வ நிலையை ஈடுகாட்டும் எண்ணத்துடன் பாங்கு நடைமுறைகளுக்கான மேம்பாட்டு வழிகளை அயல்நாட்டு இந்திய பாங்குக் கிளைகள் மீது திணிக்க எண்ணங்கொண்டு இந்திய நாட்டின் பண்பாட்டுகளையும் புகுத்த எண்ணி, புதியதாகத் தொடங்கவரும் இந்திய பாங்குகள் ரிசர்வு பாங்கினிடம் அனுமதி கோரவேண்டியது. ஒவ்வொரு அயல் நாட்டிலுள்ள இந்திய பாங்குகள் மாத அறிக்கைகள் மூலம் தங்கள்வசம் உள்ள ஆஸ்திகள் பொறுப்புகள் இவ்வளவு எனக் குறிப்பிட்டு எழுதி அனுப்ப வேண்டும்.

ரிசர்வ் பாங்கிற்குப் பணிந்தனுப்பும் அறிக்கைகள்—27வது பிரிவின்படி:—

(1) ஒவ்வொரு பாங்கு கம்பெனியும் ஒவ்வொரு மாத இறுதியிலும் அறிக்கையொன்றைத் தயார் செய்து (அதற்கான அமைப்பு இதன் அனுபந்தம் "அ" பிரிவில் மாதிரி 13 ஆகக் கொடுக்கப்பட்டுள்ளது. இது 27 ஆம் பிரிவின் கீழ்வரும் மாதிரி அட்டவணை) இந்தியாவில் உள்ள ஆஸ்திகள் பொறுப்புகள் இவ்வளவு என்றும் அந்த மாதம் முடிவடைகிற வெள்ளிக்கிழமையன்று இன்ன அளவில் உள்ளன என்றும், வெள்ளிக்கிழமை மாற்றுச் செலாவணித்தாள் சட்டத்தின் 1881ன் கீழ் விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்தியநாள் கணக்கிற்கிணங்கக் குறிப்பிட வேண்டியது.

(2) எந்தக் சமயத்திலும் காலவரம்பின்றி எந்த பாங்கு கம்பெனியையும் தனது ஐந்தொகை நிலையையும் இதரத்

> தொழில் பெருக்கத்தைப் பற்றியும் குறிப்பிட்ட காலத்தினுள் ஒரு அறிக்கையை அனுப்புமாறு ரிசர்வு பாங்கு சந்தர்ப்பத்தை அனுசரித்து உத்திரவு இடலாம். மேலே கூறப்பட்ட பிரிவிற்கு எதிராக இல்லாது ரிசர்வு பாங்கு ஆறுமாதங்களுக்கு ஒருதடவை நிலைமையை அனுசரித்து பாங்கு கம்பெனிகள் கொடுத்துள்ள முன் பணத்தின் அளவு தொழில், வர்த்தகம், விவசாயம் என்ற பிரிவுகளின் கீழ் இவ்வளவு என அறிக்கை அனுப்ப உத்திரவு இடலாம்.

இப்பிரிவின் சிற்சில மாற்றங்களை 1946ஆம் ஆண்டு ஏற்பட்ட பாங்கு கம்பெனி மசோதாவில் காணலாம். 1944ல் ஏற்பட்ட மசோதாவில் கூறப்பட்டுள்ளது போல பாங்கு அறிக்கையில சொத்துகள் பொறுப்புகள் விபரம் இருக்க வேண்டும் என்றுள்ளது. விவசாயம் தொழில் வர்த்தகம் இவைகளுக்கு அளிக்கப்பட்ட முன்பணவுதவி ஆவணங்களில் இட்ட முதல் இவைகளைப் பற்றிய தகவல்களை ஆறுமாதங்களுக்கு ஒரு முறைதான் ரிசர்வு பாங்கு கேட்கலாம் என்றுள்ளது. பாங்கு கம்பெனிகள் கட்டுப்பாடு அவசரச் சட்டம் 1948ல் 1944ஆம் ஆண்டு மசோதாவில் உள்ள பிரிவுகளைக் காணலாம்.

கொடுக்கப்பட்ட மாதிரி அட்டவணையில் கண்டபடி, ஆஸ்திகளையும், பொறுப்புகளையும் ஒவ்வொரு மாதத்தின் இறுதி வார முடிவடைகிற வெள்ளிக்கிழமையன்று வரையுள்ள கணக்கெடுத்து (வெள்ளிக்கிழமை மாற்றுச் செலாவணித்தாள் சட்டத்தின் கீழ் விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முதல்நாள் வரையிலுள்ள தொழில் கணக்கு எடுத்து) அந்த மாத அறிக்கையை அடுத்த மாத இறுதிக்குள்ளாக ரிசர்வு பாங்கிற்கு அனுப்ப வேண்டும். 27வது பிரிவின் (2)வது உட்பிரிவின்படி ரிசர்வுபாங்கு அட்டவணைகளுடன் இந்த அறிக்கையைக் கேட்க அதிகாரம் பெற்றுள்ளது. பழைய உட்பிரிவில் ரிசர்வு பாங்கு எழுத்து மூலம் கேட்க உரிமை பெற்றுள்ளது எனக்கருதலாம். ஆயினும் புதிய பிரிவின்படி 'எழுத்து மூலம்' என்ற வாசகம் இல்லை. இதன் முடிவாக அவ்வப்போது ரிசர்வு பாங்கு அதிகாரிகள் வாய்முகாந்திரமாகக் கொடுக்கும் உத்திரவுகளை மேற்கொள்ளவேண்டி நேரிடும். இந்தக் குறையைப் போக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

வர்த்தக பாங்குகளிடமிருந்து தகவல்களையும் அட்டவணைகளையும் அவ்வப்போது அனுப்புமாறு தாக்கீது இடுவது பல நாடுகளில் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டதாகும். அதுபோல் இங்கும் இருப்பது குறிப்பிடத்தக்கதே. பாங்க் ஆஃப்

இங்கிலாந்து சட்டம் 1945ன்படி இங்கிலாந்து நாட்டில் தேவைப் பட்ட எந்தத் தகவல்களையும், புள்ளி விவரங்களையும் கேட்க அதிகாரம் உண்டு. இதனால் கணக்கு வெளிப்படையாகாது, மறைந்த நிலையில் இருப்பது பாதிக்கப்படுவதில்லை.

24ஆம் பிரிவின் 3வது உட்பிரிவின்படி ஒவ்வொரு பாங்கு கம்பெனியும் மாதம் முடிந்த பதினைந்து நாட்களுக்குள்ளாக ரிசர்வு பாங்கிற்கு கடந்த மாதத்தில் நடந்த தொழிலின் விபரத்தைக் கொடுக்கப்பட்ட மாதிரியில் தயார் செய்து அனுப்ப வேண்டும். இது 24ஆம் பிரிவின் கீழ் தரப்பட வேண்டிய விபரங்கள், அவை தவணை, நடப்பு வைப்புகளுக்கான பொறுப்பு விபரங்கள், இந்தியாவில் வெள்ளிக்கிழமை முடிவடைகிற இறுதி வாரம் வரையிலும் மாற்றுச் செலாவணி முறிச் சட்டத்தின் கீழ் (1881ன் படி) வெள்ளிக்கிழமை விடுமுறையானால் அதற்கு முதல்நாள் வரையுள்ள தொழிலின் விபரங்களைக் கொடுக்க வேண்டும்.

உரிமை கோரப்படா வைப்புகளின் விவரமடங்கிய அறிக்கை பணிந்தனுப்புதல்:— பிரிவு 26ன் கீழ் கூறப்பட்டது வருமாறு:—

> ஒவ்வொரு பாங்குகம்பெனியும் தத்தம் கணக்காண்டிறுதியில் கடந்த பத்தாண்டுகளாக நடப்பில் இல்லாமல் உள்ள கணக்குகளின் விளைவுகளை அந்தக்கணக்காண்டிறுதியில் ரிசர்வு பாங்கிற்கு அது பகர்ந்த முறையில் அட்டவணைப் படுத்தித் தகவலை வெளிப்படுத்த வேண்டும். பணம் தவணை வைப்பாக இடப்பட்டதில் இவ்வளவு காலவளவு என்பதற்குத் தவணைக்கெடுகடந்தநாள் முதல் பத்தாண்டுகள் எனக் கணக்கிடல் வேண்டும்.

உரிமை கோரி வைப்புகள் எவ்வளவு இருக்கும் என்று அனுமானிக்கவே ரிசர்வு பாங்கிற்கு இந்தப்பிரிவு வழி காட்டுகிறது. தவணை வைப்புக்கெடுக் கழிந்த நாள்முதல் கணக்கிடல் வேண்டும். இம்மாதிரியான சட்டப்பிரிவு லண்டன் நாட்டு பாங்கு சட்டத்தில் உண்டு. வைப்புகளும், கோரப்படாத இலாப ஈவுப் பங்குகளும் மற்றும் பாங்கு விடுத்துள்ள மாற்றுண்டியல்களும் 5 ஆண்டுகள்வரை கொடுக்கப்படாது இருப்பின் அவைகளைப் பற்றிய விபரங்களைத் தர வேண்டும். மேலும் அம்மாதிரியாகக் கொடுபடாத கோரப்படாத தொகை குறிப்பிட்ட காலத்திற்கு மேற்படின் நாட்டின் அரசினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தகவல் வெளியிட அதிகாரம்:—27வது பிரிவின்கீழ் தேவைப்

பட்ட தகவல்களை பாங்கு கம்பெனிகளிடமிருந்து கோர ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. எக்காலமும், எந்த நிலையிலும் பாங்கு கம்பெனிகள் சம்பந்தமான தகவல்களை தனித்தனியே அல்லது கூட்டாக, ரிசர்வு பாங்கு விரும்பிய வண்ணமே பொது மக்களின் நலனைக் கோரி வெளியிட அதிகாரமும் உரிமையும் உண்டு (பிரிவு 28)

இந்தப் பிரிவு 28 தகவல்களை வெளியிட அனுமதிக்கிறது. ஆனால் விளம்பரப்படுத்தக் கூறவில்லை. பிரிவு 43ன்கீழ் எல்லாத் தகவல்களையும் தெரிவித்துக் குறிப்பாக பொறுப்புகள், ரொக்கம், கடன், முன்பணம், கழிவு கொடுக்கப்பட்ட மாற்றுண்டியல்கள் என்ற பல தலைப்புகளின் கீழ் வாரமொரு முறை அட்டவணைப் படுத்தப்பட்ட பாங்குகளினால் விளம்பரம், 42வது பிரிவின் கீழ்ச் செய்ய அனுமதிக்கிறது.

ரிசர்வு பாங்கினுடைய இதர அதிகாரங்கள்:—மேலே கூறியவைகளுடன் இன்னும் பெருமளவில் ரிசர்வு பாங்கிற்குத் தனிப்பட்ட அளவில் பாங்கு கம்பெனிகள் சட்டம் 1949ன் கீழ் தேவையுள்ள போது கட்டளைகள் இடவும், தகவல்கள் உத்திரவுகள் போடவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த உத்திரவுகள் கட்டளைகள் முதலியன மேற்படி பாங்கு கம்பெனிகளைக் கட்டுப் படுத்தும்; அவை இறுதியானவை.

நாலாவது பிரிவின் முதலாவது உட்பிரிவின்படி இச்சட்டத்தின் எந்தப் பிரிவையும் அறுபது நாட்கள்வரை அமுலாக்காமல் ஒத்திபோடுமாறு ரிசர்வு பாங்கு மத்திய அரசினருக்கு முறையிட்டுக் கொள்ளலாம். (2) நெருக்கடி நிலையில் ரிசர்வு பாங்குக் கவர்னரோ அல்லது அவரில்லாத காலத்தில் துணைக் கவர்னரோ மேல் கூறியவண்ணம் மேலும் முப்பது நாட்களுக்குத் தள்ளிப் போட்டு மத்திய அரசினர்க்குத் தெரிவிக்கலாம். (3) ஒன்பதாம் பிரிவின்கீழ் பாங்கல்லாத வர்த்தகச்சொத்துகளை உடைமை நீக்க ஏழாண்டுக்காலம் கெடு கொடுக்கலாம். அல்லது வைப்பாளரின் நலனைக்கோரி மேலும் 5 ஆண்டுகள் வரை நீட்டலாம். பதினொன்றாவது பிரிவின் ஆறாவது உட்பிரிவின்கீழ் பாங்கினுடைய குறைந்தஅளவு செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வு நிதியும் எவ்வளவு இருக்க வேண்டுமென்பதை ரிசர்வு பாங்குதான் இவ்வளவு அளவென்று முடிவாகக் கூற உரிமை பெற்றுள்ளது. பனிரெண்டாம் பிரிவின் முதலாவது (5) (i) உட்பிரிவின்படி செலுத்தப்பட்ட மூலதனம், அளிக்கப்பட்ட மூலதனம் இவை சம்பந்தப் பட்ட ஒழுங்கு முறைகளை அனுசரிக்கும் காலத்தை இரண்டு

ஆண்டுகள் வரை நீட்டிக்க அனுமதிக்கிறது. ரிசர்வு நிதியைப் பற்றி முன்னர் கூறியதுபோல 17வது பிரிவின்கீழ் ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையில் இந்திய நாட்டின் எல்லைக்கப்பால் பாங்கு வர்த்தகம் செய்ய விரும்பும் ஒவ்வொரு பாங்கு கம்பெனியும் இதற்கெனத் துணைக் கம்பெனியை நிறுவி 19வது பிரிவின் கீழ் அதற்கான அனுமதியை ரிசர்வு பாங்கியினிடமிருந்து எழுத்து மூலம் பெறல் இன்றியமையாதது. வைப்போர்களின் நிலையைச் செம்மையாக அறிந்து ரிசர்வு பாங்கு 20வது பிரிவின் 3 வது உட்பிரிவின் கீழ் எழுத்து மூலமாக பாங்கு கம்பெனி மீது கட்டுப்பாடு செலுத்தி அதைத் தொடர்ந்து முன்பணம் கொடுத்தல், கடன்வசதியளித்தல் இவைகளைத் தடை செய்யலாம் அல்லது மேற்படி பாங்கு அனுப்பும் அறிக்கைகளை ஆய்ந்து இந்த முடிவைக் கட்டளையாக இடலாம். 21 பிரிவின் கீழ் எந்தப்பாங்குக் கம்பெனியும் அதன் இயக்குநர் பெற்றுள்ள கடனை வஜா (அல்லது குறைத்தல்) செய்வதற்கு ரிசர்வு பாங்கினிடமிருந்து எழுத்துமூலம் உத்தரவு வரவேண்டும். 22வது பிரிவின்கீழ் பாங்குகம்பெனிகள் பெறவேண்டிய உரிமத்திற்கான முறைகளை முன்னரே கூறியுள்ளோம். 23ஆவது பிரிவின்கீழ் நடப்பிலுள்ள அலுவலகங்களை மாற்றச்செய்யவும் புதிய இடங்களில் காரியாலயம்திறக்கவும் பிரிவு 23ன்கீழ் ரிசர்வுபாங்கு இடும் கட்டுபாடுகளையும் பெற்றுள்ள அதிகாரங்களையும் கூறியுள்ளோம். மாதாந்திர அறிக்கைகளை ஆய்ந்து அதன்படி பாங்குகம்பெனிகள் இருப்பு, சொத்து, பொறுப்புகள் இவைகளைக் காணவேண்டிய அதிகாரம் பிரிவு 24ல் ரிசர்வு பாங்கிற்கு அளிக்கப்பட்டுள்ளது. காலாண்டு அறிக்கையின் மூலம் இந்திய நாட்டிலுள்ள ஆஸ்திகளின் விவரம் 25வது பிரிவின் கீழ் கொடுக்க வேண்டும். 26வது பிரிவின் கீழ் உரிமை கோரப்படாதுள்ள வைப்புகள் எவ்வளவு என்பதை ரிசர்வு பாங்கு பாங்கு கம்பெனிகளின் அறிக்கைமூலம் கண்ணுற்றுத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். பிரிவுகள் 27, 28ன் கீழ் தேவைப்பட்ட விபரங்களைக் கேட்கவும், அவை சம்பந்தமான அறிக்கைகளைத் தயார் செய்து அனுப்புமாறு பாங்கு கம்பெனிகளுக்குக் கட்டளை இடவும் ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதை முன்னரே கண்டுள்ளோம். கணக்காண்டு முடிந்த மூன்று மாதங்களுக்குள்ளாகக் கணக்கு விபரங்களையும், ஐந்தொகையையும் ரிசர்வு பாங்கிற்கு அனுப்ப வேண்டும். தேவைப்படின் இந்தக் காலக் கெடுவை மேலும் மூன்று மாதங்களாக நீட்ட ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் உண்டு. 35ஏ. பிரிவின் கீழ் பாங்கு கம்பெனிகளுக்குக் கட்டளை பிறப்பிக்க ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் உண்டு. 35பீ. பிரிவின்கீழ் நிருவாக இயக்குநர் நியமனம் செய்ய ரிசர்வு பாங்குடன் முன்னதாகவே

அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். ரிசர்வு பாங்கு, பிரிவு 36ன் உட்பிரிவு (1)ன் கீழ்

(அ) பாங்கு கம்பெனிகளனைத்தும் அல்லது குறிப்பிட்ட பாங்கு கம்பெனி ஏதாவது ஒன்று மட்டும் குறிப்பிட்ட வர்த்தகத்திலோ அல்லது தொடர்ந்து சில பல வர்த்த கத்திலோ ஈடுபடக் கூடாதென்று எச்சரிக்கை செய்ய வும் அல்லது தடுக்கவும் அல்லது வர்த்தகம் செய்வது சம்பந்தமாக முறைகளை தெளிவு படுத்தலாம்.

(ஆ) கம்பெனிகளின் வேண்டுதலின் பேரில் 44ஏ பிரிவின் குறிப்பிட்டுள்ளவாறு உதவியளிக்க முன்வரலாம் அல்லது நடுவராக இருந்து, அல்லது வேறு முறை களில் முன்நின்று பாங்கு கம்பெனிகளைப் பிணைக்கலாம்.

(இ) ரிசர்வு பாங்கு எந்த பாங்கு கம்பெனி பண உதவி கடனைக் கோரினாலும் அல்லது முன்பண உதவி கேட்டபோதும் ரிசர்வு பாங்கு சட்டம் 18ஆம் பிரிவின் 1வது உட்பிரிவின் 3வது வகுப்பின் கீழ் உதவி யளிக்கலாம்.

(ஈ) 35வது பிரிவின் கீழ் ஆய்வு (பரிசீலனை) நடத்திய பின்னரோ அல்லது அவ்வமயமோ எழுத்துமூலம் ரிசர்வு பாங்கு கீழ்க்கண்ட விதத்தில் நிபந்தனைகளை விதிக்கலாம்.

(i) ஆய்வு நடத்தப்பட்ட பாங்கு கம்பெனியின் இயக்குநர்களை அழைத்து கூட்டம் கூட்டி ஆய்வில் கண்ட தகவல்களில் சர்ச்சைக் குரியவற்றை கலந்து ஆலோசிக்கவும் அல்லது பாங்கு கம்பெனியின் அலுவலர் ஒருவர் ரிசர்வு பாங்கு அலுவலருடன் பேச்சு வார்த்தை நடத்தவும்

(ii) ஒன்றல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்களை ரிசர்வு பாங்கு அனுப்பி, இந்த பாங்கு கம்பெனி யின் இயக்குநர் கூட்டத்தில் இருந்து அவர்கள் செய்யும் பேச்சு வார்த்தைகளைச் சரிவர கவனித்து ரிசர்வு பேங்கிற்கு தகவல் அனுப்பவும், அல்லது அவ்வாறு அனுப்பப்பட்ட அலுவலர்கள் சொல்லும் கருத்துகளை நன்கு தீவிரமாகச் செவி சாய்த்தல் இன்றியமையாதது என்று மேற்படி பாங்கு இயக்குநர்களை (குழுவினை) வற்புறுத்தலாம்.

மேற்படி கூட்டத்தில் நடந்த விவரங்களை ரிசர்வு பாங்கிற்கு அந்த அலுவலர்கள் தகவல் அளிக்க வேண்டும்.

(iii) நெறியாளர்கள் குழாத்தை அல்லது மேற்படி பாங்கு கம்பெனி நடத்தும் குழுவினரைத் தாங்கள் நடத்தும் கூட்டங்களின் விவரங்களை அவ்வப்போது ரிசர்வு பாங்கு அலுவலர்களுக்கு அவர்களுடைய தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பவும், மேலும் அவ்வப்போது கொடுக்கப்பட வேண்டிய விபரங்களையும் தகவல்களையும் அனுப்புமாறும் கட்டளையிடவும்

(iv) பாங்கு கம்பெனியின் தொழிலையும் அதன் கிளை அலுவலகங்கள் நடத்தும் தொழிலையும் மேற்பார்வை செய்து அவ்வப்போது ரிசர்வு பாங்கிற்கு தகவல் அனுப்ப ஒன்றல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்களை ரிசர்வு பாங்கு அனுப்பிவைக்கும்.

(v) ஆய்வுக் காலத்தில் கண்ட நிலையை அனுசரித்து ரிசர்வு பாங்கு முடிவு செய்து அந்த முடிவின்படி பாங்கு கம்பெனியில் மாற்றங்களைச் செய்யக் கால வரம்பளித்தோ அல்லது உடனே செய்யுமாறோ கட்டளை பிறப்பிக்கலாம்.

36வது பிரிவின் 3வது உட்பிரிவின்படி ரிசர்வு பாங்கு அலுவலர்களை நியமித்து வட்டார வழியாகவோ இடவசதியை அனுசரித்து, ஆங்காங்கே உள்ள பாங்குகளின் அறிக்கைகள் அட்டவணைகள் இவைகளையும் மற்றும் பாங்கு சம்பந்தமான தகவல்களைப் பரிசீலனை செய்ய உத்திரவு இடும். இதன் முடிவாக சீரிய முறையில் பாங்கு அலுவல்கள் நன்கு கவனிக்கப்படும். 36 ஏ.ஏ 36 ஏபி. பிரிவுகளின் கீழ் நிருவாகி மற்றும் இதர அலுவலர்களைப் பதவி நீக்கம் செய்யுமாறு உத்திரவு இடலாம். அவ்விடங்களில் அதிகப்படியாகக் கூடுதல் இயக்குநர்களை நியமிக்கக் கூடும். 39வது பிரிவின் கீழ் பாங்கு கம்பெனியின் கலைப்பு அதிகாரியாக நியமனம் பெறலாம். ஒரு பாங்கு கம்பெனி தாமகவே கலைப்பதற்கு (பிரிவு 44) வேண்டிய ஆயுத்தம் செய்து கொண்டிருக்கும் போது, பிரிவு 38ன் கீழ் ரிசர்வு பாங்கு நீதிமன்றத்திற்கு மனு செய்து நீதிமன்ற மேற்பார்வையில் கலைக்க கோரலாம். ஒரு பாங்கு கம்பெனி தனது கடன் கொடுப்போர்களுடன் பேசி இணக்க முடிவு செய்வதையோ அல்லது வேறு பாங்கு கம்பெனி

யுடன் பிணைப்பு அடிகோலிடுவதையோ குறித்து நீதிமன்றத்திற்கு மனுச் செய்துகொள்ள வேண்டுமானால் ரிசர்வுபாங்கு அதற்கான அனுமதியைச் சான்ருக அனுப்ப வேண்டும். பிரிவு 54ன் கீழ் ரிசர்வு பாங்கோ அல்லது அதனதிகாரிகளோ நேர்மையுடன் செய்துள்ள அலுவலினால் ஏற்படும் வழக்குகளின் நிமித்தம் காப்பீடு அளிக்கப்படுவார்கள். அதாவது சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வியலாது.[1]

பாங்குகள் கம்பெனி சட்டம் 1949ன்படி ரிசர்வு பாங்கிற்குக் கொடுக்கப்பட்டுள்ள கூடுதலான அதிகாரங்கள் வருமாறு:—

(1) பாங்கு பிணைப்புத் திட்டத்தை ரிசர்வு பாங்கு ஒப்பளித்தல் (44 ஏ பிரிவு)

(2) ஏதாவது பாங்கு கம்பெனி கடனைத் திருப்பித் தர முடியாத நிலையில் இருப்பின் மத்திய அரசினருக்கு, கடன் வசூலைச் சற்று ஒத்திப் போடச்சொல்லி உத்திரவு வாங்கிக் கொடுத்து மேற்படி பாங்கு கம்பெனியை உரு மாற்றம் செய்தல் அல்லது பிணைப்பிற்குத் திட்டம் வகுத்தல் (பிரிவு 45)

(3) ரிசர்வு பாங்குச் செயல்முறை விதிகளை ஆய்ந்து, பாங்கு கம்பெனியை ஒடுக்கம் செய்யும் செயல்முறை விதிகளைத் தெளிவுபடுத்தும் (பிரிவு 45 பி)

(4) பாங்கு ஒடுக்கம் செய்வதற்கு முன்னர் ரிசர்வு பாங்கு ஆய்வு செய்து முடிவை பற்றிய அறிக்கையைக் கொடுக்கும் (பிரிவு45 கியு)

(5) பாங்கினை ஒடுக்கம் செய்ய வந்த அதிகாரியிடமிருந்து அறிக்கையைக் கேட்டுவாங்க அதிகாரம் (பிரிவு 45 ஆர்)

---

1 மத்திய அரசினர் அங்கீகரித்துள்ள சிறுபான்மைத் தொழில்களுக்கு அவர்கள் பாங்குகளிலிருந்து பெறும் கடன் வசதிகளுக்கு உத்திரவாதமாக ரிசர்வு பாங்கு இருக்கும். இச்சிறுபான்மைத் தொழில்கள் சீரிய முறையில் வர்த்தகம் செய்யத் தவறினால் மேற்படி கடன் வசதியளிக்கும் பாங்கு அல்லது நிதிவசதியளிக்கும் நிறுவனம் உத்திரவாதம் செய்யும் ரிசர்வு பாங்குகள் மீது சட்டப்படி வழக்குத் தொடரலாம். இராச்சிய நிதி கார்ப்பரேஷன் (State financial Corporation மற்றும் இதர நிதி நிறுவனங்களுக்கு இடைக்காலக் கடன் (18 மாதங்களுக்கு மேற்படாது) வழியை மத்திய அரசினரின் அறிவிப்பிற்கிணங்க இதர நிதி நிறுவனங்களுக்கும் மொத்த கடன் தொகை அந்த நிறுவனங்களின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் ஒவ்வொரு சமயமும் 60% மேல் போகக் கூடாது.

(6) ரிசர்வு பாங்கியிலிருந்து எழுத்துமூலம்வரும் புகார்களை யனுசரித்து வேண்டாக்குற்றமாக நீதிமன்றம் முடிவு செய்யும் (பிரிவு 47)

(7) ரிசர்வு பாங்கு அனுமதித்தாலன்றி எந்தபாங்கும் பெயர் மாற்றம் செய்ய இயலாது. (பிரிவு 49 பி)

(8) கம்பெனிச்சங்க அமைப்பில் மாற்றம் ஏதாவது ஏற்படின் அதை ரிசர்வுபாங்கு அனுமதித்தால்தான் (பிரிவு 49 ஸி)

(9) பாங்கு சம்பந்தமான சட்டதிட்டம் வகுக்க மத்தியஅரசு ரிசர்வுபாங்குடன் ஆலோசித்துவரும் (பிரிவு 52)

(10) பாங்கு கம்பெனிச்சட்டத்தின் (1948) பிரிவுகளிலிருந்து எந்த பாங்கியையும் விதிவிலக்கு செய்யுமாறு ரிசர்வு பாங்கு மத்திய அரசினருக்கு பரிந்துரை செய்ய அதிகாரம் — (பிரிவு 53).

பாங்கு நியமங்கள் (பல்வேறுபிரிவுகள்) சட்டம் 1963-ன்படி ரிசர்வு பாங்குச்சட்டத்தில் III பி என்ற புதிதாக இணைத்துள்ள அதிகாரத்தின் கீழ் பிரிவுகள் 45 எச், முதல் 45 க்யு, வரை உள்ளன. அவற்றிற்கிணங்க பாங்கல்லாத நிறுவனங்கள் விளம்பரம், அல்லது தங்கள் தகவல் தொகுப்பின்மூலம் பொது மக்களிடமிருந்து வைப்புகள் கோருவதைத் தடை செய்யவும், அல்லது அனுமதிப்பின், அந்த விளம்பரங்கள் தகவல் தொகுப்புகள் எந்த நிபந்தனைக்குட்பட வேண்டும் என்று ரிசர்வு பாங்கு கட்டளையிடும்.

மத்திய அரசிற்கான அதிகாரங்கள்:— ரிசர்வு பாங்கிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை முன்னரே கவனித்தோம். பிரிவு 52ன்படி மத்திய அரசினர் விதிகளை வகுக்க அதிகாரம் பெற்றுள்ளனர்.

(1) மத்திய அரசினர் ரிசர்வு பாங்குடன் கலந்து ஆலோசனை செய்து பாங்கு கம்பெனிகள் சட்டத்தின் பிரிவுகளின்படி பாங்குகளை நடத்த விதிகளை வகுத்து வெளியிடுவார்கள்.

(2) குறிப்பாக முன்கூறிய பிரிவில் எதிர்ப்பு இன்றி, அந்த விதிகள் எவ்விதமான முறையில் அறிக்கைகள் எழுதப் பெற வேண்டும் என்றும், அவை எவ்வகையில் சட்டத்தின் அடிப்படையில் சமர்பபித்தல் வேண்டும் என்றும்

(3) முன்னர் செய்த வெளியீட்டின் நிபந்தனைகளை யொட்டியே இந்த விதிகள் அமைந்திருக்கும் எனலாம்.

எந்தத் தேதியிலிருந்து அமலாகிறது என்றறியப் பொதுப் பிரிவுகள் சட்டம் 1897 (10வது 1897) (General Clauses Act 1897) 23வது பிரிவின் 3வது உட்பிரிவின் கீழ் முன்னதாகவே தயாரிக்கப்பட்ட விதிகள் ஆறு மாதங்களுக்கு மேல் போகக்கூடாது.

முதல் முறையாக இந்த விதிகளை அமலாக்க வேண்டியிருப்பின் முன்கூறிய உட்பிரிவு தேவைப்படுவதில்லை.

(4) இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள விதிக்கிணங்க மத்திய அரசினர் 4வது அட்டவணை (அனுபந்தத்தில்) யில் உள்ளவற்றைக் கூட்டவோ குறைக்கவோ மாற்றியமைக்கவோ அதிகாரம் உண்டு. 53வது பிரிவின்படி மத்திய அரசு ரிசர்வு பாங்கு செய்யும் பரிந்துரையை அனுசரித்து இந்தச் சட்டத்தின் பிரிவுகள் அனைத்தும் அல்லது ஒரு சில மட்டும் எல்லாப் பாங்கு கம்பெனிகளையும் அல்லது ஒரு குறிப்பிட்ட பாங்குக் குழாத்தை மட்டும் பொதுவாகவோ அல்லது குறிப்பிட்ட கால வரையறையில் மட்டும் செல்லுபடியாகாதென அரசிதழலில் அறிக்கை மூலம் தெரிவிக்கலாம். 22வது பிரிவின் 5வது உட்பிரிவிற்கிணங்க ஏதாவது ஒரு காரணத்தின் அடிப்படையில் பாங்கு கம்பெனிக்கு வழங்கப்பட்ட உரிமம் நீக்கல் (ரத்து) செய்யப்படின், நீக்கம் செய்யப் பெற்ற முப்பது நாட்களுக்குள்ளாக மத்திய அரசினருக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். அவ்வாறான நிலையில் மத்திய அரசினர் தீர்த்து வைக்கும் முடிவே இறுதியானது. தேசீய நலனைக்கோரி, இரண்டல்லது மூன்று பாங்குக் கம்பெனிகளை ஒன்றாகப் பிணைக்க மத்திய அரசினர்க்கு அதிகாரம் பிரிவு 44ஏ(1)ல் விளக்கப்பட்டுள்ளது. ஆயினும் கம்பெனிகள் சட்டம் 1956ன் 396வது பிரிவிற்கிணங்க, ரிசர்வு பாங்குடன் கலந்தாலோசியாமல் முடிவு செய்ய அதிகாரம் கிடையாது. ரிசர்வு பாங்கு, பண வசூலைத் தாற்காலிகமாக ஆறு மாதத்திற்கு மேற்படாமல் நிறுத்தி வைக்குமாறுகோரிய மனுவையேற்றுப் பிரிவு 45ன் கீழ் அனுமதிக்க அதிகாரம் பெற்றுள்ளது. அதேபோல் பாங்குகளைச் சீராக்கி உருமாற்றவும், இணைக்கவும் ரிசர்வு பாங்கினுடைய திட்டத்தையும் ஏற்றுக் கொள்ளுகிறது.

கணக்குகளும் ஐந்தொகைகளும்:—பிரிவு 29ன் கூற்றாவது வருமாறு:—

(1) நாளட்டவணை (பஞ்சாங்க) ஆண்டு முடிவின்போது, இந்தியாவில் இணைக்கப்பெற்ற பாங்குக் கம்பெனிகள் அவர்கள் நடத்திய வர்த்தகக் கொடுக்கல் வாங்கல் தகவல்களையும், வெளிநாடுகளில் இணைக்கப்பெற்ற பாங்குக் கம்பெனிகள் செய்யும் வர்த்தகத் தொழில் முழுவதையும் இந்தியாவில் உள்ள கிளைகள் அனைத்தும் செய்யும் வர்த்தகம் சேர்த்து மேற்படி ஆண்டின் இறுதியில் கடைசி நாளின்போது உள்ள கணக்கு நிலையை மூன்றாவது அட்டவணையில் (அனுபந்தம் 'அ' வைப் பார்க்கவும்) கொடுக்கப்பட்ட மாதிரியில் இலாப நட்டக்கணக்கும், ஐந்தொகையும் அமைத்தும்

இந்தியாவிற்கு வெளியே இணைக்கப்பட்ட பாங்கு கம்பெனிகள் மட்டும், ஆண்டு முடிவடைய இரண்டு மாதங்களுக்கு முன்னரே இலாப நட்டக் கணக்கைத் தயார் செய்து அனுப்ப வேண்டும்.

(2) ஐந்தொகை, இலாப நட்டக் கணக்கு இவ்விரண்டும் கையொப்பம் இடப்பட வேண்டும்.

(அ) இந்தியாவில் இணைக்கப்பெற்ற பாங்குக் கம்பெனியாக இருப்பின் அதன் நிருவாகி, அல்லது தலைமை அலுவலர், மேலும் 3 இயக்குநர்களுக்கு அதிகம் இருப்பின் அந்த மூன்று இயக்குநர்களும் 3 இயக்குநர்களுக்குக் குறைவாகவே இருப்பின் எல்லா இயக்குநர்களும் கையொப்பம் இடவேண்டும்.

(ஆ) அயல் நாட்டில் இணைக்கப்பெற்ற பாங்கு கம்பெனியாக இருப்பின் அதன் நிருவாகி, தலைமை அலுவலர் (இவர்கள் இந்தியக் கிளையில் இருப்பவர்) கையொப்பம் இடல் வேண்டும்.

(3) பகுதி 1 அட்டவணை 6ல் விளக்கப்பட்டது போல் இலாப நட்டக் கணக்கும் ஐந்தொகைகளும் முதல் உட்பிரிவில் கூறப்பட்டதுபோல் அல்லாமல் இதர வகையில் இருப்பின், அதற்கான சட்டப் பிரிவுகளுக்கு ஏற்ப பாங்கு கம்பெனியின் இலாப நட்டக் கணக்கும் ஐந்தொகையும் அமைய வேண்டும்.

(4) 3வது அட்டவணையில் கொடுத்துள்ள மாதிரியை மாற்ற வேண்டிய எண்ணம் தோன்றினால் மத்திய அரசினர் மூன்று மாத காலத்திற்குள்ளாக அரசிதழில் வெளியிட்டு விட்டு மாற்றம் செய்வார்கள்.

... "எஃப்" என்ற படிவம் ஒவ்வொரு கம்பெனியாலும் தயார் செய்து அனுப்பவேண்டிய ஐந்தொகையின் மாதிரி எனலாம். சொத்துகளையும், பொறுப்புகளையும் இந்த ஐந்தொகைப் படிவத்தில் எழுதும்போது பலவகையான மாற்றங்களுக்கும் இடமளிக்க வேண்டி நேரிடுகிறது என்பது வல்லுநர்கள், பாங்கு விசாரணைக் குழுவினர், இவர்களுடைய அபிப்பிராயம். பாங்கு கம்பெனிகள் சட்டத்திற்கிணங்க மேற்படி ஐந்தொகை விளக்கமாக அமையவில்லை யாதலால், பாங்கு கம்பெனிகளுக்கெனத் தனி நமூனைக்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் இந்த மாதிரிகள் உள்ளன. இந்தியாவில் இணைக்கப்பெற்ற பாங்குகளுக்கிடையே; புறப்பகட்டிற்கு வேண்டி, ஐந்தொகையமைப்பில் செய்யும் சோதனைகளை நீக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆண்டு முடியும் நாளன்றே பாங்கு கம்பெனிகள் அனைத்தும் தங்கள் கணக்குகளை முடித்து இருப்புக் கட்ட வேண்டும் எனக்கட்டளையிடப்பெற்றது. இந்தியாவிற்கு வெளியே இணைக்கப்பெற்ற பாங்கு கம்பெனிகள் நாளட்டவணையாண்டு இறுதியாக இரண்டு மாதங்கள் முடிவடையு முன்னரே இலாபநட்டக் கணக்கினைத் தயாரிக்கவேண்ம். ஆயினும் ஆண்டு முடிவடையும் இறுதிப்பணியாற்றும் நாளின் போது ஐந்தொகை தயார்செய்யப்படவேண்டும். உட்பிரிவு 1ன் வாசக விளக்கம் தேவைப்படுகிறது.

இந்தியாவிலேயே பதிவு செய்யப்பெற்ற பாங்கு கம்பெனிகள் தங்களுடைய உள்நாட்டு அயல்நாட்டுக்கிளைகள் அனைத்தும் சார்ந்த தொழிலின் மொத்தகணக்கினைத் தயார்செய்து சமர்ப்பித்தல் வேண்டும். ஆயினும் அயல் நாடுகளில் பதிவு செய்யப்பெற்ற பாங்கு கம்பெனிகள் தங்களுடைய இந்திய நாட்டுக் கிளைகளுடைய பாங்குத் தொழிலின் கணக்கினை மட்டும் கொடுக்க வேண்டும். 3ம் அட்டவணையில் கொடுக்கப் பெற்ற நமூனைக் களையும் படிவங்களையும் மாற்றியோ திருத்தியோ நடைமுறையில் வருமுன்னரே மூன்று மாத காலத்திற்குள்ளாக இந்திய அரசிதழில் வெளியீடுசெய்யப்பட வேண்டிய அதிகாரம் மத்திய அரசினருக்கு உண்டு.

1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் ஆறாவது அட்டவணையில் மாதிரியாகக் கொடுக்கப்பட்டுள்ள ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கினையும் தழுவி பாங்கு கம்பெனிகள் எழுதிச் சமர்ப்பிக்கக்கூடாது. எனவே பாங்கு கம்பெனிகள் சட்டம் 1949ன் மூன்றாவது அட்டவணையின் "ஏ" "பீ" என்ற படிவங்களை அனுசரித்து எழுதிச் சமர்ப்பித்தல் இன்றியமையாதது.

தணிக்கை:— பிரிவு 30ல் கொடுக்கப்பட்ட விவரம் வருமாறு—

(1) 29ஆம் பிரிவை அனுசரித்து எழுதப் பெற்ற இலாப நட்டக் கணக்கும் ஐந்தொகையும் கண்டிப்பாகத் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

(அ) இந்தியாவில் இணைக்கப் பெற்ற கம்பெனியாக இருப்பின் நடப்பிலுள்ள சட்டப்படி தகுதி பெற்ற கம்பெனித் தணிக்கையாளர் அவர்களாலும்

(ஆ) அயல் நாட்டில் இணைக்கப்பெற்று இந்தியாவில் தொழில்புரியும், பாங்கு கம்பெனிகளின் கணக்குத் தணிக்கை முன்பிரிவில் குறிப்பிட்டவாறு தகுதியுள்ளவரோ அல்லது இணைப்புப் பெற்ற நாட்டின் நடப்பிலுள்ள சட்டப்படி தகுதி பெற்றவரோ தணிக்கை செய்தல் வேண்டும்,

(2) கம்பெனிகள் சட்டம் 1956ன் 227வது பிரிவிற்கேற்பத் தணிக்கையாளர் அதிகாரம் பெற்றும், அதனடிப்படையில் செயலாற்றியும் கடமை வழுவாதும், இவற்றின் விளைவாக ஏற்படும் பொறுப்புகளுக்கும், தண்டங்களுக்கும் ஈடுபடல் வேண்டும்.

(3) மேலே கூறியவைகளுடன் அடுத்து, தணிக்கையாளர் இந்தியாவில் இணைக்கப்பெற்ற பாங்கு கம்பெனியைப் பற்றிய அறிக்கையில்

(அ) அவர் கோரிய தகவல்களும், விளக்கங்களும் நிறைவுதரும் முறையில் அமைந்தனவா அல்லது இல்லையா என்றும்

(ஆ) கம்பெனியின் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் அந்த கம்பெனியின் அதிகாரங்களுக்குட்பட்டனவா அல்லது மீறினவா? என்றும்

(இ) தணிக்கைக்கு வேண்டிய அளவில் பாங்கு கம்பெனிகளின் கிளைகளிலிருந்து அவ்வப்போது அனுப்பப் பட்ட அறிக்கைகளும் தகவல்களும், பயனுள்ளவை தானா அல்லது இல்லையா என்றும்

(ஈ) கணக்காண்டின் இறுதியில் காட்டப்பெற்ற இலாப நட்டக் கணக்குச் சரிவர உண்மையான இலாப அல்லது நட்ட நிலையைக் குறிப்பிடுகிறதா அல்லது இல்லையா என்றும்

(உ) கம்பெனியின் பங்குதாரர்களின் பார்வைக்குக் கொண்டுவரத் தகுதியானவை என்று கருதப்படும் இதரத் தகவல்களும் விபரங்களும்

இந்தப் பிரிவு கம்பெனிச் சட்டத்தின் பிரிவுகள் 226யும் 227யும் ஒட்டியுள்ளதைக் காணலாம். இந்திய நாட்டிலிணைப்புப் பெற்ற பாங்கு கம்பெனிகளாயிருப்பின் அவை நடப்பிலுள்ள சட்டப்படி தகுதிபெற்ற கம்பெனித் தணிக்கையாளரால் அதாவது பட்டயக்கணக்கர் (Chartered Accountant) சட்டம் 1949ன் இணைப்பு பெற்ற நபரால் தணிக்கை செய்யப்படல் வேண்டும். அயல் நாட்டில் இணைப்புப்பெற்ற கம்பெனியாக இருப்பின், அந்நாட்டின் நடப்பிலுள்ள சட்டத்தை யனுசரித்துத் தணிக்கை செய்யப்படல் வேண்டும்.

கம்பெனிகள் சீர்திருத்தச்சட்டம் 1960-ன்படி கிளையலுவலகங்களின் கணக்குகளைக் கூடப் பட்டயக் கணக்கர்தான் தணிக்கை செய்தல் வேண்டும் என்றுள்ளது. மேலும் கணக்காண்டு முடிந்த ஆறு மாதங்களுக்குள்ளாக ஐந்தொகையையும் இலாப நட்டக் கணக்கினையும் அங்கீகரித்தல் இன்றியமையாதது.

பல்வேறு நாடுகளிலுள்ள சட்டங்களில் இம்மாதிரியான பிரிவுகள் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக பெல்ஜிய நாட்டில், தணிக்கையாளர் நியமனத்தை பாங்குத் தொழில் அலுவலர்கள் அனுமதித்தல் வேண்டும். தணிக்கையாளர் தொடர்ந்து, அவர் தணிக்கை செய்யும் பாங்கினுடைய, தொழிலைக் கண்காணித்து வருதல் வேண்டும். முறைதவறிப் பாங்குத் தொழில் செய்து வருகிறது என்ற ஐயம் ஏற்படின் உடனே அதனுடைய தொழிலை நிறுத்த ஏற்பாடு செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறார். தனித்தியங்கும் தணிக்கையாளர்கள் இருவர் பாங்கினுடைய கணக்கைப் பார்வையிட்டுத் தணிக்கை வேண்டுமென்ற நியதி கனடா நாட்டில் வழக்கிலுள்ளது. இரண்டாண்டுகளுக்கு மேல் தொடர்ந்து அவர்கள் தணிக்கை செய்யக்கூடாது என்றியம்புகிறது அவ்வூர்ச் சட்டம். இந்நாட்டு சட்டத்திலும் இம்மாதிரியான தணிக்கையைப் பற்றிய பிரிவு இருப்பின் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்று கூறவும் வேண்டுமா? சுவீடன் நாட்டிலுள்ள பாங்கு இயலில் மூன்று தணிக்கையாளர்கள் நியமனம் செய்யப்படல் வேண்டும். மூவரில் ஒருவர் பாங்குப் பரிசோதக ஆய்வாளர் குழுத்தால் அமர்த்தப்பட வேண்டும் இதரர் இருவரும் பொதுக்கூட்டமொன்றில் பங்குதாரர்களால் நியமனம் செய்யப்படல் வேண்டும்

தணிக்கை செய்யப்பட்ட ஐந்தொகைகளை காட்சிப் படுத்தல்

பிரிவு 223 கம்பெனிகள் சட்டத்தின்படி பாங்கு கம்பெனிகள் தங்கள் உறுப்பினருடைய பார்வைக்கு வேண்டி அட்டவணைப் படிவமும், தணிக்கை செய்யப்பட்ட ஐந்தொகையையும் வைத்தல் வேண்டும். அடுத்த அட்டவணை வரும் காலம் வரை நடப்பிலுள்ள அட்டவணை, தணிக்கை செய்யப்பட்ட ஐந்தொகை இவைகளைப் பகட்டாகத் தெரிகிற பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அனைவரின் கண்களிலும்படும்படியான பகட்டான இடத்திலும், அந்த பாங்கு தொழில் நடத்தும் பற்பல இடங்களின் அலுவலகங்களிலும் தெளிவாக வைக்க வேண்டும். அட்டவணை (Schedule) 1ன் நமுனு "எஃப்" மாதிரியில் அல்லது கிட்டத்தட்ட அந்த அமைப்பில் ஒத்த ஒரு தணிக்கை செய்யப்பட்ட ஐந்தொகையை, தொழில் நடத்தும் இடம் ஒவ்வொன்றிலும் ஃபிப்ரவரி மாத முதல் திங்கட்கிழமையன்றும் ஆகஸ்டு மீ முதல் திங்கட்கிழமையன்றும் கண்டிப்பாகக் காட்சிக்கு வைக்க வேண்டும் என்று மேற்படி பிரிவு கூறுகிறது.

அயல் நாட்டில் இணைப்புப்பெற்ற பாங்கு கம்பெனியாக இருப்பின் இந்தியாவில் அதனுடைய முதன்மையான அலுவலகத்திலும், இதரக் கிளை அலுவலகங்களிலும் ஒவ்வொரு ஆண்டின் ஆகஸ்ட் மீ முதல் திங்கட்கிழமையன்று, 29அம் பிரிவின் அடிப்படையில் தயார் செய்த இலாப நட்டக் கணக்கு ஐந்தொகை இவற்றின் படிவங்களை எல்லோரும் காண்பதற்குச் சௌகரியமான இடத்தில் மாட்டிவைக்க வேண்டும். அயல் நாட்டு பாங்கு கம்பெனியாக இருப்பின் அவற்றின் ஒருங்கே திரண்டுள்ள வர்த்தகத்தைக் குறிக்கும் ஆண்டிறுதி இலாப நட்டக்கணக்கு, ஐந்தொகை எவ்வமயம் தயாராகியதோ அவ்வமயம் அவ்வாறு காட்சிக்கு வைக்க வேண்டும். அடுத்த ஆண்டின் இறுதிக் கணக்குப் படிவங்கள் மாட்டப்படும் வரை நடப்பிலுள்ளவை இருக்கும் (பிரிவு 33) இச்சட்டம் வருமுன்னர் நடந்த ஆண்டின் இறுதியில் கணக்குமுறை, தணிக்கை, ஐந்தொகை தயாரிப்பு இவைகளைப் பற்றிக் கட்டுப்படுத்த இச்சட்டத்தில் எவ்விதக் குறிப்பும் இல்லை. இச்சட்டம் வருமுன்னர் நடப்பிலிருந்த சட்ட ரீதியாக இவைகள் தயார் செய்யப்பட வேண்டும். (பிரிவு 34) கணக்கு அட்டவணைப் படிவங்கள் தயார் செய்வதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க, கணக்கு ஆண்டு இச்சட்டம் ஆரம்பிக்கு முன்னர் முடிவடைந்து விட்டபடியால் இந்தப் பிரிவு 34வது பிரிவு ஏற்பட்டது. பாங்கு கம்பெனிகள் சீர்திருத்தச் சட்டம் (1960,ல் 34ஏ என்ற பிரிவைச் சேர்த்துள்ளனர். இதன்படி ஐந்தொகையிலோ, இலாப நட்டக் கணக்கிலோ ஏதேனும் ஒரு தகவல்

காண்பிக்க வேண்டியதின் அவசியம் இல்லையானால் மேற்படி தகவலைத் தொழில் தகராறுகள் சட்டத்தின் கீழ் பல்வேறு அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. அகில இந்திய பாங்கு ஊழியர்கள் சங்கத்திற்கு எதிராக தேசியத் தொழில் ட்ரிபுனல் (பாங்கு தகராறுகள்) பம்பாயும் இதரர்களும் என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் (சி. சி. 1962 (3) பக் 302) கொடுத்த தீர்ப்பில் பாங்கு கம்பெனிகள் சட்டம் 1949ன் 34ஏ பிரிவு எனப்படுவது, தொழிற் சங்கங்களுக்கு இந்திய அரசியல் அமைப்பின்கீழ் பிரிவு 19 (1) (C)ல் அளிக்கப்பெற்ற அடிப்படை உரிமையை அழித்து விடுவதில்லை.

ஆய்வு—பிரிவு 35 கூறுவதாவது:—

(1) கம்பெனிச சட்டத்தின் 235ஆவது பிரிவில் கூறப்பட்டது எதிராக இருப்பினும், ரிசர்வு பாங்கு, மத்திய அரசினரின் உத்திரவின் பேரில் அதனுடைய ஒன்றல்லது பல அலுவலர்களைக் கொண்டு எந்த பாங்கு நிறுவனத்தையும் ஆய்வு செய்யலாம் அதன் கணக்குகளையும், புத்தகங்களையும் பரிசீலனை செய்யலாம். அவ்வளவு ஆய்வு செய்தவுடன் ரிசர்வுபாங்கு மேற்படி பாங்கிற்கு ஆய்வின் அறிக்கைப் படிவம் ஒன்றையனுப்பி வைக்கும்.

(2) பாங்கு கம்பெனியின் இயக்குநர், இதர அலுவலர், ஊழியர் யாராகினும் ஆய்வு நடத்தும் அலுவலர் (1ம் உட்பிரிவின்படி) கோரும் கணக்குப் புத்தகம், கணக்குகள், இதர தஸ்தாவேஜுகள் இவைகளைக் காண்பிக்க வேண்டும். அவரது அதிகாரத்திற்குட்பட்ட தகவல்களைத் தெரிவிக்க வேண்டும். ஆய்வு நடத்தும் அதிகாரி பாங்கு கம்பெனியின் வர்த்தகத்தைக் குறித்துக் கோரும் தகவல்களை விவரப்படுத்த வேண்டும்.

(3) முதலாம் உட்பிரிவின் கீழ் ஆய்வு நடத்துபவர் பிரமாணம் செய்யச் சொல்லி இயக்குநர், செயலர்கள் மற்றும் இதர ஊழியர்களைத் தேர்வு செய்யலாம்.

(4) மத்திய அரசினரின் கட்டளைப்படி ரிசர்வு பாங்கு நடத்தும் போதும், தானாகவே ஆய்வு நடத்திய காலத்திலும் இப்பிரிவின் கீழ் மத்திய அரசினருக்கு அறிக்கையை அனுப்பிவைக்கும். மத்திய அரசினர் மேற்படி அறிக்கையை சரிவர ஆராய்ந்து, மேற்படி பாங்கு கம்பெனிகள் அதன் வைப்பாளர்களின்,

நலனுக்கு தீங்கிழைக்கும் வகையில் தொழில் செய்து வருகிறது என்று அது காரணமாக அந்த பாங்கு கம்பெனிக்குப் போதிய அவகாசம் கொடுத்து அதனுள்ளாக முறையீடுகள் செய்யுமாறு கூறிய பிறகும் சீர்திருத்தம் பெருத நிலையில் தங்கள் உத்திரவை எழுத்து மூலம்

(அ) புதிய வைப்புகள் வாங்கக் கூடாதென்று பாங்கு கம்பெனியைக் கட்டுப்படுத்தும்

(ஆ) 38 ஆம் பிரிவின் கீழ் மேற்படி பாங்கு கம்பெனியை முடித்தற்கான செயலை ரிசர்வு பாங்கியை நடத்தக் கட்டளையிடும்

மத்திய அரசின் காலவரையறையைத் தங்கள் விருப்பப்படி தள்ளிப் போடலாம் அல்லது இந்த உட்பிரிவின் கீழ் போடும் உத்திரவை நிபந்தனைகளின் அடிப்படையில் மாற்றியோ, அல்லது, நீக்கியோ, குறைத்தோ போட அதிகாரம் உண்டு

(இ) பாங்கு கம்பெனித் தகுந்த அவகாசம் கொடுத்த பின்னர் ரிசர்வு பாங்கியின் அறிக்கையை முழுவதுமோ அல்லது மிகவும் இன்றியமையாதது என்று கருதும் பகுதியையோ மத்திய அரசினர் வெளியீடு செய்யலாம்.

விளக்கம்— 'பாங்கு கம்பெனி' என்றபதங்கள், இப்பிரிவின் கீழ்

(i) அயல் நாடுகளில் இணைப்புப் பெற்ற பாங்கு கம்பெனிகள் இந்தியாவில் உள்ள கிளைகள் அனைத்தும்

(ii) இந்தியாவில் இணைக்கப் பெற்ற பாங்கு கம்பெனிகளாயின்

(அ) அவற்றின் துணைக் கம்பெனிகள் பாங்குத் தொழில்களை அயல் நாட்டில் நடத்தும் நிறுவனம்

(ஆ) அதன் கிளைகள் இந்தியாவில் இருக்கலாம் அல்லது வெளியே இருக்கக்கூடும்.

பாங்கு கம்பெனிகளின் பங்குதாரர்களும், வைப்பாளர்களும்

செய்துள்ள மூலதனம், வைப்பு இவைகளைக் காப்பளிக்க வேண்டி இந்தப் பிரிவை இணைத்துள்ளனர். இதன் விளைவாக பாங்கு இயக்குநர்களும் நிருவாகிகளும் மிகவும் எச்சரிக்கையுடன் இதன் நிதிகளைப் பயன் படுத்துவார்கள்.

பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949 ன் பிரிவு 45 க்யூ பிரிவின் படியும் கம்பெனிகள் சட்டம் 1956 ல் 237 வது பிரிவின் படியும் மத்திய அரசினரும், ரிசர்வு பாங்கும் இருவருமாக ஆய்வு நடத்தலாம் என உள்ளது. பொதுவாகக் கம்பெனிகளில் நடந்து வரும் தகாத முறைகளையும் குறிப்பாகக் கம்பெனிகளில் நடந்துவரும் தவறான முறைகளையும் கட்டுப்படுத்திக் கண்டிக்க இந்தப் பிரிவுகளை இணைத்துள்ளனர். பாங்கு கம்பெனிகளுக்கு உரிமம் வழங்குதலில் இவற்றின் மூலம் நன்மை யேற்படுகிறது. ஆய்வின் காரணமாக அநேக பாங்குகளுக்கு உரிமம் வழங்குதலை ரிசர்வு பாங்கு தடுத்து மறுத்துவிட்டது.

இயக்குநர்களும், கணக்குகளைப் பார்வைக்கு வைத்தலில் அவர்களுடைய பொறுப்புகளும்:—கம்பெனிகள் சட்டம் 1956ன் 166வது பிரிவின் 3வது உட்பிரிவின் கீழ் கம்பெனி இயக்குநர்கள் பொது ஆண்டுக் கூட்டத்தை நடத்த வேண்டும் அவ்வமயம் மேற்படி சட்டத்தின் 210 ஆவது பிரிவின் கீழ் மேற்படி கூட்டத்தில் இப்பிரிவின் உட்பிரிவு 3ல் கூறிய கால வரையறையுள்ள கணக்காண்டு விவரம் கொண்ட இலாப நட்டக் கணக்கையும் ஐந்தொகையையும் சட்டப்படி சர்ச்சைக்குக் கொண்டு வர வேண்டும். 220வது பிரிவில் கண்டுள்ளது போல் இலாப நட்டக் கணக்கட்டவணை, ஐந்தொகை இவற்றின் மூன்று படிவங்களைக் கம்பெனிப் பதிவாளரிடம் கோப்பிட வேண்டும். இதைச் செய்யத் தவறினால் தண்டம் விதிக்கப்படும். இதனுடைய அடிப்படையில் பார்க்கின் இயக்குநர்களின் பொறுப்பு மிகவும் அதிகரித்துள்ளது எனலாம். பல்வேறு கம்பெனிகளின் நிதியாண்டு பல்வேறு திங்களில் முடிகிறபடியால், கம்பெனிச் சட்டத்தை நன்முறையில் எல்லாக் கம்பெனிகளுக்கும் ஒரே கால வரையறையில் ஆண்டு முடிவு நாளைக் குறிப்பிட்டுச் சீர் திருத்தம் செய்ய வேண்டியது இன்றியமையாததெனலாம்.

ஐந்தொகைப் படிவங்கள் மூன்றும் இதரக் கணக்குப் படிவங்களையும், 29வது பிரிவின் கீழ்த் தயார் செய்து 30ஆவது பிரிவின் கீழ்த் தணிக்கையாளரின் அறிக்கை நகலைச் சேர்த்து ஆண்டு முடிந்த 3 மாதங்களுக்குள்ளாக ரிசர்வு பாங்கிற்குப் பணிந்தனுப்ப வேண்டும். (பிரிவு 31) ரிசர்வு பாங்கு சம்மதித்தால் மேலும்

மூன்றுமாத காலம் நீட்டித் தரப்படும். மேலும் பாங்குக் கம்பெனிகள் விதிகளின் 1949ன் 15வது விதிப்படி பாங்குக் கம்பெனியுடைய கணக்குகளையும் ஐந்தொகையையும் தணிக்கையாளருடைய அறிக்கையையும் இந்த பாங்குக் கம்பெனியின் தலைமை முதலிட அலுவலகம் உள்ள வட்டாரத்தில் புழக்கத்திலிருக்கும் தினசரித்தாளில் ஆறு மாத காலத்துக்குள்ளாக வெளியிட வேண்டும். பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் 32ஆம் பிரிவின் படி ஒவ்வொரு பாங்குக் கம்பெனியும் கம்பெனிப் பதிவாளரிடம் தங்கள் கணக்குப் படிவங்கள் ஐந்தொகை இவற்றின் 3 படிவங்களைக் கட்டாயம் கோர்வையிட வேண்டியது. அநேக நாடுகளில் இம்மாதிரியான சட்டப் பிரிவுகள் உள்ளன. எடுத்துக் காட்டாக டென்மார்க் நாட்டில் காலாண்டிற்கு ஒரு முறை ஏதாவது ஒரு செய்தித்தாளில் மாதாந்திர அட்டவணையை 3 மாதம் முடிவடையும் மாத இறுதியில் வெளியிடல் வேண்டும். பாங்கினுடைய கிளைகள் எங்கெங்கெல்லாம் உண்டோ ஆங்காங்கே உள்ள செய்தித்தாள்களில் ஆண்டுக் கணக்கு அட்டவணைப் படிவத்தை வெளியிடல் இன்றியமையாதது. சட்டப்படி மாதாந்திரக் கணக்குகளை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் இல்லையெனினும் (London Clearing Banks) லண்டன் பாங்குத் தீர்வகங்கள் மாதாந்திரக் கணக்குகளை அவ்வப்போது செய்தித்தாள்களில் வெளியிடுகின்றன.

லாப ஈவுப்பங்குகள்—பெயரளவில் சொத்தாக மாற்றப்பட்ட செலவினங்கள் (பங்கு விற்பனை கமிஷன், தரகு, கம்பெனித் துவக்கச் செலவு) அனைத்தும் இலாப நட்டக் கணக்கில் அளவுக்கேற்ப நட்டமாக எழுதி முடிவுபெற்ற பின்னர் அந்த பாங்குக் கம்பெனியின் பங்குகளுக்கு இலாப ஈவுப் பங்கு கொடுக்கலாமே ஒழிய அதற்கு முன்பு கொடுத்தல்கூடாது. பிரிவு 15, பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949, திட்டமாக எல்லாச் சொத்தாக மாற்றப்பட்ட செலவினங்கள் அனைத்தும் நட்டமாகத் தள்ளப் பட்ட பின்னர்த் தான் பங்குகளின் மீது இலாப ஈவு கொடுக்கலாம் எனக் கூறுகிறது. ஆயினும் 1959ஆம் ஆண்டு பாங்குக் கம்பெனிகள் சீர்திருத்தச் சட்டத்தின்படி பாங்குக் கம்பெனிகள் தங்கள் பங்குகளின் மீது இலாப ஈவு கொடுக்க வேண்டுமானால் அதற்காக முதலாக்கப்பட்ட செலவினங்களைத் தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியமில்லை.

(i) அங்கீகாரம்பெற்ற ஆவணங்களில் உள்ள ஆவணங்களில் தேய்மானத்திற்கெனத் தொகையை முதலாக்காது அவ்வப்போது நட்டமாக எழுதியிருப்பின்

(ii) பங்குகளிலும், கடன் பத்திரம் என்ற டிபெஞ்சரிலும், பத்திரங்களிலும் (அங்கீகாரம் பெற்ற ஆவணங்கள் நீங்கலாக) தக்க அளவு தேய்மானத்திற்கான முதலீட்டிருப்பு, தணிக்கையாளரின் திருப்திக்குரிய அளவில் இருப்பின்

(iii) வாரக்கடன் ஒதுக்கு ஏற்பட்டவிடத்தில், அவ்வப்போது ஏற்படும் வாரக்கடன் இவ்வொதுக்குத் தொகை தணிக்கையாளரின் திருப்தியை அனுசரித்ததே.

கம்பெனிகள் சட்டம் 1956ன் 205ஆவது பிரிவையும் அனுபந்தம் IIல் உள்ள அட்டவணை "ஏ"யில் 73வது பிரிவையும் சேர்த்து வாசித்து நோக்கின் தெளிவாவது; பாங்குக் கம்பெனி தேய்மானக் கணக்கிற்குப் போதிய அளவு கொடுபடாதபாக்கிகளை அந்த ஆண்டு இலாபத்தில் கழித்து எஞ்சியதைத்தான் இலாப ஈவாக்கலாம். இலாப ஈவு கொடுத்தல் இலாபமிருந்தால்தான் ஒழிய இதர முறைகளைப் பயன் படுத்துதல் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்படும். பதிவு பெற்ற பங்குதாரர்களுக்கோ, அல்லது அவர்களுடைய உத்திரவு பெற்றவர்களுக்கோ அல்லது அவர்களுடைய பாங்குக் கணக்குள்ள பாங்கு நடத்துபவரிடமோ தான் இலாபப் பங்கைக் கொடுக்கலாம் என்று கம்பெனிகள் சட்டம் 1956ன் 206வது பிரிவு கட்டுப்படுத்துகிறது. இலாப ஈவுப் பங்கு இவ்வளவு என்று கம்பெனி திட்டமாகப் பறை சாற்றிய 42 நாட்களுக்குள்ளாக ரொக்கமாக இலாப ஈவுப்பங்கைக் கொடுக்கவில்லையானல் கம்பெனிகள் சட்டம் 1956ன் 207வது பிரிவின் கீழ் மேற்படி கம்பெனி தண்டம் கட்ட வேண்டும்.

தாற்காலிகத் தொழில் முடக்கம்:—பகுதி 3 முதல் 3'ஏ' வரையிலுள்ள பிரிவுகள் 37முதல் 45 எக்ஸ் வரையிலுள்ள பாங்குகள் கம்பெனி சட்டத்திலும் அதற்கு எவ்விதமும் மாற்றமில்லாது கம்பெனிகள் சட்டத்திலுள்ள (1966) பிரிவுகளும் மேலேகூறியுள்ள தலைப்பைப் பற்றி விளக்கம் செய்கின்றன. தாற்காலிகமாகத் தமது பொறுப்புகளைக் கொடுக்க இயலாத நிலையில் உள்ள பாங்குகள் 37வது பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்குத் தம்மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென்றும், ஒரு குறிப்பிட்ட காலம்வரை வழக்குத் தொடர வேண்டாமென்றும் அதற்கான நிபந்தனைகளையும் விவரங்களையும் எழுதி மனுச்செய்து கொள்ள வேண்டும். மேன்மேலும் இந்தக் காலத்தை நீட்டிக் கொடுக்குமாறு மனுச் செய்யலாம். ஆயினும் காலவரையறை ஆறு மாதங்களுக்கு மேல் அதிகப்படக்கூடாது. ரிசர்வு பாங்கு இது

சம்பந்தமான அறிக்கையில் இம்மாதிரி மனுவையேற்றுக் கொண்டால், மேற்படி பாங்குத் தனது பொறுப்புகளை ஒழுங்கான முறையில் தீர்த்துவிடும் என்று கூறிய அறிக்கையை இந்த மனுவுடன் சேர்த்துப் பாங்கு அனுப்பினால்தான் நீதிமன்றம் இதைக் கவனிக்கும். பாங்கு செய்து கொண்ட மனுவில் நியதியான கோரிக்கைகள் உள்ளதென்று கண்டுகொண்ட பின்னர் நீதிமன்றம் ரிசர்வு பாங்கினுடைய அறிக்கையை எதிர் நோக்காது பாங்கிற்கு அனுமதி அளிக்கும். கோரும் நிவாரணம் அளிக்கும் முன்னர் நீதிமன்றம் ரிசர்வ் பாங்கினை மேற்படி பாங்கு சம்பந்தமான அறிக்கையை அனுப்பச் செய்து அதனடிப்படையில் உதவியளிப்பதற்கான உத்திரவை இடவோ அல்லது மறுக்கவோ நிலைமையை அனுசரித்துச் செய்யும்.

ஒரு பாங்குக் கம்பெனியை ஒடுக்கம் ஆக்க நீதிமன்றம் கட்டளை இடும். எந்தச் சமயத்தில் ஒரு பாங்கு தான்பட்ட கடன்களை அடைக்க முடியவில்லையோ, ரிசர்வுபாங்கின் அறிக்கையின் படி இழுத்து மூடவேண்டும் என்று இருக்கிறதோ அந்த நிலைமையில் மேற்படி முறை அமலாக்கப்படும். ரிசர்வு பாங்கினுடைய கிளை, வட்டார அலுவலகம் அல்லது பதிலாள் நிறுவனம் உள்ள இடத்தில் இருக்கும் எந்த பாங்குக் கம்பெனி, அதன் தலைமை அலுவலகம், கிளையலுவலகம் இவற்றில் (ஏதேனும் ஒன்றிலாவது) வாங்கிய கடனை இரண்டு நாட்களில் கொடுக்க இயலாவிடின் அல்லது ரிசர்வு பாங்குக் கிளைகள் இல்லாதவிடத்தில் உள்ள பாங்குக்கிளைகளில் ஐந்து நாட்களாகியும் நியாயமான கோரிக்கையை ஈடு செய்ய முடியாது போனால் அந்த பாங்கு தனது கடனைக் கொடுக்க இயலாது போகும் என்று கருத இடமாகிறது. பிரிவு 38ன் உட்பிரிவு 4ன்கீழ் ரிசர்வு பாங்கு மேற்படி பாங்கு தான்பட்ட கடன்களைக் கொடுக்க இயலாது என்று சான்றளிப்பின் அவ்வாறே பாங்கு தனது கடன்களைக் கொடுக்க இயலாது எனக் கருதப்படும். பொதுவாக 35-வது பிரிவின்கீழ் மட்டிலுமே ரிசர்வு பாங்கு மேற்படி பாங்கை மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கும். இதரக் காலங்களில் அவ்வாறு செய்வதில்லை. மேற்படி மனுவில் கண்டவாறு ரிசர்வு பாங்காவது, இராச்சிய பாங்காவது கலைப்பு அதிகாரியாக (liquidator) நியமனம் செய்யப்படுவார்கள். பிரிவு 38ஏ அல்லது 39-ன் கீழ்க் கலைப்பு அதிகாரி செய்ய வேண்டிய முறைகளைக் கம்பெனிகள் சட்டம் 1956-ல் கொடுக்கப்பட்ட கலைப்புவிதிகளை அனுசரித்து அமைந்திருக்கும். பாங்கு ஒடுக்கும் முறையை மேற்கொண்ட காலத்தில் எந்த நீதிமன்றமும் மேற்படி கலைப்பு அல்லது ஒடுக்கப் பணிகளுக்குத் தடுப்பணை போடக்கூடாது. நீதிமன்றத்தார்

பாங்கினுடைய கோரிக்கை நியாயமானதென்றும், பாங்கு பெற்ற கடன்கள் அனைத்தும் ஒழுங்குபெற, குறைவின்றித் தீர்த்து வைக்க இயலுமென்றும் அறிந்த பின்னர் அவ்வாறு செய்யலாம். நீதிமன்றத்துக் கலைப்புஅதிகாரியாக நியமிக்கப்பட்டவர் இரண்டு மாத காலத்திற்குள்ளாக துவக்க அறிக்கை ஒன்றை நீதி மன்றத்தார்க்குப் பணிந்து அனுப்ப வேண்டியது. அவ்வறிக்கையை ஆய்ந்து போதிய அளவு சொத்துக்கள் இருப்பின் துவக்க ஈவுப் பங்குகள் கொடுக்க உத்திரவு இடும். ஒடுக்கம் செய்வதற்கான செயல் முறைகளின் பொழுது கடன் கொடுத்தோர் கூட்டமோ அல்லது வைப்பாளர்கள் கூட்டமோ கூட்டி முடிவெடுக்க வேண்டுமென்று நிலை ஏற்படின் அதனால் செலவு கூடுமே ஒழியப் பலன் ஒன்றுமில்லையென்று நீதிமன்றம் தெரிந்து கொண்டால் அவற்றை வேண்டாமென்று முடிவு செய்யும். எந்த பாங்குக் கம்பெனியும் தாமாகவே கலைத்துக்கொள்ள அனுமதியில்லை. எனினும் ரிசர்வு பாங்கு மேற்படி பாங்குக் கம்பெனி பட்ட கடன் முழுவதையும் ஒழுங்குபெறக் கொடுக்கும் என்று சான்றிதழ் அளித்தால் அந்த பாங்கு தாமாகவே கலைத்துக்கொள்ள இடமுண்டு. தாமாகவே கலைத்துக்கொள்ள வேண்டிய செயல் முறையின் போதும் கூட ரிசர்வு பாங்கு நீதிமன்றத்திற்கு மனுச் செய்துகொண்டு மேற்படி பாங்கினைக் கட்டாயக் கலைப்பு முறையின் கீழ்க்கொண்டு வர முயலும்.

பாங்குக் கம்பெனிகளை ஒடுக்கும் முறை (Winding up)

முற்காலத்தில் பாங்குகளை முடிக்கும் செயல் முறைகளில் பெரும் இடையூறுகளும் தவறுகளும் இருந்த காரணத்தால் அதைப் பரிசீலனை செய்யும் பொருட்டு 1952—ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சர்க்கார் ஒரு விசாரணைக் குழுவினரை நியமனம் செய்து அதற்கான செயல் முறைகளையும் சீர்த்திருத்தம் செய்ய ஏற்பாடு செய்தனர். அக்குழுவினரின் பரிந்துரைக் கேற்ப 1953—ஆம் ஆண்டு அக்டோபர் மீ ஒரு அவசரச் சட்டத்தை அரசினர் பிரகடனம் செய்தார்கள். இதன் மூலம் வைப்பாளர்கள் பங்கு தாரர்கள் இவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டி, காலதாமதம் இன்றிச் செயல் முறைகளை வகுத்தனர். அவசரச் சட்டத்தின் பிரிவுகளின் சுருக்கம் வருமாறு:— (1) சேமிப்பு வைப்பாளர்கள் இட்ட முதல் நூறு ரூபாய் வரை சலுகையாளர்களாகவே கருதப்படுவர். அதே போல் நடப்பு வைப்புதாரர்களில் முதல் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாதவர்கள் சலுகையாளர்களாகவே கருதப்படுவர். (2) கடன் வாங்கியவர்களின் கடன் தொகைகளைத் தீர்ப்பதில் சுலபமான முறையைக்

கையாண்டுள்ளனர். ஒடுக்கத்திற்கான உத்திரவைக் கொடுத்த ஆறு மாதங்களுக்குள்ளாக நீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட கலைப்பு அதிகாரி பாங்கிலிருந்து கடன் பெற்றவர்களின் விவரம் அடங்கிய பட்டியல் நீதி மன்றத்தில் சமர்ப்பிப்பார். (கோவைப்படுத்துவார்) நீதி மன்றம் அன்னருக்குத் தக்க அறிவிப்பு அளித்து கணக்கைத் தீர்ப்பதற்கான முறைகளைக் கையாளும். ரூபாய் 5000க்குக் குறைந்த கடனாக இருப்பின் எந்த விதமான அப்பீலையும் நீதி மன்றம் ஏற்காது. மேலே கூறிய செயல் முறை நீதி மன்ற முடிப்பதிகாரிக்கும் உண்டு. ஆயினும் ஈடு காட்டிய கடனாக இருப்பின் அதற்கென ஒதுக்கப்பட்ட சொத்தை மேற்படி அதிகாரி எடுத்துக்கொள்ள உரிமை இல்லை. (3) கலைப்பு அதிகாரி இடும் தீர்ப்புச் சுருக்கங்களை அவ்வப்போது சாதாரன நிலவரி நிறைவேற்றுக் கட்டளையின் கீழ் முடிப்பதற்கு நீதி மன்றங்களுக்கு அதிகாரம் உண்டு. (4) தங்கள் விருப்பத்திற் கிணங்கி நீதி மன்றங்கள் அந்த பாங்கு இயக்குநர்களை விசாரணை நடத்தலாம். சிவில் அல்லது குற்ற வழக்குச் செயல் முறைகளில் வைப்புதாரர்களை விசாரணையின் போது சாட்சியாக ஏற்றுக் கொள்ளுவார்கள். விசாரணையின் முடிவில் மேற்படி இயக்குநர் தகுதியற்றவர் அல்லது பயனற்றவர் என்று நீதி மன்றம் கண்டு கொண்டால் அவரை இயக்குநர் பதவியிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை விலக்கி விடுவார்கள். (5) நீதி மன்றமும், அரசினரும் ரிசர்வு பாங்கை ஆய்வு செய்யுமாறு உத்திரவு இட்டு, அதற் கிணங்க கலைப்பு நிலையில் உள்ள பாங்குகள் அனைத்தும் அவ்வாறே ஆய்வு செய்யப்படும். இதனல் மேற்படி பாங்குகள் செய்து வரும் தவறுன முறைகளை எடுத்துக் காட்டுகின்றது இதனடிப்படையில் கலைப்பு அதிகாரியும் நீதி மன்றமும் முடிவு செய்ய இயலும். கலைப்பு சம்பந்தமாகத் ரிசர்வு பாங்கு கலைப்பு அதிகாரிகளிடமிருந்து தகவலைக் கோர அதிகாரம் உண்டு.

கேரள இராஜ்யத்திலுள்ள பாலாயி மத்திய பாங்கு (Palai Central Bank) நொடித்ததினின்று நாம் அறிந்த பாடம் என்ன வெனில், ரிசர்வு பாங்கிற்குப் போதிய அளவு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்பதுதான். தேவையான போது ரிசர்வு பாங்கு முன்வந்து பாங்கு நொடிப்பைத் தடுக்காது போனதைக் குறித்துப் பெரும் குறையாகக் கருதப்பட்டது. அவ்வமமம் அரசினர் முன்வந்து பாங்கு கம்பெனிகள் சட்டம 1949ஐ சீர் திருத்தம் செய்து பாங்குகம்பெனிகள் (இரண்டாவது சீர்திருத்தச் சட்டம்) 1960, 1960 செப்டம்பர் மாதத்தில் அனுமதிக்கப்பட்டது. பாங்குக் கம்பெனிகளை ஆதியில் மூடுவதற்கான ஏற்பாட்டினை வேகமாக வைப்பாளர்களுக்குக் குறைந்த அளவில் வைப்புகளைத்

திருப்பவும் ஒடுக்க முறைகளை எளிதாக்கவும் இச்சீர்திருத்தச் சட்டம் பயன்பட்டது. புதிய பிரிவு 41(ஏ)யின்படி நீதிமன்றக் கலைப்பு அதிகாரி சலுகை பெற்ற வைப்பாளர்களிடமிருந்தும் கடன் கொடுத்தவர்களிடமிருந்தும் ஈடுகாட்டியதின் பேரில் கடன் கொடுத்தவர்களிடமிருந்தும் ஈடில்லாக் கடன் கொடுத்தவர்களிடமிருந்தும் அவரவர்களுக்குச் சேரவேண்டியதொகை விவரங்களைத் தெரிவிக்குமாறு கட்டளையிடுவதற்கு ரிசர்வு பாங்கு அவரை ஆணையிடும். புதிய பிரிவு 43(ஏ) பாங்கு கம்பெனிகள் சட்டத்தில் பழைய பிரிவிற்குப் பதிலாக அமைக்கப்பட்டுள்ளது. பழைய 43 ஏ பிரிவில் சலுகையாகக் கொடுக்கப்பட வேண்டியவை என்பதின் கீழ் ரூ. 100/- சேமிப்பு வைப்பாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறது. புதிய பிரிவில் குறைந்த அளவு சலுகைக் கொடுப்பு ரூ. 250/- ஆக அதிகரித்துச் சேமிப்புக் கணக்கும் இதரக் கணக்கு உள்ளவராக இருப்பின் போட்ட வைப்பில் 50% அல்லது ரூ. 250/- எது குறைவான தொகையோ அந்தத் தொகையை அடுத்துக் கொடுக்க வேண்டும் என்றும், கூறுகிறது. பண வசூலை நிறுத்தியோ நீட்டி வைக்கவோ உள்ள முறையை பாங்குக் கம்பெனிகள் சீர்திருத்தச் சட்டம் எளிய வழியில் புலனாக்கியிருக்கிறது. மேலும் கம்பெனிகளைத் திருத்தியமைக்கவும், பிணைக்கவும் உள்ள முறைகளுக்கு விளக்கம் இந்தச் சீர்திருத்தச் சட்டத்தில் விளக்கமாகத் தந்திருக்கிறது. பாங்கு கம்பெனிகள் சட்டத்தின் 45வது பிரிவின் கீழ் மத்திய அரசினருக்கு பாங்குக் கம்பெனியின் தொழிலை நிறுத்தத் தகவல் கொடுத்து, அம்மாதிரியானவற்றை மாற்றியமைத்தோ பிணைத்தோ நடத்தத் திட்டம் வகுத்து அனுப்ப அதிகாரம் பெற்றிருக்கிறது.

பாங்குக் கம்பெனிகளைக் கலைத்து முடிக்கும் அதிகாரப் பரப்பு மாகாண உயர் நீதிமன்றத்திற்கு மட்டும் உண்டு. எந்த பாங்குக் கம்பெனி மீதோ அல்லது அதன் கிளைகள் மீதோ போடப்படும் உரிமைக் கோரிக்கைகளையும், இந்தியாவிற்கு வெளியில் உள்ள கிளைகள்நீங்கலாக, சொத்து முதலியன சம்பந்தமான பிரச்சினைகளை உயர்நீதிமன்றம்தான் முடிவுசெய்யும். சட்ட சம்பந்தமான அல்லது சட்ட நுணுக்கம் சம்பந்தமான பிரச்சினைகளையும், ஒடுக்கம் செய்தல் சம்பந்தமான விவகாரங்களையும் முடிவு கட்டக்கூடியது உயர்நீதி மன்றம். ஒவ்வொரு கட்டளை, உத்திரவு, முடிவு இவையனைத்தையும் எதிர்த்து மேல் முறையீடு என்கிற அப்பீல் செய்ய உரிமை உண்டு. உயர்நீதி மன்றம் கொடுக்கும் தீர்ப்பு ஒவ்வொரு வகையிலும் முரண் இன்றி அமையும். எவ்வகையில் அப்பீல் செய்யக்கூடும் என்று உயர் நீதி மன்றம் முடிவு செய்யும்.

உயர் நீதிமன்றம் கொடுக்கும் முடிவே இறுதியானது. எல்லாச் செயல்களிலும், பாங்குக் கம்பெனியையும் அதன்மேல் எதிர் வழக்காடிடும் எல்லா நபர்களையும் கட்டுப்படுத்தும். தேவை எனத் தோன்றினால் நீதிமன்றம் வழக்குத்தொடுத்து, சுருக்க விசாரணை மூலம் குற்றச்செயல் புரிந்ததாகப் புகார் செய்யப்பட்ட நபர்களைத் தண்டிக்கும். மேற்படி நபர் பாங்குக் கம்பெனியை உருவாக்கிய போதும், தோற்றத்தின் போதும் தொடர்பு கொண்டவராக இருக்கலாம். அல்லது முன்னாள் இயக்குநராக இருந்து பின்னர் பாங்கு கம்பெனியை ஒடுக்கம் செய்தபோது அவரை விசாரிக்கலாம். அவர் செய்த குற்றத்திற்கு இரண்டாண்டிற்கு மேற்படாமல் சிறைவாசம் செய்யவும் அல்லது அபராதம் ரூ. 1000க் குறையாமல் இருக்கக் கூடிய வழக்குகளை இவர்கள் விசாரிப்பார்கள். சுருக்க விசாரணையின்போது சில சாட்சிகளைக் கூப்பிடாமலே முடிவு செய்யக்கூடும். கவனிக்கப்பட வேண்டிய சாட்சியாயின் கூப்பிட்டு விசாரணை நடத்துவார்கள். மேலும் அம்மாதிரியான சுருக்க விசாரணையின் போது அதிகப்படியாக வழக்கு விசாரணையைத் தள்ளிப் போடமாட்டார்கள். அவ்வாறு ஒத்திப் போடுவதால் நீதி சரிவரக் கிடைக்காது என்பதாம்.

பாங்குக் கம்பெனி ஒடுக்கலின் போது குற்றம் செய்யப்பட்டதாக கூறப்படும் புகார்களை யேற்குமுன், அந்த பாங்கு உருவாக்கும் போதோ, நடத்தும் போதோ இருந்த இயக்குநர்கள், நிருவாகிகள், அல்லது அலுவலர்கள் எவராயினுமசரி அவர்களின் மீது சுமத்தப்படும் குற்றங்களைச் சுருக்கு விசாரணை மூலம் நடத்துவதில்லை. ஒடுக்கலை மேற்கொள்ளும் நீதிமன்றம் அல்லாத வேறொரு நீதி மன்றத்தில் இவ்விசாரணை நடத்தப்படும். நீதிபதியவர்கள் இதை விசாரிப்பார்கள். எனவே இக்குற்றம் வழக்காக எடுத்துக் கொள்ளப்படும். குற்றவாளியாகக் கருதப்படுபவர் நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பப் படமாட்டார். மேலும் இவ்வழக்கில் ஜூரர்களின் தீர்ப்பும் தேவைப்படுவதில்லை.

பாங்குக் கம்பெனியை ஒடுக்கும் செயல் முறையில் ரிசர்வு பாங்கு அல்லாத இதர நபர் யாரேனும் ஒருவரை நீதிமன்றக் கலைப்பு அதிகாரியாக நியமனம் செய்யின், நீதிமன்றம் அவரை ரிசர்வு பாங்குடன் கலந்து ஆலோசித்துச் செயலாற்றுமாறு பணித்தால், அதற்கேற்ப ரிசர்வு பாங்கு தஸ்தாவேஜுகளை பார்வையிட்டு தங்களுடைய ஆலோசனைகளைத் தெரிவிப்பார்கள். கலைக்க வேண்டும் என்று உத்திரவிடப் பெற்ற பாங்குக் கம்பெனியினுடைய சொத்துக்கள், கணக்குப் புத்தகங்கள் வழக்கிட்டு உரிமைகோரும் பொருள்கள் (Actionable claims) இவையனைத்தும்

கலைத்தல் அதிகாரியிடம் சேர வேண்டும். அவர் அந்த வட்டார மாவட்ட மாஜிஸ்திரேட்டிற்கு மனுச் செய்துகொள்ள வேண்டும். மேற்படி மாவட்ட மஜிஸ்திரேட் அந்தச் சொத்துக்களையும், கணக்குப் புத்தகங்களையும், இதர தஸ்தாவேஜுகளையும் மேற்கொண்டு கலைப்பு அதிகாரிவசம் ஒப்புவிப்பார்.

கலைப்புச் செய்தல் வேண்டுமென்று போடப்படும் உத்திரவிற்கு முன் கடந்த ஒரு ஆண்டுக் காலத்தை வழக்குப் பதிய வேண்டிய அவகாசத்துடன் பாங்கு கம்பெனி கூட்டக்கூடாது.

கம்பெனிகள் சட்டம் 1956ன் பிரிவுகள் 433 அல்லது 583ன் கீழ் பாங்குக் கம்பெனிகள் கலைக்கப் பெற்றால் அந்த முறையை பாங்குக் கம்பெனிகள் சட்டப் பிரிவுகள் எதிர்ப்பதில்லை. கம்பெனி கூட்டுப் பிரிவிலுள்ளவைகளும் பாங்கு கம்பெனிச் சட்டப் பிரிவுகளும் எதிர்ப்பின்றி ஒன்றையொன்று ஒட்டியே செல்லுகின்றன.

சில சந்தர்ப்பங்களில் ரிசர்வு பாங்கு உயர்நீதி மன்றத்திற்கு மனுச் செய்துகொண்டு பாங்குக் கம்பெனிகளைக் கலைக்க பாங்குக் கம்பெனிகள் சட்டம் அனுமதித்தது. தாமாகவே கலைப்புச் செய்ய முன்வரும் பாங்குக் கம்பெனி தனது கடன்களைக் கொடுக்க இயலாது போய், இந்தத் தகவல்களை அனுசரித்தும் வைப்புதாரர்களின் நலனைக் கோரியும் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் கலைப்புச் செய்ய உத்திரவிடும்.

பிணைப்பு:—பிணைக்கப்பட வேண்டிய இரு பாங்குக் கம்பெனிகளும் எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு பிணைப்பை விரும்புகின்றன என்று ஒரு படிவம் தயார் செய்து அந்தக் கம்பெனி தம் பங்குதாரர்களைக் கூட்டி, அவர்களுடைய சம்மதத்தையேற்றுக் கொண்டு, அதற்கான தீர்மானத்தை மொத்த பங்குதாரர்களில் பெரும்பான்மையோர் ⅔ அளவு எண்ணிக்கை நபராவது அவருக்குப் பதிலாக வேறாளாக இருந்து சம்மதம் பெற்ற பின்னர்த்தான் பிணைப்புச் செய்ய இயலும். பிணைப்புச் சம்பந்தமாக நடத்தப்பட வேண்டியதை எல்லாப் பங்குதாரர்களுக்கும் தெரிவிக்க வேண்டும். அதற்கென நடத்தப்படும் கூட்டத்தை, கம்பெனியின் உள் ஆட்சி (Articles of Association) விவரத்தையொட்டி, இடம், காலம் நோக்கம் இவை விளக்கமாகச் சுற்றறிக்கையை எல்லாப் பங்குதாரர்களுக்கும் அனுப்புவதோடு பதிவு செய்யப்பெற்ற அலுவலகம் உள்ள வட்டாரத்தில் நடந்துவரும் இரண்டு செய்தித்தாள்களிலும் வெளியிட வேண்டும். அவற்றில் ஒன்று அந்த வட்டார மொழியில் நடப்பதாய் இருக்க வேண்டும்.

அம்மாதிரியான முறையில் 3 வாரங்களுக்குத் தொடர்ந்து விளம்பரம் செய்தல் வேண்டும். கூட்டத்தில் பிணைப்புத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்த பங்குதாரருக்கு அல்லது கூட்டத்தில் தலைமை தாங்குபவரிடம் எழுத்துமூலம் தான் அப்பிணைப்பு முறையை எதிர்ப்பதாக எழுதிக் கொடுக்கும் பங்குதாரருக்கு, ரிசர்வு பாங்கினால் அனுமதிக்கப்பட்ட பிணைப்புத் திட்டம் உருவானால், அவரது பங்குத் தொகைகளைத் திருப்பித் தர வேண்டும். ரிசர்வு பாங்கு, அம்மாதிரி திருப்பித் தர வேண்டிய பங்குகளுக்கு இட்ட மதிப்பு முடிவானது. போதிய அளவு பெரும்பான்மையோர் கூட்டத்தில் சம்மதம் தெரிவிப்பின் அத்திட்டத்தை ரிசர்வு பாங்கினிடம் பணிந்து அனுப்பப்படல் வேண்டும். ரிசர்வு பாங்கு அந்தத் திட்டத்தை அனுமதித்தால் அந்த உத்திரவு இரண்டு பாங்குக் கம்பெனிகளையும் கட்டுப்படுத்தும் இதன் ஒரு படிவம் கம்பெனிப் பதிவாளர்க்கு அனுப்பப்படும் அந்தக் கம்பெனிப் பதிவாளர் வட்டாரத்தில் இந்த இரண்டு பாங்குகளும் முன்னர்ப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். கம்பெனிப் பதிவாளர் மேற்படி உத்திரவைப் பெற்றவுடன் பிணைப்பினால் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாகத் தொழில் நடத்தாத பாங்குக் கம்பெனியின் பெயரை அடித்துவிடுவார்.

பிணைப்பிற்கான திட்டத்தை வகுத்து அதை ரிசர்வு பாங்கு அனுமதி செய்ததும், பிணைக்கப்படும் பாங்கு கம்பெனியின் சொத்தும், பொறுப்புகளும். அதைப் பிணைத்துக்கொள்ள வரும் பாங்குக் கம்பெனியின் சொத்துக்களுடனும் பொறுப்புகளுடனும் இணைத்து அந்த திட்டத்தில் வகுத்துள்ள நிபந்தனைகளுக்கேற்ப உத்திரவு இடப்படும்.

பாங்கு கம்பெனியும் அதன் கடன் கொடுத்தோரும் அவ்வாறு கடன் கொடுத்தோரின் பல வகையினர்களும் தமக்குள்ளாக ஏதாவது ஒரு கடன் தீர்க்கும் முறையை வகுத்துக் கொண்டால், மேற்படி முறையை அல்லது தயாரிக்கப்பட்ட திட்டத்தை ரிசர்வு பாங்கு சம்மதித்துச் சான்றளித்தாலன்றி நீதிமன்றம் அனுமதி கொடுக்காது. ரிசர்வு பாங்கு அளிக்கும் சான்றிதழில் இந்தக் கடன் தீர்க்கும் முறை வைப்பாளர்களின் நலனைப் பாதிப்பதில்லை என்று கூறும்.

முன்பெல்லாம் ரிசர்வு பாங்கு சம்மதமின்றி எந்த பாங்குப் பிணைப்பும் நடத்தக் கூடாது என்று பாங்கு கம்பெனிகள் சட்டம் கூறுகிறது உட்பிரிவு 1 பீ, பிரிவு 36ல் கண்டுள்ளவாறு பிணைப்பினை நாடும் பாங்குகள் ரிசர்வு பாங்குக்கு மனுச்செய்து

கொண்டு தங்கள் கம்பெனிகளைப் பிணைக்க நடுவராக இருந்து உதவி புரிய வேண்டும் என்று கோரினால், உதவி புரிய முன் வருகிறது. கம்பெனிகள் சட்டத்தில் கண்டுள்ள பிணைப்புச் செயல் முறைகள் காலம் கடத்துவதாக உள்ளன. மேலும் நீதி மன்றங்களின் மூலம் தாம் பிணைப்புகள் செய்யப்பட வேண்டியிருந்து, பிணைப்பினால் இலாபம் பெறும் கம்பெனிகள் இருப்பினும், பெரும்பான்மை பங்குதாரர்கள் எதிர்ப்புக்கூறி இத் திட்டத்தை ஏற்க மறுத்து, அதன் விளைவாகப் பிணைப்புச் செய்யக் காலதாமதம் ஏற்படும். 1959ல் ஏற்பட்ட புதிய சீர்திருத்தப்படி நீதி மன்றங்களுக்கும் சென்று நீதி நாடுதலையும், சட்டமுறைகளை மிகவும் குறைத்தும், எதிர்ப்புக் கூறும் பாங்குதாரர்களால் காலதாமதம் விளைவிப்பதை தடுத்தும் பிணைப்பை அமுலாக்குகிறது.

கம்பெனிகள் சட்டம் 1956ன் பிரிவுகள் 394ம் 396ம் 1913 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் பிரிவுகள் 153,ஏ 155 பியையும் ஈடுபடுத்தியுள்ளன. இவைகள் பிணைப்புக்கான நடைமுறையைக் கூறுகிறது. பாங்கு கம்பெனிகள் சட்டத்தில் இதற்கான நடைமுறை மிகவும் விளக்கமாகக் கூறியிருக்கிறபடியால் கம்பெனிகள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறையைவிட அதிகப்பயனுள்ளதாக உள்ளது. தேசிய நலனைக்கோரி இரண்டல்லது மூன்று கம்பெனிகளை அரசினரின் தலையீட்டினால் பிணைப்புச் செய்ய பிரிவு 396 கம்பெனிகள் சட்டம் கூறியுள்ளது.

பண்டையக் காலத்தில் சில இராச்சியங்களில் இருந்த ஆதாரமற்ற சில பாங்குகள் ரிசர்வு பாங்கு கூறிய பிணைப்பு முறைக்கே செவி சாய்க்க மறுத்து, சட்டத்தில் அதற்கான பிரிவுகள் இல்லை என்று கூறி வந்தன. இதற்கான சட்ட வரம்பளித்து முழுப் பிணைப்பின முறையை நேராக்க பாங்கு கம்பெனிகள் சட்டத்தில் சீர்திருத்தம் செய்தும், கம்பெனிகள் சட்டத்திலும் சீர்திருத்தம் செய்துள்ளனர்.

கடைசியாக பாங்கு கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 44ஏ சீர்திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி ரிசர்வு பாங்குப் பிணைப்பு முறையை அங்கீகரித்ததும், பிணைக்கப் பெற்ற பாங்கு கலைக்கப்படும்.

தண்டங்கள்:—45 ஆவது பிரிவின் 1 ஆவது உட்பிரிவு a இல் கூறியவாறு எந்த நபராவது வேண்டுமென்றே அறிந்திருந்தும், கூட அவ்வழியில் செல்லுதல் (b) அறிக்கைகளிலும் ஐந்தொகைகளிலும் தவறான அட்டவணைகளைக் கொடுத்தல், இவற்றின்

அடிப்படையில் சட்டப்படி மூன்றுண்டுகள் சிறைவாசமும் அபராதமும் விதிக்கப்படும். 35 வது பிரிவின் 2 வது உட் பிரிவின்படி எந்த நபராவது கோரிய புத்தகங்கள் கணக்குப் படிவங்கள் அல்லது இதர தஸ்தாவேஜுகள் கொடுக்கவோ அல்லது விவரப்படுத்தவோ தவறினுல் அவர் செய்த ஒவ்வொரு குற்றத்திற்கும் 500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும். கோரிய வாறு செய்வதற்கு மறுத்தால் ஒவ்வொரு மறுப்பிற்கும் அக்குற்றம் நடைமுறையில் இருக்கும் காலத்தில் நாள் ஒன்றிற்கு 50 ரூபாய் அபராதமாக வசூல் செய்யப்படும். 35 ஆவது பிரிவின் 4வது உட்பிரிவின் a இன்படி பாங்குக் கம்பெனியின் இயக்குநரோ அல்லது அலுவலரோ எதிராகவும் தவருன முறையிலும் வைப்புகள் வாங்கினுலும் அவருக்குத் தெரியாமலே தவருன செயல்கள் நடந்தும் அவைகளைத் தடுக்கப் போதிய செயல்களைப் புரியாத காரணத்தால் அன்னுரை குற்றம் செய்தவராகக் குற்றம் சாட்டப்பட்டு வைப்புகள் பெற்ற அளவில் இரட்டிப்பாக அபராதமாக வசூல்செய்யப்படும். சட்டத்தின் எந்தப் பிரிவையும் எதிர்த்து நடக்கும் இயக்குநர், அலுவலர், கலைப்பு அதிகாரி யாராக இருப்பினும் சட்டவிரம்பிற்கு எதிராக நடப்பவர் ரூ500/- அபராதம் செலுத்தும்படியும், குற்றம் தொடர்ந்து நடந்து வருமாஞல் நாள் ஒன்றுக்கு ரூ 50/- அபராதம் விதிக்கவும்படும்.

3. பாங்கு நடத்துபவரும் வாடிக்கைக்காரரும்

பாங்கு நடத்துபவர்—இலக்கணம்

செம்மையான இலக்கணம் தேவை:— பாங்கு நடத்துபவருக்கும் வாடிக்கைக்காரருக்கும் உள்ளதொடர்பை ஆராயப் புகுமுன் இவர்களுக்கான இலக்கணமென்ன எனக்கூற முற்படுவோம். இவ்விரண்டு பேர்களுக்கும் சட்ட முறையில் உள்ள பொருளை நோக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. முன்னால் கூறப்பட்டவரைப் பற்றி திருப்திகரமான முறையில் சட்ட ரீதியாக இலக்கணம் வரையப்படவில்லை. இந்தியக் கம்பெனிகள் திருத்தச் சட்டம் 1936-ல் தான் முதலாமவருக்கு இலக்கணம் தோற்றுவித்தது எனலாம். பலதரப்பட்ட வழக்குகளில் எழுந்த வாதங்களில் கூறப்பட்ட விளக்கங்களையும் நீதிமன்றத் தீர்ப்புகளைக் கொண்டும் ஆராய்ந்தால் சரியான இலக்கணம் இயம்பப்படவில்லை எனலாம். பின்னால் கூறப்பட்டவரைப் பற்றியோ இதுகாறும் சட்டத்திலோ அல்லது நீதிமன்றத் தீர்ப்புகளிலோ எங்கும் விபரமாக இலக்கணம் கொடுக்கப்படவில்லை எனலாம்.

முன்னுரை— பாங்கு முறை என்பதென்ன என்று விளக்கத்துடன் இலக்கணம் எழுத முற்படின் நேரம் மை, பேனா, காகிதம் முதலிய சாதல்வார் (Stationery) வீணாகிப் போகின்றன. பாங்கு வர்த்தகத்தைப் பற்றி நன்கறிந்த மேதைகளும், விற்பன்னர்களும் சீரிய முறையில் இலக்கணம் கூறமுடியாது அவதிப்படுகின்றனர். பலவகையான அலுவல்களை பாங்கு நடத்துபவர் செய்து வருவதால் இன்னதுதான் அவரது தொழில் என்று வரையறுத்துக் கூற இயலாது. பாங்குத் தொழில் செய்பவர் கூட்டுப் பங்குகளிலும், சொத்துகளை நிர்வகிப்பவராகவும், பொறுப்பான்மையராகவும் பணியாற்றுகிறார். எனவே

தற்காலத்தில் உள்ள நவீன பாங்குகள், பாங்குத் தொழிலுடன் மேலே கூறிய பணிகளையும் கூட்டிச் செய்கின்றன. அநேக இலக்கணங்களில் பாங்கு நடத்துவோர் எதிர் மறைப் பொருளாகவும், இல்லாமையை அடிப்பீடமாகவும் அமைத்து விளக்கப்பட்டுள்ளார் அல்லது கொடுக்கப்பட்ட விளக்கம் முழு விபரத்தை அளிக்க இயலாது கேள்வியை ஐயப்பாடாக்கி விடுகிறது. எடுத்துக் காட்டாக செலாவணி சட்டம் (Negotiable Intruments Act) 1881-ன் மூன்ருவது பிரிவைக் கவனிக்கவும். பாங்குஎனப்படுவது, அதைநடத்தும் நபர் அல்லது கார்ப்பரேஷன் என்னும் கூட்டு நிறுவனம் அல்லது கம்பெனியாகலாம். மேற்படி நபரையோ அல்லது கூட்டு நிறுவனத்தையோ, அல்லது கம்னியையோ பாங்கு நடத்துபவர் என்று கூறலாம். இவ்விலக்கணம் எவ்வகையிலும் நமக்கு பலன் அளிப்பதன்று இவ்வாறு உள்ள கூற்றை அர்த்தமற்ற பேச்சு என்று கொள்ள வேண்டும். மேலும் பாங்கு நடத்துவோர் புத்தகச் சான்றுச் சட்டம் (Bankers' Book Evidence Act) 1891-ன் படியும், (இந்திய முத்திரை வரிச்சட்டம் 1899 (Indian Stamp Act 1899) இயற்றியவர்களும் கூட பாங்குகளின் இலக்கணத்தைத் தெளிவுடன் கூறவில்லை. இதுகாறும் ஆங்கில சட்டங்களும் பாங்கு நடத்து பவருக்கும் அவரது வாடிக்கைக்காரருக்கும் உள்ள இலக்கணங்களைத் தெளிவு படுத்தவில்லை.

பாங்குத் தொழில் ஒரு பரிணமக் கொள்கை

அமெரிக்கர் கூறும் இலக்கணம் : பாங்கு நடத்துபவர் என்ற பெயரைப் பரந்த அளவில் மிகவும் அகலமான முறையில், மூலதனம் பெற்ற முதலாளி, நிதி அளிப்பவர், பங்குத்தரகர், இன்னும் பாங்குகளில் பணியாற்றிவரக் கூடிய பெரிய அதிகாரிகளைக் குறிப்பிடப் பயன்படுத்துகின்றனர். இப் பதத்தைச் சீரிய முறையில் விளக்கம் தரமுயன்று கைகூடாது போய் விட்டது. ஐக்கிய அமெரிக்கநாடுகளில் உள்ள சட்டசபை அங்கத்தினர்கள் ஆச்சரியப் படத்தக்க முறையில்வெற்றிகரமான ஒரு இலக்கணத்தை முதன் முதலாகக்கொண்டுவந்தனர். அதன் கருத்து வருமாறு:

பாங்கு முறை எனப்படுவது வரவுக் கணக்கினைப் பயன் படுத்தும் ஒருவகை வர்த்தகம். பாங்கு எனப்படுவது தனி நபரோ, கூட்டுநிறுவனமோ அல்லது கம்பெனியோ ஆகலாம். மேற்படி இடத்தில் பணம், பணத்தாள் இவைகளைக் கொடுத்து வரவுக்

கணக்குகள் திறக்கப் பட்டு, செக்கு உண்டியல் மூலம் பணம் பட்டுவாடா செய்யவும் அனுப்பவும், முன்னதாகப் பணம் கொடுத்தாலும், கடனுக, பாண்டு, பாங்கு, கூட்டுப்பங்குகள், பொன் வெள்ளி இவற்றின் ஈடாகக் கொடுத்தும், பத்திரம், பொன், வெள்ளி, பங்கு, உண்டியல், புரோ நோட்டு இவைகளை வாங்கி விற்பனை செய்யவும் விழைகிறது. (ஃபிண்ட்லேஷிராஸ் எழுதிய இண்டியன் பைனன்ஸ் அண்ட் பாங்கிங் 2ஆவது பதிப்பு ப. 336— Indian Finance & Banking by Findley Shirraz- 2 nd Impression p. 336).

விமரிசனம்: மேலேகூறப்பட்ட இலக்கணம் வெறும் விளக்க உரையே எனலாம். இதுமிகவும் கச்சிதமாக விளக்கம் கொடுக்கவில்லை. வரையறுத்துக் கூறப்புகின் பாங்கு வர்த்தகர் எனப் படுபவர் பிறருடைய நிதியையும் வரவினங்களையும் பயன் படுத்துவதால் கடன் வியாபாரி எனக்கொள்ளுதல் நியதி. அவர் பாங்கு நடத்துபவர் மட்டும் அன்று அவர் முதலளிப்பதால் முதலாளி எனக்கூற இடமுண்டு. ஆயினும், தனது நிதியைப் பயன் படுத்தாது பிறருடைய செல்வத்தைப் பயன் படுத்துவதால்தான் பாங்கு வர்த்தகர் எனக்கூறுகிறோம். ஜப்பானிய நாட்டுப் பாங்குச்சட்டம் 1927. இது 1928-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் தேதி அமலாகியது. அதன்படி 'கொடுக்கல் வாங்கல் செய்யும் வரவினங்களைப் பெற்ற நிறுவனங்கள்' என்று இலக்கணம் கூறியுள்ளது. (கமர்ஷியல் இந்தியா, நவம்பர் 1928 பக். 452 Commercial India, November 1928 P 452).

அனுமதி பெறாத எவரும் தமது பெயரை அடுத்து "பாங்கு" என்ற சொல்லைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று அர்ஜென்டின, பெல்சியம், கனடா, டென்மார்க், செர்மனி, இத்தாலி நாடுகளில் சட்டமியற்றினர்.

ஜூரிச் (Zurich) நகரில் 'பாங்கு' என்ற பெயரை எவர் வேண்டுமானாலும் உபயோகித்துக்கொள்ளலாம் என்று அனுமதி இருந்தது. ஆயினும், கூட்டரசுச் சட்டம் (Federal Laws) 1934 நவம்பர் 8ஆம் தேதி உருவானபிறகு எந்த நிறுவனம் வைப்புகள் வேண்டுமென்று பொது மக்களிடம் நிதி வேண்டுகிறதோ அது மட்டும்தான் 'பாங்கு' என்ற பெயரை உபயோகிக்கலாம்.

ஆங்கிலச் சட்டம்: ஆங்கில நாட்டில் இதுகாறும் சட்ட ரீதியாக இலக்கணம் கூறப்படவில்லை. ஆயினும், அநேக நீதி மன்ற வழக்கு முடிவுகளைக்கொண்டு பல அறிஞர்கள் முக்கியமான

கருத்துக்களைப் பகுத்தும் தொகுத்தும் உயரிய இலக்கணத்தைக் கூறியுள்ளனர். அவர்களுடைய முயற்சிகளின் முடிவுகளே கீழே விளக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஹார்ட் அவர்கள் கூறிய இலக்கணம் 'பாங்குமுறைச்சட்டம்' என்ற நூலை இயற்றிய டாக்டர் ஏர்பர்ட் எல். ஹார்ட் (Dr. Herbert L. Hart) என்பவர் மேற்படி புத்தகத்தின் முதலாவது பக்கத்தில் கூறியுள்ள இலக்கணம்வருமாறு :— 'பிறருக்காகவும், அவர்களுக்கு வேண்டிய நடப்பு வைப்பில் பணம் பெற்று அவர்கள் சேரும்போது தம்மீது வரைந்துள்ள செக்குகளை மதித்துப் பணம் கொடுப்பவரே பாங்கு நடத்துபவர் ஆகும்'. இந்த இலக்கணம் ஆங்கில நீதி மன்றங்களில் நடந்த பல வழக்குகளின் முடிவில் கொடுக்கப்பட்ட முடிவை அனுசரித்து எழுதப்பட்டது. ஃபோலியும் அவர்க்கெதிராக ஹில்லும் (Foley Vs Hill) என்ற வழக்கில் (1948) 2. எச்.எல்.ஸி 28. இந்த இலக்கணத்தின்படி ஒரு பாங்கு வர்த்தகரின் முக்கிய தொழில் என்னவெனில், நடப்பு வைப்புகள் பெற்று அவர்பால் எழுதப்பட்ட செக்குகளை ஆதரித்துப் பணம் கொடுப்பதேயாகும். இந்தக் கொள்கையைக் ஏற்றுக்கொண்டு ஜஸ்டிஸ்பக்லி (Bucklys J) பீர்பெக் பர்மனென்ட் பெனிஃபிட் பீல்டிங் சொஸைட்டி என்ற வழக்கில் (1912) 2 சி. 183 [In re: Birbeck Permanent Benefit Building Society (1912 2 (ch. 183] பகன்றதாவது.

'அந்த நிறுவனம் நடப்பு வைப்புக் கணக்குகளைத் திறந்து பாங்கு நடத்துவது போலவே செய்தது. மேலும் தமது வாடிக்கைக்காரர்களுக்கு பாங்கு காட்டும் சலுகைகளையும் சௌகரியங்களையும் செய்து வந்ததெனலாம்'.

நடப்பு வைப்பில் உள்ள பணம் பெற செக்கு முறை : நடப்பு வைப்பில் உள்ள பணத்தைப் பெற செக்கு எழுதி பெறல் வேண்டும் என்ற முறையை இங்கிலாந்து நாட்டிலுள்ள தொழில் இலாகாவினர் வரைந்த குறிப்பாணையின்படி (Memorandum) சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும், 'பாங்கு' என்ற அடைமொழி எந்த நிறுவனம் நடப்பு வைப்புக் கணக்குகள் வைத்துப் பணம் கொடுத்த செக்குகளை அனுமதிக்கிறதோ அவைகள்தான் 'பாங்கு' எனக் கருதப்படும். (பாங்கு நடத்துபவரும், வாடிக்கைக்காரரும் - Banker and Customer) எஸ். ஈ. தாமஸ் S. E. Thomas).

ஸர் ஜான் பேகெட்டின் இலக்கணம் (Sir John Paget's) : மேலே கூறியுள்ள கொள்கையை இன்னும் ஆதரித்து ஸர் ஜான்

பேகெட் என்ற நூலறிஞர் கூறியுள்ளார். அவர் நான்கு முக்கிய அலுவல்களை அடிப்படையாகக்கொண்டு பாங்கு நடத்துபவர் இன்னாரென்றும் அவர் என்னென்ன பணிகள் செய்யவேண்டும் என்றும் கூறுகிறார்.

நான்கு முக்கிய அலுவல்கள்: பிர்பெக் பில்டிங் சொஸைட்டி வழக்கை நன்கு ஆய்ந்தும் மற்றும் இதர சட்டமுடிவுகளைக் கூர்ந்து ஆராய்ந்து கூறியது வருமாறு : (1) தவணை வைப்பு, (2) நடப்பு வைப்பு, (3) செக்குகளை கொடுத்தும், வாங்கியும், (4) கோடிட்ட அல்லது கோடிடப்படா செக்குகளைத் தன் வாடிக்கைக்காரரிடமிருந்து வசூல் செய்தல் இந்த நான்கு அலுவல்களைப் புரியாத எந்த நபரோ, கூட்டு நிறுவனமோ, கம்பெனியோ பாங்கு எனக் கூறப்படமுடியாது. (பாங்கு முறைச் சட்டம்—தி லா ஆஃப் பாங்கிங், ஸர் ஜான்பேகட் எழுதியது. The Law of Banking By Sir John Paget-4th Edn. P. 51). ஸர் ஜான் இன்னும் இயம்புவது என்னவென்றால் பாங்கு நடத்துபவர் தன்னை பாங்கு நடத்துபவர் என்று வாடிக்கைக்காரர்கள் அறிந்துகொள்ளவேண்டும். பொது மக்களும் இதை அறிந்து பாங்குத் தொழில் மூலம் இவர் பணம் சம்பாதிக்கிறார் என்று புரிந்துகொள்ள வேண்டும். இந்த இலக்கணம் மிகவும் பொருத்தமானது. ஆயினும், தற்காலம் நடப்பிலுள்ள பாங்குத் தொழிலில் உள்ள இதர வகையான தொழில்கள் இதில் காணப்படவில்லையெனலாம் எனவே, இங்கிலையில் பாங்கு வர்த்தகர் நடத்தும் தொழில்களை இரு கூறுகளாக்கி (1) ஏஜென்ஸி அல்லது முகவரின் பணிகள்-குறிப்பாக உண்டியல், புரோ நோட்டு, டிவிடெண்ட் வாரண்டு, ஈட்டுறுதிக் கட்டணம், பொறுப்பினர், அட்டார்னி அல்லது வழக்கறிஞர், நிருவாகி பணம் இவைகளை வசூல் செய்து கணக்கில் வரவு வைத்தல். (2) பொது உதவிப் பணிகள்—கடன் பத்திரங்கள் வழங்குதல், அந்நியநாட்டுச் செலாவணி வர்த்தகம், தீ, கள்வர் முதலியோரிடமிருந்து காப்பாற்றித் தர பொருள்களைப் பத்திரப்படுத்துதல், ஐயம் அற மேலே கூறிய பணிகளை சர் ஜான் பேகெட் சொல்லியதுபோல ஆங்கில நாட்டில் பாங்கு நடத்துபவர்கள் செய்து வருகிறார்கள்.

கடன் கொடுப்போர் பாங்கு நடத்துபவர் அல்லர் :— பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949ஆம் ஆண்டில் தோன்றும் காலம் வரை கடன் கொடுப்போர் பாங்கு நடத்துபவர் என்று தங்களைக் கூறிக்கொண்டார்கள். இதை இந்திய அரசினர் தடுக்கவில்லை. சட்டம் தோன்றிய பின் இரண்டாண்டுகளுக்குள்ளாக "பாங்கு" "பாங்கு நடத்துபவர்" "பாங்குத் தொழில்"

என்ற அடைமொழியை பாங்குத்தொழில் செய்யும் நிறுவனங்கள் மட்டும்தான் மேற்கொள்ளலாம் என வரையறுக்கப்பட்டது. இங்கிலாந்தில் ஆங்கிலேயே கடன் கொடுப்போர் சட்டம் 1911-ன் படி அந்நாட்டில் உள்ள எல்லா கடன் கொடுப்போரும் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ள வேண்டுமென்றும் 'பாங்கு' என்று பெயர் உள்ள கடன் கொடுப்போர் அம்மாதிரி பதிவு செய்ய அனுமதிக்கப்படவில்லை. எனவே, பாங்கு வர்த்தகம் புரியும் கடன் கொடுப்போர் பதிவு செய்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. தவறான முறையில் ஏமாற்றத்தகு அறிக்கை அல்லது வாக்குமூலம் கொடுத்து பாங்கு வர்த்தகர் என்ற உண்மை தெரியும் பட்சத்தில் அன்னார் இரண்டாண்டு சிறைவாசம் செய்யவேண்டிவரும். அபராதம் விதிக்கப்படும். நீதிமன்றம் அன்னாரின் கணக்குகளைப் பரிசீலனை செய்ய உத்திரவு பிறப்பிக்கலாம்.

இந்திய நாட்டில் கடன் கொடுப்போர் பிரச்சனை மிகவும் கடுமையாக உள்ளது. இந்நாடு முழுமையும் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் கடன் கொடுப்போர் பரவி வாழ்ந்து வருகின்றனர். மகாராஷ்டிர குசராத் இராஜ்யங்களில் மட்டும் சற்றேறக்குறைய 10,000 பேர்கள் உள்ளனர். நாட்டில் பாங்குத் தொழில் வளர்ச்சி பெற்றாலும்கூட உள்நாட்டுக் கடன் கொடுப்போர் (Indigenous money lending) கடன் கொடுத்து வருவதை நிறுத்தமுடியவில்லை.

இந்தியாவில் :— 1918ஆம் ஆண்டில், இந்தியாவில் கடும் வட்டிக்கடன் சட்டம் உருவாகியது. இந்தச் சட்டத்திற்கு முகப்பில் முன்னுரை எழுதிய சர் செஸில்வால்ஷ் (Sir Cecil Walsh) என்ற அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி இதை ஆங்கில நாட்டுக் கடன் கொடுப்போர் சட்டம் 1900ஐ அனுசரித்து எழுதப்பட்டதென்று கூறியுள்ளார். இந்தியச் சட்டத்தின்படி கடன் கொடுப்போர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதில்லை. தங்களை 'பாங்கு'த் தொழில் புரிபவர் என்று கூறிக்கொண்டாலும் யாதொரு தடையும் விதிக்கப்படுவதில்லை எனலாம். ஆயினும், சிவில் நீதி மன்றங்கள் ஐயப்பாடுள்ள கடன்களை மறுமுறை ஊன்று நோக்கி வட்டி விகிதம் அதிகம் என்று கண்டு நியாயமான வட்டி விதிக்க உத்திரவு போட அதிகாரம் 3 (a) (b) பிரிவில் கடு வட்டிக் கடன்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. 1949ஆம் ஆண்டு தோன்றிய பம்பாய் கடன் கொடுப்போர் சட்டப்படி பம்பாயில் உள்ள எல்லா கடன் கொடுப்போரும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டு அதற்கென அரசாங்க உரிமம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

முன்பு கூறியது போல பாங்குத் தொழிலை நடத்த விருப்பப்படும் கம்பெனிகள் இந்தியக் கம்பெனிகள் திருத்தச்சட்டம் 1936-ன் (முன் பகர்ந்தபடி) 277F பிரிவின்கீழ் பதிவு செய்துகொள்ள வேண்டியது. இச்சட்டம் கல்கத்தா நகரில் அமலாக்கப் படுவதில்லை. வங்காள இராச்சிய சர்க்கார் விருப்பபடின் இதர நகரங்களையும் இச்சட்டத்தின் பிடியிலிருந்து விலக்கி அந்த நகரங்களில் தொழில் வளர்ச்சிக்கான நிதியைத் திரட்ட முயலுவர்.

இந்தியச் சட்டம்

பாங்குக் கம்பெனிச் சட்ட அமைப்பில் இலக்கணம் : முதன் முதலில் பாங்குத் தொழிலுக்கான இலக்கணத்தை ஹில்டன்யங் குழுவினர் (Hilton Young Commission) தங்கள் அறிக்கையின் 162-வது பத்தியில் பாங்கு, பாங்குத் தொழில், பாங்கு நடத்துவோர் என்ற பதங்களுக்கான விளக்கம் கொடுத்து பாங்கு, பாங்கு நடத்துவோர், பாங்குத் தொழில் எனக் கூறப்படுவது, தனி நபர், கம்பெனி அல்லது கூட்டு நிறுவனமாக இருக்கும் இவர்கள் வைப்புகளின் பேரில் பணம் பெற்றுச் செக்குத்தாள், உத்திரவுப்படிவம், அல்லது ட்ராஃப்ட் இவைகள் காண்பித்தவுடன் பணம் தருவார்கள். இந்தியக் கம்பெனிகள் (திருத்த)ச் சட்டம் 1936, இவ்விலக்கணத்தின் முற்பகுதியை ஒதுக்கிப் பின்பகுதியை ஏற்றுக்கொண்டனர். பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949 பாங்குக் கம்பெனிக்கான இலக்கணம் கூறுகிறது. "இந்தியாவில் எந்த ஒரு கம்பெனி பாங்குத் தொழிலை நடத்தி வருகிறதோ அது பாங்குக் கம்பெனியாகும். பாங்குத் தொழில் எனப்படுவது கடன் கொடுப்பதற்கோ அல்லது முதலீடு செய்வதற்கோ பொது மக்களிடமிருந்து வைப்புக்களாகப் பெற்று அவர்கள் கோரியபோது அல்லது தவணையின் முறையில் செக்குத்தாள், ட்ராஃப்ட் அல்லது உத்தரவுப்படிவ உருவில் காண்பித்தவுடன் திரும்பப் பெற வழி செய்வது-பிரி 5 (பி) & (சி)யையும் காண்க. 6-வது பிரிவின்படி பாங்குத் தொழிலுடன் இணைத்து ஒன்றல்லது பலதரப்பட்ட வர்த்தகங்களைச் (கீழ்க் கண்டவைகளைச்) செய்யலாம். அவை வருமாறு ;

(அ) ரொக்கக் கடனுகவோ, கடனெழுப்பியோ அல்லது பணம் பெற்றுக்கொண்டும் மாற்றுண்டியல்களை எழுதியோ. தயாரித்தோ ஏற்றுக்கொண்டதாகச் சம்மதம் தெரிவித்தோ, கழிவு நீக்கிக் கொடுத்தோ வாங்கியோ, விற்றோ, அவற்றை வசூலித்தோ, மாற்றுண்டியல்கள், பிராமிசரி நோட்டுகள்,

கூப்பன்கள், டிராஃப்ட்டுகள், கப்பலில் சரக்கனுப்பும் ரெசீது, ரயில்வே ரெசீது, பணம் கொடுக்கும்படியான உத்திரவுகள், டிபெஞ்சர் கடன் பத்திரங்கள், ரொக்கச்சான்றுப் பத்திரங்கள், பங்கு பத்திரங்கள், மற்றும் இதர முதலீடு செய்யவேண்டிய பத்திரங்கள், மேற்படி பத்திரங்கள் மாற்றத்தக்கவைகளோ அல்லது மாற்றுரிமை இல்லாதுகூட இருக்கலாம். கடன் சுற்றோலை அளிக்கலாம். பயணர் காசோலை, மற்றும் சுற்றோலை இவைகளை வெளியிட்டும், பொன் வெள்ளி இனம் இவற்றில் வாங்கி விற்பனை செய்தும், அயல்நாட்டுச் செலாவணியில் வர்த்தகம் செய்து அயல்நாட்டு பாங்கு நோட்டுகளை வாங்கி விற்றும், கூட்டுப் பங்குகளையும், நிதிகளையும், பங்குகளையும், டிபெஞ்சர் கடன் பத்திரங்களையும், பாண்டுகளையும், பொறுப்பு களையும், ஆபரண முதலீடுகளையும், சம்பாதித்தும், சேமித்தும், முதலீடு செய்தும், வெளியிட்டும், ஈட்டுறுதி செய்தும், தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்காக வேண்டி விற்பனை செய்தும், வாங்கிக் கொடுத்தும், முன் பணம், கடன் முதலிய வழிகளை அளிக்கவும், நட்ட பயமின்றி காப்பளிக்கும் வகையில் எல்லா வகையான பத்திரங்கள், பங்கு பத்திரங்கள், வைப்புகள், இவற்றைப் பெற்றும் வாடிக்கைதாரருக்கு வேண்டி காப்பு வைப்பு நிலவறை (Safe Deposit Vaults) ஏற்படுத்தி அவற்றில் ரொக்கத்தையும் ஆவணங்களையும் வைத்துக்கொள்ளலாம்.

(ஆ) தனி நபருக்கோ, நபர்களுக்கோ, உள்நாட்டு அரசினருக்கோ, அரசினருக்கோ, பதிலாளாக இருந்து பணி யாற்றலாம். பதிலாள் வர்த்தகராக சரக்கு ஏற்றுமதி செய்தும், துறைமுகத்தினின்று சரக்கை வெளியேற்றம் செய்யவும் வாடிக்கைக்காரர்களுக்கு வழக்கு நடத்துபவராக முன்னின்று ரசீதுகள் கொடுத்தும் ஆயினும் பதிலாள் நிறுவனம் போன்று அல்லது செயலராகவோ, கருவூலக் காப்பாளராகவோ நின்று கம்பெனிக்கென தொழில் புரிதல்கூடாது

(இ) பொது, தனியார் கடன்களை ஒப்பந்தத்தின்கீழ் மாற்றுரிமையுடன் பெற்று வெளியீடு செய்தும்,

(ஈ) பொது, தனியார், இராச்சிய, நகராட்சி வெளியீடுகளை நடத்தியும், ஈட்டுறுதியளித்தும், உத்தரவாதமாக இருந்தும், நிருவாகம் செய்தும், அவற்றின் காரணமாக கடன்கள், பங்குகள், பங்குக் கூட்டுகள், டிபெஞ்சர் கடன்கள் இவற்றை வெளியீடு செய்தும், இவற்றிற்கென்று கடன் வசதியளித்தும்,

(உ) உத்திரவாதமும், ஈட்டுறுதி வர்த்தகத்தை மேற் கொண்டும்,

(ஊ) பாங்கு கம்பெனி உரிமைப் பொருளாக முழுவது மாகவோ அல்லது குறையளவிலோ வந்த அசையாப் பொருளை நிருவாகம் செய்தோ அல்லது விற்றோ

(எ) கொடுக்கப்பட்ட முன்பணை அல்லது கடனுக்காக ஈட்டாக வந்துள்ள அசையாப் பொருளை பெற்றோ, தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தோ அல்லது அவ்வாறு வந்த சொத்திற்கான உரிமை, காட்டப்படும் அக்கறை, பொறுப்பு இவைகளை ஆய்ந்தும்,

(ஏ) அறக்கட்டளைகளை ஏற்றெடுத்துப் பராமரித்தும்,

(ஐ) இறந்தவர் உடைமைகளைக் கண்காணிக்க நிருவாகி யாகவும், ட்ரஸ்டியாகவும் மற்றும்,

(ஒ) தங்கள் ஊழியர்கள், ஓய்வு பெற்ற ஊழியர்கள் இவர்களுடைய நலனைக்கோரி அதற்கென தனிப்பட்ட நிறுவனமோ, நிதியோ, அமைப்போ ஒன்றை நிறுவி, ஊக்கு வித்து, உதவியளித்து அவற்றின் மூலம் ஊழியர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும், வழித்தோன்றல்களும் நன்மைபெற ஏற்பாடு செய்தும், ஓய்வுக்கால ஊதியமும், படியும் கொடுக்கவும், காப்பீட்டுறுதி அளிப்பதற்கு வழியும், தரும நிறுவனங்களுக்குப் பணத்திற்கான உத்தரவாத பொறுப்பேற்கவும், நன்மைபயக்கும் செயல்களுக்கு நிதி உதவியளிக்கவும் மற்றப்படி பொது செயல் களுக்கும் கண்காட்சிகளுக்கும் நிதி உதவியளிக்கவும்,

(ஓ) கம்பெனியின் சௌகரியங்களை யனுசரித்துக் கட்டிடத்தை வாங்கியும், மாற்றியும், புதுப்பித்தும், செம்மையாகப் பழுதின்றிக் காத்துவரவும்,

(ஔ) கம்பெனிக்கான உரிமைகளையும், சொத்துகளையும் முழுவதும் அல்லது பகுதியாகவோ விற்கவோ உயர்ந்தமுறையில் அமைக்கவும், நிருவாகம் செய்யவும், மேன்மேலும் அதிகப் படுத்தவும், இன்னொரு சொத்துபெற்று அதற்கு மாற்ருக இதைக் கொடுத்தும் அதைக் குறிப்பிட்ட காலம்வரைக்கும் கூலிக்கு விடவும், அடமானத்திலிடவும், வந்த விலைக்குத் தள்ளிவிடவும், கம்பெனியின் பிரியத்திற்கேற்ற முறையில் என்ன வழியில் வேண்டுமானாலும் முடிவு கட்டவும்,

(ஃ) இந்த உட்பிரிவின்கீழ் எந்த வர்த்தகத்தைப் பற்றிக் குறிப்பிட்டு இருந்தாலும் அந்தவர்த்தகத்தை அனைத்தும் அல்லது பகுதியையோ வாங்கியும் அல்லது முழுவர்த்தகத்தை அப்படியே பெற்றுக்கொண்டும்,

(க) கம்பெனியின் தொழில் முன்னேற்றத்தை அனுசரித்து என்னென்ன நலம் தருபவைகள் உண்டோ அவைகளைச் செய்யவும்,

(ங) சட்ட அனுமதியுள்ள இன்னென்ன தொழில்களை பாங்குக் கம்பெனி செய்யலாமென்று அவ்வப்போது அரசினர் வெளியீட்டில் வரும் தகவல்களையொட்டி அந்தந்த தொழில் நடத்தவும் உரிமையுண்டு.

விளக்கங்கள் : இந்திய கம்பெனிகள் சட்டம் 1936-ன் பிரிவுகள் 277 எஃப் முதல் 277 ஜி (2) வரையில் விடுதல்களும் சேர்ப்புகளும் ஏற்பட்டுள்ளன. வெகுவாக முன்னேற்றமடைந்த நாடுகளில் நடப்பிலுள்ள பாங்குத் தொழில் முறைகளையும், சட்ட இயல்புகளையும் அனுசரித்தே இந்தப் பிரிவுகள் அமைக்கப்பட்டு, பாங்கு நடத்துமுறைகள் அனைத்தையும் ஒருங்கமைத்து நடத்தக் கூடிய வழியில் உள்ளது. இவை, பாங்கு வர்த்தகத்திலும் ஊகவர்த்தகத்திலும் ஈடுபடக்கூடாதென்று தடை விதிக்கின்றன. பாங்குத் தொழிலுடன் சாதாரண வர்த்தகத்தையும் கலந்து நடத்துவதையும் தடைசெய்கிறது. இரண்டாம் உலகப்போரின் முன்னர் ஐரோப்பிய கண்டத்தின் நாடுகளான பெல்ஜியம், சுவிஜர்லாந்து, இத்தாலி மற்றும் செர்மனி போன்ற நாடுகளில் உள்ள பாங்குகள் வர்த்தகத்தொழிலை இணைத்து நடத்தி வந்தன. அதிக முன்னெச்சரிக்கையுடன் பாங்கு நடத்த வேண்டிய தொழிலுக்கான இலக்கணம் கூறி கட்டுபாடுஇட்ட பின்னரும்கூட சில பாங்குகள் தனியார் கம்பெனிகளின் பங்குகளில் முதலீடு செய்தும், தங்கள் விருப்பத்திற்கேற்ப ஆவணங்களில் முதலீடு செய்தும் வருகின்றன. கம்பெனிகள் சட்டம் 1956–ன் 384ஆவது பிரிவின் எந்த பாங்குக் கம்பெனியும் நிர்வாகியாக வர்த்தகத்திற்கு நியமனம் செய்யக்கூடாது என்ற கட்டுப்பாடு இடப்பட்டுள்ளது. பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் பிரிவுகளை அனுசரித்து நம் நாட்டிலுள்ள பாங்குக் கம்பெனிகள் கடும் ஊக வர்த்தகத்தில் ஈடுபடாது முன்னேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாடிக்கைக்காரர் என்பவருக்கான தகுதி

ஸர் ஜான் பேகெட் அவர்களின் கொள்கை: இங்கிலாந்திலோ அல்லது இந்தியாவிலோ இதுகாறும் சட்ட வடிவில் வாடிக்கைக்காரர் என்பதற்கான இலக்கணம் ஏற்படவில்லை. ஆரம்பகாலத்தில் நீதிமன்றங்களின் முடிவுகள் ஒன்றுக்கு ஒன்று முரணாக இருந்தன. பின்னர் வந்த நீதிமன்ற முடிவுகள் விளக்கம் தருவதாக அமைந்துள்ளன. முன்னாட் கொள்கைகளின்படி

ஸர் ஜான் பேகெட் கூறியவண்ணம் ஒரு வாடிக்கைக்காரர் என்று சொல்லப்படுபவர் பொதுவாக அனைவருக்கும் புரியும் விதத்தில் வழக்கமாக பாங்குத் தொழிலில் ஈடுபட்டிருப்பார் எனக் கூறலாம். அவர் பாங்குடன் எத்தனை தடவைகள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டார். ஒரே ஒரு தடவை கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டிருப்பாரா இல்லையா என்று விளக்கம் கொடுப்பது சிரமமாக இருக்கிறது. இலக்கணப்படி குறைந்த அளவு பழக்கமான முறை என்பது ஒரு தனிப்பட்ட கொடுக்கல் வாங்கலுக்கு எதிரிடையாக அமைந்துள்ளது. பொதுவாக வர்த்தகர்கள் வாடிக்கைக்காரர் என்பவரையும் எப்பொழுதாவது வாங்க வருபவர் என்பவரையும் நன்கு பிரித்துக்காட்டும் தன்மையைப் பெற்றுள்ளனர். இந்தக் கொள்கையின்படி ஒரு பாங்கிற்கான வாடிக்கைக்காரர் இரண்டு நிபந்தனைகளை மேற்கொண்டு நடக்கவேண்டும். ஒன்று பாங்கினுடன் அவர் எல்லோருக்கும் புரியும் விதத்தில் தொடர்ந்து கொடுக்கல் வாங்கல் செய்துகொள்ள வேண்டும். இரண்டாவதாக அவர் பாங்கினுடன் செய்யும் கொடுக்கல் வாங்கல் அன்றுடம் செய்யக் கூடிய பாங்குத் தொழிலாக அமைதல் வேண்டும். முதலில் கூறிய நிபந்தனையையொட்டி மாத்யூஸ் எதிராக வில்லிம் ப்ரௌன் கம்பெனி என்ற வழக்கில் நீதி மன்றத்தார் கொடுத்த முடிவு வரவேற்கத்தக்கது. பாங்கினுடைய வாடிக்கைக்காரர் என்று சொல்லப்படுபவர் முதன் முதலாக ஏதாவது ஒரு வகையில் ஒரு கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் கணக்கு திறப்பதனுல் மட்டும் அவரை வாடிக்கைக்காரராகவும் பாங்கு நடத்துவோருக்கும் அவருக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டு விட்டதென்று சொல்வதற்கிடமில்லை. அவர் தொடர்ந்து அடிக்கடி பாங்குடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டாலன்றி வாடிக்கைக்காரராக சொல்லமுடியாது. இந்த முடிவின் அடிப்படையை ஒட்டியே முடிவாக அநேகம் பாங்குகள் வரையிடப் பட்ட செக்குகளுடன் முதன் முதலில் கணக்குகள் திறப்பதை ஏற்றுக் கொள்வதில்லை

பருவக்கொள்கை பிசுபிசுத்தது — சர் ஜான் பேகெட் சீரிய முறையில் விளக்கிய பருவம் அல்லது காலக் கொள்கை உயர் நீதிபதி பெயில்ஹேக் (Bailhache) அவர்களால் தவறு என்று தெற்றென விளக்கப்பட்டது. லெட்ப்ரோக் எதிராக டாட் (Ladbroke V. Todd) டி. லா. ரா. (1914)433, என்றவழக்கில் அவர் செய்த தீர்ப்பு வருமாறு: பாங்கு நடத்துவோரும் வாடிக்கைக் காரரும் தம்மிடையே உள்ள உறவு தொடக்கம் பெறுவது எப்போது என்ருல் வாடிக்கைக்காரர் தனது முதல் செக்குத்

தாளைக் கொடுத்ததும் அதை வசூல் செய்து கணக்கில் வைப்பதாக பாங்கு நடத்துபவர் ஏற்றுக்கொள்ளும் அந்த நிலையை 'உறவு' அமைந்தது எனக் கூறக்கூடும். இதே கொள்கையை வலியுறுத்தி டியுனடின் பிரபு அவர்கள் (Lood Dunedin) பிரிவு கௌன்ஸில் குழுவினரின் முன்பு கமிஷனர் ஆஃப் டாக்ஷேஷன் எதி. இங்கிலிஷ் ஸ்காடிஷ் ஆண்ட் ஆஸ்ட்ரேலியன் பாங்கு (Commissioner of Taxation Vs. English & Australian Bank என்ற வழக்கில் (1920 ஏ.ஸி. 683) 'வாடிக்கைக்காரர்' என்ற பதம் பாங்கு நடத்துவோருக்கும் வாடிக்கைக்காரர் என்ற இருவருக்குமிடையே உள்ள உறவினை நீண்ட கால அல்லது பருவத்தையொட்டியேற்பட்டதன்று.

ஒரு நபர் பணம் செலுத்தியவுடனே ஏற்றுக்கொள்ளப்பட்டு பாங்கு அன்றுடைய செக்குகளை மதித்து கணக்கில் வரவில் உள்ள பண அளவு வரை கொடுக்க முன்வந்தால், நீதிபதி கருதுவதுபோல சட்ட முறையில் வாடிக்கைக்காரர் எனக் கூறலாம். இதில் நீண்ட அல்லது குறுகிய பருவ அல்லது கால அளவையைக்கொண்டு முடிவு கூறவியலாது.

பாங்கு நடத்துவோருக்கும் வாடிக்கைக்காரருக்கும் இடையே உள்ள உறவினை சேவரீ அண்டு கம்பெனிக்கு எதிராக லாயிட்ஸ் பாங்கு லிமிடெட் (Savory & Co., Vs Lloyds Bank Ltd.) (1932) டி. எல். ஆர். 344, என்ற வழக்கு பிரபுக்கள் உள்ள சட்ட மன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது வழக்கில் வந்த கட்சியினர் சட்ட நுணுக்கங்களைப் பற்றிய பிரச்சினையை எழுப்பாவிடினும், நீதிபதிகள் கீழ்க்கண்ட பத்திகளில் கொடுக்கப்பட்ட முடிவுகளைத் தெரிவித்துள்ளனர்.

ஏதேனும் ஒரே ஒரு கொடுக்கல் வாங்கலின் காரணத்தால் கூட ஒரு நபர் பாங்கினுடைய வாடிக்கைகாரராகக் கருதலாம்— வழக்கில் வரும் வாதிகள் லண்டன் நகரிலுள்ள கூட்டுப்பங்கு வர்த்தகர்கள். அவர்களிடம் பெர்கின்ஸ் என்றும் ஸ்மித் என்றும் பெயர் கொண்ட இரு எழுத்தர்கள் பணியாற்றி வந்தனர். வாதிகள் கணக்கு வைத்துள்ள மிட்லண்ட் பாங்கு லிமிடெட்டின் செக்குத்தாள்களைக் குறிப்பிட்ட நபர்கள் பெயரில் எழுதி அனுப்பியும் அல்லது எவரேனும் வாங்கக் கூடிய செக்குத்தாள்களை இவ்வெழுத்தர்களில் ஒருவரான பெர்கின்ஸ் வசமும், ஸ்மித்து வசமும் கொடுத்து தபாலில் அனுப்ப ஏற்பாடு செய்தனர். பெர்கின்சும் ஸ்மித்தும் இந்த செக்குத்தாள்களைத் திருடிக் கொண்டு போய் லண்டனில் உள்ள லாயிட்ஸ் பாங்கியின் கிளை ஒன்றில்மாற்றி,

பெர்கின்ஸுக்குச் சேர வேண்டிய தொகையை வாகிங்டன் (Walkington) பகுதியிலுள்ள லாயிட்ஸ் பாங்குக் கிளையில் வரவு செய்ய வேண்டியது என்றும், ஸ்மித்துக்குச் சேர வேண்டிய தொகையை ரெட்ஹில்லில் (Redhill)உள்ள லாயிட்ஸ் பாங்கு கிளை அலுவலகத்தில் அவனுடைய மனைவியின் கணக்கில் வரவு செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்து கொண்டனர். இந்த செக்குத் தாள்களின் முதல் செக்கைத் திருமதி ஸ்மித் வாடிக்கைகாரர் ஆகும் முன்னரே பெற்றுக் கொண்டனர். சிறிய காலங்கழித்து வாதிகள் தங்களுடைய எழுத்தர்களின் ஏமாற்று வித்தையைக் கண்டுபிடித்து பிரதிவாதி லாயிட்ஸ் பாங்குமீது வழக்குத் தொகுத்து, அந்த பாங்கு கைமாற்றுத்தனமான களவிற்கு உடந்தையாக இருந்ததென்று வாதிக்கப்பட்டது.

அடிக்கடி வரும் தன்மையை எதிர்நோக்கியிருத்தல் :– முடிவாக நோக்குமிடத்து ஒரு நபர் பல்வேறு கொடுக்கல் வாங்கல்களைப் பாங்கினுடன் அடிக்கடி வைத்துக் கொண்டால் தான் வாடிக்கைகாரர் என்று கருத இடமில்லை. ஆயினும், தனது உண்மையான நிலையை செம்மையாக்கும் பொருட்டு அவர் பாங்கினுடன் அடிக்கடி கொடுக்கல் வாங்கல்கள் வைத்துக்கொள்ள வேண்டி நேரிடுகிறது. இதன் பொருளாவது பாங்கு நடத்துபவர் முதன்முதலில் ரொக்கம் பெற்றாலும், வசூல் செய்து கணக்கில் வரவு செய்யச் செக்குகளை ஒரு நபரிடமிருந்து பெற்றாலும், கீழ்கண்ட தீர்மானங்களுடன் தான் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. (1) (அ) செக்குகள் தீர்வகம் சென்று வசூலாகி வரவு செய்யும் காலம்வரை மேற்படி நபர் அந்தத் தொகையைப் பெறச் செக்குகள் எழுதித்தருதல் கூடாது. (ஆ) செக்குகள் சம்பந்தமான பாங்கு நடத்துபவர் எடுத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கையி லிருந்து அவருக்கும் வாடிக்கைக்காரருக்கு மிடையே உள்ள வர்த்தக உறவில் ஐயப்பாடுகள் ஒன்றுமில்லை என்று வலியுறுத்தியும், (2) எந்தக்காரணத்தை முன்னிட்டும் பாங்கு நடத்துபவரும் வாடிக்கைக்காரரும் தம்மிடையே உள்ள உறவை வெட்டிப்பிரிந்து போக நியதியுண்டு. புதிதாக வரும் வாடிக்கைகாரர்களைப் பொறுத்தமட்டிலும் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்றும் கௌரவம் உள்ளவர்கள் என்றும் எண்ணித்தான் பாங்கு நடத்துபவர்கள் தொடர்பு செய்து கொள்ளுகிறார்கள். மேலே குறிப்பிட்ட முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டு பாங்கு நடத்துபவர்கள் புதிய கணக்குகளைத் திறந்து வாடிக்கையைப் பெறின் செலாவணி முறிச் சட்டம் 1881ன் சட்டப் பிரிவின்கீழ் பாங்கு நடத்துபவருக்கு காப்பு அளிக்கப்படுகிறது எனலாம்.

பாங்கு நடத்துவோருடன் உள்ள தொடர்பு பாங்குத் தொழிலையொட்டியிருத்தல் இன்றியமையாதது: பாங்கு நடத்துபவரும் வாடிக்கைகாரரும் எனக் கூறப்படுபவர்கள், தம்மிடையே உள்ள தொடர்பை வலியுறுத்த பாங்குத் தொழில் சம்பந்தப்பட்டதாக இருக்கும் தொழிலைச் செய்தல் இன்றியமையாதது எனக் கருதப்பட்டு வருகிறது. பாங்கு நடத்துபவர் தமக்கு அறிமுக நட்பு பெற்றவர்களுக்காக உதவி அளிக்கும் வகையில் செக்குகளை மாற்றியும், பணத்தாள்களை மாற்றி ரொக்கமாக்கியும், விலை மதிப்புள்ள பண்டங்களைப் பாதுகாப்பு செய்து கொடுத்தும், கோரும்போது ரெவின்யூத் தலைகளை விற்றும் செய்யக் கூடிய பணிகள் மூலம் அன்னாரை வாடிக்கைகாரர் எனக் கொள்ளுதல் சரியில்லை என்று கூறப்படுகிறது. கமிஷனர் ஆஃப் டாக்ஸேஷன் எதி. தி இங்கிலீஷ் ஸ்காட்டிஷ் அண்ட் ஆஸ்டிரேலியன்ஸ் பாங்கு என்ற வழக்கில் முன்னர்க் கூறியபடி, புதியதாக சேரவரும் வாடிக்கைக்காரருக்கும் வழக்கமாக வந்துபோகும் அறிமுகமானவருக்கும் உள்ள வேற்றுமைகளை இங்குக் காட்டப் புகவில்லை. அதற்குப் பதிலாக ஏதாவது உபகார முறையில் பாங்கு அற்ப சொற்பமாக அளிக்கும் உதவியைப் பெறுபவருடன் ஒப்பிடப்படுகிறது எனலாம். எடுத்துக்காட்டாக, ஒரு வாடிக்கைக்காரர் இன்னொரு நபரை பாங்கு நடத்துபவருக்கு அறிமுகம் செய்து வைத்து எப்போதாவது அவருக்குச் செக்குகளை மாற்றிக் கொடுக்கலாம்.

பாங்கு நடத்துபவர் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டி ஒரு சிறிய கணக்கினைத் திறந்தும், அல்லது சில்லரைக் கணக்கில் இம்மாதிரியான வரவினங்களை எழுதி வருவதால் அந்த நபருக்கான வரவினங்கள் எழுதப்படுவதால் அவர் வாடிக்கைகாரராகக் கருதப்படமாட்டார்.

வைப்புக் கணக்கினைப் பற்றிய நிலை: பாங்கு நடத்துபவருக்கும் வாடிக்கைகாரருக்கும் இடையே உள்ள உறவு நடப்பு வைப்பு கொண்டுதான் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆயினும் தவணை வைப்புகளைப் பற்றிய சட்ட விளக்கங்கள் சரிவர இலக்கணப்படுத்தப்படவில்லை எனலாம். தவணை வைப்பு போட வரும் நபரிடம் அறிமுகக் கடிதமோ, பழக்கமுள்ள வாடிக்கைக் காரரின் சான்றிதழோ கோரப்படவில்லையாதலால் பாங்குகளில் தவணை வைப்புதாரர்களுக்கு இவ்வகையான கட்டுப்பாடுகள் உண்டாவதில்லை. முதன் முதலில் செக்குத்தாளைக் கொடுத்துக் கணக்கு வைத்துக்கொள்ள விரும்பும் நபரிடம் செக்கு பெற்றுக்

கொள்ளப் போதிய உரிமை உண்டா இல்லையா என்று அறிந்து கொள்ளக் கூடிய நிலையாங்கு நடத்துவோருக்கு ஏற்படவில்லை எனலாம். அம்மாதிரியான நிலைமையில் பாங்கு நடத்துபவர் எவ்வித முன்னெச்சரிக்கையும் செய்யாது அன்னுரை வாடிக்கை தாரராக ஏற்றுக் கொண்டால் சட்டப்படி அவ்வருக்குக் காப்பளிப் பது தடைபெறும் எனக் கூறலாம். ஆரம்பத்தில் கணக்கு வைத்துக்கொண்ட பின்னர் மேற்படி செக்கை பாங்கு நடத்துபவர் வாங்கி வசூல் செய்ய முற்படின் சட்டப்படி அவருக்குக் காப்பு உண்டு. வைப்புக் கணக்கு வைத்துக்கொண்ட காலத்திற்கும் மேற்படி வாடிக்கைக்காரருக்காகச் செக்குத்தாளை வசூலிப்பதற் கான (சட்ட முறையில் காப்பு கோரும்) கால எல்லையைப் பொறுத்தும் இதை அனுமானிக்கலாம்.

பொது உறவு

பாங்கு நடத்துபவர் பெறும் டிரஸ்டி அல்லது நிதி வைப்பிடமும் அன்று : ஒரு நபர் பாங்கு நடத்துபவருடன் நடப்புவைப்புக் கணக்கு வைத்துக்கொள்ளுவதால், அவர்கள் இருவரிடையே ஓர் ஒப்பந்த உறவு ஏற்படுகிறது என்பது தெரிந்ததே. பண்டு பொது மக்களுடைய கொள்கையாதெனில் பாங்கு நடத்துவோர் விலையுயர்ந்த பண்டங்களைப் பாதுகாப்பு செய்பவர் என்பதேயாம். இங்கிலாந்தின் வரலாற்று வாயிலாக இதை நாம் கண்டிருக்கிறோம். அக்காலங்களில் பொன் வர்த்தகர்கள் (Gold Smiths) என்ற வியாபாரிகள் ஆரம்பத்தில் வைப்புகளை ஏற்றுக்கொண்டு வட்டியின்றி ரசீது கொடுத்தனர். நிதி வைப்பிடமாகக் கருதப்படுபவர் எந்த நிதிப் பொட்டலத்தை யும் அவிழ்க்காது கொடுத்தபடியே திரும்பக் கொடுக்க வேண்டும். பாங்குகள் நிதி காவலராகப் பணியாற்றுவது என்பது உண்மைதான். ஆயினும், இப்பணியைப் பாங்கினுடைய பெரும்பணியாகக் கருதாது அதனுடைய உட்பணியாகவே கருதலாம். பாதுகாக்க வாடிக்கைக்காரர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு அதைப்பணப்பெட்டியில் வைத்துப் பூட்டிப் பாதுகாத்துப் பினனர் உரியவருக்குத் திருப்பிவிடுவதால், அது பயனற்றுப்போய் விடுவதோடல்லாது பாங்கு நடத்து வோருக்கு எவ்வகையிலும் லாபம் தரும் நிலையில் இருக்காது. பாங்கு நடத்துவோர் டிரஸ்டியாக இருப்பதாக அனுமானம் செய்யின் அவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நிதியை எவ்வகையான ஆவணங்களில் முதலீடு செய்தார் என்ற கணக்கை அவ்வப்போது டிரஸ்ட் சம்பந்தப்பட்டவர்களுக்குக் காட்டவேண்டிய நியதியேற்படுகிறது. எனவே, அதன் பொருளுக்

கேற்ப பாங்கு நடத்துபவர் செய்யவியலாமையால், அவரை டிரஸ்டியாக இலக்கணங் கூறுவது பொருத்தமில்லையெனலாம்.

கடன்பட்டவருக்கும் கடன் கொடுத்தவருக்கும் இடையே உள்ள உறவு : 'பாங்கு நடத்துவோருக்கும் வாடிக்கைக் காரருக்கும் இடையே உள்ள உறவு' ஸர் ஜான் பேகெட் (Sir John Paget) அவர்களின் கூற்றுப்படி கடன்பட்டவருக்கும் கடன் கொடுத்தவருக்கும் இடையே உள்ள உறவைப் போன்றது எனலாம். அது பாங்கு நடத்துபவருடைய கணக்கினை யனுசரித்தே விவரப்படுத்தப் படலாம். வாடிக்கைக்காரர் கொடுக்கும் பணத்தை இரும்புப் பெட்டியில் பூட்டி வைப்பதற்குப் பதிலாக, பாங்கு நடத்துபவர் தான் பட்ட கடன் என்று பொறுப் பாளியாக நிற்கிறார். பாங்கியில் செலுத்தப்பட்டத் தொகை பாங்கு நடத்துபவருடைய சொத்தாக மாறுகிறது. எனவே, ஒருவர் தானடைந்த சொத்தை எவ்விதமாவது செலவிட உரிமை பெற்றுள்ளதுபோன்று பாங்கு நடத்துவோரும் அவ்வாறு தன் விருப்பத்திற்கேற்ப அவர் எடுத்து செலவிடமுடியாது. தனது வாடிக்கைக்காரடமிருந்து பெறும் பணத்தை அல்லது அவரது கணக்கில் கட்டப்பட்ட பணத்தை பாங்கு நடத்துபவர் ஒரு கடன் பட்டவர் போல வைத்துக்கொண்டு அதற்கு மேலாக இன்னொரு பொறுப்பையும் மேற்கொள்கிறார். தமது வாடிக்கைக்காரர் கொடுக்கும் செக்குகளை மதித்து உடனே பணம் கொடுக்க முன் வருகிறார். அவ்வாறு மதித்துக் கொடுக்கப்படும் தொகை வாடிக்கைக்காரரின் கணக்கில் உள்ள தொகை வரையில்தான், அதற்கு மீறிக் கொடுக்க இயலாது. (ஃபோலி எதி ஹில் Folley Vs Hill *1848 2 எச்.எல்.ஸி. 28*) இதே அடிப்படையில் தர்ம்தாஸ் எதி கங்காதேவி என்ற வழக்கைப் பார்க்கவும். (*29. ஏ. 773*). சுப்பிரமணியஞ் செட்டியார் எதிராகக் கதிரேசன் *39*, எம். *1081*, இச்சா எதிராக நாதா *13 பீ 388*; இஷர் எதி ஜிபான் *16 ஸி 26*, அஃபிஷியல் அஸைனி ஆஃப் மதராஸ் எதி-ஸ்மித் *32* எம் *68*. பாங்கியில் பணம் கட்டியவுடன், அந்தப் பணம் வைத்துக்கொள்வதற்கான பாத்தியதை பாங்கு பெறுகிறது. இம்மாதிரி கட்டிய பணமனைத்தின்மீது பாங்கு கொண்டுள்ள உரிமை உரிமையே (Liess) அன்றி மீள் உரிமையாகக் கருத முடியாது (அஃபிஷியல்லிக்விடேடர், அனுமன் பாங்கு லிமிடெட் எதிராக கே. பி. டி. நாடார் மற்றும் இதரரும் (Official Liquidator The Hanuman Bank Ltd., Vs K. P. T. Nadar & Others) சி. சி. வால். *26*, பக் *81*) 'பாங்கு நடத்துபவர் தமது வாடிக்கைக் காரரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு அதற்கு வட்டி தர முன்வருவதன் கொள்கையாதெனில் தான் அப்பணத்தைத் தன்

விருப்பத்திற்கேற்பப் பயன்படுத்திக்கொள்ளவும், அதை வட்டிக்கு விட்டுப் பொருளீட்டுவதற்கான உரிமையேற்படுகிறது. இதன் விளைவாக அவர் தனது வாடிக்கை வைப்புதாரருக்கும் வட்டி கொடுக்கவும் முடிகிறது, லாபம் பெறவும் முடிகிறது. தனது வாடிக்கைக்காரருக்கு வட்டியே கொடுப்பதில்லை என்றாலும், அவர் கடன் பட்டவராகக் கருதப்படுவாரேயன்றி அடகு வாங்குபவராகக் கருதமுடியாது. ஏனெனில், அவர் கோரியபொழுது போட்ட தொகையைத் திருப்பிக் கொடுத்து விடுகிறார். வாடிக்கைக்காரர் தான் கொடுத்த அதே இலக்கமிட்ட பணத் தாள்களையும் நாணயங்களையும் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. சட்டமுறையில் கடன் தீர்ப்புக்குரிய நாணய முறையில்தான் அவர் திருப்பிக்கொடுக்கக் கூடும்.

வேல்ஜீ லக்கம்ஸே அண்ட் கம்பெனிக்கு எதிராக டாக்டர் பாணுஜி : (Velji Lakhamsey & Co., Vs, Dr. Banaji) கம்பெனி வழக்குகள் வால் 25 (1955) பக் 395) பம்பாய் உயர் நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக அதிகப்படியான விபரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. பாங்கு நடத்துபவருக்கும், வாடிக்கைக்காரர் இருவரிடையே உள்ள உறவு கடன்பட்டோரையும் கடன் கொடுத்தோரையும சார்ந்துள்ள தொடர்புபோல் ஆகும். பாங்கு நடத்துபவர் வாடிக்கைக்காரரிடமிருந்து பெற்றுக் கொண்ட தொகையைத் தனிச் சலுகை பெற்ற கடன் கொடுத்தோரைப்போன்று உடனே கொடுக்கப்பட வேண்டும் என்று பாங்கு முறிவு ஏற்பட்ட காலத்தில் கோர நியாயமில்லை. ஆயினும், வாடிக்கைக்காரர் தனது பாங்கு நடத்துவோருக்குத் தனிப்பட்ட கட்டளைகளையிட்டுத தனக்குப் பதிலாளாக நியமிகக உரிமையுண்டு. அவ்வாறு பதிலாளாக அமர்ந்த பாங்கு நடத்துபவரை, கடன்பட்டவராகக்கொள்ள இயலாது. ஆயினும், வாடிக்கைக்காரருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. பதிலாள் உறவு முடிவு பெறும்வரை அவர் நம்பிக்கையைப் பெறுகிறார். எடுததுக் காட்டாக, ஒரு வாடிக்கைக்காரர் தனது அறிமுகமான பாஙகு நடத்துவோரிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை ஏதோ ஒரு குறிபபிட்ட நபர்வசம் சேர்க்கவேண்டும் எனறு கட்டளைப் பிறப்பித்தார் எனக்கொள்வோம். இவ்யுத்திரவின் அடிப்படை யினின்று நோக்கின் பாங்கு நடத்துபவர் மேற்படி தொகையைப் பாதுகாப்பாக வைத்திருந்து, டிரஸ்டி போன்று அதை குறிப்பிட்ட நபரிடம் சேர்த்துவிடுவது வரை பொறுப்பாளியாகிறார்.

பாங்கு நடத்துவோர் பட்ட கடன் தொகையை வாடிக்கைக்காரர் தேவையெனக் கோர வேண்டியது இன்றியமையாதது : கடன் பட்டவர், கடன் கொடுத்தவர் உறவு போன்று இவ்விருவரிடையே அமைந்தது என்று கூறின் அது முழு க்ருத்தையும் விளக்குவதன்று வர்த்தகக் கடனுக்கும் இவ்வகையான கடனுக்கும் ஒரு வேற்றுமையை நன்கு காணலாம். கடன் கொடுத்தவர் கடனைத் திருப்பிக்கொடு என்று கோர வேண்டியதில்லை ஆயினும் பாங்கு நடத்துவோருக்கும் வாடிக்கைக்காரருக்கும் இடையே உள்ள முறையின் கீழ் கடனைத் திருப்பிக்கொடு என்று கேட்க வேண்டியது இன்றியமையாதது எனக் கூறுகிறார்கள். இந்த விளக்கம் ஜோவாகிம்ஸன் எதி. ஸ்விஸ் பாங்கிங் கார்ப்பரேஷன் (J achimson Vs Swiss Banking Cr(poration) (*1921*) *3* கே. பி. *110* என்ற வழக்கில் முடிவு செய்யப்பட்டது. "ஒரு பாங்கியிலிருந்து வரவேண்டிய கடனையின் அதைக்கொடு என்று கேட்டுப்பெற வேண்டும். அக்கடன் "உண்மையில் இயல்பாக பாக்கி"யாக இருக்குங்கால் வாடிக்கைக்காரரால் கோர வேண்டியது இன்றியமையாதது எனலாம். இல்லையெனில், பாங்கு நடத்துபவர் தக்க அறிவிப்பு இல்லையென்ற காரணத்தால் வாடிக்கைக்காரரின் கணக்கை மூடிவிடுவார். இதனால் அவருடைய செக்குத்தாள்களை அவ்வப்போது கேட்டபோது கொடுக்க மறுத்து மேற்படி வாடிக்கைக்காரரின் கௌரவத்தை பாதிக்கும் அளவில் நடக்கக் கூடும். உயர்நீதிபதி அட்கின் (Atkin L J.) பிரிவிகௌன்ஸிலின் உறுப்பினர் மிகவும் தெளிவாகப் பயன்படும் வகையில் தனது தீர்ப்பை விளக்கியுள்ளார்.

> "தமது வாடிக்கைக்காரருக்கான கணக்கிற்குப் பணம் பெற்றும், மாற்றுண்டியல்களை முன்னின்று வசூல் செய்து வரவு வைக்கிறது பாங்கு. இவ்வாறு பெற்ற பலவகைத் தொகைகளை ட்ரஸ்டாக வைக்கப்படவில்லை. அத்தொகைகளை பாங்கு கடனாகப்பெற்று ஒழுங்காகத் திருப்பிக்கொடுக்க பொறுப்பேற்கிறது. அவ்வாறு கூறப்பட்ட பொறுப்பாவது எந்தக் கிளை அலுவலகத்தில் பணம் கடனாகப் பெற்றதோ அதே கிளையலுவலகத்தில் பாங்குத் தொழில் நடக்கும் வேளையில் திருப்பித் தர சம்மதிக்கிறது. இவ்வாறு ஏற்கப்படும் பொறுப்பில் வாடிக்கைக்காரர் கட்டியுள்ள தொகையின் எந்தப் பகுதியையும் எழுத்து மூலம் பிறப்பிக்கப் பட்ட கட்டளையை அனுசரித்து அதே கிளையில் இரண்டல்லது மூன்று தினங்களுக்குள்ளாக இயல்பாகவே வர்த்தக முறையில் கொடுக்க முன் வரலாம். நியாயமான முறையில்

அறிவிப்புக் கொடுக்காமல் பாங்கு மேற்படி வாடிக்கைக்காரருடைய கணக்கு சம்பந்தப்பட்ட கொடுக்கல், வாங்கலை நிறுத்திவிடாது. இது ஒப்பந்தத்தின் ஒரு தலையாய பிரிவு எனலாம். வாடிக்கைக்காரர் எழுத்தில் பிறப்பிக்கும் கட்டளைகள் பாங்கு நடத்துபவரை ஐயத்தில் ஆழ்த்தி விடாமலும் பொய்க் கையெழுத்தை வளர்த்து அதன் விளைவாக பாங்கு நடத்துபவரைத் தவறான பாதையில் செலுத்தக்கூடாது. நடப்பு வைப்புக் கணக்கு வைக்கப்பட்ட கிளையலுவலகத்தில் வாடிக்கைக்காரர் செலுத்திய முழு தொகையையும் கொடுக்க எழுத்து மூலம் தேவையெனக் கோருதல் அன்றி, கேட்டவுடன் முழு தொகையைக் கொடுக்கவேண்டும் என்று ஒப்பந்தப்படி கூறப்படவில்லை. எழுத்துமூலம் தேவையைக் கோரவேண்டுமா என்ற முடிவைப்பற்றி இப்போது சிந்திக்க வேண்டிய தேவையில்லை''

உயர் நீதிபதி அட்கின் வியக்கத்தகு முறையில் விளக்கியிருப்பது பாங்கு வாடிக்கைக்காரருடைய கணக்கு உள்ள கிளையலுவலகத்தில் மட்டில்தான் கோரியபின் பணத்தைக்கொடுக்கலாம் என்றும், இது அந்த பாங்கு நடத்துபவர் சிரமேற்கொள்ள வேண்டிய கடமையெனக் கூறியுள்ளார். இதே விபரம் முன்னர் பிரச்சினையாக, எழுப்பப்பட்டு க்ளேர் அண்ட் கோ எதி. டிரெஸ்ட்னர் பாங்கு (Clare & Co. Vs. Dresdner Bank) *1915—2 கே.பி. 57.* என்ற வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. அதன் விபரச் சுருக்கம் வருமாறு: இவ்வழக்கில் வரும் வாதிகள் பிரதிவாதி பாங்கினுடைய பெர்லின் கிளையில் கணக்கு வைத்துக் கொண்டிருந்தனர். பெர்லின்கிளையல்லாது அந்த பாங்கினுடைய லண்டன் நகர் கிளையில் தங்களுடைய கணக்கிலுள்ள பணத்தைக் கோரினர். லண்டன் கிளை மறுத்ததும் வழக்குத் தொடர்ந்தனர். வாடிக்கைக்காரர் எந்தக் கிளையில் கணக்கு வைத்துக் கொண்டுள்ளனரோ அந்தக் கிளைக்கு மட்டும்தான் பணம் கோரிய போது திருப்பவேண்டிய பொறுப்பு உண்டேயன்றி இதர கிளையலுவலகங்களைக் கொடுக்கும்படி வற்புறுத்த வாடிக்கைக்காரருக்கு அதிகாரம் இல்லை என முடிவு செய்யப்பட்டது.

லீடர் அண்கோ எதி. டிரக்ஷன் டெர் டிஸ்கண்டோ கஸல்ஷாப்ட் (Leader & Co., Vs, Direction der Disconto Gesellschaft) *31 டி எல்.ஆர். 83*ல் முன் கூறிய வழக்கில் வந்த அதே விளக்கங்கள் இருந்தன. ஆயினும், ஒரே ஒரு பேதமென்னவெனில், கணக்கிருந்த பாங்குக் கிளையிலேயே பணம்

கேட்கப்பட்டு மறுக்கப்பட்டது. இந்த நிலையில் விதிக்கப்பட்ட கடன்பட்டோர் எந்தப் பகுதியிலிருந்துகொண்டு தொழில் நடத்துகிருரோ அதுதான் சட்டபடி ஏற்றுக்கொள்ளக்கூடியது. கடன் வேருேர் அயல்நாட்டில்தான் கொடுக்கப்படவேண்டும் என்ற கொள்கையினை ஏற்றுக்கொள்ள இயலாது. ரிச்சர்ட்ஸன் எதி ரிச்சர்ட்ஸன் (Richardson Vs Richardson) 1927 என்ற வழக்கில் மேற்படி வழக்கை ஆதாரமாகக் காண்பித்து உயர் நீதிபதி ஹில் (Hill J) நல்ல முடிவுரையைக் கூறியுள்ளார். 'வாடிக்கைக்காரரின் வேண்டுகோளின்படி ஒரு கணக்கிலுள்ள தொகையை இன்னெரு கணக்கிற்கு மாற்றுவது பழக்கம். வாடிக்கைக்காரரின் விருப்பத்திற்கு இணங்கச் செய்வதால் இதிலுள்ள தொக்கிய கருத்து பாதையில் இம் மாற்றத்தி லேற்படும் செலவினங்களை வாடிக்கைக்காரர்தான் ஏற்றுக் கொள்ளவேண்டியது. அதே போன்று ஒரு வகை செலாவணி யிலுள்ள கணக்கை வேருெரு செலாவணி முறைக்கு மாற்றினல் நடப்பு மாற்று விகிதத்தில்தான் மாற்றப்படுமேயன்றி பழைய விகிதத்தில் மாற்றயியலாது'.

எடுத்துக் காட்டு: இக்கொள்கையின் பொருள் சமாதான காலங்களில் பொருத்தமாக இருக்கும் எனக்கூற இடமில்லை. யுத்த காலத்தில் இது மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளது. எடுத்துக் காட்டாக, ஏப்ரல் 1940க்கு முன்னர் ஜெர்மானிய ஆக்கிரமிப்பு நடப்பதற்கு முன்னர் 'அ' என்ற இந்தியர் ஹாலந்தில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். 'அ' என்ற மேற்படி இந்தியர் டச்சு பாங்கியினுடைய ஆம்ஸ்டர்டாம் (Amsterdam) கிளையில் உள்ள தன் பணத்தை மேற்படி டச்சு பாங்கினுடைய பமபாய்க் கிளைக்கு மாற்றும்படி கோருகிறர். செலாவணி மாற்றக் கட்டுப்பாடுகளாலும், போக்குவரவு சாதன மின்மையாலும் தடைபடுகிறது. 'அ' என்ற நபர் பம்பாய் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து பம்பாய்க் கிளையைக் கொடுக்கும்படி உத்திரவு பிறப்பிக்கலாம். இதில் கவனிக்கத் தக்கது என்னவெனில், ஆம்ஸ்டர்டாம், பம்பாய் இவ்விரு கிளைகளும் ஒரே சட்டப் பிணைப்பு பெற்றவைகளாக இருக்க வேண்டும்.

உயர் நீதி மன்றங்களிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதம் நீக்கம்பெற காலவரையறை சட்ட 60ஆம் பிரிவின் திருத்தம்: காலவரையறைச் சட்ட 1908-ன் பிரிவுகள் 59, 60-ன் வாசகங்களை யொட்டியே பரிசீலனை செய்யப்பட்டு முடிவு தெரிவிக்கப்பட்டது. பிரிவு 59ன் படி ஆரம்பத்தில் திருப்பிக்கொடு என்று கோரும்

தொகை கடனாகக் கொடுக்கப்படுமானால், அதற்குத் தவணை 3 ஆண்டுகள் எனக்கூறியுள்ளது. பிரிவு 60—ன் படி ஓர் ஒப்பந்தத்தின் கீழ் வைப்பாக விடப்பட்ட தொகை தேவையென கோரிய சமயத்திலிருந்து 3 ஆண்டுகள் என்று கூறுகிறது 1908ஆம் ஆண்டின் இந்தியக் காலவரையறைச் சட்டத்தின் பிரிவுகள் 59—ம் 60—ம் காலவரையறைச் சட்டம் 1963—ன் பிரிவுகள் 21—ம் 22—மாக அமைந்துள்ளன. பம்பாய், அலகாபாத் உயர் நீதி மன்றங்களின் விவரப்படி இச்சா எதி. நாதா (Ichha V. Natha 13 B. 338) தரம்தாஸ் எதி. கங்காதேவி (Dharamdas V. Gangadevi 29 A. 773) படி நாட்டு பாங்கு நடத்துவோருக்கும் வாடிக்கைக் காரருக்கும் இடையேயுள்ள தொடர்பு கடன் பட்டோருக்கும், கடன் கொடுத்தோருக்கும் உள்ள நிலையைப் போன்றும் 59—ஆவது பிரிவின் விளக்கத்தின் கீழ் வருகிறபடியால் நாட்டுபாங்கு நடத்துவோரிடமிருந்து எழுத்து மூலமாகக் கடனை திருப்பிக் கொடு என்று கோரவேண்டிய நியதி இல்லை. இக்கொள்கைக்கு எதிராக கல்கத்தா, சென்னை இவ்விரு நீதி மன்றங்களும் வேறொரு விளக்கம் கொடுத்து பிரிவு 60—ன் கீழ் நாட்டு பாங்கு நடத்துவோருக்கும், வாடிக்கைக்காரருக்கும் உள்ள உறவு வைப்பாளருக்கும், வைப்பு மேற்கொள்ளுவோருக்கும் போனறு தொடர்பு உள்ளதால் தேவை என்று வழக்குத் தொடரும், முன்னரே கோர வேண்டியது இன்றியமையாதது. (Isher V. Jiban) இஷர் எதி ஜிபன்-16 சி 25. பெருந்தேவித் தாயார் எதி நம் Perundevitayar Vs. Nam 18 எம் 390.

இந்த அபிப்பிராய பேதத்தை நீக்கும் பொருட்டு 60ஆவது பிரிவைத் திருத்தி 'வாடிக்கைக்காரரின் பணத்தை பாங்கு நடத்துவோர்களிடம் கொடுத்திருப்பின்', என்ற வாசகத்துடன் 'கோரியபோது கொடுக்கப்படும்' என்று இணைக்கப்பெற்றது. இந்தத் திருத்தத்தின் காரணத்தினால் விளக்கமாகப் பணம் தேவையெனக் கோரப்படவேண்டும் என்ற நிபந்தனையை ஏற்படுத்தி அதன்மூலம் பாங்கு நடத்துபவர் கடன்பட்டவர் என்ற காரணத்தின் அடிப்படையில் வழக்குத் தொடரலாம். ஜாக்கி எதி. கிஷென் 37 ஏ. 192; பீமா எதி. வேணி 28 பாம் லா. ரி 83; மோடி. எதி. நாரஞ்சி 27. பாம் லா. ரி 423, சீதாபாய் எதி. பாஞ்சி பாம் லா. ரி 427; சுப்பிரமணியன் எதி. கதிரேசன் 39 எம் 1081.

டிரஸ்டியாகப் பாதுகாப்பிற்கு விடப்பட்ட வைப்புகள் : பாங்கு நடத்துவோரிடம் பாதுகாப்பாக வைக்கப்படும் ஆவணங்களும், நிதியும் விலையுயர்ந்த நகைகளும் வைக்கப்படின்

அதன் காரணத்தால் பாங்கு நடத்துவோரின் நிலை முன் கூறியதைப்போன்று இல்லாது வேறொரு உறமுறையாக அமையும். அவ்வாறு பாதுகாப்பிற்குக்கொண்டுவரும் வாடிக்கைக் காரரின் மேற்படி பொருள்களின்மீது உள்ள உரிமை அவரிடமே இருக்கும். தேவைப்பட்டபொழுது அவர் திரும்பிப் பெறலாம். எடுத்துக் காட்டாக, ஒரு வாடிக்கைக்காரர் இன்னொரு பாங்கின் மீது உத்திரவிடப்பட்ட செக்குத்தாளைத் தனது கணக்கின்மூலம் வசூல்செய்து வரவு வைக்கக்கோரின் அவர் விருப்பப்படின் வசூல் செய்யும் பாங்கினிடமிருந்து அந்தச் செக்கைத் திருப்பிப் பெறலாம் ஒருக்கால் வசூலிக்கும் பாங்கு முறிந்துபோகும் தருவாயில் இருக்கும்போதுகூட அந்தச் செக்கை அவர் திருப்பி வாங்கலாம். வாடிக்கைக்காரர் ஒரு குறிப்பிட்ட பணிக்காக வைப்புகளை பாங்கு நடத்துவோரிடம் கொடுத்திருப்பின், அப்பணிக்கு இவ்வைப்பைப் பயன்படுத்தாது பாங்கு நடத்துபவர் நிறுத்திக்கொண்டாரானால் வாடிக்கைக்காரர் வைப்பைத் திருப்பிக் கோரமுடியாது. அந்நிலையில் வாடிக்கைக்காரர் களுடன் கொடுத்தவராகக் கருதப்படுவாரன்றித் தனிப்பட்ட சலுகை பெறுவதில்லை. பார்நார்ட்டு பாங்கு கம்பெனி வழக்கு (*1871*) நாற்பது லா.ஐ.அ. *730* (In re Barned's Banking Co., [*1871*] *40* L.J., Ch. *730*) குறிப்பிட்ட பணியில் பகுதியை நிறைவேற்றியிருப்பினும்கூட இவ்வழக்கு வேறு விதமாக மாறியிருக்கக்கூடும். "ஃபார்லே எதி. டர்னர் (*1871*) *26* லா.ஐ. அ *710* (Farley V. Turner (*1871 56* L.J,, Ch. *710*) என்ற வழக்கில் ஒரு வாடிக்கைக்காரர் 'அ' என்ற பாங்கியில் £ *942* தனது கணக்கில் வைத்திருந்தார். £ *707* ஐ மேற்படி கணக்கில் செலுத்தி £ *500* ஐ 'ஆ' என்ற பாங்கிற்கு வரவு வைக்கும்படி கட்டளை எழுத்துமூலம் தெரிவித்தார். இந்த மாற்றுண்டியலின் கெடு தேதி வரும் முன்னரே 'அ' என்ற பாங்கு முறிந்தது. 'அ' என்ற பாங்கு £ *500*–ஐ திருப்பிவிட்டது. வாடிக்கைக்காரர் தனது £ *500*-ஐ கொடுக்கும்படி வழக்காடினர். இறுதியில் நீதிமன்றம் அப்பணம் அவருடையது என்றும் கடன் கொடுத்த வராகக் கருதக்கூடாது என்றும் முடிவு செய்தது". (பாங்கிங் அண்டு நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமன்ட்ஸ் எழுதியவர் ஃராங்க் டில் யார்டு 4ஆவது பதிப்பு பக்கம் *95* அதே போன்று 'அ' என்ற பாங்கின் கிளை] அலுவலகம் ஒன்றில் 'ப' என்ற நபரிடமிருந்து மாற்றுண்டியல்கள் வசூலுக்காக வந்தது என்று வைத்துக் கொள்ளுவோம். மேற்படி நபர் அந்த பாங்கியில் கணக்கு வைத்திருப்பவர் அல்லர். மேற்படி பாங்கு மாற்றுண்டியலை வசூல்செய்து அதைக் கொடுக்கும் முன்னரே தனது தொழிலை நிறுத்திவிட்டது என்று வைத்துக்கொள்ளுவோம். அந்த

நிலையில் அந்நபர் மேற்படி பாங்கை நம்பிக்கைக்குப் பாத்திர மாக தொடர்பு கொண்டதால் அத்தொகை முழுவதும் அவரிடம் சேர வேண்டிய உரிமை, பெற்றிருக்கிறார். பாங்கு முறிந்தாலோ அல்லது வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்தாமல் இருந்தாலோ அவருக்கு எள்ளளவேனும் சிரமமில்லை. (ஷா வாலஸ் கம்பெனி எதிராக அம்ரிட்ஸ்ஸர் நேஷனல் பாங்கு (கலைப்பு நிலையில்) 7 லாகூ 155 பக் 158] [Shaw Wallace & Co. V. Amritsar National Bank] [In liquidation) 7 Lah. 155 at P. 158].

வாடிக்கைக்காரரின் முகவர்:—ஒரு பாங்கு நடத்துபவர் தனது வாடிக்கைக்காரருக்காக வேண்டி ஆவணங்களை வாங்கியோ அல்லது விற்பனை செய்தோ உதவியளிப்பின் அதன் நிமித்தம் அவர் பதிலாளாகப் பணியாற்றுகிறார். அதே போன்று தனது வாடிக்கைக்காரருக்காக வேண்டி செக்குகள், லாப ஈவுப் பங்குகள், மாற்றுண்டியல்கள், புரோ நோட்டு இவைகளை வசூல் செய்து கொடுப்பின் அப்பொழுதுகூட பதிலாளாகவே கருதப் படுவார். பதிலாளாகப் பல்வேறு துறைகளில் அவர் ஈடுபடக் கூடும். எடுத்துக்காட்டாக ட்ரஸ்டியாகவும் சொத்துக் காவல ளாகவும் இறந்தவர் சொத்தை நிர்வகிக்கவும் பணம் அனுப்பு எழுத்தராகவும் இன்னொருவருடைய பதிலாளாகவும் பணி யாற்றலாம்.

அநேக கணக்குகளை ஒன்று சேர்க்க பாங்கு நடத்து வோருக்கு உள்ள உரிமை—வெகு அண்மையில் பலர் கொண்டுள்ள எண்ணப்படி பாங்கு நடத்துபவர் ஒரே வாடிக்கைக்காரர் பெற்றுள்ள பல கணக்குகளையும் ஒன்று சேர்க்க உரிமை உண்டு என்றும் எழுத்து மூலம், வர்த்தகத்தையொட்டி அவைகள் தனிப்பட இருக்கவேண்டும் என்று நிபந்தனையிட்டால் அவ்வாறே வைத்திருக்கவேண்டும். இக்கொள்கை கார்னெட்டு எதி. மெக்கெர்வான் (Garnett V. Mckervan) (1872) 27 எல் டி. 560—இவ்வழக்கில் வாதி பல காலங்களாகவே பெற்ற கடன் ஓவர் ட்ராஃப்ட் அடைக்கப்படாமல் கிடந்து வந்தது. அவர் தனது வர்த்தகத்தை நிறுத்தியபின்னர் மேற்படி பாங்கியுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை. சில ஆண்டுகள் கழித்து மேற்படி பாங்கினுடைய வேறொரு கிளை அலுவலகத்தில் பணம் இட்டு கணக்கு வைத்துக்கொண்டார் இப்புதிய கணக்கிலிருந்த தொகை பற்றினமாயிருந்த ஓவர் ட்ராஃப்ட்க் கடனைவிட சிறிது அதிகப்படியாகவே இருந்தது. முதல் கிளை அலுவலகத்திலிருந்து கடன் தொகை வரவினத்தில் இருந்த கணக்கு வைக்கப்பட்ட

கிளை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டு ஓவர் டிராஃப்ட்டுக் கடனைக் கழித்து மீதித் தொகையை கணக்கில் வரவு காட்டினர். வாடிக்கைக்காரர் அவ்வப்போது விடுத்த செக்குகளைக் கணக்கில் போதிய பணம் இல்லை என்று கொடுக்க மறுத்துப் பெரும் தீங்கு விளைவித்தனர். இந்த வழக்கில் நீதிமன்றத்தின் தீர்ப்பு பாங்கு நடத்துவோருக்குச் சாதகமாகவே விளங்கியது. ஏனெனில், வாடிக்கைக்காரருக்கும் பாங்கு நடத்துவோருக்கும் இடையே யாதொரு விதமான தனிப்பட்ட ஒப்பந்தமும் ஏற்பட்டு அதன் விளைவாக கணக்குகளை இணைக்காது, தனியே வைக்கும்படியான நிலைமையை ஏற்படுத்தவில்லையாதலால் பாங்கு நடத்துபவர் தன் வசதிக்கேற்ப, தனிப்பட்ட ஒப்பந்தம் இல்லாத காரணத்தால் கணக்குகளை ஒன்று சேர்க்கலாம். மேலும், பாங்கு நடத்துபவர் கணக்குகளை இணைப்பதாகத் தனது விருப்பத்தை விளக்கமாகவோ எழுத்து மூலமாகவோ தெரிவிக்கவேண்டிய சட்ட முறைப்படி கடமைப்பட்டவர் அல்லர்.

வாடிக்கைக்காரரின் அனுமதியும் அவருக்கு விடப்படும் அறிக்கையும் ; முற்றிலும் மாறுபாடான கொள்கையை க்ரீன்லா எதிராக யூனியன் பாங்கு ஆஃப் மான்செஸ்டர் (Greenhalgh V. Union Bank of Manchester, (1924) 2 K. B. 153) என்ற வழக்கில் உயர் நீதிபதி வேறு ஒரு கொள்கையைக் கூறியுள்ளார். 'ஒரு பாங்கு நடத்துபவர் வாடிக்கைக்காரருடன் ஒப்பந்தம் செய்து கெண்டு அதன் அடிப்படையில் இரண்டு கணக்குகளைத் தனியே வைக்க முற்படின் தனது வாடிக்கைக்காரரின் அனுமதியின்றி சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஒன்றையொன்று தீர்த்துக் கட்டுவதற்கு அனுமதியில்லை. இன்னும் அநேகர் இந்தத் தீர்ப்பைக் கட்டுப்படுத்தும் தீர்ப்பாகக் கருதுவதில்லை. பொதுப் படையாக முன்னறிவிப்பின்றி பாங்கு நடத்துபவர் வாடிக்கைக் காரரின் தனிப்பட்ட இரண்டு கணக்குகளை இணைப்பின் அவர் தொல்லைகளுக்கு ஆளாகக்கூடும். இம்மாதிரி ஒன்று சேர்த்த பின்னர் வாடிக்கைக்காரர் கொடுத்துள்ள செக்குகளை ஏற்க மறுத்து அதன் விளைவாக வாடிக்கைகாரரின் நற்பெயரைக் கெடுத்து விடுவார். ஆயினும், இரண்டு கணக்குகளையும் ஒன்றாக இணைப்பதற்கான தகவலை அனுப்பியதாகவும் வர்த்தக முறையில் நிரூபித்தாலன்றித் தன் கட்சியை வலுப்படுத்திக் கொள்ள முடியாது.

ஒரு முன்னெச்சரிக்கை : இத்தொல்லையினின்று விடுபட வேண்டுமாயின், பாங்கு நடத்துபவர் தனது வாடிக்கைகாரர் களிடமிருந்து பற்று வரவை மாற்றிக் கொள்ளுவதற்கான

கட்டளையுள்ள கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இக்கடிதத்தின் ஆதாரத்தின் கீழ் பாங்கு நடத்துவோர் தன் வசதிக்கு ஏற்ப, வேண்டிய காலத்தில் பற்றுத் தொகையை வரவிலுள்ள தொகையில் கழித்து நிகர இருப்பு மட்டிலும் இவ்வளவு என்று பேரேட்டில் காட்டலாம். இதனால் இரண்டு பயன்கள் உள்ளன. ஒன்று பாங்கு நடத்துபவர் பற்று வரவை முன்னின்று கழித்துக் கொள்ளத் தனிப்பட்ட உரிமையைப் பெறுகிறது, இரண்டாவது தனிப்பட்ட முறையில் வாடிக்கைக் காரருக்குத் தகவல் அனுப்ப வேண்டிய பொறுப்பும் கிடையாது எனலாம்.

வருங்காலக் கடன்களுக்கும் எதிர் நோக்கியிரா கடன்களுக்கும் இது பொறுந்ாது: ஒரே ஒரு வாடிக்கைக் காரருக்கான இரு தனிப்பட்ட கணக்குகளை இணைப்பு செய்யும் உரிமை பாங்கு நடத்துவோருக்கு இருக்குமாயின், அவ்வுரிமை நடப்பில் வாடிக்கைக்காரர் பட்ட கடன்களையே தீர்க்க பயன் படுத்துமேயன்றி இனி வருங்காலத்தில் எதிர்நோக்கிவரும் என்ற எண்ணத்துடன் உள்ள கடன்களை அனுமானித்து அதற்காக இணைக்க முற்படுவது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. தவணை தினம் முடிவடையாத ஒரு மாற்றுண்டியலை பாங்கு நடத்துபவர் பெற்றிருப்பின், மேற்படி மாற்றுண்டியலின்கீழ் பணம் கொடுக்க வேண்டியவர் பாங்கில் கணக்கு வைத்திருப்பதாக அனுமானிப் போம். இந்த மாற்றுண்டியல் கொடுபடமாட்டாது போகும் என்று எண்ணி பாங்கு நடத்துபவர் வாடிக்கைக்காரரின் கணக்கில் பற்றெழுதக்கூடாது.

பாங்குகளின் மீள் உரிமையும் ஒரே நபரின் பல கணக்குகளும் : இந்திய ஒப்பந்தக் கூட்டம் 1872-ன் 171ஆவது பிரிவின்கீழ் நோக்கின், ஒரு பாங்கு நடத்துவோருடன் ஒரு வாடிக்கைக்காரர் எண்ணிறந்த கணக்குகள் வைத்திருப்பினும், ஒரு கணக்காகக் கருதப்படும். ராதாராமன் எதி. சோட்டா நாக்பூர் பாங்கிங் அசோசியேஷன் அ.இ.ரி. 1944, பக். 368 (Radha Raman V. Chota Nagpur Banking Association A.I.R 1944 P. 368)

உறவில் உள்ள தனிப்பட்ட குண நலன்கள்

1. இந்தியாவிலுள்ள பாங்குகள் சட்டப்படி இட்ட கட்டுப் பாடுகள்—செக்குகளை கௌரவித்துப் பணம் கொடுத்தல் : ஒரு நபர் பாங்கியில் நடப்பு வைப்புக் கணக்கைத் திறந்துகொண்டு அவரது கணக்கில் பணம் இருக்கும்வரை பாங்கு நடத்துவோர்

அவருடைய செக்குகளை ஏற்றுக்கொண்டு பணம் கொடுக்க முன் வருகிறார். இதில் சில நிபந்தனைகளை நன்கு அறிய வேண்டும். செக்குகள் குறிப்பிட்ட தேதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ நியாயமான காலத்திலுள் பாங்குகளில் கொணர்ந்து காட்டிப் பணம் பெறவேண்டும். நீதிமன்ற உத்தரவின் பேரில் அவர் கணக்கிலிருந்து பணம் கொடுக்கக்கூடாது என இருக்கக் கூடாது. செலவாணிமுறைச் சட்டம் 1881-ன் 31ஆவது பிரிவின் கீழ் இக்கடமையை மேற்கொள்ளவேண்டும் என்று விதித்துள்ளனர். அதன் வாசகம் வருமாறு:

> 'ஒரு செக்கினுடைய கட்டளையை நிறைவேற்ற வேண்டியவர், செக்கு எழுதியவர் கணக்கில் போதிய தொகை இருப்பின், அந்தச் செக்குத் தொகையைக் கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுக்கத் தவறினால் செக்கு எழுதியவருடைய மதிப்பைக் குறைத்து விடுவதோடல்லாது அதன் விளைவாக ஏற்படும் நட்டங்களுக்கும் பொறுப்புகளுக்கும் பாங்கு ஈடுகட்ட வேண்டியது'.

இக்கொள்கையை விளக்கக்கூடிய பிரிவு இங்கிலாந்திலுள்ள பில்ஸ்ஆஃப் எக்ஸ்சேஞ்ஜ் சட்டம் 1882–ல் இல்லை. இங்கிலாந்தில் உள்ள பாங்குகளுக்கான இலக்கணம் கிட்டத்தட்ட அதே போன்று இந்தியாவிலுள்ள சகபாடிகளுக்கான இலக்கணத்தைப் போன்றுள்ளது.

சட்டப்படி ஏற்பட்ட கடமையைப் பெருக்குதல் (விரிவாக்குதல்): பாங்கு நடத்துவோர் தனது வாடிக்கைக் காரரின் கணக்கின் நிலையை அனுசரித்து அவருடைய செக்குகளைப் பெற்றுப் பணம் கொடுப்பது சட்டப்படி அவருடைய கடமையென்பதை வேறு ஓர் ஒப்பந்தத்தின்கீழ் பாங்கு நடத்துவோரிடம் வாடிக்கைக்காரர் ஓவர் டிராஃப்ட் (Overdraft) கடன் பெற்றால் அப்போதுகூட ஒப்பந்தத் தொகை வரையிலும் செக்குகளைப் பெற்றுப் பணம் கொடுக்கவேண்டும். இந்த ஒப்பந்தம் இல்லையெனில், பாங்கு நடத்துவோர் வாடிக்கைக் காரருடைய செக்குகளுக்குப் பணம் கொடுக்க மறுத்துத் திருப்பிவிட உரிமை உண்டு. சட்டப்படி பாங்குக் கணக்கில் பணம் இல்லை என்று தெரிவித்துக் கொடுக்க மறுக்கலாம்.

பாங்கு நடத்துபவர் தனது வாடிக்கைக்காரரின் செக்கு ஒன்றை ஏற்றுப் பணம் கொடுத்த காரணத்தினால் வாடிக்கைக்

காரரின் கணக்கு ஓவர் டிராஃப்ட் நிலையையெய்தியது என்றால், உடனே பாங்கு நடத்துபவர் அவருக்குக் கடிதம் எழுதும்போது 'தயைகூர்ந்து இந்த நிலையைத் திருத்திச் செம்மையாக்குக' என்று எழுதவேண்டும் தவறாக செக்குகளைக் கொடுத்த பின்னர் கொடுக்காவிட்டாலும் வாடிக்கைக்காரர் 'ஏன், கணக்கில் பணமில்லாதபோது என் செக்குகளைக் கொடுக்க முடிந்தது; இப்போது மாத்திரம் இவ்வாறு நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது' என்று வழக்காடலாம்.

செக்குகளைக் கால தாமதமின்றி பாங்கியில் கொடுத்துப் பணம் கோரவேண்டும்: செக்கு எழுதப்பட்ட தேதியிலிருந்து நியாயமான கால எல்லைக்குள் பாங்கியில் கொண்டு கோரப் பட்டாலன்றி பாங்கு ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் இல்லை. பொதுவாக நோக்கின் ஒரு செக்கு எழுதப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழிந்த பின்னர் பாங்கியில் நீட்டினால் மறுக்கப்படும். இங்கிலாந்தில் ஒரு சில பாங்குகள் செக்கு எழுதிய தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்குப் பின்னர் பாங்கியில் கொடுக்கும்படி கோரினாலும் கொடுக்கிறார்கள். ஆயினும், இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பொதுவாக ஆறு மாத காலத்திற்குமேலான செக்குகளைப் பழைய செக்குகள் என்ற காரணத்தைக் காட்டிக் கொடுக்க மறுத்துவிடுவார்கள். நியாயமான கால வரையறைக்குள் செக்குகளை பாங்கு நடத்துவோர் ஏற்றுக்கொள்ளவேண்டும். பழக்க வழக்கத்தை யொட்டி பாங்கி நடத்துவோர் நியாயமான காலத்தை நிர்ணயம் செய்யக்கூடும். தேதியிடா செக்குகளை பாங்கு நடத்துபவர் ஏற்றுக்கொள்ளவேண்டிய உடன்பாடு இல்லை. [கிரிஃபித்ஸ் எதி. டால்டன் (Giriffishs Vs Dalton) (*1940*) 2. கே பி. *264*].

வசூலித்து வரவு வைப்பதற்கு முன்னரே பணத்தைக் கோருவது பாங்கு நடத்துபவரின் நியாயமான கால எல்லையைப் பொறுத்தது: எந்த பாங்கு நடத்துபவர்மீது செக்குத் தொகை கொடுக்குமபடி கட்டளை பிறப்பிக்கபடுகிறதோ அந்த பாங்கு நடத்துபவர் போதிய கால எல்லைக்குள் மேற்படி வாடிக்கைக் காரரின் கணக்கிற்கான பணத்தை வசூலித்து வரவு செய்யும்வரை பொறுத்திருந்து அதன் பின்னர்தான் பணம் கொடு என்று கோர உரிமையுண்டு. நியாயமான காலம் எவ்வளவு என்பது தனிப்பட்ட சந்தர்ப்பங்களைப் பொறுத்து அமைத்திருக்கிறார் எனலாம். நடைமுறையில் யாதொரு சிரமமும் தோன்றுவதில்லை. சீரிய முறையில் அமைந்த பாங்குகள் கால தாமதமின்றி உடனே தமது புத்தகத்தில் வரவு வைத்துவிடுகின்றனர். தனிப்பட்ட

ஒப்பந்தம் இல்லாத நிலையில் ஒரு பாங்கு தனது வாடிக்கைக் காரருடைய கணக்கில் பணம் வசூலாகும் முன்னரே மேற்படி தொகையை வரவு வைக்கமாட்டார். வசூலுக்கு வரும் செக்குகளையும், டிராஃப்ட்டுகளையும் கொடுக்கவேண்டிய பாங்குகளில் காட்டிப் பணம் பெற்ற பின்னர்தான் கணக்கில் வரவு வைப்பார்கள். பாங்கு நடத்துபவர் வசூலாகிய பின்னர் காலதாமதமின்றி உடனே வரவு வைத்துவிட வேண்டும். பேரும் புகழும் பெற்ற நபர்களின் பெயருக்கு வரும் செக்குகளா யிருப்பின், உடனே வசூலிப்பதற்கு முன்னரே வரவுவைத்து அவர்கள் விடுத்த செக்குகளையேற்றுப் பணம் கொடுப்பதும் உண்டு. இவ்வாறு செய்வதின் நோக்கமென்னவெனில் வசூலாகா வரவுத் தொகையினின்று இந்த செக்குகளைக் கொடுப்பது ஆகும். வசூலுக்கு வரும் செக்குகளை ரொக்கமாகக் கருதி வரவு வைக்க வேண்டுமென்ற ஒப்பந்தம் இல்லையானல், வாடிக்கைக்காரர்கள் வசூலாகுமுன்னரே உள்ள வரவுகளின்மீது செக்குகள் எழுதக் கூடாதென்று பணம் செலுத்தும் தாளிலும், கணக்குக் கைப் புத்தகத்திலும் நிபந்தனையைக் கூறியுள்ளார். அண்டர்வுட் எதி. பார்க்ளேஸ் பாங்கு(*1924*) *1* கி.பெ. *775* [Underwood Vs Barclay's Bank (*1924* *1* KB *775*] அப்பீல் நீதிமன்றத்தின் முடிவு வருமாறு: விபரமாகவோ, எழுத்துமூலமோ அல்லது மறைமுகமாகவோ செக்குகளை வசூலிக்கும் முன்னரே ரொக்கமாக வரவு வைத்துவிட வேண்டும் என்ற ஒப்பந்தம் இல்லாது போனல் வசூலாகா வரவுத் தொகைகளின்மீது எழுதப்பட்ட செக்குகளையேற்றுக்கொள்ள மறுத்து 'வசூல் முழுவதும் வரவு செய்யப்படவில்லை' என்ற குறிப்பிட்டுத் திருப்பிவிடுவார்கள். பழக்கமாக பாங்கு நடத்துவோர் தங்களுடைய வாடிக்கைக்காரருடைய செக்குகளை வசூலிக்கும் முன்னரே ரொக்கமாகக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்னர் வந்த செக்குகளை ஏற்க மறுத்தால் அது நேர்மையன்று. சட்டப்படி தவறு. ஆயினும், ஏதேனும் குறிப்பிட்ட வகையில் எழுத்துமூலம் ஒப்பந்தமிருப்பின் செக்குகளையேற்க மறுக்கலாம்.

செக்குகளைக் கொடுக்க தவருக மறுத்தலின் விளைவுகள்: தவருன முறையில் செக்குகளைச் சரிவர நோக்காது மறுப்பதா லுள்ள விளைவுகளைப் பற்றி இங்கு விவாதிப்போம். தக்க காரணம் காட்டாது வந்த செக்குகளைக் கொடுக்க மறுப்பின் வாடிக்கைக்காரரின் கௌரவத்திற்கு பங்கம் விளைப்ப தோடல்லாது அவருக்குயேற்படும் நட்டத்திற்கும் பொறுப்பாளி யாகிருர். (மார்ஸட்டி எதி. வில்லியம்ஸ் *1830*. ஐ. பி யும் ஏடி *415*–Marzetti Vs. Williams (1830 IB & AD 415) பாங்கு நடத்து

பவரிடமிருந்து நட்டஈடாகப் பணநட்டம் மட்டும்கோரப்படவில்லை. மாற்றுண்டியல் செலாவணி முறிசட்டம் 1881ன் 31ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள 'நட்டமும், சேதமும்' என்ற வாசகங்களில் கண்டுள்ள பொருளாவது கடன்பெறும் தன்மை இழப்பும் வர்த்தகத் துறையில் உள்ள புகழ் மங்குதலும் இதனல் ஏற்படும் பின் விளைவுகளாதலால் வாடிக்கைக்காரர், தவருக மறுக்கப்பட்ட செக்கின் பின் விளைவாகப் போதிய தொகையை நட்ட ஈடாகக் கோர உரிமையுண்டு. செக்கு மறுக்கப்பட்டதால், பண இழப்பு மிகக் குறைவாக இருப்பினும் தனக்குள்ள கௌரவமும் அந்தஸ்தும் பறிபோயின என்று நீதி மன்றத்தில் தக்க சான்றுகளுடன் நிரூபித்தாராகில் நட்ட ஈடு அவர்நிலைக்குத் தக்கவாறு கொடுக்கப்படும். போதிய அளவு நட்ட ஈடு கோர உண்மையாகவே சேதங்கள் ஏற்பட்டன என்று சான்றுகள் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. ராபின் எதி. ஸ்டீவர்ட் (1854) 14 சி.பி 595) (Robin V. Steward (1854), 14 C. B. 595) வாடிக்கைக்காரர் வர்த்தகராகவோ வியாபாரியாகவோ இருப்பின், அவருக்கான நட்ட ஈடு அதிகப்படி அளவில் கொடுக்கப்படும். வர்த்தகரல்லாதவர்களின் செக்குகளை மறுப்பின், போதிய அளவு நட்ட ஈடு கொடுக்கப்படமாட்டாது என்று சட்ட முறையில் ஏற்பட்டநிலை. ஆயினும், மேற்படி தனிநபர் தவருனமுறையில் செக்கு மறுத்த காரணத்தால் தனக்குப் பெரும் சேதம் ஏற்பட்டதென்று நிரூபித்தாராகில் ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தத்தின் உடைப்பினல் விளையும் சேதத்தைப் பொதுவாகக் கருதி குறைந்த அளவிலேயே மதிப்பிடுவார்கள். வாதி தனக்கு ஏற்பட்ட இயல்பான நட்டத்தை விளக்கி நீதி மன்றத்தாரை ஏற்றுக்கொள்ளும் முறையில் வாதாட வேண்டியது முறை. இல்லையெனில், அவருக்கு மிகக் குறைந்த அளவிலேயே நட்ட ஈடு கிடைக்கும். இம்முறைக்கு இரண்டு விதி விலக்குகள் உள்ளன. (1) மணம்செய்து கொள்வதாக வாக்குறுதி கொடுத்து அதை மீறுவது. இரண்டாவதாக ஒரு வர்த்தகருக்கு பாங்குக் கணக்கில் போதிய வரவிருப்பு உண்டான போதிலும் அவரது செக்குகளைத் தவருக ஏற்க மறுத்தல். வில்ஸன் எதி. யுனைடெட் கௌண்டீஸ் பாங்கு லிமிடெட், 1920. ஏ. சி 102 (Wilson V. United Counties Bank Ltd (1920) A. C. 102) என்ற வழக்கில் அட்கின்ஸன் பிரபு இம்மாதிரி வழக்குகளில் வர்த்தகருக்கு தனிப்பட்ட விதி விலக்கான முறையில் நட்ட ஈடு கொடுப்பது வர்த்தகர்களுக்கேயன்றி இதரர்களுக்கு அல்ல என்று கூறினர். ஆயினும், வர்த்தகர் அல்லாதாருக்கு இம்மாதிரி தனிப்பட்ட முறையில் நட்ட ஈடு கொடுக்க ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற தீர்ப்பு உயர் நீதிபதி லாரென்ஸ் அவர்கள் விசாரித்த கிப்ஸ் எதி. வெஸ்ட் மினிஸ்டர் பாங்கு (1939) 2 கி. பெ

882 (Gibbs V. Westminster Bank (1939) 2 K. B. 882) இவ் வழக்கில் வர்த்தகர் அல்லாத திருமதி. மார்கிரேட் கிப்பன்ஸ் என்ற ஒரு பெண்மணி வெஸ்ட் மினிஸ்டர் பாங்கு செக்குத்தாளில் £ 9-16-0ஐ எழுதித் தனது வீட்டு வாடகைக்காகவேண்டி வீட்டுக் காரரிடம் கொடுத்தார். பாங்கு கவனக் குறைவாக மேற்படி பெண்மணியின் கணக்கில் வரவு வைக்கப்பட்டதை மறந்து இந்தச் செக்கை ஏற்க மறுத்தார்கள்.

நீதி மன்றத்தில் வர்த்தகரல்லாதவர் என்ற காரணத்தைக் காட்டி 40 ஷில்லிங்குகள் மட்டும் நட்ட ஈடாக கொடுக்கும்படி தீர்ப்புக் கூறினர். பொதுவாக வர்த்தகரல்லாதவர் தனிப்பட்ட முறையில் நட்ட ஈடுகோர உரிமையில்லை. தனிப்பட்ட முறையில் சேதம் விளைந்திருப்பின், அதை நிரூபித்தாலன்றி, நட்ட ஈடு கொடுக்கவியலாது.

ஸ்டர்லிங் எதி பார்க்ளேஸ் பாங்கு லிமிடெட் (Sterling Vs. Barclay's Bank Ltd; (தி அக்கௌன்டென்ட் ஜர்னல் செப்டம்பர் மாதம் 1930, பக் 367) என்ற வழக்கில் பார்க்ளேஸ் பாங்கு மூன் பின் யோசியாது வாடிக்கைக்காரரின் செக்கிற்குப் பணம் கொடுக்கமறுத்தனர். திருமதி ஸ்டர்லிங் என்ற பெண்மணிக்கு நியாயமான நட்ட ஈடுதான் கொடுக்க இயலுமே யொழிய நிலைமைக்குத் தக்கபடி அதிகப்படி நட்டஈடு கொடுக்கவியலாது. ஏனெனில், திருமதி ஸ்டர்லிங்கி இரு செக்குகள் முன்பு மறுக்கப் பட்டது. வாதிக்கு சாட்சியாக வந்த ஒரு நபர் மன்றத்தில் கூறு கையில் குறிப்பிட்ட அந்த வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் பொதுப்படையாக செக்குகள் கொடுபபதை மறுத்து விட்டால் கூட அவ்வளவாக பாராட்டுவதில்லை. ஏனெனில், அவர்களுடைய அன்றாட வாழ்க்கை மிகவும் எளிய நிலையில் இருந்து வந்தது.

சென்னை உயர்நீதி மன்றத்தில் நடந்த நியூ சென்ட்ரல் ஹால் எதி, யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட் (சி. சி வால்யூம் 29, பக் 78) என்ற வழக்கில் வாடிக்கைக்காரரின் கணக்கில் பணம் இருந்தும் கூட பாங்கு நடத்துபவர் செக்குகளை ஏற்க மறுத்தால் வாடிக்கைக்காரருக்கு நட்டஈடு கோர உரிமையுண்டு. அந்த வாடிக்கைக்காரர் வர்த்தகராக இல்லாது இருப்பின் அவருக்குச் சிறிதளவுதான் நட்டஈடு கொடுக்க இயலும். அவர் தக்க சான்றுகளுடன் தனது அந்தஸ்து சேதமடைந்திருக் கிறது என்று ருசுப்படுத்தினால் பெருந்தொகை நட்ட ஈடாகக் கொடுக்கலாம். தக்க சான்று இல்லையேல் சாதாரண நட்ட ஈடு தான் அனுமதிக்கப்படும்.

சேதத்தின் அளவை மதிப்பிடுதல்: மறுக்கப்பட்ட செக்கின் தொகையின் அளவைப் பொறுத்துச் சேதத்தைக் கணக்கிட முடியாது. செக்கின் தொகை மிகவும் சிறியதாக இருந்து வாடிக்கைக்காரருக்கு ஏற்படும் சேதம் மிகவும் அதிகமாக இருக்கக்கூடும். டேவிட்ஸன் எதி. பார்க்லேஸ் பாங்கு லிமிடெட் (1940) 1. ஆல். இ. ரி. 316 (Davidson Vs. Barclays Bank Ltd., (1940) 1 All. E. R. 316 என்ற வழக்கில் உள்ள விபரங்கள் வருமாறு: வாதி கடனில் குதிரைப் பந்தயம் நடத்துபவர் அவருடைய கணக்கில் போதிய தொகை வரவில் உள்ளபோதே அவர் கொடுத்த செக்கு £ 2–5–8 ஐ கவனப் பிசகாக பாங்கு ஏற்க மறுத்தது. (ஹில்பரி Hilbery J) என்ற நீதிபதி இந்த வழக்கை விசாரித்து, கடன் சம்பந்தமாக இந்தத் தொழிலில் உள்ள சிக்கல்களை அறிந்துங்கூட பாங்கு மேற்படி செக்கின் தொகையைக் கண்ணுற்றுங்கூட கொடுக்க மறுத்தது தவறு என்று கூறி வாடிக்கைக்காரரின் சேதம் பெரியது என முடிவு செய்து நட்ட ஈடாக £ 250 ஐ விதித்தார். சேதத்தின் அளவைக் கணக்கிடும்போது நீதிமன்றங்கள் நிதிநிலை, வாடிக்கைக் காரருக்குடைய புகழ், வர்த்தகத்திலுள்ள வாடிக்கை முறைகள், கண்ணுற்று நட்டஈட்டைக் கணக்கிடுவர்.

இடங்குறித்த உண்டியல்களைக் கொடுப்பதுபற்றிய நிலை: வாடிக்கைக்காரருடன் எழுத்துமூலம் ஒப்பந்தம் இல்லையானால், பாங்கு நடத்துபவர் அவருடைய பெயரில் வரும் உண்டியல்களைக் கொடுக்கவேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை. பொதுப்படையாக எல்லா பாங்கு நடத்துவோரும் இந்த வகையில் உதவியளிக்க முன்வருவது தெரிந்ததே. எனவே, கடுகளவேனும் சான்று உண்டானால், பாங்கு நடத்துபவர்கள் தங்களுடைய பாங்கி யினுடைய பெயரைக் குறித்திருப்பின், அது தங்களுடைய பார்வைக்கு வரின் அதன்படி அந்த உண்டியலை ஏற்றுக்கொண்டு பணம் கொடுத்துவிடுவார்கள். வாடிக்கைக்காரர் தொகையைக் கணக்கில் கட்டியதும் அந்தத் தொகையை ஏதோ வரும் உண்டியலை ஈடுகட்ட என்று கூறி பாங்கு நடத்துபவர் மறுக்காது ஏற்றுக்கொண்டால், அதன்படி நடப்பவர்க்கு இதுவே தக்க சான்று ஆகும். வழக்கமாகவே வாடிக்கைக்காரரின் உண்டியல் களையேற்றுப் பணம் கொடுத்துவரின் அதுவே இன்னும் அசைக்க வியலா ருசுவாகும். அவ்வாறு செய்ய மறுப்பின், அதற்கான அறிவிப்பை உடனே எழுத்துமூலம் தெரிவிக்கவேண்டும்

(ii) பாங்கு நடத்துபவரின் பொது மீள் உரிமை—

பாங்கு நடத்துபவருக்கும் வாடிக்கைக்காரருக்கும் இடையே

உள்ள உறவின் மற்றொரு தனிப்பட்ட குணநலனாவது மீள் உரிமை முறைற எழுத்துமூலம் பிறிது ஒரு ஒப்பந்தம் ஏற்படாது உள்ள நிலைவரை, பாங்கு நடத்துவோர் ஈடாக கணக்கில்உள்ள பாங்கித் தொகைக்கு வேண்டி, விற்பனைக்கான சரக்குகளை காப்பாற்ற வைக்கப்பட்டவைகளை திருப்பாது நிறுத்திக்கொள்ளலாம். (இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872, பிரி. 171) காப்பாற்றித் திருப்பிக் கொடுக்கவேண்டிய சரக்கை திருப்பாது நிறுத்திக் கொள்ளும் உரிமையை "பொது மீள் உரிமை" என்று பெயர். இவ்வுரிமையைப்பெற்றவர்கள் பாங்கு நடத்துவோர், சரக்குடைப் பதிலாள்கள், கப்பல்துறை சரக்கு காப்பாளர், உயர்நீதிமன்றத்து அட்டார்னிகள், பாலிஸி தரகர்கள், இப்போது மீள் உரிமை தனிப்பட்ட மீள் உரிமையினின்று வேறுபட்டது. ஒரு கைவேலைக்காரர் ஒரு பொருள் உற்பத்தியில் காலம், பணம், உழைப்பு இவற்றைச் செலவிட்டு, எடுத்துக் காட்டாக ஒரு நெசவாளி தனது வாடிக்கைக்காரரிடமிருந்து நூலைப்பெற்று உழைத்து அதற்கான கூலியைப் பெறவில்லையானால் அவர் அந்தத் துணியைத் திருப்பாது நிறுத்திக்கொள்ளலாம். இம் மாதிரியான தனிப்பட்ட உரிமைக்குத்தான் "தனிப்பட்ட மீள் உரிமை" என்று கூறுகிறோம்.

பாங்கு நடத்துவோரின் பொது மீள் உரிமை என்பது ஆவணங்களைத் திருப்பிக்கொடுப்பதை நிறுத்தி வைக்கும் உரிமை எனலாம். இவ்வுரிமை வாடிக்கைக்காரர் கடனைத் திருப்பாது இருக்கும்பொழுது செயல்படுத்தும் முறை ஆகும் மேற்படி ஆவணங்கள் இன்ன இன்ன கடன்களுக்காக நிறுத்திவைக்கப் பட்டுள்ளன என்று நிச்சயமாக கூறவியலாது. பாங்கு நடத்துபவர் வசம் கொடுக்கப்பட்ட எல்லா ஆவணங்களையும் இது கட்டுப்படுத்துகிறது. அவைகளில் உள்ள தொகையைப் பெற்று பாங்கு நடத்துபவர் தனக்குச் சேரவேண்டிய கடன் தொகையை அதில் சரிசெய்துகொள்ளலாம். ஆவணங்களை வாடிக்கைக்காரர் பாங்கு நடத்துவோர் வசம் சேர்க்கும் பொழுது அல்லது பின்னர் சட்டப்படி அவற்றைத் தமது உடைமை ஆக்கிக் கொள்ளலாம். இது சம்பந்தமாக இந்திய சட்டப்படி பாங்கு நடத்துவோர் தமது மீள்உரிமையை சட்டப்படி அமலாக்குவதை ஆவணங்கள் மட்டுமல்லாது இதர விற்பனைக்கு உரிய சரக்குகள் பாங்கு நடத்துபவர் வசம் இருப்பின் அவைகளையும் மேற்கொள்ள அனுமதிக்கிறது. மீள் உரிமைக்கு எதிராக விற்பனைக்குரிய பண்டங்களைத் தமதுடைமை ஆக்கிக் கொள்வதைத் தடுத்து ஏதாவது, ஒப்பந்தம் இருப்பின், அவற்றின் மீது மீள் உரிமை ஏற்றுக்கொள்ள இயலாது.

மீள் உரிமை என்பது ஒருவகை மறைமுகமான அடகு முறை: பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் முதலே தீர்ப்பளிக்கப்பட்ட பல்வேறு வழக்குகளிலிருந்து காணக்கூடிய உண்மையாதெனில், பாங்கு நடத்துவோர் எவ்வித ஐயப்பாடு மின்றித் தன்வசம் பாதுகாப்பிற்கு வைக்கப்பட்ட ஆவணங்கள் மேற்படி வாடிக்கைக்காரரின் பாக்கித் தொகையை ஈடுகட்டவே பயன்படுத்தக் கூடிய உரிமை அல்லது பொது மீள் உரிமை எனலாம். ஆயினும், பாங்கு நடத்துவோரும் வாடிக்கைக்காரரும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி மீள் உரிமைக்கு எதிராக இருப்பின், அம் மீள் உரிமை பயனற்றதாகிப் போகும். (பிரான்டாவ் எதி. பார்னட் *1864, 3 சி.பி. 519*) (Brandao Vs. Barnett (*1864*), *3* C.B. *519*). பாங்கு நடத்துவோர் பெற்றுள்ள பொது மீள் உரிமை அடிப்படையில் சாதாரண மீள் உரிமையைவிடச் சற்று அதிகம் மேம்பாடுடையது. சுருங்கக் கூறின், அதை மறைமுகமாயுள்ள அடகுமுறை எனலாம். மாற்றுண்டியல்கள், செலாவணித்தாள்கள், செக்குகள் முதலியவற்றைப் பொறுத்தமட்டில் இவ்வளவு வேற்றுமை புலப்படுவதில்லை. இந்தியச் செலாவணி முறிச் சட்டம் 1881-ன் பிரிவு 43-ன் கீழ், பாங்கு நடத்துவோர் மீள் உரிமையின்கீழ் பெற்றுள்ள உண்டியல்களை அவர் பண மதிப்பிற்காக வைத்திருப்பதால், அந்த உண்டியல்களைக் கெடுவின் போது மாற்றிக்கொள்ள உரிமை கிடைக்கிறது. இதர மாற்றுண்டியல்களைப் பொறுத்தமட்டில், எடுத்துக்காட்டாக, வைத்திருப்போர் பணம்கோரும் பாண்டு, கூப்பன்கள், பங்கு மாற்ற உண்டியல்கள் ஆகியவை பாங்கு நடத்துவோர் கையில் வரின், அவை மீள் உரிமையாக இருப்பின், அது அடகினைப் போன்ற நிலையை எய்துவதால், பாங்கு நடத்துபவர் தனக்கு வரவேண்டிய கடன் கொடுபடாவிடின் எப்போது வேண்டுமானாலும் விற்றுப் பணமாக்கிக் கொள்ள உரிமையுண்டு. குறிப்பிட்ட கால எல்லை ஒன்றும் கொடுக்கப்படாதிருப்பின், பாங்கு நடத்துவோர் நியாயமான கால வரையறை வரை பொறுத்திருந்துப் பின்னர் விற்கப்போவதாக அறிக்கைவிட்டு மேற்படி பத்திரங்களை விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம். [(பர்டிக் எதி. செவெல் *1881. 13 கியூ.பி.டி.. 159*, Burdick Vs. Sewell *1884-13* Q.B.D. *159*] அவ்வாறு விற்று வந்த தொகையைத் தனக்குச் சேரவேண்டிய தொகைக்கு வரவு வைத்துவிடுகிறார். இவ் விற்பனை உரிமை அவர் வசம் உள்ள எல்லா ஆவணங்களையும் செக்யூரிடிகளையும் கட்டுப்படுத்தும். ஆயினும், வாடிக்கைக்காரரின் உடைமையைக் காட்டும் அசையாப் பொருள் பத்திரங்களை பாங்கு நடத்துபவர்

யாதொன்றும் செய்யமுடியாது. அவர் அந்த உடமைப் பத்திரங்களைத் தம் வசம் நிறுத்தி வைத்துக் கொள்ளத்தான் முடியுமே ஒழிய அவைகளை விற்க உரிமை கிடையாது.

மீள் உரிமையை ஏற்படுத்த எந்த வகையான ஒப்பந்தமும் தேவையில்லை : மீள் உரிமையைத் தோற்றுவிக்க எவ்வகையான ஒப்பந்தமும் தேவையில்லை. இந்திய சட்ட நிலைக்கேற்ப இவ்வொப்பந்தம் தொக்கி நிற்கிறது. இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 171-ன் கீழ் இது தொக்கி நிற்பதாகக் கூறப்பட்டுள்ளது. அதை எழுத்துமூலம் விலக்காத மறைமுகமாக இருப்பதாகக் கருதப்படும். மீள் உரிமை உற்பத்தியாகப் பல நிபந்தனைகள் இருக்க வேண்டும். அவையாவன : (1) பாங்கு நடத்துவோர் கையில் சொத்துகள் பாங்கு நடத்துவோர் என்ற முறையில் கிடைக்க வேண்டும். (2) மீள் உரிமைக்குப் புறம்பாக சொத்துகளைப் பாதுகாவலுக்காக இருப்பதாக ஒப்பந்தம் கூடாது. (3) சட்டப்படி சொத்துகளை பாங்கு நடத்துவோராக வைத்துக்கொள்ளும் உரிமை கிடைத்தல் இன்றியமையாதது. (4) மீள் உரிமையை நீக்க எவ்விதமான ஒப்பந்தமும் இருக்கக் கூடாது.

பாதுகாப்பிற்கு விடப்பட்ட வைப்புகளின் மீது பாங்கு நடத்துவோருக்கு மீள் உரிமை இல்லை : பொதுவாக பாதுகாப்பிற்கு என்று பாங்கு நடத்துவோரிடம் கொண்டு வைக்கப்பட்ட மதிப்பில் சிறந்த பொருள்கள், ஆவணங்கள், தஸ்தாவேஜுகள், உடமைப் பத்திரங்கள், நகைகள் இவைகளை மீள் உரிமையின் கீழ் பரித்துக்கொள்ள பாங்கு நடத்துவோருக்கு உரிமையில்லை. தனிப்பட்ட பணிக்காக விடப்பட்ட பொருள்களின் மீது பொது மீள் உரிமையில்லை ஏனெனில், இதற்கு எதிரான மறைமுக ஒப்பந்தம் உள்ளதைக் காண்க. (கத்பெர்ட் எதி. ராபர்ட்ஸ் [1909] 2. அதி. 226 ஸிஏ. Cuthbert Vs. Roberts. [1909] 2 ch 226. C.A.) சட்டப்படி நிலைமை வருமாறு : பாங்கு நடத்துவோர் பாதுகாப்பிற்கென்று பெரும் விலை மதிப்புள்ள பொருள்களை பெய்லி (ஒப்புக்கொள்பவராக இருப்பதால் அவர் அவ்வமயம் பாங்கி நடத்துபவராகக் கருதப்படமாட்டார் அல்லது பாங்கு நடத்துவோரிடம் தனிப்பட்ட பொறுப்பில் விடப்பட்ட ஒரு பணியாதலால் அவைகளின் மீது மீள் உரிமைக்கோர உரிமை இல்லை. மாற்றுண்டியல்களை பாங்கு நடத்துபவர் பெறின், அவற்றைத் தன் விருப்பப்படி பயன்படுத்தி மீள் உரிமையைக் கோர நியாயம் உண்டு ஆவணங்களையும், விலையுயர்ந்த நகைகளை யும் ஒரு பேழையில் இட்டு அதை நன்கு சீல் செய்து பாங்கு

நடத்துபவர் வசம் காப்பாற்றும்படி கொடுப்பின், பாங்கு நடத்துபவர் அதை அப்படியே பிரிக்காது சீலை உடைக்காது பெட்டியைத் திறக்காது திருப்பிவிடவேண்டும். காப்பாற்றி வைக்கக் கொடுத்தவருக்கு உரிமையில்லையெனில், பாங்கு நடத்துபவருக்கும் அதன்மீது எவ்வித அதிகாரமும் கிடையாது. காப்பாற்றி வைக்கக் கொடுத்தவர் அதைத் திருடியதாகக் கொண்டால், பின்னர் அவருடைய ரசீதின்றியே பாங்கு நடத்துபவர் நியாயமான உரிமையாளர்வசம் சேர்த்துவிட வேண்டும். பத்திரமாகப் பாதுக்காக்க வேண்டிக் கொடுக்கப்பட்ட ரசீதே தக்க சான்று என்றும் அதன் அடிப்படையில் பாங்கு நடத்துவோர் அப் பண்டங்களைத் தம் மீள் உரிமையின் கீழ் கொண்டுவர உரிமை கிடையாது எனலாம். மேலும், பாதுகாப்பிற்காகக் கொடுக்கப்பட்ட பொருள்கள் என்று பாங்கு நடத்துபவர் வலியுறுத்தலாம். லீஸ் எதி. மார்டின் (*1873*) லா.ரி. *17* ஈக் *224* [Leese Vs. Martin (*1873*) L.R. *17* Eq *224*] என்ற வழக்கில் லண்டனிலுள்ள பாங்கு நடத்துவோருக்கும் பங்குதாரர்களுக்கும் இடையே பழக்கமாக முன் பண வசதி கொடுக்கும் முறை நிலவியிருந்தது. தரகர் வைத்துள்ள பாங்குகளின் ஈட்டின் பேரில் முன் பண வசதி அளித்து வந்தனர். சிற்சில காலங்களில் இதர சொத்துகளின் ஈட்டில் கூடதான் கொடுத்து வந்தனர். ஆயினும், பாங்கு நடத்துவோர் வசம் பாதுகாப்பிற்காகத்தான் பங்குத் தரகர் விட்டுவைத்துள்ளனரே அன்றிக் கடன் வாங்க அன்று. அதே போன்று பாங்க் ஆஃப் ஆஃப்பிரிக்கா எதி. கோஹன் (*1909*) 2 அதி. *129*-ல் (Bank of Africa Vs. Cohen (*1909*) 2 Ch. *129*) பாங்கியில் ஒரு வாடிக்கைக் காரர் தஸ்தாவேஜுகளையும் டாக்குமெண்டுகளையும் பத்திரமாகப் பாதுகாக்க விட்டுவைத்துள்ளனர். அவருக்கு அந்த டாக்கு மெண்டுகளின்மீது எவ்வித ஒப்பந்த உரிமையும் சட்டப்படி இல்லையானால், அந்த பாங்கு நடத்துவோர் அதன்மீது மீள் உரிமைகோர நியாயமில்லை.

தனிப்பட்ட பணிக்கென விட்டு வைக்கப்பட்ட உண்டியல்கள், இதர பத்திரங்களின்மீது மீள் உரிமை கோர இயலாது: மீள் உரிமைக்குப் புறம்பான தனிப்பட்ட பணிக்காக எனக் கூறும் எடுத்துக்காட்டு ஒன்றை **கிரீன்ஹால் எதி. யூனியன் பாங்க் ஆஃப் மாஞ்செஸ்டர்,** *1924*, 2 கே.பி. *153*. Greenhalgn Vs. Union Bank of Manchester (*1924*) 2 K.B 153. என்ற வழக்கில் 'அ' என்ற நபர் 'ப' என்ற ஒருவருக்கு விற்பனை செய்தார். கடன் விற்பனையான காரணத்தால் 'அ' என்பவர் உண்டியலை எழுதி, அதை 'ப' என்பவர் ஒத்துக்கொண்டார்.

மேற்படி சரக்கைப் 'ப' என்பவர் 'க' மீது உண்டியல் எழுதி, அதை 'க' ஒத்துக்கொண்டார். 'ப' தனக்கு வந்த, 'க' ஏற்றுக் கொண்ட உண்டியல்களை பிரதிவாதி பாங்கியில் போட்டு இவற்றைத் தனியே வைத்திருந்து தான் ஒத்துக்கொண்ட 'அ' என்பவர் உண்டியலை பாங்கு ஏற்றுப் பணம் கொடுக்கவேண்டும் என்று கட்டளையிட்டு வைத்தார். பாங்கு இந்தத் தனிப்பட்ட பணிக்காக 'க' என்பவர் ஒத்துக்கொண்ட உண்டியல்களைத் தாற்காலிக உண்டியல்கள் கணக்கு என்ற கணக்கில் வரவு வைத்துவிட்டது. இந்தக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட 'க' என்ற நபர் ஏற்றுக்கொண்ட உண்டியல்கள்மீது பாங்கு நடத்துவோருக்கு மீள் உரிமை கிடையாது. ஏனெனில், இது தனிப்பட்ட பணிக்கென பாங்கு நடத்துவோர் வசம் விடப் பட்டது என்று முடிவு செய்யப்பட்டது. அதே போன்று டாக்குமென்டரி உண்டியல்களில் வரும் உண்டியல்கள் கொடுக்க மறுக்கப்படின், அதற்காகக் கொடுக்கப்பட்ட ஈட்டுத் தொகையை பாங்கு எடுத்துக்கொண்டு வேறு எந்த கடனுக்கும் வரவு செய்து கொள்ளக்கூடாது. தனது வாடிக்கைக்காரருக்கு வேண்டி பாங்கு நடத்துவோர் மேற்படி உண்டியலைக் கழிவு நீக்கிக் கொடுத்தாலும் அந்த ஈட்டுத் தொகையைப் பயன்படுத்த உரிமையில்லை. லாதம் எதி. சார்ட்டர்டு பாங்கு ஆஃப் இந்தியா [*1874*] *17*. ஈக் *205* Latham Vs. Charterd Bank of India (*1874*) *17* Eq *205*) ஒரு வாடிக்கைக்காரர் தனது ஆயுள் இன்சூரன்ஸ் பாலிஸியின் ஈட்டின்பேரில் £*4,000*க்கு அதிகப்படாது ஓவர் டிராஃப்ட்கடன் பெற முயன்றால், அதற்கான வட்டி, தள்ளுபடி, இதர சில்லரைச் செலவு அனைத்தும் இதற்குள் இருக்கவேண்டும் என்று பாங்கு நடத்துவோருக்கு விபரத்தை அறிவிப்பின் அது அந்த பாங்கு நடத்துவோர் குறி பிட்ட தொகையில்தான் மீள் உரிமை பெறலாம் என்று உயர் நீதிபதி திரு. நார்த் (J. North) என்பவர் தீர்ப்பளித்தார். [பௌவஸ், ஏர்ல் ஆஃப் ஸ்ட்ராத்மூர் எதி. வேன் *1886-33*. அதி. டி. *586*. *3* டைஜஸ்ட் *289*, *589* (Bowes, Earl of Strothmore Vs. Vane *1886-33* Ch. D. *586*, 3. Digest *289*, *589*)

தம்மிடம் வசூலுக்கு வந்துள்ள பாண்டுகளையும் கூப்பன்களையும் கட்டுப்படுத்தி மீள் உரிமையின் கீழ் கொண்டுவர பாங்கு நடத்துவோருக்கு உரிமை: பாங்கு நடத்துவோரிடம் பாண்டுகளையும், கூப்பன்களையும் வசூலுக்கு விடப்பட்டால் பாங்கு நடத்துவோர் அவற்றின்மீது மீள் உரிமை பெற்றுள்ளார். ஆனால், பாண்டுகளைப் பாதுகாக்க மட்டும் கொடுக்கப்பட்டு அதிலுள்ள கூப்பனை நீக்கி பாங்கு நடத்துவோரிடம் கொடுத்து வசூலிக்கக் கூறின் அந்தக் கூப்பனை மீள் உரிமையின் கீழ்

ஆட்கொள்ள பாங்கு நடத்துவோருக்கு உரிமையுண்டு. ஆயினும், சார்லீ பிரபு இந்த தீர்ப்பு தவறென்று கருதுகிறார். பாண்டுகளைப் பாதுகாக்கக் கொடுத்திருப்பின், மறைமுகமாகத் தனிப்பட்ட முறையில் பாங்கு நடத்துவோருக்கு எவ்வகை உரிமையும் இல்லை. ஜோன்ஸ் எதிராக பெப்பர்கார்ன். 1858. 26 லா.ஜ.அ. 158 [Jones Vs. Peppercorne (1858) 28 L.J. Ch. 158] என்ற வழக்கில் பொது மீள் உரிமை உள்ளதென்று முடிவு செய்யப்பட்டது. ஏனெனில், ஈட்டில் வைக்கப்பட்ட ஆவணங்களை விற்பதற்கான அதிகாரம் தரகர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருந்தது. ஆயினும், பாண்டுகளின்மீது மீள் உரிமை ஏற்படுவது இவர்கள் கொடுக்கும் ரசீதில் கண்ட நிபந்தனைகளைப் பொறுத்து அமையும். கொடுக்கப்பட்ட ரசீதில் மேற்படி ஆவணங்கள் காப்பாற்றப் படுவதற்காக விடப்பட்டன என்றிருப்பின், அதன்மீது பொது மீள் உரிமை, உண்டியல்கள், செக்குகள், பண வரவுகள் அல்லது இதர விற்பனைச் சரக்குகள் பாங்கு நடத்துபவர் வசம் பாங்கு நடத்துபவர் என்ற முறையில் பெற்றாராகில் அவருக்கு மீள் உரிமை உண்டு. [மைசா எதி கர்ரி (1876) லா.ரி. 1 ஏ.பி.பி. கேஸ் 554 (Misa Vs. Currie 1876) L.R. 1 APP. (Cas. 554)].

தனிப்பட்ட முறையில் வைப்பாக விடப்பட்ட பணத்தின் மீது மீள் உரிமை இல்லை: ஓர் வாடிக்கைக்காரர் தனது கணக்கில் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தியோ அல்லது மேற்படி கணக்கில் வரவிலுள்ள ஒரு குறிப்பிட்ட தொகையை இன்ன பணிக்கென்று எழுத்து மூலமாகவோ அல்லது மறைமுகமாகவோ பாங்கு நடத்து வோருக்குத் தெரிவித்தால்பாங்கு நடத்துபவருக்கு அத்தொகை மீது மீள் உரிமை கிடையாது. கணக்கின் இருப்பிலுள்ள தொகையை மறைமுகமாக பாங்கு நடத்துபவர் மீள் உரிமை ஆக மாற்றிக்கொள்ளக்கூடாது. குறிப்பிட்ட கடன்களுக்கு ஈடாக அமைந்தாலும்கூட பாங்கு நடத்துபவர் வாடிக்கைக்காரருடன் தனிப்பட்ட முறையில் இதை வைத்திருப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்ட காரணத்தால் அவரது பொது மீள் உரிமைக்கு எதிராக அமைந்துள்ளது.

ஈடுகாட்டிய கடன் கொடுபட்ட பின்னர் பாங்கு நடத்துபவர் வசம் விடப்பட்ட ஆவணங்களின்மீது மீள்உரிமை: ஈடுகாட்டிய கடன் ஒன்றின் தொகையை பாங்கு நடத்துவோர் வசம் சேர்த்த பின்னர், அக்கடன் கழிந்தது எனலாம். வாடிக்கைக்காரர் தன் வசமுள்ள ஆவணங்களை மேற்படி பாங்கு நடத்துவோரிடம் ஈடாக வைத்திருக்கிறார். மேற்படி பாங்கு நடத்துவோருக்கு வேறு

ஏதாவது கடன் இருப்பின், இந்த ஆவணங்களை மீள் உரிமையாக எடுத்துக்கொள்ள உரிமை உண்டா என்பதைப்பற்றி இன்னும் ஐயப்பாடாகவே உள்ளது. இவ்வையப்பாட்டை முன் கூறிய ஜோன்ஸ் எதி. பெப்பர்கார்ன் என்ற வழக்கிலும் (Jones V. Pepper corne) வில்கின்ஸன் எதிராக லண்டன் அண்டு கௌண்டி பாங்கு (1884) 1 டி.எல்.ஆர். 63 [Wilkinson V. London and County Bank (1884) 1 T.L.R. 63] என்ற வழக்கில், குறிப்பிட்ட முன் பணத்திற்காக விடப்பட்ட ஈட்டுப் பத்திரங்களைக் கடன் பத்திரங்களாகத் திருப்பிப் பெற்றுக்கொள்ள வாடிக்கைக் காரருக்கு உரிமை உண்டு. பாங்கு நடத்துவோரிடம் அவருக்கு இதர கடன்கள் இருப்பினும், இந்த ஈட்டுப் பத்திரங்களை அவர் பெற்றுக்கொள்ள அதிகாரம் உண்டு. முடிவாக லண்டன் அண்டு குளோப்ஃபைனன்ஸ் கார்ப்பரேஷன் (1902) 2 அதி. 416 in Re London and Globe Finance Corporation (1902) 2 ch. 416 என்ற வழக்கில் கடனுக்கு ஈடாக வைக்கப்பட்ட ஆவணங்களை கடன் தீர்ந்த பிறகும்கூடத் திரும்பப் பெருவிடில், பாங்கு நடத்துவோருக்கு இதர கடன் பாக்கிகளுக்காக அவற்றின் மீது மீள் உரிமை உண்டு. இதன் பொருள் என்னவெனில், மேற்படி ஆவணங்களை பாங்கு நடத்துவோர் மறுமுறை அவற்றை ஈடாக வைக்க முற்படுகிருர் என்று பொருள்.

கவனக் குறைவாக பாங்கு நடத்துவோர் வசம் விடப்பட்ட மதிப்பிற்குரிய பொருள்கள்மீது பாங்கு நடத்துவோருக்கு மீள் உரிமை கிடையாது: டாக்குமெண்டுகளோ விலையுயர்ந்த பொருள்களோ கவனப் பிசகாக பாங்கு நடத்துவோர் வசம் விடப்படின், அவற்றைத் தம் வசமாக்கி மீள் உரிமை கோர அதிகாரம் இல்லை. எந்த சொத்தோ அல்லது ஆவணங்களோ முன் பண வசதியின் காரணம் கொடுக்கப்பட்டு மேற்படி முன் பண வசதி அளிக்கப்படாவிடின், அந்த ஆவணங்களை நிறுத்தி வைத்து மீள் உரிமை கோர பாங்கு நடத்துவோருக்கு அதிகாரம் இல்லை. [லூகாஸ் எதி. டொர்ரெய்ன் 18 ஆர்.ஆர். 480 (Lucas Vs. Dorrein, 18 R.R. 480] ஈடாக வைக்கப்படும் ஆவணங்கள் தமது வாடிக்கைக்காரரின் சொத்து அல்ல என்று பாங்கு நடத்துவோருக்குத் தெரிந்திருப்பின், அவர் மீள் உரிமையைப் பெறமாட்டார். மேற்படி சொத்தின் நியாயமான உரிமை யாளரிடம் பாங்கு நடத்துவோர் தமக்கு அவற்றின்மீது மீள் உரிமை உண்டு என்று வலியுறுத்திக் கூறும் சந்தர்ப்பம் எப்பொழுது எனில், உரிமையாளர் தனது அனுமதியைக் கொடுத்திருக்க வேண்டும் அல்லது பாங்கு நடத்துவோர் வசம் இவை ஈடாக வைக்கப்பட்டுள்ளன என்று அறிந்திருக்க

வேண்டும். வழக்கமாக மூன்ருமவரிடமிருந்து வந்த மாற்று உண்டியல்களை பாங்கு நடத்துவோர் வைத்துக்கொண்டு மீள் உரிமையைக் கொண்டாட முடியும். இது சம்பந்தமாகப் பிறருடைய உரிமை பாங்கு நடத்துபவரைப் பாதிக்காது.

வரவும் பொறுப்பும் அதே உரிமைகளில் இருக்கவேண்டும்: ஒரு கூட்டு நிறுவனத்தின் கடன் பொறுப்பை முன்னிட்ட கூட்டு தரகரின் நடப்பு வைப்புக் கணக்கோ அல்லது தவணை வைப்புக் கணக்கிலோ உள்ள தொகையை ஈடுபடுத்த பாங்கு நடத்துவோருக்கு உரிமையில்லை. கணக்கில் வரவிருப்பது ஒரு நபருடையதும் பொறுப்பு காட்டுவது வேருெடு நிறுவனத்துடையதும் ஆனதால் ஒன்றை ஒன்று ஈடுகட்டுவது முறையன்று. [உல்ஸ்டன்ஹோம் எதி. ஷெஃபீல்ட் பாங்கு (1886) 54. எல்.டி. 476. (Wolstenholm Vs. Sheffield Bank (1886) 54. L.T. 746)]. அதே போன்று தனி கூட்டுதாரரின் கடனுக்காகக் கூட்டு நிறுவனத்தின் கணக்கில் உள்ள வரவு தொகையைச் சரிக்கட்டக் கூடாது.

கால வரம்புச் சட்டமும் பாங்கு நடத்துவோரின் மீள் உரிமையும்: கால வரம்புச் சட்டத்திஞல் பாங்கு நடத்து வோரின் மீள் உரிமை பாதிக்கப்படுவதில்லை. கால வரம்புச் சட்டத்தின் குணமென்னவெனில், சட்டப்படி சீராக்குவதற்கான வழியைப் பகருமேயன்றிக் கடனைத் தீர்த்துக்கட்ட முடியாது. ஆதலால், பாங்கு நடத்துவோர் சொத்தின்மீது கொண்ட உரிமையைப் பறிக்கயியலாது.

பாக்கியில்லாத தொகைகளின்மீது மீள் உரிமை இல்லை: கெடுவு தேதிக்கு முன்னர் எந்தத் தொகையையும் பாக்கியாக இல்லாத காரணத்தால் மீள் உரிமை முறை ஏற்படவில்லை. அந்தத் தேதி வரையில் கடன் ஏற்படாததால், பாங்கு நடத்துவோர் கெடுவு தேதி வராத கழிவு நீக்கப்பட்ட உண்டியல்காரருக்காக வேண்டி, வாடிக்கைக்காரரால் கணக்கில் உள்ள தொகையை நிறுத்தி அவற்றின்மீது மீள் உரிமை உண்டென்று கூறமுடியாது. விதிவிலக்காக வாடிக்கைக்காரர் திவால் நிலையை அடைந்தாராகில் இம்மாதிரியான முறையை அனுசரிக்க இடமுண்டு.

டிரஸ்ட் கணக்கின் மீது மீள் உரிமை இல்லை: பாங்கு நடத்துவோரிடம் வாடிக்கைக்காரர் தனிப்பட்ட கணக்கு வைத்திருந்து மேற்படி கணக்கு ட்ரஸ்ட் வடிவில் அமைந்

திருப்பின், அந்தக் கணக்கை மீள் உரிமையின்கீழ் பாங்கு நடத்துபவர் தமதுடமையாக்கிக் கொள்ள இயலாது. [ஏக்ஸ் பார்ட்டி கிங்ஸ்டன் வழக்கு லா. ரி. 6 அதி. 632 (Ex Parte Kingston L.R. 6 ch. 632) ஓ.ஆர்.எம். எதி. நாகப்ப செட்டியார் 42 பம் லா.ரி. 440 (பி.க.)] வாடிக்கைக்காரரின் நிலையை அறிந்தும் அல்லது இதரர்களின் நிலையைத் தெரிந்துகொண்டதாலும் அவர்கள் தங்கள் வாடிக்கைக்காரரின் பணத்தில் வர்த்தகம் புரிகிறார் என்பதால் மீள் உரிமை நீங்காது. (எடுத்துக்காட்டாக பங்குத் தரகர்) [தாம்ஸன் எதி க்ளேட்ஸ்டேல் பாங்கு லிமிடெட் (1893) எ.ஸி. 282; 8 டைஜெஸ்ட் 188, 380 (Thomson Vs. Cleydesdale Bank Ltd., 1893 A.C. 282 3 Digest 188, 380)] வைக்கப்பட்ட நிதிக் கணக்கில் உள்ள நடப்பின்போது ட்ரஸ்ட் முறையில் இருப்பதாக அறிவிப்பு வராவிடினும், அல்லது பாங்கிற்கு அந்த மாதிரி உறவு முறை தெரியாவிடினும் பாங்கு அதன் மீது மீள் உரிமை பெற்றுள்ளது. அந்த மீள் உரிமையை உடனே அமலாக்க பாங்கு நடத்துபவருக்கு அதிகாரம் உண்டு. [யூனியன் பாங்க் ஆஃப் ஆஸ்ட்ரேலியா லிமிடெட் எதி. மர்ரே ஐன்ஸ்லே. 1898 எ.ஸி. 693 (Murion Ltd., Vs. Aynsley 1898. A.C. 693)].

(iii) பாங்கு நடத்துவோரின் கடமை—வாடிக்கைக்காரரின் கணக்கு நிலையை வெளிவிடாதிருத்தல்

வாடிக்கைக்காரரின் கணக்கு நிலையை வெளிப்படுத்தினால் அவரது செல்வநிலை வர்த்தகத்தில் தாழ்ந்துபோய் அதன் நிமித்தம் அவருக்குக் கடன் வாங்க இயலாது போய்விடும். பாங்கு நடத்துவோர் இந்த வழக்கத்தை மேற்கொள்ளாதிருந்தனர். பின்னர் 1924ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் சட்ட முறையாக இந்தக் கடமையைத் திட்டமாக வகுத்தனர். [(டௌஸியர் வழக்கு (1924) 1 கி.பெ. 461) Tousier Case 1924, 1. K.B. 461]. அதன்படி ஒப்பந்தத்தில் தொக்கி நிற்கும் முறையில் (மறைவாக) பாங்கு நடத்துவோருக்கும் வாடிக்கைக்காரருக்கும் உள்ள உறவு இருக்கும்வரை எனக் கூறியுள்ளார். பாங்கு நடத்துபவர் எக்காரணத்தைக் கொண்டும், நியாயமானதும் சரியானதுமான காரணங்கள் இல்லையேல் தமது வாடிக்கைக்காரருடைய கணக்கு நிலையைப் பிறருக்கு அறிவித்தல் கூடாது மேற்படி வாடிக்கைக்காரரின் கணக்கு மூடப்பட்டாலும்கூட இந்த ரகசியத்தை அம்பலப்படுத்தக்கூடாது.

வெளிப்படுத்த நியாயமானதும் சரியானதும் என கருதப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள்: நியாயமானதும் சரியானதும் என்று

கருதப்படவேண்டிய சமயம் அல்லது சந்தர்ப்பம் எது? உத்திரவாதம் கொடுக்க முன் வருபவர் கேட்கும் கேள்விகளுக்குச் சட்டப்படி கடமைப்பட்டு பதில் கூறவேண்டியது நியாயமான சந்தர்ப்பங்களில் ஒன்ருகும். ஓவர் டிராஃப்ட் கடன் அனுமதிக்கப் பட்டவுடன் அதற்கான உத்திரவாதம் ஏற்க யாரேனும் முன்வரின் உத்திரவாதம் கொடுக்க முன் வருபவர் கோரும் கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டியது இன்றியமையாதது. உத்திரவாதம் கொடுப்பவருக்கு ஓவர் டிராஃப்ட் கடன் பெற்றவரின் பொறுப்பு எல்லை எவ்வளவு என்றும் வாடிக்கைக் காரருடைய கணக்கு இவ்வளவு என்றும் சொல்லவேண்டியது பாங்கினுடைய பொறுப்பு. வாடிக்கைக்காரருடன் வர்த்தக உறவு பெறவிழையும் நபருக்கு அவருடைய செவ்வ நிலை, குணம் இவற்றைப் பற்றி பாங்கு நடத்துவோர் கூறவேண்டியது கடமை. [ராப்ஷா எதி. ஸ்மித் 1878-38. எல்.டி 423 (Robshaw Vs. Smith 1878-38. L.T. 423)].

பாங்கு நடத்துவோரின் கடமைகளில் ஒன்ருகிய கணக்கின் விபரத்தை அம்பலப்படுத்தாதிருத்தல்—இதற்கான தடங்கல்கள்

வர்த்தகப் பாதுகாப்புக் குழுவினர் சோரும் கேள்விகளுக்கு வாடிக்கைக்காரரின் கணக்கு நிலையைப்பற்றிப் பதிலளிக்க வேண்டுவது சரியா அல்லது தவரு என்று ஐயப்பாடான நிலையை சிலர் ஆமோதித்தும். பலர் எதிர்த்தும் கூறுகின்றனர். வர்த்தகப் பாதுகாப்புக் குழுவினர் கேட்கும் நிதி நிலையைப்பற்றி பாங்கு நடத்துவோர் கூறுவதில் தவறென்றுமில்லை என்று கருதுவது சிலர் பொது விதிகளின்கீழ் யார் எவ்வகையான தகவல்களைக் கோரினும் கொடுக்கக் கூடாதென்று பலர் எதிர்க்கின்றனர். முன்பு ஏற்றுக்கொண்ட முடிவானது பாங்கு நடத்துவோர்மீது, தம்மை எவ்வகையிலும் திரித்துக் கூறியதாலும், இழிவுப்படுத்திக் கூறியதாகவும் கொண்டு வரப்பட்ட வழக்குகளில் ஈடுபடும் அளவில் உண்மையான நிலையை விளக்கக்கூடாது என்பது அவர்கள் தக்க காரணங் களுடன் உள்ள நிலையைமட்டும் விளக்கவேண்டுமே ஒழிய வேறு தேவையற்ற விளக்கங்களைக் கூறக்கூடாது. டௌனியர் எதி. நேஷனல் ப்ரோவின்ஷியல் அண்டு யூனியன் பாங்க் ஆஃப் இங்கிலாந்து (1924) 1 கே.பி. 461. இது காலம் வரை கணக்கை அம்பலப்படுத்தாது இரகசியமாக வைக்கவேண்டியதைப்பற்றிய சட்ட வழக்கு முடிவு இது ஒன்றேதான். இம்முடிவின் விபரம் வருமாறு:

வாடிக்கைக்காரரின் கணக்கை எப்போது வெளிப் படுத்தலாம்?: பாங்கு நடத்துவோருக்கும் வாடிக்கைக்

காரருக்கும் இடையே உள்ள மறைமுகமான ஒப்பந்தம் யாதெனில் மூன்றுமவருக்கு பாங்கு நடத்துபவர் வாடிக்கைக் காரரின் கணக்கை வெளிவிடக்கூடாது. ஆயினும், வாடிக்கைக் காரர் எழுத்து மூலமாகவோ, அல்லது மறைமுகமாவோ தெரிவித்திருப்பின் பாங்கு நடத்துபவர் கூறலாம். எடுத்துக் காட்டாக, ஒரு வாடிக்கைக்காரர் தனது பாங்கு நடத்துவோரை நடுவராக அமைத்து எழுதினல், இவர் சம்பந்தமாக வரும் வர்த்தகக் கேள்விக்கெல்லாம் பாங்கு நடத்துபவர் தமது வாடிக்கைக்காரரைப்பற்றிக் குறிப்பிடலாம். மேலும், தமக்கு உத்திரவாதக்காராக நிற்க முன் வருபவரை பாங்கு நடத்துவோருக்கு அறிமுகப்படுத்தி வைப்பின், பாங்கு நடத்துபவர் அவ்வப்போது தமது வாடிக்கைக்காரரின் கணக்கு நிலையை உத்திரவாதத்தை முன்னிட்டுக் கூற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. நீதிமன்றத்தின் உத்திரவை அனுசரித்து பாங்கு நடத்துவோர் தங்களுடைய வாடிக்கைக்காரரின் கணக்கை வெளியிடவேண்டிய கடமையுண்டு. நாட்டின் பொது நலனைக் கோரி, வாடிக்கைக்காரர் நாட்டிற்கெதிராக தீங்கு விளைவிப்ப வராகக் இருப்பின், அவ்வமயம் அவரது கணக்கைப் பொதுக் கடமையாகத் தெரிவிப்பதால் அதை அவருடைய நற்பெயரைக் கெடுக்கும் எண்ணத்துடன் அல்லது அவரை இழிவுப்படுத்தும் நோக்கத்துடன் விடப்பட்டது என்ற குற்றத்திற்கு ஆளாக மாட்டார். யுத்த காலத்தில் விரோதியுடன் [வர்த்தகம் புரியும் நபர்களைத் தெரிந்திருப்பின், அந்தத் தகவலை உடனே தெரிவித்து இராஜ்ஜிய விரோதமான குற்றம் என்று விளக்கலாம். கடைசியாக பாங்கு நடத்துவோர் தமது சொந்த நலனைக்கோரி சட்ட ரீதியாக (பாக்கிக்காக வேண்டி வாடிக்கைக்காரரின்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க உரிமை) வாடிக்கைக்காரரின் கணக்கு நிலையைக்கூறி தன்னை பொறுப்பில் ஈடுபடுத்தமாட்டார். உத்திரவாதம் அளிப்பவரை பணம் கட்டச்சொல்லும் போது தமது வாடிக்கைக்காரரின் கணக்கை கூறுவது நியாயமானது.

பொது நற்பண்பு: விதிவிலக்கான சமயத்திலும் நியாயமான கோரிக்கையின்போதும்தான் பாங்கு நடத்துபவர் தமது வாடிக்கைக்காரரின் கணக்கை வெளிப்படுத்துவார். இதன் மூலம் பாங்கு நடத்துபவர் தனது வாடிக்கைக்காரரிடம் நற்பண்புடன் நடந்துகொள்கிறர். பாங்கு நடத்துபவர்கள் ஒருமிக்க இந்த செயல் முறையை "பொது நற்பண்பு" என்று விளக்குகின்றனர். (அனுபந்தம் ஆ. வில் நமூன 16ஐக் காண்க.) ஒரு பாங்கு தனக்குத் தேவைப்படும் தகவலை(எடுத்துக்காட்டாக, உத்திரவாதம் ஏற்கும் நபரின் வரவு நிலை, கழிவு நீக்கிய உண்டியலில் சம்மதித்து

ஏற்றுக்கொண்டவரின் கணக்கு நிலை, இன்னொரு பாங்கியின் வாடிக்கைக்காரரால் ஒத்துக்கொள்ளப்பட்ட உண்டியல்) வேறு ஒரு பாங்கிற்கு எழுதிக் கேட்கலாம். அம்மாதிரி வரும் தகவல்களுக்கு பாங்கு நடத்துபவர் மிகைப்படுத்திக் கூறுமலும் மிகவும் இரகசியமான முறையில் பொது நிலைமையை தக்க பதங்களைப் போட்டு எழுதுவாரே ஒழிய தமக்குத் தோன்றியதை எல்லாம் எழுதமாட்டார். இம்மாதிரியான விசாரணைக்கான சந்தர்ப்பங்களையனுசரித்தும், வாடிக்கைக்காரரின் முழு அனுமதி பெற்றும் பாங்கு நடத்துபவர் பழக்கமாகக் கொண்டுள்ள சான்றுகளுமே இதற்கு ஆதாரமாக அமையும் எனலாம்.

சண்டர்லண்ட் எதி. பார்க்ளேஸ் பாங்கு (தி. டைம்ஸ் 246 25-ம் நவம்பர் 1938 Sunderland Vs. Barcla's Bank. The Times 24 & 25th November 1938) தான் குதிரைப்பந்தயம் நடத்துபவர்களுக்கு செக்குகள் கொடுப்பதாகத் தம்மைப்பற்றி தம் கணவருக்கு பாங்கு கூறியதாக திருமதி சண்டர்லண்டு புகார் கூறினள். இதையடுத்து அந்தப் பெண்மணி உடுப்புகள் உற்பத்தியாளருடைய பெயருக்குக் கொடுத்த செக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பாங்கு நிர்வாகி முன்னர் வந்த குதிரைப் பந்தயங்களின் பெயரில் வந்த செக்குகளை மனத்தில் இருத்தி இதைக் கொடுக்க மறுத்துவிட்டனர். கணவனின் தூண்டுதலின் பேரில் மனைவி பாங்கு நிர்வாகிக்குத் தொலைபேசியின் மூலம் ஏன் அந்த செக்கு கொடுக்கமறுக்கப்பட்டது என்று வினவினள். இப்பேச்சிற்கிடையே கணவன் தொலைபேசியின் மூலம் பாங்கியின் நடத்தை சரியன்று என்று கண்டித்தபோது பின்னர் பாங்கு நிர்வாகி குதிரைப்பந்தயம் நடத்துபவருக்கு அவரது மனைவி கொடுத்த செக்குகளைப்பற்றிய விபரத்தைத் தெரிவித்தார். பாங்கு நிர்வாகியின் சாட்சியப்படி திருமதி சண்டர்லாண்ட் ஏன் செக்கு நிராகரிக்கப்பட்டது என்ற காரணத்தை விளக்கும்படி தன்னைத் தொலைபேசியில் கூப்பிட்டார் என்றும், அதற்கு முன்பு குதிரைப்பந்தயம் நடத்துபவருக்குக் கொடுக்கப்பட்ட செக்கிற்குப் பணம் கொடுத்த பின்னர் வந்த செக்கிற்குப் போதிய பணம் இல்லையாதலால், செக்கு கொடுக்கப்படவில்லை என்று கூறினர். நீதிமன்றம் பாங்கு நிருவாகியின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டது. தமது வாடிக்கைக்காரரின் அனுமதி பெற்றே அவர் சாட்சியம் கொடுத்தார் எனலாம். பாங்கர்ஸ் (Bankers L. J.) என்ற உயர் நீதிபதி இந்த வழக்கில் முடிவு கூறும்போது பாங்கு தனது நிலையைக் காத்துக்கொள்ள வேண்டி, நற்பண்பு நிலையினின்று நீங்காதிருக்கத் தமது வாடிக்கைக்காரரின் செல்வ நிலையைக் காட்டி அவர் கொடுத்த செக்கை ஏற்க

மறுத்தது சரி என்றும், கணவன் மனைவி இருவரிடையே உள்ள தனிப்பட்ட உறவை விளக்கிக் குறிப்பாக, மனைவியின் கணக்கு நிலையை கணவனிடம் தெரிவிப்பதை இதரர்களுக்குத் தெரிவிப்பது போன்று கருதக்கூடாது என்று முடிவு கூறினர்.

வெறும் உண்மை நிகழ்ச்சிகளே: தமது வாடிக்கைக் காரரின் பொருளாதார நிலையைக் கூற விரும்பும் பாங்கு நடத்து வோர் வெறும் உண்மையான நிலையைக் குறைத்தும் மிகைப் படுத்தியும் கூருது கணக்கில் உள்ள நிலையை உள்ளவாறே கூற முயல வேண்டும். (அநுபந்தம் ஆ. நமூன. நீர் 16 அ. காண்க.) அவர் தம் காதில் விழும் ஆதாரமற்ற செய்திகளைக் கூறக்கூடாது. இரண்டாவதாக இவ்வாறான செய்திகளை அவர் இன்னொரு பாங்கு நடத்துவோருக்கோ அல்லது வாடிக்கைக்காரரின் அனுமதி பெற்ற தனிநபருக்கோ தெரிவிக்கலாம். இந்தத் தகவல் வெளியீடு பொதுவானதாகவும் பாங்கு நடத்துபவரைப் பொய்த் தகவல் கொடுத்ததாகவோ அல்லது வாடிக்கைக்காரரை இழிவு படுத்தும் பிரச்சாரத்தில் ஈடுபட்டதாகவோ குற்றம் கூருத வண்ணம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில் கூற வேண்டும். பாங்குநடத்துபவரும் அவர்கீழ் பணியாற்றும் இதரர் களும் சமூகத்தின் அங்கத்தினராகவே இருக்கிறபடியால் அவர் களுக்கு சமூகத்தின் மீதுள்ள பொறுப்பு குறையவில்லை. நேர்மை யற்ற தகவல் வெளியீட்டினல் பாங்கு நடத்துபவர் வாடிக்கை காரருக்குப் பொறுப்பாளி ஆவதோடல்லாது பிறருக்குக் கொடுத்த ஆதாரமற்ற தகவல்களின் பின் விளைவாக வரும் நட்டங் களுக்குக் காரணமாகிருர். இவர் நட்ட ஈடு கொடுக்க வேண்டிய நிலையை எய்துகிருர். நீதிமுறையில் பாங்கு நடத்துபவர் அறிந் திருந்தும் கூட வேண்டுமென்றே தவருன தகவல்களைக் கொடுத் தார் என்று நிரூபிக்கப்பட்டால் இவர் நட்ட ஈடு கொடுக்க வேண்டியவர் ஆகிருர். எடுத்துக் காட்டாக பாங்கு நடத்துபவர் ஒருவர் தனக்கு வேண்டிய வாடிக்கைக்காரரின் உதவிக்கென அவர் வறிய நிலையில் இருந்தும் கூட பாங்கு நடத்துபவர் அவரை உயர்ந்த நிலையில் இருப்பவராக தகவல் அளிக்கிருர் என்று வைத்துக் கொள்வோம். இச்செய்தியின் அடிப்படையில் இவரு டன் வர்த்தகம் புரியும் நபர் கடனுதவி அளித்துப் பெருத்த நட்ட மடைகிருர். இந்த நட்டத்தை ஈடு செய்ய வேண்டியது பாங்கி யினுடைய பொறுப்பு. ஒரு வாடிக்கை அல்லாதவர் பாங்கு நடத்துவோரை இம்மாதிரியான விசாரணை கேட்பின் பாங்கு நடத்துபவர் தமது விருப்பம் போல் தகவல் அளிக்க உரிமை உண்டு. ஏனென்ருல், வாடிக்கை அல்லாதவர் பாங்கு நடத்து பவரைக் கட்டுப்படுத்த எவ்வித ஒப்பந்தமும் இல்லை. ஆனல்

வாடிக்கைக்காரரிடம் பாங்கு நடத்துவோர் தவருன முறையில் நடந்து கொண்டால் தம்மை இழிவுபடுத்தியதாகக் குற்றம் சாட்டி வழக்குத் தொடர உரிமையுண்டு. (லா ஆஃப் பாங்கிங் எழுதியவர் ஆர். எஸ். டி. சோர்லே [1938 பக். 202) (Law of Banking by R. S. T. Chorley 1938, P. 202)

இங்கிலாந்தில் பாங்கு நடத்துபவரைக் குற்றம் சாட்டி அவதூரான முறையில் நடந்து கொண்டார் என்று நிரூபிக்க வேண்டுமாயின், பாங்கு நடத்துபவர் எழுத்து மூலம் செய்த விளக்கங்களைக் கையொப்பமிட்டுக் கொடுத்திருக்க வேண்டும். ஒரு பாங்கியில் பணியாற்றும் நிருவாகி அம்மாதிரி எழுதி கையொப்பம் இட்டுக்கொடுத்தால், அது பாங்கு நடத்துவோரைப் பாதிக்காது. இது டெண்டர்டன் பிரபுவின் சட்டத்தின் வாயிலாக வந்த முடிவு ஆகும். [Lord Tenterdan's Aet (9 Geo. IV, C. 14)] தனியார் தீங்கின் அடிப்படையிலோ அல்லது வேண்டுமென்றே தவருன முறையில் விளக்கம் கொடுத்தலோ இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க இயலாது கடமையினின்று வழுவிய நிலையில்தான் இச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கலாம். மேலும் அறியாத்தனமாக பாங்கு நடத்துபவரால் செய்யப்பட்ட தகவல் வெளியீடுகள் டென்டர்டன் சட்டத்தின்கீழ் கட்டுப்படுத்த மாட்டா. (பான்பெரி எதி. தி பாங்க் ஆஃப் மாண்ட்ரீல் 1918) எ.சி. 626) (Banberry V The Bank of Montreal [1918] A.C. 629 டெண்டர்டன் சட்டத்தின் கீழ் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள பாங்கு நடத்துவோர் தமது வாடிக்கைக்காரர்களைப் பற்றி வரும் விசாரணைகளை கையொப்பமிடாது பூர்த்திசெய்து அனுப்புவார்கள். கையொப்பமிடாது பூர்த்தி செய்வதால் சட்டப்படி இவர்கள்மீது வழக்கு தொடரும் உரிமை போய்விடுகிறது. ஹெட்லே பைர்ன் அண்ட் கம்பெனி லிமிடெட் எதி. ஹெல்லர் அன்ட் பார்ட்னர்ஸ் லிமிடெட் என்ற வழக்கில் (Hedley Byrne & Co. Ltd. V Heller & Partners Ltd., (C. C. 1964. (34) P. 96) அக்கறையில்லாதவனும், தெரியாத்தனமாக தவருன விளக்கம் கொடுத்தால் இதரரைப் பாதித்து அவரை நட்டத்தில் ஆழ்த்தியது. நிதி நட்டஈடாகக் கோர உரிமையுண்டு. இதன்கீழ் நம்பிக்கைக்கான ஒப்பந்தம் இல்லையென்று காண்க. சட்டப்படி தகவல் கொடுப்பவர் நேர்மையாகவும் மிகைப்படுத்தாமலும் கூற வேண்டிய முறைமுக ஒப்பந்தத்திற்கு அடிபணிய வேண்டி இருப்பதால், கவனப்பிசகாக அவர் யாதும் கூற முடியாது. தகவல் கோரும் நபரும் அவரை நம்பி இருப்பது அவ்வொப்பந்தத்தின் அடிப்படைக் கொள்கை எனலாம். பாங்கு நடத்துபவர் மீது அவர்தம் முழு நம்பிக்கையையும் அனுமானத்தையும் வைத்திருக்கிருர். ஆயினும்

தமக்கு அம்மாதிரியான பொறுப்பு ஏதுமில்லையென்று பாங்கு நடத்துபவர் விளக்கமாக மறுத்துவிடுவதால், இம்மாதிரியான பொறுப்பு அவர்மீது ஏற்றப்படுவதில்லை, ஒரு வாடிக்கைக் காரரின் கணக்கு நிலையில் இன்ன வரவு உள்ளதென்று தன் அபிப்பிராயத்தைச் சுருக்கமாக ஒன்றிரண்டு வார்த்தைகளால் கூறி பாங்கு நடத்துவோர் முடித்துவிடுவார். இதைவிட அதிகப் படியானதும் மிகவும் பொறுப்பு வாய்ந்ததுமான பணியை பாங்கு நடத்துபவர் ஏற்கமாட்டார். அவர் நேர்மையான பதிலைத்தான் கூற முற்படுவார்.

எவ்வளவு தேவையான தகவல்கள் வேண்டுமோ அவற்றை மீறி பாங்கு நடத்துபவர் கொடுக்க முன் வரமாட்டார். எழுதப் பட்ட செக்குகள் கொடுபடாமல் போனால் அவற்றிற்கான காரணங்களைச் சுருக்கமாகக் கீழ்க்கண்ட காரணங்களை பாங்கு நடத்துபவர் கூறுவதுண்டு. அவையாவன: போ. நி. இ. (போதிய நிதி இன்மை) (Not Sufficient Funds) செக்கு எழுதியவரை கேட்க (Refer to Drawer) R. D. (செ. எ. கே.) இதற்கான குறியீடுகள் அதே முடிவைக் கொடுக்கும்: செக்கைத்தும் வசூலாக்கப்படவில்லை. E N.C (Effcets Not Cleared)செக்கைத் தும் வரவில்லை. N. E. (No Effects)

IV. **பயனளியாக் கணக்குகள் — சில்லரைச் செலவுகள்:** வாடிக்கைக்காரருக்கும் பாங்கு நடத்துவோருக்கும் உள்ள உறவின் இன்னொரு தனிப்பட்ட குணநலனாவது பாங்கு நடத்து பவர் மேற்படி நபரின் கணக்கையேற்று எழுதி வருவதற்காக சில்லரைச் செலவுகளைக் கோரலாம். இங்கிலாந்திலும் இன்றும் அநேக அயல்நாடுகளிலும் ஒரு கணக்கில் பயன் அடையும் அளவிற்கும் குறைவாக பணம் இருப்பின், அந்தக் கணக்கு உடைய் வாடிக்கைக்காரர் ஆண்டுவரை நடைபெறும் வரவு செலவுகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் அதாவது $\frac{1}{8}$ அல்லது $\frac{1}{4}$ சதவிகிதம் பாங்கு நடத்துவோருக்குக் கொடுத்துவிட வேண்டும். இந்தியாவில் பாங்குநடத்துவோர்கள் அரையாண்டுக்கு அளவுக்கு மீறி ஓவர் டிராஃப்ட் கணக்குகளின் மீது ரூபாய் 1 முதல் 3 வரை வசூல் செய்வார்கள். இதனால் அதிகப்படியான ஆதாயம் கிடைக் கும் என்று கூறுவதற்கில்லை. இதற்கான காரணமென்னவெனில் இங்கிலாந்தில் பாங்குகளில் அதிகப்படி செக்குத்தாள்கள் நடை முறையில் உள்ளன. இங்கிலாந்தில் உள்ள பாங்கு நடத்துவோர் அதிக அளவில் அனுபவம் பெற்றுள்ளதால் வாடிக்கைக்காரர்களை செக்குத்தாள்களைப் பயன்படுத்த உதவுகின்றனர். ஆயினும், இந்தியாவிலோ செக்குகளை அவ்வளவாகப் பயன்படுத்துவதில்லை மேலும் இவ்வளவு குறைவான கட்டணம் வசூலிப்பதற்கு

இன்னொரு காரணமும் உண்டெனலாம். இந்தியாவிலுள்ள பாங்கு நடத்துவோர் தமது வாடிக்கைக்காரர்கள் பெருத்த அளவில் நடப்பு வைப்புக் கணக்குகள் வைத்துக் கொள்ளத் தூண்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் கட்டணம் வசூலிப்படுவதில்லை அல்லது அவ்வாறு வசூலித்தாலும் மிகவும் குறைந்த அளவில்தான் வசூலிக்கக்கூடும்.

V. தொடர் வட்டி வசூல் செய்யப்படவேண்டியது :

அரையாண்டுக்கு ஒரு முறை வட்டி கொடுக்கவேண்டியது என்ற விதி இவ்வுறவில் தொக்கி நிற்கிறது எனலாம். எழுத்து மூலமாகவோ அல்லது வழக்க அடிப்படையிலோ செய்து கொள்ளும் ஒப்பந்தத்தின்படி தனி நபர்கள் பெற வேண்டிய கடன் தொகைக்குச் சாதாரண வட்டியையே கோரவேண்டியது முறை. ஆயினும், பாங்கு நடத்துபவர் அரையாண்டு முடிவில் உள்ள நிகரத்தின்மீது வட்டி கொடுத்தும் தொடர்ந்து வட்டி கூடிய தொகைக்கு அடுத்த அரையாண்டின் நிலுவையில் வட்டி கணக்கிட்டு, கூட்டி எழுதுகிருர்கள். இதைத் தொடர் வட்டி முறை எனலாம். ஆயினும், சாதாரண வட்டிதான் கணக்கிடப்படவேண்டும் என்ற ஒப்பந்தம் இருப்பின், அதற்கேற்ப பாங்கு நடத்துவோர் வட்டியைக் கணக்கிடுவார்கள். ஓவர் டிராஃப்ட் கடன் கொண்ட கணக்குகளின் இருப்பை மாத முடிவிலோ அல்லது காலாண்டுக்கு ஒரு முறையோ கணக்கிட்டு வட்டி வசூலிப்பது சில பாங்குகளின் வழக்கம். ஆயினும், மேற்கூறிய வண்ணம் வாடிக்கைக்காரர் பாங்கு நடத்துவோருடன் ஒப்பந்தம் செய்து கொண்டாலன்றி பாங்கு நடத்துவோர் தம் விருப்பத்திற்கேற்ப மாதத் தவணையிலோ, காலாண்டுத் தவணையிலோ வட்டி வசூலிக்கக்கூடாது. இது சம்பந்தமாக நீதிமன்றங்கள் தக்கபடி பார்வை செலுத்தி கட்டுப்படுத்தியிருப்பது நோக்கத் தக்கதே.

உ.பி. யூனியன் பாங்கு லிமிடெட் எதி தினநாத் ராஜாராம் சி.சி. வால் 23. பக் 433. (U. P Union Bank Ltd. V. Dinanath Rajaram C. C. Vol. 23. P. 483).

VI காலவரம்புச் சட்டமும் வைப்புகளும் :

முடிவில் கருதப்பட வேண்டிய நியமம் என்னவெனில், வாடிக்கைக்காரர் தான் கொடுத்துள்ள வைப்புக்களைக் கொடுக்கும்படிகோரிய சமய முதல் காலவரையறைச் சட்டம் அமலாகியது. இத்தனிபட்ட கொள்கை பாங்கு நடத்துவோருக்கும் அவர்களுடைய வாடிக்கைக்காரர்களுக்கும் இடையேயுள்ள வைப்புகளை அனுசரித்தது. ஆயினும், பொதுவாகக்

கடனிலின்றும் வேறுபட்டது என்ற நீதிபதியின் தீர்ப்பை நாம் முன்னர் ஜோ. ஆ. இம்ஸன் எதி. சுவிஸ் பாங்கிங் கார்ப்பரேஷன் என்ற வழக்கில் கண்டோம். இந்த வழக்கின் விபரம் வருமாறு: 1914–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1–ஆம் தேதி கூட்டு வர்த்தகத்தில் ஒரு கூட்டுதாரர் மரித்ததால் அவ் வர்த்தகத்தை இழுத்து மூடவேண்டிய நிலைமை வந்தது. அந்தத் தேதியில் கூட்டு வர்த்தக நிறுவனத்தின் நடப்பு வைப்புக் கணக்கின் வரவில் £ 2321/–1 இருந்தது. அந்த பணத்தைக் கொடுக்கும்படி கோரவில்லை. எனவே, சட்டப்படி வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை யெடுத்துக்கொள்ள மேற்படி கூட்டு வர்த்தக நிறுவனம் முடிவு செய்தது. மேற்படி வழக்கில் நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தை உயர்நீதிபதி பாங்க்ஸ் (Bankes, L.J..) வெளிப் படுத்தியதின் விபரம் வருமாறு: 'எங்கள் முடிவான கருத்து என்னவெனில், பணத்தைக் கொடுக்கும்படி கோரவேண்டியது கூட்டு நிறுவனத்தின் உரிமை. அதன் பின்னர்தான் இதை வழக்கில் எடுத்துக்கொள்ளலாம்'. இந்த பொருள் பற்றிய சட்டமே அடியோடு மாற்றமடைந்தது எனலாம். கோரியபோது கொடுக்கிறேன் என்று சத்தியம் செய்து தருகிறேன் என்று வாசகமிட்ட கடனுக்கு இதுகாறும் கொடு எனக் கோரவேண்டிய அவசியம் இல்லை. காலவரை பணச் சட்டம் அது எழுதிய தேதியினின்று தொடங்கும். எனவே, கடன் எழுதிய தேதியினின்று தொடங்குமே ஒழிய கோரப்பட்ட தேதியினின்று தொடங்குவதன்று வாணிபத் துறையில் மேம்பாடடைந்த் வழக்கறிஞரும் நீதிபதியுமான ரோஷ் (Mr Justice Roche) இந்த வழக்கை நீதிமன்றத்தில் விசாரணை செய்து முடிவில் எந்த விதமான கோரலுமின்றி உடனே பணத்தைத் திரும்பிப் பெறலாம் என முடிவு செய்தார். ஆயினும், நீதிபதி பாங்கஸின் (Justice Bankes) தீர்ப்பு மிகவும் உயரியதாகக் கருத இடமுண்டு. ஏனெனில், பாங்கு நடத்துபவரிடம் உள்ள பெரும் பகுதிகளான வைப்புகள் கோரப்படாமல் கிடக்கின்றன. அவை வாங்கப்பட்ட அல்லது ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட தேதியினின்று காலவரையறைச் சட்டம் அமலாகிறது என்ற பயனை அனுபவிக்க முடியாது. இது சம்பந்தமான சட்டம் 22ஆவது பிரிவின்கீழ் காலவரையறைச் சட்டம் 1963 (Limitation Act 1963)ல் கொடுக்கப்பட்டுள்ளது அதன்படி வாடிக்கைக்காரர் கொடுத்த வைப்பைத் திருப்பும்படி கோரிய சமயம் முதல் மூன்று ஆண்டுகள் காலம் நீடிக்கும் என்பதாம். பாங்கு கம்பெனிகள் சட்டத்தின் (1949) 26-வது பிரிவின்கீழ் பத்து ஆண்டுகளாகக் கொடுக்கல் வாங்கல் இல்லாத கணக்குகளின் பட்டியலைத் தயாரித்து

ஆண்டறிக்கையாக அனுப்பவேண்டியது என்று கூறியுள்ளது. அம்மாதிரியான கணக்குகளின் வரவில் எவ்வளவு தொகையுள்ள தென்றும் எந்த குறிப்பிட்ட தேதி முதல் அவை கொடுக்கல் வாங்களின்றிப் பயனற்ற நிலையில் உள்ளன என்றும் கூற வேண்டும். குறிப்பிட்ட தவணை வைப்புகளுக்கு மட்டும் கெடு தேதியினின்று பத்தாண்டுகள் கணக்கிடப்படவேண்டும்.

ஒரு விநோதமான வழக்கு: காலவரையறைச் சட்டத்தை யொட்டி பாங்கியின் வைப்பிலுள்ள பணத்தைத் திரும்பப் பெறுவதற்காகக் கொண்டுவரப்பட்ட ருசிகரமான ஒரு வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆங்கில நாட்டு நீதிமன்றங்களில் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்பட்டது. 1866ஆம் ஆண்டில் 'எஃப்' (F) என்ற ஒரு நபர் ஒரு பெரும் தொகையைப் பிரதிவாதி பாங்கியில் வைப்பாகப் போட்டிருந்தார். தேவை ஏற்பட்ட பொழுது 14 நாள்கள் முன்னறிவிப்புக் கொடுத்து வாங்கிக் கொள்வதாக நிபந்தனை போடப்பட்டிருந்தது. ,எஃப்' (F) இறந்தார். அவர் இறந்த 61 ஆண்டுகள் கழித்து அவர் சந்ததியில் வந்த ஒருவர் இந்த வைப்புக்கான ரசீதை 'எப்ஃ'பினுடைய (F) பழைய தஸ்தாவேஜுகளிலிருந்து கண்டெடுத்தார். இந்த ரசீதின் ஆதாரத்தில் அவர் மேற்படி பாங்கியின்மீது வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கில் கால வரையறை ஏற்படவில்லை. ஏனெனில், குறிப்பிட்ட அதிகப் படியான காலம் கடந்துங்கூட எஃப் (F) பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று கோரியதற்குப் போதிய சான்றுகள் ஏற்படவில்லை. ஆயினும், அதிருட்ட வசமாக பாங்கு இத்தனை காலம் திருப்பிக் கொடுக்காது இருந்திருக்க முடியாது என்ற அனுமானத்துடன் நீதிமன்றம் முடிவு செய்து தொடரப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்தது. ருசுப்படுத்த வேண்டிய புத்தகங்கள் அவ்வளவு நீண்ட காலம் வரை வைத்திருப்பது என்பது எல்லையை மீறியது எனலாம். நடப்பிலுள்ள பாங்கியினுடைய குறிப்பேடுகளைக் கொண்டு இவ்வழக்கினை எளிதில் முடிவு செய்வது இல்லையென்ற காரணத்தால் வாதியின் வழக்கு ஏற்கத் தகுந்தது அன்று என்று நீதிமன்றத்தார் வழக்கைத் தள்ளிவிட்டனர். டக்ளஸ் எதிராக லாயிட்ஸ் பாங்கு லிமிடெட் 34 சி.சி 263 (Douglas V. Lloyds Bank Ltd., 34. C. C. 263).

வைப்புக் கணக்குகள்: தவணை வைப்புகளுக்கு இந்த கால வரையறைச் சட்டத்தின்கீழ் மாற்றம் ஏதேனும் உண்டா என்பதைப்பற்றி உள்ள அபிப்பிராயம் முன்னுக்குப்பின் முரணை

தாகும்படி பல்வேறு கொள்கைகள் கூறத்தக்கவையாக உள்ளன, சிலர் கொள்கையாவது தவணை வைப்புகளுக்கும் நடப்பு வைப்புகளுக்கும் யாதொரு வேற்றுமையில்லையென வாதித்து நடப்பு வைப்பைப்போன்று வாடிக்கைக்காரர் பணத்தை திருப்பிக் கொடுக்கக்கோரிய பின்னர்தான் கால வரையறைச் சட்டம் அமலாகிறது என்பதாம். இன்றும் சிலரின் கருத்துப்படி தவணை வைப்பின்கீழ் வாடிக்கைக்காரர் கால எல்லைக்குள் பணத்தைத் திரும்பப்பெற விழைவதால் அது முதல் காலவரையறைச் சட்டம் அமலாகிறது. இக்கொள்கைகள் இரண்டினும் பின்னர் கூறியுள்ளதே சற்று நேர்மையான கொள்கையெனக்கருத இடமுண்டு. பணம் திருப்பும் முன்னர் தவணை வைப்பின் ரெசீதைத் திருப்பித் தர வேண்டும் என்ற நிபந்தனை இருப்பின், அதன்படி கால வரையறைச் சட்டப்படி அன்று முதல் அமலாகிறது. கருவூலத்தையும் ஆவணங்களையும் விலையுயர்ந்த பண்டங்களைப் பாதுகாப்பிற்கு வைக்கப்பட்டு திருப்பிக் கொடுக்கும்படி கோரிய காலம் முதல் இச்சட்டம் அமலாகிறது.

ஓவர் டிராஃப்ட் கடன்கள்: ஓவர் டிராஃப்ட் கடன்களுக்குக் காலத்தின் வரையறை, பாங்கு நடத்துவோர் தனது வாடிக்கைக் காரருக்குக் கொடுத்து அவர் அதைப் பயனாக்கிக் கொண்ட காலத்திலிருந்து தொடக்கம்பெறும். கடன்பட்டவரோ அல்லது அவருடைய பதிலாளோ கடன் வாங்கிய காலத்தை நீட்ட வேண்டும் என்று கையொப்பம் இட்டு எழுதிக் கொடுப்பின் அந்தத் தேதியினின்று கால வரையறை நீளும். இதன் அடிப் படைக் காரணம் என்னவெனில் பாங்கு நடத்துபவர் கொடுத்தது கடனதலால் இதன் முறையே வேறு பாங்கு நடத்துபவரிடம் வைப்பாக இடப்பட்டதன்று மோட்டிகொர்னி எதிராக நாரன்ஜி 29 பம். லா. ரி. 423 (Motigorni Vs. Naranji 29 Bomb L. R. 423.)

கோரும்பொழுது தரவேண்டிய மாற்றுண்டியல் : (டிமாண்ட் டிராஃப்ட்) வாடிக்கைக்காரர் தனக்கு வந்த மாற்றுண்டியல்களுடன் டிமாண்ட் டிராஃப்ட்டுகளையும் சேர்த்து பாங்குக் கணக்கில் கட்டி, பாங்கு மேற்படி தொகைகளைக் குறிப்பிட்ட நபரிடமிருந்து வசூலித்து அவற்றைத் திருப்பும்முன்னர் தனது தொழிலை நிறுத்தினாலும் கூட சட்டப்படி டிமாண்ட் டிராஃப்ட் தொகையைத் திருப்பிப் பெற வாடிக்கைக்காரருக்கு உரிமையுண்டு. (ஃபர்ஸ்ட் நேஷனல் பாங்கு லிமிடெட் எதிராக இண்டஸ்டிரியல் ஆயில் கம்பெனியும் இதரர்களும் இ. ரி. 1962 (32) பக். 995).

4. பாங்கு நிறுவனங்கள்

தனியார் பாங்குகளின் வீழ்ச்சி:— "தக்கது ஆயின் ஒரு சில நன்றே" என்ற கோட்பாட்டினை மனிதன் எத்துறையினும் மேற்கொள்ளுவது போல் பாங்கு நிறுவனத் தோற்றுவாயிலிலும் இது ஒரு தவிர்க்க இயலா உண்மையெனலாம். பெருமளவில் தனித்தியங்கும் சிறு பாங்கு நிறுவனங்கள் இருப்பதைவிட வன்மையான ஒரு சில பாங்கு நிறுவனங்களின் மேற்பார்வையில் இந்நாட்டின் பாங்கு அலுவல்களை ஒப்புவித்து அவற்றின் கிளைகளைப் பல்வேறு பகுதிகளில் திறக்குமாறு செய்வதே சாலச் சிறந்தது எனலாம். பெருவாரி வர்த்தக நிறுவனங்கள் உருவாகும் இந்நாளில் பாங்கு வர்த்தகத்தைத் தனி நபரோ, கூட்டு வர்த்தகர்களோ அல்லது கார்ப்பரேஷன்களோ கூட நடத்தலாம். ஆயினும் செம்மையான முறையில் நேர்மையுடன் பாங்கு கூட்டு வர்த்தகம் செய்ய முன் வரும் தனி நபர் ஒரு சிலரே.

தனியார் பாங்குகளின் புகழ் மங்கியதின் காரணம்:— தற்போதுள்ள நிலைமையில் உலகின் பற்பல நாடுகளும், இந்தியாவும், கூட்டுப் பங்கு மூலதனக் கொள்கையை வெகுவாகக் கடைபிடித்து வருவதைக் காணலாம். பாங்கு வர்த்தக முறைக் கூட்டுப் பங்கு மூலதன முறையில் நடத்தப்பட்டு வருவதை நாம் பார்க்கிறோம். கூட்டுப் பங்கு பாங்குகள் பெருமளவில் வியக்கத்தக்க அளவில் முன்னேறிவரும் இந்நாட்களில் தனியார் பாங்குகள் மட்டும் நடக்கக்கூடப் போதிய வலிமையற்றுத் தள்ளாடிக்கொண்டு பின் தங்குவதின் காரணம் என்ன? இதன் காரணத்தை வெகுவாக ஆராயவேண்டிய அவசியமே இல்லையெனலாம். முதன் முதலாக இந்நாட்டில் பெருவாரியான தொழில்கள் தோன்றி, அவைகள் பெருமளவில் கடன் வசதியைக் கோருகின்றன. கடன் வசதி செய்து கொடுக்கப் போதிய பண வசதியும் நிதியும் இத்தனியார் பாங்குகளில் இருப்பது மிகவும் அரிது. எனவே, அவைகளின்

தேவையைக்கூட நிறைவு செய்ய முடியாது வர்த்தகப் பெருக்கமின்றி உழலுகின்றன. தனியார் பாங்குகளின் மூலதனம் மிகவும் குறைவாகவே இருக்கக்கூடும் இம் மூலதனம் அந்த பாங்கின் கூட்டுதாரர்கள் செலுத்திய தொகையாகும். (இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1956 பிரிவு 11) பத்துக் கூட்டுதாரர்களுக்கு மேல் இருக்கக்கூடாத காரணத்தால் மூலதனம் மிகவும் குறைவாக இருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால் கூட்டுப் பங்கு பாங்குகளுக்குப் பெருமளவில் மூலதன வசதியுண்டு. அந்தப் பாங்குகள் எண்ணிலடங்காப் பங்குதாரர்களைப் பெற்றிருக்கலாம். இவ்வளவு பங்குதாரர்கள்தான் இருக்க வேண்டும் என்று சட்டம் வரம்பிடவில்லை. பெருமளவில் திரட்ட வேண்டிய மூலதனத்தைச் சிறிய தொகையுருவில் வகுத்துப் பங்குகளை வெளிவிடுகின்றன. மூலதனப் பங்குகள் சிறிய அளவுத் தொகையாக உள்ளதாலும், பங்குதாரர்கள் மேற்கொண்ட பங்குகளின் முகப்பு மதிப்புக்கு (Face Value) மேல் அவர்களுக்கு பொறுப்பு இல்லையென்ற காரணத்தாலும் சாதாரண மக்கள் தங்கள் சேமிப்புத் தொகையை இம் மூலதனத்தில் போட விழைகின்றனர். தனியார் பாங்குகளிலோ பெருந்தொகைகளை ஈடுபடுத்தக்கூடிய செல்வந்தர்கள் மட்டும் உறுப்பினராக இயலும்.

இங்கிலாந்திலும், இந்தியாவிலும் உள்ள கூட்டுதாரர்கள் மேற்கொள்ளும் பொறுப்பு:— கூட்டு வர்த்தக நிறுவனத்தின் (Firm) கூட்டுதாரர்களுக்கு எல்லையற்ற பொறுப்பினைச் சுமக்க நேரிடுகிறது. எனவே தனியார் பாங்குகளில் நேர்முக ஈடுபாட்டை மேற்கொள்ள இதரர்கள் அளவு கடந்த பொறுப்புகளைக் கண்டு கலங்கிக் கூட்டுதாரர்களாகச் சேர முன் வருவதில்லை. இந்தியாவில் கூட்டு வர்த்தகச் சட்டம் 1932 வருமுன்னர் கூட்டுதாரரின் பொறுப்புகளையும், கூட்டு வர்த்தகத்தின் கடன்களைப்பற்றியும் இந்தியக் காண்ட்ராக்ட் சட்டம் 1872 (1872ல் 9வது) 43ஆம் பிரிவில் கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டிருக்கிறது.

"இரண்டல்லது அதற்குமேல் அதிகப்பட்டநபர்கள் ஒருமித்து வாக்குக் கொடுப்பார்களேயாயின், வாக்குப் பெற்றவர், விளக்கம் பெற்ற ஒப்பந்தத்தின்படி எதிர்மாறுக இல்லாதிருப்பின் ஒருமித்து ஏற்ற வாக்கை முழுஅளவில் நிறைவேற்ற வேண்டும் என்று வாக்குக் கொடுத்த நபர்களில் ஒருவரையோ அல்லது அவ்வனைவரையோ சட்ட முறையின் கீழ் வற்புறுத்தலாம்."

திவால் ஆய்முறையின் கீழ்க் (Bankruptcy Practice) கூட்டு வர்த்தக நிறுவனத்தின் ஆஸ்தி, அல்லது சொத்துகளை, கூட்டுக் கடன் அல்லது தனிக் கடன்களைக் கொடுக்க எவ்வாறு வழங்க வேண்டுமென்ற முறை சற்று மாறுதலானது எனலாம். இந்தியக் கூட்டு வர்த்தகச் சட்டம் 1932-ஆம் ஆண்டின்படி பிரிவு 49ல் கூறியவாறு, கூட்டுவர்த்தக நிறுவனத்தின் சொத்துகளை மேற்படி நிறுவனத்தின் கடன்களைக் கொடுக்க ஈடுபடுத்த வேண்டும். அப்பொழுதுக் கடன்களை அடைத்த பின்னர் ஏதாவது எஞ்சியிருப் பின் அந்தந்தக் கூட்டுதாரரின் கடன்களைக் கொடுக்கவோ அல்லது அவரிடம் கொடுக்கவோ செய்யலாம். கூட்டுதாரரின் சொந்த ஆஸ்திகளைக்கொண்டு அவரது தனிப்பட்ட கடன்களைக் கொடுக்க வேண்டும். எஞ்சிய சொத்துக்களைப் பின்னர்க் கூட்டு வர்த்தக நிறுவனத்தின் கடன்களைக் கொடுக்க உபயோகிக்க வேண்டும். இந்த நியமனத்தை இந்திய இராசதானி நகரங்களின் திவால் சட்டம் 1901ன் 49 (4)ம் பிரிவிலும் மாகாணத் திவால் சட்டம் 1907ன் 61 (4)ம் பிரிவிலும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்தில் வரம்பிட்ட கூட்டு வர்த்தகச் சட்டம் 1907-ன்படி (Limited Partnership Act 1907) ஒன்றல்லது ஒன்றிற்கு மேற் பட்ட கூட்டுதாரர்களின் பொறுப்புகளை அவர்கள் ஈடுபடுத்திய மூலதன அளவுக் கோட்டினுள் வரம்பிட வேண்டும். ஆயினும் அம்மாதிரியான நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஒரு கூட்டுதார ராவது எல்லாப் பொறுப்பையும் அளவற்ற முறையில் ஏற்க இருக்கவேண்டும். அவரது தனிப்பட்ட சொத்துக்களை மேற்படி நிறுவனத்தின் கடன்களுக்கு ஈடாகக் பயன்படுத்த வேண்டும். வரம்பிடப்பட்ட கூட்டுதாரர் அந்த நிறுவனத்தில் எவ்வகையான வர்த்தகத்திலும் ஈடுபடக்கூடாது என்று அறுதியிட்டுக் கூறப் படுகிறார் அவ்வாறு அன்றாட வர்த்தகத்தில் ஈடுபட நேர்ந்தால் அவர் பொறுப்பேறி வரம்பு கடந்த கூட்டுதாரராக எண்ணப் படுவார். நிறுவனத்தின் பொறுப்புகளுக்கும், கடன்களுக்கும் அவர் இலக்காகிறார். அவர் விருப்பப்படின் எப்போதாவது கணக்குப் புத்தகங்களைப் பார்வையிடலாம். இதரக் கூட்டு தாரருக்கோ அல்லது கூட்டுதாரர்களுக்கோ ஆலோசனை கூறலாம். செயலாற்றுக் கூட்டுதாரர் எனத் தெரியாதாகையால் அவர் கூட்டு வர்த்தகத்தினின்று விலகும்போது பொது அறிவிப்புக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமொன்றுமில்லை. கூட்டுதாரராக இருந்த காலத்தில் உள்ள கடன்களுக்கு அவருக்குப் பொறுப்பு உண்டு. அவர் விலகிய பின்னர் ஏற்பட்ட கடன்களுக்கு பொறுப்பு இல்லை. இவர் கூட்டுதாரர் என்ற தகவல் தெரியாத காரணத்தால் இந்த அறிவிப்பு எவ்வகையினும் பலனுள்ளதன்று.

பெருமளவில் மூலதனத்திற்கான தேவை: இரண்டாவதாக பாங்கு வர்த்தகம் இக்கட்டானது. (delicate) அதன் வைப்பாளர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க வேண்டிய காரணத்தால் அதன் அமைப்பு அதற்கேற்ப நிலை பெற்றுள்ளது. வைப்பாளர்களின் நம்பிக்கையை இழப்பின், பாங்கின் அமைப்புத் தடாலென்று சின்னா பின்னமாகச் சரிந்து சீர்கெட்டுப் போகும். பெருவாரியாக அளிக்கப்பட்ட மூலதனம் பெற்றுள்ள கூட்டுப்பங்கு பாங்குகள், தங்கள் ஆண்டுக் கணக்குகளைச் செய்தித் தாள்களில் பிரசுரிப்பதால் பொது மக்களுக்கு மேற்படி பாங்குகளின் மீது அளவு கடந்த நம்பிக்கையேற்பட்டு அவர்கள் தங்களிடமுள்ள பெருந் தொகைகளை வைப்புகளில் போடுகிறார்கள். ஆனால் தனியார் பாங்குகளோ உள்ளூரில் பெயரும் புகழும் சம்பாதிக்கக் கூடும். அவை மூலதனத்திற்கும், வாடிக்கையை ஏற்படுத்திக் கொள்ளவும், போதியநிதி சேர்த்துக் கொள்ளவும் நாடு முழுமைக்கும் விண்ணப்பித்துக் கொண்டாலும் இயலாது எனலாம்.

பெரிய பாங்குகளில் குறைந்த அளவில் நட்டம்:—மூன்றாவதாகப் பெரிய பாங்குகளில் சராசரியின் நியதி குறிப்பாக நட்டத்தை பொருத்தமட்டிலும், அதன் கொடுக்கல் வாங்கல்களை அனுசரித்துள்ளது. ஆஸ்திகள் அல்லது சொத்துகள் அதிகமாக இருப்பின் நட்டத்தின் விகிதம் மிகவும் குறைவாக இருக்கும். இதன் காரணமாகப் பெரும் கூட்டுப் பாங்குகளில் வைப்பாளர்களுக்குக் காப்பாகவே அமைகிறது.

பெருமளவில் கடன் வசதியளிக்கவன்மை:—நான்காவதாகக் கூட்டுப் பங்கு பாங்குகள் செயலுக்கான மூலதனத்தைப் பெருமளவில் பெற்றிருப்பதால், பெருமளவில் வைப்புகளில் தங்கள் பணத்தைப் போட்டு வைத்துள்ள வாடிக்கைகாரர்களின் தேவையை நிறைவு செய்ய முடிகிறது. இதர காலங்களில் அவர்கள் கோரும் பெருங்கடன்களைக் கூட அளிக்க முன் வருகிறது. அம்மாதிரியான வகையில், தனியார் பாங்குகள் எத்தகைய வசதியும் செய்ய முடிவதில்லை. அம்மாதிரியான வைப்புதாரரால் தனியார் பாங்கின் அன்றாட வேலை சீர்குலைந்து போகும். பெரும் தொகையை வைப்பில் விட்ட பல வாடிக்கைதாரர்கள் கூட்டுப்பங்கு பாங்குகளில் பணம் போட்டிருந்தாலும், சராசரிச் சட்டபடி அமையும். எனவே ஒரு சிலரின் கையில் மூலதனம் அடர்த்தியாக அமைகிறது. வாணிபத்துறையில் இந்த மாதிரியான அமைப்புகள் தோன்றுதல் இயல்பு எனலாம்.

இணைத்தல்: இந்திய பாங்கு கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 44 A (4) ன்படி ரிசர்வு பாங்கின் எழுத்து மூலமான அனுமதி பெற்ற பின்னர்த்தான் பாங்குகளைப் பிணைக்க இயலும். ஆயினும் மேற்படி சட்டத்தின் உட்பிரிவு 7ன்படி மத்திய அரசினர் நாட்டின் நலனைக்கோரி இரண்டல்லது அதிகப்படியான பாங்குகளை, ரிசர்வ் பாங்கின் ஆலோசனைக்கேற்பப் பிணைக்க முன் வரலாம். இந்திய கம்பெனிகள் சட்டம் பிரிவு 396-ன் கீழ் இம்முறையைக் கடைப்பிடிக்கலாம். இதன் மூலம் பல சௌகரியங்கள், குறிப்பாக குறைந்த செலவில் செம்மையாக பாங்குகளை நடத்துவது, அதிகப்படியான அளவில் வர்த்தகம் புரிவது, சீராகவும் சிறப்பாகவும் அலுவல்களை செய்வது போன்றவைகள் ஆகும். பிணைத்தல் முறையால் சுகதுக்கங்கள் பரிணமித்து மிளிர்வதைக் காணலாம். சிலர் கூறுவது போல, பாங்கு வர்த்தகத்தைப் பிணைப்பதால் ஏகபோக உரிமையாகி ஒரு சிலரின் பிடியில் சிக்கிவிடும். இம்மாதிரி பிணைக்கப்பட்ட நிறுவனங்கள் நியாயமான முறையில் பாங்கு வர்த்தகத்தை நடத்திப் பொது மக்களுக்குத் தக்க முறையில் பணியாற்றுமா என்ற ஐயம் தோன்றுகிறது. தங்களுடைய தொழிலை செம்மையாகவும் இலாபமாகவும் நடத்த சிரமப்படும் பிணைப்பு பெறாத சின்னஞ்சிறு பாங்குகளை பிணைந்துகொள்ளும்படி ரிசர்வு பாங்கு தாக்கீது கொடுக்கிறது. தங்களுடைய அமைப்பை வன்மையாக்கப் பிணைப்பு இன்றியமையாதது எனலாம். வங்காள மாகாணத்தில் நான்கு சிறிய பாங்குகள் தங்கள் வர்த்தகத்தைச் செம்மையாக நடத்த முடியாத நிலையிலிருந்தவை ஒன்றாகப் பிணைந்து யுனைடெட் பாங்க் ஆஃப் இந்தியா (The United Bank of India) வாகப் பரிணமித்தது. லட்சுமி பாங்கும், பாலாய் மத்திய பாங்கும் திடீரென்று சீர்கேடடைந்ததும், ரிசர்வு பாங்கு, இந்தியக் கூட்டுப்பங்கு பாங்கு கம்பெனிகள் (இரண்டாம் சீர்திருத்தச் சட்டம் 1960ஆம் ஆண்டின் 45ஆம் புதிய பிரிவின் கீழ்த் தனி அதிகாரம் கொடுக்கப்பெற்று அதற்கிணங்க மத்திய அரசினர் அனுமதியைப்பெற்று கட்டாய பிணைப்புக்கு உள்ள முறைகளையும், பாங்கு சீர்ப்படுத்தி அமைக்கும் முறையையும் திட்டம் வகுத்து கொடுக்க ஏற்பாடாகியது. அம்மாதிரியான உத்திரவு பெற்றது முதல் ரிசர்வு பாங்கு அதிகமாக முயற்சி செய்து ஏகப்பட்ட வறிய பாங்கு நிறுவனங்களைப் பிணைத்தும் வருகிறது. பிணைத்தலினால் பாங்கு வர்த்தகம் மிகவும் பலத்த போட்டியில் நிரந்தரமாக நடக்கக்கூடும். எப்பேர்ப்பட்ட இடமாயிருப்பினும் சந்தர்ப்பங்கள் குறைவாக இருப்பினும், பெரிய பாங்கு நிறுவனங்கள் தங்கள் கிளைகளை அம்மாதிரியான இடங்களில் திறந்து பிணைக்கப்பட்ட பாங்குகளுடன் போட்டியிட

முன் வருகின்றன. இக்கொள்கையை ஆதரித்து இந்நாட்டின் பெரும் ஐந்து பாங்கு நிறுவனங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தங்கள் கிளைகளைத் திறந்து கொண்டு வருகின்றன. தனிப்பட்ட ஒரு பாங்கினுடைய காப்பு அதன் கையில் மட்டும் இல்லாமல் நாட்டின் பாங்கு நிறுவங்களனைத்தையும் பாதிக்கும் அளவில் ஏற்பட்டது. பிணைக்கப் பெற்ற பாங்குகளில் ஒன்று தனிப்பட்ட முறையில் வன்மையாக அமைந்திருப்பினும் அதன் மற்றொரு பகுதி மிகவும் நொடித்துபோய் முடக்கூடிய நிலையையெய்தியது என்றால் இந்த பாங்கும் தானுகவே கடையடைத்துக் கொள்ளும். உள்ளூர் வர்த்தகத்தை வெகு செம்மையாக நடத்தினாலுங்கூட தலைமையலுவகலகம் மூடின காரணத்தால் கிளைகளும் வன்மையான நிலையை அடைந்திருந்தாலுங்கூடத் தங்கள் கதவுகளை மூடி வர்த்தகத்தை ஏறக்கட்டி விடவேண்டியது. ஒரு தனித்தியங்கும் பாங்கு இன்னொரு பாங்குகளின் கூட்டத்தில் சேருமுன்னர் இப்பிணைத்தலால் பாங்கு இலாபம் பெறுமா அல்லது பாங்கின் முன்னேற்றம் சீர்கேடு அடையுமா என்று ஆலோசிக்க வேண்டும். 1924ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடந்த பாங்குப் பிணைப்பின் காரணமாக நடத்திய விசாரணையின் முடிவாக அந்நாட்டின் பெரிய பாங்குகளும் வேல்ஸ் பகுதியிலுள்ள பெரிய பாங்குகளும் இங்கிலாந்து நாட்டு நிதி இலாகவின் (British Treasury) முன் அனுமதியின்றி பாங்கு பிணைப்புகளைச் செய்வதில்லை என்று உறுதி செய்துகொண்டார்கள்.

இந்துக்களின் கூட்டுக் குடும்ப முறை: இந்நாளில் பெரிய நகரங்களில் கூட்டுப் பங்கு பாஙகுகள் தோன்றியிருந்பினுங்கூட பாங்கு வர்த்தகம் தனியாரின் பாங்குகள் மூலம் நடைபெற்று வருவதைக் காணலாம். இம்மாதிரியான பாங்குகள் கூட்டு வர்த்தக முறையின்கீழ் ஏற்படுத்தப்பட்டவையல்ல. அவைகள் இந்துக் கூட்டுக் குடும்ப முறையின் கீழ் உருவானவை. இம்மாதிரியான பாங்குகள், நாட்டின் பல பகுதிகளில் சிதறி வாழ்ந்துவரும் வைசிய ஜெயின, மார்வாடிக் குடும்பங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. சென்னை மாகாணத்தில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினராலும், பஞ்சாப் மாகாணத்தில் கத்திரி, அரோரா குடும்பத்தினராலும், குசராத், உத்திரப் பிரதேசங்களிலுள்ள முல்தானியராலும் தனியார் பாங்கு நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நவீன அமைப்பில் உள்ள கூட்டுப் பங்கு பாங்குகளைப்போல் இந்தத் தனியார் நடத்தும் பாங்கு வர்த்தகமும் நிறுவனங்களைப் போன்று தொடர்ந்து நடந்து வருகின்றன. சட்டத்தின்கீழ் இந்த

நிறுவனங்களுக்குத் தனியாக இருக்கும் நிலை அமைந்துள்ளபடியால் தனி நபர் குடும்பத்தில் சேர்ந்தாலும் அதைவிட்டு விலகினாலும் பாங்கு வர்த்தகம் மாற்றம் பெறுவதில்லை இது எவ்வாறென்றால் பாங்கிங் கார்ப்பரேஷனில் பணியாற்றுபவர்கள் மாற்றமடைவதால் பாங்கிங் கார்ப்பரேஷன் மூடப்படுவதில்லை. இந்துக் கூட்டுக் குடும்ப அமைப்பை ஏற்று நடத்துபவர் கர்த்தாக்கள் (Karta) எனப்படுபவர்கள், அவர்கள் குடும்பத்திற்கான வர்த்தகத்தைக் கவனித்துக் கொள்ளுவார்கள். குடும்பத்திலுள்ள ஏனையோர் சந்ததிக்கான உறுப்பினராகத் திகழ்கின்றனர். பொதுவாக ஆண் சந்ததியினரே கணக்கிடப்படுவர்.

நன்மைகளும் தீமைகளும் :—கூட்டுக் குடும்ப முறையின் காரணமாகக் குடும்பத்தின் மூலதனம் சிதறிப்போய் விடுகிறதில்லை. இதனால் அந்தக் குடும்பத்தைப்பற்றிப் பொது மக்களுக்கு பெரும் நன்மதிப்பு ஏற்படுகிறது. 1956ஆம் ஆண்டு இந்து வழியுரிமைச் சட்டம் அநேக அடிப்படை மாறுதல்கள் செய்த காரணத்தால் பழைய முறையின்கீழ் இந்துக் கூட்டுக் குடும்ப வர்த்தகம் செய்வது மிகவும் கடினம். எனவே, இந்துக் கூட்டுக் குடும்ப வர்த்தகம் புரியும் தனி நபர் இம்மாதிரியான சட்ட ரீதியான இடையூற்றைத் தவிர்க்க எண்ணி தங்களுடைய வாடிக்கைக்காரர்களுடன் இன்முகமாகப் பழகி தங்கள் வர்த்தகத்தைப் பெருக்குகின்றனர். இம்மாதிரியான செயல் முறைகளைக் கூட்டுப் பங்கு பாங்குகள் செய்ய இயலுமா என்பது சற்று ஐயம்தான்! எவ்வாறிருப்பினும், இங்கிலாந்திலும் ஏனைய இதர மேலை நாடுகளிலும் உள்ள தனியார் பாங்குகள் நவீன காலத்தையொட்டி நடப்பதுபோல இந்நாட்டிலுள்ள தனியார் பாங்குகள் நடந்துகொள்ளுவதில்லை. எடுத்துக் காட்டாக இந்தியாவில் ஒரு சில தனியார் பாங்குகள் இப்போதுதான் தங்கள் வாடிக்கைக்காரர்களுக்குச் செக்குப் புத்தகம் அச்சடித்து வழங்கியுள்ளது. வெகு காலமாக உண்டியல் வர்த்தகத்தை மட்டும் அனுசரித்து அவை நடந்து வருகின்றன. மேலை நாடுகளில் உள்ள இம்மாதிரியான தனியார் பாங்குகள் தங்கள் வாடிக்கைக்காரர்களுக்குச் செக்குப் புத்தகம் அளிப்பதோடல்லாமல் பெரிய பாங்குகள் செய்துவரும் உதவிகளையும் செய்ய முன் வருகிறது. ஆங்கிலத் தனியார் பாங்குகள் தங்கள்மீது நம்பிக்கை ஏற்படவேண்டி, தங்கள் ஐந்தொகையைப் பொதுக் கணக்கர்களைக் கொண்டு பரிசீலனை செய்யுமாறு ஏற்பாடு செய்து அதனை வெளியிடுகின்றன.

இந்தியத் தனியார் பாங்கில் உள்ள கூட்டாளிகளின் எண்ணிக்கை :—இங்கிலாந்தில் உள்ளதேபோல் இந்தியாவிலும் பாங்கு வர்த்தகத்தில் 10க்கு மேற்கொண்ட கூட்டுதாரர்கள் இருக்கக்கூடாது. ஆயினும் கம்பெனிகள் சட்டம் 1956ல் பிரிவு 11ன் உட்பிரிவு 3ன்படி கூட்டுக் குடும்ப முறை இருப்பின் இரண்டல்லது மூன்று குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து கூட்டுத் தாரர்களாகலாம். அந்த மாதிரி வயதடையாதவர்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாம். மேற்படி பிரிவின் 4-வது உட்பிரிவில் அம்மாதிரியான சங்கம், கம்பெனி அல்லது கூட்டு வர்த்தகத்தின் உறுப்பினர் அனைவரும் பொறுப்பாளியாகித் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டிவரும். 5-வது உட்பிரிவின்படி முன் கூறியதற்கு விரோதமாக நடந்தால் அவர்களைத் தண்டித்து விடுவதென்றும் தண்டனையாக அபராதம் ரூ. 1000 ஆயிரம்) விதிக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

ஆங்கிலத் தனியார் பாங்கு சில விபரங்களைக் கொடுக்க வேண்டும் :—இங்கிலாந்திலும் வேல்ஸிலும் பாங்குத் தொழில் புரியும் எந்த நபரும் ஆண்டுதோறும் ஜனவரி மீ 16ஆம் தேதிக்குள்ளாகத் தங்கள் பெயர், விலாசம், செய்யும் தொழில், வட்டாரம் இவைகளைக் குறித்து அறிக்கை தயார் செய்து அதை முத்திரை வரிக் கமிஷனர்களுக்கு அனுப்பவேண்டும். (பிரிவு 21, பீல்ஸ் சட்டம் 1844 Sec 21. Peel's Act 1844).

இந்தியாவிலோ பாங்குக் கம்பெனிகள் சட்டம் தனியார் பாங்குகளைக் கட்டுப்படுத்துவதில்லை. அந்த பாங்குகள் ராச்சியத்திலுள்ள கடன் கொடு போர் சட்டத்தை அனுசரித்து நடக்கின்றன. அதுகூட பாங்குத் தொழிலைக் கட்டுப்படுத்து வதன்று. எனவே மத்தியசர்க்கார் தனியாகக் கடன் கொடுப்போர் சட்டம் கொண்டுவருதல் வேண்டும். எல்லா இராச்சியங்களிலும் அதே முறையை அனுசரிக்கும்போது தனித்தனிச் சட்டங்களுக்கு தேவையே கிடையாது எனலாம். இங்கிலாந்தில் உள்ளதுபோலக் கடன் கொடுப்போர் ரூ. 500/- வீதம் வருமான வரி கட்டுபவராகில் அவர் ரிசர்வ் பாங்கிற்குத் தங்கள் வர்த்தகத்தைப்பற்றிய அறிக்கையைச் சமர்பிக்க வேண்டாமா என்று சர்க்கார் தீர்மானிக்கவேண்டியது.

வெளியீடு :—மேற்படி தகவல்களை முத்திரை வரிக் கமிஷனர்கள் வெளியீடு செய்து அந்த பாங்குகள் உள்ள வட்டாரத்தில் பரப்பிவிடுகிறார். இதனால் அந்த பாங்கைப்பற்றிய எல்லாத் தகவல்களும் நன்கு விளங்கும். செய்தித்தாள்கள், இத்தகவல்களை வெளியிடும். இதன் மூலம், அந்த பாங்குடன்

கொடுக்கல், வாங்கல் வர்த்தகம் புரியும் நபர்களுக்கு அந்த பாங்கினுடைய உண்மையான நிலை தெரிய வந்து அதற்கேற்ப நடந்துகொள்ளலாம். ஆயின் இந்நாட்டிலோ தனியார் பாங்குகள் எவ்விதமான தகவல்களும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. எனினும் தங்கள் நிதி நிலையை விளக்கி அறிக்கை தயார் செய்து அந்த வட்டாரத்திலுள்ள செய்தித் தாள்களில் வெளியிட்டால் மிகவும் சாலச் சிறந்ததெனலாம்.

கூட்டு வர்த்தக எழுத்து ஒப்பந்தம்—அதனால் ஏற்படும் நன்மைகள் :— ஒரு நபருக்குமேல் பலர்கூடி வர்த்தகம் புரியத் தொடங்கினால் அவர்களுக்குள்ளாக ஒரு ஒப்பந்தம் எழுத்து மூலமாகத் தயாரித்துக்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் மிகவும் நெருங்கிய நட்பின் காரணமாகக் கூட்டுதாரர்கள் ஒன்று சேர்ந்து எந்தவித ஒப்பந்தமும் இன்றி வர்த்தகம் புரிகிறார்கள். பொதுவாக ஒப்பந்தமில்லாது போனால் நன்மையின்றித் தீமையே அதிகரிக்கும் எனலாம். எழுத்துமூலம் ஒப்பந்தம் ஏற்படுவதால் உள்ள நன்மைகள் வருமாறு:—முதலாவதாக உண்மையாகவே ஒரு கூட்டுதாரருக்கு கூட்டு வர்த்தகத்தின் விவரங்கள் தெரியாமல் இருந்தால் அந்த ஐயத்தைப் போக்க இது பயனுள்ளதாகிறது. இம்மாதிரி எழுதப் பெற்ற ஒப்பந்தத்தை நன்கு வாசித்து அதைத் தவறின்றிப் புரிந்துகொண்டு அதற்கிணங்க நடக்கலாம். இரண்டாவதாக, ஒரு மாற்றத்தை ஏற்படுத்த எண்ணி அதன் விளைவாக யாரேனும் ஒரு கூட்டுதாரர் இலாபம் சம்பதிக்கலாம் என்ற ஐயம் தோன்றலாம். உண்மையாகவே மாற்றம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் இலாபம் இயல்பாக ஏற்படக்கூடும். ஆனால் முன்னரே முடிவு செய்து மாற்றம் ஏற்படும் முன்னரே அம்மாதிரி எழுதி வைத்தால் இதரப் பங்குதாரர்கள் வெகுவாக ஆலோசித்தே இம்முடிவுக்கு வரக்கூடும். மூன்றாவதாக கூட்டுதாரர்களுக்குள் பிற்காலத்தில் ஏதாவது மனத்தாங்கலின் காரணமாகச் சச்சரவு ஏற்பட்டால் அது அளவுக்கு மீறி நீண்டுவிடாமல் உடனே முடிவு காணும் வகையில் தீர்க்கும். ஏனென்றால் எழுத்துமூலம் ஏற்படாது இருப்பின் ஒவ்வொரு கூட்டுதாரரும் தத்தமக்கு தோன்றிய வாறு விளக்கம் கூற முன்வரலாம். கூட்டு வர்த்தக ஒப்பந்தப் பத்திரத்தை வாணிக நிறுவனப் பதிவாளரிடம் (Registrar of firms) பதிவு செய்துகொள்ளலாம். பதிவு செய்யப்படா நிறுவனங்கள் தங்கள் பேரில் நீதிமன்றத்தில் வழக்குகளைப் பதிவு செய்யவோ வழக்காடவோ முடியாது. இந்திய வருமானவரிச் சட்டத்தின்கீழ் இவர்களுக்குச் சில சலுகைகள் பெற நியாயமுண்டு.

கூட்டு வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கிய உட்பிரிவுகள் :— கூட்டுதாரர்கள் இடும் முதல், எந்த விகிதத்தில் இலாபப் பிரிவினை என்றும், முதலுக்கு வட்டி விகிதம் எவ்வளவு என்றும் யார் யார் கூட்டுதாரராக இருக்கவேண்டியது என்றும் ஐயந்தீர எழுதவேண்டும். இலாப நட்டம், கூட்டுதாரரின்மீது கட்டுப் பாடுகள் ஏதேனும் உண்டென்றும், இன்னருக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், ஓய்வு பெறும் கூட்டுதாரர், மரணமடைந்த கூட்டுதாரர் இவர்களுக்குக் கணக்குத் தீர்க்கும் முறையையும், புதியதாகக் கூட்டுதாரரை எந்த நியமத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் விவரமாகக் கூறப்படும்.

கூட்டு வர்த்தகச் சட்டத்தின் முக்கியமான சில கொள்கைகள் :— பாங்கு நிறுவனத்தின் கூட்டுதாரர்களேயும் அவர்களுடைய வாடிக்கைதாரர்களேயும் சம்பந்தப்படுத்தியுள்ள சில கொள்கைகளே இந்தியக் கூட்டு வியாபார (வர்த்தகச்) சட்டம் 1932லிருந்து கீழே விளக்கியிருக்கிறோம்.

1 கூட்டுதாரர் மேற்படி நிறுவனத்தின் முகவராக அமைகிறார் :— கூட்டு வர்த்தக நிறுவனத்தின் வியாபாரத்தை எடுத்து நடத்துவதால் கூட்டுதாரர் அதன் பதிலாளாகிறார். (இந்தியக் கூட்டு வர்த்தகச் சட்டம் 1932 பிரிவு 18) (IXவது 1932, ஆயினும் அந்த நிறுவனத்தைக் கட்டுப்படுத்திப் பொறுப்பினை ஏற்கச் செய்யவேண்டுமானல், அந்தக் கூட்டுதாரர் அந்த நிறுவனத்தின் பேரிலேயே செயலாற்றி, முறியெழுதி அல்லது எந்த முறையில் ஊகமாகவோ (Implied) வெட்ட வெளிச்சமாகவோ இந்த நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் என்ற முறையில் செயலாற்ற வேண்டும். (பிரிவு 22 இந்தியக் கூட்டு வர்த்தகச் சட்டம் 1932) இந்த 22ஆம் பிரிவானது செலாவணி முறிச்சட்டம் 1881 (Neg tiable Intruments Act 1881)ன் 27ஆம் பிரிவுக்கு உட்பட்டது. மேலும் இயல்பான முறையில் அந்த நிறுவனம் நடத்திவரும் தொழிலேயே நடத்தி வரவேண்டும். (பிரிவு 19 இந்தியக் கூட்டு வர்த்தகச் சட்டம் 1932) ஒரு கூட்டுதாரர் சாதாரணமாகக் கூட்டு வர்த்தக நிறுவனத்தின் தொழிலே இயல்பாகச் செய்து வருகிறார். அவர் தம் சொந்த எண்ணத்தில் ஏதாவது செய்தால் பார்த்த மாத்திரத்தில் அது அந்த நிறுவனத்தையும் கட்டுப்படுத்தும். எடுத்துக் காட்டாக வைத்தியாவும் ஜோஷியாவும் என்ற இரு கூட்டுதாரர்கள் சேர்ந்து "வைத்யாஜோஷி" என்ற நிறுவனத்தை நடத்தி வருகின்றனர். வைத்தியா இயல்பாக ஒரு மாற்றுண்டியலில், நிறுவனத்தின் பெயரிலுள்ளதைப்பின் எழுதி அதை ஜோஷிக்குத்

தெரிவிக்காமல் தேசாய் என்பவருக்குத் தள்ளுபடி செய்து கொடுத்துப் பணம் பெறுகிறார். இந்த மாற்றுண்டியல் ஜோஷியின் கையொப்பமில்லாத காரணத்தால் மறுக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட பண நட்டத்தை இந்த நிறுவனம்தான் ஏற்க நேரிடும். இதன் முடிவாக இந்தப் பண நட்டத்தை ஜோஷி வைத்தியா இருவரும் பகிர்ந்துகொள்ள வேண்டியேற்படுகிறது. இன்னொரு உதாரணம், ஜோஷி, நிறுவனத்திற்காக வந்த பணத்தைத் தன் சொந்தச் செலவிற்கு எடுத்துக்கொள்கிறார். இந்தத் தகவல் வைத்தியாவிற்குத் தெரியாது. பணம் கொடுத்தவர் இந்த நிறுவனத்தின் மீதுதான் வழக்கிடுவார். அப்போது மறுக்கயியலாமலே நிறுவனம் கொடுத்தாகவேண்டிய நிர்ப்பந்தம் தோன்றுகிறது.

வி. பெருமாளுக்கு எதிராக ஏ. முகம்மது என்ற வழக்கில் (ஆ. இ ரி 1958 கேரளா 250) கூட்டு வர்த்தகம் கலைக்கப் பட்டதற்குப் பொது அறிவிப்பு செய்யப்படாவிட்டால் கடன் பளுவைச் சுமப்பதற்கு முன்னால் அந்த கூட்டுதாரர்கள் ஊகமாகக் கட்டுப்பட்டவர்களாகின்றனர். எனவே அவர்களுடைய செய்கைகள் அந்தக் கூட்டு நிறுவனத்தைப் பாதிக்கும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

மேற்கூறிய நியமனத்திற்கு விதிவிலக்கு :— மேலே கூறியதற்கு விதிவிலக்கு உண்டு. கூட்டுதாரர்கள் தங்களுக்குள்ளாக ஒப்பந்தம் செய்துகொண்டு அதற்கேற்பத் தங்கள் அதிகாரங்களையும் சலுகைகளையும் குறுக்கிக்கொள்ளக்கூடும். தமக்கு அதிகாரம் அளிக்கப்பட்டாத ஒரு கூட்டுதாரர் அளவுக்கு மீறி ஏதாவது காரியம் செய்யப்புகின் அது அந்த நிறுவனத்தைப் பாதிக்காது. அவரைத் தனியே பொறுப்பிலாழ்த்தும் (பிரிவு 20 இந்தியக் கூட்டு வர்த்தகச் சட்டம் 1932 (IX-வது 1932) முன்பு கூறிய எடுத்துக் காட்டில் ஜோஷி மட்டும் ஒப்பந்தப்படி பண விவகாரங்களைச் செய்யவும், மாற்று உண்டியலில் ஒப்பிடவும், கையெழுத்துப் போடவும், உண்டியல்களைத் தள்ளுபடி செய்து பணம் பெறவும் அதிகாரம் பெற்றிருப்பின் வைத்தியா மேற் கூறியவாறு ஏதாவது மாற்றுண்டியலின்பின் கையெழுத்திட்டுப் பணம் வாங்கினால் அது நிறுவனத்தைப் பாதிக்காது. வைத்தியா தான் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளி. (கோலன் எதிராக ரைட் என்ற வழக்கில் (Collen Vs. Wright) (1857) 7. ஈ அண்ட் பீ 301, 26 எல். ஜே ஓ. பி. 14) ஒரு கூட்டுதாரருக்கு அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்ட தகவல் மூன்றாவது நபருக்கு தெரியாத பட்சத்தில் அப்போதுகூட அந்த நிறுவனம் பொறுப்பைத்தட்டிக்

கழிக்க முடியாது. அந்த நிறுவனத்தைப் பொறுப்புள்ளதாக ஏற்க வேண்டுமென்றிருப்பின், அந்தக் கூட்டுதாரர் அந்த நிறுவனத்தின் இயல்பான வர்த்தகத்தை எடுத்துச் செய்ய வேண்டும். அந் நிறுவனத்திற்குத் தொடர்பு இல்லாத வர்த்தகத்தைச் செய்யின் அதை இயல்பான தொழிலாகக் கருத இயலாது. அதேபோல் பாங்குத் தொழில் புரியும் நிறுவனம் சம்பந்தப்படாத ஒரு பொறுப்பை அந்தக் கூட்டுதாரரே ஏற்க வேண்டும். பாங்கு நிறுவனத்திற்கு அது பொறுப்பன்று. முன்பு கூறியவாறு வைத்தியா பருத்தி விலையேற்றத்தை எண்ணி 500 பேல்கள் பருத்தியை வாங்கினர் என்று கொள்வோம். பின்னர் எதிர்பாராதவிதமாக விலைசரிந்தால் அந்த நட்டம் பாங்கு நிறுவனத்தைச் சேர்ந்ததன்று. ஏனெனில் ஊகவாணிபம் (Speculation) பாங்குத் தொழிலுக்கு புறம்பானது.

2. **வெளியேறும் உள்ளே வரும் கூட்டுதாரர்களின் பொறுப்புகள் :—** ஒவ்வொரு கூட்டுதாரரும் அவர் கூட்டாளியாக இருக்கும் காலத்தில் ஏற்பட்ட கடன்களுக்கு அவரும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். இது இயல்பான முறையில் வர்த்தகத்தில் நிகழ்ந்த கடன், நட்டம் இவைகளைக் குறிப்பதே ஆகும். ஆயினும் ஓர் கூட்டு வர்த்தக நிறுவனத்தில் புதியதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட கூட்டுதாரர் அவர் கூட்டு சேரு முன்புள்ள அந்நிறுவனத்தின் பொறுப்புகளுக்குப் பாத்திரமாகார். (பிரிவு 31 இந்தியக் கூட்டு வர்த்தகச் சட்டம் 1932) அல்லது முன்னதாகவே நடந்த ஒப்பந்தங்களுக்கான பொறுப்புகளை யேற்றுக்கொள்கிறார். ஒரு கூட்டுதாரர் ஓய்வு பெற்றாலோ அல்லது இறந்தாலோ அவருடைய சொந்தச் சொத்துகள் கூட்டுதாரராக இருந்த காலத்தில் கூட்டு வர்த்தக நிறுவனத்தின் பொறுப்புகளுக்கும் கடன்களுக்கும ஈடாகப் பயன்படுத்தப்படும். அல்லது கடன் கொடுத்தவரோ, வைப்பு தாரர்களோ எழுத்து மூலம் அவரது சொத்துகளுக்கு விடுதலை யளித்தாலன்றி அல்லது புதிய கூட்டு நிறுவனத்தில் அவர்கள் சேர்ந்து கொண்டாலன்றி அவருக்குப் பொறுப்பு நீங்காது (பிரிவு 32)

ஒரு எடுத்துக் காட்டு :— முகர்ஜீ அண் கோ என்ற ஒரு பாங்கு நிறுவனத்தில் திரு ஜே ஸீ. போஸ் என்ற ஒரு நபர் ரு 500ஐ ஓர் ஆண்டுத் தவணையில் வைப்புக் கணக்கில் போட்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். மேற்படி பாங்கு நிறுவனத்தின் கூட்டுதாரர் திரு பி. முகர்ஜீ வைப்புக் கிடைத்த ஆறு மாதங்களில் இறந்தார் திரு. ஜே. ஸீ போஸ் தவணை வைப்புக் கணக்கைப் புதுப்பிக்கிறார்; அல்லது அதை நட்ப்பு

வைப்புக் கணக்கிற்கு மாற்றிக்கொள்கிறார். பாங்கு நிறுவனம் நிலைமையைச் சமாளிக்க இயலாது முறிந்தால் அப்போது பி. முகர்ஜியின் சொத்துகளிலிருந்து ஜே. ஸி போஸாக்கு யாதொரு தொகையும் கொடுக்க வேண்டிய பொறுப்பு இல்லை. ஏனெனில், திரு. போஸ் அவர்களுக்கு முகர்ஜீயின் மரணம் தெரிந்திருந்தும்கூட அவர் வைப்புகளை புதுப்பித்தார் அல்லது மாற்றினார். புதிய ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டபோதோ அல்லது மாற்றப்பட்டபோதோ தோன்றுதலால் பி முகர்ஜீ பட்ட கடன் பொறுப்புப் பழைய ஒப்பந்தத்துடன் நீங்கியது. முகர்ஜியின் சொத்துக்கும் புதிய ஒப்பந்தத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. இம்மாதிரி நிலைமையில் பழைய ஒப்பந்தம் இருந்த இடத்தில் புதிய ஒப்பந்தம் நுழைகிறது. கூட்டு நிறுவனம் பட்ட கடன்களுக்கும் பொறுப்புகளுக்கும் கூட்டுதாரர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்று முன் கூறிய கொள்கைக்கான எடுத்துக் காட்டுக் கொடுக்கப்பட்டது. கூட்டு நிறுவனத்தின் பொது வர்த்தகத்தின்போது கவனப்பிசகாகவும் ஏமாற்றும் நோக்கத்துடனும் உள்ள கூட்டுதாரர் செய்யவேண்டிய நட்டஈடும் கடமைகளும் எவை என்று அடுத்துவரும் பகுதிகளில் கூறப்பட்டுள்ளன.

3. கூட்டுதாரரின் ஏமாற்ற முறைகளாலும் கவனிப்புக் குறைவாக நடப்பதாலும் ஏற்படும் பொறுப்புகள் :— இந்தியக் கூட்டு வர்த்தகச் சட்டம் 1932-ன் 26-வது பிரிவின் சுருக்கம் வருமாறு—சாதாரணமாக வர்த்தகமுறையில் ஈடுபட்ட ஒரு கூட்டுதாரர் தவறான முறையில் வர்த்தகம் புரிந்தாலும் அல்லது விடுதலாலும் மூன்றாமவர்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகளுக்கும் நட்டங்களுக்கும் அக்கூட்டு நிறுவனம் எல்லாக் கூட்டுதாரர்கள் உட்படப் பொறுப்பேற்க வேண்டியது ஆகும். இம்மாதிரிப் பொறுப்பில் ஆழ்த்த முக்கிய நிபந்தனைகளாவன: பொதுவாக வர்த்தகத்தின்போது ஈடுபட்ட காலத்தில் குற்றம் கூறப்படும் விடுதலோ தவறுதலோ நடந்திருக்க வேண்டும் மேலும் எல்லாக் கூட்டுதாரர்களின் உத்திரவு பெற்ற நிலையில் இக்குற்றம் நடந்திருக்கவேண்டும். எடுத்துக் காட்டாக ஒரு பாங்கு நிறுவனத்தின் கூட்டுதாரர் சில ஆவணங்களில் முதலீடு செய்யுமாறு தம் வாடிக்கைக்காரர்களை ஊக்குவிக்கிறார். அதற்குச் செவி மடுத்தவர் பின்பு பெரும் நட்டம் அடைகிறார் இந்த நட்டம் கூட்டு நிறுவனத்தைப் பாதிக்காது. ஏனெனில் அவைகளில் முதலீடு செய்யுமாறு தமது வாடிக்கைக்காரர்களைத் தூண்டுவது பாங்குத் தொழிலின் ஒரு பிரிவு அன்று (பான்பரி எதி. பாங்க் ஆஃப் மாண்ட்ரில். 1918 ஏ. சி. 626) (Banberry Vs

Bank of Montreal 1918 A C. 626) பிஷப் எது. கௌண்டஸ் ஆஃப் ஜெர்ஸி (1854) 2. ட்ரா 143 பக் 162. 23 லா. ஜ. அதி 483ல் (Bishop Vs. Countess of Jersy 1854 2 Drew 143. Page 162. 23 L. J. Ch. 483) இந்த நிலை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. "தங்கள் வாடிக்கைக்காரரின் பணத்தை முதலீடு செய்யப் பொது எழுத்தராகவோ பதிவாளராகவோ நடப்பது மிகவும் வேடிக்கையாக உள்ளது. ஆயினும் ஒரு வாடிக்கைக்காரன் தனது பாங்கிற்குக் கடிதமெழுதிக் கூட்டுப் பங்குகள் வாங்க அதிகாரம் கொடுத்து இன்ன இன்ன வகையாகக் கூட்டுப் பங்குகளை வாங்க வேண்டும் அல்லது விற்க வேண்டும் என்று நிபந்தனைகளைக் குறித்து அனுப்பினால் பாங்கு நடத்துபவர் அவ்விதமே நடப்பார். இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் பாங்கு நடத்துபவர் தனிப்பட்ட செக்குகளை எதிர்பார்ப்பது இல்லை. கடிதத்தின் அடிப்படையில் அவருடைய கணக்கில் பற்று எழுதுவார்கள். பாங்கு நடத்துபவர்கள் முதலீட்டில் பணம் போடுமாறு தூண்டுவது அவர்களுடைய தொழிலின் தகுதியன்று". ஆயினும் ஒரு வாடிக்கைக்காரர் தமது பாங்கு நடத்துவோருக்குக் கடிதம் எழுதிப் பணத்தைக் குறிப்பிட்ட ஒரு முதலீட்டில் போடச் சொல்லி அதைக் கவனிக்காமல் வேறு ஒரு முதலீட்டில் பணம் இட்டால் அதனால் ஏற்படக்கூடிய நட்டத்தை பாங்குக் கூட்டு நிறுவனம் ஏற்க வேண்டியது.

பாங்குக் கம்பெனிகள் அல்லது கார்ப்பரேஷன்கள் :— பாங்குக் கம்பெனித் தொழிலைக் கூட்டுப்பங்கு பாங்குகள் அல்லது கார்ப்பரேஷன்கள் நடப்பில் செய்து வருகின்றன.

அரசினர் பட்டயத்தின் அடிப்படையிலும் தனிப்பட்ட சட்டங்களின் அடிப்படையிலும் பாங்குகள் தோற்றுவித்தல்:— இந்திய நாடாளும்மன்றம் அவ்வப்போது ஏற்படுத்தும் தனிப்பட்ட சட்ட அடிப்படையில் கார்ப்பரேஷன்கள் தோன்றலாம். அல்லது அவைகள் கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ்ப் பதிவு செய்யப் பெற்று பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949-ன் பிரிவின்படி நடக்கலாம். அரசுரிமை பெற்ற நாட்டில் தனிப்பட்ட பட்டயங்கள் வழங்கப்பெற்று அதில் இன்ன இன்ன இடங்களில் போட்டியின்றித் தொழில் செய்யவும், உரிமை, தனிப்பட்ட சலுகைகள் இவற்றின் எல்லையைக் குறிப்பிட்டும் அவை நடத்தலாம் என்று விளக்கப்படுகிறது. கிழக்கிந்தியக் கம்பெனி இவ்வாறான ஒரு நிறுவனம். தனிப்பட்ட உரிமையை விளக்கும் இலாஞ்சினை பொறித்த திருமுகத்தில் (Letters Patent) அரசினரால் ஆணை பிறப்பிக்கப்பட்டு தனிப்பட்ட சலுகையை அளிக்கும் வண்ணம்

"எல்லோரும் அறியும் வண்ணம் இதைக் கொடுக்கிறோம்" என்ற வாசகங்களைக் காணலாம். சட்ட மன்றங்களாலும் புதிய நிறுவனங்கள் தோற்றுவிக்கப்படலாம். அவை கம்பெனிகள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட வேண்டிய நியமம் இல்லை. எடுத்துக்காட்டாக பாங்க் ஆஃப் இங்கிலாந்து—இதை ஆங்கில நாட்டு நாடாளும்மன்றம் தோற்றுவித்தது. இது தேசியமயமாக்கப் பட்டவுடன் பாங்குதாரர் நடத்திவரும் பாங்கு நிறுவனம் இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா (இப்போது ஸ்டேட் பாங்க் அல்லது இராச்சிய பாங்கு) இது இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் 1910-ன் கீழ் உருவாகியது. அதே போன்று ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் 1934 (R. ஆஃப் 1934) என்பது.

இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப் பெற்ற பாங்கு நிறுவனங்கள்:—முன் கூறியவாறு தனியார் பாங்கு நிறுவனங்கள் பிற்போக்கடைந்து வருகின்றன. கூட்டுப் பாங்குகள் முன்னேறி வருகின்றன. இவை பொது மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன. தேதி வாரியாக கம்பெனிகள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பெற்ற பாங்கு நிறுவனங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. அலகாபாத் பாங்கு லிமிடெட்
2. பஞ்சாப் நேஷனல் பாங்கு லிமிடெட்
3. பாங்க் ஆஃப இந்தியா லிமிடெட்
4. பாங்க் ஆஃப் பரோடா லிமிடெட்
5. சென்டிரல் பாங்க் ஆஃப் இந்தியா லிமிடெட்
6. யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்
7. யுனைடெட் பாங்க் ஆஃப் இந்தியா லிமிடெட்

இரண்டாம் அதிகாரத்தில் பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் பிரிவுகளைப்பற்றிய விரிவான விளக்கங்கள் செய்துள்ளோம். இந்தக் கம்பெனிகள் சட்டம் 1956-ன் தேவையான பிரிவுகளை மட்டும் விவரிப்போம். அவை பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் பிரிவுகளுடன் பொருந்தக்கூடியவை.

விளம்பரம் தேவைப்படுகிறது: கம்பெனிகள் சட்டத்தின் 223ஆவது பிரிவின் 1, 2 உட்பிரிவுகளில் கூறப்பெற்ற விபரத்தை பொட்டி கம்பெனிகள் சட்டம் 1956 ன் அனுபந்தம் 1-ன்

அட்டவணை எஃபில் உள்ளவாறு தயார் செய்து ஃபிப்ரவரி மாத முதல் திங்களன்றும் ஆகஸ்ட் மாத முதல் திங்களன்றும் அலுவலகத்தின் தலைமைக்கிளையில் பலரும் காணத் தகுந்தவிடத்தில் மாட்டிவைக்கப்படல் வேண்டும். இதையடுத்து பாங்குச் கம்பெனிகள் தங்களுடைய வாடிக்கைக்காரர்கள் தெரிந்துகொள்வதற்குக் கணக்கு நிலையையும் விளம்பரப்படுத்த வேண்டும். முதலாவதாக இம்மாதிரிச் செய்வதால் பாங்குக் கம்பெனி தமது வாடிக்கைக்காரரிடம் வைப்புகளைப் பெறுகிறது. அவர்களுடைய மனதில் நம்பிக்கையை உண்டு பண்ண இது தனது கணக்குகளை அவ்வப்போது வெளிப்படுத்தித் தனது நிதி நிலையைத் தெரிவிக்கிறது. வேறுவகைக் கம்பெனிகள் அவ்வளவு சிரமப்படவேண்டியதில்லை. இன்றும் பல்வேறு அயல் நாடுகளில் ஆண்டிற்கு இருமுறை கணக்கு நிலையை விளம்பரபடுத்திய பாங்கு நிறுவனங்கள் மாதமொருமுறை வெளியிடுகின்றன. இம்மாதிரி கணக்கு நிலையை விளம்பரப்படுத்துவதால் பயன் உண்டென்று கண்டுகொண்ட தனியார் பாங்குகள் சட்டப்படி தங்கள் கணக்குகளை விவரப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் இல்லாவிடினும்கூட கூட்டுப் பங்கு பாங்குகளைப் போன்று தாமும் கணக்குகளை வெளியீடு செய்கின்றன. இரண்டாவதாக நாட்டின் மூலையில் ஒரு பாங்கு முறிந்தது என்ற ஆதாரமற்ற இரகசியச் செய்தியைக் கேட்டவுடன் பொது மக்களுக்கு எல்லா பாங்கு நிறுவனங்கள் மீதும் நம்பிக்கைக் குன்றி நல்ல நிலையில் உள்ள பாங்குகளின்மீதும் வாடிக்கைக்காரர் படையெடுத்து உடனே பணம் தரவேண்டும் என வற்புறுத்துவர். இந்த நிலையைப் போக்கத்தக்க விளம்பரம் தேவை எனலாம். மூன்றாவதாக பாங்கு நிறுவனங்களுக்கும் தொழில் வர்த்தக நிறுவனங்களுக்கும் உள்ள உறவை நாம் கண்டிருக்கிறோம். எனவே பாங்கு நிறுவனம் முறிந்தால் அதன் விளைவாகத் தொழில் வர்த்தக நிறுவனங்கள் சீர்குலையும் என்று கூறவும் வேண்டுமோ?

பலரும் காணுமிடத்தில் கணக்கு நகல்கள் வைக்கப்படல் வேண்டும்:— பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் 31வது பிரிவு, 33வது பிரிவுகளில் கூறியவாறு பாங்குகள் நடக்க வேண்டும். அவற்றோடு கூட 223வது பிரிவின் 2வது உட்பிரிவிற்யேற்பக் கம்பெனிச் சட்டம் 1955ல் கூறியவாறு அட்டவணை ஒன்று எழுதிக் கடைசியில் ஆய்வு செய்யப்பட்ட ஐந்தொகை, கம்பெனி உறுப்பினர்கள் முன் வைக்கப்பட்ட நகல் ஆகியவை கம்பெனிப் பதிவாளர்க்கு அனுப்பப்படல் வேண்டும். கம்பெனியின் பதிவு செய்யப்பெற்ற அலுவலகம் உள்ள ராச்சியக் கூட்டுப் பங்கு கம்பெனிப் பதிவாளருக்கு அனுப்பப்படல் வேண்டும். இதன்

மூன்று நகல்களை ரிசர்வ் பாங்கிற்கும் அனுப்ப வேண்டும். இந்த நகல்களே தலைமைக் காரியாலயம், கிளை அலுவலகம் இவற்றிலும் பலரும் காணத்தக்க இடத்தில் வைக்கப்பட்டோ அல்லது ஒட்டப் பட்டோ இருக்கவேண்டும். இம்முறைகளால் இந்த பாங்குகள் தொடர்பு கொண்டுள்ளவர்களுக்குப் பாங்கியினுடைய செல்வ நிலையை நன்கு தெரிந்துகொள்ள இயலும். அதே பிரிவில் கூறியுள்ளது போலக் கடன் கொடுத்த ஒவ்வொரு நபரும் 50 பைசேக்கு அதிகப்படாத கட்டணத்தைச் செலுத்தி இந்த நகல்களைக் கட்டணம் செலுத்திய ஏழுநாட்களுக்குள் பெறலாம்.

அட்டவணைகள் பிழை திருத்தங்களின்றி உள்ளதென்பதற்கு உத்திரவாதம்:-பாங்குக் கம்பெனி கணக்கு வைத்திருத்தல். ஐந்தொகை தயாரித்தல், இலாப நட்டக் கணக்கு உருவாக்குதல் இவற்றை பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949ல் கொடுக்கப்பெற்ற கட்டளைகளை அனுசரித்து நடப்பதோடல்லாமல் கம்பெனிகள் சட்டம் 1956ன் 215ஆவது பிரிவின்படியும் பாங்குக் கம்பெனிகள் 29வது பிரிவின் முறையை ஒட்டியும் கணக்குகளை வைத்துக் கொள்ளல் வேண்டும். பாங்குக் கம்பெனிகள் சட்டத்தில் கூறப் பட்டவை கட்டளைகளே! கம்பெனிகள் சட்டம், 1956ல் கொடுக்கப் பட்ட சலுகைகள் யாவும் கம்பெனிகளுக்குப் பயனுகா. எடுத்துக் காட்டாக ஐந்தொகையில் நிருவாகி, நிருவாகப் பதிவாளர் என்று கையெழுத்துப் போடுவதை ஏற்பதில்லை. இயக்குநர்கள் ஐந்தொகையில் கையொப்பம் இடுவதை அநுமதிப்பதில்லை, இங்கு "தலைமை அதிகாரி" என்றே கருதப்படல் வேண்டும்.

வெளி நாடுகளில் உள்ள கிளை அலுவலகங்கள்:-அயல்நாடுகளிலுள்ள இந்தியப் பாங்குக் கிளைகள் தங்கள் ஆஸ்திப் பொறுப்பு விபரங்களை மாதாந்தர அறிக்கையாக ரிசர்வுபாங்கிற்கு எழுதி அனுப்ப வேண்டும்.

வராத ஐயப்பாடுள்ள கடன்கள்:—வராத கடன்களை நட்டமென்று எழுதி அவற்றை பற்றிய விபரத்தை ஐந்தொகைகளில் காட்டாமல் இருந்து வருவது பாங்குகளில் தொடர்ந்து வரும் பழக்கம். அவைகள் அவ்வாறு நட்டமென்று எழுதப்படாவிடின் தனிப்பட்ட வகையில் இலாபத்திலிருந்து ஒதுக்கம்செய்து அல்லது ரிசர்வு நிதியிலிருந்து ஒதுக்கம் செய்துவராத ஐயப் பாடுள்ள கடனைக் கணக்கிடுவர். 1927ல் பம்பாய் உயர்நீதி மன்றம் இம்முறையைச் சட்டபடி செல்லாது எனகூறி முடிவு செய்தது. (டி.டி. ஷாம் தஸானி எதிராக போச் சாணுவாலா 29 பாம்பேலா. ரி. 722 D. D. Shamdasani Vs

Pochkhnawalla 29 Bomb L. R. 722) வராத கடன்கள் கணக்கிலிருந்து தீர்க்கும் காலம்வரை ஐந்தொகையில் இதற்கான ஒதுக்கு நிதியை ஒரு பக்கத்தில் காட்டப்படல் வேண்டும். உயர் நீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பையொட்டி கம்பெனிகள் சட்டம் 1913ன் 132 (2) பிரிவின் கீழ்க் கொடுக்கப் பெற்ற அட்டவணை எஃப்பின் கீழ் அரசினர் வெளியீட்டின் மூலம் தேவைக் கேற்ப மாற்றம் செய்யப்பட்டது. மூலதனமும் பொறுப்புகளும் என்ற பத்தியின் கீழ் வராத ஐயப்பாடுள்ள கடன்களுக்கான ஒதுக்கு நிதி என்ற உட்பிரிவும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆஸ்திகளும் சொத்துகளும் என்ற தலைப்பின்கீழ் வரும் பத்தியல் கடன் பட்டவர்கள் என்ற உட்பிரிவு ஒன்றைப் புகுத்தியுள்ளது.— (ஆய்வாளர்கள் சரி என்று ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒதுக்கி வைத்த வராத ஐயப்பாடுள்ள கடன்கள் அல்ல) மேலே கூறிய அனைத்தும் பயன்படுவதில்லை. ஏனெனில் சரியான ஐந்தொகை நமூனு (நமூனு எஃப் மூன்ருவது அனுபந்தத்தில் Form "F") 29வது பிரிவின் கீழ் பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949ல் கொடுக்கப்பெற்று எவ்வகையில் ஐந்தொகைகள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவற்றில் ஐயப்பாடுள்ள கடன்கள் என்ற தலைப்பில் இவற்றிற்கு ஒதுக்குநிதி இல்லை எனக் காட்டப்படல் வேண்டும்.

புதிய பாங்குகள் திறப்பதற்கான தகவல்கள்

புதிய பாங்குகளைத் தொடங்குவதற்கான முயற்சியில் தோன்றும் பல பிரச்சினைகளை இப்போது கருதத் தொடங்குவோம்.

பெயர்:—பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் 7வது பிரிவின் கீழ் பாங்குத் தொழிலை நடத்துபவர் தமது பெயருடன் இணைத்த "பாங்கு" "பாங்கு நடத்துபவர்" பாங்குத் தொழில்" என்ற தொடர்களைக் கொள்ள வேண்டும். கம்பெனிகள் சட்டம் 1956ல் கண்டுள்ள கட்டுப்பாடுகள் இங்கு செல்லுபடியாகும் புதியதாகத் திறக்கப்படும் கம்பெனி நடப்பில் உள்ள வேறு கம்பெனியின் பெயரைப் பெற்றிருத்தல் கூடாது. நடப்பில் உள்ள கம்பெனி மூடப்பட்டுவிடின் இம்மாதிரிப் பெயரை மேற்கொள்ளலாம் அல்லது பதிவாளரின் அனுமதியுடன் அப்பெயரைக் கொள்ளலாம். கீழ்க்கண்ட வார்த்தைகள் கொண்ட பெயருடன் கம்பெனிகளைத் திறக்கப் பதிவாளரின் முன் அனுமதி தேவை. மகுடம் (க்ரௌன்) சக்கரவர்த்தி (எம்பரர்) சக்கரவர்த்தினி (எமபரஸ்) பன்னாட்டு ஆட்சி (எம்பையர்) இம்பீரியல் அரசன்

(கிங்) அரசி (க்வீன்) ராயல் ஃபெடரல், ஸ்டேட், 'ரிசர்வ் பாங்கு' ப்ராங்க் ஆஃப் பெங்கால், பாங்க் ஆஃப் மெட்ராஸ், பாங்க் ஆஃப் பாம்பே, இங்கிலாந்து நாட்டரசன், நாட்டரசி ஆதரவு கொடுக்கும் பெயர்களையோ அரச குடும்பத்தினர் ஆதரவு கொடுக்கும் பெயர்களையோ இந்திய அரசினரோ அல்லது அவர்களுடைய தனிப்பட்ட கிளை அலுவலகமோ கொடுக்கும் ஆதரவு உள்ள பெயர்களை எழுதிப் பதிவு செய்யு முன்னர் அவர்களுடைய சம்மதம் பெற்றுப் பின்னர்த் தாம் பதிவு செய்து கொள்ளவேண்டும். இப்போது நம்நாடு மக்களாட்சியைப் பெற்றதால் (ரிபப்ளிக்) Republic என்ற சொல்லைப் பெயருடன் இணைக்கக்கூடாது என்று பதிவாளர் மனுவைத் தள்ளிவிடலாம். "பட்டயம் பெற்ற" (Chartered) "முனிசிபல்" (வட்டார ஆட்சி) என்ற பொருள் தரக்கூடிய சொற்களையும் பயன்படுத்தக் கூடாதென்றும் அரசரின் பட்டயம் பெற்ற நிறுவனத்தின் பெயரைக்கொள்ளக்கூடாதென்றும் கண்டிக்கலாம் 1936-ஆம் ஆண்டிற்கு முன்னர்ப் பதிவு செய்யப்பெற்ற பாங்குக் கம்பெனி களுடைய பெயரில் "ஃபெடரல்" "ஸ்டேட்" "ரிசர்வ் பாங்கு", "பாங்கு ஆஃப் பெங்கால்", 'பாங்கு ஆஃப் மெட்ராஸ்', "பாங்க் ஆஃப் பாம்பே", என்ற சொற்களைப் பெயருடன் கொள்ளுவதில் எந்தவித எதிர்ப்பும் கூறப்படவில்லை.

ஏதேனும் ஒரு பாங்குக் கம்பெனி பாங்கு வர்த்தகத்தை நிறுத்திக்கொண்டு வேறு வர்த்தகம் புரிய எண்ணினால் முதலில் அது பாங்குத் தொழிலை விலக்கிக் கம்பெனியின் பட்டயமாகிய மெமோரண்டம் ஆஃப் அஸோஸியேஷனில நீக்கி பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் 5 (1) "ஆவில்" இலக்கணம் கூறப்பட்டது போன்று பாங்குத் தொழிலை நிறுத்துவதாலும் பெயரை மாற்றிக் கொள்வதாலும் யாதொரு எதிர்ப்பும் இல்லை என்ற சான்றிதழைப் பெற்றுக் கம்பெனிகள் சட்டம் 1956-ன் 21-வது பிரிவின்கீழ் மத்திய அரசினருக்கு மனுச்செய்து கொள்ளல் வேண்டும்.

நடப்பில் உள்ள கம்பெனிக்கு இடைஞ்சல் இல்லை :— முதல் கட்டுப்பாட்டைப் பொறுத்தமட்டிலும் பெயர் மாத்திரம் ஒரே மாதிரி அமைவதால் தடங்கல் ஒன்றும் கூறுவதில்லை. பதிவு செய்யத் தடங்கல் கூறுவதின் காரணம் என்னவெனில் இந்தப் பெயர் முன்னோடியாக உள்ள இன்னொரு பாங்குத் தொழிலுக்கு இடைஞ்சலாக உள்ள காரணத்தினால் தான் மறுப்புத் தெரிவிக்கப்படும். ஒரு பாங்கியினுடைய பெயர் இன்னொரு பாங்கியல்லாத கம்பெனியினுடைய பெயருடன் ஒத்திருப்பின்

அதற்கு மறுப்புத் தெரிவிக்கக்கூடாது. பெயர் ஒற்றுமை காரணத்தால் அப்பாதிரி மறுத்துக்கூறல் தவறு.

கருத்தை விளக்கும் பெயர் :— சட்டப்படி உள்ள கட்டுப் பாடுகளை மட்டும் கருதியது, ஒரு பக்கம் இருந்த பாங்கியினுடைய பெயரை எளியதாகவும் ஞாபகத்தில் இருத்திக்கொள்ள வழியாகவும் இருக்கவேண்டும். அந்தப் பாங்கு அதிகப்படியாக ஈடுபட்டுள்ள தொழிலை மட்டும் பெயருடன் சேர்த்திருப்பின் நலமெனலாம். ஒரு பாங்குத் தொழில்களுக்கு நிதி வழியளிக்கு மானால் அதன் பெயரையடுத்து "தொழில்" என்ற சொல்லைச் சேர்ப்பது விரும்பத்தக்கது.

மூலதனம் :—முன்னரே பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949-ன் 11-ஆவது பிரிவின்கீழ் எவ்வளவு குறைந்த மூலதனம் இருக்கவேண்டும் என்றும் மூலதனத்திற்கும் ரிசர்வ் நிதிக்கும் உள்ள விகிதத்தையும் அதிகாரம் பெற்ற மூலதனத்திற்கும் அளிக்கப்பட்ட மூலதனத்திற்கும் செலுத்தப்பட்ட மூலதனத் திற்கும் உள்ள விகிதம் எவ்வளவு இருக்கவேண்டும் என்று 12-ஆவது பிரிவில் கூறியவாறு அமைத்துக்கொள்ள வேண்டும். புதியதாகத் திறக்க விரும்பும் பாங்குக் கம்பெனி விடப்பட்ட மூலதனம் 25 லட்சத்திற்கு மேற்கொள்ள விரும்பினால் மூலதன வெளியீட்டுக் கட்டுப்பாட்டுச் சட்டம் 1947 ன் கீழ் மனுசெய்து அனுமதி பெற வேண்டும்.

அதிகாரம் பெற்ற மூலதனத்திற்கும் அளிக்கப்பட்ட மூலதனத்திற்கும் உள்ள குறைந்த விகிதம் கொடுக்கப்பட்ட மூலதனத்திற்கும் அளிக்கப்பட்ட மூலதனத்திற்கும் உள்ள குறைந்த விகிதம் :—பாங்குகளைத் துவக்குங்காலத்தில் சில விரும்பத்தகாத முறைகளைக் கையாளுகின்றனர். அதிகாரம் பெற்ற மூலதனத்தைப் பெருந்தொகையாகக் காண்பித்து முடிவில் பணிக்கப்பட்ட மூலதனம் மிகவும் சிறுத்துப் போய்விடும். ஒவ்வொரு பாங்கும் தனது மூலதனம் வெகு அதிகம் எனப்பறை சாற்றுதிருக்க இந்தியக் கம்பெனிகள் (திருத்த) சட்டம் 1944ன் படி 1937 ஜனவரி மீ 15ம் தேதிக்குப் பின்னர் தோன்றிய பாங்குக் கம்பெனிகள், இச்சட்டம் உருவான இரண்டாண்டுகளுக்குள்ளாக அளிக்கப்பட்ட மூலதனம் அதிகாரம் பெற்ற மூலதனத்தில் பாதியாகவும் கொடுக்கப்பட்ட மூலதனம் அளிக்கப்பட்ட மூலதனத்தில் பாதியாகவும் இருக்க வேண்டும் என்று வரை யறுக்கின்றது. இந்த பிரிவின் பொருள், பாங்குக்கம்பெனிகள் சட்டத்தின் 12 வது பிரிவில் இணைக்கப்பட்டுள்ளது.

பாங்கு மூலதனமும் மக்கள் தொகையும்:—அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தேசிய பாங்குகள் சட்டத்தின்கீழ்(National Banks Act) ஏதேனும் ஒரு பாங்கு பதிவு செய்து கொள்ளவேண்டுமானல் அதற்கான மூலதனம் இன்னதென்று வரையறை செய்யப் பட்டுள்ளது. 3000 பேர்கள் உள்ள ஊரில் $ 25,000, 3,000 பேர் களுக்கு மேல் ஆயினும் 6000 பேர்களுக்குக் குறைவான ஊரில் $ 50 000, 6000 முதல் 50,000, வரை மக்கள் வசித்து வரும் ஊரில் $100,000. 50,000 பேர்களுக்கு மேற்படின் $ 2000,000. ஒருமில்லியன் யென் மூலதன மின்றி பாங்கு தொடங்க ஜப்பானில் அனுமதி கிடைக்காது. ஆயினும் 10,000 நபர்களுக்கு குறைந்த மக்கள் தொகையுள்ள ஊர்களில் 500,000 யென் மூலதனம் கொண்ட பாங்குகளைத் திறக்கச் சம்மதம் கொடுக்கப்படுகிறது. பெரிய நகரங்களில் திறக்கப் படவேண்டிய பாங்கிற்கு மூலதனம் எவ்வளவு இருக்க வேண்டும் என்பதை நிதி உறுப்பினர் முடிவு செய்வார். எந்தக் காரணத்தை முன்னிட்டும் அது 2 மில்லியன் யென்னிற்கு குறையாமல் இருக்கும். கானடா நாட்டில் குறைந்த மூலதனம் $ 5000,000 அதிற் (பாதி கொடுக்கப்பட்ட மூலதனமாக வர்த்தகம் ஆரம்பிப்பதற்கு முன்னரே வந்திருக்க வேண்டும். இந்தியாவில் பாங்குகளின் கொடுக்கப்பட்ட மூலதனம், பாங்கு எந்த எந்தப் பகுதிகளில் தொழில் செய்கிறதோ அதை அனுசரித்து (ஓரே ஒரு ராச்சியத்தில் மட்டும் தொழில் செய்வது அல்லது பல ராச்சியங்களில் தொழில் செய்வது.) தொழில் நடத்தும் இடங்களைப் பொறுத்தும் (பம்பாய் (அ) கல்கத்தா நகரங் களில்) குறைந்த மூலதனம் ரூ. 50,000||=

மூலதனத்திற்கும் ரிசர்வு நிதிக்கும் வைப்புகளுக்கும் ஏதேனும் ஒற்றுமை இருப்பது வரவேற்கத் தக்கது:— வைப்புகள் அதிகரிக்க அதிகரிக்க மூலதனமும் ரிசர்வு நிதியும் அதற்கு தகுந்தாற்போல அதிகரிக்க வேண்டும் என்பதில்லை. ஆயினும் குறைந்த சதவிகிதம் இவ்வளவென்று மூலதனம், வைப்பு, ரிசர்வு நிதி இவைகளிடையே இருக்க வேண்டும். சட்டப் படி வற்புறுத்தப்பட வேண்டும். ஆங்கில நாட்டு பாங்குகள் இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்து வருவதுடன் தங்கள் பாங்குகளின் மூலதனத்தை அவ்வப்போது அதிகரித்து வருகின்றன. இதனால் வைப்புதாரர்களுக்குப் போதிய ஈடு கிடைத்து வருகிறது எனலாம். வைப்புகள் அதிகப்படின் அதற்கேற்ப மூலதனத்தையும் ரிசர்வு நிலையையும் அதிகப்படுத்த வேண்டும் என்று இங்கு வற்புறுத்தப்படவில்லை.

இதரக் கொள்கைகள் :—முன்னர்க் கூறியுள்ளவாறு பெரும் நகரங்களில் மக்கள் தொகை அதிகமாய் இருப்பின் பாங்கு மூல

தனமும் அதிகப்படுத்தப்பட வேண்டும். மேலும் வரும் வாடிக்கைக்காரரின் வருகைகள். பாங்குசெய்துவரும் குறிப்பிட்ட தொழில் இவற்றையனுசரித்தும் மூலதனம் இவ்வளவென்று முடிவு செய்யப்படல் வேண்டும்.

பங்குகளின் வகைகள் :— பொதுவாக பாங்கு கம்பெனிகள் சாதாரணப் பங்கு மட்டிலும் வைத்துக் கொண்டுள்ளதெனினும் இதர சில பாங்குகள் இரண்டல்லது மூன்று வகையான பங்குகளை வெளியிட்டிருக்கின்றன. சாதாரணப் பங்கு ரூ. 50/- அல்லது ரூ. 100/- அளவிலும் நிருவாகப் பங்கு (டெஃப்பெர்ட் Deferred Share) ரூ. 1/- இவையனைத்துக்கும் சமவாக்குரிமை பெற்று பாங்கு நிருவாகத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய வழியைப் பெற்றுள்ளன. ஆயினும் 1954ல் இந்தியக் கம்பெனிகள் சட்டம் தேவைக்கேற்பத் திருத்தம் செய்யப்பட்டது. சலுகைப் பங்குகளையும் நிருவாகப்பங்குகளையும் (Preferance and Deferred Shares) வெளியிடுவதைத் தடை செய்தனர். சாதாரணப் பங்கு வெளியிடலாம் என்றும் பங்குதாரரின் பங்கு அளவைக் குறித்து வாக்குரிமை இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்தது. இந்தப் பிரிவுகள் அனைத்தும் பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949ல் 12வது பிரிவின் உட்பிரிவுகள் 2, 3, 4 இவற்றுள் காணப்படுகின்றன.

பிரிவுகள் 85 முதல் 89வரை கம்பெனிகள் சட்டம் 1956ல் பங்குகளைப் பற்றிக் கூறுகின்றன கம்பெனிகள் சட்டம் 1956ன் படி இரண்டு வகையான பங்குகள், சாதாரணப் பங்குகள், சலுகைப் பங்குகள் மட்டும் வெளியிடலாம்.

பங்குகளைக் கொடுக்கும் முறை :— ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் ஜெர்மனி நாட்டிலும் பங்குத் தொகை முழுவதையும் உடனே கொடுக்குமாறு பாங்கு நிருவாகம் கோரும் ஆயினும் ஆங்கில நாட்டு பாங்குகள் தங்களுடைய மூலதனத்தில் பாதித் தொகையை மட்டிலும் கோருவார்கள். பங்கின் முகப்பு மதிப்பில் 50 சதவிகிதம் மட்டும்தான் கோருவார்கள். எல்லாவற்றிலும் இந்தியா இங்கிலாந்தைப் பின்பற்றுவது போல் இதிலும் பின் பற்றுகிறது. சில இந்திய பாங்குகள் அண்மையில் தங்களுடைய மூலதனத்தில் பாதித் தொகையை மட்டும் விளித்துப் பின் பகுதியை ரிசர்வுப் பொறுப்பாக வைத்துக் கொண்டு பாங்கை மூடவேண்டிய சமயத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்கிறது. தி சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா லிமிடெட் பெரிய ஆங்கில பாங்குகளைப் போன்று விளிக்கப்படாத மூலதனத்தை ரிசர்வுப் பொறுப்பாக கொண்டுள்ளது. இதனால் அதன் வைப்பாளருக்குப்

போதிய ஈடு கிடைக்கிறது. அந்தத் திவால் நிலையில்லாமல் மூடும் நிலையேற்படும் போதுதான் இந்த விளிக்கப்படாத மூல தனம் பயன்படுத்தப்பெறும்.

இயக்குநர்குழு

நியமனம்:—பாங்குக் கம்பெனி தனது தொழிலைச் செம்மையாக ஒவ்வொரு கூட்டுப்பங்கு கம்பெனி நடத்தி வருவது போலச் செய்து வருவது அறிந்ததே. பங்குதாரர்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணுள்ள இயக்குநர்களைத் தேர்ந்து (2 பேருக்கு குறையாமல்) அக்குழுவினிடம் நிறுவனத்தை நடத்துமாறு ஒப்புவிப்பார்கள். கம்பெனிகள் சட்டம் 1956ல் உள்ள பிரிவுகளில், நியமனம், தேர்வு, நீக்கம், விலகல் போன்ற விவரங்கள் இயக்குநர் பொறுத்த மட்டில் உள்ளதுடன் பிரிவு 10ல் கண்டுள்ளவாறு சிலநபர்களை நியமிக்கக் கூடாதென்ற தடுப்பும் செய்துள்ளது. சில வகையான வேலை முறைகளைச் செய்யக் கூடாதென்றும் தடை செய்துள்ளனர். பிரிவு 12 A என்பது புதிய இயக்குநர்களைத் தேர்ந்தெடுப்பதைப் பற்றி கூறுகிறது. பிரிவு 16 பொது இயக்குநர்கள் இருக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறது, பிரிவுகள் 36 AAயும் 36 ABயும் இயக்குநர்களை நியமித்தலையும் நீக்கம் செய்தலைப் பற்றியும் குறிக்கிறது. பிரிவு 20 (1) பாங்குக் கம்பெனிகள் சட்டம் கடன் முன்பண வசதி கொடுப்பது பற்றி எந்தெந்த நிறுவனங்களும் கம்பெனிளும் ஈடுபட்டுள்ளனவோ அவைகளுக்குக் கொடுக்கலாம் என்று கூறுகின்றது.

இயக்குநர்களுள் முதல்வர் நிருவாக சம்பந்தமான விதிகளுக்கேற்ப (Articles of Association) நியமனம் செய்யப்படுவார். இதரர்கள் ஆண்டுக் கூட்டத்தின் வாக்கெடுப்பின்போது தேர்ந்தெடுக்கப்படுவர்—இதில் ஒரு பகுதியினர் முறைப்படி ஆண்டு தோறும் பணியினின்றும் பதவியினின்றும் ஓய்வு பெறுவர். அந்தந்தக் காலியிடங்களுக்குத் தேர்வின் மூலம் இதரர்கள் தேர்தெடுக்கப்படுவர். பாங்குக் கம்பெனிகளின் இயக்குநர்கள் பொது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குபவர்கள். பாங்கின் வெற்றியும் முன்னேற்றமும் இவர்களுடைய நம்பிக்கையின் அடிப்படையில்தான் அமைவது. இயக்குநர்களாக வருபவர் பொதுமக்களிடையே நன்னம்பிக்கையைப் பரப்பக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

கம்பெனிகள்சட்டம் 1956ல் இயக்குநர்களை நியமனம் செய்வது பற்றியுள்ள விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பிரிவு 253ன்படி தனிநபர்கள் மட்டுமே இயக்குநர்களாக நியமிக்கப்படலாம். பிரிவு 255 இயக்குநர்கள் பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும். அத்தகையோரில் ஒரு பகுதியினர் கிரமப்படி ஓய்வு பெறுதல் வேண்டும். 263ஆவது பிரிவின்படி தனிநபர் வாக்குரிமையின் கீழ் இயக்குநர்கள் 264 ஆம் பிரிவின் படி இயக்குநராகப் பணியாற்றச் சம்மதம் தெரிவிக்கும் கடிதத்தைக் கம்பெனியில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அந்தக் கடிதத்தைக் கம்பெனிகள் பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது. 266 ஆம் பிரிவின்படி இயக்குநர்களைப் பற்றிய நியமனம், விளம்பரம் இவைகளைக் கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரிவு 312-ன்படி இயக்குநர் தமது இடத்தைப் பிறருக்கு மாற்ற அதிகாரம் இல்லை. ஒரு இயக்குநருக்குப் பதிலாக மாற்று இயக்குநர் இருப்பின் அவருக்கான அலுவல், காலம் முதலியன 313ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளன. பிரிவு 269ன் படி மத்திய அரசினரின் அனுமதி பெற்று இயக்குநரை முழுக் கால வேலையினராக நியமனம் செய்யலாம்.

ரிசர்வு பாங்கியின் விருப்பத்திற்கு இணங்கி பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949ன் பிரிவு 12Aன் படி இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஒரு பாங்குக் கம்பெனி நிர்வாக இயக்குநரை நியமனம் செய்ய வேண்டுமாயின் ரிசர்வு பாங்கிற்குத் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று அதற்கிணங்கக் கம்பெனியின் விதிகளை மாற்றி முழுக்காலப் பணி அல்லது குறை காலப் பணியென அமைக்க பாங்கு கம்பெனிச் சட்டம் 1949ன் 35B பிரிவு கூறுகிறது.

இயக்குநர் குழுவில் வைப்புதாரர்களின் பிரதிநிதித்வம்: பாங்குக் கம்பெனியின் பங்குதாரர்களைக் காட்டிலும் வைப்புதாரர்களுக்கு தங்களுடைய வைப்புகளின் மீதுள்ள அக்கறையின் காரணத்தால், வைப்புதாரர்களின் பிரதிநிதிகளாக இயக்குநர் குழுவில் ஒன்றல்லது இரண்டு நபர்களை நியமனம் செய்வார்கள். நார்வே நாட்டிலுள்ள பாங்குக் கம்பெனியின் இயக்குநர் குழுவில், பங்குதாரர்கள் தேர்ந்தெடுத்த நபர்கள் மூக்கால் பங்கும் வைப்புதாரர்கள் தேர்ந்தெடுத்த நபர்கள் கால் பங்கும் இயக்குநர்களாக நியமனம் பெறுவர். இது சம்பந்தமாக இன்சூரன்ஸ் சட்டத்தைக் (Insurance Act) காண்க. பாலிசிதாரர்கள் (Policy holders) தங்கள் பிரதிநிதிகளை இன்சூரன்ஸ் கம்பெனியின் இயக்குநர் குழுவிற்குத் தேர்ந்தனுப்புவது தெரிந்தே.

திவால் நிலையினின்று நீக்கம் பெறுதவர் இயக்குநராகப் பணியாற்ற முடியாது: திவால் நிலையினின்று நீக்கம் பெறாத

கடன்பட்டவர் கம்பெனியின் நிருவாகியோ, இயக்குநராகவோ, நிருவாகப் பதிலாளாகவோ நியமனம் பெறின் அந்நியமனத்தைக் குற்றமாகக் கருதப்பெற்று நியமித்தவர்களைச் சிறைப்படுத்தியும் ரூ. 1000 அபராதத் தொகை வசூலித்தும் விடுவார்கள். மேற் கூறிய விளக்கங்களை இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1913ன் 86A பிரிவில் காணலாம். இந்தியா அல்லாத அயல் நாடுகளிலுள்ள கம்பெனி நிறுவனங்களுக்கும் இந்தக் கம்பெனிச் சட்டப் பிரிவுகளைப் பயனுக்குவதற்கு மேற்படி கம்பெனியின் கிளை நிறுவனம் இந்தியாவிலும் இருக்க வேண்டும். பாங்குக் கம்பெனி சட்டம் 1949ன் 10வது பிரிவில் இத்தகவல்கள் மிகவும் விளக்க மாகக் கூறப்பெற்றுள்ளன.

கம்பெனிகள் சட்டம் 1956ன் 274ம் பிரிவின் கீழ் திவால் நிலையினின்று நீக்கம் பெருக் கடன்பட்டாரை இயக்குநராக நியமிக்கக்கூடாது. ஆயினும் கம்பெனிகள் சட்டம் 1913ல் உள்ள 86A பிரிவின் கீழ்த் தண்டனை கொடுக்கப்படவில்லை. ஒரு இயக்குநர் திவால் எனச் சட்ட முறையில் தீர்மானிக்கப்பட்டால் அவரை இயக்குநர் குழுவினின்று நீக்க வேண்டும் என்பதாகக் கம்பெனிகள் சட்டம் 1956ன் 283 (d) பிரிவு கூறுகிறது.

பாங்கு கம்பெனிகள் நிருவகிக்கும் எந்த முதல்வரையோ, இயக்குநரையோ, நிருவாகியையோ ட்ரிபுயுனல் தீர்ப்பின்படி சட்ட வரம்பை மீறி நடந்தார் என முடிவு செய்யப்பட்டால் அவரைப் பதவியினின்று நீக்க ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் உண்டு என பாங்குக் கம்பெனிகள் திருத்தச்சட்டம் 1959ல் கொடுக்கப்பட்டுள்ளது. தக்க மேலதிகாரிகளாலும் ரிசர்வு பாங்கியினுலும் ஒரு குறிப்பிட்ட நபரை பதவியில் இருத்தி வைப்பதால் பாங்குக் கம்பெனியின் தொழிலுக்குக் கெடுதலேற் படும் எனக் கருதினுலும் விலக்க உரிமையுண்டு. எந்த ஒருநபரை யும் மேற்கூறிய காரணங்களால் ஐந்தாண்டுகள் வரை பாங்குத் தடையுத்தரவு போட ரிசர்வு பாங்கிற்கு அதிகாரம் உண்டு. அண்மையில் புகுத்தப்பட்ட பிரிவுகள் 36AAயும் 36ABயும் ரிசர்வு பாங்கிற்குத் தனிப்பட்ட அதிகாரங்களை வழங்குவதால் சில நிருவாக அலுவலர்களையும்,இயக்குநர்களையும் சிற்சில சந்தர்ப்பங் களை யனுசரித்து நீக்கவும் நியமிக்கவும் செய்யலாம்.

வயதின் வரம்பு:— இந்தியக் கம்பெனிகள் சட்டம் 1956-ன் 280-ஆவது பிரிவின்கீழ் இயக்குநரின் கூடிய வயது 65க்குமேல் போகக்கூடாதென்பது. 281-ஆவது பிரிவில் கண்டுள்ளவாறு தீர்மானம் கொண்டுவந்து அதற்குப் பிறகும்கூட அவர் இயக்குநராக இருக்கலாம். ஒரு இயக்குநர் தமது வயதை

வெளியிட மறுத்தால் பிரிவு 282-ன்கீழ் அவர் தண்டனைக் குட்படுவர். சில ந..ர்கள் தமக்குள்ள செல்வாக்கையும், கம்பெனியின் மீதுள்ள கட்டுப்பாட்டையும் பயன்படுத்திக் கொண்டு திரும்பத் திரும்பத் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதால் இப்பிரிவின் உயர்வான இலட்சியம் நசித்துப் போய்விடுகிறது. 65 வயதிற்கும் மேற்பட்டவர் தனிப்பட்ட தீர்மானத்தைக்கொண்டு வந்து ஆண்டுப் பொது கூட்டங்களில் தங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகின்றனர்.

செல்வ நிலையும் இதரத் தகுதிகளும்:— (தி ஹஸ்டரி பிரின்ஸிபிள்ஸ் அண்ட் ப்ராக்டீஸ் ஆஃப பாங்கிங் எழுதியவர் ஜே. டபிள்யூ கில்பர்ட்) The History Principles and Practice of Banking by J. W. Gilbart என்ற நூலில் கில்பர்ட் கூறுவதாவது: "ஒரு பாங்கினுடைய இயக்குநர் நல்ல செல்வ நிலையில் இருக்க வேண்டும். எக்காலத்தும் எக்காரணத்தைக் கொண்டும் தமது கணக்கில் உள்ள தொகைக்கு அதிகமாகப் பணம் பாங்குக் கணக்கிலிருந்து பெறச் சம்மதிக்கக்கூடாது. இதைச் சட்ட நியாயமாகவே கருதவேண்டும். இம்மாதிரி அளவுக்கு மீறி மிதமிஞ்சித் தமது கணக்கிலிருந்து பணத்தைப்பெற்றுப் பல இயக்குநர்கள் பல வர்த்தக நிறுவனங்கள் முறிவதற்காக அடிகோலினர்". இந்தியாவில் பாங்கு முறிவுகளுக்கான வரலாற்றை நோக்கின் இவ்விளக்கத்திலிருந்தே உண்மை புலப்படுகிறது. ஒரு கம்பெனியின் இயக்குநருக்கு உள்ள செல்வநிலைத் தகுதி அவர் வைத்துக்கொண்டுள்ள பாங்குகளின் கூட்டு மதிப்பே ஆகும். இந்தத் தகுதி அவ்வளவு உயர்வெனக் கருதவேண்டியதில்லை. கம்பெனியின் பணிகளில் அவர் நம்பிக்கைத் துரோகம் இன்றிச் செம்மையாக நடந்துகொள்ள வேண்டியதுதான் எல்லாவற்றிற்கும் மேலான பொறுப்பு ஆகும். கம்பெனிகள் சட்டம் 1956-ன் 270-ஆவது பிரிவின்கீழ் இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் இரண்டு மாத காலங்களுக்குள்ளாக கம்பெனி நிருவாக விதிகளில் (Articles of Association) கூறப் பெற்ற பங்குத் தகுதியைப் பெறல்வேண்டும். இயக்குநர் அல்லாத தனி நபர் மேற்படி அதிகப்படியான பங்குகளைப் பெறயாதொரு தடையும் இல்லை. வர்த்தகரல்லாத அரசியல்வாதிகளையும், நீண்ட பட்டங்களையும், கௌரவப் பெயர்களையும் பெற்ற நபர்களையும் இயக்குநர்களாகச் செய்யும் நியமனம் அவர்களுடைய பட்டங்களையும், அரசியல் ஈடுபாட்டையும் கண்டு செய்தல் பெரும் பிசகெனலாம். இந்த நூற்றாண்டில், முதல் பத்து ஆண்டின் காலத்தில் பம்பாயில் புகழ் பெற்ற மருத்துவர் ஒரு பாங்கினுடைய முதல்வர் பதவியை

ஏற்றார். சிறிது காலத்திற்கெல்லாம் அந்த பாங்கு முறிவு பெற்றது. மக்களின் நாடித்துடிப்பை ஆராயக்கூடியவர், பணச் சந்தையின் நாடித்துடிப்பை ஆராய்ந்து அதற்கான மருந்துகளைக் கொடுத்துச் சீர் செய்ய இயலவில்லை. பாங்கு நிருவாக சூழல்களைப் புரிந்துகொள்ள இயலாததால் பாங்கை இழுத்து மூடவேண்டியதாயிற்று.

வல்லுநர் பயிற்சி பெற்ற மனதும் சாதாரண மனதும் இரண்டறக்கலத்தல் நலம்:— திரு. பேகாட் (Begehot) அவர்களின் கூற்றுவது: "இயக்குநர்களை நியமனம் செய்யும் போது கவனத்தில் இருத்திக்கொள்ள வேண்டியதாவது நன்கு வல்லுநர் பயிற்சி பெற்ற மனதுடையவர்களும் பொதுவாகச் சாரண மனதுடையவர்களும் ஒருமிக்கப் பணியாற்றின் பாங்குத் தொழில் வளர்ச்சி ஏற்படும் என்பதை மேம்பாடான கொள்கையாகக் கருதலாம். இலண்டன் மாநகரின் கூட்டுப்பங்கு பாங்குகளின் முதன்மையிடம் பெறும் பாங்குகளில் இக்கலவைக் கொள்கையைப் புகுத்தியதால் அண்மையில், பெரும் புகழும் பலனுடையதுமான வளர்ச்சியேற்பட்டதில் ஐயமொன்றுமில்லை. பாங்குத் தொழிலை மேற்பார்வை புரிபவர்கள் பாங்குத் தொழிலையே அறிந்திராத பொது மக்கள் இயக்குநர் குழுவில் பணியாற்றவும் அன்றாட நிருவாகத்தைச் சீரிய முறையில் கவனித்துவர பாங்குத் தொழிலில் ஊறித்திளைத்த வல்லுநர்களும் உள்ளனர். இக்கலவைக்குழு நடத்திவரும் கலவை பாங்குகள், தொன்றுதொட்டு நடந்துவரும் வல்லுநர்களைக்கொண்ட பாங்குகளையும் போட்டியில் திறை அடித்து முன்னேறிவிட்டன. இம்மாதிரிக் கலவைக்குழு பாங்குகள் வர்த்தகச் சந்தையை நன்கு ஆராய்ந்து அதற்கேற்பத் தத்தம் கொள்கைகளை அவ்வப்போது சீராக்கி உதவி புரிந்தன. ஆயினும் பாங்குத் தொழிலையே நடத்தி வந்த பழையகால பாங்கு நடத்துபவர்கள் குறுகிய நோக்குடன் பாங்குத் தொழிலின் நோட்டத்தோடு அதன் சாளரங்களின் மூலம் காணத் தொடங்கியதால் முன்னேறவில்லை". (இங்கிலீஷ் கான்ஸ்ட்டியூஷன் இரண்டாம் பதிப்பு பக். 197) பேகாட் நாட்களில் கூறப்பட்டவை இன்றும் உண்மையாகவே நிலவுகிறது.

தனிப்பட்ட முறையில் பணியாற்றும் பாங்குகளுக்கு அத்துறையில் தகுதிபெற்ற இயக்குநர்கள் தேவை:— பொது அறிவு, நேர்மை சீலம், எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய நிலை, உடனே தீர்மானம் எடுக்கக்கூடிய தன்மை, இவைகளுடன் அந்தக் குறிப்பிட்ட துறையிலும் அனுபவம் பெற்ற இயக்குநர்களாக இருப்பின் பாங்குத் தொழிலுக்குப் போதிய ஊக்கம்

கிடைக்கும் என்பதில் ஐயம் இல்லை. ஒரு பாங்கு நீண்ட அனுபவம் பெற்ற செசவாணடத் தொழிலுக்கு முன் பணம் அல்லது கடன் வசதி அளிக்க முற்பட்டால், அத்தொழிலுக்கு வேண்டிய நிதி நிலை எவ்வாறுள்ளது என்று தெரிந்தும், அத்தொழிலின் நுணுக்கங்களை நன்கறிந்தும் உள்ள நபர்கள் இயக்குநர் குழுவில் பணியாற்றினால் மேம்பாடாக இருக்குமென்பதில் ஐயமில்லை. ஒரு பாங்கு மிகவும் அதிகப் பரப்பளவு உள்ள வட்டாரத்தில் தொழில் புரிய விரும்பினால், அந்த வட்டாரத்திலுள்ள பெரிய நகரங்களிலிருந்து பிரதிநிதிகள் இயக்குநர் குழுவில் பணியாற்ற வேண்டுவது இன்றியமையாதது எனலாம்.

ஒரு பாங்கியிலியக்குநராகப் பணியாற்றுபவர் வேறொரு பாங்கியினுடைய இயக்குநர் குழுவில் பணியாற்றக்கூடாது.

ஒரே ஒரு பாங்கு அல்லாது பல பாங்குகளின் இயக்குநர் குழுவில் அதே நபர்கள் பணியாற்றுவதை விரும்பத்தகாத செய்கையெனக் கண்டிக்கப்படவேண்டியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் க்ளேடன் (Clayton Act) சட்டம் 1914-ன்கீழ் பிணைப்பு இயக்குநர் முறை ("Interlocking of Directors") தடை செய்யப்பட்டுள்ளது ஃபெடரல் ரிசர்வ் முறையின் (Federal Reserve System) நிறுவனத்தின் உறுப்பினர் பாங்கு ஒன்றில் பணி செய்பவர் வேறொரு பாங்கு நிறுவனத்தில் இயக்குநராகவோ அலுவலராகவோ, அதிகாரியாகவோ பணியாற்றக்கூடாது. இவ்வாறு தடைபோடப்பட்ட பாங்கியின் வைப்புகள், மூலதனம், இலாபம் இவைகளனைத்தும் 5 மில்லியன் டாலர்களுக்கு மேல் இருக்கவேண்டும். இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் 1920-ன் பிரிவு 39 (2) அட்டவணை II (XLVII எண் ஆண்டு 1920) திருத்தம் III-வது சட்டம் 1934-ல் வந்ததின் விவரம் வருமாறு:

> "எந்த ஒரு நபர் கூட்டுப் பங்கு பாங்கியினுடைய தாற்காலிக இயக்குநர், உருவாக்கியவர், நிறுவனம் செய்தவர்_ நிருவாகியாக இந்தியாவிலோ அல்லது பர்மாவிலோ அல்லது (மேற்படி பாங்கியினுடைய கிளைகள் இந்தியாவிலோ அல்லது பர்மாவிலோ இனி திறக்கப்படும் என்று விளம்பரப்படுத்தப்பட்டால், அந்த நபர் உள் ஆட்சி இயக்குநர் குழுவில் இயக்குநராகப் பணியாற்றவோ உறுப்பினராக இருக்கவோ தகுதி இல்லை எனலாம்.

28-ஆவது பிரிவின் 1-ஆவது உட்பிரிவின் 1-ஆவது வகுப்பின் கீழ், எந்தக் கூட்டுப் பங்கு பாங்கு இயக்குநரை இந்த உள் ஆட்சிக் குழுவில் நியமனம் செய்யப்பட்டால் மேற் கூறிய தகுதியின்மை விலக்கப் படுகிறது.

அரசினரின் சம்பளம் பெறும் அதிகாரியாக இருந்து சட்டபடி ஏற்றுக்கொள்ளாது மத்திய அரசினரால் செக்ஷன் 28 1ஆவது உட்பிரிவு 4ஆவது பிரிவின்படியோ உறுப்பினராக நியமிக்கப்படின் தகுதியின்மை விலக்கப் படுகிறது.

இம்மாதிரியான பிரிவுகள் 1955-ஆம் ஆண்டு ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா சட்டத்தில் இணைக்கப் பட்டுள்ளன.

அதே போன்று ரிசர்வு பாங்க் ஆஃப் இந்தியா சட்டம் 1934ன் 10வது பிரிவும் கூறுகிறது. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா அல்லது மத்திய அரசினர் அறிக்கையில் வெளியிடப் பெற்ற பாங்கு இவற்றின் இயக்குநராகவோ கூட்டுறவுச் சங்கச் சட்டம் 1912ன் கீழ் இயக்குநராக நியமனம் பெற்றவர்களைத் தவிர இதரர் இயக்குநராகத் தகுதியில்லை என்று விளக்கப்பட்டுள்ளது. பாங்குக் கம்பெனியின் ஓட்டுரிமையில் (வாக்குரிமை) 20 சத விகிதம் வரை பயன்படுத்தக் கூடிய பாங்குக் கம்பெனிகளின் இயக்குநராக உள்ளவரை நியமிக்கக்கூடாதென்று பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் 16ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது.

பிணைக்கும் - இயக்குநர் முறையின் ஏற்கத்தகா முறை:— பிணைக்கும் இயக்குநர் முறையை நாம் குறை கூறுவது தெரிந்ததே. இதனால் தனிப்பட்ட நபர்களின் சொந்த உரிமை, பலாபலன்கள் இவைகள் போட்டியிட ஆரம்பித்து நாட்டின் பொதுக் காரணங் களை ஈடேற்ற முடியாமல் தியாகம் செய்து விடுகின்றனர். மத்திய உள்ளூர்க் குழுக்களில் இதர பாங்குகளில் இயக்குநராக பணியாற்றுபவர்களைச் சேர்க்காததின் காரணங்கள் வேறாக இருக்கலாம். ஒரு நபர் வர்த்தக பாங்கியின் இயக்குநராக இருந்து மத்திய பாங்கு நிறுவனத்திலும் இயக்குநராக இருப்பா ராகில் மேற்படி மத்திய பாங்கு இதர பாங்குகள் கொண்டுள்ள வர்த்தக உண்டியல்களை கழிவு நீக்கம் பெற்ற தாள்களின் மீது முன்பண வசதியளிக்க முற்படின் அவ்வியக்குநர் உள்ள காரணத் தால் இம்மாதிரி முன்பண வசதி கோரிவரும் உண்டியல்களை

நேர்மையான முறையில் உதவி செய்ய இயலாது போகும். வர்த்தக பாங்குகளுக்கும் கெடுதலே அன்றி நலன் ஏற்படாது.

இக்கொள்கைகள் அனைத்தும் பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949ன் 16வது பிரிவில் கூறப்பட்டுள்ளன.

பாங்குகளில் இயக்குநர்களின் சட்டப்படி உள்ள நிலை :— பாங்கு இயக்குநர்களை "டிரஸ்டிகள்" என்று கூறின் அது தவறான கருத்தையே காண்பிக்கும்; குறுகிய எல்லையில் விளக்கின் அவர்களை டிரஸ்டிகள் எனலாம். "வர்த்தகர்கள் ஒன்றுகூடித் தங்களுடைய நலனுக்கும் பங்குதாரர்களுடைய நன்மைக்கும் பாங்குத் தொழிலை இயக்குவதால்" இவர்களை நிருவாகிகள் எனக் கூற இடமுண்டு. சட்ட அடிப்படையின் ஆதாரத்தில் இவர்கள் பதிலாளுக்கான சட்ட நிலையில் பகுதியும், டிரஸ்டிகளுக்கான சட்ட உரிமைகளில் சிறிதும் பெற்றுள்ளனர் எனலாம். பங்குகளை வழங்கும்போதும், ஒதுக்கீடு செய்யும்போதும் அவற்றை மாற்றும்போதும் இவர்கள் பங்குதாரர்களுக்கு டிரஸ்டியாக பணியாற்றுகிறார்கள். பாங்குத் தொழிலை மேற்பார்வை செய்து நடத்தும்போது இவர்கள் பதிலாள் போல் நடக்கின்றனர். பாங்குக் கம்பெனி செய்யுமாறு குறிக்கப்பட்ட தொழில்களை இவர்கள் கண்காணிப்பின் பாங்குக் கம்பெனியைக் கட்டுப்படுத்தலாம்.

கம்பெனிகள் சட்டம் 1956-ன் கீழ் இயக்குநர் டிரஸ்டியாகவும் பதிலாளாகவும் நடக்கிறார். கம்பெனியின் பணத்தைப் பாதுகாப்பதால் டிரஸ்டியாகவும் கம்பெனியின் வர்த்தகத்தை நடத்துவதால் அதன் பதிலாளாகவும் நடக்கிறார். ஜி. ஈ. ரெயில்வே எதி டர்னர் பக். 565. பால்மர் 16ஆம் பதி G. E. Railway Vs. Turner P. 565 Palmer 16 Ed). "இயக்நர்கள் கம்பெனிக்காக வேண்டி பணியாற்றும்போது ஏற்படும் நியாயமான செலவுகளையும், நட்டங்களையும் பொறுப்புகளையும் கம்பெனியேற்றுக் கொண்டு அவர்களை அத்தொல்லையினின்று விடுவிக்க வேண்டியது (யங் எதி. நேவல் Young Vs. Naval பக். 565. பால்மர் 16ஆம் பதி).

தாங்கள் டிரஸ்டி எனக் கருதி கம்பெனியின் பணத்தைத் தவறான வழிகளில் வீணாக்கியதைத் திருப்பித் தரவேண்டும் என்ற நீதிமன்றத் தீர்ப்புகள் அடுத்து அடுத்து வந்துள்ளதையும் கவனிக்க வேண்டியது இன்றியமையாதது.

இயக்குநர்களின் சமயோசித முடிவுகள் :—

பொதுவாக நோக்கின் ஒரு கம்பெனி ஏதாவது ஒரு பொதுக் குறிக்கோள்கொண்டு இருக்கும். அதையொட்டி அநேக சிறிய நோக்கங்களும் இருக்கும். பாங்குக் கம்பெனியில் இவைகளைக் காணலாம். பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949ன் 6வது பிரிவில் மேற்படி நோக்கங்கள் விளக்கம் பெற்றுள்ளன. பாங்குக் கம்பெனிகள் இந்த நோக்கங்களை மீறி வேறொரு நோக்கத்தைத் தமது அமைப்பு யதாஸ்த்தில் (Memorandum of Association) கூறினும், கம்பெனிப் பதிவாளர் அதையேற்றுக் கொண்டு பதிவு செய்ய மறுப்பார். இயக்குநர்களின் திறன், செயலாற்றும் வன்மை உருவாக்கும் தன்மை பணியாற்றும் முறை, சமயோசித நோக்கு இவையனைத்தும் அமைப்பு யதாஸ்த்து, பாங்குக் கம்பெனிகள் சட்டம் இவற்றால் சுற்றி வெளியிடப் பட்டுள்ளன. பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949-ன் 6-ம் பிரிவின் 1-ம் உட்பிரிவின் 'n' என்ற வகுப்பைக் காண்க: "கம்பெனியின் தொழிலை முன்னேற்றமடையச் செய்ய துணையாகவோ, அல்லது அடிப்படையாகவோ செய்ய வேண்டிய இதரத் தொழில்கள் அனைத்தும்" என்று கூறுகின்றது. இயக்குநர்கள் தத்தம் விருப்பம் போல் எதையும் செய்யக் கூடாதவாறு ஆறும் பிரிவின் 2வது உட்பிரிவு கட்டுப்படுத்துகிறது.

"உட்பிரிவு (1)ல் கூறியுள்ளதைத் தவிர வேறெந்தத் தொழிலிலும் எந்த பாங்குக் கம்பெனியும் ஈடுபடக்கூடாது".

இயக்குநர்கள் எனவே தமது விருப்பம்போல் சட்டத்தில் கூறியதற்கு எதிராக எதையும் செய்ய முடியாது. கம்பெனியின் பங்குதாரர்களுக்கு டிரஸ்டிகளாக இருந்து கொண்டு,கம்பெனியின் நலனைக் கோரி உழைக்க வேண்டியது இன்றியமையாதது.

இயக்குநர்களின் சிவில் பொறுப்புகள் ;— இயக்குநர்கள் தவறான முடிபுகளைச் செய்தாலும் பாங்குப் பணிகளில் ஏமாற்றப் பட்டாலும் அவர்களைப் பொறுப்பாளிகளாக்க இயலாது. சட்டம் அவர்களைச் சிறந்தமுறையில் பாங்குகளுடைய செயல்களைப் பதிலாள் போன்று செய்யவேண்டும் என எதிர் நோக்குகிறது. சட்டம் அடிப்படையில் அவர்களுடைய சிவில் பொறுப்புகளை மூன்று பெரும் பிரிவுகளில் அமைக்கலாம் (i) பாங்குடன் தொடர்புள்ளவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள பொறுப்புகள் (ii) பங்குதாரர்களுக்கு இவரது பொறுப்பு (iii) பாங்கு நிறுவனத்திற்கே இவர் பட்ட பொறுப்புகள்.

பாங்குடன் தொடர்பு கொண்டவர்களுக்கு :—கம்பெனியின் நியமிக்கப்பட்ட தொழில்களுக்குப்புறம்பானது என்று முடிவாக்கப்பட்ட செயல்களில் இயக்குநர்கள் ஈடுபட்டால் அது கம்பெனியைக் கட்டுப்படுத்தாது. பாங்குடன் தொடர்பு கொண்டவர்களுக்கு இயக்குநர்கள் பொறுப்பாளிகளாகிறார்கள். எடுத்துக்காட்டாக ஒரு பாங்குக் கம்பெனியின் இயக்குநர்கள் முன்னேக்கிய பேரமாக 1,500 பருத்தி பேல்களை வாங்கி விலையேற்றத்தை எதிர் நோக்கி யிருக்கும் போது ஒரு வேளை நட்டமேற்படின் அந்த நட்டத்தை பாங்கு ஏற்காது. ஏனெனில் பாங்குக் கம்பெனியின் கொள்கையில் பருத்தி வர்த்தகம் ஊகவர்த்தகம் போன்றது என்று தவிர்க்கப்படுகிறது. எனவே இயக்குநர்கள் தாம் பொறுப் பேற்க வேண்டும். பாங்கியின் செயல்களுக்குப் புறம்பாகச் செய்தபணியைப் பங்குதாரர் கூட்டத்தில் சரியான தென்று முடிவு செய்தாலும் பாங்கு முறைப்படி அது ஏற்று கொள்ளத்தகுந்தது அன்று. (இர்விங் எதி. யூதியன் பாங்கு பி. ஸீ. 3 கல் 280,285 Irving V. Union Bank, P. C. 3 cal 280, 285) இம்மாதிரியான ஒப்பந்தம் இயக்குநர்களை மட்டுமே கட்டுப்படுத்தும். ஏனெனில் அவர்கள் அதில் ஈடுபட்டார்கள். எந்த ஒரு நபர் இன்னொருவரைத் தூண்டிதாம் வேறு ஒருவருடைய முகவராக இருப்பதாகத் தெரிவித்து அவரைத்தம்முடன் ஒப்பந்தம் செய்துகொள்ளு மாறு முயன்றால், இந்தக்கூற்றுத் தவறானது என்று அறிந்து அதனால் ஏற்படும் நட்டத்தைத் தூண்டியவர் ஈடுபடுத்த வேண்டும். (கோலன் எதி. ரைட் (1857) 8 எல். உம். பெல். 647 Collen V. Wright [1857], 8 El. and Bl. 647) இயக்குநர்கள் தத்தம் அதிகாரவரம்பினைக் கடந்து நடந்தாலும், கட்டுப் பாடுகளை மீறி நடந்தாலும் கம்பெனியின் நடை முறை விதிகளை மீறவில்லை என்று அறிந்திருப்பின் பாங்குக் கம்பெனி அவர்களுக்கு பொறுப்பாக நிற்கும். (ராயல் பிரிட்டிஷ் பாங்கு எதி. டார்க்கண்டு. ப. 646 பால்மர் 16 ஆவது பதிப்பு Royal British Bank V. Tarquand, P. 564 Palmer 16th Ed) அதே போன்ற நிலைமையில் ஓர் இயக்குநர் ஒரு உண்டியலில் தனிப்பட்ட முறையில் கையொப்பமிட்டாரா அல்லது பதிலாளாக இட்டாரா என்று விளக்கப்பட வில்லையாலும் பாங்கு பொறுப்பாகிறது. எடுத்துக் காட்டாக ஒரு உண்டியல் கீழ்க்கண்டவாறு பின் எழுதப்பட்டு. வருகிறது. "எச். எல் அவாரி நியூ இண்டியன் எக்ஸ்சேஞ்ஜ் பாங்க் லிமிடெட்டின் இயக்குநர்" இந்த நிலைமையில் அந்த நபரையே பொறுப்பாளியாக்கலாம். இவர் பாங்கினுடைய பதிலாளாகப் பணியாற்றிய தாகக்கூறப்படவில்லை. உண்மையில் , அவர்

பாங்கியினுடைய உண்டியலுக்கு அதற்காக வேண்டிப் பணியாற்றியதால் இதனுல் ஏற்படும் நட்ட ஈட்டைப் பாங்கு செய்ய வேண்டும். இந்தத் தவற்றைப் பெரியதாகக்கருதக் கூடாது.

பங்குதாரர்களுக்கும் கடன் கொடுத்தோருக்கும் :— முன்பு கூறியது போல் இயக்குநர்கள், தவருன செய்கைகளில் ஈடுபடுதல் திரித்துக் கூறல் போன்ற குற்றங்களில் ஈடுபடுதல் குறிப்பாகக் கம்பெனிப்பிரகடன வெளியீட்டில் பொய்க் கூற்றுகள் சொல்லுதல் போன்ற செயல்களில் ஈடுபடின் அவர்கள் பங்குதாரர்களுக்குப் பொறுப்பாகிருர்கள். தனிப்பட்ட முறையில் இவ்வாசகங்களால் உந்தப்பட்ட நபர்களுக்கு இவர்கள் பொறுப்பாளிகளாவார்கள். தவருன முறையில் விளக்கம் கொடுத்து பாங்குக் கம்பெனியில் பணம் போடச் செய்து அது நட்டமடைந்தால் பணம் போட்டவர் இயக்குநர் மீது வழக்குத் தொடரலாம். நேர்மையுடன் இயக்குநர்கள் பாங்கு நடத்துவது சம்பந்தமாக தவருன முடிவைச் செய்யின் அது சம்பந்தமாக நீதிமன்றம் தலையிடுவதில்லை.

பாங்கு நிறுவனத்திற்கு :—மூன்ருவது பகுதி ஆகஇயக்குநர்கள் பாங்கு நிறுவனத்திற்குப் பொறுப்பாளிகள். இதை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். இயக்குநர் பாங்கு நிறுவனத்தைப் பொறுத்த மட்டிலும் டிரஸ்டியாக இருப்பதால் வரக்கூடிய பின் விளைவுகளாம்.

ரகசியமான இலாபப் பாங்கு :— கம்பெனியைத் தொடங்குபவர் ரொக்கப் பாங்கு வெகுமதிகளைக் கொடுப்பின் இயக்குநர் ஏற்கக்கூடாது. கம்பெனியின் சம்மதமின்றி இவர்கள் பதிலாளாக நடப்பதற்காக இலாபம் பெறமுயலக்கூடாது. (நார்த் 'ஆஸ்ட்ரேலியன் டெரிடரி கம்பெனி வழக்கு ஆர்ச்சர் வழக்கு) *1892. 1. அதி. 322* North Australian Territory Company, Arche's Case (*1892*) *1.* ch *322*) கம்பெனியுடன் இவர்கள் போட்டி வர்த்தகம் செய்யக்கூடாது. போட்டி வர்த்தகம் செய்யினும் போட்டி வர்த்தகம் செய்வதாக ஐயம் தோன்றினும் தவறு. அலக்சாந்தர் எதிராக ஆடோ மாடிக் டெலிஃபோன் கம்பெனி (*1900*) *2 அதி. 56* [*5772*] கம்பெனியைக் கடன் அனுமதிக்கச் செய்ய ஒருநபர் இயக்குநருக்கு இலஞ்சம் கொடுத்து, அந்தத்தகவல் கம்பெனிக்கு எட்டினல், கம்பெனி, அவ்வாறு இயக்குநருக்குக் கொடுத்த தொகை தமக்குச் சேரவேண்டியது எனக் கோர உரிமை உண்டு.

கையாடலும் தவருக (கைப்பிசகாக) பணமாற்றமும்:— பாங்கியினுடைய பணத்தைக் கையாடல் செய்ததற்கும் தவருக மாற்றம் செய்த குற்றத்திற்கும் பாங்கு இயக்குநர் பொறுப்பாளியாவார். பங்குதாரர்களுக்கு மூலதனத்திலிருந்தே இலாப ஈவுப் பங்குகள் கொடுத்தால் அதைக் கொடுத்து ஆமோதித்த இயக்குநர்கள் அனைவரும் அதற்குப் பொறுப்பு. அவர்கள் அவ்வாறு பங்குதாரர்களுக்குக் கொடுத்த இலாப ஈவுப் பங்குகளைத் திருப்பிவிட வேண்டும். தவருகப் பணத்தைப் பிறருக்குக் கொடுத்த பணத்தை இயக்குநர் தம் கையைவிட்டுக் கட்டிவிட வேண்டியது. ஆயினும் தற்போது கம்பெனிகள் சட்டம் 1956-ன் பிரிவு 633ன் கீழ் இயக்குநருக்குக் காப்பளிக்கப்பட்டது. சட்டத்திற்குப் புறம்பாகச் செய்த காரியம் எதுவானாலும் அது நேர்மையுடன் இயக்குநரால் செய்யப்படின் இப்பிரிவின் கீழ் காப்பளிக்கப்படுகிறது. சக இயக்குநரோ இதர பாங்குச் சிப்பந்திகளோ தனிப்பட்ட முறையில் நம்பிக்கை மோசம் செய்தாலோ பண மோசடி செய்தாலோ இயக்குநர் அதற்குப் பொறுப்பாளியல்ல. இவரும் அதற்கு உள்ளூர உடந்தையாக இருந்தார் என்று நிரூபித்தால் இவரும் பொறுப்பாளியாவார். பாங்கு இயக்குநர்கள் அனைவரும் பங்குப் பணத்தை மூலதனத்திலிருந்து திருப்பியும் அல்லது மூலதனத்தை சந்தையில் (மோசடி) அல்லது ஏற்றி இறக்கும் முறையில் பங்குகளை வாங்கியோ விற்றோ அல்லது பங்கு வாங்கத் தனிப்பட்ட கமிஷன் கொடுத்தாலோ இவர்கள் தனியார் தீங்குச் சட்டத்தின்கீழ் பொறுப்பாளிகளாவார்கள். தவருகப் பணம் மாற்றம் செய்த குற்றத்தின் கீழ் எல்லா இயக்குநர்களும் பொறுப்பாளிகள் ஆவர். இவர்கள் கூட்டாகவும் தனிப்பட்ட முறையிலும் பொறுப்பு ஆவர். பாங்கு இயக்குநர்கள் தங்கள் விருப்பப்படி பாங்கியின் நிதி நிலையை மோசமாக்கி அதன் விளைவாகப் பங்குதாரர்களும் கடன் கொடுத்தோரும் பணச் செலவுச் செய்து இவர்களை நீதிமன்றத்திற்கு இழுத்து வழக்குத் தொடுத்தல் பலனில்லை என்று வாளாயிருந்துவிடுவர். கம்பெனியின் நிலை படுசூனியமாகிக் கணக்குகளைத் தவருக எழுதி, ஏமாற்று முறைகளை இவர்கள் கையாண்டு வருகிருர்கள். இம்மாதிரி இயக்குநர்களை சும்மா விடக்கூடாது. இராச்சிய அரசினரே இதைப் பெருங் குற்றமாகக் கருதி அவர்களின்மீது சட்ட நடவடிக்கை எடுத்து முதலீடு செய்யும் மக்களைக் காப்பாற்றவேண்டும்.

அளவு கடந்த அசட்டையின் விளைவாக ஏற்படும் நஷ்டம்:— ஏதாவது ஒரு இயக்குநர் காண்பித்த அசட்டையால் நஷ்டமேற்படின் கம்பெனி நிறுவனம் அதை அவரிடமிருந்தே

வசூலித்து விடலாம். கூட்டாக எல்லா இயக்குநர்களும் ஒன்றாகச் செய்யின் அதன் விளைவாக அவர்கள் கூட்டமாக இக் குற்றத்திற்குக் காரணமாகி பொறுப்பாளிகளாகிறார்கள். எந்த அளவு அசட்டையின் காரணத்தால் இயக்குநர்கள் பொறுப் பாகிறார்கள் என்பதைக் குறித்து லின்லே எம். ஆர். (Lindlay M. R.) லாகுனஸ் நைட்ரேட் கம்பெனி எதி. லாகுனஸ் ஸிண்டிகேட் (*1899*) *2. அதி. டி. 325.* Lagunas Nitrate Coy Vs. Lagunas Syndicate (1899) 2. ch. D. 325) என்ற வழக்கில் கூறியுள்ளது. "எந்த அளவிற்கு கவனமாக இருக்க வேண்டும் என்று இலக்கணம் கூறவியலாது. இயக்குநர்கள் புரியும் எல்லாத் தவறுகளுக்கும் அவர்கள் பொறுப்பாகமாட்டார்கள். கவனப் பிசகாக ஏதாவது குறிப்பிட்ட வேலையைச் செய்ய மறந்தது பெருந்தவறாகாது. அவர்கள்மீது வரிகள் வருமளவிற்குச் செய்யப்பட்ட அசட்டை வர்த்தக முறையில் அது தண்டிக்கத் தக்கதும் பெரியதும் ஆகும். இதைவிட விபரமாக விளக்கம் செய்ய என்னால் இயலவில்லை". [ஓவர்லாண்ட் கர்னே அண்டு கம்பெனி எதி. இ.ப (*1872*) *5 இ ஐ.ஏ. 480.* Overland Gurney & Co. Vs. Gobb (1872) 5 E. I. A. 480]

இழப்பீடு வகுப்பு சட்டப்படி செல்லாது:— சங்க விதிகளில் (Articles of Association) இழப்பீடு வகுப்புகளைக்கூறி அதன்படி இயக்குநர்கள் தங்களைப் பொறுப்பினின்று விலக்கிக் கொள்ளுவார்கள். ஆயினும் ஆங்கிலக் கம்பெனியின் சட்டம் 1929 இவற்றைச் சட்ட ரீதியாகச் செல்லாது என்று கூறி, நீதிமன்றங்களை விசாரணை செய்யச் சொல்லிப் பொறுப்புகளை அளவைப்படுத்தி இழப்பீடு எந்த முறையில் அமைய வேண்டும் என்று விதித்துள்ளது. கம்பெனி இயக்குநர், நிருவாகி, அலுவலர், ஆய்வாளர் இவர்களுடைய அசட்டையை அனுமானித்து அவர்களுடைய நிலைக்கேற்ப இழப்பீடு கோரும் விண்ணப்பத்தை நோக்கி அவர் நேர்மையாக நடந்துள்ளாரா என்று முடிவு செய்த பின்னர் அவரைத் தக்க காரணத்துடன் மன்னித்துவிட வேண்டியது. ஒரு இயக்குநர் பாங்குக் கூட்டங்களுக்கு ஒரு போதும் வராத காரணத்தால் அவருடைய சக இயக்குநர்கள் செய்த தவறுகளுக்கு அவரையும் பொறுப்பில் ஆழ்த்தக்கூடாது. கம்பெனியின் வழிகளில் இழப்பீடு வகுப்பு ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று என்று தள்ளிவிட முடியாது. இந்த இழப்பீட்டைக் கம்பெனிகள் சட்டம் 1956-ன் 201-ஆவது பிரிவின்கீழ்க் கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரிவு 201 வெளியில் உள்ள அட்டார்னிகள் (Attorneys) இதைப் பயன்படுத்திக்கொண்டு பணியாற்றுவதைத் தடுக்கிறது.

கம்பெனிச் சட்டத்தின் கீழ் இயக்குநர்களுக்கான பொறுப்புகள்:— கம்பெனிகள் சட்டம் 1956–ன் கீழ்ப் பதிவு செய்யப் பெற்ற கம்பெனியின் இயக்குநர்க்கான பொறுப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன:

1. ஆண்டுப் பொதுக் கூட்டம் நடத்தவேண்டியது (பிரிவுகள் 166, 168)
2. இலாபம் பெறத் தகும் பதவிகளையேற்கக் கூடாது (பிரிவு 314)
3. இயக்குநராகப் பணியாற்றச் சம்மதம் தெரிவித்ததைப் பதிவாளர்க்கு அனுப்பத் தாக்கல் செய்தல் (பிரிவு 264)
4. இயக்குநராகச் சேர்ந்த இரண்டு மாதங்களில் பங்குத் தகுதி பெறல் (பிரிவு 270)
5. 20 பொதுக் கம்பெனிகளில் இயக்குநராக இருத்தல் (பிரிவுகள் 276–277)
6. தமது வயதைக் குறித்துத் தகவல் கொடுத்தல் (பிரிவு 282)
7. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இயக்குநர் குழுவிற்கான கூட்டம் கூடல் (பிரிவு 285)
8. கம்பெனியுடன் ஏற்பட்ட ஒப்பந்தங்களில் தமக்குள்ள ஈடுபாட்டைத் தெரிவித்து அந்தக் கூட்டத்தில் விவாதம் வரும்போது சேர்ந்து வாக்குரிமையைப் பயன்படுத்தக் கூடாது (299–300)
9. இயக்குநராக நியமனம் பெற்ற இருபது நாட்களுக்குள்ளாக இதர நிறுவனங்களில் தாம் வகிக்கும் பதவிகளைத் தெரிவித்தல் வேண்டும். (305)
10. கம்பெனியுடைய சொத்துக்களின் ஈட்டில் உள்ள கடன்களைப் பதிவு செய்தல் (134)
11. கம்பெனியிலுள்ள பங்குகள் தொகையை தெரிவித்தல் (308)
12. தம் பதவியைப் பிறருக்கு மாற்றிக் கொடாதிருத்தல் (312)

13. கம்பெனியின் பெயரை வெளியீடு செய்தல் (147)

14. அதிகாரம் பெற்ற மூலதனம், செலுத்தப் பெற்ற மூலதனம் இவற்றை வெளியீடு செய்தல் (148)

15 குழுவின் கூட்டத்தின்போது சில அதிகாரங்களைமட்டும் கையாளுதல் (292)

16. கம்பெனியின் பொதுக் கூட்டத்தில் கடன் வாங்க அனுமதி பெருது கடன் வாங்கக்கூடாது (293)

17. சட்டப்படி சிப்பந்திகளின் வருங்காலச் சேமிப்பு நிதியையும் பிணையத்தையும் (Securities) சட்டத்தில் கூறியவாறு முதலீடு செய்ய வேண்டும் (317–418)

மேலே கூறிய கம்பெனிச் சட்டத்தின்கீழ் உள்ள பொறுப்புகளுடன் பாங்குக் கம்பெனிகள் சட்டம் 1949-ன் 46-வது பிரிவின்கீழ் இவர்கள் பொறுப்பு ஆகிறுர்கள். அவற்றைப்பற்றிய விளக்கங்களை வேறு பகுதிகளில் கூறியுள்ளோம். அண்மையில் அரசினர் தவருன முறையிலும் பிரயோசனமற்ற முறையிலும் நிர்வகிக்கப்பட்டு வரும் கம்பெனிகளின் இயக்குநர்களைப் பொறுப்பாக்கிச் சட்டப்படி நடவடிக்கை எடுத்து கம்பெனிச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஆலோசனைகளைச் செய்து வருகின்றனர். இம்மாதிரியான முயற்சிகள் நன்கு ஆராயப் பெற்று ஆங்கில நாட்டில் கோஹன் குழுவினரால் (Cohen Committee) பரிந்துறை செய்யப்பட்டது. இந்தியக் கம்பெனிகள் சட்டம் (1956–ன் பிரிவு 265-ன்படி இயக்குநர் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பகுதியை விகிதாசாரப்படி குழுவின் பிரதிநிதித்துவத்தை ஒற்றைமாற்று வாக்கிைல் (Single transferable Vote) அல்லது ஒன்று திரண்ட வாக்குகளால் ஏற்படுத்த வேண்டுமோ அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நியமனம் செய்தும் எப்போதாவது ஏற்படும் காலியிடங்களைக் கம்பெனியின் விதிகளின்படி பிரிவு 262-ல் தக்க மாற்றங்களுடன் செய்யலாம்.

இயக்குநர்களுக்கு பாங்கின்மீது கட்டுப்பாடு இருப்பினும் அதன் அன்றுடத் தொழிலை முழுநேரம் வேலை செய்யும் சிப்பந்திகளிடமும் அதிகாரிகளிடமும் ஒப்படைக்கவேண்டும். இம்மாதிரியான பொறுப்பை ஏற்க முன்வரும் அதிகாரிகளின் தகுதி, கொடுக்கப்படவேண்டிய அதிகாரங்கள், அவற்ருல் ஏற்படும் பொறுப்புகள் இவற்றையும் ஆலோசிக்க வேண்டுவது இன்றியமையாதது எனலாம்.

பொது நிர்வாகி

"நிர்வாகி" அல்லது "பொது நிர்வாகி" என்ற பதங்கள் "கிளை நிர்வாகி" என்ற சொல்லினின்று வேறுபட்டவை.

எந்த நபர் பொதுவாகப் பணியாற்றி வருகிறரோ அவரை "அலுவலர்" "Officer" என்று கம்பெனிகள் சட்டம் 1956-ல் கூறப்படும் "முதன்மை அலுவலர்" "Principal Officer" என்று பாங்குக் கம்பெனி சட்டம் 1949-ன் 29 (2) (a) பிரிவிலும் கூறப்பட்டுள்ளது. "நிர்வாகி" "முதன்மை அலுவலர்" என்ற சொற்களுக்கான இலக்கணம் பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் 5-வது பிரிவில் கூறப்படவில்லையாதலால் கம்பெனிகள் சட்டம் 1955-ன் 2-வது பிரிவின் 24-வது உட்பிரிவில் கொடுக்கப்பட்ட இலக்கணம் இங்கும் பொருந்தும். அது வருமாறு: எந்த ஒரு நபர் இயக்குநர்களின் மேற்பார்வைக்குக் கட்டுப்பட்டு நிறுவனம் முழுமையும் அல்லது பெரும் பகுதியையும் தம் நிருவாகத்தில் இருத்தி, கம்பெனியின் வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஒரு இயக்குநராகவோ அல்லது நிருவாகப் பதவியிலுள்ள எந்த நபராகவோ ஆவது இருக்கலாம்; மேற்படி நபர் பணி புரிவதற்கான ஒப்பந்தம் பெற்றோ பெறுமலோ இருக்கலாம். 35 B (1) (b) பிரிவின்கீழ்ப் புதிய நியமனம் அல்லது மறு நியமனம் செய்யப்படின், மேற்படி நிருவாகி, நிருவாக இயக்குநர், அல்லது தலைமை நிருவாகி அதிகாரியின் நியமனமோ மறு நியமனமோ ரிசர்வ் பாங்கியினுடைய முன் அனுமதியுடன் செய்யப்படவேண்டியது; இல்லையேல் செல்லாது.

மேலும் பிரிவு 35 Bயின் இரண்டாவது உட்பிரிவின்கீழ்க் கம்பெனிகள் சட்டம் 1956-ன் பிரிவுகள் 268, 269, 309, 310, 311, 387, 388 இவற்றிலுள்ள நிருவாகியைப்பற்றிய விவரங்கள் இங்கு பொருந்தாதாகையால் உட்பிரிவு 1-ன் விளக்கப்படி ரிசர்வ் பாங்கியின் முன் அனுமதி கோர வேண்டியதில்லை.

கம்பெனிகள் சட்டம் 1956-ன் 384-ஆம் 385-ஆம் கூட்டு நிறுவனமோ, சில நபர்களோ இதரக் கார்ப்பரேஷன்களோ பாங்கு கம்பெனியுள்பட நிருவாகியாக நியமனம் செய்யக் கூடாது. பிரிவு 386 இரு கம்பெனிகளில்தான் ஒரு நிருவாகி இருக்கலாமே ஒழியப் பல கம்பெனிகளுக்கு ஒரே நிருவாகி இருக்கக்கூடாது. 387-ன்படி நிருவாகிக்குக் கொடுக்கப்படும் ஊதியம் நிகர லாபத்தில் 5 சதவீதத்திற்கு மேற்படக்கூடாது. அதை அதிகப்படுத்த விரும்பினல் மத்திய அரசினரின் அனுமதி தேவை. இது சம்பந்தமாக பாங்குக் கம்பெனிகள் சட்டத்தின் 10-வது பிரிவையும் காணலாம்.

தகுதிகள் :— "நல்ல முறையில் பாங்குத் தொழில் நடத்துபவர் அறிவு மேம்பாட்டுடன் சத்திய முறையில் நடக்க வேண்டும். இத்தொழில் புரிபவர் அறிவுத்திறனே மேம்பாடான பயிற்சியோ இருக்க வேண்டும். என்பதில்லை. அவருக்குப் பகுத்தறிவு இருந்தால் போதும். மேம்பாடான பயிற்சி எனப்படுவது மனதின் ஒரு குறிப்பிட்ட துறையில் அதிகப்படியான பயிற்சி பெற்றதைக் குறிப்பிடுகிறது. பகுத்தறிவு எனப்படுவது மனதில் பல்வேறு நுண்ணிய மனவெழுச்சிகளை ஒரே சீராக வளர்த்து வருவது. பாங்கு நடத்துபவர் கவிதை புனைபவராகவோ தத்துவ மேதையாகவோ இருக்கப் போவதில்லை. அல்லது, விஞ்ஞானம், இலக்கியம் இவற்றில் கரைகாணப் போவதில்லை. இதர மக்களிலிருந்து இவரைத் தனியே பிரித்து மேதையாகக் கூறும் அளவு அறிவுச் சுடராக இருக்கவேண்டியது இல்லை. தனிப்பட்ட உயரிய தகுதிகள் இருக்க வேண்டுமென்பதில்லை. சாதாரணமாக எல்லா மக்களைப் போன்றிருப்பினும் அதுவே போதிய தகுதி எனலாம். பொது அறிவு இருப்பின் அது ஒன்றே போதும். ஒரு நபருக்கு வேண்டிய எல்லாக் குணங்களும் சீராக ஒருங்கே அமைந்தால் அந்த நபர் பாங்குத் தொழில் நடத்தத் தகுதியைப் பெறுகிறார். ஏதாவது ஒரு குணத்தின் சிறப்பினால் மட்டும் நல்ல பாங்குத் தொழிலைச் செய்பவராகக் கருதமுடியாது பாங்குத் தொழில் மிகவும் அற்பமானது, அது புரிபவருக்குக் கல்வியும் சாமர்த்தியமும் தேவையில்லை என்று கருதுவதும் ஒருதலைக் கொள்கை. கடந்த ஐம்பது ஆண்டுகளாக பாங்குகளின் முறிவு ஏற்பட்டதிலிருந்து அறியக் கிடப்பது என்னவெனில் இதரத் துறைகளில் நல்ல உயர்வு பெறத்தக்க முதல்வர்கள் போல பாங்கு நடத்துபவர்களும் நல்ல சாமர்த்தியம் பெற்றிருக்க வேண்டும்". (தி. இலாஜிக் ஆஃப் பாங்கிங்—எழுதியவர் ஜே. டபிள்யு. கில்பர்ட். The Logic of Banking by J. W. Gilbert)

பொது அருகதைகள் :— தனது பதவியை முன்னிட்டு பாங்கு நிர்வாகி கூடியமட்டும் செயல் முறையனுபவமும் கொள்கையனுபவமும் பெற்று மனதையும் மூளையையும் பயன் படுத்திச் செயல் புரியவேண்டுவது இன்றியமையாதது எனலாம். பாங்கு நிர்வாகி பரந்த அனுபவம் பெற்றிருக்கலாம். நிறைந்த கல்வியறிவு உளம் கலந்த தீவிரத் தன்மைகூட இருக்கலாம். ஆயினும் இவற்றைத் தக்க காலத்தில் பயன்படுத்தித் தாம் அந்தப் பதவிக்கு ஏற்றவர் என்று நிரூபிக்க வேண்டும். இனிய சுபாவத்துடன் பழகுகிற தன்மை அவருக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கக்கூடும் அல்லது பார்த்த மாத்திரத்திலேயே பிரச்சினைகளை எளிதில் புரிந்துக்கொண்டு அதற்கான மாற்று

என்னவென்று உடனே ஊகித்து நடப்பதால் வெற்றி கிட்டலாம். உடனே உதவியளிக்கும் நோக்கத்துடன் காலதாமதமின்றிக் கேட்ட உதவியைச் செய்ய முன்வரலாம். மனிதனுக்குக் கிடைத்துள்ள நன்கொடைகளான நிதானத் தன்மை, தயை, தன்னம்பிக்கை, முடிவெடுக்கும் தன்மை, பலரும் சான்றோன் என்று கூறக்கூடிய குணநலன், இனிய முகம். சுத்தம் இவைகளைப் பெற்ற ஒருநிருவாகி முன்னுக்கு வருவதில் ஐயம் உண்டோ! உடைகளும் ஆடைகளும் மட்டும் மனிதனை உயர்வாகக் காட்டுவதில்லை. முகம், கைகள் இவற்றையன்றி வேலை நேரங்களில் உடையும் ஆடைகளும் கவனிக்கத் தக்கவை. இனிய மனதுடன் பண்போடும் தக்க குணங்களுடனும் நடக்கும் நிர்வாகி பாங்கின் சொத்தாகக் கருதப்படுவதில் தவறு ஒன்றும் இல்லை எனலாம்.

தனிப்பட்ட தகுதிகள் :— மேலே கூறிய பொதுத் தகுதிகளுடன் ஒரு பாங்கு நிர்வாகி தனிப்பட்டதகுதிகளும் பெறல் வேண்டும்.

சுறுசுறுப்பான தன்மை :—ஒருதலையான எண்ணமின்மை—மத, சமூக அரசியல் தகவல்களில்—கவனிக்கத் தக்கவை மனிதனின் நிலையை அனுசரித்து நோக்கின் ஒருதலை எண்ணம் இல்லாது இருப்பவரே குறைவெனலாம். தமது வாடிக்கைக்காரர்களின் சமூகமத அரசியல் கோட்பாடுகளைப் பற்றி பாங்கு நிர்வாகி தமது கவனிப்பின் அறிய தகவல் எனக்கருதக்கூடாது, தமது நண்பர்களுக்குத் தனிப்பட்ட சலுகைகள் காட்டுதல் கூடாது. எல்லா வாடிக்கைக்காரர்களையும் ஒரேமாதிரியாகச் சீராக நடத்தி வர வேண்டும். தனிப்பட்ட நபர் ஒருவர் அதிக ஈடுபாடு காட்டக் கூடாது. அதேபோல் பிறர்பால் கடமைப்பட்டும் இருக்கக்கூடாது. பெரியவர், சிறியவர், ஏழை, பணக்காரர், அறிவுடையவர், அறிவாளி என்ற பாகுபாடுகளைக் கருதாது பொதுவாக அனைவருடனும் நம்பிக்கையுடன் பழக வேண்டும்.

சீக்கிரம் முடிவெடுத்தலும் தாமதமின்றி பணியாற்றலும் :— கால தாமதம் செய்யாமல் பாங்கு நிர்வாகி உடனே பரிசீலனை செய்து கவனப் பிசகின்றிச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு வாடிக்கைக்கரர்களுக்கு உதவி செய்ய வேண்டும். உடனுக்குடன் செயல்களை முடிவு கட்ட வேண்டும். வர்த்தகத்தின் உயிர் நாடி போன்றது "அனுப்புதல் செய்கை". எவன் ஒருவன் ஐயப்பாடுடன் முன் பின் ஆலோசிக்கிறானோ அவன் பாங்குத் தொழிலில் பின்தங்குவான் என்று கூறவும் வேண்டுமோ ஆயினும் அவன் 'ஆம்' என்றோ 'இல்லை' என்றோ கூற வேண்டும்

அதற்குக் கூடச் சொல்லத் தயங்கினால் அல்லது ஆழ்ந்த முடிவுக்குப்பின் கூற விருப்பப்படாது இருப்பின் அது பெரும் பிசகாகும். நிருவாகி ஒரு குறிப்பிட்ட தகவலில் பெரும் பாதகம் ஏற்படும் என்று அறிந்திருப்பின் அதைக் கூறப் பயப்படக் கூடாது. ஐயத்தின் விளைவாக ஏற்படும் பலனை பாங்கு பெற அவர் முயல வேண்டும்.

தம் சொந்த முடிவுகளும் கண்ணியமாக நடத்தலும் :— ஒரு பாங்கின் மற்றும், ஒவ்வொரு வர்த்தக, தொழில் நிருவன பொதுநிர்வாகிக்கும் இருக்கவேண்டிய மற்றுமொரு குணம் என்னவெனின் ஒரு பொருள் குறித்து தனக்கு முழு அறிவும் சக்தியும் இல்லாத பொழுது அதுபற்றி புத்திமதி கூற முன் வருதல் கூடாது. அவ்வாறு செய்யின் அவர் அறியாத்தனமாகப் பிசகுகள் செய்து நட்டத்திற்கும் பொறுப்பாளியாகக் கூடும் அதே போல் சக பாங்கு நடத்துபவர் இவரது வாடிக்கைக் காரரைப் பற்றிய நிதி நிலையைப் பற்றிச் சான்றிதழ் கொடுக்கக் கோரினால், தவறு, தீங்கு தண்டிக்கத் தகு குற்றங்களுக்குள் சகபாங்கோ, வாடிக்கைக் காரரோடு தம்மை ஈடுபடுத்தி வழக்காடும் நிலைக்குள் கொண்டுவிடாத முறையில் பதில் எழுத வேண்டும். அம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் அவர் எழுதும் கடிதங்கள் சுருக்கமாகவும் புரியும் வகையிலும் மிகவும் அடக்க மாகவும் எழுத வேண்டும்.

வேலையைப் பிறரைக் கொண்டு செய்தல் :— பொது நிர்வாகி தமது அலுவலகத்தில் உள்ள சிப்பந்திகளைக் கட்டுப் படுத்தி அவர்களைக் கொண்டு பாங்கு வேலையை நடத்தி வருவார். பாங்கு நடத்துதலை மிகவும் திறமை வாய்ந்த உதவி யாளர் களையும் எழுத்தர்களையும் கொண்டு செய்ய வேண்டும். ஆகவே தக்க உதவியாளர்களைப் பொறுக்கித் தமது பொறுப்புகளையும் விவரங்களையும் அவர்களிடம் பிரித்துக் கொடுத்து நன்கு மேற்பார்வை செய்தல் வேண்டும். நிர்வாகி பெரிய பாணிகளையும் பாங்கியின் கொள்கை சம்பந்தமான வற்றையும் கண்காணிப்பார். பொது நிர்வாகி எல்லாப் பணிகளையும் செய்வார் என எதிர்பார்ப்பது நல்லதன்று. தவிர்க்க முடியாத பெரிய செயல்களை மட்டுமே அவர் கவனித்து வருவார். தலைமைக் கணக்கர் இவருடைய மேற்பார்வையில் உள்ளார், அவர், கணக்கு சம்பந்தமான பிரிவைக் கவனித்து வருவார். இதரத் துறைகளைக் கண்காணிப்பாளர்கள் கவனித்து வருவர், அவர்களைப் பொது நிர்வாகி மேற்பார்வை செய்வார், அகண்ட பரப்பில் உள்ள கிளைகளின் வேலைகளையும் மேற்பார்வை செய்யக் கூடும்.

சட்டக் கொள்கைகளைப் பற்றித் தெரிந்திருத்தல்:— கில்பர்ட் விரிவுரைகளை நிகழ்த்திய திரு ஆர், டபிள்யு. ஜோன்ஸ் என்பவர் கூறியதாவது "செயலாற்றும் பாங்கு நடத்துபவர் போதிய சட்ட நுணுக்கங்களையும் அறிவையும் பெற்றுச் சட்டப்படி எவ்வாறு நடத்தப்பட வேண்டும், எந்தெந்த காலங்களில் அனுபவத்தை அநுசரித்துச் சட்ட வழியினின்று பிறழலாம் என்று முடிவு செய்யக் கூடும்." இதிலிருந்து போதிய கல்வியும் தேர்ச்சியும் பாங்கு நிர்வாகிக்குத் தேவை எனக் கூறாமலே விளங்கும்.

தொழிலில் பற்றுணர்ச்சி:— தம்முடன் போட்டியிடும் பாங்கு நடத்துபவருடன் மிகவும் மேலான முறையில் நட்புப் பூண்டு அவர்களுடன் செய்து கொண்ட தீர்மானங்களில் நேர்மையுடனும் பற்றுணர்ச்சியுடனும் நடந்து வரவேண்டும்.

உள்ளூர் மொழியையும் நிலைமைகளையும் அறிதல்வேண்டும்:– மேலேகூறிய தகுதிகள் நீங்கலாக நிர்வாகி எனப்படுபவர் உள்ளூர் மொழியையும் தலைமை அலுவலகம் உள்ள வட்டார மொழியையும் அறிந்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். இவற்றுடன் இந்தி மொழியும் கற்றிருக்க வேண்டும். பம்பாய் நகரில் குஜராத்தி மொழி வர்த்தக வட்டாரத்தில் இன்றியமையாததெனலாம். இதனால் ஆங்கில மொழிப் பயிற்சியற்ற இதர வாடிக்கைக் காரர்களுடன் நல்ல தொடர்பு கொள்ளுவது இவருக்கு மேலும் ஒரு பெரும் தகுதியல்லவா.

நிர்வாகி தமது நலன்களை முன்னிட்டு உள்ளூர் பணச் சந்தையின் நிலையையும் வர்த்தகப் போக்குகளையும் ஐயந்திரிபற நன்கு பயிலுதல் இன்றியமையாததெனலாம். என்றும் தன் வாடிக்கைக்காரர்களுடனும் சிப்பந்திகளுடனும் இனிய முறையில் பழகி இன்சொற்களால் உரையாடல் நிகழ்த்தியும் சந்தர்ப்பங்களை அனுசரித்து என்றும் பணி ஆற்ற முன் வரின் அவர் அந்த வட்டாரத்திலேயே மிகவும் மெச்சத்தக்க பாங்கு நிர்வாகி யெனப்பெயர் பெறுவதுடன் அவர் தொழிலும் சிறப்பாகும். திரு. பி.ஈ. ஸ்மார்ட் (P. E. Smart) எழுதிய வாசகங்கள் இங்குக் குறிப்பிடபட்டுள்ளன. விவாகரத்து செய்ய எண்ணும் கணவனும் மனைவியும், கைக்கடங்காத குழந்தைகளின் பெற்றோர்களும் பேச்சு சுருக்க முடைய நிருவாகியைக் கலந்து ஆலோசிப்பது ஆச்சரிய மாகத்தோன்றும். காலதாமதம் செய்யாது குறித்த நேரத்தில் வேலைத் தவறுதலின்றித் தமது அலுவலகத்தில் இருப்பார். ஜார்ஜ்ரே (George Rae) என்ற புகழ் பெற்ற பாங்கு நடத்துபவர் கூறுவதாவது: "பாங்கியின் மேசைகள்

கவுண்ட்டர்கள் போன்று பாங்கு வேலை நேரங்களில் நிர்வாகியும் ஒரு தளவாடம் போன்றிருக்க வேண்டும்." சுருங்கக் கூறின் நிர் வாகியெனப்படுபவர் நன்கு பிணைந்து மாற்றங்களுள்ள பல்வேறு பணிகளைப்புரியும் வாய்ப்பும் தன்மையும் பெற்றவர்" எனக் கூறினல் மிகையாகாது.

நீக்க வேண்டிய தவறுகள் முடிவெடுக்க இயலாத நிலை :-- பாங்கு நிருவாகி சிலதவறுகளை உடனே நீக்கினல் தான் சீரிய முறையில் பணியாற்றவியலும். அவர் வழக்கமாகப் பெரும் ஆலோசனையில் ஈடுபட்டு முடிவெக்க இயலாத வராக இருப்பின் அவர் தமது நல்ல வாடிக்கைக்காரர்களைக் காக்க வைத்தாலும் பாங்கு செயல் புரிவதில் காலதாமதமேற்பட்டாலும் பொன் போன்ற சமயத்தைக்களைவதால் வேலையில் தடங்கல் ஏற்படுகிறது. இவரது முடிவுக்கு வந்த கோரிக்கைகளைப் பற்றி மனச்சிந்தனையில் ஈடுபட்டு முடிவெடுப் பதில் தாமதம் ஏற்படின் மேலும் மேலும் வேலைகள் குவிந்து போய்ச் சீரிய முறையில் முடிவு செய்ய முடியமால் அவசரமாக ஏனே தானே என்று முடிக்கவும் அல்லது வரும் வர்த்தகத்தைத் தடை செய்து விடவும் கூடும்.

கண்டிப்பு, உறுதியின்மை :-- இரண்டாவதாக எக் கொள் கையைக் கொண்டாலும் வன்மையாகக் கடைப் பிடித்தல் இன்றியமையாதது. எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு கடன் விண்ணப்பத்தைக் கருதி அனுமதிக்கப் போவதில்லை என்று முடிவெடுத்தபின், விண்ணப்பதாரர் வந்து அவ்விண்ணப் பத்தைத்தம் வசமாக்கி மாற்றித், திரும்பக் கருதுமாறு செய்து, கடன் அனுமதி செய்தால் அந்த நிர்வாகி கண்டிப்பான கொள்கையற்றவர் எனலாம். இதனுல் இவரது சொந்த எண்ணத்திற்கு மதிப்பில்லாது போவ தோடல்லாமல் மதிப்புள்ள காலமும் நேரமும் வீணுகி வாடிக்கைக் காரரின் உரையாடலில் செலவிடப்பட்டு விடுகிறது. மேலும் வாடிக்கைக்காரர் அவ்வாறு வாதம் செய்வதின் நோக்கம் என்னவெனில் பாங்கு நிர்வாகியின் மனது உறுதியானதாக இல்லை என்றறிந்துகொண்டதனுல்தான்.

அதிகாரத்தின் வரம்பு

முகவராகக் கட்டுப்படுத்தக்கூடியது :— பாங்கியினுடைய பொது நிருவாகியை அதனுடைய பொது பதிலாள் எனக் கூறலாம். அவர் தமது அதிகாரங்களை எல்லையின்றிச் செலுத்த முடியாது. அதைக் கட்டுப்படுத்த இயக்குநர்கள் உள்ளனர்.

ஆயினும் அவர் தம் செயல்களால் பாங்கு நிறுவனத்தைக் கட்டுப் படுத்துவர். அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகார எல்லையை அவர் மீறினும் வெளியார்கள் பலர் பொது நிருவாகியின் அதிகார எல்லையைத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆதலால் தமது செய்கைகளால் ஆதாயத்தைக்கோரி மனுச் செய்தாலும், பொது நிருவாகி பாங்கு நிறுவனத்தையும் கட்டுப்படுத்துவார். பாங்க் ஆப் நியூ சௌத் வேல்ஸ் எதி. ஒளஸ் டன் *1879* அப். கேஸ் *270 (289)* Bank of New South Vales Vs Owston 1879. Appcas 270 (289) Smith J) என்ற நீதிபதி மேற் கண்ட கொள்கையை ஆதரித்துக் கூறுவதாவது". பாங்கு நிர்வாகி தமது முதலாளிகளுக்காக பாங்குத் தொழிலைச் செம்மையாக நடத்திவரும் நிலையில் அவர் இயல்பாகப் பணியாற்றும்போது செய்யப்பட்ட செயல்கள் அனைத்தும் முதலாளிகளைக் கட்டுப்படுத்தும். ஆயினும் அவர் தமக்குக் கொடுக்கப்பட்ட அதிகார வரம்பை மீறி நடந்ததை விளக்கிக் காட்டினால் முதலாளிகள் அம்மாதிரியான செய்கைகளுக்குப் பொறுப்பு ஆகார். அந்த நிருவாகத்தில் செய்யப்பட்ட தீங்குகள், பிழைகள் குற்றங்களுக்கெல்லாம் சில குறிப்பிட்ட சந்தர்ப் பங்களில் மட்டும் முதலாளிகள் பொறுப்பேற்க நேரிடும்.

குற்றமான செயல்கள் :— பணியாளர் செய்யும் குற்றங்கள் எசமானரைக் கட்டுப்படுத்திப் பொறுப்புகளில் ஈடுபடுத்தும் என்ற நோக்கம் ஐயப்பாடுள்ளதாகக் கருதப்படுகிறது. குற்றம் செய்த காரணத்திற்காக வேலையாளை உத்தியோகத் தினின்று நீக்கிவிட்டால் எசமானரின் பொறுப்பு நீங்கிவிடாது. (காலின்ஸ் என்ற நீதிபதியின் தீர்ப்பு ஷெர்டிவ் எதிராக பெய்லி என்ற வழக்கு (*1905*) *1*. இ.ஸ. *237*பக் *241* Peroclins M. R. in Chertive Vs Baily1905 1 K. B. 237 P. 241) இந்த முடிவிற்கு எதிராக பல்வேறு வழக்குகளில் வேலையாட்கள் செய்த குற்றச் செயல்கள் எசமானர்களைக் கட்டுப்படுத்தும் என்று தீர்ப்பளிக்கப் பட்டுள்ளன. பணிஆள் தனி நபர் ஒருவருக்குத் தீங்கிழைப்பின் (Tortwons) அது குற்றமாகக் கருதப்படாமல் (Criminal) அது அந்தத் தீங்கிழைத்ததின்பின் விளைவும் குற்றம் இழைத்தபின் விளைவு இவ்விரு செயல்களால் எஜமானரைப் பாதிக்குமா என்பதைப்பற்றி உற்று ஐயத்துடனே கருதவேண்டியிருக்கிறது. லா ஆஃப் பாங்கிங் என்ற புத்தகத்தில் (Law of Banking by R. T. S. Chorley) திரு. ஆர். டி. எஸ். ஷோர்லே கூறுவதாவது பிரஸ் தாபிக்கப்பட்ட தகவலில் அது குற்றமற்ற செயல் என்று கொண்டு அந்தச்செயல் புரியப் பணியாளுக்கு அதிகாரம் உண்டா எனக்கருதி அதற்கு உண்டெனப் பதில் கிடைத்தால்

அப்போது எஜமானரும் கட்டுப்பட்டிருக்கிறார் என்பது விளங்கும். பாங்கு ஊழியர்களும் சிப்பந்திகளும் நடத்திய தீச்செயல்களும் குற்றங்களும் பாங்கு நிறுவனம் பிறருடைய உரிமையான பொருள்களை கைமாற்றம் செய்த குற்றத்திற்கு ஆளாகவேண்டி நேரிடும்.

பாங்கு கம்பெனியின் பொது நிர்வாகியின் பொறுப்புகளும் உரிமைகளும் :—பாங்கு கம்பெனிகள் சட்டத்தின்கீழ்ப் பொது நிர்வாகி என்று கூறப்படுபவர் "தலைமை அதிகாரி" என்று பெயரிடப்படுகிறார். சட்டப்படி அவர் பொறுப்பாக இருக்கிறார். எனவே அவர் செய்யவேண்டிய பணிகள் சட்டத்தினுள் கட்டுப்பட்டவையெனலாம். இது சம்பந்தமாக சர்தார் குலாப்சிங் எதிராக பஞ்சாப் ஜமீன்தார் பாங்கு லிமிடெட் ஆ.இ.ரி. 1942 லாஹூர் 47- Sardar Gulab Singh Vs. Punjab Zamindar Bank Ltd Ari 1942 Lah. 47) என்ற வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பு வருமாறு :—கம்பெனி செய்துகொண்ட ஒப்பந்தத்தைச் சிதைக்க எண்ணி அது தனது சங்க விதிகளை (Articles of Association) மாற்றி அமைத்தாலும் செல்லாது. இவ்வழக்கில் சங்க விதிகளின் கீழ் சர்தார் குலாப்சிங் என்பவரை நிர்வாக இயக்குநராக நியமித்தனர். பணி ஒப்பந்தம் தொக்கி நிற்கும் ஒப்பந்த (Implied terms) மாதலால் கம்பெனி தனது நிர்வாக இயக்குநரின் உரிமைகளைப் பாதிக்கும்வண்ணம் சங்க விதிகளை மாற்றி அமைக்க இயலவில்லை. அவ்வாறு அந்த விதிகளை மாற்றியமைத்தால் ஒப்பந்த முறிவு ஏற்பட்டு அதன் பின் விளைவாக நிர்வாக இயக்குநர் பணி ஒப்பந்தமுறிவிற்குக் கம்பெனியின் மீது வழக்குத் தொடரலாம் என்றும் பாங்கு அந்த நிர்வாக இயக்குநரைப் பணி செய்வதினின்று நீக்கம் செய்ததை அல்லது தடுப்புச் செய்ததைக் குறித்து பாங்கு நிர்வாக இயக்குநர் பாங்குக் கம்பெனியைக்கட்டுப் படுத்த முடியாது. இந்த வழக்கின் முடிவு தற்போது பாங்கு கம்பெனி சட்டத்தின் 10வது பிரிவின்கீழ் மாறி அமைகிறது. அதன்படி பணி ஒப்பந்தமும் ஊதியமும் இன்ன காலம்வரை அமைய வேண்டும் என்று வரையறுக்கப் பட்டுள்ளது.

இரகசிய இலாபங்களும் தரகுகளும் :—பாங்கு சம்பந்தமான பணியில் ஈடுபட்ட பொது நிர்வாகி பாங்குத் தொழிலில் பெற்ற இலாபத்தைக் கணக்கு செய்துவிட வேண்டியது. ஒரு வாடிக்கைக் காரருக்கு பாங்கு பணசௌகரியம் செய்து கொடுப்பதற்காக தரகு பெற்றால் அந்த தரகுத் தொகையை பாங்கியில் சேர்க்க வேண்டியது. அதைத் தம் சொந்தச் சொத்தாகப் பாவிப்பது தவறு. தான் பணியாற்றும் பாங்கை இன்னொரு

பாங்குடன் பிணைக்க ஏற்பாடு செய்ததில் தரகு கிடைப்பின், அதையும் அவ்வாறே பாங்கியில் சேர்க்க வேண்டும். ஜெனரல் எக்ஸ் சேன்ஜ் பாங்கு எதிராக ஹாரா னர் (1870) லா. ரி. 9 ஈக் 485 (General Enchange Bank Vs Horaner) (1870) L. R. 9. EG 485, என்ற வழக்கில் உயர்நீதிபதி ரோமில்லி பிரபு கூறிய தீர்ப்பாவது "அவர் ஒரு நிருவாகி. அவர் கம்பெனியின் பங்கு தாரர்களைக் கண்டிப்பாக கலந்தாலோசனை நடத்தி அவர்களுடைய அக்கரையைப் பெரிதாகக் கருதிப் பாடுபட வேண்டும். இது சம்பந்தமாக எனது அபிப்பிராயம் யாதெனில் கிடைத்த ரொக்க இலாபத்தைத் தம் சொந்தப் பணமாக்க கருதி எடுத்துக் கொண்டால் அவர் நிருவாகி என்ற நிலையில் செய்வது தவறு. இந்தத்தகவல் பாங்கு தாரர்களுக்குத் தெரியாது அவர்களுடைய அனுமதியும் பெறவில்லை".

கம்பெனிசட்டம் 1956ன் கீழ் :— கம்பெனியை 1956ன் கீழ்ப் பொது நிர்வாகி எனப்படுபவர் இயக்குநர்களின் பதவியை வகிப்பதால் இயக்குநர்கள் கம்பெனி சட்டத்தின் கீழ்ப் பெற்றுள்ள பொறுப்புகளை இவரும் பெறுகிறார்.

கிளை நிர்வாகி :— கிளை நிலையங்களில் நடைபெறும் வர்த்தகத்தைப் பொறுத்தமட்டில் இவர் அதிகாரம் பெற்றுள்ளார். தன்கிளை முன்பணமாகக் கொடுத்துள்ள பணத்தை உடனே கட்டுமாறு தாக்கீது கொடுக்கலாம். ஆனால் வேறு கிளைகளோ, தலைமை அலுவலகமோ கொடுத்த முன்பணத்தைப் பொறுத்த மட்டில் இவருக்குப் பொறுப்பு இல்லை. ஏதேனும் கடன் மனுக்கள் வரின் அவற்றைத் திருப்பும் போது தலைமைக் காரியாலயம் தான் திருப்பியது என்று கூறி பழியைத் தலைமை அலுவலகத்தின் மீது போடுவது தவறு. அது தாம் செய்த சிபார்சு என்று தெரிந்து இருந்தும் கூட அவ்வாறு செய்தல் பிசகு.

"கிளை" அல்லது "கிளை அலுவலகம்" எனப்படுவது பிரிவு5ன் உட்பிரிவு (1) a யில் பாங்கு கம்பெனிச் சட்டத்தில் இலக்கணம் கூறப்பட்டது.

பாங்கு கட்டிடம், சிப்பந்தி, சாதல் வார் மற்றும் இதர நவீன சாதனங்கள் பாங்கு கட்டிடம் :— பாங்கியினிடைய அந்தஸ்தைப் பொறுத்து அதன் கட்டிடம் இருக்க வேண்டும். பாங்கு மிகவும் மேம்பாடாக உயர்ந்திருக்கும் என்று கூறவும் வேண்டுமோ பெரிய பாங்கு இருப்பின் கட்டிடமும் மிகவும் மேம்பாடாக உயர்ந்திருக்கும். பாங்கு பெரிய கட்டிடமாக இருப்பின் பாங்கு

அதனைத் தனது நிரந்தர இடமாக வைத்துக்கொண்டு தொழில் நடத்தும், மேலும் சௌகரிய வழிகளுடன் இருப்பதாலும் கவர்ச்சியான வகையில் மிகவும் அழகுறக் கட்டப்படின் அதுவே போதிய விளம்பரமாக அமையும். வாடிக்கைக்காரர்களுடைய இடங்களுக்கு அருகாமையில் இருப்பதாலும் வர்த்தகப் பகுதியில் அமைந்திருப்பதாலும் போதிய தொழில் முன்னேற்றம் ஏற்படுவது திண்ணம். பாங்கு நடத்துவதற்கான பல நன்மைகளை நோக்கு மிடத்து கட்டிடத்தில் முதல் முடக்குவது தவறு என்றும் அதனின்று குறைந்த வருவாய் வருவதாகப்புகார் செய்வார்கள் சிலர், பாங்கு நடத்துபவர்கள் பொதுவாக இலாபத்தினின்று கட்டிடத்தின் தேய் மானத்தைத் நட்டமாக எழுதி வருகின்றனர். லண்டனில் மிகவும் மதிப்புக் கூடியுள்ள பெரிய நிலப் பகுதியின் விலை பாங்க் ஆஃப் இங்கிலாந்து உள்ள கட்டிடம், பாங்க் ஆஃப் இங்கிலாந்து சொத்துக்களில் காட்டப்படுவதில்லை. அதே போன்று பல நாடுகளில் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா பெற்றுள்ள கட்டிடங்கள் கணக்கில் வராமல் முடங்கிய சரக்கு போன்று உள்ளன. அவற்றின் புத்தக விலை நிலவில் உள்ள விலையை விட மிகவும் குறைவாக உள்ளது. கட்டிட அமைப்பையும் உருவத்தையும் பொறுத்து பாங்கியின் தேவைகளும் அதற்கான முதலீடும் இன்னதென்று கூறலாம். (திஃபண்டமெண்டல்ஸ் ஆஃப் குட் பாங்க் பில்டிங் எழுதியவர் ஆல்ஃபிரட் ஹாப்கின்ஸ். The Fundamentals of good Bank Building by Alfred Hopkins) கட்டிடத்தில் முதலீடு செய்யப்பட்ட தொகை கொடுக்கப்பட்ட மூலதனத்திற்கும் ரிசர்வு நிதிக்கும் ஒரு விகிதத்தில் இருக்க வேண்டும். பாங்கியின் வளர்ச்சியை மனதில் இருத்தியே பாங்கு கட்டிடத்திற்கான மதிப்பீடு செய்தல் வேண்டும்:

பொதுவாக சிப்பந்திகளைப்பற்றி:—பொது நிர்வாகி, கிளை நிர்வாகி இவர்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் பற்றி வேறொரு பகுதியில் கூறியுள்ளோம். நிர்வாகியின் திறனால்தான் பாங்கு மிகவும் உயர்ந்த முறையில் தொழில் புரிகிறது என்பது ஒருதலைக் கூற்று. இதர அலுவலர்கள், கணக்கர் மற்றும் உள்ள சிப்பந்திகளின் ஒன்றியப் பணியினால்தான் அத்தகைய முன்னேற்றம் ஏற்படும். தங்களுடைய சிப்பந்திகளுக்குப் போதிய பயிற்சி இல்லாமலும் அவர்களுடைய நலன்களைச் சற்றேனும் கவனியாமலும் பல பாங்கு கம்பெனிகள் இருந்து வந்தன இப்போது மேற்படி பாங்கு கம்பெனிகள் மிகவும் அவதியுறுகின்றன. புதிய பாங்குகள் திறக்கப்பட்டவுடனே

அவற்றைக் கண்காணிக்க அனுபவம் நிறைந்த முதிர்ந்த அலுவலர்களை நியமிக்கவேண்டி அதற்காகப் பழைய பாங்குகளில் உள்ளவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்துத் தங்கள் வசம் இழுத்துக்கொள்கின்றனர். பழைய பாங்குகளும் தொழில் வளர்ச்சியின் காரணங்களால் இவர்களை நிறுத்திக்கொள்ளப் பாடுபடுகின்றனர். அகவிலையின் கடுமையான ஏற்றத்தின் காரணத்தால் பாங்குச் சிப்பந்திகளிடையே அமைதி குலைந்து மன நிறைவின்றி வாழ ஆரம்பித்துள்ளனர். வங்காளப் பகுதியின் இம்பீரியல் பாங்க் ஆஃப் இந்தியாவின் சிப்பந்திகள் 1946-ல் ஒரு மாதம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து இதர பாங்குகளிலும் இந்த நோய் பரவியது. இதையடுத்து இந்திய அரசினர் பாங்கு கம்பெனிகள், இன்ஷுரன்ஸ் கம்பெனிகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பரவி யிருப்பதால் அந்தந்த இராச்சியங்கள் தத்தம் விருப்பப்படி சட்ட மியற்றுவதையும் துண்டு துண்டாகச் சட்டமிடுவதையும் தடுத்து இந்தப் பூசலைத்தீர விசாரணை புரிய ஒரு பொது ட்ரிபுயுனலை (Tribunal) நியமனம் செய்து அவசரச் சட்டமொன்றைப் பிரகடனம் செய்தனர். இந்த ட்ரிபுயுனலின் தலைவராகக் காலஞ் சென்ற திரு. சாஸ்திரி அவர்களும் பேராசிரியர் வி. எல் டிஸௌசா அவர்களும் இப்புத்தகத்தின் ஆசிரியரும் உறுப்பினராக அமர்ந்து இந்தத் தகவலை அடியிலிருந்து மறுமுறை அலசி விசாரணை செய்தனர். இந்த ட்ரிப்யுனலின் தீர்ப்புகளை பாங்குச் சிப்பந்திகளும் பாங்கு நிருவாகிகளும் ஏற்க மறுத்தனர். ட்ரிப்யுனலின் சில தீர்ப்புகள் உயர்திரு ஜஸ்டிஸ் ராஜாத்யக்ஷா (Justice Rajadhyaksha) அவர்களால் மறுமுறை பரிசீலனை செய்ய விடப்பட்டது. பரிசீலனையின்போது அவர் இறந்த காரணத்தால் உயர்திரு ஜஸ்டிஸ் கஜேந்த்ர கட்கர் (Justice Gajendragadkar) அவர்கள் இதை நன்கு ஆராய்ந்து முடிவுகளைத் தெரிவித்தார். அவர் கொடுத்த மாற்றங்களுடன் இந்த ட்ரிப்யுனலின் தீர்ப்பை இந்திய அரசினர் ஏற்றுக்கொண்டனர். தற்போதுள்ள பாங்கு ட்ரிப்யுனலின் உறுப்பினராக உள்ள ஜஸ்டிஸ் கே. டி. தேசாய் பாங்கு தொழிலுக்கும் அதன் சிப்பந்திகளுக்கும் தோன்றிய தகராறை விசாரித்தார். இம்மாதிரியான தொழில் தகராறுகளை நிகழவிடாமல் பாங்கு முதலாளிகள் சற்று நிலைமையை ஆய்ந்து தங்கள் சிப்பந்திகளுக்கு காலா காலத்தில் சௌகரியங்களையும் நலன்களையும் அவ்வப்போது கொடுத்து வந்திருப்பின் இந்த மோசமான நிலையெய்திருக்காது. மேலும் அலுவல் புரிபவரை மனிதராக மதித்து நடத்துதற்குரிய நிலையில் அவர்களைக் காணத் தவறியதன் காரணத்தாலும் இம்மாதிரியான வேறுபாடுகள்

தோன்றின எனலாம். சில அயல் நாடுகளில் உள்ள பாங்கு நிறுவனங்கள் தங்களுடைய சிப்பந்திகளுக்கும் அவரது குடும்பத்திற்கும் சிகிச்சை அறுவைச் சிகிச்சை, பல் வைத்தியம், குடும்பத்திற்குத் தேவை ஏற்படும் காலத்தில் மருத்துவ விடுதியுள் வைத்து வைத்திய உதவி கொடுத்தல் போன்றவற்றை உயரிய முறையில் இலவசமாக அளித்து வருகின்றனர். குறிப்பாக ஐக்கிய அமெரிக்க நாடுகளில் பாங்கு நிர்வாகிகள் தங்கள் சிப்பந்திகளின் நலனைக் கோரி காண்டீன்களையும் நுகர்வுப் பொருள்களையும் வாங்கிக் கொடுத்து உதவுகின்றனர். எனவே சிப்பந்திகள் தங்கள் நலனுக்காகத் தொழிற் சங்கங்களை நிறுவ முயலுவதில்லை. இதைத் தொழில் நடத்தும் ஃபாக்டரித் தொழிலாளிகளுக்குத்தான் தேவைப்படும் என்று முடிவு செய்து கொண்டுள்ளனர். ரிசர்வு பாங்கியின் கவர்னராகப் பணியாற்றி வந்த சர் சிந்தமண் தேஷ்முக் (Sri Chintaman Deshmukh) அவர்களின் உழைப்பால் ரிசர்வு பாங்கு பம்பாயின் அலுவலகத்திற்கு நல்ல காண்டீனும் (Canteen) மருத்துவ மனையில் சிலபடுக்கைகளும் ரிசர்வு பாங்குச் சிப்பந்திகளுக்கென எற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தான தங்கள் பொறுப்புகளை உணர்ந்த சில பெரிய பாங்குகள்கூட இப்போது இவ்வாறான வசதிகள் அளிக்க முன் வந்துள்ளன. எக்காலமும் எழுத்து வேலையில் ஈடுபட்டு மனச் சோர்வு அடைந்த பாங்கு ஊழியர்களுக்குப் பொழுது போக்குக்காக விளையாட்டுப் போட்டிகளை நடத்தி ஊக்கம் அளித்து வருகின்றனர். இவர்களுடைய அறிவுத்திறனைச் செம்மைப்படுத்த வேண்டி ஞாபக மூட்டும் பயற்சிகளையும் தேர்வுகளுக்கான புத்தகங்களையும் நூல் நிலையங்களையும் நிறுவி வருகின்றன. இண்டியன் ஃபைனான்ஸ் (Indian Finance) காமர்ஸ் (Commerce) எகானமிஸ்ட் (Economist) போன்ற பொதுத் தாள்களையும் படிக்கச் சந்தர்ப்பம் அளிக்கின்றனர். பாங்குச் செலவில் சிப்பந்திகளையும் அதிகாரிகளையும் ஒன்றாக உல்லாசப் பிரயாணம் செய்ய எற்பாடுகள் செய்து அதன் மூலம் ஓற்றுமை யுணர்ச்சியை வளர்த்து வருகின்றனர். மனமகிழ்ச்சியும் நிறைவும் கொண்ட ஊழியர்கள் ஒரு பாங்கிற்குக் கருவூலமென்றால் மிகையாகாது. பாங்குகளின் வேலை நேரம் கடை நிறுவனங்கள் சட்டத்தை ஒட்டிக் கட்டுப்படுத்தப்படுகிறது. அவ்வப்போது பாங்குத் தீர்ப்புகளை ஒட்டியும் கட்டுப் படுத்தப்படுகிறது. விடுமுறை, தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு, உடம்பு சரியின்மையால் கோரும் ரஜா இவைகளை டிரிப்யுனலின் (Tribunal) தீர்ப்பின்படி முடிவு செய்யப்படும். சிலபாங்கு நிறுவனங்கள் தங்கள் சிப்பந்திகளுக்காக

அறிவூட்டும் புத்தகங்களையும், கைப்புத்தகங்களையும் வாங்கி வைத்துள்ளனர். பாங்கு சம்பந்தமான பிரச்சினைகளைத் தங்கள் அலுவலக மாத வெளியீட்டில் விளக்கமாக எழுதி வருகின்றனர்.

சாதல்வார் :-- (Stationery) பேரேடு, மற்றும் இதரப் பதிவுப் புத்தங்களாகிய, உள்ளேவரும் மாற்றுண்டியல் புத்தகம், வெளியேறும் மாற்றுண்டியல் புத்தகம், தேவையான கைப் புத்தகங்கள் இவைகளை என்றும் கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். செக்குப் புத்தகங்கள், பணம் செலுத்து ஏடுகள், செலவுச் சான்றிதழ்கள், கணக்குத் திறப்பதற்கான நமூனுக்கள் உத்திரவாத நமூனுக்கள், இழ்ப்பீடு நமூனுக்கள் இவைகளையும் கைவசம் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். கவர்ச்சியாகவும் அழகு பெறத்தகு முறையிலும் அச்சிடப்பட்ட திருமுகத் தாள்கள் அவற்றில் பாங்கியின் பெயர் கெட்டியெழுத்தில் இருப்பதை தொடர்ந்து தந்தி முகவரி, தொலை பேசி எண், தலைமை யலுவலகத்தின் முகவரி இவற்றையும் காணலாம். எழுதப்பட்ட கடிதத்தைக் காண்பவர் இப்புற அழகின் மூலம் சற்று உயர்ந்த எண்ணம் கொள்ள வழியாகும் எனலாம். மேலான முறையில் உருவாகிய கடிதமெழுதும் காகிதத்தை உயர்ந்து அழகு பெற விளங்கும் ஒரு கட்டிடத்திற்கு ஒப்பிடலாம். அக்கடிதத்தின் கவர்ச்சி அந்த பாங்கியின் நிதிவன்மையை நன்கு எடுத்துக் காட்டும் பாங்கு சதால்வர்களில் தனித்தன்மை பெற்று விளங்கும் உயர்தர ஓவியரிடம் திருமுகத்தாள் அமைப்பு வேலையை ஒப்படைப்பது நலமேயாகும். தன்னுடைய அனுபவம், வசதிகள் இவற்றின் துணைகொண்டு அவர் தனக்கு கொடுத்த வேலையை பாங்கியின் விருப்பப்படி செய்து முடிப்பார். செலாவணி வர்த்தகத்தில் ஈடுபட்ட பாங்குகள் அனைத்தும் தனிப்பட்ட தந்திக் குறியீடு களையும் வாசகங்களையும் பெற்றுள்ளன. இதனுல் தந்திக் கட்டணம் குறைகிறது எனலாம். இவற்றுடன் தத்தம் கிளைகள் அனுப்பும் தந்திச் செய்திகளை உண்மையான இடத்தினின்று வந்தவை என்று கொள்ளவும் இடமாகிறது. கொடுக்க வேண்டிய தகவலைத் தெரிவித்ததும் தனிப்பட்ட பொருள்படும் சொல்லை அடை மொழியாகச் சேர்க்கப்படும். இதனுல் அனுப்பப்பட்ட தகவல் உண்மையானதென்று கண்டு கொள்ள இயலும். தனிப்பட்ட பொருள்படும் சொல்லின் விளக்கம் அனைவருக்கும் தெரியாத வண்ணம் பாங்கியின் தலைமை அதிகாரியிடம் வைக்கப்பட்டிருக்கும்

நவீன சாதனங்கள் :— அலுவலகத்திற்கு மிகவும் தேவையான சாதனங்களுடன் கணக்குகளைக் கண்காணிக்கவும் மேஜைகளில் இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

இயந்திரங்களைக் கொண்டு கணக்கெழுதும் முறை நாளுக்கு நாள் நடைமுறையில் வருவதாலும் அதனுல் பல நன்மைகள் உண்டென்று கருதப்படுவதும் வரவேற்கத் தக்கதே. இந்த நவீன யுகத்தில் இயந்திரத்தின் மூலம் பல மாறுதல்கள் ஏற்படுகின்ற காரணத்தால் இந்திய பாங்குகள் கூட அவற்றை நிறுவலாம். இதனுல் ஏற்படும் நன்மை தீமைகள் பின்வரும் பகுதிகளில் விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.

வாலாயப் பணியினுல் ஏற்படும் மனச்சோர்வினின்று விலக்குபெறல். **பழையன கழிதலும் புதியன புகுதலும்**— இயந்திர யுகமாகி உள்ள இந்த நிலையைக் காணும்போது பல்லாண்டு காலமாக மக்கள் வாலாயப் பணியில் ஈடுபட்டு மன உளைச்சலுடன் அவதியுறுபவர்களை அந்தச்சிரமத்தினின்றும் நீக்கி, அவர்கள் இதுகாறும் கைக்கொண்டு செய்து வந்த வேலையை வேகமாகச் சிறு சிறு இயந்திரங்கள் மேற்கொண்டு பாங்குப் பணியைத் திறம்பட செய்ய முன்வந்துள்ளன. பிழை திருத்தமின்றியும், தூய முறையிலும் நுண்ணிய விவரங்கள் உள்ள பதிவுக்கட்டுகளைக் கண்ணிமைப்போதிலே கோரிய தகவல்களை கோத்து எழுதிவிடுகின்றன. பழங்கால முறையில் பயன்படுத்தப்பட்ட பேனு—மை கொண்டெழுதப்பட்ட பேரேடுகள் கைப்புத்தகங்கள் இவை மறைந்து வருகின்றன எனலாம்.

பயிற்சி பெற்ற அலுவலர்கள் கிடைக்காத காரணத்தால் வர்த்தக, கூட்டுறவு பாங்குகளின் தொழில் முன்னேற்றமடைய வில்லை எனலாம். ரிசர்வு பாங்கு இதற்கான முயற்சிகளை எடுத்துக் தக்க பயிற்சி கொடுத்து வருகிறது. பம்பாய் மாகாணக் கூட்டுறவு நிலயத்தின் சார்பில் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம் ஒன்றை, பூனுவில் ரிசர்வு பாங்கியினுல் உதவித் தொகை அளிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை பூனுவின் நிலயத்தில் 20-ராச்சியங்கள் இந்தப்பயிற்சி வசதியைப் பெற்றுள்ளன. இவற்றில் பயிற்சி பெறுபவர்களில் ⅔ பகுதி "பீ" பிரிவு ராச்சியங்களிலிருந்தும் "ஸி" பிரிவு இராச்சி யங்களிலிருந்தும் வந்தவர்கள்.

வர்த்தக பாங்குகளில் உள்ள சிப்பந்திகளுக்குப் பயிற்சி அளிப்பதைப்பற்றிக் கொஞ்ச காலமாகவே ரிசர்வு பாங்கு ஆலோசித்து வருகிறது. இந்திய பாங்குகள் சங்கத்தின் பிரதி நிதிகளுடனும் இந்திய பாங்கு நிலயத்துடனும் பேச்சு வார்த்தைகள் 1953–ல் நடத்தப்பட்டது. இதையடுத்துப் பயிற்சி நிலயம் ஒன்றைத் தொடங்கி, அதற்கான திட்டங்களை வகுத்து

அதை அட்டவணைப்படுத்தப்பட்ட பாங்குகளுக்குச் சுற்றறிக்கையாக அனுப்பியது. இங்கிலாந்து, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் அமைந்துள்ளது போன்ற பாங்கு எழுத்தர் (சிப்பந்திகள்) கல்லூரி ஒன்றை பம்பாயில் தொடங்கியுள்ளனர். அந்தக் கல்லூரியில் நேர்முக வகுப்பில் பாங்குத்தொழில் நடத்தும் முறைகளைக் கற்றுக் கொடுத்து, கடன் சம்பந்தப்பட்ட செலாவணிப்பத்திரம், உண்டியல் இவற்றின் மாதிரிகளைக் காண்பித்து செயல் முறைக்கென பெயரளவில் பயிற்சிக்கான மாதிரி பாங்கு ஒன்றை நடத்தி வருகிறார்கள். அந்தப் பெயரளவில் பயிற்சிக்கான மாதிரி பாங்கியில், நவீன பாங்கியில் உள்ள பகுதிகள் துறைகள் இவைகளைக் காட்டி நடத்திவருகிறார்கள். இப்போதைக்கு மேற்பார்வையிடும் அலுவலர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் பல்வேறு பெரிய ஊர்களிலும் இதன் கிளைகள் திறக்கப்பட்டு அங்குள்ள பாங்குச் சிப்பந்திகள் அனைவருக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

இன்னும் சில பெரிய பாங்கு நிறுவனங்கள் அவற்றின் அதிகாரிகளுக்குப் போதிய பயிற்சி வசதி அளிக்க பாங்கு அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைக்காத காரணத்தால் தங்கள் சொந்த முயற்சியிலேயே தங்கள் வசதிக் கேற்பத் தனிப்பயிற்சி கல்லூரிகளைத் திறந்துள்ளனர்.

பாங்கு கணக்குமுறை இயந்திரமாக்குதல்-நன்மைகள்

பாங்கு கணக்குமுறையை இயந்திரமாக்குதலால் கீழ் கண்ட நன்மைகள் ஏற்படுகின்றன.

சிப்பந்தி சாதல்வார் இடம் இவை சிக்கனமாகப் பயன் படுத்தல் :— இயந்திரக் கணக்கு முறையைப் பெற்றுள்ள பாங்கு அதிகப்படியாகவும், கூடுதலாகவும் உள்ள தொழிலைக் குறைந்த சிப்பந்திகளுடன் எளிதில் நடத்த இயலும். சிப்பந்திகளை அதிகரிக்காமல் கூடுதல் எண்ணிக்கையில் கிளைகளைத் திறக்க முற்படலாம். தொழில் பெருக்கத்தின் காரணத்தால் அதிகச்சிப்பந்திகளை நியமனம் செய்ய வேண்டியேற்பட்டு அதன் விளைவாக இடநெருக்கடி யேற்படுகின்றது. எனவே பாங்கு நிறுவனங்கள் தங்களுடைய கட்டடங்களைப் பெருக்க இயலாது போகிறது. இயந்திரங்களை நிறுவியதும் போதிய இடவசதி யேற்படுகிறது. சாய்வு மேஜைகளையும், கால்வைக்கும் பீடங்களையும் குறைந்த எண்ணிக்கையில் பயன்படுத்தலாம் குறைந்த எண்ணிக்கையில் பேரேடுகளைப்பயன் படுத்துவதால் உதவிப் புத்தகங்களும் துணைப்புத்தகங்களும் கை யேடுகளும் சிக்கனமாகவே கையாளப்பட்டு வருகின்றன.

நேரத்தின் சிக்கனம் :— வாடிக்கைக்காரர் தனது கணக்கு நிலையனைத்தும் ஒரே சமயத்தில் அறிந்துகொள்ளவியலும். குறிப்பிட்ட தேதிவரையிலும் ஒருகண நேரத்தில் தெரிந்து கொள்ள வசதிப்படுகிறது. கையேடு அல்லது கைப்புத்தகத்தை எழுதிக்கொடுப்பதில் ஏற்படும் கால தாமதம் இல்லாது போகிறது.

வேகமாகவும், பிசகின்றியும், தூய முறையிலும் கணக்குகள் எழுதப்படுகின்றன :— அன்ருடம் குறைந்த கால அளவையில் நிறைந்த பக்கங்கள் கொண்ட பேரேடுகள் இருப்புக்கட்டப்படுகின்றன. விரல் தட்டு விசை மெம்புகள், அழுத்துவதற்கான பொத்தான்கள், விசைக்குமிழ்கள் இவற்றின் உதவியால் கணக்குப் புத்தகங்கள் எழுதப்படுகின்றன. அன்ருடப்பணியில் ஆழ்ந்து மூளைக்கு வேலைதரும் எழுத்தர் தமது கண்களுக்கான தொல்லையை நீக்கி நிரந்தரச்சுகம் பெறுகின்றனர். மனிதனல் செய்யப்படும் தவறுகள் பல. ஆனல் இயந்திரம் தவற்றை நீக்கி சீரான வகையில் பணியாற்றும் என்று கூறினல் மிகையாகாது. எழுத்தர் எவ்வளவு ஆழ்ந்த கண்ணேக்குடன் கவனித்தாலும் குற்றமின்றி எழுதஇயலாது. பழைய முறையின் கீழ் எவ்வளவு சீரியமுறையில் எழுதிவந்தாலும் தவறுதல் ஏற்படும். புதியமுறையின் கீழ் தூய நிலையில் பிசகின்றி எழுத முடியும். ஏனெனில் புதிய முறை தாமாகவே இருப்புக் கட்டவும் பிசகுகளைக் களையவும் செய்கிறது. இது இயந்திரவேலையாதலால் அடித்தல் திருத்தலின்றி தூய முறையில் அழகாக அமையும்.

செம்மையான பயிற்சியும் சிப்பந்திகளை பல்வேறு துறைகளில் பயன்படுத்தலும் :— முன்னர், பாங்கு எழுத்தர் இத்தொழிலைப்பற்றிய முழுவிபரங்களைத் தெரிந்து கொள்ளுவதற்காகப் பட்டியல் படுத்தலிலும், பேரேட்டுகளைப்பதிவு செய்தலிலும், கூட்டுதலிலும், செக்குக்கணக்குத் தீர்வகங்களுக்குச் சென்று எழுதியும் பலகாலம் உழன்று வந்தனர். ஆனல் தற்போதோ வெகுவிரைவில் இந்த நிலையில் பாங்குத் தொழில் அனைத்தும் தெரிந்து கொள்ள முடிகிறது. இயந்திரம் போன்று திரும்பத்திரும்ப அதே பணியைச் செய்யவும், தாமாகவே ஈடுபடுத்தி முடிவு செய்யும் தன்மை உடையதும் ஆழ்ந்த யோசனையின் வாயிலாக செய்யத் தேவையற்ற பணிகளையும் இயந்திரத்தின் மூலம் இயக்குதலே நலம். இப்பெரும் பணிகளிலிருந்து விடுபட்ட எழுத்தர் குழாத்தைப் பயனுள்ள முறையில் புத்திக் கூர்மையுள்ள வேலைகளுக்குப் பயன்படுத்தி அவர்களுடைய சேவையை உயரியமுறையில் கொள்ளலாம்.

இவர்களுக்கு இந்தப் பல்வகைப் பயிற்சிகளில் இயந்திர இயக்கு வேலையையும் கற்றுக் கொடுத்தால், இயக்குநர் (Operator) கள் வராத காலங்களில் இவர்களே இப்பணியைத் திறம்பட செய்யக்கூடும்.

தீமைகள்

சிப்பந்திகளைக் குறைத்தல்:— பேரேடுகள் பதியும் இயந்திரங்கள் அமைத்தவுடனேயே ஆட்குறைப்பு ஏற்படக் கூடும் என்று சொல்லாமலே விளங்கும். கைப்புத்தகங்களுக்குப் பதிலாக கையேடுகள் நிலவிவரும். முதலாவதாக சான்றுச் சீட்டு (Vouchers) களிலிருந்தும், பேரேட்டுக் குறிப்புகளினின்றும் கையேடு கைப்புத்தகம் எழுதுபவர்களுக்கு வேலையின்மை யேற்படுகிறது. ஆயினும் பாங்குத் தொழில் மேன் மேலும் வளர்ந்து கொண்டு போவதால் இவற்றினின்று நீக்கம்பெற்ற சிப்பந்திகளைப் .பயன் படுத்த முடியும். என்றாலும் மனித வேலையினின்று இயந்திர வேலையாக மாற்றம் செய்யும் போது சற்று மந்தநிலை யேற்பட்டுப் புதிய சிப்பந்திகளை நியமிக்க இயலாது போகும். பாங்குகளுக்குத் தற்போதுள்ள நிலையில் தொழில் அதிகரித்துக் கொண்டே போகிறபடியால் வேலையில்லா நிலைமைமாறி அவர்களுக்கும் வெவ்வேறு பணிகளைச் செய்யுமாறு ஏற்படுத்தலாம். இரண்டாவதாக, இயந்திரமுறையின் கணக்கு தயாரிக்கும் முறை பிடிபட்டு பழக்கத்தில் வருவதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கும். மூன்றாவதாக, வாடிக்கைக்காரர்கள் புதிய முறையின் கீழ்க் கணக்கு எழுதப்படுவதை யேற்றுக் கொள்ளுவார்களா என்பது ஒரு பிரச்சினை.

இந்தியாவில்

நாளிது தேதிவரையில் இந்தியாவின் பாங்குகளில் இயந்திரங் களுக்குப் பேறு கட்டுப்பட்டதாக தெரியவில்லை.

கணக்குப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதில் இந்திய பாங்குகளின் பின்தங்கியுள்ள நிலைக்கான காரணங்கள்:— முதலாவதாக, இந்தியக்கூட்டுப்பங்கு பாங்குகள் தொடங்கியதே வெகு அண்மையில்தான். எனவே, அவைகள் இயந்திரங்களைப் பயன்படுத்த முடியவில்லை இந்திய பாங்குகளின் மூலதனம் மேற்கத்திய நாடுகளின் பாங்குகளுடைய மூலதனத்துடன் ஒப்பிடக்கூடிய நிலையில் இல்லை எனலாம். இந்திய பாங்குகள் செய்யக்கூடிய வர்த்தகம் (பாங்குத்தொழில்) அளவிலும் தொகையிலும் மிகச்சிறியது எனலாம்.

இந்தியப் பழமைக் கொள்கை :— பழமை வாதத்தில் ஈடு பட்டு நன்கு ஊறிய இந்தியர்கள் புதுமை முறைகளை மனமுவந்து ஏற்க மறுக்கின்றனர். இதுகாறும் தடித்த பைண்டு செய்த பேரேடுகளில் எழுதிவரும் முறையைமாற்றி பிரித்துக்கோத்து எளிதில் அமைக்கக்கூடிய பேரேடுகளை நடப்பில்கொண்டுவர பாங்குகள் இன்னும் தீவிரமாக ஆலோசனை செய்து வருகின்றன இயந்திர கணக்கு முறையைப் புகுத்துவதில் எவ்வளவு தடங்கல் இடர்ப்பாடு என்று கூறவும்வேண்டுமா? முன்னேற்றப் பாதை யில் செல்ல விருப்பப்படாது, இயல்பாகவே ஐயத்துடன் நடந்து செல்லும் இந்திய பாங்குகள், புதியமுறையை அமலாக்க விருப்பப்பட்டும், அனுபவமின்மையாலும், போதிய தகவல் களின்மையாலும் புள்ளி விபரமின்மையாலும் ஈடேர முடிய வில்லை.

குறைத்த சம்பளம் பெறும் சிப்பந்திகள் :— மேனுடுகளுடன் ஒப்பிட்டு நோக்கின் இந்திய பாங்குகள் தமது சிப்பந்திகளுக்கு மிகவும் குறைந்த சம்பளம் கொடுத்து வருவதால் இயந்திரமுறை அதைவிட அதிகச்செலவைக் காண்பிப்பதால் இயந்திரக்கணக்கு முறை சிக்கனமில்லை எனக்கருதப்படுகிறது.

இயந்திரக் கணக்குமுறை வந்தேதீரும் :— முன்னர்க் கூறி யுள்ள எதிர்ப்புகள் நீண்டகாலம் நீடிப்பது கடினம். இந்தியக் கூட்டுப்பங்கு பாங்குகள் அதிவிரைவில் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. எழுத்தர் - பாட்டாளிகளின் உழைப்பின் அடக்கச் செலவு நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போவதால் இன்று வேடிக்கையாகவும் விநோதமாகம் தென்படும் மேனுட்டு இயந்திர முறை எதிர்காலத்தில் மிகவும் இயல்பானமுறை போன்று மாறிவிடக்கூடும். பேனு, மை இவற்றுல் எழுதப்பட்டுவரும் பேரேடுகளும் கைப்புத்தகங்களும் அன்று பழங்காலக் கதையாக அமையும் என்பதில் ஐயமின்று.

இதர நவீன சாதனங்கள் :— பேரேடு பதியும் கணக் கெழுதும் இயந்திரங்கள் நீங்கலாக இதர நவீன சாதனங்களும் பாங்கு நடத்துவோருக்குத் தேவைப்பட்டு வருகின்றன. இவை களால் பாங்கு நடத்துபவரின் தொழில் எளிதாக்கப்படுவ தோடல்லாது முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொள்ளப் பயன்படுகிறது. புகைப்படப்பதிவு இயந்திரங் (Photo recording) கள் மூலம் புகைப்படமெடுத்து செக்குகள், மற்றும் இதர ஆவணங்களை நகலெடுக்கலாம். 'பாகுபாடு' இயந்திரங்களை (Sorter Graph) கொண்டு சிவப்பு ஊதா ஒளிக்கதிரைச் செலுத்தி உண்மையான செக்கு, பாங்குத்தாள், முதலியவற்றை ஏமாற்று முறையில் தயாரித்த பொய்யான ஆவணங்களிலிருந்து எளிதில்

பிரித்து பாகுபாடு செய்யலாம். பாதரச ஆவி விளக்கின் ஒளிக் கற்றையின் மூலம் ஊடுருவி நோக்கி கள்ளமுறையில் அச்சடித்த பாங்குத்தாள்களையும் ஆவணங்களையும், பற்றுத்திருமுகங்களையும் கண்டுபிடிக்கலாம்:

பாங்கிற்கான விளம்பரம்.

இது விளம்பரயுகம் :— கடுமையான போட்டி நடக்கும் இந்நாளில் தற்பெருமையைப் பறைசாற்றாத எந்த நபரும் கவனிப்பாரின்றி மடிய வேண்டியதுதான். வாடிக்கைக்காரர்களை தம்மால் கவர்ந்திழுக்கப் பயன்படுவது விளம்பர முறையென்று பாங்குகள் தெரிந்துகொண்டுள்ளன. எவ்விதவிளம்பர முறைகளைக் கையாளவேண்டும் என்பதைக்குறித்து பாங்குகளிடையே பலவகையான அபிப்பிராய பேதங்கள் நிலவி வருகின்றன.

பலவகையான பாங்கு விளம்பரங்கள் :— நிதி சம்பந்தமான செய்தித்தாள்களிலும், வர்த்தகப் பொதுத்தாள்களிலும் பாங்கு விளம்பரம் செய்தால் மிகவும் போற்றத்தக்கதெனலாம். வாசகர்கள் எண்ணிறந்தவர்கள் அந்தச் செய்தித்தாள்களை வாசித்து வருவதால் விளம்பரம் செய்யும் பாங்கியில் வாடிக்கைக்காரர்களாக வரக்கூடும். அநேக பாங்கு நிறுவனங்கள் ஏதாவது காரணத்தை முன்னிட்டு விளம்பரமின்றியும் தொழில் புரிந்து வருகின்றன. சில பகுதிகளில் விளம்பரம் செய்வதற்கு தகுதியான செய்தித்தாள்கள் இல்லாமலும் சிலவகை வாடிக்கைக்காரர்களை கவர்ச்சி செய்யத்தகும் செய்தித்தாள்கள் இல்லாமலும் போகும். சில தினசரித்தாள்கள் விதிக்கும் விளம்பரக் கட்டணம் மிகவும் அதிகமாகயிருக்கிற காரணத்தால் பாங்குகள் பயந்து விளம்பரம் செய்ய மறுக்கின்றன. அண்மையில் இவ்வகையான விளம்பரம் பெருகிவருவது நோக்கத்தக்கதே. பாங்குகளும் விளம்பரம் செய்ய பெருந் தொகைகளைச் செலவு செய்து வருகின்றன. இத்துறையில் போதிய திட்டங்களையும் முறைகளையும், வகுக்கவேண்டுவது இன்றியமையாதது. பாங்கு திறப்பு விழாவை விமரிசையாக நடத்தி பாங்கியினுடைய சிறப்புகளைப் பற்றி விளக்கம் செய்து விளம்பரப்படுத்துவார்கள். இவை செய்தித்தாள்களில் தகவலாகவும் வெளியிடப்படும். தனிப்பட்ட சிறப்பிதழாகவும் (Souvenirs) வெளியிடுவர். பாங்குகளின் கால அளவையை ஒட்டி வெள்ளிவிழா, பொன்விழா இவைகளைக் கொண்டாடிச் சிறப்பாக நடத்தியும் விளம்பரப்படுத்துவார்கள்,

சுற்றறிக்கைத் திருமுகம் பாங்கு விளம்பரத்தின் ஒரு அமைப்பு :— புதிய வாடிக்கைக்காரர்களைக் கவர்ந்திழுக்க அச்சடித்த கடிதங்களைப் பலருக்கு அனுப்புவார்கள். சேமிப்பு

பாங்குக் கணக்குத் திறப்பு நமூனு (அனுபந்தம் ஆ நமூனு 18.) மிகவும் பயனுள்ளது எனலாம். நடப்புவைப்புக் கணக்கும் மற்றும் இதரக் கணக்குகளைத் திறக்க விரும்புபவர்களுக்குத் தனிப்பட கடிதம் எழுதப்படும். சம்பள உரைகளில் கவர்ச்சிகரமான முறையில் ''மழை நாட்களுக்குச் சேர்த்து வைக்க வேண்டாமா'' என்ற சொற்களைப் பயன்படுத்தித் தொழிலாளிகளைச் சேமிப்பு பாங்குக் கணக்கில் சேர்க்க முயலலாம்.

மாதவெளியீடுகளும் காலாண்டு வெளியீடுகளும். புத்தகங்களும்:—மேனுடுகளிலுள்ள பெரிய பாங்கு நிறுவனங்கள் மாதவெளியீடுகளையும், காலாண்டு வெளியீடுகளையும் அச்சடித்து வழங்குகின்றன. இவை வர்த்தக, பாங்குத் தகவல்களைப் பெற்றுள்ளன. நடப்பிலுள்ள நிதி, வர்த்தகம் சம்பந்தமான பிரச்சினை பற்றி விவாதிக்கும் கட்டுரைகள் இவற்றில் காணப் படுகின்றன. இன்னும் அநேக பாங்குகள் இவ்வாறுன பிரச்சினைகளைக் கட்டுரைப் புத்தகங்களாக அச்சிட்டுத் தங்களது வாடிக்கைக்காரர்களுக்கு வழங்குகின்றன. நியுயார்க் நகரில் உள்ள பாங்கர் ட்ரஸ்ட் கம்பெனி (Banker's Trust Coy) சில ஆண்டுகளுக்கு முன்னர் பல நாட்டிலுள்ள பொது மக்களின் நிதி நிலையைப் பற்றி விவாதித்து ஆறு புத்தகங்களை வெளியிட்டது.

இந்தியாவிலுள்ள பெரும் பாங்கு நிறுவனங்கள் மாதத் தாள்களை வெளியிடுகின்றன. அவற்றில் பாங்கு, நிதிச் சந்தை, இவற்றின் நிலைமையை விவாதித்தும், நிலவில் உள்ள வர்த்தகச் செய்திகளையும் வெளியீடு செய்கின்றன. இதர பாங்குகளும் இவ்வழியைக் கடைப்பிடித்தல் இன்றியமையாதது. பாங்க் ஆஃப் பரோடா (Bank of Baroda) வாராந்திர அறிக்கையை வெளியிடுகிறது.

தேசப்படங்களும், காலண்டர்களும் :— தேசப்படங்கள் காலண்டர்கள், பணத் தோற்பை, தினக்குறிப்பு போன்ற அன்பளிப்புகளைத் தமது வாடிக்கைக்காரர்களுக்குப் பெரிய பாங்குகள் கொடுத்து வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள பாங்குகளும் இதர மேனுடுகளிலுள்ள பாங்குகளும் சில நாடுகளிலுள்ள நிதி வர்த்தக நிலையை விவாதித்து, தங்கள் வாடிக்கைக்காரர்களுக்குத் தகவல் கொடுத்து வருகின்றன தங்கள் வட்டாரத்தில் சாகுபடியாகும் உயர்ந்த ரகக்கோதுமை தானியம், பருத்தி இவைகளை ஆய்ந்து பரிசும், சான்றிதழ்களும் கொடுக்கும் பாங்குகளும் உள்ளன.

வில்லியம் பரோ சேமிப்பு பாங்கு (Williamburgh Savings Bank) £ 100/–க் குறையாது சேமிப்புக் கணக்கு வைத்துக் கொள்ளும் வாடிக்கைக்காரர்களுக்கு, வாஞல் சட்டி, மேசை விளக்குப் போன்ற அன்பளிப்புகளைக் கொடுக்கின்றது.

சாளரங்களில் புறக்காட்சி:— ஒரு பெரிய வர்த்தக நிறுவனத்தின் புறக்காட்சிக்கான அதே முறைகளை பாங்கு நிறுவனங்களும் கையாளுகின்றன. இருவருடைய கோட்பாடும் ஒன்றே—அதாவது விற்பனை செய்தல்—முதலில் கூறப்பட்டவர் வர்த்தகச் சரக்குகளை விற்கிஞர். பின்னர்க் கூறப்பட்டவர் தமது பணியைவிற்க முன்வருகிஞர். தையற்காரரால் உருவாக்கப்பட்ட சிறிய பொம்மைகளை அழகு பெற அமைத்து விற்க முன்வருபவர் வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர். இங்கோ சேமிப் பியக்கத்தின் வாசகங்களை அழகுற எழுதி, மூதுரைகளை நாடக உருவில் வடிவம் கொடுத்து வருகிஞர்.—"ஏழ்மையினின்று விடுவித்துக்கொள்" என்ற வாசகத்தைப் பசியுடன் உள்ள ஓநாய் ஒன்று இரையைக் கண்டும் அடித்துச் சாப்பிட முடியாது நிற்கிறது. காப்புடன் உள்ள அழகிய குடிசையில் போதிய வசதிகளுடன் ஒரு குடும்பம் இருப்பதாகவும் மாரிக் காலத்தில் கூட தனது நிலை மோசமில்லை என்ற விவரங்களையும் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது.

இந்திய பாங்குகள் செய்ய வேண்டியதென்ன :— தனம் தேடி உண்ணுது புதைத்து வைக்கும் கொள்கையைக் கண்டிக்கும் நிலையில் பாங்குகள் முயற்சி செய்யலாம். சேமிப்புப் பெட்டியில் ஒருவன் ரூ. 5,000/-ஐப் போடுவதாகவும் இன்னொரு துவாரத்தின் வழியே ரூ. 5025/- பெறுவதாகவும் சித்தரித்துக் காட்டலாம். இன்னொரு படத்தில் ஒருவன் 1 ரூ. பணத்தாள்களை, இரும்புப் பெட்டியிலிட்டு வைத்தும் அதுத்துருபிடித்தும், எலிகள் அந்தப் பணத்தை தம் வளைகளுக்குக் கொண்டுபோவதாகக் காட்டி அவன் தலையில் கை வைத்துக்கொண்டு மனம் நொந்து போவது போலக் காட்டலாம். இன்னும் சில பாங்குகள் தங்கப் பாளங்களை அடுக்கியது போன்றும் இதரநாட்டுச் செலாவணிக்கான சித்திரங்களை வரைந்து காட்டலாம். செக்குத்தாளின் உருவத்தைப் பெரியதாகப் படம் பிடித்து அதை நன்கு எழுதி அதனடியில் "பொன் போன்றது நல்ல பாதுகாப்பு பெற்றது" என்று எழுதினல் பார்ப்பவர்களுக்கு புரியக்கூடும். கல்வி வாசனையற்ற கிராம வாசிகளுக்கு ஒளிப்பட மூலம் விரிவுரைகள் நிகழ்த்தலாம், கிராமக் கடன் கொடுப்போரின் தீச்செயல்களை விளக்கி அதிக வட்டி கோரல், பணத்திற்குப் பதிலாக

தானியத்தை தமதாக்கிக்கொள்ளுதல், நீதிமன்றத்திற்குப்போய் அவர் வழக்காடிக் கடன்பட்டோரை வீடு காடு இன்றி அனாதையாக்குதல் போன்ற செயல்களைப் படமாக்கிக்காட்டலாம். சற்று புத்திக்கூர்மையுள்ள விவசாயி கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினராகிக் கடன் பெற்று, மாதத் தவணைகளில் கடனைத் திருப்பி குடும்பத்துடன் சுகமாக வாழ்வதாகக் காட்டலாம்.

பாங்கு கணக்கியல்

அடக்க விலைக் கணக்கியல்:—வர்த்தகக் கணக்கு எழுதும் முறை எவ்வளவு முக்கியமானது என்று இங்கு கூறப்புகின் அதை மிகைப்படுத்திக் கூறியதாகக் கொள்ளக்கூடாது. தவறின்றி எழுதப்படும் கணக்கைத்தான் அனைவரும் விரும்புகிறார்கள். அதனால் பாங்கு வெகுவாக முன்னேறும் என்று கூறவும்வேண்டுமா? இந்த நாட்களின் போட்டா போட்டி மிதமிஞ்சி நிறைந்துள்ள சமயத்தில் எந்த வர்த்தகமோ, வாணிக நிறுவனமோ, அல்லது தொழிலோ உற்பத்தி விலை அல்லது அடக்கவிலையைக் கருதாது முன்னேற முடியாது. சில நபர்கள் இத்துறையில் ஈடுபட்டு வல்லுநர்களாகத் திகழ்கின்றனர். சிலவகைப்பட்ட உற்பத்தித் தொழில் நிறுவனங்களில் இந்த அடக்கவிலைக் கணக்கியலைப் புகுத்தி நல்ல விரிவான முறையில் கண்காணித்து வருகின்றனர். நிலவில் சில தனிப்பட்ட நிறுவனங்களும் சங்கங்களும் தோன்றி இந்தக்கணக்கியலைச் சீர்ப்படுத்தி வருகின்றன. அடக்கவிலைகள் தொழில் கணக்கர் நிலையம், லண்டன், (Institute of costs and works Accountants London) தேசியத் தொழில் அடக்கவிலைக் கணக்கர் சங்கம், நியுயார்க் (National Association of cost Accoutants, Newyork) இவை இதில் வல்லுநர் பயிற்சி கொடுக்கின்றன. இந்தியாவிலும் அடக்கவிலைத்தொழில் கணக்கர் நிலையம், (Institiute of costs and Works Accountants) கல்கத்தாவில் இருந்துகொண்டு மெச்சத்தக்க அளவில் பணியாற்றி வருகிறது. இதை இந்திய அரசினர் ஏற்புச்செய்துள்ளனர். (Recognition) பாங்குத்தொழில் நடத்துபவர் சரக்குக்கொள்முதல் செய்வதும் இல்லை, விற்பனை செய்வதும் இல்லை யாதலால் அடக்கவிலைக் கணக்கைப்பற்றிய பிரச்சனை எழவில்லை பாங்கு தனது வாடிக்கைதாரர்களுக்குச் சில நற்பணிகள் புரிந்துவருவதால் அவைகளால் அடக்கவிலை குறைவா, அதிகமா, அல்லது இலாபமா நட்டமா எனக்கருத வேண்டிவருகிறது. சில வாடிக்கைக்காரர்களின் கணக்குகளில் போதிய ஆதாயம் வராவிடில் அவர்களுக்கு பாங்கு அறிக்கை விடக்கூடும்.

செம்மையான பாங்குத் தொழில் நடத்த மிக இயல்பான தேவை :– அடக்கவிலேயைக்காண மட்டும் கணக்குகள் தேவைப் படுகின்றன என்பதன்று; தொழில், வர்த்தக நிறுவனங்கள் எவ்வளவு நமக்குப்பாக்கியென்றும் நாம் எவ்வளவு தொகைகொடுக்க வேண்டும் என்றும் காணவே இவை பயன்படுகின்றன. மேலும் தவருன முறையில் கணக்குகள் வைத்துக் கொள்ளுவதாலும் சரியானபடி அவ்வப்போது கணக்குகள் எழுதப்படாவிடினும் பாங்கு நடத்துவோரின் கடன்நிலைமை பாதிக்கப் பட்டதோடல்லாது சொல்லொணுத் துன்பங்களிலும் பாங்கு நடத்துவோரை ஆழ்த்திவிடும். 'ஏ' என்பவர் தம்கணக்கில் வரவு வைக்குமாறு பாங்கு நடத்துவோருக்குப் பணம்கொடுப் பின், பாங்கு எழுத்தர் அந்தத்தொகையை ஞாபகப்பிசகாக 'பீ என்பவருடைய கணக்கில் வரவு வைத்தார், "பீ" தன் கையேட்டின் (Pass Book) கணக்கை அனுசரித்துப் பணம் பெற்ற தாகக்கூறி நிரூபித்தால் பாங்கு நடத்துவோர் "பீ" அதிகமாகப் பெற்ற பணத்தைத் திரும்பிப்பெறுவது கடினம். அதேபோன்று 'ஏ" கணக்கின் தவற்றின் அடிப்படையில் அவருடைய செக்கு களைக் கொடுக்க மறுத்து அதன்பின் விளைவாக அவருக்கு நட்டஈடு கட்டவேண்டிவரும். வர்த்தகர்களும், வியாபாரிகளும் இந்த பாங்கு கணக்கு முறையை நம்பியிருப்பதால், இந்தக்கிளையைச் செம்மையாக நடத்தத் தகுதியான நீண்ட காலப்பணியிலீடுபட்ட அதிகாரியை நியமிக்கின்றனர்.

சரியான கணக்கு வைப்பதின் கொள்கைகள் :– சரியான முறையில் கணக்குவைப்பதின் கொள்கைகளைக் கீழ்க்கண்டவாறு கருதலாம்.

(அ) பாங்கியினுல் நடத்தப்பபட்டுவரும் எல்லாக்கொடுக்கக் வாங்கல்களையும் தேதிவாரியாக பாங்கு வைத்துக்து கொண்டு நாள்தோறும் எவ்வகையான தொழில் புரிந்தது என்று நிரூபிக்கவேண்டும். நடப்பில் உள்ள கணக்குகள் மிகவும் அவசியம் எனக்கூறலாம்.

(ஆ) ஒருபாங்கியின் கணக்குகளின் மூலம் எந்தெந்த நபர் பாங்கிற்குப்பாக்கி அல்லது மேற்படி நபருக்குப்பாங்கு எவ்வளவு பாக்கி என்றும், கண்டுகொள்ளவேண்டும் தனது வாடிக்கைக்காரர்களுக்கு கணக்கில் எவ்வளவு பாக்கிஎன்று தெரியாத நிலைமையில் பாங்கி இருப்பின் பாங்கு நடத்துபவர் அவர்களைச் சடுதியில் கணக்கைத், தீர்த்துக்கட்டிவிடுமாறு தாக்கீது விடவும், அவர்கள்

அனுப்பிய செக்குகளை மதிப்புக்கொடுத்து எழுதியனுப்பியவற்றைக் கொடுக்கவும் மறுப்பார்கள். இதனால் மற்றையோருக்குக் கொடுக்கவேண்டியவை கவனிக்கபடாது போய்க்கொண்டிருக்கின்றன.

(இ) எல்லாக்காலங்களிலும் உள்ள சரியானநிலை யென்ன என்றும் புதிய வர்த்தகம் தன்போக்கில் முன்னேறியுள்ளதா பின்தங்கியுள்ளதா என்றும் கண்காணித்து வரலாம்.

வர்த்தகக் கணக்குமுறை பாங்குகளுக்குப் பொது கொள்கைகளாகப் பயன் படுகின்றன :– எவ்வகையான வர்த்தகத்தொழிலுக்கும் வர்த்தகக் கணக்கு முறையின் பொதுக் கொள்கைகள் பயன்படுவதுபோல பாங்கியினுடைய கணக்குகளை வைத்துக்கொள்ளவும் பயன்படுகிறது. கிட்டதட்ட எல்லா பாங்குகளிலும் ஒரே சீரான கணக்குமுறையின் விதிகளைக் கொள்ளுவதால் பொதுவாக ஒரே மாதிரியான கணக்குப் புத்தகங்களைக் கொண்டுள்ளனர். எம்முறையில் புத்தகங்களை எழுதிவருகின்றனர், புத்தகங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்பதெல்லாம் அந்தந்த பாங்கு கையாளும் முறைகளைப் பொருத்தது.

பாங்கியினுடைய ரிகார்டுகள்:- எல்லா பாங்குகளும் பயன்படுத்திவரும் எல்லாப் புத்தகங்களையும் பற்றி இங்கு அடுக்காகக் கூறி விளக்குவது எளிதன்று. பாங்கிகளுடைய தேவையை அனுசரித்துப் புத்தகங்கள் மாறும் எனலாம். கணக்குப்புத்தகங்கள் தவறின்றி எழுதப்பட்டும், விடுதலின்றிப் பதிவு செய்யப்பட்டும்வந்தால் அதன் முடிவுகளைப்பற்றி இங்கு கூறத்தேவையில்லை. கணக்குப் பதிவு முறையை எளிதாக்கியும், தரப்படுத்தியும் சீரமைக்கப் பல முயற்சிகள் நடந்துவருகின்றன. முன்னேற்ற மடைந்த பாங்கியின் முறைகளை இதரப்பாங்குகள் கடைப்பிடித்து வருகின்றன. மூன்றுவகை ரிகார்டுகளை பாங்குகள் எழுதி வருகின்றன.

(அ) கூட்டு நிறுவன ரிகார்டு

(ஆ) நிதி சம்பந்த ரிகார்டு

(இ) புள்ளி விபர ரிகார்டு

கூட்டு நிறுவன ரிகார்டு :- பாங்குகளுடைய கூட்டு அமைப்புச் சம்பந்தமான தகவல்களைக் கொடுக்கும் ரிகார்டுகள் ஆகும். இவை (I) பாங்குப் பேரேடு, (II) பாங்குச் சான்றிதழ்ப் புத்தகம் (அனுபந்தம் ஆ. நமுனு எண் உ ஐக்காண்க) (III) பங்கு மாற்றும் புத்தகம். (IV) இலாப ஈவுப்பங்கு புத்தகம். (V) நிகழ்ச்சிக்குறிப்பேடு. பாங்குப் பேரேட்டில் அநேகம் பங்குதாரர்களின் கணக்குகள் எழுதப்பட்ட அவர் களுடைய பங்குகளின் எண்ணிக்கை அவற்றின் முகப்பு மதிப்பு அவற்றின் வகையாகக் கொடுத்துள்ள பணம், ஒரு கணக்கி லிருந்து மாற்றம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை. ஒரே பங்குதாரரின் பெயரில் பல கணக்குகள் இருப்பதை நன்கு கவனித்துக் கொள்ளவேண்டும். பலவகையான பங்குகளைப் பெற்றாலும், பல சந்தர்ப்பங்களில் தமது நிலைமைக்கு ஏற்றவாறு பங்குகள் பெற்றிருப்பின் வெவ்வேறு கணக்குகள் ஒரே நபரின் பேரில் இருக்கலாமேயன்றி வேறெந்தச் சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு வைத்துக்கொள்ளக் கூடாது. இதனால் ஐந்தொகை, ஆண்டறிக்கை நகல்கள் பல அனுப்பவேண்டியது இல்லை. அதனால் அச்சுக் கூலியும், தபால் கூலியும் குறையக்கூடும். பங்குச்சான்றிதழ்ப் புத்தகத்தில் சான்றிதழின் அடிச்சீட்டுகள் இருக்கும். பங்கு மாற்றப் புத்தகத்தில் இலாப ஈவுப்பங்கு கொடுப்பதற்கான கட்டளையின் அடிச்சீட்டுக்கள் இருக்கும். இயக்குநர் குழுவின் கூட்டமும் பாங்குக்குழுவின் கூட்ட நிகழ்ச்சி விவரமும் நிகழ்ச்சிக்குறிப்பில் எழுதப்படும்.

கம்பெனிக் கூட்டம் 1956-ன் பல பிரிவுகளின் விபரப்பட்டி இயக்குநர்களின் பட்டி, இயக்குநர்களின் பங்குகள் விவரப்பட்டி ஒப்பந்தப்பட்டி என்ற புத்தகங்களும் ரிகார்டுகளும் வைக்கப்படல் வேண்டும்.

நிதிசம்பந்தமன ரிகார்டுகள் :- பாங்கியின் நிதிசம்பந்தமான ரிகார்டுகள் தவிர்க்க வியலாதவை. அன்றாடத் தொழிலுக்கு அவை பெரிதும் பயன் படுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டவை பாங்கியில் முதன்மைப் புத்தகங் களாகப் பயன்படுகின்றன.

1. ரொக்கப் பகுதி :

1. கவுண்ட்டர் (Counter) ரொக்கச்சிட்டா அல்லது ரொக்கம் பெறும் புத்தகம்.

2. பணம்பெறும் தினக்குறிப்பு அல்லது வேஸ்ட் புத்தகம் (Waste Book).
3. பிரிவுரொக்கப் புத்தகம்.
4. பணம் தருவதற்கான ரொக்கப் புத்தகம்.
5. நாணய இருப்புப் புத்தகம்.
6. பணம் கொடுப்பதற்கான வேஸ்ட் புத்தகம்.
7. "உள்ளே" வரும் செக்குத் தீர்வகப் புத்தகம்.
8. அயலூர் செக்குத் தீர்வகப் புத்தகம் (வெளியே 'உள்ளே' என்று அறியவும்)
9. செக்குத் தீர்வக இருப்புப் புத்தகம்
10. ரொக்க இருப்புப் புத்தகம்

2. உண்டியல் பகுதி

11. குறுகிய கால உண்டியல் புத்தகம்
12. உண்டியல் ஜர்னல் அல்லது தினக்குறிப்பு
13. கழிவு நீக்கப்பட்ட உண்டியல்கள் புத்தகம்
14. கழிவு (தள்ளுபடி) பேரேடு, சம்மதம் பெற்ற பேரேடு
15. சம்மதம் விவரப் புத்தகம்

3. ஆவணங்களும் முதலீடுகளும் உள்ள பகுதி

16. ஆவணங்கள் பதிவுப் புத்தகம்

(அ) பொது

(ஆ) வாடிக்கைக்காரரின் கடன்

(இ) கூட்டுப் பங்குத்தாரர்களின் மற்றும் இதரக் குறுகிய காலக்கடன்கள்

(ஈ) நிரந்தரக் கட்டளைப் புத்தகம்

4. வாடிக்கைக்காரர்களின் பகுதி

17. நடப்பு வைப்புக் கணக்குகள்
18. தவணை வைப்புக் கணக்குகள்
19. கடன் கணக்குகள்
20. கடன் ரொக்கக் கணக்குகள்

5. இலாப நட்டக் கணக்குப் பகுதி

21. நடப்புக் கணக்குப் பிரிவுப் புத்தகம் (பற்று அல்லது வரவு) அல்லது சுருக்கம்

22. வாடகைகள் பேரேடு

23. வாடிக்கைக்காரர்களுக்கு விற்ற ஆவண விபரம்

24. வாடிக்கைக்காரர்களுக்கு என்று வாங்கிய ஆவண விபரம்

25. சம்பளப் புத்தகம்

6. கிளை அலுவலகங்கள் பகுதி

26. பற்று ஜர்னல்

27. வரவு ஜர்னல்

28. செக்குகள் அனுப்புதல்

29. செக்குகள் பெறுதல்

புள்ளி விவரரிகார்டுகள் :-- இன்றைய நிலையில் ஒவ்வொரு வர்த்தக நிறுவனமும் தவறில்லாது தகவல்களைச் சேகரித்து முன்னேற்றத்தை அறிய ஆவலுள்ளதாக இருக்கின்றன. அதற்கான புத்தகங்களைப் புள்ளி விவரரிகார்டுகள் எனக் கூறலாம். எடுத்துக் காட்டாக ஒரு பாங்கு முன்னேறி வருகிறது அல்லது பின்தங்கியது என்று அறிய அதற்கான காரணங்களை ஆராய முற்படலாம். சிலவகையான பாங்கு தகவல்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் நாட்டு மக்களுக்குப் பெரும் படிப்பினையாகவும் உதவும். குறிப்பிட்ட காலத்தில் நாட்டின் பொருளாதார நிதி நிலைமையை அறியப் பெரிதும் பயன் படும்.

அவற்றின் பயன்கள் :-- புள்ளியியலின் மூலம் அதிகப் படியான தகவல்கள் சேகரிக்கப் பெற்ற தகவல்களைத் திரட்டி வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தி நடத்துபவர்களுக்குப் பெரிதும் பயன் படுகிறது. பாங்கு வர்த்தகத்தை நல்லமுறையில் கண்காணித்துவர பாங்கியின் தொழிலைக் கடன்கள், வைப்புகள், வரவு, செலவு என்று வகைப் படுத்திக் கொள்ள வேண்டும். புள்ளியியலைக் கொண்டு பாங்கு நிர்வாகி இலாப ஏற்ற இறக்கத்திற்கான காரணங்களை எளிதில் கூறுவார். கீழ்க்கண்ட வகைகளில் புள்ளிவிவரம் சேர்த்துச் சரியான நிலையைப் புரிந்து கொள்ள இயலும்.

1. திறக்கப்பட்ட புதிய கணக்குகளும் அவற்றில் இடப்பட்ட முதல் வைப்புகளின் சாரசரியும்

2. தீர்க்கப்பட்ட கணக்குகளும் அவ்வாறு மூடுவதற்கான காரணங்களும்

3. (அ) வைப்புகளின் மொத்தத் தொகை மாத முழுவதும் பெற்றதும் திருப்பிக் கொடுத்ததும். அந்த வைப்புகளின் பலவகைகளை விபரப்படுத்த வேண்டும்

   (ஆ) விடுத்த பற்றுத் திருமுகங்களின் எண்ணிக்கையும் அவற்றின் அடிப்படையில் வந்த சாரசரி தொகையும்

4. கொடுக் கப்பட்ட செக்குகளின் எண்ணிக்கை

5. செக்குகள், உண்டியல்கள் மற்றும் இதரவகைகள் மாதவாரியாக பாங்கியினுல் வசூலிக்கப்பட்ட விவரமும் எண்ணிக்கையும்

இந்தியாவிலுள்ள பாங்குகளைப் பற்றிய புள்ளி விபரம் ஏற்கக் கூடிய நிலையில் இல்லை:-- பாங்குகளைப் பற்றிய தகவலைக் கொடுக்கும் புள்ளி விவரங்கள் வருந்தத்தக்க முறையில் அமைந்துள்ளன. குறிப்பாகக் கூட்டுப்பங்கு பாங்குகளைப்பற்றின புள்ளி விவரம் நடப்பு நிலையை விளக்காது. இரண்டாண்டுகளுக்கு முன்னர் உள்ள நிலையைக் காட்டும். 1936ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டபாங்கு அட்டவணை 1934ஆம் ஆண்டின் விபரங்களை விளக்குகின்றது. ரிசர்வு பாங்கு இது சம்பந்தமாகக் காட்டும் அக்கரைக்கு நாம் நன்றி செலுத்தக்கடமைப் பட்டுள்ளோம். அரசினரின் வர்த்தகப் புள்ளிவிபர டிபார்ட்மெண்டு இந்த விபரங்களைத் தொடர்பற்ற முறையில் கொடுத்து வந்தது. ஆயினும் ரிசர்வு பாங்கு அயரா உழைப்புடன் எல்லாப் புள்ளி விபரங்களையும் நன்கு ஆய்ந்து, காலதாமதமின்றித் திரட்டி அனைவருக்கும் விளங்கும் வண்ணம் அட்டவணைப்படுத்தியுள்ளது. இப்புத்தகத்தின் முன் பிரதிகளில், இந்திய பாங்குகள் விடுத்த எத்தனை செக்குகள் செக்குத் தீர்வகத்தின் மூலம் மாற்ற பட்டு எவ்வளவு தொகை மாறியது என்ற விவரத்தை வெளியிட வேண்டும் என்று வற்புறுத்தி வந்தோம். இப்போது அம்மாதிரித் தகவல்கள் கூட அரசினரால் வெளியிடப்பட்டு வருகிறது என்பதை நன்றிகலந்த பெருமிதத்துடன் கூறுகிறோம். வாராந்திர விபரம் கொடுப்பதுடன் கடந்த ஆண்டின் முன்வார பின்வார விபரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வசதி செய்து கொடுத்தால் மிக நலமாயிருக்கும்.

சிலகுறிப்பிட்ட இந்தியக் கூட்டுப்பங்கு பாங்குகளின் செலுத்தப்பட்ட மூலதனத்திற்கும் இலாபத்திற்கு முள்ள ஒற்றுமையை விளக்கும் அட்டவணை

பாங்கியின் பெயர்	செலுத்தப்பட்ட மூலதனம்	ரிசர்வு நிதி	இரண்டாவது மூன்றாவது பத்திகளின் கூட்டுத்தொகை	வைப்புகள்	4வது பத்தியின் சதவீதக்கம் 5வது பத்தியுடன் ஒப்பிட்டுக்கொள்க	நிகர இலாபம்	7-வது பத்தி 2-வது பத்தியில் சதவீதத்தில்	லாப ஈவுப் பங்கு	கிளைகளின் எண்ணிக்கை
1	2	3	4	5	6	7	8	9	10
இந்திய பாங்குகள் (1962)			ஆயிரம் ரூபாய் கணக்கில்						
தி ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா	56,250	87,500	1,43,750	56,36,590	2.6	26,925	47.9	23	1,002 (8)
தி ஸெண்ட்ரல் பாஙக் ஆஃப் இந்தியா லிட்.	31,536	50,959	82,495	22,91,199	3.6	17,996	57.1	20	350 (10)
தி பாங்க் ஆஃப் இந்தியா லிமிடெட்	40,500	40,500	81,000	15,37,754	5.3	11,153	27.5	20	87 (14)
தி பாங்க் ஆஃப் பரோட லிமிடெட்	20,000	20,814	40,814	11,38,933	3.6	6,316	31.6	16	158 (14)
தி பஞ்சாப் நேஷனல் பாங்க் லிட்.	19,964	23,246	43,210	16,40,582	2.6	11,383	57.0	20	416 (3)
தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.	22,334	30,300	52,634	10,23,336	5.1	7,333	32.8	12	150 (12)

5. பாங்கு நடத்துபவர் கடன் பெற்றவரானபோது

முன்னர்க் கூறியபடி பாங்கு நடத்துபவரும் அவரது வாடிக்கைக்காரரும் பெற்றுள்ள உறவு முறை கடன் கொடுத்தவரும் கடன் பெற்றவரும் பழகும் தன்மையைப் போன்றது. வாடிக்கைகாரரின் கணக்கின் நிலையை அனுசரித்தே இது அமையும். பாங்கு நடத்துபவரின் இரண்டு முக்கியக் கடமைகள் கடன் வாங்குவதும் கடன் கொடுப்பதும் ஆகும். முதலாவதாகக் கடன் வாங்கும் முறையைப் பற்றி விளக்கம் கொடுப்போம்.

பாங்கு நடத்துபவர் கடன் பெற விழையும் போது:— தற்காலத்தில் எந்தப் பெருவாரி வாணிபமும் உரிமையாளர்களின் சொந்த நிதியைக் கொண்டு நடத்தப் படுவதில்லை ஆனால், பாங்கு வர்த்தகத்திலோ கடனைப் பெற்ற பணம் மிகவும் இன்றி யமையாதது. பாங்கு நடத்துபவர் அதிக லாபம் பெறவிரும்பினல் குறைந்த வட்டியில் கடன் வாங்கி அதிக வட்டியில் கடன் கொடுக்க வேண்டும். இன்றும் தரகு என்னும் கமிஷன், நாணயப் பரிவர்த்தனை காப்பறைக்கான வாடகை இவைகள் மூலமாகவும் லாபம் உண்டாகும். இந் நாட்டிலுள்ள பெரிய வணிக பாங்குகள் பெறக்கூடிய அமித லாபத்தில் மேலே கூறிய வகைகள் ஒரு சிறு பகுதியே ஆகும். லாபத்தில் பெரும்பகுதி அவர்களிடம் வைப்பில் விட்டுவைத்திருந்த நிதியை பயனுள்ள வகையில் ஈட்டில் விட்ட காரணத்தால் ஏற்புட்டதாகும். பொதுவாகச் செலுத்திய மூலதனம் பெரும் வைப்புகளின் குறைந்த விகிதத்திலிருப்பின் அது அளிக்கும் லாப ஈவுப்பங்கு கூடுதலாக இருக்கும். இதை விளக்கும் அட்டவணை 244ஆம் பக்கத்தில் பர்க்க.

கடன் வாங்கும் வகைகள்:— பாங்குவர்த்தகர் வைப்புகளைப் பெற்றும், ரொக்கச் சான்றுகள் மூலமாகவும், டிபைஞ்சர் என்ற கடன் பத்திரங்களை வெளியிட்டும், பத்திரங்கள் மூலமாகவும்

மாற்று உண்டியல் எழுதியும் போதிய கடன் பெறுகிறார். ஆயினும் பாங்கு நோட்டு (Bank Note) வெளியிடும் முற்றுரிமை நாட்டின் மத்திய பாங்கின் பத்திரங்கள் இவை வணிக பாங்குகளில் மிகவும் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளப் படவில்லை யாதலால் வைப்பு களின் மூலம்தான் வர்த்தகம் நடைபெறுகிறது. இந்த உண்மை இந்திய நாட்டு பாங்குகளில் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

இங்கிலாந்தில் பாங்கு நோட்டு வெளியீடு:— கடந்த நூற்றாண்டின் இரண்டாம் கால்பகுதியின் ஆரம்பத்தில் இங்கிலாந்து நாட்டின் பாங்குகள் அனைத்தும் முக்கியத் தொழிலாகப் பணம் பெற பாங்கு நோட்டுகளை வெளியிட்டு வந்தன. 1825ம் ஆண்டுவரை பாங்க் ஆஃப் இங்கிலாந்து (Bank of England) நீங்கலாக இதர கூட்டுப்பங்கு பாங்குகள் பாங்கு நோட்டுகளை வெளியிட அனுமதிக்கப்படவில்லை. இதன் விளைவாக பாங்க் ஆஃப் இங்கிலாந்து மட்டிலும் தான் கூட்டுபங்கு பாங்கு வர்த்தகம் செய்ய அதிகாரம் பெற்றிருந்தது என்று தவறாகப் பொது மக்கள் கருதி வந்தனர். பங்குகளுக்குக் கொடுக்கப்பட்ட பணத்தாள் வெளியிடும் முற்றுரிமை லண்டன் மாநகரிலிருந்து 65மைல் வட்டாரத்துக்குள்ளாக இருந்த படியால் 1825ஆம் ஆண்டுவரை எந்தக் கூட்டுப்பங்கு பாங்கும் திறக்கப் படவில்லை. இந்த நிறுவனங்கள் பணத்தாள் வெளியீடு முற்றுரிமை பெறாது இதர பாங்கு அலுவல்களைச் செய்து வெகுவாக லாபம் பெற ஆரம்பித்து வெற்றிப்புகழ் நாட்டின. 1844ஆம் ஆண்டில் பாங்குச் சட்டம் உருவாகியது. பணத்தாள் வெளியிடும் உரிமையுடன் புதிய பாங்குகள் திறக்கக்கூடாதென்றும், பணத்தாள் வெளியிடும் உரிமைகள் பெற்றுள்ள பாங்குகளின் மீது கட்டுப் பாடுகள் கொண்டுவரப்பட்டன. 1844-ஆம் ஆண்டு ஏப்ரல்மீ 27-ஆம் தேதிக்கு முன்னர்க் கடந்த பன்னிரெண்டு வாரங்களில் உருமாற்றமாகவுள்ள பணத்தாளின் மதிப்பளவில்தான் வெளியீடு செய்யலாம் என்று முற்றுரிமை ஈந்தது. பணத்தாள் வெளியீடின்றி இதர பாங்குத் தொழில் புரிய போதிய இடவசதி இருந்த காரணத்தால் புதிய பாங்குகள் திறக்கப்பட்டன. சட்டம் கட்டுப்பாட்டினை ஏற்படுத்தவில்லை. பாங்கு நோட்டு வெளியிடும் உரிமை பெற்றிருந்த பாங்குகளும், கிராமப்பகுதிகளிலிருந்து நோட்டு வெளியிடும் பாங்குகளும் தங்களுடைய முற்றுரிமையை வேண்டாமென்று சாதாரண பாங்குகளாயின. சில பாங்குகள் லண்டன் மாநகர பாங்குகளுடன் பிணைத்துக்கொண்டன. கிராம பாங்குகள் பணத்தாள் வெளியிடும் உரிமையை வேண்டாமென்று லண்டன் மாநகரில்கிளை திறக்க ஆரம்பித்தன. பணத்தாள்

வெளியிடும் உரிமை நீங்கலாக இதர வர்த்தகம் அளவுமீறி வளர்ந்தகாரணத்தால் பாங்க் ஆஃப் இங்கிலாந்து நீங்கலாக ஏனைய இருநூற்றெழுபத் தொன்பது பாங்குகளும் நோட்டு வெளியிடும் உரிமையை திருப்பித்தந்தன.

அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஐரோப்பாவும் :— பணத்தாள் வெளியிடும் இந்த முற்றுரிமை தேசீய பாங்குகள் மேற்கொண்டன ஆயினும், இந்தக் கொள்கை ஐக்கிய நாடுகளில் மறைந்து கொண்டு வருகிறது. ஐரோப்பிய நாடுகளான ஃபிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் பாங்கு நோட்டு வெளியிடும் வழக்கம் நடைமுறையிலிருந்து வருகிறது. இவற்றால் சில வகைகளில் வரி கொடாமை முறைகளைக் கையாளலாம். ஆயினும் நடப்பில் செக்குமுறை செலாவணியாக அமைந்துள்ளது.

இந்தியா :— இந்தியாவில் 1862-ஆம் ஆண்டிற்கு முன் அதாவது அரசினர் பணத்தாள் வெளியிட முன்வருவதற்கு முன்பு மூன்று மாகாண பாங்குகள் (Presidency Bank) பணத்தாள் வெளியிடும் முற்றுரிமை பெற்றிருந்தன. ஆயினும் இந்தப் பணத்தாள்களுக்குப் போதிய பழக்கம் அதிக அளவில் ஏற்படவில்லை. அரசினர் ஏற்றெடுத்துக்கொண்ட பிறகும் கூட மக்களுக்கு இந்தப்பணத்தாளில் அதிக நம்பிக்கையேற்படவில்லை யாதலால் அதிக அளவில் பயன்படாது நிலவியது. நாட்டில் கல்வி வளர்ச்சியும், வர்த்தகப் பெருக்கமும் அதிகரிக்க, அதிகரிக்க, பணத்தாளின் செலாவணி பெருக ஆரம்பித்தது. இப்போது நாட்டின் செல்வநிலையின் ஒருபிரிவாகப் பணத்தாள் இயங்கிவருவது தெரிந்ததே. பல்வேறு அயல்நாடுகளில் உள்ளதேபோல், மத்திய பாங்கினுடைய மேற்பார்வையிலும், பிடியிலும் பணத்தாள் செலாவணி இருத்தல் வேண்டும். இது ஒரு பெருங்குறையாக நம்நாட்டில் இருந்தது. இந்தக்குறை 1935-ஆம் ஆண்டு ரிஸர்வு பாங்கு தோன்றும்வரை இருந்து வந்தது. இரட்டையாட்சி போன்று அந்நாளில் இருந்த இம்பீரியல் பாங்கு பாங்குச் செலாவணிக் கட்டுப்பாடு (Credit Control) திட்டத்தை மேற்கொண்டு பாங்குகளைக் கண்காணித்தது. அரசினர் பணத்தாள் வெளியீட்டினை மேற்கொண்டனர். மூன்று மாகாண பாங்குகளையும், (Presidency Banks) பிணைத்து 1920-ஆம் ஆண்டில் இம்பீரியல் பாங்காக உருவாக்கினர். அப்போதாவது பாங்குச் செலாவணிக் கட்டுப்பாடு முறையையும் மத்திய பாங்கு செய்யவேண்டிய பணிகளையும் அதன்வசம் ஒப்புவிக்கப்படும் எனக்கருதப்பட்டது. ஆயினும் அரசினர் வாளாயிருந்து பின்னர் 1935-ஆம் ஆண்டு ரிஸர்வு பாங்கு உருவானபின்னர்தான் மத்திய பாங்கிற்கான

எல்லா பொறுப்புகளையும் அதற்களித்தனர். எனவே நம் நாட்டின் பாங்கு வரலாற்றில் முதன்முதலாக பாங்கிச் செலாவணியின் முழு பொறுப்பை 1935 ஆம் ஆண்டு ரிசர்வு பாங்கு மேற்கொண்டது.

பாங்குகளால் ரொக்கப் பத்திரங்களும் பிணையப் பத்திரமும் வெளியீடு செய்யப்படுதல் :— ஒருசில மேலை நாடுகளில் குறிப்பாக இரண்டாவது உலகயுத்தத்திற்கு முன் செர்மனி நாட்டின் பாங்குகள் பொதுமக்களிடமிருந்து பெரும் கடன் வாங்கியது. அவை டிபெஞ்சர் என்ற கடன் பத்திரங்களையும் ரொக்கப்பத்திரங்களையும், பிணையப்பத்திரங்களையும் அளவிற்கு மீறி வெளிவிட்டனர். இவை ஒருசில ஆண்டுகள் கழிந்தபின்னர் திருப்பித்தரப்படும். இம்முறையை பிரிட்டன் நாட்டில் அறிந்திலர். அமெரிக்க ஐக்கிய நாட்டு பாங்குகள் ஒருசில மட்டும் இம்முறையை வழக்கில் கொண்டுவந்தனர். இந்தியாவில் வைத்திருப்போர் தவணைக்கடன் பத்திரங்கள் வெளியிடுவதை (Issue of time bonds made out to bearer) சட்டமுறையில் தடுக்கப்பட்டது. ஆயினும் தனிப்பட்ட ஒரு நபரின் பெயரில் மேற்படி பத்திரம் வழங்குவதைத் தடைசெய்யவில்லை. ரொக்கச் சான்றிதழ்கள் பாங்குகளினால் வெளிவிடப்படுகின்றன. தவணையை அனுசரித்தும் காலத்தை யொட்டியும், குறிப்பிட்ட தொகைகள் திருப்பித்தர பாங்கின் நியமம் எழுதப்பட்டிருக்கிறது. எனவே ரொக்கச் சான்றிதழ் விற்பனையின் மூலம் கிடைத்த தொகையை தவணை வைப்புகள் என்று கொள்ளவியலாது. குறிப்பாக நெருக்கடி தோன்றிய காலத்தில் நட்டத்திற்குக் கூட இந்த ரொக்கச் சான்றிதழ்களை விற்க அனுமதிஉண்டு. ஆயினும் மேற்படி ரொக்கச் சான்றிதழ்கள் குறிப்பிட்ட காலத்திற்குமுன் கொடுக்கப்படமாட்டா. ரொக்கச்சான்றிதழ்கள் மிகவும் புழக்கத்தில் கொண்டு வர வேண்டுமானால் மக்களை வசப்படுத்தும் வகையில் வட்டி விகிதம் உயர்த்தப்படவேண்டும்.

பாங்கு வைப்புகளின் அமைப்புகள் :— இந்தியாவில் மூன்று வகை வைப்புகள் உள்ளன. அவையாவன—தவணை, அல்லது காலவைப்பு, சேமிப்பு வைப்பு, நடப்பு வைப்பு.

விளக்கம் :— தவணை வைப்பு அல்லது காலவைப்பு என்பது மூன்றுமாதம் முதல் ஐந்தாண்டுக்குள்ளாக வைப்புதாரருக்குத் திருப்பப்படுகிறது. தவணை வைப்புகள் ஒரு மாதத்திற்குக் குறையாமல் மூன்று மாதத்திற்குள்ளாகத் திருப்பித் தரக்கூடிய வைப்புகளும் உண்டு. நான்கு நாள்களில்

திருப்பித்தர அறிவிப்பு விடுத்தவுடன் திருப்பித்தர வேண்டும் என்ற வைப்பும் உண்டு. அதற்கு 3% (மூன்று சதவீதத்திற்கு) மேல் வட்டி இல்லை. இங்கிலாந்தில் "தவணைவைப்பு" என்ற வழக்கு நடைமுறையில் இல்லை. மேலும் அந்நாட்டு பாங்குகள் 14 முதல் 21 நாள்களுக்குள்ளாக அறிவிப்பின் பிறகு திருப்பித்தருவார்கள். தவணைவைப்பிற்குக் காலவரையறை அந்த ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது இன்ன தவணையென்று முடிவு செய்து கொள்ளுவார்கள். காலவரையறை செய்வதால்தான் பாங்கு நடத்துபவர் இந்தத் தொகையை எவ்வளவில் புழக்கத்தில் விடலாம் என்று முடிவு செய்ய இயலும். இல்லையெனில் அதற்காக ஒரு அளவு ஒதுக்கு நிதியை (Reserve) வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பெயர் இந்திய பாங்கர்களுக்கு ஏற்றதாகவும் உகந்ததாகவும் உள்ளது எனலாம். நடப்பில் அதை "தவணைப் பொறுப்பு" என்று பெயரிட்டுள்ளனர். அதன் பொருளாவது தேவை யேற்பட்ட போது தக்க அறிவுப்புக் கொடுத்துப் பெற வேண்டும். நடப்பு வைப்புப் போன்று கேட்ட போது கொடுக்கப்படுவதில்லை எனலாம். இந்தியக் கூட்டுப் பங்கு பாங்குகள் கம்பெனி சட்டம், 1949ல் எப்பகுதியிலும் "தவணை வைப்பு" என்ற பெயர் காணப் படுவதில்லை.

தவணை வைப்பு, நடப்பு வைப்பு இரண்டினுக்கும் உள்ள விகிதம் :— சற்றேறக்குறைய நாட்டின் எல்லா பாங்குகளும் தவணை வைப்புகளை வாடிக்கைக்காரரிடமிருந்து பெறுகின்றன. இதன் மூலம் கடனுகப் பெருந் தொகைகளைப் பெறுவது நிச்சயம். கொஞ்சகாலம் முன்னர் எந்தபாங்கும் தன் ஐந்தொகையை வெளியிட்டபாங்குகளும் வைப்புகள் என்ற தலைப்பின் கீழ் விபரமாக பிரித்துக் காண்பிக்கவில்லை. ஆகவே, தவணைவைப்பிற்கும் நடப்பு வைப்பிற்கும் என்ன விகிதம் இருக்கலாம் என்று அனுமானிக்க இடமில்லை. மிகவும் உன்னத நிலையில் கீர்த்தியுயுடன் நடந்துவரும் ஒருசில பாங்குகளின் ஐந்தொகையைப் பரிசீலனை செய்து பார்த்ததில் நடப்பு வைப்பிற்கும் தவணை வைப்பிற்கும் உள்ள விகிதம் 1 : 8 முதல் 1 : 4 ஆக அமைந்துள்ளது. இம்மாதிரி, பெருமளவில் விகிதத்தில் பேதம் ஏற்படப் பல காரணங்கள் இருக்கலாம். குறிப்பாக இந்த பாங்குகளில் வைப்புக் கணக்குகள் கொண்டவர் செக்குத்தாளைப் பயன்படுத்தவில்லை எனக் கூறலாம். ஏனைய இதர பாங்குகளில் செக்குத் தாளைப் பெரிய அளவில் பயன் படுத்தியிருக்கக் கூடும். இரண்டாவதாக, ஒரு சில பாங்குகள் குறிப்பாக மாவட்டக் கூட்டுறவு பாங்குகள் தங்களுடைய நிதியை நீண்டகால

ஆவணங்களில் எடுக்க இயலாத முறையில் வைத்து விடுகின்றன. எனவே, அவைகள் தங்கள் தங்கள் வர்த்தகத்திற்கு நடப்பு வைப்புகளைத் தேடிக் கொள்ள போவதில்லை. ஆயினும் தற்போதுள்ள நிலையில் நடப்புப் பொறுப்புத் தொகை இந்திய பாங்குகளில் கூடிக் கொண்டு வருவது காணலாம். இதனால் வரவர மக்கள் செக்குத்தாள்களைப் புழக்கத்தில் விட்டு வருகிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

தவணை வைப்பு முதலீடாகப் பயனுதல் :— வாடிக்கைக்காரர்கள் பொதுவாகத் தங்கள் பணத்தைத் தவணை வைப்பாக விட்டுப் போகிறார்கள். இதன் பயனாக அவர்கள் அதிக வட்டியைப் பெற்றுக் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர்த் திரும்பப் பெறுகிறார்கள். இம் முறையினால் அவர்களுடைய பணம் பலனளிக்கும் முறையில் பயன்படுத்தப்படுகிறது. சிறு முதலீடு செய்பவர்கள் இந்நாட்டில் இன்று வரை இம்முறையையே அனுசரித்து வருகின்றார்கள். தொழிலில் ஈடுபடுத்தி அதனை முதல் தெரிந்தோ நட்ட பயமாகவோ அடைவதை விரும்பவில்லை.

இந்தியாவில் வைப்புகளுக்கான வட்டி விகிதம் :— மாரிக் கால வைப்புகளைத் தவிர இந்தியாவில் இதர காலங்களில் பணத்தேவை ஏற்படும். விறுவிறுப்பான காலங்களில் பணத்தட்டை நீக்க அதிக வட்டி கொடுக்க பாங்குகள் முன் வருகின்றன. பணப்புழக்கம் அதிகமான காலத்தில் ½ முதல் 2½ சதவிகிதத்திற்கு மேலாகவட்டி கொடுப்பதில்லை. இது 3 முதல் 12 மாத காலத் தவணைக்காகும். நடப்பில் இந்தக் காலவரையறைக்கு பாங்குகள் 3–முதல் 4–சதவிகிதம் வட்டி கொடுத்து வருகின்றன. ஆயினும் வைப்புகளின் காலநிலையை ஆனுசரித்தும் பணச் சந்தையின் நிலையைக் கண்ணுற்றும் வைப்பாகக் கொடுக்கப்படும் தொகையின் அளவை யொட்டியும் பாங்குக் கம்பெனியுடைய செல்வநிலையின் அடிப்படையாலும் வட்டிவிகிதம் அமைகிறது. கடந்த சில ஆண்டுகளாக இந்நாட்டின் பாங்குகளில் நடப்பு வைப்புதாரர்கள் தங்கள் தொகைகளில் பெரும் பகுதியை விளி அல்லது கூப்பிடுதல் வைப்பு (Call Deposits) களாக மாற்றிக் கொண்டனர். இதனால் அவர்களுக்கு 2½ முதல் 4 சதவிகிதம் வரை வட்டி கிடைத்துவருறது. எனவே, அதிக வட்டித் தொகையைக்கொடுக்க நேரிட்டது. பாங்குகள் தம்மிடையே இந்தக் கூப்பிடுதல் வைப்பு அல்லது விளிவைப்பு (Call Depostts) முறையைக் கடைப்பிடித்தனர். வைப்புக் கணக்கிலிருந்து பணத்தைப்பெற நான்கு நாள்கள் முன் அறிவிப்புத்தேவை பாங்குக் கடன் வர்த்தகம் நாளடைவில் பெருகியபடியால்

ஒவ்வொன்றும் நான்கு நாள்களுக்கு அதிகப்படாமல் கடன் வாங்கித் திருப்பித்தர முயலுவதாலும் 3-முதல் 4 சதவிகிதம் வட்டி கொடுக்க முன்வருகின்றனர். இந்தியாவின் வட்டி விகித அமைப்பு பொதுப்படையாகப் பண மூட்டுதலையும் வழங்குதலையும் பொறுத்து உள்ளது என்பது அறிந்தது. அகில இந்திய பாங்குகள் தம் இடையே உள்ள ஒப்பந்தப்படி (All India Inter Bank Agreement) வைப்புகளுக்கான வட்டி விகிதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளனர். முதல் முதலாக 1953-ம் ஆண்டு அக்டோபர்மாதம் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது. வட்டி விகித மாற்றம் 1959-லும் இருமுறைகள் 1960-ம் பின்னர் 1961 மார்ச் மாதத்திலும் அண்மையில் 1964-லும் மாறுதல்கள் செய்யப்பட்டன இந்த ஒப்பந்தம் தோன்றுவிடில் அநேகம் பெரிய பாங்குகள் வைப்புகளை அதிகம் பெறவேண்டும் என்ற போட்டா போட்டியில் வட்டி விகிதத்தை அதிகப்படுத்திச் சிறிய பாங்குகளையும் அளவுக்கு மீறி வட்டிகொடுக்கத் தூண்டி இருக்கும்.

இங்கிலாந்தில் :— இயல்பாக உள்ள பாங்கு வட்டி விகிதத்தைவிட $1\frac{1}{2}$ சதவிகிதம் குறைவாள வட்டியை 1921-ஆம் ஆண்டு வரை ஆங்கிலேய நாட்டு பாங்குகள் தங்களிடம் வந்த வைப்புகளின் மீது கொடுத்து வந்தது. இந்த வட்டி விகிதத்திலும் கூட ஏறியவட்டியும் மிகவும் குறைந்த வட்டி விகிதமும் அமைந்திருந்தன. நிர்வாகச் செலவுகள் நாளுக்கு நாள் ஏறிய காரணத்தால் நாட்டின் வட்டி விகிதத்திலும் 2 சதவிகிதம் குறைவாகவே வைப்புகளுக்கான வட்டி விகிதம் கொடுத்து வந்தனர். உண்மையான நிலையென்னவெனில் லண்டன் நகரத்து பாங்குகள் தான் அவ்வாறு குறைத்தன. வெளியூர் நாட்டு பாங்குகள் இன்றும்கூட நாட்டின் பாங்குவிகிதத்தில் $1\frac{1}{2}$ சதவிகிதம் குறைவாகக் கொடுத்து வருகின்றன. பாங்கு விகிதத்தில் இந்திய முறையிலும், இங்கிலாந்து முறையிலும் பெருத்த வேற்றுமை உண்டெனலாம். குறிப்பாக இங்கிலாந்து பாங்குகள் தங்களிடம்வந்து மாற்றுண்டியல்களில் கழிவு நீக்கியவற்றின் மீது பணம் செலுத்துகின்றன. ஆயினும் இந்திய பாஙகுகளே $2\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ சதவிகிதம் அதிகமாயுள்ள வட்டிவிகிதத்தில் கடன் உதவி செய்கின்றன. இங்கிலாந்துநாட்டு பாங்குகள் விகிதத்தை விட $\frac{1}{2}\%$ அதிக அளவில் கொடுத்து வருவது தெரிந்தது. மாற்றுண்டியல்களின்மீது பண உதவியளிக்கின்றபடியால் வைப்பாளர் கோரிய குறைந்தகால அளவிலும்கூட பாங்குகள் அவர்களுடைய வைப்புகளைத் திருப்ப முடிகிறது. ஆயினும் இந்தியாவிலோ $2\frac{1}{2}$ முதல் 3 சதவிகிதம் அதிகமான வட்டியின்

கடன்களாக கொடுப்பதால் குறைந்தகால அறிவிப்புற்குள்ளாக மாற்றவியலாது அவதிப்படுகின்றனர். எனவே, இந்தியாவிலுள்ள பாங்குகள் நீண்ட காலத்தில் திருப்பிக்கொடுக்கதான் அறிவிப்புக்கோருகின்றன.

சட்டநிலை :— பாங்கு நடத்துவோர் பெற்ற தவணை வைப்புகளைக் குறிப்பிட்ட பருவத்திற்கு முன்பு திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை யாதலால் அவர் கடன்பெற்றோர் போன்றுள்ளார். சிலபாங்குகள் குறிப்பிட்ட பருவத்தின் முன்னரே தக்க அறிவிப்பைக் கொடுத்துத் திருப்பவேண்டிய ஒரு நியமத்தைத் தமக்கென ஒதுக்கி உள்ளன. இந்த நிபந்தனை தவணை வைப்பு ரசீதின் பின்புறம் அச்சடித்துக் கொடுக்கப்படுவதால் வாடிக்கைக்காரர் அதை நன்கு தெரிந்துகொண்டு அதற்கு ஏற்ப ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். இம்மாதிரியான நிபந்தனையை விளக்கமாகக் கூறுவிடின் பாங்கு தனது விருப்பம் போன்று வாடிக்கைகாரரின் சம்மதத்தைப் பெறாது முன்னறிவிப்பின்றி வைப்புகளைத் திருப்ப முடியாது. பாங்கு நடத்துபவர் கடன் பட்டவராகையால் குறிப்பிட்ட பருவம் தாண்டியதும் கூடவைப்பைத் திரும்பப்பெறாது இருப்பினும் பாங்கு நடத்துபவர் கடன்பட்டவர்தான். ஆயினும் அதன்பின்னர் அதற்காக வட்டியைத்தர வேண்டிய கெடுபிடி இல்லை. ஒப்பந்தப்படி காலம் முடிவுபெறின் தன்வசமுள்ள வைப்புகளை அவர் அடைகாக்கும் ட்ரஸ்டியாகார். பியர்ஸ் எதி. க்ரெஸ்விக் Pearce VS. Creswick (1843 2 ஹேர் 286—அஃபிஷியல் அஸைனி ஆஃப் மதராஸ் எதி. ஸ்மித் (1908) இலா. ரி. 32 மெட் 68 அடுத்து சுப்பிரமணியன் எதி. கதிரேசன் 39 (மத 1081) பாங்கு நடத்துவோரிடம் வைப்பில் விடப்பட்ட ஒருவருடைய தொகையை மூன்றுமவர் ஒருவர் வந்து தம்முடையது என்று தக்க அறிவிப்புக் கொடுத்துப் பணத்தைப் பெற இயலாது. இம்மாதிரியாக விடப்பட்ட அறிவிப்புத் தகவலினால் பாங்கு எவ்வகையிலும் பொறுப்பாளி யன்று.

தவணையிறுதி நாளுக்கு முன்னரே தவணை வைப்புகளைத் திருப்பிக் கொடுத்தல் :— தனது வாடிக்கைக்காரர்களுக்கு நன்மை செய்யும் நோக்கத்துடன் கெடு நாளுக்கு முன்னரே பணம் பெற அனுமதிக்கிறார். இம்மாதிரி நிலையில் வாடிக்கைக்காரர் அந்தத் தவணை வைப்பில் சேரக் கூடிய வட்டியை இழந்து விடுகிறார். அல்லது தவணை வைப்பின் ஈட்டின் பேரில் கடனெடுத்து வைப்பிற்குக் கிடைக்கும் வட்டியைவிட 2 முதல் $2\frac{1}{2}$ சதவீதம் அதிகமாக கொடுக்கிறார். அம்மாதிரி செய்யும்போது

வைப்பு ரசீதின் பின்புறம் ரெவின்யு வில்லையை ஒட்டிக் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கும்படி பாங்கு நடத்துபவர் விடுப்பு (Discharge) முறையை ஏற்பாடு செய்கிறார். இவ்விதம் பின்னர் கூறப்பட்ட முறையினால் பாங்கு நடத்துபவர் கொடுக்கும் முன் பணவசதிதக்க ஈட்டுடன் கொடுக்கப் படுகிறது. இதைவிட இன்னும் மேலான ஈடு பாங்கு நடத்துபவருக்குக் கிடைப்பது மிகக்கடினம். பாங்கு நடத்து பவர் குறித்த காலத்திற்கு முன்னரே தவணை வைப்பைப் பெற அனுமதிப்பதால் தமது ரொக்க ஆதாரங்களைச் சிதைவு செய்து கொள்ளுகிறார். இதன்விளைவாக பணச் சந்தையில் ஏற்படும் பணமுடையில் மிகவும் அவதிப்படுவார். நடப்புவைப்பு தாரர்கள் வந்து கோரினால் கொடுக்கத் தயாராக உள்ள பணத்தைத் தவணை வைப்பு தாரர்களிடம் கெடுவு தேதிக்கு முன்னரே கொடுப்பின், நடப்பு வைப்பு தாரர்களுக்குக் கேட்ட பொழுது திருப்ப முடியாது போய் அவதிக் குள்ளாக நேரிடும். நிதி இக்கட்டின் போது தவணை வைப்பைக் கெடுத் தேதிக்கு முன்னரே திருப்பிக் கொடுத்துப் பின்னர் மறுப்பின் பாங்கி யினுடைய நல்ல பெயர் கெடக் கூடும். 1913ல் ஏற்பட்ட நெருக்கடி நிலையில் பஞ்சாப்பில் பெயர் பெற்ற ஒரு பாங்கு இவ்வாறு நடந்து சிரமப்பட்டது. அந்தமாதிரி காலங்களில் பாங்குகள் தங்கள் கைவசம் நிதியை ரொக்கமாகப் பெருமிதமான அளவில் வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். தன் கைவசம் உள்ள செல்வ நிலையை பல்வேறு துறைகளில் செலவிட்டுக் கோரியவருக்குப் பணம் தரமுடியாது போகும் எனவே சிறிதளவான வட்டியை மிச்சம் செய்யும் நோக்கத்துடன் பெருந்தொகைகளைக் காலத்திற்கு முன்னரே கொடுப்பதால் பெரும் தொல்லைகள் ஏற்படும் என்று கூறவும் வேண்டுமா?.

தவணை வைப்பு ரசீதுகள் :— தமது பணத்தை பாங்கு நடத்துபவரிடம் வைப்பாகக் கொடுத்தவுடன் வாடிக்கைக்கார் ஒரு வைப்பு ரசீதைப்பெறுகிறார். அதன்மேல் 'மாற்றுரிமை யற்றது' என்று அச்சிடப்பட்டுள்ளது (அனுபந்தம் ஆ நமூனா நீர் 4ஐ காண்க) ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு ஒப்படைக்கலாம் இவற்றை மாற்றுரிமை முறையில் செக்குகளை மாற்றுவதுபோல் செய்யமுடியாது. ஏனெனில், இந்த வைப்பு ரசீது மாற்றுரிமை உண்டியன்று. இந்த ரசீதை மாற்ற முயலுபவருக்கு என்ன உரிமை உண்டோ அதற்குமேலாக மாற்றப்படுபவருக்கு யாதொருபலனும் உரிமையும் கிடைக்காது. வைப்புரசீது மாற்றுரிமை உண்டியலாக என்றுமே கருதப்படவில்லை. மாற்றப் பட்டவருக்கும் பாங்கியின் மீது அவர் தம்பெயரில் வழக்குத்

தொடுக்க முடியாது (டில்லிவழக்கு (1890) 44 அதி. டி. 76, மீட் வழக்கு (18ல்) 15 அதி. டி. 65. (In.re. Dollion (1890) 44 D 76 Inre Mead (1880) 15 Ch. D. 651) வைப்புரசீதுகளுக்கு முத்திரை வரியினின்று விலக்கு உண்டு.

மாற்றுரிமை இல்லை :— அப்துல்ரகிமான் ஹாஜிஉஸ்மான் எதி. சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியாவும் மற்றும் இதரர்களும் Abdulrahiman, Hajiosman Vs. Central Bank of India & Others (இந்தியன் பாங்கு நடத்துபவர்கள் நிலைய வெளியீட்டுத் தாள் ஜனவரி 1930 பக் 54 The Journal of the Indian Institute of Bankers January 1930 P. 54) காலஞ்சென்ற திரு. கே. எம். ஜாவெரி, முன்னாள் தலைமை நீதிபதி அவர்கள் பம்பாய் ஸ்மால் காஸ் கோர்ட், கொடுத்த தீர்ப்பில் கூறியதாவது :- தவணை வைப்பு ரசீதின்மேல் "மாற்றுரிமை இல்லை" என்று அதன்மேல் அச்சிடப்பட்டால் அது மாற்றுரிமை உண்டியல் ஆகாது, அதன் பின்பகுதியில் மாற்றப்பட்டது என்று எழுதப்பட்டதனுல் அது மாற்றப்படத்தக்க நிலையை அடையாது. இவ்வழக்கில் இரண்டாவது பிரதிவாதிக்கு, அவர் நன்னம்பிக்கையுடன் செய்யவேண்டிய ஊழியத்திற்காக நன்கு மதிக்கப்பட்டு இந்த வைப்பு ரசீதை வாதி கொடுக்கிருர். வைப்பில் உள்ள பணத்தை இன்னொருவருக்கு மாற்றும் எண்ணத்துடன் இந்த ரசீது மாற்றம் செய்யப்படவில்லை ஒருவேளை பாங்கு ரசீதையே மாற்றக்கூடிய வகையில் (Transferable) அமைத்திருந்தால் பின்னர் உரிமை சம்பந்தமாக எழும் வாதத்திற்கு மறுப்புக்கூற அனுமதி இல்லை. ரசீது மாற்றத்திற்கு அனுமதி இல்லை என்றுலும் அதனைச் சார்ந்த கடன் மற்றெந்தக்கடன்களைப்போல மாற்றக்கூடியவை. எனவே கடிதம் ஒன்றை எழுதி உரிமை ஒப்படைப்புச் செய்துவிடலாம் இவ்வாறு உரிமை ஒப்படைப்புச் செய்வதற்கு முன்னர் பாங்கிற்குத்தக்க காலத்தில் அறிவிப்பு விடுத்தல் இன்றியமையாதது. இவ்வறிவிப்புக் கண்டவுடன் பாங்கு தன் வைப்பாளர் பெயரிலுள்ள உரிமையைப் பொறுத்து ஆவன செய்வார்கள். இங்கிலாந்தில் வைப்பு ரசீதின் பின்பகுதியில் செக்கு நமுனை (form) அச்சிட்டிருப்பார்கள். இம்மாதிரியான நிலைமையில் முன்னறிவிப்பு, போன்ற நிபந்தனைகள் ஒழுங்குபெறக் கவனிப்புடன் செய்யப்படின் பாங்கு நடத்துபவர், இந்த ரசீதுத் தொகையை இன்னொருவருக்கு மாற்றியதாயிருப்பினும்கூட மறுப்பின்றிக் கொடுத்துவிட வேண்டும் (மீட் என்ற வழக்கில் (1880, 13 அதி. டி. 651. In re Mead (1880) 15 Ch D. 651) கையொப்பமிட்ட வைப்பு ரசீது தவறுன முறையில் ஒருவர் வசம் இருப்பின் பாங்கு நடத்துபவருக்கு அதனை கொடுக்க

உரிமைகிடையாது. ஆயினும் உண்மையில் வைப்பாளர் கையெழுத்திட்டுக் கொடுத்தபின்னர் அதை மறுத்து வழக்காட அவருக்கு உரிமையில்லை. (ஈவான்ஸ் எதிராக நேஷனல் ப்ரொவின்ஷியல் பாங்க் ஆஃப் இங்கிலாந்து (1904) 13 டி. எல். ஆர். 429) Evans Vs National Provincial Bank of England (1904) 13 T. L. R. 429) எனவே, பாங்கு நடத்துபவர் வைப்பாளரைத் தவிற வேறு நபர்யாருக்காவது திருப்பும் நோக்கம் உண்டாயின் வைப்பாளரிடமிருந்து இன்னாரைப்பெற அனுமதிக்கிறேன் என்று கைப்பட உத்திரவுக்கடிதமொன்றை வாங்கி வைத்துக் கொள்ளுகிறார்.

தவணை வைப்பின் பேரில் செக்குகளை எழுத அனுமதி இல்லை :— ஒரு வாடிக்கைக்காரருக்குத் தவணை வைப்பு மட்டும் கணக்காக இருப்பின் அதன் இருப்பை அனுசரித்து அவர் செக்கு எழுதமுடியாது. இங்கிலாந்தில் பாங்கு நடத்துபவர் பொதுவாக வாடிக்கைக்காரருக்கு உள்ள உரிமை, அல்லது வரவு பற்றினம் இவற்றைக் கருதித்தட்டிக் கழித்து இன்ன நிலை என்று தெரிந்து கொண்டு அவர்களுடைய செக்குகளை ஏற்றுக் கொள்ளுவார்கள். கெடுத் தேதி கழிந்த பின்னர்க் கூடத் தவணை வைப்பில் உள்ள தொகையின் பேரில் செக்கு எழுத உரிமை இல்லை. அந்தத் தொகை நடப்பு வைப்புக் கணக்கிற்கு மாற்றும் படி உத்தரவிடப்பட்டு, அதன்பின்னர் செக்குகள் எழுதலாம்.

வைப்பு ரசீது காணமற் போயின் வைப்பாளருடைய நிலை :– வைப்பு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை யனுசரித்துத்தான் வைப்பு ரசீதை பணம் திரும்பிக் கோரிய போது காட்ட வேண்டுமா வேண்டாமா என்று கருத வேண்டும். பணம் திரும்பப் பெற வேண்டுமானல் வைப்பு ரெசீது கண்டிப்பாகக் காட்டப்பட வேண்டும் என்று நிபந்தனை இட்டிருப்பின், சட்டப்படி எந்த வழக்கும் நடை பெற நியதி இல்லை. வைப்பு ரசீதைக் கொண்டு வந்தால்தான் வழக்கிற்கே இடமுண்டு (அட்கின்ஸன் எதிராக பிராட் ஃபோரட் தேர்டு இக்விடபில் பெனிஃபிட் பில்டிங் சொசைடி (1890) 25. க்வி. பெ. டி. 377. டிட் எதி. ஓவெரெல் (1893) 3. அதி. 154. Atkinsonl Vs. Brodford, Third Equitable Benefit Building Society [1890] 25 Q. B D. 377. Inre. Tidd Vs. Overell. [1893] 3. Ch. 154. இதே வகையில் 58 பம்பாய் 618 (60)ல் உயர் நீதிபதி ஸ்காட் (Scott) அவர்களின் தீர்ப்பைப் பார்க்க. நியாயமான வழியின்படி வைப்புப் பணத்தைப் பெற பாங்கு மறுத்தாலும் நீதிமன்றம் அனுமதிக்கக் கூடும். (டில்வியன் வழக்கு

(1890) 44 அதி. டி. 76) Inre Dillion (1890) 44 Ch. D 76] வைப்பு ரசீது மாற்றுரிமை உண்டியல் அன்று. எனவே இழப்பீடு பாண்டு (Indemnity Bond) கொடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவிடாது. மாற்றுபவருக்கு உள்ள உரிமை மட்டும் மாற்றப்படுபவருக்குக் கிடைக்கும் என்பது மாற்றுரிமை உண்டியலின் சட்ட முறையில் உள்ள கோட்பாடு.

காலவரம்பு சட்டம் :— வைப்பு ரசீது புதுப்பிக்கப் பட்டாலும், வட்டி காலதாமதமாகக் கொடுக்கப்பட்டாலும் காலவரம்புச் சட்டம் இந்தத் "தவணை வைப்புக்" கணக்கைப் பாதிக்காது. ஆயினும் தவணை ரசீது புதுப்பிக்கப்படவில்லை என்றால் காலவரம்பு நியமம், வைப்பு கொடுபட வேண்டிய தேதியிலிருந்து தொடங்குகிறது. இன்னொரு விளக்கம் என்ன வெனில் தவணை வைப்பு திரும்பப்பெற தவணை வைப்பு ரசீதும் உடனே காட்டப்பட வேண்டுமென்று நிபந்தனையிருப்பின் காலவரம்புச் சட்டம் அந்த ரசீது வந்துசேர்ந்த பின்னர் தான் தொடங்கும்.

வைப்புகள் நீதிமன்றங்களால் ஜப்தி செய்யப்படுதல் :— வைப்புத் தொகையைக் கடன் பட்டவரின் கடனை அடைக்க நீதிமன்ற உத்தரவு (கார்னிஷி உத்தரவு) Garnishee Order nisi). ப்படி ஜப்தி செய்லாமா கூடாதா என்பது நீதிமன்ற உத்தரவைப் பொறுத்தது. மேற்படி உத்தரவால் பாதிக்கப் படுவதற்கு அது ஒரு கடனாக இருக்க வேண்டும், அல்லது மேன் மேலும் கடன் சுமை ஏறிக்கொண்டே போக வேண்டும். இந்நிலை ஒரு குறிப்பிட்ட தேதியில் அவ்வாறு அமைய வேண்டும். (வெப் எதிராக. ஸ்டென்டன் (1883) 11 க்வி. பெ. டி. 518 Welb Vs Stenton (1883) 11. Q, B. D. 518) இந்தியச் சட்டம் இது சம்பந்தமாகப் பிரிவு 60, சிவில் ப்ரொஸீஜர் கோடில் (Civil procedure Code காணப்பட்டுள்ளது "கடன்" (Debt) என்ற சொல் மேற்படி கோடில் குறித்துள்ளபடி அந்தக் குறிப்பிட்ட காலத்தில் கடனாக இருத்தல் வேண்டும். வருங்காலத்தில் கடனாக உருவாகும் என்றெண்ணி வழக்கிட்டால் அது ஏற்றுக்கொள்ள வியலாது. கூட்டுக்கணக்கில் வரவாக ஒரு தொகை யிருப்பின் அதைக் கட்டுப்படுத்த நீதிமன்ற உத்தரவு கடன் பட்டவரின் பாக்கியைப் பெறப்போடப்பட்ட உத்தரவு (Garnishee Order) செல்லாது. இந்த உத்தரவை ஏற்காமல் பாங்கு மறுப்புத் தெரிவிக்க "இந்தக்கணக்கில் தீர்ப்பளிக்கப்பட்ட கடன் பட்டவரின் தனிப்பெயரில் வரவில் தொகையில்லை" என்று பாங்கு எழுதும். ஆயினும் "கடன் பட்ட தொகை ஈடுகட்ட நீதிமன்ற உத்தரவு (கார்னிஷி உத்தரவு

(Garnishee Order Nisi) கூட்டுப் பெயரில் இடப்பட்டால் தனி நபர் கணக்காயிருப்பினும் அனைத்தும் கட்டுப் படுத்தப்படும். சேமிப்பு வைப்புக் கணக்கில் உள்ள தொகையையோ தவணை வைப்பு ரசீதையோ பாங்கு விதிகளை யனுசரித்து பாங்கு கைப்புத்தகத்தையோ, அல்லது தவணை வைப்பு ரசீதையோ காண்பித்தால் ஜப்திக்கு போதுமா என்ற சட்டமுறையில் எழுந்த கேள்விக்கு சிந்து மாகாண ஜுடீஷியல் கமிஷனர் ஏற்றுக் கொள்ளத்தகாது என்று கூறியுள்ளார்.

கீழ்க்காணும் வைப்புகளை ஜப்தி செய்யலாம் :—

(அ) கோரியவுடன் திருப்பித்தரத்தகு வைப்புகள்.

(ஆ) குறிப்பிட்ட காலம்வரை விடப்படும் வைப்புகள்.

(இ) குறிப்பிட்ட காலம் முடிந்த பின்னர் வருங்கால அளவுள்ள வைப்புகள்.

வாடிக்கைக் காரரின் வரவுக் கணக்கில் உள்ள தொகை நீதிமன்ற உத்தரவை அனுசரித்து ஜப்தி செய்யப்படின், அது உத்தரவில் கண்ட நிபந்தனைகளை யொட்டியிருக்கும். முழுத் தொகையும் ஜப்தி செய்ய வேண்டியதா? டிக்கிரியில் கண்ட தொகைக்கு மட்டிலும் ஜப்தி செய்ய வேண்டியதா என்று முடிவு செய்யப்படும். (ரோஜர்ஸ் எதிராக விட்லே. [*1892*] ஏ.ஸி *118* Rogers Vs Whitelay [*1892*] A.C *118*

கொடையாளியின் மரணத்தைக் காரணமாகக் காட்டுதல் :— (Donatio Mortis (Causa) ஒருவைப்பு ரசீது கொடையாளியின் மரணத்தைக் காரணமாகக் கொண்டதாக இருக்கலாம். (டில்லன் டஃபின் எதிராக டஃபின் (*1890*) *44* CH D *76*] என்ற வழக்கில் இறந்தவரின் வாரிசுதாரர்களை இறந்தவர் கொடையாக அளிக்கக் கூறியதொகையைக் கொடை பெறவேண்டியவர் (Donee) வசம் சேர்க்கும்படி நீதிமன்றம் நிர்ப்பந்திக்கலாம். ஆயினும், வைப்புக் கணக்குப் புத்தகம் ஒன்றில் பாங்கிற்கும் வைப்பு தாரருக்கும் கொடை சம்பந்தமாக ஒப்பந்தம் எதுவும் குறிப்பிடாதபோது அந்தப் புத்தகம் நியாயமான காரணமாக மரித்த கொடையாளியின் வைப்பாக கூறுவது பொருந்தாது.

முத்திரை வரியினின்று விலக்கு :— பாங்கில் இடப்பட்ட வைப்பை இன்னொரு வரிடமிருந்து பெற்று, அல்லது இன்னார் கைகளால் பெறப்பட்டு, இதில் கூறப்பட்ட வரல்லாத வேறு ஒரு நபருக்குக் கணக்குக் காட்ட வேண்டியதில்லை என்றிருப்பின் அந்த வைப்புக்கு பாங்கு கொடுக்கும் வைப்பு ரசீதிற்கு முத்திரை வரி செலுத்த வேண்டியதில்லை (இந்திய முத்திரை வரிச்சட்டம், 1899 அட்டவணை 1பிரிவு53) வைப்புக்கான தவணை கூறப்படினும் இந்த விலக்கு நீடிக்கும். இதற்கு வட்டி கொடுக்கப் படுவதால் இந்த விலக்கு பாதிக்கப்படுவதில்லை.

கூட்டுப் பெயர்களில் வைப்புகள் :- இரண்டல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் கூட்டுப்பெயரில் வைப்புகள் பாங்கு நடத்து பவரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதற்கான விதிகளை வகுத்துள்ளனர். இங்கிலீஷ் சட்டத்தின்படி கூட்டுக்கடன் கொடுத்தோரில் யாரேனும் ஒருவர்வசம் கடன் திருப்பப்பட்டால் கடன் பட்டவர் அப்பொறுப்பினின்று விலக்கம் பெறுகிறார். (வாலஸ் எதி. கெல்ஸால் 7 எம். டபுள்யு 364 Wallace Vs Kelsall 7 M.. W 364) இதேதீர்ப்பின் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வந்த அன்னபூரணம்மா எதிராக அக்கய்யா (36 சென் 544 Annapoornamma Vs. Akayya 36 mad. 544) என்ற வழக்கில் முழு பெஞ்சு தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பை ஐயத்துடன் நோக்கி இரங்கூன் உயர்நீதி மன்றத்தில் முழு பெஞ்சால் மறுதலிக்கப்பட்டு (1937 ரங்கூன் 227) பின்வந்த வழக்குகளில் தீர்ப்புமாறியது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 45வது பிரிவின் வாசகம் பார்த்த மாத்திரத்திலேயே விளங்கக்கூடிய நிலையில் உள்ளதால் வாலஸ் எதி. கெல்சால் என்ற வழக்கின் விபரங்களும் தீர்ப்பும் இந்திய நிலைமைக்கு ஏற்கக்கூடியது அன்று என்றும் கூட்டுக்கடன் கொடுத்தோர் அனைவருக்கும் கடனைத்திருப்பிய பின்னர்தான் கடன்பட்டவர் விடுதலை பெறுகிறார். இங்கிலாந்திலும் பாங்கு நடத்துவோர்கள் கூட்டுக்கணக்கில்பணம் பெற்றுத்திருப்பினால் அதற்கு வாலஸ் எதி. கெல்சால் (Wallace Vs. Kelsall) வழக்கின் ஆதாரத்தினை மேற்கொள்ளுவதில்லை. ஹஸ்பெண்ட் எதிராக டேவிஸ் (Husband Vs. Davis) என்ற வழக்கில் (1851, 10 ஸி. பி. 445) ஆர்க்யூவெண்டோ (Arguendo) கூறியதாவது "இன்னெஸ் எதிராக ஸ்டீஃபென்ஸன் (Innes Vs Stephensnon 1 மூர் ரோல் 145) என்றவழக்கில் உயர்நீதிபதி டென்டர்டென் (Tenterden) பிரபு கொடுத்த முடிவை இங்கு மேற்கோளாகப் காட்டலாம். கூட்டுத்தாரர்கள் (Partners) அல்லாத இரு நபர்களுக்கு மேலாக பாங்கியில்

கூட்டுப்பெயரில் பணம் வைப்பாகப் போட்டால் பாங்கு தனி நபர் ஒருவரிடம் பணத்தைக்கொடுப்பின் பாங்கியின் பொறுப்பு நீங்குவதில்லை. ஆயினும், கூட்டுதாரர்களாகியிருப்பின் அவ்வாறில்லை. கூட்டுப்பெயரில் ஒருவர் இன்னொருவருடைய பெறும் அதிகாரத்தைப் பெற்ருல் பாங்கு அவருக்குக் கொடுப்ப தால் அதன் பொறுப்பு நீங்கும்." வைப்பு ரசீதில் கண்ட நிபந்தனைகளை யனுசரித்து கூட்டுவைப்பாளர்களில் யாரேனும் ஒருவர் பிறருக்காகவும் தமக்காகவும் பெறலாம் என்றிருப்பின் பாங்கு பொறுப்பாளியாகாது. ஆயினும், வைப்புக்கெடுவு தேதி வரும் முன்னரே இந்த அதிகாரத்தை ரத்துசெய்து விட்டதாகத் தகவல் தெரிவிப்பின் ஒவ்வொரு வைப்புதாரரும் கூட்டுப்பெயர்களில் உள்ளவர்கள் பாங்கு பொறுப்பு இல்லை என்று எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். மெக்கெவாய் எதிராக திபெல்ஃபாஸ்ட் பாங்கிங் கம்பெனி 1835 எ. ஸி. 24 (McEvoy Vs. The Belfast Banking Coy. 1935 A. C. 24) என்ற வழக்கில் தலைமை நீதிபதி அட்கின் பிரபு மிகவும் விரிவாக இந்த வழக்கினை கருதினர். சட்ட பிரபுக்களின் பெரும் பலத்தில் (majority) பல்வேறு பிரச்சினைகள் முடிவு செய்யப்படவில்லை அங்கு எழுந்த பலபிரச்சினைகளில் ஒன்ருவது வருமாறு. "ஏ" என்பவர் பாங்கில் தமக்கும் தமது வயதுவராத குழந்தைக்குமாக வைப்பாகப் பணத்தைப் போட்டார். இதற்காக ஒரு வைப்பு ரசீதைப் பெற்ருர். பேற்படி ரசீதில் அவருக்கோ மரித்தபின் அவரது வயதுவராக் குழந்தையிடமோ பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை யிடப்பட்டது. சட்டப்படி வயது வராப் பாலகனுடன் ஒப்பந்தம் செய்யத்தகுதி உண்டா என்ற கேள்வி யெழுந்தது. அந்தப் பாலகன் பணம்கொடு என்று கோரின் பாங்கு மறுத்தால் பாங்கியின்மீது சட்டப்படி வழக்குத் தொடரலாமா? என்ற பிரச்சினை எழுந்தது. அட்கின் பிரபு இந்தப்பிரச்சினைக்குப் பதில் கூறும்போது. "வயதுவாரப் பாலகனுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட காரணத்தால் சட்டப்படி வழக்குத்தொடரலாம் என்ருர். "ஏ" என்பவர் வயதுமுதிராப் பாலகனை ஒப்பந்தத்தில் பிணைக்காது இருப்பினும் பின்னர்க் கூறப்பட்ட வயது முதிராப் பாலகன் தனது தகப்பனர் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டிருப்பார். அவர் ஒப்புதல் தெரிவித்த காரணத்தால் அந்த ஒப்பந்தம் எழுதப்பட்ட தேதியிலிருந்து செல்லுபடியாகும். தாங்கர்ட்டன் பிரபு (Lord Thankerton) எடுத்துக்கொண்ட நோக்கமாவது என்னவெனில் "ஏ" என்பவருடன் மட்டுமே பாங்கு ஒப்பந்தம் செய்து கொண்டது. வயது முதிராப் பாலகனுக்கான நலனுக்காக இது

ஒப்பந்தம் செய்யப்பட்டது. வாரிங்டன் பிரபுவும் மாக்மில்லன் பிரபுவும் இந்த வழக்கில் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுகாணாது புறத்தெழுந்த வேறுஒரு பிரச்சினையைக் காட்டிக் கூட்டு வைப்பாளர்கள் கணவனும் மனைவியுமாக இருப்பின் அவர்களில் யாரேனும் பணத்தைத் திரும்ப வாங்க உரிமை பெறக்கூடும். கணவன் மனைவிக்கு முன்னரே இறந்தால் மனைவி அத்தொகையைப் பெறலாம். அல்லது மனைவி இறப்பின் கணவன் அத்தொகையைப்பெறலாம். இந்த ஏற்பாடு அவர்களின் சௌகரியத்தையும், நலனையும் கோரி ஏற்பாடு செய்யப்பட்டது. எனவே, உயிருள்ளவர் பெறலாம் என்ற கோட்பாட்டை நீக்க வியலாது. (ஃபோலி எதிராக ஃபோலி (1911) 1. ஐ. ரி: ப 281. Foley Vs. Foley (1911) 1. I. R. Page 281.)

சேமிப்பு வைப்புகள் :— சேமிப்பு வைப்புகள் பாங்கு நடத்துபவர்களுக்குத் தவணை, நடப்பு வைப்புகளைப் போல் அவ்வளவு பயனுள்ளது அன்று எனினும் அதன் ஆரம்ப வரலாறு படிக்க மிகவும் ருசிகரமாகஇருக்கும்.

டிரஸ்டி சேமிப்பு பாங்குகள் :— சேமிப்பு வைப்புக் கணக்குகள் முதன் முதலில் டிரஸ்டி சேமிப்பு வைப்பு பாங்குக் கணக்காகத் தொடங்கப்பட்டது. இந்த நிறுவனங்கள் வைப்பாளர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுத் தமக்கு யாதொரு பலனும் பயனும் பெறாது டிரஸ்டிகளுக்கும் நடத்து வோருக்கும் யாதொரு நலனும் ஏற்பட வில்லை (டிரஸ்டி சேவிங்க்ஸ் பாங்க் ஆக்ட் (சட்டம்), 1963 [26. 27 விக். இ. 88] பிரிவி 2 ஒரு வைப்பாளர் இதன் கீழ் இங்கிலாந்தில் ஒரே ஒரு பாங்குடன் தொடர்பு கொள்ளலாம். பல பாங்குகளுடன் ஒரே சமயத்தில் கணக்குகள் வைத்துக் கொள்ளக் கூடாது. இந்த விதியைப் புறக்கணித்து நடப்பின் சட்ட விரோதமாகப் போடப்பட்ட வைப்புகளை தேசீயக் கடன் கமிஷனர்களின் (National Debt Commissioners) தீர்மானப்படி பறி முதல் செய்யப்படும். சாதாரண வைப்பாளர் ஒரு ஆண்டில் டிரஸ்டி சேமிப்பு பாங்கியில் பணம் போட்டால் முன்னரே பணம் போட்டுத் திரும்பப் பெற்றிருப்பின் மொத்தத் தொகை £ 200க்கும் அதிகம் ஆகக் கூடாதென்பதாம். மணமான பெண்களிடமிருந்தும் குழந்தைகளிடமிருந்தும் வைப்புகள் ஏற்றுக் கொள்ளவும், அவர்கள் கோரிய போது திருப்பவும் வழி செய்துள்ளனர். இந்த டிரஸ்டி சேமிப்பு பாங்கின் மூலம் குறைந்த வருமானமுள்ளவர்களுக்குச் சிக்கன முறையைப் பயிலுவிக்கும்

நோக்கத்துடன் குறைந்த வைப்புகள் ஏற்றுக் கொள்ளப் படுவதால் கூட்டுப்பங்கு பாங்குகள் இந்த வைப்புகளைப் பெரிய சௌகரிய மான தொழிலாகக் கருதுவதில்லை.

தபால் சேமிப்பு பாங்கு :— முதன் முதலாக இங்கிலாந்தில் தபால் சேமிப்பு பாங்குகள் சட்டம், 1861 (24ஆம் 25ஆம். சி. கி. 18) ன் கீழ் தபால் நிலையங்களில் இவை தொடங்கப்பட்டன. இங்கிலாந்திலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் கிராமங்களிலும் தபால் நிலையங்கள் ஏற்பட்ட படியால் இந்த வசதியும் பரவியுள்ளது. எனவே, சேமிப்பு பாங்குத் தொழில் நன்கு நடை பெற்றுவருகிறது.

இந்தியாவில் சேமிப்பு பாங்குகள் :— இந்தியாவில் டிரஸ்டி சேமிப்பு பாங்குகள் முதன் முதலில் இராசதானி நகர்களில் 1833–லிருந்து 1835–க் குள்ளாகத் தொடங்கப்பட்டுப் பின்னர் அதன் நிர்வாகம் பிரெஸிடென்ஸி பாங்குகளுக்கு 1863–64ல் மாற்றப்பட்டது. 1870ஆம் ஆண்டில் குறிப்பிட்ட கருவூலங்கள் உள்ள மாவட்டங்களில் மட்டும் மாவட்டச் சேமிப்பு பாங்குகள் திறக்கப் பட்டன. பன்னிரெண்டு ஆண்டுகள் கழித்து பம்பாய் இராசதானியைத் தவிரமற்ற எல்லாத் தலைமைத் தபால் நிலையங்களிலும் தபால் நிலையச் சேமிப்பு பாங்குகள் உருவாயின. இவ்விதிவிலக்கிற்கும், கட்டுப்பாடுகளுக்கும் காரண மென்ன வெனில் பிரெஸிடென்ஸி பாங்குகளிடம்] இந்த நிருவாகம் ஒப்படைக்கப்பட்டுப் பழைய அரசினர் சேமிப்பு பாங்குக் கணக்குகளும் கொடுக்கப் பட்டன. ஆயினும், ஓர் ஆண்டு கழித்து இந்தக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. தபால் நிலையச் சேமிப்பு பாங்குகளும், மாவட்டக் சேமிப்பு பாங்குகளும் அடுத்தடுத்து மூன்று ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் மாவட்டச் சேமிப்பு பாங்குகள் எடுபட்டன. மூன்று இராசதானி நகர்களில் மட்டும் அரசினர் சேமிப்பு பாங்குகள் 1896வரை நடை பெற்று வந்தன.

அநேக வளர்ச்சித் திட்டங்களை ஈடேற்றவும், பணவீக்கத்தை எவ்வகை யேனும் குறைக்கவும், யுத்தகாலத்தில் தொடங்கிய சேமிப்புத் திட்டத்தை இன்னும் பிரசாரம் செய்து வருகிறது நடுத்தர, தொழிலாளர், வகுப்புகளிலுள்ளவர்களிடமிருந்து பெற்ற சேமிப்பு தேசீய நலனுக்குப் பயன்படுகிறது. இந்திய அரசினர் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் சம்பளம் பெறும் தங்கள் ஊழியர்கள், சிப்பந்திகளிடமிருந்து கட்டாய சேமிப்பு

முறையைத் தொடங்கியுள்ளனர். மேலும் தபால் நிலையச்சேமிப்புக் கணக்குகளை நன்கு பிரபலப்படுத்தவெண்ணி ஒரு கணக்கிலிருந்து இன்னொரு கணக்கிற்கு நிதியை மாற்றும் முறையை அனுமதித்துள்ளனர். இது சம்பந்தமான விதிகளைத் தபால்தந்தி விதிகள் புத்தகம் (Guide) பகுதி I இல் கொடுக்கப் பட்டுள்ளதன் விபரம் வருமாறு

> "செலவின்றி ஒரு வைப்பாளர் தம் கணக்கை ஒரு தபால் நிலையத்திலிருந்து சேமிப்புக் கணக்குள்ள இன்னொரு தபால் நிலையத்திற்கு மாற்றலாம். மாற்றம் செய்ய மூன்று மாதங்கள் முன்பே அது திறக்கப்பட்டு நடப்பில் இருக்க வேண்டும், அல்லது மாற்றம் முடிந்த பின்னர் மறுமுறை திறக்கப்பட வேண்டும். இம்மாதிரி மாற்றம் செய்ய விரும்பும் நபர் தனது கைப்புத்தகத்தை தானகவே நேரே தபால் நிலையத்திற்குச் சென்றும் அல்லது தபால் நிலையத்திற்குத் தன் கைப்புத்தகத்தைத் தக்க நபர் மூலம் அனுப்பிக் கொடுக்க வேண்டும். இவ்விரண்டு செயலாற்றங்களிலும் அதற்கென உள்ள மனுவைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். மாற்றத்திற்காகக் கொடுக்கப்பட்ட மனுவில் அரசினரின் ஆவணங்கள் வைத்துள்ளாரா என்றும் அவை அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவர் (Accountant General) வசம் உள்ளனவா என்றும் எவ்வகைக் கடன்களில் அவர் முதலீடு செய்துள்ளார் என்றும் அவ்வமயம் தம் கையொப்பத்தின் மாதிரி ஒன்று, இரண்டு, அல்லது மூன்று பிரதிகளை எந்தத் தபால் நிலையத்திற்கு கணக்கு மாற்றப்பட வேண்டுமோ அதற்கு ஏற்றபடி தலைமை, கிளை உப அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியது. கைப்புத்தகம் பின்னர் வைப்பாளருக்குத் திருப்பிக்கொடுக்கப்படும். (ஆயினும் குறிப்பு 3 ஐக் காண்க) வைப்பாளர் எந்தத் தபால் நிலையத்திற்கு அவருடைய கணக்கு மாற்றப் பட்டதோ அங்குக் கொண்டு போய் காண்பிக்க வேண்டும்.

குறிப்பு 1 :—ஒரு தலைமைத் தபால் நிலையத்திலிருந்து இன்னொரு தபால் நிலையத்திற்குக் கணக்குகளை மார்ச் மாதத்தில் 16ஆம் தேதி முதல் 31ம் வ, வரை மாற்றக் கூடாது.

குறிப்பு 2 :—கணக்கை முடிக்கும்படி உத்தரவிடப்பட்டதை மாற்ற முடியாது. வைப்பாளர் இறந்த பின்னரும் மாற்ற முடியாது.

குறிப்பு 3 :—உப அல்லது கிளைத் தபால் நிலையத்தில் உள்ள கைப்புத்தகம் (வைப்பாளருடையது) மாற்றம் செய்ய வேண்டுமானால் முதலாவதாக அது மேற்படி கிளை, அல்லது உப அலுவலகத்தின் தலைமை நிலையத்துக்கு அனுப்பப்பட்டு மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும். அது புத்தகத்தில் பதிவு செய்யப்படும்.

குறிப்பு 4 :— ஒரு பெண்மணியின் கணக்கை மாற்றிக் கொடுக்கும்படி கோரும் விண்ணப்பமும், அல்லது வயது வந்தவரின் கணக்கினை மாற்ற வரும் நபரும் முதலில் கூறியவரின் பதிலாள், பின்னர் கூறப்பட்டவராக பெரியவர் (கார்டியன்) கீழ்கண்டவாறு சான்று கொடுத்து, மனுவின் கையொப்பம் இட்டு கொடுக்க வேண்டும் " வைப்பாளர் இன்றைய தேதியில் உயிருடன் உள்ளார் என்று சான்று தெரிவிக்கிறேன்"

குறிப்பு 5 :—பித்தராக உள்ளவைப்பாளரின் கணக்கை மாற்றம் செய்ய அவரது கார்டியன் அல்லது நீதிமன்றம் நியமனப்படி வந்த நிர்வாகி மனுச்செய்தால் அதில் கீழ்க்கண்டதுபோல சான்று கொடுத்தல் வேண்டும். "வைப்பாளர் இன்றைய தேதியில் உயிருடன் புத்தி பேத மில்லாது இருக்கிறார் என்று சான்று கூறுகிறேன்"

குறிப்பு 6 :—முதல் தடவையாகத்தொடங்கப்பட்ட கணக்கைப் பொறுத்த மட்டில் கட்டுப்பாடு மூன்று மாதங்களுக்கு முன்னரே தொடங்கப்பட்டு இருக்க வேண்டுமென்பது போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அவர்களால் விதிவிலக்காக இம் மூன்று மாதகாலம் என்ற நியமத்தை மாற்றலாம். விதிவிலக்கானவை கணக்கை மாற்றுவதில் காலதாமதம் ஏற்படுவதால் வைப்பாளர்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. தவிர்க்க இயலாத

சில சந்தர்ப்பங்களில் தலைமை போஸ்ட் மாஸ்டர் இந்த மூன்று மாதஎல்லையைத் தனிப்பட்ட மனுக்களை ஆய்ந்து அனுமதிக்கக்கூடும். அவ்வாறு அனுமதிக்கப் படும் கணக்குகள் தொடங்கப்பட்டு மூன்று மாதங் களுக்கு மேலாகி இருக்க வேண்டும். இந்தியப் பாது காப்புப் படையினரின் நபர்யாரேனும் ஒருவர் தொடங்கியுள்ள கணக்கை மூன்று மாதங்கள் முடி வதற்கு முன்னரே மாற்றச் சொல்லக்கூடும். அல்லது அவருக்கு வேறொரு ஊருக்கு மாற்றப் பட்டதாக உத்தரவு வந்ததை காண்பித்து மாற்றம் செய்யும்படி விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு 7 :—இருநபர்களின் கூட்டுப் பெயரில் ஏதாவது ஒரு கணக்கு தொடங்கப் பட்டிருப்பின், மாற்றம் செய்யக் கோரப்படும் மனுவில் அந்த இருநபர்களும் கையெழுத்துப் போடவேண்டும். அவ்விருவரில் ஒரு நபர் இறந்து இன்னொருவர் உயிரோடு இருப்பின் உயிரோடிருப்பவர் கையெழுத்துப் போட வேண்டும்.

தந்தித்தபால் துறை நெறியாளர் கூறும் நிபந்தனைகளுக்குட் பட்டுத் தபால் நிலையச்சேமிப்பு பாங்கு வைப்புக்கணக்கில் உள்ள நிலுவைத் தொகையை அந்நிய நாட்டிற்கும் அல்லது அந்நியநாடு களிலிருந்தும் மாற்றிக் கொள்ளலாம். 1958ஆம் ஏப்ரல்மீ 1ம் வ யிலிருந்து பணம் பெறச் செக்கு முறையைச் சில பிரிவுகளில் மட்டும் தபால் அதிகாரிகள் சில நிபந்தனைகளின் கீழ்ப்புகுத்தியுள்ளனர்.

அஞ்சல் சேமிப்பு பாங்குகளின் முன்னேற்றம் :—தபால் சேமிப்பு பாங்குகள் இந்தியாவில் எவ்வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதற்கான விளக்கம் அடுத்துள்ள அட்ட வணையினின்று புலப்படும். அட்டவணையில் தபால் நிலையங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு, சேமிப்பு பாங்கு வைப்பாளர்களின் எண்ணிக்கையில் முன்னேற்றம் மொத்த வைப்புத் தொகையில் அதிகரிப்பு இவை காட்டப்பட்டுள்ளன.

தபால் நிலையச் சேமிப்பு வைப்புகளின் வளர்ச்சியைக் காட்டும் அட்டவணை

ஆண்டு	ஆண்டிறுதியில் உள்ள பாங்குகளின் எண்ணிக்கை	கணக்குகளின் எண்ணிக்கை (ஆயிரத்தில்)	வைப்புத்தொகை (வட்டியுடன்) (ரூ. லட்சத்தில்)	நிகரவைப்புத் தொகைகள் (வட்டியுடன்) (ரூ. லட்சத்தில்)
1934 — 35	12,679	3,100	4,001	5,830
1938 — 39	12,109	4,240	4,602	8,186
1944 — 45	11,227	3,094	4,498	8,022
1945 — 46	11,434	3,482	7,612	11,504
1946 — 47	11 138	3,963	9,168	14,235
1947 — 48	9,090	3,152	9,967	12,811
1948 — 49	9.089	3,426	9,815	14,849
1949 — 50	9,256	3,807	10,166	16 719
1950 — 51	9,890	4,090	11,019	18,506
1951 — 52	11,027	4,445	12,133	19,981
1952 — 53	11,274	4,830	12,449	21,768
1953 — 54	11,759	5,070	14,118	23,195
1954 — 55	11 647	5,384	14,717	25,649
1955 — 56	12,128	5,988	17,164	29,350
1956 — 57	12,454	6,384	19,383	32,208
1957 — 58	13,362	6,920	19,217	33,963
1958 — 59	14,052	7,724	20,498	36,077

வர்த்தகப் பாங்குகளில் சேமிப்புப் பாங்குத்துறை :—எவ்வளவு சிறிய தொகை வைப்பாகக் கொடுக்கப்படினும் வர்த்தக முறையில் இந்தக்கணக்கு பயனுள்ளதென்று பாங்குகள் முடிவு செய்தன இக்கணக்குகளின் கீழ் பணம் வேண்டுமென்று கோரிவருபவர்க் கெனக் குறைந்த ரிசர்வு தொகை அன்றுடம் ஒதுக்கி வைத்தால் போதும். ஒருவாரத்தில் ரூ 500 முதல் ரூ 1,000 த்துக்கு மேல் ஒருவைப்பாளர் பணம் கோரமுடியாது. இரண்டல்லது நான்கு வார அறிவிப்புக் கொடுத்த பின்னர்தான் அதிகப்படியான தொகை திரும்பப் பெறலாம். மேலும், சிலபாங்குகள் இந்தக் கணக்கிற்குச் செக்கு முறையைச் புகுத்த விரும்புவதில்லை. அதனுல், செக்குக் கொடுப்பதில் பாங்கு நடத்துபவர் ஏற்படுத்தும் பொறுப்புகளுக்கு கட்டுப்பட வேண்டி யேற்படும். தமது வாடிக் கைக்கைக்காரர்கள் பெயரில் வரும் செக்குகளை மட்டும்தான் வசூலிக்கப்படும். வட்டிக்கணக்கு மாதாந்திர நிலுவையின் பேரில் கணக்கிடப்படும். தினசரி நிலுவையின் பேரில் கணக் கிடுவதில்லை. மாத ஆரம்பத்தில் நான்காம் தேதிவரை வரும் வைப்புகளுக்குத் தபால் நிலயச் சேமிப்புக் கணக்குகளில் கூட வட்டி கணக்கிடுகிறுர்கள், இதனுல் கொஞ்சம் சம்பளம் பெறுபவர் கூட இதில் பணம் செலுத்திப் பலனடைவர். இக்கணக்குகளுக்கு என பாங்கு நடத்துபவர் செலவு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. எனவே வாடிக்கைக்காரர்களுக்கு அவர்களுக்கு வரும் செக்குகளை வசூலித்தும், அவர்களுடைய மதிப்புள்ள ஆபரணங்களை பாதுகாத்தும் உதவி புரிகின்றன.

நடப்பு வைப்புகள்

தவணை வைப்புகளைப் போன்று முன்னர் நடப்பு வைப்புகள் மூலதனத்திற்குப் போதிய தொகை அளிக்காவிடினும், இந்திய பாங்குகளில் நாளடைவில் நிலைமை மாறிக்கொண்டு வருகிறது. அட்டவணைப் படுத்தப்பட்ட பாங்குகளில் இப்போதுள்ள விகிதம் 13 முதல் 10 வரை எனக்கூறலாம். இந்த விகிதம் பாங்குக்கு பாங்கு காலத்தையொட்டி மாறி வருகிறது. நடப்புவைப்புப் பொறுப்புகள் தவணை வைப்பு பொறுப்புகளைவிட பாங்கு நடத்துவோருக்கு இன்னும் அதிகமாக ஏறிக்கொண்டே வருவது தெரிந்ததே. இது சம்பந்தமாகச் சில காலமாகவே அநேக ஆசிரியர்களும் இப்புத்தகம் எழுதும் ஆசிரியரும் இந்த வைப்புகளைப்பற்றி விளக்கம் செய்ததினின்று தெரியலாம்.

பாங்கு நடத்து வோரின் கட்டுப்பாடுகள் :— வாடிக்கைக் காரரின் கணக்கில் வரவு இருப்பு உள்ள வரையில் பாங்கு நடத்துபவர் அவரது செக்குகளை யேற்றுக் கொண்டு பணம் கொடுக்க முன்வருகிறுர். கள்ளக் கையெழுத்திட்டு வந்த

செக்குகளை ஏற்றுப் பணம் கொடுத்தால் இவரே அதற்கு பொறுப்பு வாடிக்கைக்காரர் இட்ட கட்டளையை மீறிச் செக்குகளை ஏற்றுப்பணம் கொடுத்தாலும் இவர் பொறுப்பாகிறார். எடுத்துக் காட்டாகச் சாதாரணக் கோடுகளிட்ட செக்குகளை பாங்கு நடத்துபவரல்லாதார்வசம் கொடுத்தும், தனிப்பட்ட முறையில் கோடுகளிட்ட செக்குகளை அவற்றில் கூறப்படாத வேறொரு பாங்கு அல்லது அந்த பாங்கியின் பதிலாள் வசம் கொடுத்தும் பொறுப்பு ஏற்கிறார் (செலாவணி முறிச் சட்டம் 1881. பிரிவு 29). இந்தச் செக்குகளின் மீது முத்திரை வரியை ஸ்டாம்புச் சட்டத்தின் கீழ் கொடுக்க வேண்டும் கைப்புத்தகங்களையும், செக்குப்புத்தகங்களையும் இனாமாகக் கட்டணமின்றி வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டியது இவரது கடமை. (அனுபந்தம் ஆ. நமூனா 17) தனது நடப்பு வைப்புதாரர்கள் கோரும் தொகையை முன்னறிவிப்புடன் கொடுக்க அவர் தயாராக இருக்க வேண்டியது அவருடைய கடமை.

வட்டி :—பெரும் நகரங்களில் மட்டும் உள்ள பாங்குகள் நடப்பு வைப்புகளுக்கு வட்டி அளிக்கின்றன. பொதுவாக எல்லா பாங்குகளும் வட்டி கொடுப்பதில்லை அவ்வாறு வட்டி கொடுக்க முன்வரின், தனிப்பட்ட முறையில் ரூ 1லட்சத்திற்கு மேற்பட்ட தொகையிருப்பின் வட்டி கொடுக்க முன் வருவார்கள். சில சமயங்களில் வாடிக்கைக்காரர்கள் தங்கள் கணக்கில் குறைந்த அளவுத்தொகை எடுக்காமல் வைத்து இருக்க வேண்டும் தவறினால் ஆண்டு முழுவதும் போட்டெடுத்த பணத்தில் கமிஷன் வசூலிக்கப்படும் அல்லது அரையாண்டு முடிவில் ஒரு குறிப்பிட்ட தொகையின் நிலுவையில் கணக்கிடப்பட வேண்டும். இந்தச் செய்கையால் குறைந்த அளவுத் தொகையினால் பாங்கு நடத்துபவர் தம்வசம் ரூ. 500 எடுக்கக்கூடாது என்ற குறைந்த தொகை உள்ள கணக்குகள் நூறு இருப்பின் அவர் ரூ 50,000 ஐ எளிதில் பயனுக்கயியலும். நடப்பு வைப்புகளுக்கு எவ்வளவு ரொக்க ரிசர்வு வைத்துக்கொள்ள வேண்டியது என்பதை அவர் நடப்பு வைப்பாளர் வந்து கோருவதின் மூலம் தம் அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்து கொள்ளுகிறார். தவணை வைப்புகளைப் பொறுத்த மட்டில் எந்தச் சமயத்தில் எவ்வளவு தொகை திருப்பப்பட வேண்டுமென்று முன்கூட்டியே தெரியும் ஆயினும் நடப்பு வைப்பு நிலுவைகள் பொறுத்த மட்டில் ஒருமதிப்பீடு சராசரி இன்னதென்று தோராயமாக அனுமானித்து எந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வளவு கேட்கப்படுமோ என்று முன் எச்சரிக்கையுடன் அதிகப்படியான நிதியைக் கையில் வைத்துக்கொண்டிருப்பார்.

லண்டன் நகரில் வட்டி கொடுப்பதில்லை :— லண்டன் நகரில் கூட நடப்பு வைப்புக் கணக்குகளின் மீது வட்டி கொடுப்பதில்லை. தனிப்பட்ட முறையில் ஒரு கணக்கில் அதிகப்படி தொகை என்றும் நிலுவையில் இருப்பின் வாடிக்கைக்காரரும் பாங்கு நடத்துவோரும் தனி ஒப்பந்தம் செய்துகொண்டு பாங்கு நடத்துவோர் சிறிதளவு வட்டியை அனுமதிப்பர். ஆயினும் மாதாந்திர நிலுவை குறிப்பிட்ட கொகைக்குக் கீழ்ப் போய் விட்டால் பாங்கு நடத்துவோர் ஒரு குறிப்பிட்ட கமிஷனை வசூலிக்கலாம். அல்லது குறிப்பிட்ட தொகையில் $\frac{1}{4}$% அல்லது $\frac{1}{8}$% வசூலிக்கலாம். மற்றும் ஆண்டு முழுவதும் நடந்த வைப்புகளின் மேல் $\frac{1}{8}$முதல் $\frac{1}{4}$%வரை வசூலிக்கலாம்.

புதிய கணக்குத் தொடங்குவது

அறிமுகப்படுத்தும் கடிதம் :— ஒரு புதிய கணக்கு தொடங்கப்படும் முன்னர் பாங்கு நடத்துபவர் முன்னெச்சரிக்கையுடன், கணக்குத் தொடங்க விருப்பவருடன் உரையாடல் நிகழ்த்தி, அவர் தமக்கு அறிமுக மற்றவராயின் அவரது தொழில், அல்லது வர்த்தகம், தொடங்க விரும்பும் கணக்கு இவற்றைப் பற்றிய விபரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். புதியதாக வருபவர் கொடுக்கும் அறிமுக மான நபர்களைக் கேட்டு, அவர் கொடுக்கும் தகவல்களை யொட்டி பாங்கு நடத்துபவர் முடிவு செய்தல் வேண்டும். கணக்குத் தொடங்க விரும்புபவர் நல்ல வாடிக்கைக் காரர்தானு, இல்லையா என்பதைத் தீர்மானிக்கத் தகுந்தவர் பாங்கு நடத்துபவரே. சான்ருகக் கொடுக்கப்பட்ட நபர்களை பாங்கு நடத்துபவர் கண்டு மேற்படி புதிய வாடிக்கையாக வருபவரது குணம், செயல்முறை, பண்பு இவற்றைப்பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் இன்றி யமையாதது எனலாம். இம்மாதிரியான ஆரம்ப விசாரணை செய்யாததால், பாங்குக்கும் பெருத்த இடையூறு, இதர பாங்கு களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் பேராபத்து எனக் கூறினல் மிகையாகாது.

ஏமாற்றஞ் செய்யும் குற்றம் முன்னெச்சரிக்கை :— கைவசம் செக்குப்புத்தகங்கள் வைத்துள்ளவர்கள் அடிக்கடி செய்துவரும் குற்றச்செயல்கள் பார்வைக்கு வந்துள்ளன. எடுத் துக்காட்டாகச் சில ஆண்டுகளுக்கு முன்னர் டெல்லி பாங்கு ஒன்றின் நிருவாகியிடம் ஒரு நல்ல மேம்பாடடைந்த நபர் ஒருவர் வந்து அவருடன் அளவளாவி, தம்பேரில் கணக்கு ஒன்றைத் திறக்கும்படி கூறினர். கரன்ஸி நோட்டுள்ள தோல் பெட்டியைக் கொண்டுவர மறந்து விட்டதாகக்கூறி நிருவாகியை நம்பவைத்து செக்குப்புத்தகம் ஒன்றைப் பெற்றுக்கொண்டு

அதற்கான முத்திரை வரிச்செலவை அடுத்தநாள் அனுப்புவ தாகக்கூறிச் சென்ருர். அந்த ஆசாமி டெல்லிச் சந்தையில் பல கடைக்காரர்களைக்கண்டு விலைபேசி சரக்குகளைப்பெற்றுச் செக்குகளைக் கொடுத்துச்சென்ருர். இந்தச்செக்கு பாங்கியில் பணத்திற்கு நீட்டப்பட்டவுடன் பணம் இல்லை என்று திருப்பப் பட்டன. ஏனெனில், அந்த நபருக்கு பாங்கில் கணக்கு இல்லை. பாங்கு நடத்துபவர் ஒழுங்காக அவ்வமயம் அந்த நபரைப் பற்றி தீர விசாரித்து நல்ல வாடிக்கைக்காரா என்று அறிமுகம் செய்யப்படாத காரணத்தால் இப் பின்விளைவுகள் ஏற்பட்டன. மேலே கூறிய முறையில் ஒரு விடுப்புப்பெரு நொடித்தவர் செய்யின் பாங்கு நடத்துபவர் கவனப்பிசகாக அந்த நொடித் தவரைக் கணக்கில் மறுமுறை கொடுக்கல் வாங்கல் செய்து விட்டதாக ஏற்பட்டு அதனுல் ஏற்படும் பின் விளைவுகளுக்கு பாங்கு நடத்துபவர் பொறுப்பாளியாகலாம்.

கவனக்குறைவாக ஏற்பட்ட ஓவர்டிராஃப்ட் கடன் காப்புமுறை இரண்டாவதாக, பாங்கு நடத்துபவர் கவனப்பிசகாக ஒரு வாடிக்கைகாரருக்குத் தமது விருப்பின்றி கடன்வகையாக ஓவர் டிராஃப்ட் வசதியளித்து விட்டாராகில் அப்போது அந்த வாடிக்கைக்காரரின் குணநலனை அறியும் பொருட்டு பாங்கு பெற்றுள்ள அறிமுகக் கடிதம் மிகவும் பயனுள்ளதாகிறது. ஒரு பாங்கிலுள்ள எழுத்தர் ஒரு புதிய வாடிக்கைக்காரரின் கணக்கைத் தவறுதலாகப் படித்துக்கொண்டு அவருடைய செக்குகளை மதித்துக்கொடுத்து அதன்பின் பார்த்தபோது அளவுக்குமீறி பணம் கொடுத்ததாகப் புலப்படுகிறது. அவரது கணக்கில் பற்ருகக் காட்டும். புதிய வாடிக்கைக்காரர் கண்ணிய மானவராக இருப்பின் இந்தப் பற்று நிலையை சீர்செய்வார். சில சந்தர்ப்பங்களில் பாங்கு எழுத்தர் செய்த கோளாறினுல் தம்மால் அப்பணத்தைக்கட்ட வசதியில்லை யென்றும் தம்மை ஓவர் டிராஃப்ட் கடன் பெற்றவராக அனுமதிக்குமாறும் கோருவார். இதனுல் பாங்கு நடத்துபவர் அந்தப்பணத்தைத் திரும்பப் பெறுவது கடினம். ஒரு வாடிக்கைககாரரின் வரவுப் பகுதியில் இடவேண்டியதொகையை இன்னொருவரின் வரவில் வைத்து அவர் இந்தச்செய்தியை அறிந்துகொண்டு அந்தத் தொகையை செக்குப்போட்டு பெற்றுக்கொண்டு நடையைக் கட்டிவிடலாம். பாங்கு நடத்துபவர் அதைத் திரும்பப்பெருவது நடக்காது எனலாம்.

வாடிக்கைக் காரரைப் பற்றிய தகவல் கோரல் :—மூன்ருவ தாகத் தம்முடன் தொழில் புரியும் இதர பாங்கு நடத்துபவர்கள் மூலம் தமது வாடிக்கைக் காரருடைய செல்வ நிலையைப்பற்றி

ஆராய முன்வரலாம். வாடிக்கைக்காரரின் நலனைக்கோரியும் பாங்கு நடத்துபவர் தமது வருங்கால நிலையை முன்னிட்டும், வாடிக்கைக்காரரைப்பற்றிய தகவல்களை சேகரித்து வைத்திருக்க வேண்டியது இன்றியமையாதது எனலாம்.

அசட்டையின் சான்று :—நான்காவது, ஒரு பாங்கு நடத்துபவர் தமது புதிய வாடிக்கைக் காரரைப்பற்றிய பொது விசாரணைகளை நடத்தத் தவறினால் சட்டப்படி கொடுக்கப்படும் காப்பு முறை பறிக்கப்படும். அதன் விளக்கமாவது மாற்றுரிமை உண்டியல் [செலாவணி முறைச்சட்டம்) சட்டம் 1881 ரில் 131வது பிரிவின் கீழ் மாற்றுரிமை உண்டியலை வசூல் செய்யும் பாங்கி (Collecting Bank)க்குக் கொடுக்கப்படும் சட்டப்படியான காப்பு அதன் நிபந்தனைகளை மீறிச்செய்தால் பறிக்கப்படும். லாட்ப்ரோக் எதிராக டாட் டைம்ஸ் லண்டன் மார்ச் 28, 1914. Ladbroke Vs Todd Times London March 28, 1914) என்ற வழக்கில் தலைமை நீதிபதி பெயில் ஹேக் (Justice Bail Hache கூறியதாவது, "புதிய கணக்குத் தொடங்குவதற்கு முன்னர் இயல்பாக, பாங்கு நடத்த வேண்டிய சாதாரண விசாரணைகளைச் கூடச்செய்யாது பாங்கு நடத்துபவர் அசட்டையாக இருந்ததாக என்முன் உள்ள சான்றுகள் மூலம் அறிகிறேன்."

பாப்புலால் பிரேம் சந்து எதிராக நாத் பாங்கு லிமிடெட் (ஆ- இ. ரி. 1946. பாம்பே 482 Bapulal Prem Chand Vs Nath Bank Ltd, (A I. R 1946) Bombay 482) என்ற வழக்கில் தலைமை உயர் நீதிபதி உயர்திரு சக்லா. (Justice Chagla) அன்று முடிவு கூறியதாவது : மாற்றுரிமை உண்டியல் சட்டம் (செலாவணி முறிச்சட்டம்) 1881ன் 131 வது பிரிவின் கீழ் காப்புக் கோரும் பாங்கு புதியதாகக் கணக்கு தொடங்க விரும்பும் வாடிக்கைக் காரரைப்பற்றி விசாரணை நடந்த வேண்டுமென்று கண்டிப்பு இல்லை, ஒவ்வொரு வழக்கின் சந்தர்ப்பங்களையும் விபரங்களையும் பொறுத்து இருக்கும் என்றூர். இம்மாதிரியான விசாரணை தேவையா அல்லது தேவையில்லையா என்பது பாங்கு நடத்துபவரின் ஆலோசனையைப் பொறுத்தது. கண்டிப்பாகப் புதிய வாடிக்கைக்காரரைப் பற்றிய விசாரணையை பாங்கு நடதத வேண்டியதில்லை. ஆயினும், மேலே கூறிய தீர்ப்பிற்கு எதிராக பல நீதிமன்றத் தீர்ப்புகளை ஆதாரமாகக் காட்டலாம். எனவே, பாங்கு அலுவலருக்கு நேர்முகமாகத் தெரிந்தவரானல் ஆரம்ப விசாரணை தேவையில்லை. எந்தச் செம்மையான பாங்கும் தனது வாடிக்கைக்காரரைப் பற்றிய முதல் விசாரணைகள் நடத்த வேண்டும். இல்லையேல் அவராவது அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

மாதிரிக் கையெழுத்துகள் :—எந்த ஒரு வாடிக்கைக்காரரும் பாங்குகளில் கணக்குத் தொடங்கும் முன்னர் அதனுடைய விதிகளையும் நிபந்தனைகளையும் படித்துப் புரிந்து கொண்டவாரகக் கருதப்படுவார், அந்த விதிகளையும் நிபந்தனைகளையும் அனுசரித்து அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடப்பதாக எழுத்து மூலம் கையொப்ப மிட்டுத் தருகிறார். (இதற்கான நமூனு 5 (அ) வை அனுபந்தம் "ஆ" வில் பின்னர் காண்க) அவர் ஒன்றிற்கு மேற்பட்ட தம் கையெழுத்துக்களைப் போட்டுத் தமது பாங்கு நடத்துபவர் வசம் சேர்க்க வேண்டும். இவை பொதுவாகக் கையெழுத்துப் புத்தகத்தில் ஒட்டப்பட்டு பாங்கு நடத்துபவர் வசம் இருக்கும் தற்போது நடப்பிலுள்ள முறையின் கீழ் தனி அட்டைகளில் கையெழுத்தைப் போடச் செய்து அவை அகரவரியில் அட்டவணைப் படுத்தி எளிதில் பார்க்கக் கூடிய முறையில் சேர்த்து வைக்கப்படும். பேரேட்டில் அவரவர் கணக்கில் அவரது பெயரை கெட்டி எழுத்துகளில் விளங்கும்படி எழுதி கையொப்பம், முகவரி தொழில் இவற்றையும் குறிப்பிட வேண்டும்.

முகவரைக் கொண்டு கணக்கை நடத்திவர அதிகாரக் கட்டளை :— ஒரு வாடிக்கைக்காரர் தமது முகவரைகொண்டு கணக்கை நடத்திவர விரும்பினுல் எழுத்து மூலம் பாங்கு நடத்துபவருக்கு அதிகாரக் கட்டளை யொன்றை விடுப்பார். அதன் நகல் அனுபந்தம் "ஆ" வில் நமூனு 5 இ பின்னர்க் கொடுக்கப் பட்டுள்ளது. இதைக் கைப்பட எழுதி அந்த நபரின் மாதிரிக் கையெழுத்தைப் போடச் செய்து அந்த அதிகாரக் கட்டளையை பாங்கு நடத்துபவர் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். செக்குகளை எழுதவும் மாற்றவும் என்று அதிகாரமளித்திருப்பின் வேறு மாற்றுண்டியல்களை ஏற்றுக் கொள்ளவோ, கணக்கின் அளவுக்கு மீறிக் கடன் வாங்கவோ அதிகாரம் அளிக்கப் படவில்லை எனலாம். எனவே, தனிப்பட்ட முறையில் பாங்கு நடத்துபவருககுக் கட்டளை விளக்கமாகக் கொடுக்கப்பட வேண்டும். எனவே, வாடிக்கைக்காரர் தமது பாங்கு நடத்து பவருக்கு உத்தரவு கொடுக்கும் போது தமது முகவர் கணக்கின் பற்று நிலையைக் கூட அடைந்தாலும் பணம் பெற அனுமதிக்கப் படுவது வேண்டும் என்று விளக்கம் கொடுததல் வேண்டும். அல்லது முகவர் மாற்றுரிமை உண்டியல்களை ஏற்றுக் கொள்ளவும் பாங்கு நடத்துபவர் வசம் அனுப்பவும் அதிகாரம் கொடுக்கலாம் பாங்கு நடத்துபவர் அம்மாதிரி யானவரும் கட்டளைகளை அவ்வப் போது பேரேட்டில் வாடிக்கைக்காரரின் கணக்குப் புக்கததுல் குறித்துக்கொண்டு அதன்படி கணக்கை நடத்திவர வேண்டும்.

வாடிக்கைக்காரர்களுக்குப் பணம் செலுத்தும் ஏடுகள் கொடுக்கப்பட வேண்டும் :—ஒரு வாடிக்கைக்காரர் செலுத்தும் பணத்தை அவரது கணக்கில் வரவுவைக்க வேண்டுவது இன்றியமையாதது. வரவினங்களைச் சுலபமான முறையில் எழுத பாங்கு நடத்துபவர்கள் தமது வாடிக்கைக்காரர்களுக்குப் பணம் செலுத்தும் ஏடுகள் கொண்ட புத்தகத்தைக் கொடுக்கிறார்கள் (அனுபந்தம் "ஆ" வில் நமூனா நீர் 15ஐ காண்க) இந்த ஏட்டின் வலக் கைப்புறம் பாங்கு நிறுத்திக் கொண்டு மற்றொரு சிறிய பகுதி வாடிக்கைக்காரர் வசம் அதிகாரியால் கையொப்ப மிட்டுக் கொடுக்கப் படும்.

பாங்கு வசம் வாடிக்கைக்காரர் கணக்கில் போடப்படும் வைப்புத் தொகைக்கு வாடிக்கைக்காரருக்கு உரிமையைப்பற்றி எழுத்து மூலமோ மறைமுகமாகவோ பாங்கு நடத்துபவருக்கு வாடிக்கைக்காரரின் உரிமையைப் பற்றித் தாக்கீது வந்தாலன்றி பாங்கு நடத்துபவர் வாடிக்கைக்காரர் செலுத்தும் பணத்திற்கான உரிமையைப் பற்றி கவலைப்படுவதில்லை. வாடிக்கைக்காரரின் நடப்பு வைப்புக் கணக்கில் மூன்றாமவர் ஒருவர் கூடப் பணம் செலுத்துவதை பாங்கு நடத்துபவர் ஏற்றுக் கொள்ளவேண்டியது இன்றியமையாதது எனலாம்.

சிறப்பு வகை வாடிக்கைகாரர்கள் :—சட்டப்படி பாங்கு நடத்துவோருடன் எந்த நபரும் கணக்கு வைத்துக்கொள்ளலாம். பாங்கு நடத்துபவர் கணக்கைத்தொடங்கும் முன்னர் மேற்படி நபரின் குணத்தைப் பரிசீலனை செய்து ஏமாற்றும் தன்மையில்லாது உள்ளாரா என்று தெரிந்துகொண்டு பின்னர் வர்த்தக முறையில் பழக விரும்புகிறார் என்று அறிந்தபின்னர் அவருடன் கணக்கு வைத்துக்கொள்ளுகிறார். சட்டப்படி சிலர் ஒப்பந்தம் செய்துகொள்ள அருகதையற்றவர் ஆகிறார்கள். அவர்கள் வயதுமுதிராதவர், பித்தர், குடிபோதையிலுள்ளவர்கள் மணமான பெண்கள், விடுப்புப்பெறு முறிந்தோர் (நொடித்தோர்) எல்லாவகைகளான முகவர்கள், டிரஸ்டிகள், நிறைவேற்றும் அதிகாரி (Executors) ஆட்சியாளர்கள் (Administrators) என்பன இந்தச் சிறப்புவகை வாடிக்கைக்காரர்கள் சம்பந்தமாக பாங்கு நடத்துபவர் எவ்வகையான முன்னெச்சரிக்கையுடன் தொழில் நடத்துகிறார் என்று கவனிப்போம்.

வயது வராதவர் இலக்கணம் :—இந்தியச் சட்டப்படி ஒருவர் 18–வயது நிரம்பப் பெறும்வரை அவரை வயது முதிராதவர் (Minor) என்றும் அந்த வயதை அடையுமுன்னரே நீதிமன்றம்

அவருடைய சொத்துகளைக் கண்காணித்துக் கொள்ளக்காப்புப் பொறுப்பாளர் (கார்டியன்) (Guardian) ஒருவரை நியமித்தால் இந்த வயது முதிராநிலை 21-வயதுவரை நீட்டப்படும் (இந்தியன் மெஜாரிடி சட்டம், 1875 பிரிவு 3. (Indian Majority Act. 1875 Sec. 3) ஆங்கில நாட்டுச் சட்டப்படி ஒரு நபர் தமது 21-வது வயது நிரம்பப்பெறும்வரை மைனராகவே (வயது முதிராதவராகவே) கருதப்படுகிறார். இது ஆங்கிலநாட்டுக் குடியிருப்புள்ளவர்களின் (Domicile) தோன்றல்களுக்கும் பொருந்தும். அவர்கள் வேறு குடியிருப்பைப் பெறின் இது அவர்களைப் பாதிக்காது.

வயது முதிராதவர் தாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மறுதலிக்கும் உரிமை :— பொதுவாக வயது முதிராதவர் தம் விருப்பத்திற்கேற்ப செய்துகொண்ட ஒப்பந்தங்களை மறுதலிக்க உரிமையுண்டு. ஒரு வயது முதிராப்பாலகனால் கொடுக்கப்படும் செக்கு அல்லது மாற்றுண்டியல் தான் பட்ட கடனைத்தீர்க்கும் வகையில் கொடுக்கின் அது சட்டப்படி செல்லாது. தவறான முறையில் தாம் வயது முதிந்தவர் என்று காட்டிக்கொண்டு கடன் பெற்றுள்ள சிறுவரை அதைத்திருப்பும்படி வற்புறுத்த முடியாது. சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் நியாய விதிகள் படி (Equity) அவர் ஓரளவு பொறுப்பாகலாம் (லஷ் எச் ஸ்டாக்ஸ் எதி. வில்சன் (1913) 2க் பெ 235 ப 242 (Lush H Stocks Vs. Wilson1913 2 Q.B. 235 P. 242.)

வயதுமுதிராப் பாலகரின் கணக்கு:— வயது முதிராப் பாலகரின் கணக்கு என்று வரவிருப்பு உள்ளவரை பாங்கு நடத்துபவருக்கு யாதொரு சிக்கலும் இல்லை. இம்மாதிரியானவர்களுடைய கணக்குகள் சட்டப்படி செல்லாமல் போகுமாதலால் (void) பாங்கு நடத்துபவர்கள் காப்புப்பொறுப்பாளரின் (Guardian) பெயரில் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். தவறுதலாக இவர் ஓவர் டிராஃப்ட் கடன்கொடுத்திருந்தாலும் அவரிடமிருந்து திரும்பப்பெறலாம். இல்லையெனில் வயது முதிராதவரிடமிருந்து கொடுத்த கடனைத் திரும்பப்பெறுவது கடினம். அவர்வசமிருந்து பெற்ற ஈடுகளைத் திருப்பிவிட வேண்டும். அதேபோன்று வயது முதிராக் காலத்தில்பட்ட கடனுக்காகச் சம்மதித்து ஏற்றுக்கொண்ட மாற்றுரிமை உண்டியலின்மீது சட்டப்படி வழக்குத் தொடர முடியாது. ஆயினும் முறைப்படி பெற்றவர் வழக்குத்தொடர நியாயமுண்டு. ஏனெனில் எந்தச் சந்தர்ப்பங்களில் இந்த உண்டியல் உருவானது என்று அவருக்குத் தெரியாது. செக்கு அல்லது மாற்றுரிமை

உண்டியல் இவற்றுலும் ஒப்பந்த முறைப்படியும் இவரைக் கட்டுப்படுத்த முடியாதெனினும் வயது வராதவர் செக்கு எழுதவும், மாற்றவும், உண்டியல்களை எழுதவும் மாற்றவும் செய்யலாம். இவற்ருல் பிறரைக் கட்டுப்படுத்தக்கூடும். ஆயினும் இவர் (வயது முதிராதவர்) கட்டுப்படமாட்டார். மூன்ருமவர் ஒருவர் தம்வசம் உள்ள ஆவணங்களை வயது முதிராதவர் ஒருவருடைய கடனுக்கு ஈடாகவைத்துவரின் அந்த வைப்பு சட்டப்படி செல்லாது. மேற்படி ஆவணங்களைக் கடனை அடைக்காமல் திரும்பப் பெறலாம்.

வயது வராதவர் முகவராக :—பொதுவாக ஒரு வயது வரா பாலன் ஒப்பந்தத்தில் நுழைய அனுமதியில்லை ஆயினும் வேருெருவருக்கு முகவராகப் பணியாற்றத் தடைஇல்லை. முதல் வருக்கு ஒப்பந்தம் செய்யத்தகுதியிருப்பது ஒரு முக்கியமான நிபந்தனை. இரண்டாவதாக அன்னர் வயது முதிராதவரை முகவராகப் பணியாற்ற முழு உரிமையளிக்க வேண்டும். வயது வராத சிறுவன் தன் தகப்பனரின் கணக்கினைக் கவனித்துவரும் போது அவரது செக்குகளைப் பிறருக்கு மாற்றியும், ஒப்பந்தங் களில் நுழையவும் கூடும். அவனுக்குத்தனிப்பட்ட உரிமையளிக் கப்படின் சரக்குக்கொள்முதல் செய்து முன்பணம் பெற்று விற்பனை செய்யக்கூடும். முகவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகா ரத்தை எழுத்துமூலம் பதிவு செய்து கொள்வதால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இவர் முகவராகப் பணியாற்று முன்னரே எழுத்து மூலம் பதிவுசெய்த அதிகாரம் கையில் வைத்திருத்தல் நலம்.

வயதுவராதவர் கூட்டு தாரராக :—வயது முதிராப் பாலகன் ஒருவன் கூட்டு வர்த்தகத்தில் கூட்டாளியாகச் சேர்வதில் யாதொரு தடையுமில்லை. இதர கூட்டுதாரர்களின் ஏகோபித்த அனுமதியைப் பெற்று சிறுவனை அல்லது சிறுமியைக் கூட்டாக சேர்த்துக்கொண்டு, மேற்படி வர்த்தகத்தில்வரும் லாபப் பங்கைப் பெறலாம். வயதுவராத பாலகன் வயது முதிர்ச்சி அடைந்து ஆறு மாதங்கட்குள்ளாக தான் கூட்டாளியாக இருக்க விரும்புகிருனை இல்லையா என்று அறிவித்து இதர கூட்டுதாரர்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டும், வாளாவிருப்பின் அவன் கூட்டு தாரராக இருப்பதாகக் கருதப்பட்டுப் பின்னர் எல்லாக் கூட்டு தாரர்களைப் போன்று பொறுப்பு வகிக்க நேரிடும். இதன் விளக்கமாவது அவன் வயதடைந்த பின்னர்க் கூட்டு வர்த்தகத்தின் கடன்களுக்கு எல்லா இதர கூட்டு தாரர்களைப் போன்று பொறுப்பாளியாவான். (பிரிவு 30 இந்தியக் கூட்டு

வர்த்தகச் சட்டம் 1932 24. ஆர். ஆர். 30) [1918] 41 சென்னை 823. ஆங்கிலச் சட்டத்தின் கீழ் வயது முதிராக்காலத்தில் பட்ட பொறுப்புகளுக்கு மேஜரான பிறகு பொறுப் பேற்க வேண்டும். (இம்பீரியல் லோன் கம்பெனி எதிராக ஸ்டோன் [1992] 1. க்வீ.பெ. பக் 599—Imperial Loan Company Vs. Stone [1892] I. Q. B. P. 599).

ஒரு கடன்பட்டவர் வழக்கில்—கமிஷனர்ஸ் ஆஃப் கஸ்டம்ஸ் அண்ட் எக்ஸைஸ் எதிராக ஒரு கடன்பட்டார் Exparte Commissioners of Customs & Vs. Debtor) இங்கிலாந்திலுள்ள முறையீட்டு நீதிமன்றத்தில் சில சூழ்நிலையில் ஒரு வயது வராப் பாலகனையும் முறிந்தவனாகக் (Bankrupt) கொள்ள இடமுண்டு என்று முடிவு செய்தனர். கொள்முதல் வரிகொடாது ஒரு கூட்டு வர்த்தக நிறுவனம் ஏமாற்றிக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டு வர்த்தகத்தில் வயது வாரத சிறுவனும் கூட்டுதாரர். அவன் வர்த்தகத்தில் நன்கு ஈடுபட்டுத்தன் இதர கூட்டுதாரர் போன்று வேலை செய்தகாரணத்தால் அவன் தமது வயதின்காரணமாக நீக்கம் பெறுவது சரியன்றென்றும் பொதுக் கொள்கை அம்மா-திரி ஒன்றும் இல்லை யாதலால் அவனும் முறிந்தவனைக் கொள்ளப் படவேண்டும் என்று முறையீட்டு மன்றத்தில் தீர்ப்பளித்தனர். பொதுவாக முன்பெல்லாம் ஒரு சிறுவன் தன் வாழ்க்கைக்கு உகந்த உணவு உடை இவைகளைப் பொறுத்தமட்டில் கடன் பெற்று அதைத் திருப்பத்தவறினால் அவனை முறிந்தவனைக் கருதிவந்தனர்.

பித்தர்கள்—சட்டப்படி ஆற்றலற்ற தன்மை—இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872ன் 11வது பிரிவின்கீழ் மனம் சரியற்று வெறிநிலையடைந்தவர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியில்லை. ஆயினும், வெறியர்களுடைய இயல்பான நிலை அல்லது மனம் அறிந்து கொள்ளும் தன்மையை அடைந்த போது அவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டால் அது செல்லுபடியாகும் முன்னரே செய்து கொண்ட ஒப்பநதங்களை சரியானதென்று ஆவ்வாறான நிலையில் முடிவு செய்தாலும் நிலத்தது எனலாம். ஆங்கிலநாட்டின் சட்டத்தின்கீழ் வெறியருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் அவருடைய விருப்பு வெறுப்பைப் பொறுத்து அமையும். (Voidable) ஏற்றுக்கொள்ளுவதோ தவிர்ப்பதோ அவருடைய முடிவைப் பொறுத்தது. இந்தியச் சட்டத்தின்கீழ் இது செல்லாதது. (void), ஒப்பந்தத்தில் ஏதோ தவறுகள்

மட்டும் இருக்கும் காரணத்தால் தள்ளப்படுவதன்று. மற்றொரு பிரிவு காரரும் வெறியர் என்றறிந்தாலே போதுமானதென்று செல்லாது எனக் கூறிவிடலாம்.

இந்தியச் சட்டத்தின்கீழ் புத்தி பேதமானவருடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஒரு சாரரரின் விருப்பத்திற்கேற்ப ஏற்கவோ தள்ளவோ கூடியதன்று. அது சட்டப்படி செல்லாது (மாசியானு எதிராக உஸ்மான் பியாரி [1907] 17. சென்னை. லா. ஜ 78— [Machiana Vs. Usman Beari [1907] 17. Mad L. J. 78) இவையெல்லாமறிந்த பாங்கு நடத்துபவர் புத்தி ஸ்வாதீன மற்றவருடன் (வெறியர்) ஒப்பந்தமுறையில் கணக்கு வைக்க விரும்ப மாட்டார். தமது வாடிக்கைக்காரரின் செக்குகளைக் காரணமின்றி கொடுக்க மறுத்ததாகக் குற்றம் சாட்டப்படுவார் அல்லது அவருடைய கணக்கில் காரணமின்றிப் பற்றெழுதியிருக்கிறார் என்று புகார் செய்யப்படுவார் (ஹார்ட்ஸ் லா ஆஃப் பாங்கிங் 3வது பதிப்பு பக் 145 Hart's Law of Banking 3rd Edition P. 145) ஒரு மாற்றுரிமை உண்டியல் எழுதப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு பிறருக்கு மாற்றப்பட்டு, கழிவு நீக்கிக் கொடுக்கப்பட்டுப் பணம் பெறவியலும். வெறியர் என்பதால் தடையில்லை. ஆயினும், பாங்கு நடத்துபவர் தமது வாடிக்கைக் காரரை வெறியர் என்றறிந்த பின்னும் கூட ஒப்பந்தம் செய்து கொண்டார் என்று நிரூபித்தால் ஒப்பந்தம் செல்லாது. பாங்கு நடத்துபவர் தமது வாடிக்கைக்காரரைப் பித்துப் பிடித்தவர் என்று தெரிந்துகொண்ட உடனேயே அவருடன் எந்த வகையான கணக்கின் பேரில் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ளக் கூடாது. நீதிமன்றத்திலிருந்து உத்தரவு வரும்வரை பொறுமையாக இருந்தும் அல்லது அவருடைய பித்து போய் இயல்பான மனோ நிலையை அடைந்தார் என்ற சான்றுகள் கிடைப்பின் மறுபடி தொடர்ந்து கணக்கு வைத்துக் கொள்ளலாம்.

குடிகாரர்கள் (Drunkards) ஒப்பந்தத்தில் ஈடுபட உரிமை இல்லை :- ஒப்பந்தத்தில் சேரும்போது அதில் வரும் சாரார் அனைவருக்கும் நல்ல தெளிவும் கூர்மையாகப் புரிந்து கொள்ளும் தன்மையும் இருக்கவேண்டும். ஒப்பந்தத்தில் சேர்ந்த ஒரு நபர் அவ்வமையம் தன்சுயநினைவு தவறியிருந்ததாகவும்,மதுபானத்தின் போதையில் இருந்ததால் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைப் புரிந்துகொள்ளும் நிலையில் இருக்கவில்லையென்று தக்க சான்றுகளுடன் நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தினால் நீதிமன்றம் தக்க விசாரணை நடத்தி அந்த ஒப்பந்தம் செல்லாது என்று முடிவு செய்யும். பொதுவாக குடிவெறியிலிருப்பவர்தள் அம்மாதிரியான

ஒப்பந்தம் செய்வதில் யாதொருதவறுமில்லை. ஆயினும் இம்மாதிரியான ஒப்பந்தங்களின் மூலம் மக்களைக் குடிவெறியில் ஆழ்த்தித் தன்னல நோக்கத்துடன் பிறரை வஞ்சிக்க முற்படாதிருக்கவும், குடிபோதையில் இருக்கும்போது கையொப்பம் இடச்செய்து அவர்களைப் பொறுப்பிலாழ்த்துவர். குடிவெறியிலுள்ள நிலையில் தன்நினைவு இன்றி அவர் கையெழுத்துப் போட்டார் என்று நீதிமன்றத்தில் அறிந்ததும் அம்மாதிரியான ஒப்பந்தம் செல்லுபடியாகாது என்று முடிவுசெய்யும். ஆயினும் மாற்றுரிமையுண்டியலில் மாற்றுதலாகி ஒருநபர் நன்நம்பிக்கையுடன் அந்த உண்டியலைப்பெற்றாலும் அதில் உள்ள ஒருசாரர் குடியராக இருப்பினும் இதுசெல்லும். குடிபோதையுடன் வாடிக்கைக்காரர் வந்து செக்கில் கையொப்பமிட்டுப் பணம் கோரின், பாங்கு நடத்துபவர் தக்கசாட்சியைக் கொண்டு கையெழுத்துப்போடச்செய்து பின்னர்தான் பணம் கொடுப்பார்.

மணமான பெண்கள்—சட்டநிலை :—மணமான பெண்ணின் பேரிலும் கணக்கு வைத்துக்கொள்ளலாம். புதிதாகக் கணக்குத் தொடங்குவதால் மணமான பெண்ணுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டியேற்படுகின்றது. செக்கு எழுதிப் பணம் பெறவும் அதன் மூலம் ஒப்பந்தத்தைச் சீராக முடிக்கலாம். பாங்கு நடத்துபவர் நேர்மையுடன் கணக்கு சம்பந்தமாக, மணமான பெண் நடத்திவரும் கொடுக்கல் வாங்கல்களைப் பின்னர் அவள் மீதுள்ள வெறுப்பினால் நடந்த கொடுக்கல் வாங்கல்களை சீரானவையல்ல என்று வாதிக்கயியலாது. ஓவர்டிராஃப்ட் கடன் சம்பந்தமாக பாங்கு நடத்துபவர் மணமான பெண்ணிடமிருந்து, அவளுக்குத் தனிப்பட்ட சொத்தில்லையெனில், திருப் பப் பெறுவது மிகக்கடினம். அல்லது அவளுக்கு என்று கொடுக்கப்பட்ட சொத்திலிருந்து வருவாய் மட்டும் அனுபவிக்கலாமென்றிருப்பினும் அந்தச் சொத்தை அவள் தனது கடனுக்குப் பயனாக்கவியலாது. மணமான இந்துப்பெண்ணுடைய நிலைமை மிகவும் முன்னேறியிருக்கிறது. இந்து வாரிசு சட்டம் 1956ன் 14-வது பிரிவின்படி (Hindu Succession Act. Sec. 14) இந்துப்பெண்ணின் சொத்து அவளுக்குச்சொந்தமானது. ஒரு மணமான முகம்மதியப்பெண் தனது கல்யாணத்தினால் ஒப்பந்தத்தில் நுழையக் கூடாதென்பதில்லை (இந்திய வார்சு சட்டம் 1925யின் பிரிவு 20 Indian Succession Act. 1925 Sec. 20) இதர மதத்தைச் சார்ந்த மணமான பெண்களுக்கு இந்திய வார்சு சட்டம் 1925ம் மணமான பெண்கள் சொத்துச் சட்டம் 1874ம் விதிகளைக் கூறுகின்றன. கணவர் பெண்சாதி இவர்களின் தனி உரிமைகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன. இங்கிலாந்தில் மணமானபெண்

கடன்பெற்ற நிலைமை மற்றெவரும் கடன்பட்ட நிலையில் உள்ளதைப் போன்றிருக்கும். இது சட்டச் சீர்திருத்தத்தின் விளைவாகும் (மணமான பெண்ணும் தீங்கிழைப்பு) சட்டம் 1935 Law Reform (Married Women & Tortfeasors') Act. 1935 (25 & 26 ஜியோ. 5. சி 30).

கணவரின் பொறுப்பு:— கணவரின் முகவர் போன்று செலவிட்டுக் கடன் பெற்றாலும், குடும்பச் செலவிற்காகக் கடன் வாங்கினாலும். அல்லது தமது வாழ்வுக்கான செலவுகளுக்காகக் கடன் பெற்றாலும் கணவர் பொறுப்பாளி. இதர காரணங்களால் கடன் வாங்கினால் கணவன் பொறுப்பாளியல்லன். எதிர் நோக்கி வரும் பொறுப்புகளை எதிர்த்து, தன்மனைவிக்குத் தேவையான பொருள்களை அவ்வப்போது வாங்கிக் கொடுத்துள்ள படியாலும், அவள் தனியே போய்த் தன்பெயரைக் (கணவன்) கூறிக் கடன் வாங்கக்கூடாதென்று நிபந்தனை இட்டுள்ளதென்றும், ருசுப்படுத்தி பொறுப்பு தன்னுடையதன்று என்று தட்டிக்கழிக்கலாம். முன்னர்க் கூறியதுபோல் பாங்கு நடத்துபவர் ஓவர் டிராஃப்ட் கடன் கொடுத்திருப்பின் அதைத்திரும்பப் பெறுவது கடினம். மேலும் சட்டப்படி தீர்ப்பளிக்கப்பட்ட கடனை (Judgment Debt)க் கொடுக்கத்தவறின் கல்யாணமான மாதைத் கைது செய்து சிறையில் அடைக்க முடியாது. ஃபிரஞ்சு சட்டத்தின்படி ஃப்ரஞ்சு மணமானமாது தனது கணவனின் உத்தரவின்றிக் கணக்கு வைத்துக் கொள்ள அனுமதி கிடையாது (ஃபிரஞ்சு பாங்கு தொழிலைப் பற்றிய நினைவு அலைகள் தி ஜர்னல் ஆஃப் தி இன்ஸ்டிட்யூட் ஆஃப் பாங்கர்ஸ் நவம்பர் 1929 Impressions of French Banking – The Journal of the Institute of Bankers November 1929) மணமான பெண்மணியுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுவதில் உள்ள சிக்கல்களையும் இடையூறுகளையும் தெரிந்து கொண்டு பாங்கு நடத்துபவர் மணமானவளிடமிருந்து ஓவர்டிராஃப்ட் வேண்டும் என்ற கோரிக்கையைத் தீர ஆலோசியாது, பின்வரக்கூடிய நட்டங்களையும் சுமைகளையும் நோக்காது ஏற்கக்கூடாது.

கூட்டுக்கணக்குகள்—இயல்பும் இயக்கும் முறையும்:— எல்லா நபர்களும் சேர்ந்து கூட்டுக் கணக்குத் தொடங்க வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தலான்றி பாங்கு நடத்துபவர் கணக்குத் தொடங்கக்கூடாது. கூட்டுக் கணக்கு சம்பந்தமாகப் பணம் எடுக்கும் முறை, மாற்றுரிமை உண்டியல்கள், முன்பணம் வசதி செய்தல், ஆவணங்களும் ஈடுகளும் எவ்வாறு ஏற்றுக் கொள்ளுதல் என்பன பற்றிய நடைமுறை விதிகளையும்

பழக்கமுறைகளையும் பாங்கு நடத்துபவர் ஐயந்திரிபு அற அறிந்திருக்க வேண்டும். கூட்டுக் கணக்கில் பணம் எடுக்க அனுமதியிருப்பின் அதைக்கொண்டு ஓவர் டிராஃப்ட் கடன் கொடுக்க அனுமதி என்று கருதவோ, பாதுகாப்பிற்கு இடப்பட்ட ஆவணங்களைத் திரும்பப் பெறவோ பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. அநேகர் சேர்ந்து ஒரு கணக்கை வைத்துக்கொள்ள விரும்பினால், இன்னார் கணக்கை நடத்திவருவார் என்று அதிகாரம் அளித்திருக்க வேண்டும். அவ்வாறு எழுத்து மூலம் அதிகாரப் பத்திரம் கொடுக்கப்படாவிடில் பாங்கு நடத்துபவர் அனைவரையும் செக்கில் கையெழுத்துப் போடவேண்டும் என்று வற்புறுத்தி மீறினால் கொடுக்க மறுத்துவிடலாம். கணக்கு சம்பந்தமாக எல்லா வகையான கொடுக்கல் வாங்கல்களைப் பற்றித் தீர விபரப் படுத்தி வாடிக்கைக்காரர்களைக் கையொப்பம் இடச்செய்து கொடுப்பதும் உண்டு. ரொக்கக் கடன் கணக்குத் தொடங்கமட்டும் கட்டளை பெற்று, இதர வகைக்களுக்குத்தனி ஒப்பந்தங்கள் மூலம் நடத்தி வருவர். எடுத்துக் காட்டாக முன் பணக் கோரிக்கை (அனுபந்தம் ஆவில் நமூனா 11 காண்க) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றைப்பற்றியும் அவற்றின் பின் தொடர்பைப்பற்றியும் நிபந்தனைகள் போடுவார்கள்.

கூட்டுக் கணக்கு வாடிக்கைக்காரர் முறிந்தவரானால்:— கூட்டுக் கணக்காளர் முறிந்தால், உடனே கட்டளை நிறுத்தம் பெறுவதோடல்லாது கணக்கைத் தொடர்ந்து நடத்த விடமாட்டார். இந்தக் கணக்கிலிருந்து பணம் கொடுக்க வேண்டுமானால் நொடித்தவருடைய சொத்தை மேற்பார்வையிடும் டிரஸ்டியின் அனுமதியுடன் இதர கூட்டு நபர்களுடைய அனுமதியின் பேரில்தான் கொடுக்கலாம். செல்வ நிலை வற்றாத வாடிக்கைக்காரரின் பணமதிப்பைக் குறைக்கும் அளவில் அவர் வெளியிடும் செக்குகளை ஏற்க மறுக்கக்கூடாது. அப்படி மறுக்கவேண்டிவரின் இன்ன காரணத்தால் மறுக்கப்பட்டது என்று கூறவேண்டும்.

(அ) செக்குகள் எழுதிப் பணம் பெறல்:— கூட்டுக் கணக்கில் செக்கு எழுதிப்பணம் பெறுதற்கான விவரங்களை ஐயமின்றி விளக்கித் தெரிவிக்கவேண்டும். கூட்டுக் கணக்கிலுள்ள நபர்களில் யாரேனும் ஒருவர், அல்லது அவர்களில் எவரேனும் அல்லது அனைவரும் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் மட்டிலும் செக்கு எழுதிப் பணம் பெறலாம் என்ற விளக்கம் தேவை. கூட்டுக் கடனில் கடன்பட்டார் ஒன்றல்லது அநேகக் கடன் கொடுத்தோரின் கணக்கின் வகையில் பணம் கொடுப்பதற்கான

சட்ட முறை பாங்கு நடத்துவோர் கூட்டுக் கணக்கில் உள்ள தொகையைத் திருப்புவதற்குப் பொருந்தாது. ஒன்றல்லது பல நபர்களுக்குக் கணக்கை நடத்திவரக் கொடுக்கப்பட்ட அதிகாரம் எந்தச் சமயத்திலும் பயனற்றுப் போகலாம். உத்தரவு கொடுத்தவர் மறித்தாலும், வெறியராலுைம், முறிந்தவராலுைம் இந்தக் கட்டளை செல்லுபடியாகாமல் போகும். அதே போன்று இந்தக் கட்டளை இட்டவர் தாம் விருப்பப்படவில்லையென்றால் அக்கட்டளையைத் திரும்பப் பெற்று அந்த நபர்களுக்குக் கொடுத்த அதிகாரத்தைத் திரும்பப் பெறலாம்.

(ஆ) எஞ்சி வாழ்வோரின் உரிமை:— இக்கட்டளை உயிருடன் உள்ள கூட்டாளியின் நிலையைப் பற்றி விளக்குவது வழக்கம். கூட்டு நபர்களில் ஒரு நபர் திடீரென மரணமடைந்தால் அதற்கு என்னென்ன முன்னெச்சரிக்கைகள் தேவை என்று முன் கூட்டியே வரையறுத்து விடலாம். பாங்கு நடத்துபவர் பழக்கமாகவும், ஒருவர்பின் ஒருவராக உரிமைகளையும் சொத்துகளையும் பெறுவதற்கான விதியின் கீழும் (Law of devolution) அந்தக் கணக்கில் உள்ள முழுத் தொகையும் உயிருடன் இருப்பவருக்கே போய்ச் சேரும்.

(இ) அளவுமீறிக் கணக்கில் பணமெடுத்தல் (Over Draw):—செக்கு எழுதிப் பணம்பெற உரிமையுடையவர்கள் கணக்கில் கடனைப் (Over Draw) பெற உரிமையுண்டா என்பதற்கான முன்னறிவிப்பு உண்டா என்று அறிந்துகொள்ள வேண்டும். கடன் பெறுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பின் கூட்டுப் பொறுப்பும் தனிப்பட்ட பொறுப்பும் விளக்கப்பட்டிருக்கும். கூட்டுப் பொறுப்பு கணக்கில் கடன் கொடுத்தவர் ஓரே ஒரு சட்ட நடவடிக்கைமட்டும்தான் எடுக்கக் கூடும். கூட்டு மற்றும் தனிப் பொறுப்பு என்றிருப்பின் எத்தனை கடன்பட்டவர்கள் உள்ளனரோ அதையொட்டித் தனித்தனி நடவடிக்கை எடுக்கக்கூடும். 2 கூட்டுக்கடன் பட்டோரில் ஒருவர் இறந்தால் கடன்கொடுத்தவர் உயிருடன் உள்ள இன்னொருவரைப் பணம்கொடு என்று கேட்பாரே ஒழிய இறந்தவரின் வாரிசுதாரரைக் கேட்கச்சட்ட அனுமதியில்லை. ஆயினும் கூட்டாகவும் தனிப்பட்ட முறையிலும் பொறுப்பில் இருப்பின் பாங்கு நடத்துபவர் அவ்வமயமுள்ள கடனை இறந்தவரின் சொத்தின்மீது தொடர்ந்து சட்டநடவடிக்கை யெடுக்க வழக்குத் தொடரலாம். கூட்டுப்பெயர்களில் பாங்குகள் இருப்பின் அவை ஈடாகவைக்கப்படின், அவற்றை மாற்றுவதற்கான நமுனாவில் பாங்கு அட்டையில் காணப்படும் பெயருள்ள அனைவருக்கும் கையெழுத்துப்போட்டுக் கொடுக்கவேண்டும்.

(ஈ) **இதர தகவல்கள் :—** கொடுக்கப்பட்ட அதிகாரக் கட்டளையில் கூட்டுக்கணக்கில் பாதுகாப்பிற்கு பாங்கு வசம் விடப்பட்ட ஆவணங்களைத் திரும்பப்பெற அனுமதி உண்டா என்று விவரமாக அமையவேண்டும். அதேபோன்று ஆவணங்களைக் கூட்டுக் கணக்கில் ஈடாக வைக்கலாமா கூடாதா என்ற கட்டளைகள் விவரமாக விளக்கப்படவேண்டும். கணக்கின் முழுத் தலைப்பு பாங்கின் எல்லாக்கணக்குப் புத்தகங்களிலும் மற்றும் எழுதப்படும் செக்குகளிலும் நன்கு குறிப்பிடவேண்டும்.

(உ) **கணவனும், மனைவியும் :—**கூட்டுக் கணக்கிற்குத்தக்க எடுத்துக்காட்டு, கணவனும் மனைவியும் கூட்டாகக்கொண்ட ஒரேகணக்கு பாங்கு நடத்துபவர் தொடக்கிக் கொடுப்பார். மார்ஷல் எதிராக க்ரட்வெல் என்ற (*1857*) சி 20 ஈக் 328) (Marshall V. Crutwell (1857) C. 20 Eq. 328 வழக்கில் கணவன் ஒருவன் தன் சுக நலத்தை முன்னிட்டுத் தொடங்கியும் தனக்குப்பின் கைம்பெண்ணான அவன் மனைவி அத்தொகையைக் கோரி உரிமைக்கொண்டாடக் கூடாதென்றும் அது தனது சொத்தின் ஒருபகுதியாக இருக்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆயினும் கணவன் கூட்டுக்கணக்கைத் தொடங்கி எதிர்பாராத மரணத்தின் காரணத்தால் ஆதரவற்ற கைம்பெண்ணான மனைவிக்கு அத்தொகை கிடைக்கும்படி செய்யலாம். (ஃபோலே எதிராக ஃபோலே (*1911*)1 இ.ரி. *281* Foley V. Foley (1911), 1 I.R. 281) எஸ். கே. பணிக்கர் எதிராக ட்ராவன்கோர் நேஷனல் அண்டு கொய்லான் பாங்க் லிமிடெட். S. K. Panikar V. Travancore National and Quilon Bank Ltd., என்ற வழக்கில் அதன் கலைப்பு அதிகாரிகள் (ஆ, இ. ரி. *1942* சென்னை *351*) கொண்டுவந்த வாதத்தில் உயர் நீதிபதி வெங்கட்டராவ் தீர்ப்பு அளித்தது வருமாறு "இந்தியாவில் நடப்பில் உள்ள சட்டத்தின்படி ஒரு இந்துக் கணவன் தன் பெயரிலும் தன் மனைவியின் பெயரிலும் கூட்டாக வைப்புப் போட்டிருப்பின் சட்டப்படி தனக்கோ தனக்குப்பின் தன் மனைவிக்கோ சேரவேண்டுமென்று குறிப்பிடின் அவ்வாறு ஒன்றும் நிகழவில்லை என்பதற்குச் சான்றுகள் காட்டியபின் அப்பணம் கணவனுடையது என்று ஐயம்திரிபுஅற முடிவாக்கலாம்.

கூட்டுப் பங்கு கம்பெனிகள் :- அவற்றின் சட்ட அமைப்பு:- பாங்கு நடத்துபவர் வர்த்தகக் கூட்டுக்கம்பெனிகள், வர்த்தக மற்றகூட்டுக் கம்பெனிகள் இவற்றுடன் கணக்குத் தொடர்பு வைத்துக்கொள்ளும் முன்பு முன்னெச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். கம்பெனிகள் சம்பந்தப்பட்ட சட்டம் சிலவற்றை

அனுமதிக்கின்றன. இதன் விளக்கமாவது கம்பெனிகள் இயல்பாக நடத்தக்கூடியதைத் தடுப்பதில்லை. மேலும், சில தடுக்கப்பட்டுள்ளன. பின் கூறப்பட்டது தனி நபர்களுடன் கொள்ளும் கணக்கைப் போன்றது. ஒரு கம்பெனி வடிவுபெற்றவுடன் மனிதர்களைப் போன்று சட்டமுறையில் எண்ணிறந்த பயன்களைப்பெறுகிறது. அது தன்னுடைய பங்குதாரர்களினின்று தனித்தே இயங்குவது சட்டமுறையில் ஒரு நூதனம். வர்த்தக நிறுவனங்கள் வர்த்தகமற்ற இதர நிறுவனங்கள் இவற்றின் பேரில் நடப்பு வைப்புக்கணக்குகளைத் தொடங்கலாம். பாங்குகளில் கணக்குத் தொடங்குவதற்கு தனிப்பட்ட அதிகாரங்கள் கொடுப்பதோடல்லாது அவைகள் தம்முடைய பெயரில் செக்குகள் எழுதிப் பணம் பெறலாம்.

கணக்கு தொடங்கப்படுமுன் கவனிக்கவேண்டிய முன்னெச்சரிக்கைகள்:— கார்ப்பரேஷன் பெயரில் கணக்குத் தொடங்குமுன் (அனுபந்தம் ஆ, நமூனு நீர் 12 காண்க) பாங்கு நடத்துபவர் அதனுடைய தனிப்பட்ட பட்டயத்தையோ சட்டத்தையோ அல்லது கூட்டுப்பங்குக் கம்பெனிப் பதிவாளரால் கொடுக்கப்பட்ட இணைப்புச் சான்றிதழையோ அதன் கம்பெனிப்புற விதிகள் பட்டயத்துடன் (Memorandum and Articles of Association) நன்கு ஆய்ந்து அவை நடப்பில் உள்ளவைதானு என்றும், விதிகளின்கீழ் மாற்றம்பெறக் கூடியவைதானு என்றும், கணக்குத்திறப்பதற்கான நடைமுறையை எழுதி உள்ளதாஎன்றும் கூர்ந்து அறிதல்வேண்டும். இதன் நகல்களை பாங்கு நடத்துபவர் தனது கோப்புஅட்டையில் காணக்கூடிய நிலையில் வைத்திருக்கவேண்டும். இவருக்கு இது சம்பந்தமாக ஏதாவது ஐயம் தோன்றினுல் உடனே அந்தக்கம்பெனியின் பதிவு அலுவலகம் உள்ள இராச்சியத்தின் கூட்டுப் பங்குக் கம்பெனிப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று பரிசீலனை செய்துகொள்ளவேண்டும். புதிய கம்பெனியாக இருப்பின் அதன் முதல் இயக்குநர்களின் பெயர் கம்பெனியின் அகவிதிகளில் கூறப்பட்டுள்ளனவா என்று கவனிக்கவேண்டும். இதன் மூலம் அந்தக்கம்பெனிக்குத் தனிப்பட்ட சட்ட அமைப்பு உண்டென்று கண்டுகொள்ளலாம். அவ்வாறு இருப்பின் அந்தக் கம்பெனிக்கான மூலதனம் கடன் பெறும் அதிகாரங்கள் நோக்கம் இவைகளைத் தெரியமுற்படுவார். வர்த்தகக் கார்ப்பரேஷன்களில் ஈடுபடும் அனைவரும் இவற்றை அறிந்திருக்கவேண்டும். தொழில் நடத்து சான்றிதழைக் காணவேண்டுமென்று பாங்கு நடத்துபவர் வற்புறுத்தலாம். மேற்படி கார்ப்பரேஷன் சங்கக் கூட்டத்தில் இன்ன பாங்கில்

கணக்கு வைத்துக்கொள்ளலாம் என்றும் இன்னார்க்குச் செக்கு களில் கையெழுத்துப்போட உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் முடிவு செய்த தீர்மானத்தின் நகலை அந்த பாங்கு நடத்துபவர் கோரி ஆய்ந்து பார்க்கலாம். அந்தத் தீர்மானத் தைக் கம்பெனிக் கூட்டத்தின் தலைவர் கையெழுத்துப்போட்டும் அதனடியில் அதன் செயலாளர் கையெழுத்துப்போட்டும் அனுப்பவேண்டும். கம்பெனியின் அதிகாரக் கட்டளையில் கீழ்க்கண்ட தகவல்களுடன் இயக்குநரும் செயலாளரும் கையெழுத்திட்டு அனுப்பவேண்டும்.

(அ) கம்பெனியின் வேறொரு தீர்மானத்தால் இந்த அதி காரக்கட்டளை நீக்கப்படும் என்று கூறும் வரையிலும் நடப்பில் இருக்கும் மேற்படி கட்டளையை ஒரு இயக்குநரும் செயலாளரும் கையெத்துப்போட்டு அனுப்புவார்கள்.

(ஆ) செக்குகளில் கையெழுத்துப்போட அதிகாரம் கொடுக்கப்பட்டவர்கள் கணக்கின் நிலை வரவிலிருப்பினும் சரி பற்றில் இருந்தாலும் சரி எவ்வமயமும் செக்குமட்டுமன்றி இதர உண்டியல்களிலும் கையொப்பம் இட அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளனர். கம்பெனியின் முகாந்திரமாக ஏற்றுக்கொள்ளப் படும். உண்டியல்களிலும் அவர்கள் கையெழுத்து இடலாம். அதேபோன்று பாங்கில் இடப்பட்ட ஆணவங்களைத் திரும்பிப் பெறவும் இதரசொத்துக்களைத் திரும்பிப்பெறவும் இழப்பீட்டுப் பத்திரங்களைக் கையெழுத்து இடவும் உண்டியல்களில் கழிவு நீக்கம் செய்யும் முன்னர் உத்தரவாதப் பத்திரங்களில் கையெழுத்துப் போடவும் ஆவணங்களைக் கம்பெனிக்காக வாங்கி விற்பதற்கான அதிகாரம் இன்னாருக்குக் கொடுக்கப்பட்டது என்றும் பின்னர் தொடரக்கூடிய ஐயப்பாடுகளை நீக்கி எழுத்துமூலம் பாங்கு நடத்துபவருக்கு விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது.

(இ) இயக்குநரில் மாற்றமோ செயலர் மாற்றப்பட்டாலோ பாங்கு நடத்துபவருக்குப் பொது விதியாக இந்தத் தகவல்களை அவ்வப்போது ஒரு இயக்குநரோ அல்லது செயலாளரோ தெரிவிப்பார்.

(ஈ) கம்பெனியின் இதர இயக்குநர் அனுமதியின் பேரில் மாற்று அல்லது பதில் இயக்குநர் நியமனம் பற்றிக் கம்பெனியின் விதிகள் அனுமதித்திருப்பின் அந்தத் தகவலை பாங்குநடத்துபவருக்குத் தெரிவிக்க வேண்டும். கம்பெனியின்

தீர்மானத்தில் இயக்குநர் என்ற சொல்லுக்குமாற்று இயக்குநர் என்ற தொக்கி இருக்கும் பதமும் பொருள் கொடுக்கும். கம்பெனியின் கணக்கை நடத்தவரும் நபர்களின் மாதிரிக் கையெழுத்தை பாங்கு நடத்துபவர் பெற வேண்டும். புதிய கம்பெனி நீங்கலாக இதர கம்பெனிகளில் ஐந்தொகைப் படிவங்களையும் ஆண்டறிக்கைகளையும் கேட்க வேண்டியது. இந்தத் தஸ்தாவேஜுகளின் மூலம் கம்பெனியின் நிதி நிலையைச் சரிவர புரிந்து கொள்ள இயலும். பொதுக் கம்பெனியாயிருப்பின் பாங்கு நடத்துபவர் கூட்டுப்பங்குக் கம்பெனிப் பதிவாளர் விடுத்த தொழில் நடத்து சான்றிதழைத்தம் பார்வைக்குக் காட்ட வேண்டும் என்று கோரலாம். சட்டப்படி அவை இருப்பின் பாங்கு நடத்துபவர் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்.

வர்த்தக கம்பெனி கடன் பெறுவது சம்பந்தமான தொக்கி நின்றுள்ள அதிகாரங்கள் :— கடன் வாங்கும் உரிமை கட்டுப் பாட்டுடனோ அல்லது இன்றியோ பொதுவாகக் கம்பெனியின் புறவிதிகளிலும் இதர விதிகளிலும் கூறப்பட்டிருக்கும். வர்த்தகக் கம்பெனி மட்டிலும் தான் விதிவிலக்குப் பெறும். கம்பெனிச் சட்டம் 1956ன் பிரிவு 293 (1) (d) இல் உள்ள இந்த அதிகாரம் கட்டுப் படுத்தப் படுகிறது.

கடன் வாங்குவதற்கான அதிகாரத்தில் கட்டுப்பாடு :— கம்பெனியின் கடன் வாங்கும் அதிகாரம் இயக்குநர்களால் செலுத்தத்தப்படுவதைக் கம்பெனியின் சங்க விதிகள் கட்டுப் படுத்துகின்றனவா இல்லையா என்று அடுத்த படியாகக் கவனிக்க வேண்டும். பாங்கு நடத்துபவர் இவற்றை நன்கு ஆய்ந்த பின்னர் இனி தேவையெனக் கோரும் முன்பணக் கடன் வசதி இயக்குநர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திலுட் பட்டுள்ளதென்றும் அந்த அதிகாரத்தை இதுகாறும் பயன் படுத்தவில்லை யென்றும் நற்சான்றிதழ் ஒன்றைக் கொடுக்கும்படி கம்பெனியின் தலைவர் (Chairman) அல்லது இயக்குநர் அல்லது செயலாளர் யாரேனும் ஒருவரை பாங்கு நடத்துபவர் கேட்கலாம். கடன் வாங்கு முறை தனியே அதிகாரம் ஒப்படைக்கப் பெற்றவரால் நடத்தப்படுகிறது என்றால் மேற்படி அதிகார ஒப்படைத்தல் முறை சங்க விதிகளின் (Artciles of Association) படி அமைந்துள்ளனவா என்றும், இதுசம்பந்தமான தஸ்தா வேஜுகளை (ஆவணங்களை) கம்பெனிக்காகவேண்டி சங்கக்கூட்டத் தீர்மான எண்ணிக்கை தேதியின்படி இன்னாரால் கையொப்ப மிடப்பட்ட கட்டளையும் கொடுக்கப்படுகிறதா என்றும் ஊன்றி நோக்க வேண்டும். பொதுவாக, தனிப்பட்ட சந்தர்ப்பங்கள்

தவிர, கம்பெனியின் இயக்குநர்குழு கடன் வாங்கவேண்டுமென்ற நிலைமை யேற்படின், கூட்டத்தில் தீர்மானம் ஒன்றைக் கொணர்ந்து, அதன் நகலை பாங்கு நடத்துபவருக்கு அனுப்பி வைக்கவேண்டும். அம்மாதிரி கொடுக்கப்படும் அதிகாரங்களில் கம்பெனியின் சொத்துகள் ஈடாக வைக்கப்பட வேண்டும் என்று கூறவேண்டியதில்லை. இந்தியச் சட்டத்தின் படியும், ஆங்கிலச் சட்டத்தின்படியும் வர்த்தகத் தொழில் செய்யாக் கம்பெனி நிறுவனங்கள் தவிர இதர கம்பெனிகளுக்குத் தங்கள் சொத்துகளை ஈடாகவைத்துக் கடன் பெற இயல்பாகவும் மறை முகமாகவும் அதிகாரம் உள்ள தெனலாம். இவ்வதிகாரம் ''நோக்கங்கள்'' என்ற வகுப்பின் கீழ் விளக்கப்பட்டுள்ளன. கம்பெனி கோரும் முன்பணவசதியை இன்ன இன்ன காரணத்திற்காகப் பெற்றனர் என்றும், அதற்குப் புறம்பாகச் செலவிட்ட காரணத்தால் பாங்கு நடத்துபவர் அதைக் கொடுக்க மறுக்கக்கூடாது. எனவே, பாங்கு நடத்துபவர், கம்பெனி அதிகாரிகள் மேற்படி முன்பணவசதியை வேறு ஏதோ ஒன்றனுக்குச்செலவிட்ட தகவல் தெரியாதும், தான் நேர்மையான வழியில் நடந்து கொண்டதாலும் அவருக்கு அதைப்பற்றிய பொறுப்புக் கிடையாது. கம்பெனிச் சட்டத்தின் கீழ் புறச் சட்ட விதிகளில் (Memorandum of Association) கூறப்படாத ஒரு நோக்கத்தின்கீழ் இயக்குநர்கள் தொழில் செய்து அதை பங்கு தாரர்களின் பொதுக்கூட்டத்தில் அனுமதி தெரிவித்துத் தீர்மானம் செய்யினும் அந்தச் செய்கை சட்டத்திற்குப் புறம்பானது (Ultra vires) என்று தள்ளப்படும். ஏனெனின் ஆரம்ப முதலே அது சட்டப்படி செல்லாத செய்கையாக இருப்பது தெரிந்ததே. கடன் வாங்குதல் இயக்குநர்களின் செய்கைக்குப் புறம்பானதாக இருந்து, ஆயினும் கம்பெனியின் அதிகாரத்திற்குட்பட்டதாயின், அம்மாதிரி நிலையில் தனிக் கூட்டம் ஒன்றில் தனிப்பட்ட தீர்மானமொன்றைக்கொண்டுவந்து வலுப்படுத்திக் கம்பெனியையும் கட்டுப்படுத்தலாம்.

இயக்குநர்களுடைய அதிகாரங்களை நிறுத்திவைத்தல் :- கம்பெனியைக் கலைக்கும்போது இயக்குநர்களுக்குக் கொடுக்கப் பட்ட அதிகாரங்கள் தாமாகவே நின்றுபோகும். ஆயினும் கம்பெனியின் பொதுக்கூட்டத்திலும் அல்லது கலைப்பு அதிகாரி யின் அனுமதியின்பேரில் இயக்குநர்களுக்கு அதிகாரம் வரலாம். கம்பெனியின் கூட்டத்தில் கம்பெனியை மூடுவதற்கான தீர் மானம் நிறைவேற்றப்படும். அதன் நகல் பாங்கு நடத்துபவருக்கு அனுப்பப்பட்ட பிறகு பாங்கு நடத்துபவர் இயக்குநர்கள் கையொப்பமிட்டு வரும் செக்குகளை ஏற்க மறுத்துவிட அதி காரம் உண்டு.

வர்த்தகமற்ற இதர சங்க நிறுவனங்கள் உத்திரவாதத்தின் பேரில் பொறுப்புகள் கட்டுப்படுத்தப்படல்:–பாங்கு நடத்துபவர் சங்கங்கள் பேரிலும்; குழுக்கள், நிறுவனங்கள் பேரிலும் கணக்குத்தொடங்கலாம். மேற்படி சங்கங்களும, நிறுவனங்களும் குழுக்களும் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இணைப்புப் பெற்றவை அவற்றின் உறுப்பினர்களின் பொறுப்பு அவர் கொடுக்கும் உத்தரவாதத்தொகையை அனுசரித்து இருக்கும். இந்த நிறுவனங்கள் வர்த்தக நிறுவனங்கள் அல்ல. அவை கலை இயல், இசை, நாடகம், விஞ்ஞானம், சமூகம், மதம், வாணிப முறை, இவற்றை நன்கு வளர்த்து முன்னேற்றம் அடைய விழைகின்றன. இந்த நிறுவனங்கள் தங்கள் பெயரின் பின் ''லிமிடெட்'' ''கட்டுப்படுத்தப்பட்டது'' என்ற சொல்லைப் பயன்படுத்துவதில்லை. லாப ஈவுப் பங்குகளைத் தமது உறுப்பினர்களுக்குக் கொடுக்காது மூலதனத்துடன் சேர்த்துக் கொண்டேயிருக்கும். தங்கள் பெயருடன் ''கம்பெனி'' என்ற பெயரையும் சேர்த்துக்கொள்ளுவதில்லை. இதர பொதுக் கம்பெனிகள், கம்பெனிச்சட்டத்தின்கீழ்க் கவனிக்கவேண்டிய விதிகளையும் முறைகளையும் இவைகளும் செயல்படுத்துகின்றன. இந்த நிறுவனங்கள் தொழில் நடத்தச் சான்றிதழ் பெறவேண்டியதில்லை. அது ஒன்றே விதிவிலக்கு. ஆயினும் வர்த்தகம் புரியும் பொதுக்கம்பெனிகளுக்கு அந்தச் சான்றிதழ் கண்டிப்பாகவேண்டும். வர்த்தகம் புரியா நிறுவனம் முன்பண உதவி கோரினால் பாங்கு நடத்துபவர் அதன் சட்டதிட்டங்களையும் விதிகளையும் நன்கு ஆய்ந்து கடன்பெறுவதற்கான அதிகாரங்களில் தடையும் கட்டுப்பாடுகளும் உண்டா என்று ஆலோசனை செய்ய வேண்டும். பொதுக்கம்பெனிகளின் கடன்முறை போன்று அடைமானக்கடன் முறை, மற்றும் ஈடுகாட்டிய கடன்முறைகளைக் கூட்டுப்பங்குக் கம்பெனிகளின் பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டிய பொறுப்பைப் போன்று, அதே சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகமற்ற நிறுவனங்கள் சங்கங்களும் கடன் முறையையும் அவ்வாறே பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

தனியார் கம்பெனிகள் – அவற்றின் வளர்ச்சி :– இங்கிலாந்தில் தனி நபர்களும், வர்த்தக நிறுவனங்களும் தங்கள் தொழிலுக்காக வேண்டிப் பெருமளவில் தனியார் கம்பெனிகளாக மாற்றிக்கொண்டு வருகின்றன. லண்டன் மாநகரில் அன்மையில் பதிவுபெற்ற கம்பெனிகளில் பெருவாரி எண்ணிக்கை தனியார் கம்பெனிகள்தான் இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகள்தாம். இவை உருவில் மிகவும் சிறியவை. இவற்றில்

பெரும்பாலானவை 'ஒருநபர்' கம்பெனிகள். இதன்பொருளாவது ஒருநபர் அந்தக் கம்பெனியின் பங்குகளைப் பெற்றிருக்கிறார். கொஞ்ச காலமாகத் தனியார் கம்பெனிகளின் அவசியத்தை இந்தியாவில் அறிந்துகொண்டு வருவதால் அதன் வளர்ச்சி அதிகரித்து வருகிறது. ஆயினும் இங்கிலாந்தைப் போன்று அளவிற்குமீறி வளர்ச்சியடையவில்லை. குறிப்பாக 1956-ம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்பின் விளைவாக இவ்வாறு முன்னேற்றமடைந்துள்ளது. பாங்கு நடத்துபவர் தனியார்கம்பெனிகளுக்கு முன்பணவசதி அளிக்குமுன் சற்று முன்னெச்சரிக்கையுடன் இருக்கவேண்டியது அவசியம். தக்க ஈடு இல்லாது அவர் தனியார்கம்பெனிக்குக் கடன் கொடுக்கக் கூடாது. தனிநபர்களுக்குக் கடன்கொடுக்க முன்வருவது போன்று இந்த வகையிலும் கடன்கொடுக்க முன்வரமாட்டார்.

தனியார் கம்பெனிகளுக்கு முன்பணக் கடன் வசதியளிப்பது:— தனிநபர் வர்த்தகமாயிருந்த ஒன்றைத் தனியார் கம்பெனியாக மாற்றிப் பதிவு செய்தபின்னர் பாங்கு நடத்துபவரை நாடி முன்பணவசதி கொடுக்கும்படி கோரினால், பாங்கு நடத்துபவர் சற்று நிதானித்து முன்னெச்சரிக்கையுடன் இந்த விண்ணப்பத்தைக் கருதவேண்டும். சட்டப்படி ஆய்ந்து நோக்கின் ஒரு தனிநபர் தனது வர்த்தக நிறுவனத்தைத் தனியார் கம்பெனியாக மாற்றும்போது அவர் தமது சொத்தனைத்தும் அந்தக்கம்பெனிக்கு விற்கிறார். அந்தக்கம்பெனிக்குத் தனிப்பட்ட சட்ட உருவம் உண்டு. அது தனிநபர் வர்த்தகத்தினின்று தனித்து இயங்குகிறது. கடன்கொடுத்தோர்கள் இனி இந்தவர்த்தகரின் சொத்தின்மீது ஜப்தி செய்ய முடியாது. ஏனெனில், சொத்து முழுவதும் கம்பெனியின் பெயரில் மாரியதுதான் காரணம் இன்னும் சில நிலைமைகளில் வர்த்தகம் செய்பவர் முறிந்து போகும் நிலைமையில் உள்ளதை நினைத்துச் சொத்துகளை அவ்வாறு மாற்றக்கூடும். அப்படி மாற்றினால் இவர் முறிந்தவராகிவிட்டார் என்றும் தமக்குக் கடன் கொடுப்பவரை ஏமாற்றும் நோக்கத்துடன் தம் சொத்தை உரிய முறையில் பிரித்துக் கொடுக்க விருப்பமின்றித் தவறான முறையில் செய்கிறார் என்றும் சட்டமுறையில் தொடர்ந்து கட்டுப்படுத்தலாம். சட்டப்படி அவர் முறிந்தவர் என்று நீதிமன்ற உத்திரவு பெற்றவுடன் தவறான குற்றப்படி மாற்றிய சொத்துக்களைத் திரும்பக்கொண்டு வந்து வீதப் பங்குத்தீர்மானம் செய்வார். எடுத்துக்காட்டாக ஒரு முறிந்தவர் குற்றமான முறையில் ஏமாற்றும் எண்ணத்துடன் சொத்தைக் கம்பெனிக்கு மாற்றினால் இடைக்காலத்தில் ஏற்பட்ட சொத்துமாற்றம் கலைப்பு அதிகாரி அஃபிஷியல்

அசைனியை பாதிக்காது. **சிம்ஸ், எக்ஸ்பார்ட்டி க்வெய்ஜ் எதி. சிம்ஸ் அண்டு லாயிட்ஸ் பாங்கு** (*1930*) Re Sims, Exparte Quaige Vs. Sims & Lloyds Bank (1930) என்ற வழக்கில் முன் குறிப்பிட்டபடி இதன் டிரஸ்டி லாயிட்ஸ் பாங்கில் கடன்பெற்று (ஓவர் டிராஃப்ட்) அதற்கு ஈடாகத் தங்கள் கைவசம் உள்ள டிபெஞ்சர்களை வைத்திருந்தனர். கம்பெனியின் டிரஸ்டியானவர் லாயிட்ஸ் பாங்கு நிறுவனத்தை மேற்படி ஈட்டுச்சொத்தைத் திரும்பப்பெற ("Relation back") முயன்றனர். இம்மாதிரி கம்பெனிகளுடன் தொடர்புவைத்துக் கொள்ளுவதை ஒரு ஆசிரியர் 'அண்டர்வுட் டேன்ஜர்' அண்டர்வுட் ஆபத்து என்று அண்டர்வுட் வழக்கை எடுத்துக்காட்டாகக் காண்பிக்கிறார் (பாங்கு நடத்துபவர்கள், இன்சூரன்ஸ் மனேஜர்கள் ஏஜண்டுகள் இதழ் பிப்ரவரி 1940 பக் 245 & 246. (Bankers, Insurance Manager's & Agent's Magazine February 1940, P. 245 & 246)

பதிவு செய்வதற்கான ஈடுகள்:- அநேக இதர விவரங்களில் உள்ளது போன்று கம்பெனிகள் தனிநபரினின்றும் வர்த்தக நிறுவனங்களினின்றும் பிரிவுபடுத்தி சிலவகை செக்யூரிடிகளைப் பதிவு செய்தல் வேண்டும் என்று சட்டவிதிகள் கூறுகின்றன. கம்பெனிகள் சட்டம் 1956-ன் 125 ஆவது பிரிவின்கீழ் எந்தெந்த செக்யூரிடிகளுக்குப் பதிவு தேவை என்று கூறுகிறது. அவைகளை மிதக்கும் ஈடுகள் என்று கூறலாம். எடுத்துக்காட்டாக நிலத்தின்மீது ஈடு, டிபெஞ்சர் கடன் பத்திரம் வெளியீடு செய்ய மிதப்பு ஈடு, இவைகள் பாங்கு நடத்துபவருக்கு அக்கறைகாட்டக் கூடியவை.

பதிவு செய்யாததனால் ஏற்படும் பின் விளைவு:— ஈடுகளைக் காட்டி முத்திரையிட்டுக் கையெழுத்துப்போட்ட 21 தினங்களுக்குள்ளாக அவற்றைப் பதிவு செய்யவேண்டும். கையெழுத்திட்ட தேதியும் அதை எழுதிய தேதியும் ஒன்றே எனக்கருதுவது தவறு. பதிவு செய்யப்படாவிடில் கம்பெனியை மூடுபவருக்கும் அது செல்லுபடியாகாது. இதைநம்பிக் கடன்கொடுத்தவருக்கும் அதன்மீது உரிமையில்லை. முதல் பதிவு செய்யப்படாமல் பின்னர் இரண்டாவதுதடவை வேறொரு நபரால் பதிவுசெய்யப்பட்டால் பதிவு செய்யப்படாத ஈடு செல்லாது. பின்னர் பதிவு செய்யப்பட்டது செல்லுபடியாகும். பின்னர் பதிவு செய்யப்பட்டவருக்கு முன்னர் உள்ள பதிவுசெய்யாதவர் தாக்கீது கொடுப்பினும் செல்லாது. (மானேலிதிக் பில்டிங் கம்பெனி வழக்கு In the Monolithic Building Company (1915) 1 அதி. 643) கம்பெனியுடைய கடமையாவது உடனே பதிவு

கொடுக்கவேண்டும். பொதுவாக வழக்கறிஞர் மூலம் பாங்கு நடத்துபவர் பதிவு செய்து கொள்வார். கம்பெனிப் பதிவாளருக்கு கடன் முடிந்த கடிதம் அனுப்பினல் பதிவு செய்யப்பட்ட ஈடு மாறும்.

கூட்டு வர்த்தகங்கள் - முன்னுரை :- கூட்டு வர்த்தக முறையில் பாங்கு நிறுவனம் குறைந்துகொண்டு வந்தாலும் வாணிப முறையில் ஈடுபட்டுள்ள கூட்டு வர்த்தக நிறுவனங்கள் இந்தியாவில் எண்ணிறந்த அளவில் உள்ளன. இந்தியக் கூட்டுவர்த்தகச் சட்டம் 1932-ன் 4-வது பிரிவின்படி "கூட்டுவர்த்தகமெனப் படுவது பல நபர்கள் ஒன்று கூடி ஒரு வர்த்தகமோ தொழிலோ பலருக்காக ஒருவராக அல்லது அனைவருமோ ஒன்றுகூடி நடத்தி அதில் கிடைக்கும் லாபத்தை பகிர்ந்துக்கொள்ளுதலாகும்.

கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் :- பாங்குத் தொழிலுக்கு 10 கூட்டுதாரர்களுக்குமேல் இருக்க கூடாதென்றும் இதர வர்த்தகங்களுக்கு 20 கூட்டுதாரர்களுக்கு மேல் இருக்கக் கூடாதென்றும் இந்தியக் கூட்டு வர்த்தகச்சட்டம் கூறுகிறது. இது தொடங்குவதற்கான சட்ட அமைப்பின்கீழ் அதிக முறைகள் ஒன்றுமில்லை. இதைப்பதிவு செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடு ஒன்றும் இல்லை. ஆயினும் இந்திய கூட்டு வர்த்தகத்தின் 58-வது பிரிவு பதிவுசெய்யப்படவேண்டும் என்று வற்புறுத்துகிறது. இப்பிரிவின்படி ஒவ்வொரு கூட்டு நிறுவனமும் வாணிக நிறுவனப்பதிவாளரி (Registrar of Firms) டம் அதன் தலைமை அலுவலகம் உள்ள இராச்சியத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டியது. இச்சட்டத்திறல் இனி இத்துடன் தொடர்பு கொள்ளும் வர்த்தகர்கள் இன்னார், இன்னார், என்று எளிதில் தெரிந்துகொள்ள முடியும். அவர்களுடன் வர்த்தகத்தில் ஈடுபடவும் சௌகரியமாக இருக்கும்.

பதிவு செய்யாததன் பின்விளைவுகள் :— பதிவு செய்யப்படாததால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி இந்தியக் கூட்டு வர்த்தகச்சட்டம் 1932ன் 69வது பிரிவில் விளக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்படாத கூட்டுவர்த்தக நிறுவனம், அதன் பெயரின்கீழ் சட்டப்படி எந்தநடவடிக்கையோ வழக்கோ மூன்ருமவரைக் கட்டுப்படுத்தி ஒப்பந்தத்தில் வழக்காடமுடியாது. வர்தகக கூட்டு நிறுவனம் தொடர்ந்த வழக்கு சட்டமுறையே செல்லாது. பின்னர் பதிவு செய்தாலும்கூட அது முறையாகாது. ஒரு கூட்டுதாரரோ அல்லது வேறு ஒரு வர்த்தக நிறுவனமோ அதன்மீது இழப்பீடு கோரியும், லாபப்பங்கு வேண்டுமென்றும்

கோரி வழக்காட முடியாது. ஆயினும் அவ்வழக்கில் இந்தக் கூட்டு நிறுவனத்தை கலைக்கவேண்டும் என்று கோரினல் நீதிமன்றம் கவனிக்கக்கூடும். ஒரு கூட்டுதாரர் நீதிமன்றத்தில் இதர கூட்டுதாரர்களைக் கட்டளைப்படுத்தி தனது வர்த்தக நிறுவனத்தை பதிவு செய்யவேண்டும் என்று வழக்காட வழி கிடையாது.

கூட்டு வர்த்தகத்தின் சட்டபடி நிலை :—சில காலங்களில் கூட்டுவர்த்தகத்தை அதன் உறுப்பினர்களிலிருந்து தனித்து இயங்கும் ஒரு நிறுவனம் எனக் கருதுவதுண்டு. இதே விளக்கத்தை ஸ்காட்லந்து காட்டுச் சட்டம் கொடுக்கிறது. ஆயினும் இந்திய, ஆங்கிலச் சட்டங்களின்படி கூட்டு வர்த்தக நிறுவனமும் அதன் உறுப்பினர்களும் ஒரே அமைப்பையேற்ற வர்கள் கூட்டுதாரர்களின் பெயர் சுருக்கம் தான் கூட்டு வர்த்தக நிறுவனத்தின் பெயர்.

கூட்டு வர்த்தகக் கணக்குகளைத் தொடங்குவது :— ஒன்றல்லது அதற்கு மேற்பட்ட கூட்டுதாரர்கள் சேர்ந்து பாங்கு நடத்துபவருக்கு விண்ணப்பம் செய்தாலன்றிக் கூட்டு வர்த்த கத்தின் பேரில் கணக்குத் தொடங்கக் கூடாது. ஒன்றல்லது அதற்குமேற்பட்ட கூட்டுதாரர்களின் விண்ணபத்தின் பேரில் கூட்டு வர்த்தக நிறுவனத்தின் கணக்கைத் தொடங்குவதில் பாங்கு நடத்துபவருக்கு யாதொரு தடையுமில்லை. ஆயினும் அம்மாதிரி தொடங்க வேண்டுமென்று விண்ணப்பித்த கூட்டுத் தாரருக்கு அருகதையில்லை என்ற தகவல் பாங்கு நடத்து பவருக்குத் தெரியுமாயின் அவர் தொடங்க மறுக்கலாம். பாங்கு நடத்துபவர் கணக்கைத் தொடங்குவதற்குமுன் செய்ய வேண்டிய எல்லா விசாரணைகளையும் தம்வசம் சேர்க்கப்பட்ட தகவல்களைக்கொண்டு நடத்தத் தவறினல் பின்னர் அவர் இடையூறுகளுக்கும் பொறுப்புகளுக்கும் ஆளாவார். இந்தியக் கூட்டு வர்த்தகச்சட்டம் 1932-ன் 22-வது பிரிவைக்காண்க. அதன்படி ஒரு கூட்டுதாரர் கூட்டு வர்த்தக நிறுவனத்தைத் தன் செயல்களால் கட்டுப்படுத்துவதாக மறைபொருளாகவோ விளக்கமாகவோ கூறுதல் வேண்டும். இதனல் கூட்டுவர்த்தக நிறுவனத்தையும் இதர கூட்டுதாரர்களையும் அவர் கட்டுப் படுத்துவார். ஆயினும் பிரிவு 19 (2) (B) யின் படி இதர கூட்டு தாரர்களையும் கூட்டுவர்த்தக நிறுவனத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் தம்விருப்பப்படி பாங்கில் கணக்குத் தொடங்க தொக்கிய அல்லது மறைமுகமான உரிமையில்லை யென்று கட்டுப்படுத்துகிறது. ஆயினும் வழக்கத்தை ஒட்டியும் உள்ளூர்

வர்த்தக முறையை ஒட்டியும் அவ்வாறு செய்யலாம் என்று இருப்பின் அதை அனுமதிக்கிறது. வர்த்தகக் கூட்டுமுறை உள்ளதென்ற காரணத்தினால் நிறுவனத்தையும் இதர கூட்டு தாரர்களையும் கட்டுப்படுத்தும் வகையில் ஒரு கூட்டுதாரர் பெயரில் பாங்குக் கணக்கைத் தொடங்குவதற்கு உத்திரவாதம் யாதொன்றும் இல்லை. (அலயன்ஸ் பாங்கு எதி. கீர்ஸ்லே(*1871*) *லா. ரி. 6 சி. பி. 433*) (Alliance Bank Vs. Kearsley (1871), L.R. 6 C. P. 433) எனவே, பாங்கு நடத்துபவர் கூட்டு வர்த்தக நிறுவனத்தின் பெயரில் கணக்குத் தொடங்குவதற்கு அதன் கூட்டுதாரர்களிடமிருந்து கடிதம் ஒன்றில் கையெழுத்து போடச்செய்து பெற்றுக்கொள்ள வேண்டும். அக்கடிதத்தில் கூட்டுதாரர்களின் பெயர், முகவரி, பாங்குக் கணக்கை இயக்கு பவரின் பெயர் அவர்களுடைய மாதிரிக் கையெழுத்து இவைகள் காணப்படவேண்டும். (அநுபந்தம் ஆ. வில் நமூனா நீர் 9–ஐக்காண்க) கூட்டுதாரருக்கு அளிக்கப்படும் அதிகாரத்தில் கணக்கிலிருந்து பணம் எடுக்க, செக்குகளை மாற்ற, உண்டியல்களை ஏற்க, சொத்துகளை அடைமானம் வைத்துக் கடன்பெற, இவை அனைத்தும் வர்த்தகக் கூட்டு நிறுவனத்தின் பெயரில் இயக்கலாம் (அனுபந்தம் ஆ–வில் நமூனா நீர் 9-அ வைக்காண்க) இம்மாதிரி செய்யப்படின் உறங்கும் கூட்டுதாரர் தமக்குப் பொறுப்பில்லையென்று கழித்துவிட முடியாது. இதர கூட்டு தாரர்களையும் கட்டுப்படுத்தக் கூடும்.

கூட்டுவர்த்தக நிறுவனத்தின் கணக்குகளை இயக்குதல் :— சற்றேறக்குறைய எல்லா வர்த்தகத்திலும் பாங்குக் கணக்குத் தொடங்கப்பட்டுச் செக்குகள் எழுதிப் பணம் பெறுவது வழக்கமானபடியால் பாங்கு நடத்துபவர் கூட்டுவர்த்தக நிறுவனத்தின் பேரில் வரும் செக்குகளை ஏற்க வேண்டியது நியதியே. மேற்படி செக்குகள் அதிகாரம் கொடுக்கப்பட்ட கூட்டுத்தாரரால் மேற்படி நிறுவனத்திற்காக வேண்டிக் கையொப்பமிட்டு அனுப்பப்படவேண்டும். இதற்குப் புறம்பான வேறுகட்டளைகள் இருப்பின் பாங்கு நடத்துபவர் மேற்படி செக்குகளை ஏற்க மறுப்பார். ஏதேனும் ஒரு கூட்டுதாரர் முன்னர்க் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை நீக்கிவிட்டதாக பாங்கு நடத்துபவருக்குத் தகவல் அளித்தால்' போதுமானது. அதேபோன்று ஒரு கூட்டுதாரர் கையெழுத்திட்டு அனுப்பிய செக்குத்தாளைப் பணம்கொடுக்க வேண்டாமென்று இன்னொரு கூட்டுதாரர் பாங்கு நடத்துபவருக்கு அறிவிப்புச்செய்யின் அதன்படி பாங்கு நடத்துபவர் நடந்துகொள்ள வேண்டும்.

அசையாப் பொருளைப் பற்றிய அதிகாரங்கள்:—ஆங்கிலச் சட்டத்தின்படி தனிப்பட்ட அதிகாரம் பெறாத கூட்டுதாரர் ஒருவர் கூட்டு நிறுவனத்தின் அசையாப் பொருளைச் சட்டப்படி அடைமானம் வைத்தால் அவர் நியாயமான விதிகளின்கீழ் (Equitable) ஈடு காண்பித்துள்ளார் எனக் கருதப்படும். இதன் காரணமாவது ஆங்கிலச் சட்டத்தின்படி ஒரு முகவர் தம் தலைவரைக் கட்டுப்படுத்தும் வகையில் யாதொரு பதிவு செய்யத்தகு முடங்கலும் எழுதிக் கொடுக்கக்கூடாது என்கிறது. மேற்படி முகவருக்கு இவ்வுரிமை கொடுக்கப்பட்டதாக எழுத்து மூலம் பதிவு செய்யப்பட்டிருப்பின் அவர் செய்கை தலைவரை கட்டுப்படுத்தும். இந்தியாவில் உள்ள கூட்டு வர்த்தகச் சட்டம் 1932-ன் 19-ஆவது பிரிவைக் காண்போம். ஒரு கூட்டு வர்த்தக நிறுவனத்தின் அசையாப் பொருளை அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள மறைமுக அதிகாரத்தின் அடிப்படையில் அடைமானமாக வைப்பதற்கு உரிமையில்லையென்று கூறுகிறது. சொத்து மாற்றச் சட்டம் 1882-ன் 8-வது பிரிவின்கீழ் சொத்து மாற்றுபவர் பெற்றுள்ள உரிமையை அனுசரித்தே மாற்றப்படு பவர் பெறுவார் என்றும் அதன் சட்ட பின்விளைவுகளுக்கும் மாற்று பவரின் உரிமையே அடிப்படையாகும். எனவே, இவ்விரண்டு சட்ட விவரங்களைக் கூட்டாகச் சேர்த்து நோக்கின் எல்லாக் கூட்டுத்தாரர்களும் ஒரே முகமாக அந்த அசையாப் பொருளை மாற்றவேண்டும் என்ற முடிவு செய்யாவிடில் இந்த மாற்றம் தவறுதலாகவும் சட்டப்படி ஒழுங்காகவும் அமையாது எனலாம். இந்த நிலைமை கிட்டத்தட்ட இந்தியாவிலும், இங்கிலாந்திலும் நடப்பிலுள்ளது.

அடைமானம் வைக்க அதிகாரங்கள்:—கூட்டு வர்த்தக நிறுவனத்தின் அன்றாடத் தொழிலை மேற்பார்வை செலுத்தி நிர்வாகம் செய்யும் கூட்டுதாரருக்கு வர்த்தகத்தின் பொருட்டுக் கடன் வாங்க அதிகாரம் உண்டு. எனவே, அவர் வர்த்தகக் கூட்டு நிறுவனத்தின் சொத்துகளை அடைமானம் வைக்கலாம். அசையும் பொருள்களை அடகு வைக்கலாம். பாங்கு நடத்துபவர் சட்டப்படி செல்லக்கூடிய அடைமானமோ அடகோ ஏற்பட்டதா என்று கண்காணிக்க, எல்லாக் கூட்டு தாரர்களும் சேர்ந்து கையெழுத்திட்ட முடங்கலைத் தந்துள்ளனரா என்று கவனிக்க வேண்டும். அல்லது அதிகாரம் பெற்ற கூட்டுதாரர் அந்தப் பத்திரத்தை எழுதி நிறுவனத்திற்காகவேண்டி கையெழுத்திட்டுப் பதிவு செய்துள்ளாரா என்று காணுதல் வேண்டும். இவ்வாறு அதிகாரம் பெறு ஒரு கூட்டுதாரர் சட்ட அடைமானம் செய்து கொடுப்பின் அது அந்த வர்த்தகக்கூட்டு நிறுவனத்தையும் மற்றும்

உள்ள இதர கூட்டுதாரர்களையும் கட்டுப்படுத்தாது. நியாயமான விதிகளின் கீழ்தான் அமையும் எனலாம். (மெர்ச்சன்ட் எதிராக மார்ட்டன் டௌன் அண்ட் கம்பெனி [1901] 2. கி. பெ 829 Merchant Vs. Morton, Down & Co. [1901] 2. K. B. 829).

தனியார் கணக்குகளில் செய்யும் கொடுக்கல் வாங்கல் :— கூட்டுதாரர்களுக்குள் உள்ள உறவு நன்னம்பிக்கை உறவானதால் ஒரு கூட்டுதாரர் தமது கணக்கில் கூட்டுவர்த்தக நிறுவனத்திற்கு வந்த செக்கை வசூல் செய்து வரவு வைக்கக் கோரினால் பாங்கு நடத்துபவர் இதர கூட்டுதாரர்களைக் கேட்டுக்கொண்ட பின்னர் தான் அம்மாதிரி செய்யக்கூடும். விசாரணையின்றிச் செய்யப் புகின், செலாவணி முறிச்சட்டம் 1881ன் 131வது பிரிவின்கீழ் சட்டப்படி பாங்கு நடத்துபவருக்கு அளிக்கப்படும் காப்பு நிராகரிக்கப்படும். ஒரு கூட்டுவர்த்தக நிறுவனத்தின் செக்கு ஏதேனும் ஒரு கூட்டுதாரார் பெயரில் எழுதப்பட்டு அந்தக் கூட்டுதாரர் தமது சொந்தக் கணக்கில் கட்டும்படி பாங்கு நடத்துபவருக்குக் கட்டளையிட்டால் பாங்கு நடத்துபவர் அதைப் பற்றிய விசாரணை செய்யவேண்டியதில்லை. (பேக்ஹவுஸ் எதி. சார்ல்டன் [1878] 8 அதி. டி. 444 Backhouse Vs. (Charlton [1878] 8 ch. D. 444) சொந்தக்கணக்கில் ஓவர் டிராஃப்ட் கடன் பளு இருப்பதைக் குறைக்கும் எண்ணத்துடன் மேலே கூறிய வண்ணம் செக்கு வந்திருப்பின் பாங்கு நடத்துபவர் சற்று முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். கூட்டுவர்த்தக நிறுவனத்தின் பெயரில்வந்த செக்கு ஒன்றைத் தம் சொந்தக் கணக்கில் வரவு வைக்கும்படி, கோரும் கூட்டுதாரர் தாம் அந்த வர்த்தகப் பெயரில் தொழில் நடத்தி வருவதாகக் கூறினாலும் பாங்கு நடத்துபவர் சற்று முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் (கார்டியன்ஸ் ஆஃப் செயின்ட் ஜான் ஹாம்ப்ஸ்டெட் எதிராக பார்க்ளேஸ் பாங்கு லிமிடட் [1923] 39 டி எல் ஆர். 229 Guardians of St John Hamp Stead Vs. Baraclay's Bank Ltd., [1923] 39 T. L. R 229).

கூட்டுதாரர் ஓய்வு பெறுதல் :— ஒரு கூட்டுதாரரோ அல்லது அநேகரோ ஓய்வுபெற்றால் ஓய்வெடுத்துக்கொண்டபின் நிகழும் கொடுக்கல் வாங்கல்களுக்கு அவர்கள் பொறுப்பாளி அல்லர். ஒரு கூட்டுதாரரோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கூட்டுதாரர்களோ ஓய்வு பெற்றார் என்று அறிவிப்பு பாங்கு நடத்துபவருக்கு அனுப்பப்படும்வரையிலும் பாங்கு நடத்துபவர் மேற்படி கூட்டுதாரர்கள் உள்ள கூட்டு நிறுவனத்திற்குக் கொடுத்த முன்பணமோ, கடன்வசதியோ இவையனைத்துக்கும்

எல்லாக் கூட்டுதாரர்களும் பொறுப்பாளிகளாகக் கருதிச் சட்டப்படி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆயினும் பொதுவாக ஒருபுதிய கூட்டுதாரர் சேர்க்கப்பட்டவுடன் பழைய கூட்டு வர்த்தக நிறுவனம் தானாகவே கலைந்து போகிற காரணத்தால் பாங்கு நடத்துபவர் புதுக் கூட்டுநிறுவனத்தைச் சம்மதித்து ஏற்றுக்கொண்டு பழைய கூட்டுதாரரைத் தமது பிடியினின்று விலக்கிவிடுகிறார். பாங்கு நடத்துபவர் தமது வழக்கிடும் உரிமையை இழக்க விரும்பாது பழைய கணக்கை இருப்புக்காட்டி புதிய கணக்கொன்றைத் திறந்து அதன் மூலம் க்ளேடன் வழக்கு விதி (Rule in Clayton's Case) (*1816*) I மெரிவில் I Merivale *572*, வந்து தடுக்காது பார்த்துக்கொள்ளுவார். பணம் செலுத்தியவுடன் மிகவும் தொன்மையான முதல்கடன் பாங்கு நடத்துபவருடையதாயினும்சரி அல்லது கூட்டுதாரருடையதாயினும்சரி அது தீர்க்கப்படும்.

கூட்டுதாரர் இறந்தபின் :—ஒரு கூட்டுதாரர் இறப்பின் அதன் விளைவாகக் கூட்டு வர்த்தக நிறுவனத்தையே மூடிக் கலைக்க வேண்டிய விதியுண்டு. அவருடைய வாரிசுதாரர்கள் தம் தகப்பனார் செய்த தொழிலில்சேர உரிமையில்லை. கூட்டு வர்த்தகத்தில் நிர்வாகம் செய்ய உரிமைக் கோரக்கூடாது. அந்தக்கூட்டு நிறுவனத்தின் சொத்துகளில் பங்கு மாத்திரம் கேட்கலாம். கூட்டு வர்த்தகத்தின் கணக்கைத் தொடர்ந்து நடத்திவர பாங்கு நடத்துபவர் எந்தவித எதிர்ப்பும் கூற மாட்டார். உயிருள்ள இதரகூட்டுதாரர்கள் மரித்தவரின் வாரிசு தாரருக்கு அவருடைய உரிய பகுதியைச் சொத்துக்களிலிருந்து பிரித்துக்கொடுக்கக்கூடும். கூட்டு வர்த்தக நிறுவனத்தின் கணக்கு, பற்று வகையில் இருப்பின் தொடர்ந்து அந்தக் கணக்கை நடத்திவருவதை தடுத்து, மரித்தவரின் உரிய பொறுப்புத்தொகை எவ்வளவு என்று முடிவு செய்யவும், க்ளேடன் வழக்கு விதி இதை பாதிக்காமலும் இருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

கூட்டுதாரர் முறிந்தவரானால் :— சட்டப்படி ஒரு கூட்டுதாரர் முறிந்தால் விளக்கம் ஏதும் செய்யப்படாத ஒரு கூட்டு வர்த்தக நிறுவனம் கலைப்புபெறும். ஏதேனும் ஒரு கூட்டுதாரர் முறிந்தவரானால் அவர் அந்தக் கூட்டு நிறுவனத்திற்காகப் பெற்ற அதிகாரம் நீக்கப்பெறும். அவரது சொந்த சொத்துகள் இதர கூட்டுதாரர்கள் ஏற்கும் பொறுப்பில் பங்கு ஏற்காது. முறிந்த கூட்டுதாரர்கள் கையெழுத்திட்டுக் கூட்டுவர்த்தக நிறுவனத்திற்காக வந்துள்ள செக்கை, இந்தத்தகவல் கிடைத்த

பின் பாங்கு நடத்துபவர் ஏற்கக்கூடாது. அந்தச் செக்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால் இதர கூட்டுதாரர்கள் அதில் கையெழுத்திட்டால்தான் பாங்கு நடத்துபவர் ஏற்பார். கூட்டு வர்த்தக நிறுவனத்தின் கணக்கில் வரவுத்தொகை இருப்பின் இதர கூட்டுதாரர்கள் முறிந்த கூட்டுதாரரின் சொத்துக்கு நியமிக்கப்பட்ட டிரஸ்டியிடம் மேற்படி கூட்டு தாரரின் கணக்கை ஒப்படைப்பார்கள்.

கூட்டு வர்த்தகக் கணக்கும் கூட்டுதாரரின் சொந்தக் கணக்கும் :— சொந்தக் கணக்கிலுள்ள தொகையை கூட்டு வர்த்தகக் கணக்கிற்கு மாற்றும்படிவரும் விண்ணப்பத்தை பாங்கு நடத்துபவர் மேற்கொண்டு மாற்றக்கூடும். இதில் அவர் எவ்விதமான மறுப்பும் தெரிவிப்பதில்லை. தனிக்கணக்கிலுள்ள தொகையைக் கூட்டுவர்த்தகக் கணக்கின் பற்றுநிலைக்கு மாற்றுவது அனுமதிக்கப்படுவதில்லை. மேற்படி தனிநபர் கணக்குடையவர் கூட்டு வர்த்தகத்தின் உறுப்பினரானாலும் ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை.

கூட்டுக் கணக்குடையவர் ஒருவர் புத்தி மாற்றம் பெறின் அவர் செக்குகளைக் கொடுக்கவேண்டாமென்ற கட்டளையை வெறியருடைய சொத்துக்காக நியமிக்கப்பட்ட குழுவினரும், சாதாரண கூட்டுதாரர்களும் சேர்ந்து பிறப்பிக்கும்போது பாங்கு நடத்துபவர் அதன்படி நடக்கவேண்டும். அதேபோன்று அந்தக் கணக்கு நடத்துவதையும் தாற்காலிகமாக ஒத்திப்போட்டு மேற்கண்ட கட்டளை பிறந்த பின்னர் அதற்கேற்ப நடக்க வேண்டும்.

இந்துக் கூட்டுக் குடும்பங்கள் :— இந்துக் குடும்பங்கள் பொறுத்தமட்டில் பாங்கு நடத்துபவர் சற்று முன்னெச்சரிக்கை யுடன் கடன் அல்லது முன்பணக் கணக்கு வகைகளில் நடந்து கொள்ளவேண்டியது. இந்துச் சட்டத்தின்படியும், பழக்கவழக்கப் படியும், சொத்துரிமையைப் பொறுத்தமட்டில் மாற்றங்களும் வார்சுரிமைகளும் மிகவும் சிக்கலானவை. சாதாரண அல்லது இயல்பான ஈடு எனக்கருதி பாங்கு நடத்துபவர் முன்பண வசதி யளித்தால் பல்வேறு இதர சட்டமுறையில் சிக்கலில் ஆழ்ந்து அவதியுறுவர். மிதாட்சர சட்டத்தின் (Mitakshara Law) கீழ் ஒருகுடும்பத்தில் பிறந்த அனைவருக்கும் சொத்தில் உரிமையுண்டு. உரிமை தோன்றும் தேதியைக் கருத்தோன்றிய நாள்முதல் கணக்கிடவேண்டும். எனவே, பாங்கு நடத்துபவர் ஏதாவது ஒரு கடன் உதவியளித்து அதற்காகப்பெற்ற

ஈட்டிணைச்செல்லாது என்று பின்னர்த் தோன்றும் ஒரு சிறு குழந்தை வழக்காட இடமுண்டு. எனவே, கடன்பத்திரம் பெற விரும்பும் பாங்கு நடத்துபவர் அந்தக்கூட்டு இந்துக் குடும்பத்தி லுள்ள அனைவரையும் கையெழுத்துப்போடச்செய்து பெற வேண்டும். அல்லது வீட்டின் தலைவனை மேற்படி பாண்டு அல்லது பத்திரத்தில் கையெழுத்துப்போட அனுமதிக்க வேண்டும். குடும்பத்தின் தலைவனுக்கு கர்த்தா (Karta) அல்லது நிருவாகி (Manager) என்றுபெயர். குடும்பச் செலவிற்காகக் கடன்பெற்றாலும், அல்லது குடும்பத்தின் பழைய கடன்களைக் கொடுக்கவும் சொத்தை ஈடுவைக்கவும் அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது. இந்துக் கூட்டுக் குடும்பத்தின் பேரில் பாங்கு நடத்துபவர் வழக்குத்தொடுப்பின் தாம் அந்தக் கூட்டுக்குடும் பத்திற்கு முன்பணக் கடன்வசதி யளிக்குமுன்னர் அந்தக்கூட்டு இந்துக் குடும்பத்தின் செலவிற்கென்றே அந்தக்கடன் கொடுக் கப்பட்டது என்று ருசுபடுத்தவேண்டும். இம்மாதிரிக் குழப்பங் களை நீக்கம் செய்யும் நோக்கத்துடன் சில பாங்குகள் இந்துக் கூட்டுக்குடும்ப முறையின்கீழ் கணக்குத்தொடங்க விரும்புபவர் களைத் தாமாகத் தனியே சம்பாதித்துவந்த சொத்து, பொதுச் சொத்து என்று பாகுபாடு பிரித்து எழுதித்தரும்படி கூறுகின்ற னர். அந்த அறிக்கையில் நடப்புவைப்பு, தவணைவைப்பு, சேமிப்புவைப்பு இவைகளில் சொந்தப் பொருளீட்டலில் ஏற்பட்டவை, பொதுச்சொத்தின் மூலம் ஏற்பட்டவை என்று பிரித்து எழுதக்கூறுவார் (அநுபந்தம் ஆ. நமூனைக்கள் 5 (ஆ) (ஈ) 10 இவைகளைக்காண்க) வர்த்தகம் புரியும் இந்துக் கூட்டுக் குடும்பத்தின் நிர்வாகியாக ஏதாவது ஒருநபரை நியமிக்கும். அவர் அதனுடைய எல்லாப் பொறுப்புகளையும் வகிக்கும் முகவர் எனக் கூறலாம் அவர் கர்த்தாவா இருக்கவேண்டிய நிர்ப்பந்தமில்லை. ஏனென்றால் தொழில் பல திக்குகளிலும் நடக்கும் எனலாம்.

நிர்வாகியின் அதிகாரங்கள் :— கர்த்தாவினுடைய அதிகாரங்களைவிட நிருவாகியின் அதிகாரம் மிகவும் விரிவானது அவர் குடும்பத் தொழிலுக்காகக் கடன் வாங்கவோ குடும்பச் சொத்துகளைத் தொழில் முகாந்திரமாக ஈடுகாட்டவோ அதிகாரம் பெற்றவர். ஆயினும் ஊக வர்த்தகத்தில் ஈடுபடுத்தக்கூடாது விபசாரத்திலும் குடும்பச்சொத்தைச் செலவிடக்கூடாது. கூட்டுக்குடும்ப நிறுவனத்தின் பெயரால் எழுதப்படும் மாற்றுரிமை உண்டியல்களால் குடும்பத்திலுள்ள அனைவரையும் சிறுவர்கள் சிறுமியர் உள்பட எல்லோரையும் கட்டுப்படுத்துகிறார்.

தகராறு ஏதேனும் தோன்றில் சமரசம் செய்ய அவர் முன்வரலாம். ஆனால் நட்டம் விளைக்கும் புதிய முயற்சியில் ஈடுபடக்கூடாது.

இந்துக்கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுடன் பொறுப்புகள்:- கூட்டுக் குடும்பத்தொழிலை நடத்தவும் குடும்பத்தின் செலவைச் செய்யவும் குடும்பத்தின் தேவைகளை ஈடுசெய்யவும் தொழில் நடத்தப்படுகிறது. இதற்கு எல்லா உறுப்பினர்களின் அனுமதியும் அங்கீகாரமும் உண்டு. ஒரு நிர்வாகி கூட்டுக் குடும்பத்தின் பேரில் கடன் பெற்றால் அக்கடன் பொதுத்தொழிலின் காரண மாக உண்டாகியது எனின் இதர கூட்டுதாரர்கள் அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும். அவர்களுடைய பொறுப்பு அவர் களுக்குக் குடும்பச்சொத்தில் உள்ள அக்கறையைப் பொறுத்து அளவிடலாம். வயதுவந்த கூட்டுதாரர்கள் சேர்ந்து பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். ஏனெனில், நிர்வாகியுடன் இவர்களும் ஒப்பந்தத்தில் சேர்கிறார்கள். அல்லது குடும்பத்திற்காக நிர்வாகி செய்த ஒப்பந்தத்தை இவர்கள் ஆமோதித்துத் தங்களையும் அதில் 'பொறுப்பாக்கிக் கொள்கிறார்கள். அக்கூட்டுக் குடும்பத்தில் வயது முதிராப் பாலகன் இருப்பின் அவன் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளி ஆகான். ஆயினும் வயது வந்த பின்னர் அவ் ஒப்பந்தத்தை ஆமோதிக்கலாம்.

வாடிக்கைக்காரரின் அட்டார்னி (வழக்கறிஞர்) கட்டளைக்கும் அட்டார்னி அதிகாரத்திற்கும் உள்ள வேறுபாடுகள்:—சில சமயங்களில் பாங்கு நடத்துபவர்கள் தங்கள் வாடிக்கைக்காரர் களுடைய அட்டார்னிகளுடன் தொடர்புகொள்ள நேரிடுகிறது. பொதுவாக வாடிக்கைக்காரர் தாம் நியமனம் செய்த நபர் மூலம் தமது கணக்குகளை பாங்கு நடத்துபவர் நடத்திவர வேண்டியது என்று கட்டளை இடுவார். ஒரு கட்டளை எனப் படுவது வாடிக்கைக்காரரின் பாங்குக் கணக்கை பொறுத்த மட்டிலும் இன்னாருக்குச் சட்டபடி இயக்க உரிமை அளிக்கப் பட்டிருக்கிறது என்றும் இந்த அதிகாரத்தை அளிக்க விரும்பு கிறவர் (Donor) இக்கட்டளையை இடுவார். (அனுபந்தம் ஆ வில், நமூன 5 இயைக் காண்க) கட்டளை எனப்படுவது ஒரு குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாகத் தனிப்பட்ட பாங்கு நடத்துபவருக்கு இடக்கூடியது. ஆயினும் அட்டார்னி எனப்படுவது வாடிக்கைக்காரரின் எல்லாப்பண சம்பந்தமான விவகாரங்களையும் பொதுவாகக் கவனிக்க வேண்டியபொது உத்தரவாகும்.

அட்டார்னியின் தனிப்பட்ட அதிகாரமும் பொது அதிகாரமும் இம்மாதிரியான அதிகாரம் பொதுவாகவும் இருக்கலாம் தனிப்பட்ட முறையிலும் அமையலாம் (அனுபந்தம் ஆவில் நமூனக்கள் 8, 37, 38 இவற்றைக் காண்க) இதன்படி இந்த அதிகாரத்தைக் கொடுத்தவர் சில குறிப்பிட்ட தகவல்களை மட்டும் அட்டார்னி பணியாற்ற விரும்பினுல் அதற்குத் தனிப்பட்ட அதிகாரம் என்று பொருள். தமது எல்லாக் காரியங்களையும் வழக்கறிஞர் முன்னின்று நடத்திக்கொடுக்கப் பொதுஅதிகாரம் அளிப்பின் அதற்குப் பொதுஅதிகாரம் என்று பொருள். முன்னர்க் கூறப்பட்டதற்கு எடுத்துக்காட்டாக ஒரு விற்பனைப் பத்திரம் எழுதப்படின் அதைத்தக்க முறையில் பதிவுசெய்ய வேண்டியது இன்றியமையாதது. இதைத்தனிப்பட்ட அதிகாரம் எனக்கூறலாம். ஒரு வியாபாரி தனது வர்த்தகம் சம்பந்தமாக நிர்வாகியை நியமித்து, வர்த்தகம் அனைத்தும் கவனிக்க அதிகாரம் கொடுப்பின் அது பொதுஅதிகாரம் ஆகும். அட்டார்னிக்குக் கொடுக்கப்படும் அதிகாரங்களில் பொது வகுப்புகள்கூட இருக்கக்கூடும். அதிகாரம் அளித்தவர் அவ் வகுப்புகளை மறுமுறை ஆமோதித்து, கொடுத்த அதிகாரத்தை இன்னும் வன்மைப்படுத்துவார். அதிகாரம் பெருவிடினும்கூட அட்டார்னி செய்த பணியை அதிகாரம் அளித்தவர் ஏற்றுக் கொள்ளக் கூடும். அடைக்கப்பச் செட்டியார், எதிராகத் தாமஸ் குக் அண்ட் சன்ஸ் (பாங்கு நடத்துபவர்கள்) லிமிடெட் ஆ. இ. ரி 1933 பிரிவு கௌன்சில் 78 (Adaikappa Chettiar, Vs. Thomas Cook & Sons (Bankers) Ltd (A. I. R, 1933 Privy Council 78) என்ற வழக்கில் "நிர்வாகிக்கு அளிக்கப்பட்ட அட்டார்னி அதிகாரத்தில் உள்ள இயல்பான வாசகங்களை நன்கு ஆய்ந்து நோக்கின் ஒரு பத்திரத்தைப் (Document) பற்றிகூறப்படவே யில்லை. இது முன் கழிந்த ஒரு செயலைப்பற்றிக் கூறுகிறது. இருசாராரும் சேர்ந்து அட்டார்னி அதிகாரத்தைத் திருத்தம் செய்து அந்தப்பத்திரத்தைபபற்றிக் கூறப்படச்செய்தல் வேண்டும். இல்லையேல் நீதிமன்றத்தின் சார்பாகவாவது அத்தப்பைத் திருத்தியிருக்கவேண்டும். இந்த வழக்கில் ஆய்ந்து நோக்கின், இந்தப்பத்திரத்தின் பெயர் ஞாபகப்பிசகாக விடப்பட்டதாகக்கருத இயலாது. வேண்டுமென்றே எழுதிவிடப் பட்டது என்று முடிவுசெய்யலாம். அட்டார்னி அதிகாரம் கொடுக்கப்பட்ட வழக்கில் நிர்வாகிக்கு எழுதுபவராகவோ பொறுப்பை ஏற்றுக்கொண்டவராகவே கையெழுத்திட்டு அதன் விளைவாக பில்ஸ் ஆஃப் எக்சேஞ்ஜ் சட்டத்தின்கீழ் பாங்குக் கம்பெனியை மாற்றுபவராகவோ (Endorsor) பொறுப்பாளி

யாக்கினர். அட்டார்னி அதிகாரத்தின்மூலம் பாங்கு கொடுத்த கடன்களுக்கு உத்திரவாத அதிகாரம் இவர் தம் இச்சைப்படி கொடுத்தும் இது பாங்கு முறையில் இதுகாறும் நிகழ்ந்ததில்லை. எனவே, பாங்கு நிர்வாகி தம் வரவேற்பைமீறி அதிகாரத்தைச் செலுத்தினர் என்று முடிவாக்கப்பட்டது இந்தத் தீர்ப்பின் மூலம் பாங்கு நிர்வாகிக்கு அளிக்கப்படும்போது அட்டார்னி அதிகாரம் எவ்வகையில் அமைப்புப் பெறுகிறது என்று தெரியலாம். ஒருநிர்வாகிக்கு உண்டியல்களை மாற்றவும் உண்டியல்களுக்குப் பணம் கொடுக்கவும் அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது என்ருல் அவர் வரம்புமீறி உண்டியல்களுக்காகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, கொடுக்கிறேன் என்று பாங்கிற்காக வேண்டி ஏற்றுக்கொள்ளக் கூடாது. இந்த அதிகாரம் புறம்பானதே. இதே வழக்கில் நிர்வாகி தொக்கிய அல்லது மறைமுக அதிகாரம் உண்டு என்று ஒருசெக்கிற்கு உத்தரவாதம் அளிக்கவோ அதுவந்த சிலநாள்கள் கழித்து பணம் எளிதில் மாற்றத்தகும் என்று சான்றிதழ் கொடுக்கவோ அதிகாரம் இல்லையென்று தீர்ப்பளிக்கப்பட்டது. செக்குத்தாளை மாற்றுவ தற்கு அதிகாரம்பெற்ற முகவர்க்கு அதைப் பல்வேறு மாற்றுரிமைகள் செய்யவோ, ரொக்கமாக மாற்றித் தமது சொந்தக்கணக்கில் வரவுவைக்கவோ அதிகாரம் சொடுக்கப் படவில்லை, "பெர்ப்ரோ" (PerPro) என்று கூறப்படும் தனிப்பட்ட அதிகாரம் குறுகிய எல்லைக் கோட்டை உடையது. இதன்மூலம் முதல்வரைக் கட்டுப்படுத்தும் வகையில் முகவர் கையெழுத்து இடுவார். முகவர் எல்லைமீறி இதன்கீழ் பணி யாற்ற முடியாது.

எடுத்துக்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள் :— முதன் முதலாக பாங்கு நிர்வாகி வந்திருக்கும் அட்டார்னி அதிகாரப் பத்திரம் நடப்பில் உள்ள முத்திரை வரிச் சட்டத்தின்கீழ் தகுந்தபடி வில்லைகள் சேர்க்கப்பட்டுள்ளனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். அதனுடைய படிவம் ஒன்றைத் தம் கோப்பில் (File) சேர்த்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். வழக்கமான கட்டளைப் படிவத்தில் தமது வாடிக்கைக் காரரைக் கையெழுத்துப் போடச்செய்து வாங்கி வைத்துக்கொள்ளுதல் நல்லது. இதன்மூலம் அட்டார்னி அதிகாரத்தில் பின்னர் ஏற்படக்கூடிய குறைபாடுகளையும் சங்கடங்களையும் எளிதில் தீர்க்கக்கூடும். இம்மாதிரியான கட்டளை ஒன்றை பாங்கு நடத்துபவர் பெறின், தனிப்பட்ட முறையில் அட்டார்னி அதிகாரம் தாமாகவே செயலற்றுப் போய்விட்டது எனலாம்.

செயலாக்குபவர்களும் டிரஸ்டிகளும்:—உயில் எழுதிவைத்து மரித்தவர் தமது சொத்தை உயிலில் கண்ட படி செயல் புரியும் படி விண்ணப்பித்துக்கொண்டால் அச்செயல் புரிபவர் செயலாக்குபவர் எனலாம். உயிலில் கூறப்பட்ட நபர் விருப்பத்தோடு செயல் புரியலாம் அல்லது விருப்பப்படாமலும் இருக்கலாம். ஆயினும், மரித்தவர் சொத்தைத் தம் வசமாக்கிக் கொள்ளமுடியாது. டிரஸ்டி என்று சொல்லப்படுபவர் உயிலின் கீழோ டிரஸ்ட் பத்திரத்தின் காரணமாகவோ நியமனம் பெற்று டிரஸ்ட் சொத்தைக் காப்பாற்றி வருபவர். பொதுவாக பாங்கு நடத்துபவர் செயலாக்கு பவர்கள் பேரிலும், டிரஸ்டிகள் பேரிலும் கணக்கு வைத்துக்கொள்ள விருப்பப்படமாட்டார். ஆயினும், அவர்களுடைய சொந்தப்பெயரில் கணக்கு வைத்துக்கொள்வதைப்பற்றி அவர் எவ்வித எதிர்ப்பும் செய்வதில்லை. இந்த அதிகாரிகளை நியமனம் செய்த உயிலை ருசுப்படுத்தும் சான்றுக் கடிதங்களையும் (Official probate) உயில் நிர்வாகப் பத்திரங்களையும் (Letter of Administration) நன்கு ஆய்ந்த பின்னர் இவர்கள் பதவியின் பேரில் கணக்கு வைத்துக் கொள்ளலாம். ட்ரஸ்ட் சொத்தின் பணம் தவறான முறையில் செலவழிக்கப் படுகிறது என்று பாங்கு நடத்துபவர் அறிந்திருந்தாலும் ட்ரஸ்டியின் சொந்தப் பேரில் கணக்கு உள்ளது என்று கூறி இவர் பொறுப்பினின்று விலகமுடியாது. பாங்கு நடத்துபவர் ட்ரஸ்ட் சட்டத்திற்குப் புறம்பாக நடப்பின் பயன் அடைபவருக்குப் (Beneficiary) பொறுப்பாளி ஆகிறார். ஒரு ட்ரடிஸ்டி மோசடி செய்யின் விசாரணையின் போது பாங்கு நடத்துபவர் குற்றவாளி ஆகக் கருதப்படின் அவரும் பொறுப்பாவார். பயனடைவோரின் நன்மையைக் கோராமல் ட்ரஸ்டியின் மோசடிக்கு உடந்தையாக இருந்தார் என்று விதிக்கப் படுவார். க்ரே எதிராக ஜான்ஸ்டன் (1868) லா. ரி. 3 எச். எல் 1. Gray v. Johnstone (1868) L. R. 3 H. L. 1) என்ற எடுத்துக் காட்டான வழக்கில் செய்யப்பட்ட தீர்ப்பு வருமாறு. "பாங்கு நடத்துபவர் தமது வாடிக்கைக்காரரின் செக்கை ஏற்கமறுத்தால் அந்த வாடிக்கைக்காரர் ஒருகால் செயலாக்குவோராக (Executor) இருக்கலாம்...........முதன் முதலாக நம்பிக்கை மோசம் ஏற்பட்டிருக்க வேண்டும். இது செயலாக்குவோரின் உள்ளக்கிடக்கையால் ஏற்பட்டது. இரண்டாவதாக பாங்கு நடத்துவோர்களும் இவர்களுக்கு உடந்தையாக இருந்திருக்கக்கூடும். அதன் காரணமாகத் தான் இந்த நம்பிக்கை மோசமும் ட்ரஸ்ட் பணத்தைத் தவறான வழியிலும் செலவிட முடிந்தது. பாங்கு நடத்துபவர்கள் உடந்தையாய் இருக்ககாரணம் என்னவென்று ஆலோசனை செய்யின் அவர்களுக்குச் செயலாக்கு

வோரால் எதாவது அனு கூலமோ ஆதாயமோ கிடைத்திருக்க வேண்டும். இவற்றை ருசுப்படுத்திஞல் பாங்கு நடத்துபவர்கள் உடந்தையாய் இருந்து வந்தார்கள், அதன் விளைவாக நம்பிக்கை மோசம் ஏற்பட்டது எனலாம்'' ஓ. ஆர். எம். எதிராக நாகப்பச் செட்டியார் 43 பாம். லா. ரி. 440 (O R. M. V. Nagappa chettiar 43 Bom. L. R. 440) என்ற வழக்கில் பாங்கு நடத்துபவர் ட்ரஸ்ட் நடவடிக்கை பெற்ற வாடிக்கைக்காரரின் கணக்கு வைத்திருந்தும் கூட ட்ரஸ்ட் பணத்தை வாடிக்கைக்காரரின் சொந்தப் பணத்தில் வரவு வைத்து அதிலிருந்த பற்று நிலைமை மாற்றிஞர். பாங்கு நடத்துபவர் தவருன வழியில் நடந்து கொண்டார் என்று முடிவு செய்து வாடிக்கைக்காரரின் கணக்கில் வரவு வைத்த ட்ரஸ்ட் தொகையை அந்த ட்ரஸ்டுக்கே திருப்பிக் கொடுக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு முன்ஞல் நடந்த ஒரு வழக்கில் ஆ. இ. ரி. 1936 பி. க. 1936 A. I. R. 193 Pc 193) வாதி ஒரு பெண்மணி. அவர் பிரதி வாதி பாங்கியில் கணக்கு வைத்திருந்தார். அவளுடைய கொடுக்கல் வாங்கல் அனைத்தையும் கண்காணிக்க "ஏ" என்ற வழக்கறிஞரை நியமித்திருந்தார். 'ஏ' என்றநபர் தமது சொந்த முறையில் பிரதிவாதி பாங்கில் கடன் பட்டிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அப் பெண்மணியின் கணக்கிலிருந்து பணத்தைத் தம் சொந்தக் கணக்கிற்கு ஏமாற்றி ஓவர் டிராஃப்ட் கடனையும் போக்கிஞர். 'ஏ' என்பவர் நியமனப்படி அப்பெண்மணியின் கணக்கிற்கு டிரஸ்டி ஆவார். அவர் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். பாங்கு நடத்துபவரும் டிரஸ்டியும் நம்பிக்கை மோசமாக நடந்து கொண்டார்கள், என்று பாங்கும் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்று முடிவாக்கப்பட்டது. ஒன்றிற்கு மேற்பட்ட ட்ரஸ்டிகள் நியமனம் செய்யப்படின் பாங்கு நடத்துபவர், செக் கையெழுத்து இடுபவர், உண்டியல்கள் மாற்றுபவர் இன்ஞர் இன்ஞர் என்று விளக்கமான கட்டளையை எதிர்நோக்குவார். கட்டளை ஒன்றும் இல்லாத பக்ஷத்தில் ட்ரஸ்டிகளில் எவரேனும் ஒருவர் பாங்கு சம்பந்தமான கொடுக்கல் வாங்கலை நடத்தலாம். ஒரேட்ரஸ்டுக்குப் பல ட்ரஸ்டிகளை நியமனம் செய்தால் அது கூட்டுப் பொறுப்பாகச் செம்மையாகக் கவனிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் அமைக்கப் படுகிறது. செயலாக்கு பவர்களில்யாரேனும் ஒருவர் மரித்தால் பாங்கு நடத்துபவர் கணக்கில் மாற்றங்கள் செய்ய வேண்டிய நியதி இல்லை. ஆயினும் டிரஸ்டிகளில் ஒருவர் ஓய்வெடுத்தாலும் அல்லது இறந்து பட்டாலும் பாங்கு நடத்துபவர் இதர டிரஸ்டிகள் உள்ளனர் என்று வாளாவிருக்க முடியாது. செயலாக்குபவர்கள் கடன் பெறின் இறந்து பட்டவரின் பொறுப்புகளை நீக்குவதற்காக என்று

கருதப்பட்டு அவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப் பேற்பார்கள். ஆயினும், இறந்தவரின் சொத்துகளை ஈடுகாட்டி கடன் பெறின் அப்பெழுது அவர்கள் பொறுப்பாளி ஆகமாட்டார்கள். பொதுவாகச் செயலாக்குபவர் இறந்து பட்டவரின் சொத்தை ஈடுகாட்டி கடன் பெற முடியாது. அது பொதுச் சொத்தைக் கட்டுப்படுத்தாது. மணமான பெண் செயலாக்குபவளாக நியமிக்கப்படின் அவளது கணவனின் செயல்களைக் கட்டுப் படுத்த முடியாது. அவளது கணவன் இவளது செயலில் தொல்லை விளைவித்தால் அவள் கட்டுப்பட நேரிடும்.

சங்கங்களும், பள்ளிகளும் :— வர்த்தகத்தில் ஈடுபடாத சங்கங்களும், பள்ளிகளும், குழுக்களும், நிதிச்சங்கங்களும் கணக்குத்தொடங்கிக் கொள்ளலாம் (அனுபந்தம் ஆ-வில் நமூன 13-ஐக் காண்க) இவைகள் இணைப்புப்பெருவிடின் இவற்றிற்குச் சட்ட அமைப்பும் இல்லை. ஒப்பந்தத்தில் நுழையவும் அருகதை யற்றுப்போகும். அம்மாதிரி நிலையில் அவற்றின்மீது சட்டப்படி வழக்காட முடியாது. முகவராகப் பணியாற்றும் அதன் அதிகாரிகள் ஓவர்டிராஃப்ட் கடன் பெற்ருல் அவர்களைச் சட்டத்தின்கீழ்ப் பொறுப்பாளராக்க யியலாது. அவர்கள் சொந்த முறையில் ஓவர்டிராஃப்ட் கடன் பெறின் அதுதனியே தொடரப்படலாம் “ஆர். ஏ. துபாஷ், பார்ஸி ஜிம்கானு கணக்கு R. A. Dubash A/c Parsi Gymkhana” என்று கணக்குத் தொடங்கி திரு. துபாஷ் ஓவர்டிராஃப்ட் கடன் பெற்ருல் அவர் தனிப்பட்ட முறையிலும் பொறுப்பேற்பார். அதன் நிறுவனத்திற்கும் பொறுப்பாக இருக்கவேண்டிநேரிடும். இம்மாதிரியான நிறுவனங்கள் கணக்குத் தொடங்க விரும்பினுல் பாங்கு நடத்துபவர் அதன் சங்க விதிகளைக் கேட்டுவாங்கி அதுஇணைப்புப் பெற்றதுதானு என்றும், மேற்படி பாங்கில் கணக்குத் தொடங்குவதற்காக அனுமதி உண்டா என்ற தீர்மானத்தின் நகலைப்பெற்றும், அவற்றின் உறுப்பினர்களில் இன்னுர் பணம்பெறவும், செக்குகளில் கையெழுத்துப்போடவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் நன்கு தெரிந்துகொள்ள முற்படுவர். (இதற்கான நமூனு 14-ஐ அனுபந்தம் “ஆ”வில் காண்க) மேற்படி சங்கத்தின் கணக்கை இயக்கும் நபர் மேற்படி பாங்கில் சொந்தக்கணக்கும வைத்திருப்பின், சங்கத்தின் பணத்தைச் சொந்தக் கணக்கில் போடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பாங்கு நடத்துபவரின் பொறுப்பு அந்தச் சங்க நிறுவனத்தின் உள்—விதிகளில் கூறப்பட்ட எந்த விதிக்கும் புறம்பாக பாங்கு நடத்துபவர் செய்ய

அனுமதி இல்லை. அவ்வாறு தவருன வழியில் நடக்காது பார்த்துக் கொள்ள வேண்டியது பாங்கு நடத்துபவரின் பொறுப்பு ஆகும். அம்மாதிரியான கணக்கு ஒன்றைத் தொடங்க முற்படும்போது பாங்கு நடத்துபவர் இன்னுரைப் பொருளாளராக நியமித்த தீர்மானமொன்றையும், மேற்படி பாங்கு ஒன்றைத்தனது நிறுவனத்தின் பாங்கு நடத்துபவராகவும் நியமனம் செய்த தீர்மானம் ஒன்றையும் கேட்டு வாங்கிக்கொண்டு, கணக்குத் தொடங்குவதற்கான விபரமாகக் கொடுக்கப்பட்ட கட்டளைகளை நன்கு படித்து அதன்படி கணக்குத் தொடங்க முற்படலாம். மேற்படி சங்கத்தின் பொருளாளர் ராசீனுமா செய்தாலும் அல்லது மரித்தாலும், அல்லது பாங்குடன் தொடர்பு கொண்டுள்ள சங்க அதிகாரி இராசீனுமா செய்தாலும் அல்லது மரித்தாலும் பாங்கு நடத்துபவர் அந்தக்கணக்கைத் தொடர்ந்து நடத்துபவராயிருக்கவேண்டும். மறுபடி தக்கத் தீர்மானம் செய்யப்பட்டு அதன் நகலொன்றை அனுப்பி கட்டுப்பாட்டுக் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு அந்தப்பதவிக்கு வேறு ஒருவரை நியமனம் செய்யக் குழுவிற்கு அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளதென்றும் அந்தக்குழு இறந்த பொருளாளர் இடத்தில் வேறொருவரை நியமனம் செய்யலாம்.

வட்டார அதிகாரிகள் (ஸ்தலஸ்தாபன அதிகாரிகள்):— ஸ்தலத்தாபன நிறுவனம், அவற்றின் பல்வேறு வகைகள் அவற்றின்மீது இடப்பட்ட கட்டுப்பாடுகள், உள்ள அதிகாரங்கள் இவையனைத்தையும் நன்கு விளக்கி எழுதப்புகின் தனியே ஒரு புத்தகமே வெளியிட வேண்டிவரும். எனவே, விவரங்கள் அதிகம் நீட்டப்படாது கூறப்பட்டுள்ளன. இவர்கள் வசம் பெருமளவு நிதியுள்ளபடியால் பாங்குகள் இவர்களைப் பெரிய வாடிக்கைக்காரர்களாக கருதிவருகின்றன. இவர்களுடைய கணக்குகளைப் பொறுத்தமட்டில் மிகவும் உன்னிப்பாக சட்ட விதியின்படி கட்டுப்பாடுகளை அனுசரித்து இயக்கவேண்டும். இம்மாதிரி உள்ளாட்சியமைப்பின் பேரில் கணக்குத்தொடங் கப்படவேண்மென்று கோரினுல் அவர்களுடைய நிதியை எவ்வகையில் ஏற்றுநடத்துவது சட்டவிதிகள்படி யார் இந்தப் பொறுப்பை ஏற்றுச் செய்கிருர்? யார் செக்குகளில் கையொப்பம் இட அதிகாரம் கொடுக்கப்பட்டவர் என்றும், கணக்கு சம்பந்த மாகத்தோன்றும் சகலவிதமான விவரங்களையும் நன்கு ஆய்ந்து பாங்கு நடத்துபவர் பின்னர் இவை சம்பந்தப்பட்ட தனிப்பட்ட சட்ட விதிகளை நன்கு ஆய்ந்து சட்டப்படி முறையைக் கடைபிடிக்கவேண்டும். இம்மாதிரியான நிறுவனங்களிற்கு ஓவர்டிராஃப்ட் கடனுதவி அளிக்க முன்வரும் பாங்குகள்

பெருத்த நட்டமடையக்கூடும். ஏனெனில் இவற்றிற்கான கடன் முறைகள் சுற்றிவளைத்ததாகவும், மிகவும் சிக்கலாகவும் இருக்கின்றன. இம்மாதிரியான கணக்குகள் தொடங்கப்படின் அவர்கள் கடன் பெறக்கூடிய விதிகளையும் பாங்கு நடத்துபவர் தெரிந்து கொண்டிருக்கவேண்டும். சட்டப்படி வட்டார அதிகாரிகள் ஸ்தாபனத்திற்காக வேண்டி கடன்பெற அனுமதி உண்டா என்றும் கடன்வாங்கும் எல்லையும், எவ்வகையான உருவில் கடன் அனுமதிக்கப்படலாம் என்றும் மேற்படி அதிகாரிகள் எவ்வகையான ஈடுகளைக்காட்டிக் கடன் பெறலாம் என்றும் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

நொடித்தவர் Bankrupts :— ஒரு வாடிக்கைக்காரர் தமது கடன் கொடுத்தோருக்குத்தான் கடனை திருப்ப முடியாத நிலை அடைந்த தகவலை அறிவித்தாலும், அல்லது நீதிமன்றத்தில் கடனைத் திருப்பிக்கொடுக்க வசதியில்லையென பிரமாணம் செய்தாலும் அவருடன் பாங்கு எந்தவிதமான கொடுக்கல் வாங்கல் தொழிலைத் தொடர்ந்து நடத்தக்கூடாது. அவருடைய சொத்து முழுவதையும் நீதிமன்றம் நொடித்தவர் சொத்துப் பொருப்பாளரின் வசம் ஒப்புவித்துவிடும். (Official Receiver அல்லது மாகாண நகர்களில் அஃபிஷியல் அசைனி என்று நொடித்தவர் சொத்துப்பொறுப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர் கடன் கொடுத்தவரின் நலனைக்கோரி பொதுவாகக் கவனித்து வருவார். கடன்பட்டார் சொத்தைத் தம் விருப்பப்படி எடுக்காது இருக்கவும், தனிப்பட்ட சலுகையுடன் ஒன்றிரண்டு கடன் கொடுத்தோர்கள் இதை அப்புறப்படுத்தாமலும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நியமிக்கப்படுகிறார். விடுப்புப்பெறு நொடித்தவரைப் பொறுத்தமட்டில் பாங்கு நடத்துபவர் சற்று முன்னெச்சரிக்கையுடன் நடக்கவேண்டும். ஏனெனில், சட்டப்படி அருக்குப்பல கட்டுப்பாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக ரூ. 50 க்கு மேலாக அவர் கடன் பெற முடியாது. அவர் ஏதாவது வர்த்தகத்திலோ வாணியத் தொழிலிலோ ஈடுபட்டால் அவர் சட்டப்படி தண்டிக்கத்தக்கவராவார். மேலும், அவர் விருப்புப்பெறு நொடித்தவராக இருக்கும்போது வேறொரு வர்த்தகப்பெயருடன் வர்த்தகம் நடத்தினால் தண்டனைக்குள்ளாவார்.

கம்பெனி நிறுவனத்தை மூடும் அதிகாரி :— கம்பெனியை இழுத்து மூடுவதற்கான அதிகாரம் பெற்றவர்கள் பொறுத்த மட்டில் பாங்கு நடத்துபவர் சற்று முன்னெச்சரிக்கையுடன் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டும். மூடும் அதிகாரியின்

வேலைகளாவன :- கம்பெனியின் ஆஸ்தி அல்லது சொத்துகளை விற்று பணமாக்க வேண்டும். கம்பெனிக்கும் கிடைக்கவேண்டிய வரவினங்களை வசூலிக்கவேண்டும். பாங்குதாரர்களிடமிருந்து சேரவேண்டிய பாக்கிப் பங்குத்தொகைகளை வசூலிக்கவேண்டும். பல்வேறு வகைகளில் வசூலான தொகைகளைக் கம்பெனிபட்ட கடன்களுக்கு வரவு வைத்து எஞ்சிய தொகையைப் பங்குதாரர்களுக்கு ஈவித்துக் கொடுக்கவேண்டியது. கம்பெனியின் சொத்தின் ஈட்டில் கடன் வாங்கவும், கம்பெனியின் பெயரில் உண்டியல்களை ஏற்கவும், மாற்றவும், பணமாக்கவும் பிறர்பால் எழுதவும் அதிகாரம் உண்டு. இம்மாதிரியான பணிகளில் ஈடுபட்டவரைச் சொந்தப்பொறுப்பில் ஒன்றும் ஆழ்த்த இயலாது.

வர்த்தக முகவர்கள் :- முகவர்களாகப் பணியாற்றச் சட்டப்படி அதிகாரம் பெருதவர் தம்மை முகவரென்று கூறிப்பணியாற்றி, அதனுல் மூன்ருமவருக்கு விளையும் நட்டத்திற்கு இவர் பொறுப்பாளியாகிருர். தமக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதென்று தவருன எண்ணத்துடன் ஒரு முகவர் நடந்தால் அதனுல் ஏற்படும் பின்விளைவுகளுக்கு அவரே பொறுப்பாளி. பாங்கு நடத்துபவர் ஒரு முகவரால் இயக்கப்படும் முதல்வரின் கணக்கை, மேற்படி முதல்வர் இறந்தார் அல்லது வெறிநிலையை அடைந்தார் அல்லது கடன்களைக் கொடுக்க இயலாத்திவால் நிலையை அடைந்தார் என்றறிந்தோ, அல்லது தாக்கீது கொடுக்கப்பட்டாராகில் உடனே மேற்படி கணக்கு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களை நடத்துவது தடைசெய்தல் வேண்டும். தமது முதல்வர் முதல்வரின் உத்தரவு பெற்ற முகவர்தான் இன்னுருடைய அதிகாரத்தைப் பெற்று முகவராகக் கையொப்பமிடுவதாகக் கூறவேண்டும். இவ்வாருன உத்தரவு இல்லையேல் அவரை (முதல்வரை)க் கட்டுப்படுத்த இயலாது தமது கையொப்பத்திற்கு அடியில் முகவர் என்று எழுதுவதால் இவரது சொந்தப்பொறுப்பில் ஈடுபட்டதாகக் கருதப்படும். குறுகிய எல்லையுள் அதிகாரம் பெற்ற முகவரைப் பொறுத்த மட்டில் பாங்கு நடத்துபவர் முன்னெச்சரிக்கையுடன் கணக்கு விவகாரங்களை வைத்துக் கொள்ளவேண்டும். முதல்வருக்கு வந்த செக்குகளைத்தம் கணக்கில் வரவு செய்யாமல் பாதுகாக்க வேண்டும். ஒருவேளை முதல்வர் முகவரின் சொந்தக்கணக்கில் வரவு வைத்துக்கொள்ள அனுமதி கொடுத்துள்ளார் என்று முன்னெச்சரிக்கையுடன் தெரிந்துக்கொள்ள வேண்டும். முதல்வருக்கு வந்த செக்குகளில் இவர் இன்னுருடைய அதிகாரம்

பெற்றவர் என்று கையொப்பம் இட்டுத் தமது சொந்தக்கணக்கில் வரவுசெய்யாது பார்த்துக்கொள்ள வேண்டும். முதல்வரின் எழுத்துமூலம் விளக்கப்பட்டாலன்றி பாங்கு நடத்துபவர் அவருடைய முகவரை அவருடைய கணக்கிலிருந்து அளவுக்கு மீறிக் கடன் நிலையில் இருத்தவிடக்கூடாது. ஃபேக்டர் (Factor) என்று கூறப்படும் முகவர் முதல்வரின் வர்த்தகத்திற்கான சரக்குகளை வைத்துக்கொண்டு முதல்வருக்குப் பதிலாக விற்பனை செய்ய அதிகாரம் பெற்றுள்ளார். ஆயினும், அவர் இன்னாருடைய முகவர் என்று கூறவேண்டியதில்லை. அவர் வர்த்தகம் அனைத்தும் தம்சொந்தப் பெயரிலேயே நடத்திக் கொள்ளுவார். சரக்கு முதல்வருடையதானாலும் விற்பனை முழுவதும் ஃபேக்டர் என்ற முகவர் பெயரில் நடந்துவரும். இம்மாதிரியான முகவர்களுடன் கணக்கு உள்ள பாங்கு நடத்துவோர் மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் நம்பிக்கையான நிலையில் நடந்துவருகின்றனவா என்று ஆராய வேண்டியதில்லை. இவர் கொடுக்கும் முன்பணத்திற்குத் தக்க வர்த்தகச்சரக்கும் டாக்குமெண்டுகளும், (ஆவணங்களும்) மேற்படி பதிலாள் தமது சொந்தப்பெயரிலேயே ஈடாக்கக்கொடுப்பார்.

முகம்மதிய வாடிக்கைக்காரர் :—வாக்கினால் உருவான வாக்ஃப் (Wakf) என்ற ட்ரஸ்ட்டுகளைப் பொதுவாகக் கட்டுப் படுத்த உரிமை முகம்மதியர்களுக்கு உண்டு. எனவே ஒரு முகம்மதியரின் சொத்துகளின் ஈட்டில் கடன்கொடுக்க முன்வர பாங்கு நடத்துபவர் சற்று ஐயத்துடன் நோக்குகிறார். ஏனெனில் சொத்துகளைப் பொறுத்தமட்டில் பல்வேறுசிக்கல்கள் எழுகின்றன. (அனுபந்தம் ஆ. வில் அட்டவணை 32. (டி)யின் முடிவில் காண்க) சொத்து அடைமானம் வழக்குகளில் முகம்மதியர் எதிராக வரும் தாவா யென்னவெனில் மேற்படி சொத்து மதக் கோட்பாட்டில் ஒதுக்கிவைக்கப்பட்டதென்றும் அதை அடைமானம் வைக்க உரிமையில்லை என்றும் வாதம் செய்யப் படும். மேலும் ஒரு முகம்மதியன் தனது சொத்தில் மூன்றில் ஒருபகுதியைத்தான் உயிலில் (Will) பிறருக்கு எழுதிவைக்க முடியும். ஒருமுகம்மதியன் தனதுசொத்துக்கான உயிலை எழுதாது இறந்தால் அவனுக்குமுன் 3-தலைமுறைகளையும் பின்னர் மூன்று தலைமுறைகளையும் ஆராய்ந்து உரிமையை முடிவுசெய்தல் வேண்டும். இறந்த முகம்மதிய வாடிக்கைக்காரரின் சொத்திற்கும் அல்லது கணக்கிலும் உள்ள தொகையைக் கோரிவரும் நபர்களை பாங்கு நடத்துபவர் தக்க நீதிமன்றத்திலிருந்து சரியான வாரிசுதாரர் என்ற சன்றிதழ் காண்பித்துப் பெற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துவார்.

கலைச் சொற்கள்

A

Account — கணக்கு
Actionable claim — தொடரத்தகு பாத்தியதை
Act of Insolvency — முறிவு, நொடித்தல், திவால் நிலை
Advance — முன் பணம், கடன்
Agent — பதிலாள், முகவர், ஏஜெண்டு
Amalgamation — நிறுவன இணைப்பு, தொழில் இணைப்பு
Attorney — வக்காலத்துதாரர், சட்டப்படி அதிகாரம் பெற்றவர், அட்டார்னி
Administrator — நிறைவேற்றுனர், ஆட்சியாளர்

B

Bad Debts — வராக்கடன்
Bank Reserve — பாங்கு ரிசர்வு, பாங்கு ஒதுக்கு நிதி
,, Clearing House — பாங்குக் கணக்குத் தீர்வகம்
Bearer Bonds — பிணையப் பத்திரம்
Beneficiary — பயன் தண்டுபவர்
Bill of Lading — கப்பல் சரக்கு ரெசீது
Broker — தரகர்

C

Capital Authorised — அதிகாரம் பெற்ற மூலதனம்
,, Reserve — மூலதன ஒதுக்கு நிதி

Chairman	—	சபை முதல்வர்
Cheque	—	செக்கு, காசோலை
Civil Procedure Code	—	சிவில் வழக்கு முறைச் சட்டம்

D

Debt Doubtful	—	ஐயப்பாட்டுள்ள கடன்
Director	—	நிறுவனர்
Dividend	—	லாப ஈவுப் பங்கு
Document	—	பத்திரம்
Donatio Mortis Causa	—	கொடையாளர் மறித்ததைக் காரணம் காட்டல்
Donee	—	கொடை பெறுபவர்
Donor	—	கொடையாளி

E

Endorsor	—	உரிமை மாற்றம் செய்பவர்
Endorsee	—	,, ,, செய்யப்படுபவர்
Executor	—	நடத்துணர், நிறைவேற்றுபவர்
Equitable	—	நியாயமுள்ள

F

File	—	கோப்பு
Firm—Partnership	—	நிறுவனம் கூட்டு

G

Garnishee Order	—	கடனாளியின் பாக்கியைப் பெற நீதி மன்ற உத்திரவு

H

Hindu Co-ownership	—	இந்துக் கூட்டுக் குடும்ப முறை
Hundi	—	உண்டியல்

I

Immovable Property	—	அசையா சொத்து, நிலைத்த சொத்து
Investments	—	ஆவணம், முதலீடு

Incorporation Certificate of — இணைப்பதற்கான நற்சாட்சிப் பத்திரம்
Infant — வயது முதிராப் பாலகன்
Individual — தனியார்

L

Licence — உரிமம்
Lien — மீள் உரிமம், மாற்றுரிமம்
Law of Limitation — கால வரம்புச் சட்டம்
,, Administration — உயில் நிருவாகப் பத்திரம்
Letters of patent — இலாஞ்சினைப் பொறித்தத் திருமுகம்

M

Memorandum of Assn. — புறச்சட்ட விதி, பட்டய விதி
Mortgage — அடைமானம்
Mad/Lunatic — பயித்தியம், பித்தன்

N

Negotiable Instruments Act — செலாவணி முறிச்சட்டம்

O

Official Probate — உயிலை ருசிப்பிக்கும் சான்றிதழ்
Overdraft — நிலுவைக்கும் மீறி கடன் பெறுதல், ஓவர்டிராஃப்ட்

P

Partner — கூட்டுதாரர்
Pledge — அடகு
Private Coy — தனியார் கம்பெனி

R

Registrar of Firms — கூட்டு நிறுவனப் பதிவாளர்
Relation Back — ஈட்டு சொத்துகளைத் திரும்பப் பெறுதல்
Registration of Securities — ஆவணங்களைப் பதிவு செய்தல்
Retirement of Partner — கூட்டுதாரர் ஓய்வு பெறல்

S

Succession Act — வாரிசு சட்டம்
Stationery — சாதல்வார்

T

Trustee — டிரஸ்டி
Transferable — மாற்றத் தகு
Tribunal — விசாரணை மன்றக் குழு

U

Ultra vires — சட்டத்திற்குப் புறம்பான

V

Void — சட்டப்படி செல்லாது
Voidable — ஏற்றுக்கொள்ள இயலாது

பொருள் குறிப்பகராதி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை.

1971 ஜூலை வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

				ரூ.	காசு
*1.	பொருளாதாரம்—I	... சி. வேலாயுதம்	...	6	50
*1-A	,, II	... ,,	...	9	00
*2.	சோவியத் பொருளாதார வளர்ச்சி	... டாக்டர் எம். ஜே. கே. தவராஜ்	...	4	25
*3.	அமெரிக்கப் பொருளாதாரம்	... ,,	...	4	50
*4.	பொருளாதாரச் சிந்தனை வரலாறு	... சோணாசலம்	...	7	00
*5.	பன்னாட்டு வாணிபம்	... மு. ஆரோக்கியசாமி	...	6	00
6.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	... திருமதி ஆர். தாமரஜாட்சி	...	12	00
7.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்—I	... தி. சி. மோகன்	...	12	00
8.	,, II	... எம். ஏ. அபூர்வசாமி, பி.வி. ஸ்ரீநிவாசன்	...	10	75
9.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	... க. முத்தையன்	...	7	00
*10.	பணவியலும் பாங்கியலும்—I	... சி. வேலாயுதம்	...	6	75
*11.	,, II	... ,,	...	11	50
12.	நவீன பாங்கு இயல்	... க. வெற்றிவேல்	...	5	00
*13.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	... பி. வி. ஸ்ரீநிவாசன்	...	5	50
*14.	அரசாங்க நிதி இயல்	... அர. சேஷாசலம்	...	4	75

*மூல நூல் [Original Book]

பொருளாதாரம்—(தொடர்ச்சி)

			ரூ.	காசு
15.	இந்தியப் பொருளியல்—I	எம். பாலசுப்ரமணியன்	10	00
16.	,, II	எம். லூர்துநாதன்	4	25
17.	நமது பொருளாதாரப் பிரச்சினை—I	சி. சுந்தரராஜன்	10	75
18.	,, II	எஸ். குழந்தைநாதன்	10	50
19.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—I	கீ. சீ. இராமசாமி	6	00
20.	,, II	,,	6	00
21.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	தி. சி. மோகன்	5	00
22.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு—I	மு. க. சுப்பிரமணியம்	11	00
23.	,, II	பி. வி. சீநிவாசன்	6	00
24.	,, III	,,	6	50
25.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்—I	மா. குமாரசாமி	10	00
26.	,, II	அர. சேஷாசலம்	9	50
27.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி—I	தே. வேலப்பன்	10	00
28.	,, II	ஜி. சிதம்பரம்	8	00
29.	பணம்—சிறு விளக்கம்	கோ. இராதாகிருஷ்ணன்	10	00
*30.	வணிக இயலின் தத்துவங்கள்	கு. ஆளுடையபிள்ளை	9	50
31.	பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில்-வாணிகப் புரட்சி	கு. ரா கருப்பண்ணன்	11	00
32.	பென்ஹாம் பொருளாதாரம்—I	ஏ. குழந்தை	11	00
33.	,, II	எஸ். குழந்தைநாதன்	7	00
*34.	வரவு செலவுத் திட்டம்	ஆர். ரங்காச்சாரி	6	00
35.	பன்னாட்டுப் பொருளாதாரம்—I	ஏ. குழந்தை	7	50
36.	,, II	கே. எஸ். இராமசாமி	9	00

37.	பொருளாதார ஆய்வு நூல்—I	... கோ. இராதாகிருஷ்ணன்	... 7	75
38.	,, II	... ,,	... 7	00
39.	வளர்ச்சியுறாத நாடுகளின் அரசாங்க நிதியியல்	... க. வெற்றிவேல்	... 4	25
40.	வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்	... மா. குமாரசாமி	... 5	50
41.	1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள்	... சி. சுந்தரராஜன்	... 7	50
42.	பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரைகள்	... எம். கே. சுப்பிரமணியம்	... 7	75
43.	இந்தியப் பொருளாதார வரலாறு (1857—1956)—I	... ம. திருநாவுக்கரசு	... 7	00
44.	பொருளாதாரம்—ஓர் அறிமுகம்	... பு. வி. சீனிவாசன்	... 6	25

வரலாறு

*45.	பிரிட்டன் வரலாறு—I	... கி. ர. அனுமந்தன்	... 4	50
*46.	,, II	... ,,	... 3	50
*47.	,, III	... ,,	... 7	25
*48.	ஐரோப்பிய வரலாறு—I (கி. பி. 395—1500)	... டி. வி. சொக்கப்பா	... 3	75
*49.	,, II (கி.பி. 1500 முதல்)	... என். ஜே. இராஜகோபால்	... 5	50
50.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம்	... வை. விருத்தகிரீசன்	... 9	50
51.	இங்கிலாந்து வரலாறு—I	... இரா. அண்ணமலை	... 13	00
52.	,, II	... பா. மாணிக்கவேலு	... 13	00
53.	,, III	... என். ஜே. இராஜகோபால்	... 8	00

*மூல நூல் [Original Book]

வரலாறு—(தொடர்ச்சி)

			ரூ.	காசு
54.	இங்கிலாந்து வரலாறு—IV	என். ஜே. இராஜகோபால்	8	00
55.	இங்கிலாந்தின் வரலாறு—I	க. த. திருநாவுக்கரசு	15	00
56.	,, II	எம். எக்ஸ். மிராண்டா	8	00
57.	,, III	,,	5	00
58.	இந்தியாவின் சிறப்பு வரலாறு—I	தி. வெ. குப்புசாமி	7	50
59.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	6	00
60.	,, III	அ. பாண்டுரங்கன்	7	25
61.	கிரேக்க நாட்டு வரலாறு—I	சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	7	50
62.	,, II	,,	7	00
63.	,, III	பி. இராமாநுஜம் தேவதாஸ்	7	75
64.	ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு—I	தி. வெ. குப்புசாமி	8	25
65.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	7	50
66.	,, III	க. த. திருநாவுக்கரசு	10	50
67.	முகலாயப் பேரரசு—I	ஏ. உஸ்மான் ஷெரீப், எம். எக்ஸ். மிராண்டா	7	50
68.	,, II	எம். எஸ். மிராண்டா, பா. மாணிக்கவேலு	7	75
69.	ஆங்கில அரசியலமைப்பின் வரலாறு—I	வை விருத்தகிரீசன்	7	50
70.	,, II	வை. விருத்தகிரீசன், இரா. அண்ணமலை	6	75
71.	,, III	இரா. அண்ணமலை, பா. மாணிக்கவேலு	6	50
72.	,, IV	பா. மாணிக்கவேலு	7	00
73.	ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு—I	சி. ஈ. இராமச்சந்திரன்	6	50
74.	,, II	சி. ஈ. இராமச்சந்திரன், இர. ஆலாலசுந்தரம்	6	75
75.	,, III	ஆர். ஆலாலசுந்தரம்	6	50

76.	இந்தியாவில் முகலாயரின் ஆட்சி—I	பா. மாணிக்கவேலு	5	00
77.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	6	00

அரசியல்

78.	அரசியல் அமைப்புகள்	ஜே. இராமச்சந்திரன்	4	62
*79.	அரசாங்கத்தின் வரலாறு	மோ. கிளாரன்சு, டி.டி. பெலிக்ஸ்	7	50
*80.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	4	75
81.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி. செல்லப்பா	8	50
82.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	8	50
83.	பன்னாட்டு அரசியல்—I	திருமதி நூர்ஜஹான் பாவா	16	00
84.	,, II	,,	13	25
85.	பொதுத்துறை ஆட்சி இயல்—I	வீ. கண்ணையா	9	00
86.	,, II	அ. ஜெகதீசன்	7	25
87.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்—I	வீ. கண்ணையா	7	50
88.	,, II	டி. செல்லப்பா	7	50
89.	இந்திய அரசியலமைப்புத் திட்டம்	தி.வெ. குப்புசாமி, எஸ். சுப்பிரமணியன்	9	25
90.	இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி—I	வீ. கண்ணையா	6	25
91.	,, II	வீ. கண்ணையா, கி. ர. அனுமந்தன்	5	75
92.	,, III	கி. ர. அனுமந்தன்	7	25
*93.	மக்கள் ஆட்சி	க. சந்தானம்	4	25
94	1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும்—I	என். ஜே. இராஜகோபால்	7	75

*மூல நூல் [Original Book]

114.	இந்தியத் தத்துவம்—I	வ. அ தேவசேனபதி, பா. நா. சண்முகசுந்தரம்	3	50
115.	,, II	,,	6	00
116.	மெய்ப்பொருளியல்—ஓர் அறிமுகம்—I	சி. இராமலிங்கம்	6	00

அறவியல்

117.	அறவியல்-ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	8	50

அளவையியல்

118.	அளவை இயல்—தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	2	50

மானிடவியல்

*119.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	4	75
120.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியம்	5	50
121.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	எஸ். இலட்சுமி	3	50

சமூகவியல்

122.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜே. நாராயணன்	10	50

புவியியல்

*123.	ஆசியா—I	கொ. சேஷ. நரசிம்மன்	9	50
*124.	,, II	,,	8	75
*125.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	ஏ. எஸ். நாராயணன்	8	50
*126.	தென்கிழக்கு ஆசியா	ஜி. கிருஷ்ணமூர்த்தி	8	50
*127.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	6	50

*மூல நூல் [Original Book]

			ரூ.	காசு
*128.	தென் அமெரிக்கா	எம். என். பத்மநாபன்	9	00
*129.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	3	00
*130.	,, —ஆஃப்ரிக்கா	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்	3	25
*131.	புவிப்புறவியல்—II	நா. அனந்தபத்மநாபன்	6	00
*132.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	5	50
*133.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	4	75
*134.	சமுத்திரவியல்	கோ. இராமசாமி	6	50
135.	காலநிலை இயல்—I	கொ. சேஷ. நரசிம்மன்	10	00
136.	,, II	,,	5	00
*137.	காலநிலை இயல்—I	திருமதி இராதா	9	50
*138.	,, II	,,	8	00
139.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	5	50
*140.	புவி அமைப்பு இயல்	சி. விசுவநாதன்	4	75
141.	பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும்	கோ. இராமசுவாமி	6	00
142.	சிஷோமின் வாணிகப் புவியியல்—I	எஸ். மாணிக்கம்	9	50
143.	,, II	எம். கார்த்திகேயன்	12	00
144.	,, III	சி. எஸ். நரசிம்மன்	5	75

புள்ளியியல்

*145.	புள்ளியியல்—அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10	75
146.	புள்ளியியல் முறைகள்—I	கோ. சண்முகசுந்தரம்	10	00
147.	,, II	கே. ஆர். இராஜகோபாலன்	14	00
148.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமிநரசிம்மன்	6	50

உயர் கணிதம்

*149.	ஆயத்தொலை வடிவகணிதம்	டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	4	25
*150.	வகை நுண்கணிதம்	,,	3	00
*151.	தொகை நுண்கணிதம்	தி கோவிந்தராசன்	3	25

விலங்கியல்

*152.	விலங்கியல்	பெ. மா. அண்ணமலை, இரா. முருகேசன்	12	00

பௌதிகவியல்

*153.	ஒளி நூல்	ச. சம்பத்து	10	00

விஞ்ஞானம்

*154.	வானவெளி வெற்றி	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	6	00
*155.	ரேடியோ	டாக்டர் பி. திருஞானசம்பந்தம்	4	75
*156.	எக்ஸ்—கதிர்கள்	பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	4	50
*157.	பாம்புகள்	பெ. மா. அண்ணமலை	3	50
*158.	தாவரம்—வாழ்வும் வரலாறும்	டாக்டர் கு. சீனிவாசன்	8	00
*159.	கரும்பு	கு. பெரியசாமி	4	00
*160.	தாவரங்களின் வாழ்வியல்	எஸ். சுந்தரம்	6	50

மருத்துவம்

*161.	நீரிழிவு—க்ஷயரோகம்	டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	2	50
162.	மகப்பேறும் மாதர் நோயும்	டாக்டர் (குமாரி) மணிமேகலை	8	25

*மூல நூல் [Original Book]

			ரூ.	காசு
மருத்துவம்—(தொடர்ச்சி)				
*163.	பாக்டீரியா	ச. சுந்தரம்	2	50
164.	புற்றுநோய்	அ. கதிரேசன்	3	50
165.	உடலியங்கியல்—I	டாக்டர்கள் ஜி. வேங்கடசாமி, டி. சரோஜினி, எஸ். கே. துரைராஜ், ஆர். சேது	6	75
166.	,, II	,,	5	50
167.	என்புருக்கி நோய்	டாக்டர் அ. கதிரேசன்	7	25
பொறியியல்				
168.	நீங்களே உங்கள் வீட்டைக் கட்டலாம்	கே. வி. கிருஷ்ணராஜ், சி.ஆர். சுப்பிரமணியம், கே. வேணுகோபால், ஆர். இராமசுவாமி	8	50
கூட்டுறவு				
169.	உலகக் கூட்டுறவு இயக்கம்	அ. வேல்மணி	5	50
சட்டம்				
*170.	குற்றவியல் சட்டம்	எம். சண்முகசுப்பிரமணியம்	10	00
பொது நூல்கள்				
171.	மகாத்மா காந்தி	சரஸ்வதி தங்கையன்	3	25
172.	விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8	00
173.	சேமக் கை-நூல்	ஆ. சுப்பிரமணியன்	2	50
*174.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்	9	00
*175.	உணவும் ஊட்டமும்	தி. வேங்கட கிருஷ்ண அய்யங்கார்	4	50
*176.	பள்ளி நிருவாக அமைப்பு—அடிப்படைக் கருத்துகள்	எஸ். சந்தானம், எஸ்.ஏ. துரைசிங்	6	25

புகுமுக (P.U.C.) வகுப்புகளுக்குரியவை

*177.	உலக வரலாறு	டி. ஆர். இராமச்சந்திரன்	4 00
*178.	பொருளாதாரம்	ஜி. சிதம்பரம்	2 75
*179	வணிகவியலுக்கு ஓர் அறிமுகம்—I	கு. ஆளுடையபிள்ளை	2 50
*180.	,, II	,,	2 25
*181.	பௌதிகம்	டாக்டர் பி. திருஞானசம்பந்தம், ஆர். நாகராஜன்	6 00
*182.	புகுமுக பௌதிகம்	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	5 75
*183.	பௌதிகம்—ஓர் அறிமுகம்	எஸ். சம்பத்	7 00
*184.	புகுமுக வகுப்புக் கணிதம்—I	கே. இராஜகோபாலன்	7 00
*185.	,, II	,,	3 00
*186.	புகுமுக வகுப்புக் கணித நூல்—I	டி. கோவிந்தராஜன், முத்துசாமி	7 00
*187.	,, II	,,	4 50
*188.	கணிதம்—ஓர் அறிமுகம்—I	ஆர். மகாதேவன்	4 75
*189.	,, II	,,	3 25
*190.	வேதியியல்	பி. டி. முனியப்பா, ஆர். முத்துலட்சுமி	7 00
*191.	புகுமுக வேதியியல்	சி. ஏ. பத்மநாபன்	5 50
*192.	விலங்கியல்	எஸ். ஆப்ரகாம்	4 00
*193.	புகுமுக விலங்கியல்	பெ. மா. அண்ணாமலை	7 25
*194.	புகுமுக வகுப்புத் தாவரவியல்	எஸ். சுந்தரம்	4 00

*மூல நூல் [Original Book]

பட்டப்படிப்பிற்குரிய (பி.எஸ்ஸி.) நூல்கள்

(அடக்கவிலைப் பதிப்புகள் - கழிவு இல்லை)

பௌதிகம் (Physics)

				ரூ.	காசு
*195.	எந்திரவியல்—சிறப்புப் பாடம்—I	...	ஆர். நாகராசன் ...	6	25
*196.	,, II	...	,, ...	5	50
*197.	வெப்பவியல்—சிறப்புப் பாடம்	...	கே. நாச்சிமுத்து ...	5	25
*198.	செய்முறை பௌதிகம்—சிறப்புப் பாடம்—I	...	டி. கமலக்கண்ணன், ஆர். கிருட்டிணசாமி...	4	50
*199.	,, II	...	,, ...	3	25
*200.	பௌதிகம்—துணைப் பாடம்—I	...	பி. தங்கராஜன் ...	3	60
*201.	,, II	...	,, ...	3	00
*202.	செய்முறை பௌதிகம்—துணைப்பாடம்	...	கே. பாசுகரன், இரா. செயராம் ...	4	50
*203.	மின்னியல்-காந்தவியல்—சிறப்புப் பாடம்—I	...	டி. ஏ. கருப்பண்ணன் ...	4	75
*204.	,, II	...	,, ...	4	50
*205.	,, III	...	,, ...	4	25
*206.	ஒளியியல்—சிறப்புப் பாடம்	...	டாக்டர் வி. சண்முகசுந்தரம், ,, ஆர். சபேசன் ...	7	75
*207.	பௌதிகம்—துணைப்பாடம் (பகுதி-2) (முதல் புத்தகம்)	...	கா. வே. சுப்பிரமணியன் ...	6	00
*208.	,, (இரண்டாம் புத்தகம்)	...	,, ...	4	50
*209.	பொது பௌதிகம்—சிறப்புப் பாடம்	...	கே. பி. கந்தசாமி, எம். தியாகசுந்தரம் ...	4	50
*210.	இன்றைய பௌதிகம்—சிறப்புப் பாடம்	...	எம். ஏ. தங்கராஜ் ...	6	75

*211. ஒலி நூல்—சிறப்புப் பாடம் ... டி. முருகையன் ... 5 00

வேதியியல் (Chemistry)

*212. செய்முறைக் கனிம வேதியியல்—துணைப்பாடம் ... டாக்டர் என். முத்துக்குமாரசுவாமி ... 2 00

*213. செய்முறைக் கனிம வேதியியல்—சிறப்புப் பாடம் ... டி. இராமலிங்கம் ... 2 25

*214. பௌதிக வேதியியல்—சிறப்புப் பாடம்—I ... டி. சக்திவேலு ... 4 00

*215. ,, II ... ,, ... 3 50

*216. கனிம வேதியியல்—துணைப் பாடம் ... சி. ஏ. பத்மநாபன் ... 6 50

*217. கனிம வேதியியல்—சிறப்புப் பாடம்—I ... பி. டி. முனியப்பா ... 4 00

*218. ,, II ... ,, ... 4 25

*219. பொது பௌதிக வேதியியல்—துணைப்பாடம் ... ஆர். துளசிதாஸ் ... 4 75

*220. அறிமுறை வேதியியல்—சிறப்புப் பாடம்—I ... ஓ. ஆர். சூரியநாராயணன் ... 4 50

*221. ,, II ... ,, ... 3 75

*222. செய்முறைக் கரிம வேதியியல்—சிறப்புப் பாடம் ... என். ஆறுமுகம் ... 3 50

*223. அங்கக வேதியியல்—துணைப்பாடம் ... பிஎல். இராமசாமி ... 5 00

*224. அங்கக வேதியியல்—I ... எம். ஆட்கொண்டான் ... 3 00

*225. கரிம வேதியியல்—பகுதி-I (இரண்டாம் புத்தகம்) ... கி. கண்ணபிரான் ... 4 75

*226. ,, (மூன்றாம் புத்தகம்) ... ,, ... 3 25

*மூல நூல் [Original Book]

வேதியியல் (தொடர்ச்சி)

			ரூ.	காசு
*227.	கரிம வேதியியல்—பகுதி—II (முதல் புத்தகம்)	கி. கண்ணபிரான்	5	75
*228.	,, (இரண்டாம் புத்தகம்)	,,	6	00

கணிதம் (Mathematics)

*229.	இயற்கணிதம்—சிறப்புப் பாடம்—I	டி. கோவிந்தராஜன், கே. முத்துசாமி	4	25
*230.	,, II	,,	3	25
*231.	தொகுதிமுறை வரைகணிதம்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன்	2	00
*232.	எண்சார் கணிதம்—சிறப்புப் பாடம்	எம். எம். இராமசாமி	5	50
*233.	திரிகோண கணிதம்—சிறப்புப் பாடம்	வி. அரங்கநாதன்	3	25
*234.	கணிதம்—துணைப் பாடம்	ஆர். அனுமந்தராவ்	6	00
*235.	நிலையியல்—சிறப்புப் பாடம்	கே. இராஜகோபாலன்	5	00
*236.	முப்பரிமாணப் பகுமுறை வடிவ கணிதம்—சிறப்புப் பாடம்	கே. சிவசுப்பிரமணியன்	2	75
*237.	வெக்டர் கணிதமும் அதன் பயன்பாடுகளும்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன்	2	00
*238.	கணிதம்—துணைப் பாடம்—பகுதி-2	ஆர். அய்யாசாமி	5	75
*239.	வானியல்—சிறப்புப் பாடம—(முதல் புத்தகம்)	தி. கோவிந்தராசன், கொ. முத்துசாமி	5	50
*240.	,, (இரண்டாம் புத்தகம்)	,,	3	75
*241.	இயக்கவியல்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன், கே. சிவசுப்பிரமணியம், பி. ஆர். சுப்பிரமணியம்	7	00

புள்ளியியல் (Statistics)

*242.	புள்ளியியல்—துணைப் பாடம் ...	எஸ். கருப்பையா ...	3 50

விலங்கியல் (Zoology)

*243.	முதுகெலும்பற்றவை-1—சிறப்புப் பாடம் ...	ஆர். முருகேசன் ...	6 00
*244.	,, 2 ,, ...	திருமதி எஸ். கே. வள்ளி ...	6 00
*245.	முதுகுநாணுள்ளவை-1—சிறப்புப் பாடம் ...	திருமதி ராணி கந்தசாமி ...	5 00
*246.	,, 2 ,, ...	,, ...	9 75
*247.	முதுகுத் தண்டுள்ளவை-2—சிறப்புப் பாடம் ...	திருமதி கிருஷ்ணவேணி நாராயணன் ...	5 75
*248.	முதுகெலும்பிகளது கருவியல்—சிறப்புப் பாடம் ...	எஸ். ஆப்ரகாம் ...	9 00
*249.	முதுகெலும்பற்றவை—துணைப் பாடம் ...	என். இராமலிங்கம் ...	9 00
*250.	முதுகு நாணுள்ளவை—துணைப் பாடம் ...	வி. சேது ...	6 00
*251.	செல்லியல்—சிறப்புப் பாடம் ...	என். இராமலிங்கம் ...	5 50
*252.	மரபியல்—சிறப்புப் பாடம் ...	பெ. மா. அண்ணாமலை ...	5 25
*253.	சூழ்நிலையியல்—உடற் செயலியல்—சிறப்புப் பாடம்—I ...	டி. ஆர். கிருஷ்ணன் ...	4 75
*254.	,, ,, II ...	,, ...	6 50
*255.	பரிணாமம் ...	எஸ். ஆப்ரகாம் ...	6 25

தாவரவியல் (Botany)

*256.	தாவர வெளி, உள்ளமைப்பியல்களும் வகைப்பாட்டியலும்—சிறப்புப் பாடம் ...	கே. இராஜசேகரன் ...	11 00

*மூல நூல் [Original Book]

தாவரவியல் (தொடர்ச்சி)

			ரூ.	காசு
*257.	தாவரப் புற அமைப்பியல்—சிறப்புப் பாடம்	கே. பாலச்சந்திரகணேசன்	9	25
*258.	தாவர உள்ளமைப்பியல் ,,	டாக்டர் ஏ. கோவிந்தராஜுலு	7	25
*259.	தாவரங்களின் வாழ்க்கை ,,	எஸ். சுந்தரம்	9	50
*260.	தாவரவியல்—துணைப் பாடம்	பா. இராசாராம்	4	50
*261.	தாவரச் சூழ்நிலையியல், மரபியல், உயிர் மருஉ இயல், இயங்கியல்—துணைப்பாடம்	கே. பெரியசாமி	4	00
*262.	சூழ்நிலையியல், பரிணாமம், மரபியல்—சிறப்புப் பாடம்	கே. ஆர். பாலச்சந்திரகணேசன்	8	25
*263.	டெரிடோஃபைட்டா, ஜிம்னோஸ்பெர்மே—சிறப்புப் பாடம்	கே. இராஜசேகரன்	10	25
*264.	தாலோஃபைட்டா (பாசிகளும் பூஞ்சைகளும்)—சிறப்புப் பாடம்	டாக்டர் வே. சோ. சுந்தரலிங்கம்	9	00
*265.	தாவர வகைப்பாட்டியல்—சிறப்புப் பாடம்	ஆ. சம்பத்குமார்	10	50
*266.	பிரையோஃபைட்டா—சிறப்புப் பாடம்	கே. இராஜசேகரன்	6	00

*மூல நூல் [Original Book]